வீசும் காற்றுக்கு புலைவத் தெரியாதா?

கவிதா

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	: வீசும் காற்றுக்கு பூவைத் தெரியாதா?
ஆசிரியர்	: பிந்து வினோத்
உரிமை	: ஆசிரியருக்கு
மொழி	: தமிழ்
முதல் பதிப்பு	: ஆகஸ்ட், 2016
தாள்	: 11.6 kg. வெள்ளைத் தாள்
நூலின் அளவு	: 1 x 8 கிரவுன்
அச்சு எழுத்து	: 11 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	: 504
பைண்டிங்	: சாதா அட்டை
நூல் வெளியிடுவோர்	: அறிவாலயம் தபால் பெட்டி எண்: 667, பு.எண்: 32/7, ப.எண்: 107/7, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

விலை: ரூ.230.00

கணினி அச்சு	: வேலன் லேசர் - 94441-01753
அச்சிட்டோர்	: எஸ்.எஸ்.கிராபிக்ஸ், சென்னை-14.



வீசும் காற்றுக்கு

பூவைத் தெரியாதா?

வீசும் காற்றுக்கு பூவைத் தெரியாதா?

1



பெங்களூரு நகரம் எப்போதும் போல் பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது. சாலைகளில் ஈயாக மொய்த்த வாகனங்களும், தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்த ஹாரன் ஒலிகளும், அது ஒரு வார நாள் என்பதை பறைசாற்றியது.

பெங்களூருவின் தென் கிழக்குப் பகுதியில் இருக்கும் கோரமங்களாவில் இருந்த அந்த ஆறு மாடி அலுவலகக் கட்டடத்திலும் அலுவலர்கள் தங்களின் அன்றைய வேலையில் ஆழ்ந்திருந்தனர். அந்தக் கட்டடத்தின் நான்காவது மாடியில் இருந்த குளிர்

சாதனம் பொருத்தப்பட்ட அறையில் அமர்ந்திருந்த அஷோக், தன் எதிரே பிடிவாதம் முகத்திலும் தெரிய அமர்ந்திருந்த ஷிவா என அழைக்கப்படும் சிவக் குமாரை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

அந்தப் பார்வை எல்லாம் தன்னை அசைக்க முடியாது என்பது போல் அமைதியாக அந்தப் பார்வையை எதிர்கொண்டான் ஷிவா.

அந்த அறையில் இருந்த மற்றவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ஷிவா, நீ இப்படி என்கிட்டே பேசுறதுக்கு நிறைய பின் விளைவுகள் ஏற்படலாம்.''

''வேலையை விட்டு எடுக்க போறீங்களா, ஷுயர் சார் உடனே செய்ங்க! நான் கஷ்டப்பட்டுக் கொண்டு வந்த ப்ராஜக்ட்டை நீங்க உங்களுக்குப் பிடிக்கும்னு ராம்க்கு கொடுத்தீங்க. இப்போ அது சரியா போக லைன்னா, நான் உடனே ஹெல்ப் செய்யணுமா? நான் செய்ற வேலைக்கு தான் நான் கிரெடிட் எதிர்பார்க்கிறேன். நான் சரியா செய்யாத போது நீங்க கொடுக்குற பீட்பாக் எல்லாம் நான் அமைதியா கேட்டுக்குறது இல்லையா?''

''ஓகே ஓகே.''

தன் கண்ணாடியை கழற்றி ஒரு சில வினாடிகள் சிந்தித்த அஷோக்,

''நீ சொல்றது ஒரு விதத்தில் சரிதான். உன்கிட்ட தான் நான் இந்த ப்ராஜக்ட்டை கொடுத்திருக்கணும்.

ஆனால் நம்ம பர்சனல் விஷயங்கள் இப்படி நமக்கு சம்பளம் தர கம்பனியை பாதிக்குற மாதிரி விடக் கூடாது.''

''அது போல் எல்லாம் ஆக விட மாட்டேன் சார். உங்களுக்கே என்னோட கமிட்மென்ட் பத்தி தெரியும். இப்போ நீங்க சொன்ன உடனே நான் எதுவும் கேட்காமல் எடுத்து இந்த வேலையை செய்திருந்தா என்னோட பக்கம் இருக்கும் ஆதங்கம் உங்களுக்கு புரியாமல் போய் இருக்கும்.''

''புரியுது, உன்னுடைய வெளிப்படையான பேச்சை நான் பாராட்டுறேன். இனிமேல் நம்ம டீம் உள்ள எந்த பாலிடிக்ஸும் வராமல் பார்த்துப்போம்.''

''ஷூயர் சார்!''

அறையினுள் இருந்த மற்றவர்களைப் பார்த்த அஷோக்,

''என்ன நீங்க எல்லாம் அமைதியா இருக்கீங்க?'' என்றார்.

அதுவரை அஷோக்கும் ஷிவாவும் பேசுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள்,

''நாங்களும் ஹெல்ப் செய்வோம் சார்'' என்றனர் கோரஸாக!

தன்னுடைய கேபினுக்குத் திரும்பி வேலையில் தன்னை ஆழ்த்திக் கொள்ள தொடங்கிய ஷிவாவை பற்றிச் சொல்ல வேண்டும் என்றால் மிடுக்கும், சாமர்த்தியமும் நிறைந்த ஆணழகன். கிட்டத்தட்ட

ஆறடி உயரத்தில் இருந்தவனின் வசீகர கண்கள் யாரையும் ஒரு வினாடி தடுமாறச் செய்யும். உலகம் முழுவதும் பிரசித்தி பெற்ற A & A நிறுவனத்தில் விற்பனை பிரிவில் பணிபுரிபவனுக்கு மாதம் தேவைக்கு மிகவும் அதிகமாகவே சம்பளம் வந்தது. பெற்றோர் மற்றும் ஒரே சகோதரி சென்னையில் இருக்க, வேலை காரணமாக பெங்களூருவில் கடந்த ஐந்து ஆண்டுகளாக தங்கி இருக்கிறான்.

வேலை சுறுசுறுப்பாக நடக்க, மணி ஐந்தை தாண்டி இருப்பதை உணர்ந்து வீட்டுக்கு கிளம்புவதை பற்றி அவன் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில், அவனுடன் பணிபுரியும் அஸ்வினி தயக்கத்துடன் வந்து நின்றாள்.

''ஹலோ அஸ்வினி, இன்னும் கிளம்பலையா நீங்க?''

''கிளம்பணும் ஷிவா! நீங்க கிளம்பியாச்சா?''

''எஸ்! இன்னும் அஞ்சு நிமிஷம் கழிச்சு வந்து பார்த் திருந்தீங்கன்னா நான் எஸ்கேப் ஆகி இருப்பேன். சொல்லுங்க என்ன விஷயம்?''

''நத்திங் ஸ்பெஷல் ஷிவா! நீங்க இன்னைக்கு ஈவ்னிங் பிஸியா?''

அதுவரை இயல்பாக பேசிக் கொண்டிருந்த ஷிவா வின் உதடுகளில் இருந்த புன்னகை மறைந்தது. எதிரில் நின்றவளை உற்றுப் பார்த்தவன்,

''எதுக்கு கேக்குறீங்க?'' என்றான்.

"ஈவ்னிங் க்ளோஸ் பரெண்ட்ஸுக்கு பர்த்டேக்கு ட்ரீட் தரேன்! நீங்களும் ப்ரீயா இருந்தால் இன்வைட் செய்யலாம்னு நினைச்சேன்."

"ப்ரெண்ட்ஸ் பார்ட்டியில் நான் எதுக்கு? நீங்க என்ஜாய் செய்ங்க."

"இல்லை அது ரொம்ப நேரம் ஆகாது, சீக்கிரம் முடிஞ்சிடும். அப்புறம் கொஞ்சம் நேரம் நாம பேசிட்டு இருக்கலாமேன்னு நினைச்சேன்."

"ஓ! சாரி அஸ்வினி, இன்னைக்கு புதன்கிழமைல? நான் என் ஸ்கூல் பிரெண்ட் ஒருத்தன் வீட்டுக்கு வரேன்னு சொல்லி இருக்கேன், இப்போ தான் ஞாபகம் வருது. நீங்க என்ஜாய் செய்ங்க, இன்னொரு நாள் பார்ப்போம்."

அஸ்வினியின் முகம் மாறிப் போனது.

அது தெரிந்தும், கவனிக்காதவனாக மேஜையில் இருந்த பொருட்களை சீராக எடுத்து வைக்கத் தொடங்கினான் ஷிவா.

"ஓகே ஷிவா, பை" சொல்லிவிட்டுச் சென்ற அஸ்வினியை கண்டுகொள்ளாமல் தன் வேலையைத் தொடர்ந்தான்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் தன் பையுடன் கிளம்பிய ஷிவாவிற்கு, அருகே இருந்த அறையில் இருந்து வந்த பேச்சு தெளிவாகக் கேட்டது

"நான் தான் சொன்னேனே பாக்க தான் ஆள் அப்படி, மத்தபடி சரியான முசுடு! சாமியார்ன்னு நாங்க சும்மாவா பேரு வச்சிருக்கோம்."

தேய்ந்து மறைந்த குரலை கேட்டவனுக்குக் கோபத்திற்கு மாறாகச் சிரிப்பு தான் வந்தது.

அவன் ஒன்றும் ஆசைகளைத் துறந்த முனிவன் அல்ல! பூமியை எழுபது சதவிகிதம் உள்ளடக்கி இருக்கும் கடல் நீரை விடப் பெரிய அளவில் மனதில் ஆசைகள் உள்ளவன்! பொதுவாக பெண்களை விட்டு தள்ளி நின்றாலும் பெண்ணின் மீது பற்றே இல்லாதவன் அல்ல! தனக்கென ஒருத்தி வரும் நாளுக்காக, அவளிடம் மட்டுமே அந்த அன்பை, ஆசையை வெளிபடுத்த வேண்டும் என்ற ஆவலில் காத்திருப்பவன்!

மனதில் ஓடிய எண்ணங்களில் இருந்து விடுபட நினைத்தவன், மொபைல் போனை எடுத்து அம்மா என்றிருந்த நம்பரை அழைத்தான்.

''என்னப்பா ஷிவா? அதுக்குள்ளே வீட்டுக்கு வந்தாச்சா? சீக்கிரம் வந்துட்ட, உடம்புக்கு ஒண்ணும் இல்லையே?''

''இப்போ தான் ஆபீசில் இருந்து கிளம்புறேம்மா. உங்க கூட பேசணும் போல இருந்துச்சு.''

அந்தப் பக்கம் இருந்த லக்ஷ்மிக்கு மனம் குளிர்ந்து போனது!

''என்னப்பா? என்ன விஷயம் ஆபீசில ஏதாவது பிரச்சனையா?''

''அதெல்லாம் இல்லைம்மா! சும்மா பேசணும்னு தோணிச்சு, அவ்வளவு தான்.''

"சரிப்பா, டிரைவ் செய்யும் போது பேச வேண்டாம். பார்த்து கவனமா ஓட்டு. இந்த வாரம் இரண்டு மூணு நாள் லீவ் எடுத்துட்டு வீட்டுக்கு வாயேன், ஊருக்கு போயிட்டு வந்திரலாம்.

"ஊருக்கா? எந்த ஊருக்கு?"

"நான் பிறந்து வளர்ந்த ஊருக்குப்பா! போயே ரொம்ப வருஷம் ஆச்சு, அங்கே இருக்க கோவில் பத்தி பக்தி பேப்பரில் விசேஷமா எழுதி இருக்காங்க. நாம எல்லோரும் போயிட்டு வரலாம்னு நினைக் கிறேன்."

"சரிம்மா, போகலாம், நான் வெள்ளி நைட் வந்திடுவேன், சனிக்கிழமை கிளம்பலாம்."

"சரிப்பா, நான் அக்கா கிட்டேயும் லீவ் எடுக்கச் சொல்றேன்."

"எப்படி இருக்கா அந்த ரவுடி? கொஞ்சமாவது சமையல் கத்துக்கிட்டாளா இல்லையா?"

"அவளை ஏன்ப்பா அப்படிச் சொல்ற? பாவம் அவ! வேலைக்குப் போயிட்டு வீட்டையும் பாத்துக் குறது ஈசியான விஷயமா என்ன?"

"இப்படியே செல்லம் கொஞ்சிட்டு இருங்க, அப் புறம் அவ எப்படி திருந்துறது?"

"திருந்த என்ன இருக்கு? நான் என்ன அவங் களுக்காக ஸ்பெஷலாவா சமைக்கிறேன்? எங்களுக்கு செய்றதை அவங்களும் எடுத்துக்குறாங்க. கௌஷிக் குக்கும் என்னுடைய சமையல் ரொம்ப பிடிக்கும்."

"உங்க சமையல் யாருக்கு பிடிக்காதும்மா? அதுக் காக எல்லாத்தையும் இழுத்து போட்டு செய்யாதீங்க."

"இல்லப்பா! சரி நீ கவனமா வண்டியை ஓட்டு!"

"சரிம்மா."

மொபைலை கட் செய்து வைத்தவனின் உதடு களில் மீண்டும் புன்னகை தோன்றி இருந்தது. அம்மா ஒரு ஸ்மைல் ஸ்பெஷலிஸ்ட்! எப்போது பேசினாலும் அவனுடைய மனதில் அமைதியும், முகத்தில் புன்னகையும் தோன்றி விடும்.

அதே புன்னகையோடு, போக்குவரத்து நெரிசலில் கவனத்தைத் திருப்பினான்.

"டூ ப்ளஸ் டூ! ம்ம்ம்ம்! டூ ப்ளஸ் டூ! த்ரீ? இல்லல.. பைவ்?"

கண்ணை உருட்டியபடி தப்பும் தவறுமாக பதில் சொல்லிக் கொண்டிருந்த ஐந்து வயது பூமாவைப் பார்த்து ரசனையோடு எழுந்த சிரிப்பை அடக்கிக் கோபத்தைக் காட்ட முயன்றாள் அருந்ததி.

"இன்னும் அடிஷன் தெரியலை உனக்கு?"

"சாரிக்கா..."

நிஜமான வருத்தத்துடன் அவள் சொல்லவும், பெயருக்குக் கூட கோபத்தைக் காட்ட மனம் வர வில்லை அவளுக்கு.

"இங்கே வா, நான் திரும்ப சொல்லித் தரேன்" என்றவள், அவர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண் டிருந்த மற்ற சிறுவர் சிறுமிகளைப் பார்த்து,

"வேடிக்கை பார்க்காமல் படிங்க, அடுத்து உங்க எல்லோரையும் கேள்வி கேக்க போறேன்" என்றாள்.

உடனே கடமையே கண்ணாக அவர்கள் புத்தகத் தில் கண்ணை பதிக்க, பூமாவிற்கு பொறுமையுடன் சொல்லி கொடுக்கத் துவங்கினாள்.

அருந்ததி கிராமத்து பெண்ணுக்கே உரிய பொலி வுடன் இருந்தாள். முகத்தில் எப்போதும் ஒட்டி இருக்கும் அந்தச் சின்னப் புன்னகை அவளுடைய தனித்துவம்.

ஆறு வருடங்களுக்கு முன் மழையினால் ஊரில் பரவிய தொற்று வியாதியில் அம்மா, அப்பா இரு வரையும் பறி கொடுத்திருந்தாள். உடன் பிறந்தோர் யாருமில்லாமல் விதியின் விளையாட்டினால் பதி னாறு வயதில் தனி ஆளாக நின்றாள்!

குடும்ப சொத்து என தேவைக்கு அதிகமாகவே செல்வம் இருந்தது. அருகிலேயே இருந்த உறவினர் களின் அன்பான ஆதரவும், அரவணைப்பும் கூட இருந்தது. ஆனாலும் அவளின் அடி மனதில் தவிர்க்க முடியாத தனிமையும், சோகமும் இருந்தது.

அதை வெளியில் காட்டாமல் இருக்க, அருகே இருந்த வீடுகளில் இருந்த சிறு குழந்தைகளுக்கு இலவசமாக மாலையில் ட்யூஷன் எடுக்கத் தொடங்கி இருந்தாள். அந்த சின்னக் குழந்தைகளின் பேச்சும் சிரிப்பும் அவளுக்குத் தேவையான மருந்தாக இருந்தது.

நேரம் மெல்ல இருட்டத் துவங்க, ஒவ்வொருவராக வந்து குழந்தைகளை அழைத்துச் செல்லத் தொடங் கினர். கடைசியாக வந்த பூமாவின் அம்மா சந்திரிகா.

"இவ எதாவது படிக்குறாளா அருந்ததி? ஸ்கூல்ல இருந்து அவ மிஸ் கம்ப்ளெயின்ட் மேல கம்ப்ளெயின்ட் சொல்றாங்க."

"சின்ன குழந்தை, அஞ்சு வயசு தான் ஆகுது அதுக்குள்ளே என்ன பப்ளிக் எக்ஸாம் எழுதுற மாதிரி கவலை உங்களுக்கு? அதெல்லாம் படிப்பா, அவ ரொம்ப சமத்து."

தன்னைப் பற்றி புகார் சொல்லாமல் இருக்கும் அருந்ததியை பூமாவிற்கு எப்போதும் பிடிக்கும். இப்போதும் அம்மாவை விட்டு விட்டு அவளையே ஒட்டிக் கொண்டு நின்றாள்.

"நீ யாரை தான் சமத்துன்னு சொல்லாம இருக்க? ஏதோ உன்னை நம்பி தான் இருக்கேன், உனக்குக் கல்யாணம் ஆகும் வரைக்கும் எனக்கு இவளைப் பத்திக் கவலை இல்லை."

திருமணம் பற்றி குறிப்பட்ட உடனேயே அருந்ததிக்கு அவளையும் மீறி நாணம் எழுந்தது. அதை காட்டிக் கொள்ளாமல் இருக்க,

"உங்க ப்ளவுஸ் தச்சு முடிச்சிட்டேன், எடுத்துட்டு வரேன் இருங்க" என சொல்லிவிட்டு உள்ளே சென்று சந்திரிகா தந்திருந்த பழைய சட்டைகளுடன் கூடவே அந்தப் புதிய சட்டையையும் எடுத்து வந்து தந்தாள்.

வாங்கி பார்த்த சந்திரிகாவிற்கு ஆச்சர்யம் தாளவில்லை. அருந்ததியின் வீட்டில் தையல் மெஷின்

இருந்ததால், அவளுடைய உடைகளில் இருந்த சிறிய கிழிசல்களை தைத்துத் தரும்படி கேட்டிருந்தாள். அந்த புத்தம் புதிய சட்டை அவள் எதிர்பார்க்காதது!

''இது?!?''

''உங்களுக்காக தச்சேன். சித்தி எப்போவோ தைக்க சொல்லிக் கொடுத்தாங்க. சரி சும்மா இருக்கற நேரத்தில் தச்சுப் பார்க்கலாம்னு நெனச்சேன்.''

அவளின் ஏழ்மையை சுட்டிக் காட்டாது பெருந்தன்மையோடு பேசிய அருந்ததியை நன்றியோடு பார்த்தாள் சந்திரிகா.

''சரியா இருக்கான்னு தெரியலை, போட்டு பார்த்துட்டு சொல்லுங்க.''

''சொல்றேன் அருந்ததி. ரொம்ப நேரம் ஆச்சு, அவர் வந்து கத்த ஆரம்பிச்சிடுவார். நான் கிளம்புறேன். நீயும் சீக்கிரம் சித்தி வீட்டுக்கு போ...''

தினமும் ஒற்றை ஆளாக ஏதேனும் வேலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு நேரத்தைக் கழிக்கும் அருந்ததி, இரவில் மட்டும் அருகே இருந்த சித்தி வீட்டில் சென்று தூங்குவாள். அங்கே இருக்கும் சித்தப்பாவின் அம்மா ருக்மணிக்கு அவள் இரவு நேர துணை!

சித்தி வீட்டில் ஒரே ஆரவாரமாக இருந்தது. சித்தப்பா கண்ணனும், அவரின் செல்ல மகள்கள் இருவரும் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

ஒரே ஒரு வினாடி மனதில் எழுந்த ஆதங்கத்தை மறைத்துக் கொண்டு, சித்தியைத் தேடி சமைய லறைக்கு சென்றாள்.

''வா அருந்ததி, சாப்பிட்டியா? என்ன சமையல்?''

''பெருசா ஏதுமில்லை சித்தி. அவியலும் ரசமும் மட்டும் தான் செஞ்சேன்.''

''அவியலா? எனக்கு ரொம்பப் பிடிக்கும், அத்தனைக் காயை வெட்டி செய்ய நேரம் எங்கே இருக்கு?''

''உங்களுக்கு பிடிக்கும்னு தெரியும் சித்தி. அதுக் காக தான் கொஞ்சம் எடுத்துட்டு வந்தேன், எப்படி இருக்குனு சொல்லுங்க.''

சாப்பிட தயாராகி கொண்டிருந்த பிரேமா, அருந்த தியை நெகிழ்வுடன் பார்த்தாள்.

''அப்படியே அக்கா குணம் உனக்கு இருக்கு! அக்கா இப்படி தான் எதை செஞ்சாலும் உனக்கு பிடிக்கும் பிடிக்கும்னு எடுத்துட்டு வந்து தருவா...'' பேசியபடி அருந்ததி தந்த பதார்த்தத்தை எடுத்து ருசித்தவள்,

''உனக்கு அவளோட கை மணமும் இருக்கு... அவ செய்றதைச் சாப்பிடுற மாதிரியே இருக்கு...''

பிரேமா சொன்னதைக் கேட்டு புன்சிரிப்பை மட்டும் பதிலாகக் கொடுத்த அருந்ததி, அதற்குள் பாத்திரங்களை துலக்கத் தொடங்கி இருந்தாள்.

''உனக்கு ஏன் இந்த வேண்டாத வேலை அருந்ததி? வை நான் சாப்பிட்டு முடிச்சிட்டு துலக்குறேன்.''

"காலையிலே இருந்து விடாம வேலையே செஞ்சுட்டு இருக்கீங்க, இதை மட்டும் நான் செஞ்சா ஒண்ணும் குறைஞ்சு போகாது சும்மா சாப்பிடுங்க."

சித்தியை செல்லமாக அதட்டி விட்டு கை வேலையை தொடர்ந்தாள் அவள்.

படுத்த படுக்கையாக இருக்கும் ருக்மணி தீவிர சிவாஜி ரசிகை. தினமும் காலையில் இருந்து இரவு வரை அந்த அறையில் சிவாஜி பாடல்கள் ஒலித்துக் கொண்டே இருக்கும். அலுக்காமல் கேட்ட பாடல் களை மீண்டும் மீண்டும் கேட்டு கொண்டே இருப் பார்.

பல நாட்கள் பாட்டி தூங்கிய பிறகு சி.டி ப்ளேயரை ஆப் செய்து விட்டு தூங்குவாள் அருந்ததி. சில நாட்கள் அவளும் தூங்கி போக, பாடல்கள் இரவெல் லாம் ஒலித்துக் கொண்டே இருக்கும்...

அன்றும் பாட்டிக்கு முன் தூங்கி போனவள், நடுநிசியில் கண் விழித்தாள்.

ஏதோ பாடல் பாடிக் கொண்டிருந்தது! அந்தக் குரலில் கவரப்பட்டு பாட்டை கவனித்தாள்.

பக்கம் தோழியர் துணை வர நடந்து

மந்திரம் சொல்லும் மேடையிலே

மங்கள வாத்தியம் முழங்கையிலே

அழகன் உங்கள் அருகினிலே

அமர்ந்திருப்பாள் இந்த மணமகளே

எல்லாம் எதற்காக? நமக்கு கல்யாணம் அதற்காக!

தன்னையே அந்தக் கதாநாயகியின் இடத்தில் வைத்துப் பார்த்தாள்.

அவளுடைய திருமணமும் இப்படி தான் இருக்குமா? எங்கிருந்து வருவான் அந்த அழகன்?

மனதில் தோன்றிய கனவுடன், ஆசை, ஆவல், வெட்கம் என எல்லாம் போட்டி போட்டு துணை வந்தது.

தொடர்ந்து பாடல் பாடிக் கொண்டிருந்தது!

அந்தி மாலையில் சாந்தி முகூர்த்தம்

அன்னத்தூயிலில் ஆனந்த கோலம்

மேலே கேட்காமல் சட்டென மனதை, நினைவுகளை மூடிக் கொண்டாள் அவள். இதை எல்லாம் கேட்பதும், நினைப்பதும் தவறு என்று குற்ற உணர்வு எழுந்தது.

மிகப் பெரிய தவறை செய்து விட்டவள் போல் மனதை அடக்கி கொண்டு காதுகளுக்கும் அணை போட்டுக் கொண்டு தூங்க முயன்றாள்!

2



தையல் மெஷினில் துணி தைத்துக் கொண்டிருந்த அருந்ததி, கிணற்றில் நீர் இரைக்கும் சத்தம் கேட்டு ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

பிரேமா, நீர் இரைப்பதைக் பார்த்தவள், வேகமாக கொல்லைப் பக்க கதவைத் திறந்து கிணற்றடிக்குச் சென்றாள்.

''என்ன சித்தி நீங்க கிணத்துல தண்ணி எடுக் குறீங்க? சித்தப்பா எங்கே?''

''அவருக்கு ஒரு வேலை கொடுத்து அனுப்பி வச் சிருக்கேன். அதனால இன்னைக்கு தண்ணி இரைச்சு எடுத்துட்டுப் போற வேலை எனக்கு வந்திருச்சு.''

மூச்சு வாங்கியபடி பேசிய பிரேமா, கிணற்றில் இருந்து நீருடன் மேலே இழுத்திருந்த வாளியில் இருந்த நீரை குடத்தினில் ஊற்றினாள்.

''பத்துக் குடம் எடுக்குறதுக்குள்ள அவ்வளவு தான்.''

அலுத்தபடி பிரேமா குனிந்து குடத்தைத் தூக்க முயன்றாள்.

''வைங்க சித்தி, நான் எடுத்துட்டு போறேன். அப்படி என்ன சித்தப்பாக்கு முக்கியமான வேலை? உங்களை இப்படி அலைய விடுறார்?''

அக்கா மகளின் பரிவு பிரேமாவின் மனதை தொட்டது.

''அவர் போகலைடா, நான் தான் அனுப்பி வச்சேன். நம்ம மேல தெரு பெரிய வீடு இருக்குல?''

''பூட்டியே இருக்கே அந்த வீடா?''

''அது தான்! அது என் ஸ்நேஹிதி லக்ஷ்மியோட வீடு ஆச்சே! அவளுக்கு இத்தனை வருஷம் கழிச்சு கோவிலுக்குப் போக ஆசை வந்திருக்கு.

குடும்பத்தோட கிளம்பி வந்துட்டு இருக்கேன்னு போன் செய்தாள். அந்த வீட்டு சாவி என்கிட்ட தான் இருக்கு. ஆனால் வீடு புழங்காமல் மோசமான நிலை மைல இருக்கு. அது தான் உன் சித்தப்பா கிட்ட கொஞ் சம் சுத்தம் செய்து வைக்க சொல்லி அனுப்பினேன்.''

''ஓ! எந்த கோவில்?''

''மஹாதேவர் கோவில்! ஏதோ புக்கில கோவில், அருவி பத்தி எல்லாம் எழுதி இருந்தாங்களாம். அதை படிச்ச உடனே அவளுக்கு ஊருக்கு வர ஆசை வந்திருச்சாம். அவளை பார்த்தே நிறைய வருஷம் ஆச்சு. இருபது இருபத்தியஞ்சு வருஷம் இருக்கும்.''

''சரி சித்தி நான் இந்த குடத்தை வீட்டுக்கு எடுத்துட்டு போறேன்.''

''வெளியே வெள்ளை கலர் அண்டா இருக்கும் அத முதல்ல நிரப்பு. அப்புறம் சமையலறையில இருக்க பாத்திரங்களை நிரப்பணும்.''

''சரி சித்தி.''

பிரேமா நீர் இரைக்க, அலுக்காமல் குடங்களைத் தூக்கிச் சென்று சித்தி சொன்னது போல் ஒவ்வொரு பாத்திரமாக நீரை நிரப்பினாள் அருந்ததி.

''இன்னும் இரண்டு குடம் தான். பாவம் நீ, உன்னை வேற அலைய விடுறேன்.''

''அச்சோ என்ன சித்தி நீங்க? நானே பொழுது போகாமல் சும்மா தான் இருந்தேன். இனிமேல் டெய்லி நானே எடுத்துட்டு வந்து தரேன். சித்தப்பாவும் பாவம் எத்தனை குடம் தூக்குவார்.''

"ஆமாமாம், ரொம்ப பாவம் தான்! ஏதாவது வேலை செய்யட்டும்னு தான் இதை அவரை செய்யச் சொல்றது. தொப்பை கொஞ்சம் குறையணுமே!"

"அதுக்கு நீங்க உங்க கம கம சமையலை அவருக்குக் கொடுக்காமல் இருங்க! உங்க சாப்பாடை சாப்பிட்டால் யாரு தான் சதை போட மாட்டாங்க!"

"பேசி மயக்க உனக்கு சொல்லி தரணுமா என்ன? ஆனாலும் நீ தான் அருந்ததி எனக்கு எப்போதும் உதவி செய்றது, இந்த அஸ்வினியையும், ரோஹினியை யும் பாரு அவங்க அப்பா கூட ஓடி போயிடுச்சுங்க."

"சின்ன பசங்க தானே சித்தி? இப்போ தானே இப் படி இருக்க முடியும்? அப்பா செல்லம் வேற, பின்ன சித்தப்பா கூட போகாமல் எங்கே போவாங்க?"

இதை சொல்லும் உனக்கு மட்டும் என்ன வயதாகி விட்டதா என்ற எண்ணத்துடன் அருந்ததியைப் பார்த்தாள் பிரேமா.

அப்படியே அவளின் அக்கா உமாவின் முக ஜாடை இருந்தது. திருமணமாகி ஏழு வருடங்கள் குழந்தை இல்லாமல் இருந்து தவமாய் தவமிருந்து பெற்ற மகளை இப்படி தனியே விட்டுச் செல்ல அவளுக்கு எப்படி தான் மனம் வந்ததோ?

இவளை ஒரு நல்லவனாக பார்த்து ஒப்படைக்க வேண்டும்!

நல்லவேளை அவள் கணவன் கதைகளில் வருவது போல் வில்லனில்லை.

சித்தியின் மனதில் ஓடிக் கொண்டிருந்த எண்ணங்களை அறியாத அருந்ததி, நிரம்பி இருந்த குடத்தை தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு நடந்தாள்.

அந்த சின்னஞ்சிறு தெருவைக் கடந்தால் சித்தியின் வீடு வந்து விடும். கிராமத்தின் உள்ளே அமைந்திருக்கும் சாலை என்பதால் போக்குவரத்து எதுவும் இல்லை. எப்போதேனும் ஒன்றிரண்டு இரண்டு சக்கர வாகனங்களைப் பார்க்கலாம்.

எனவே எந்த விதக் கவலையுமில்லாமல் குடத்துடன் விடுவிடுவென சாலையை கடக்க நடந்தவள், பொம் பொம் என அலறிய ஒலியைக் கேட்டுத் திகைத்து நின்றாள்.

ஒரு சில வினாடிகளில் சுதாரித்தவள், நடு ரோட்டில் நிற்கிறோம் என்ற உணர்வு பெற்று, ஓசை எழுப்பிய வாகனத்தை திரும்பிப் பார்த்தபடி சாலையைக் கடக்க முயன்றாள்.

அருந்ததியின் பின்னே நின்றிருந்த மஹிந்திரா ஸ்கார்ஃபியோவின் முன் இருக்கையில் அமர்ந்திருந்த லக்ஷ்மி, அருகில் இருந்த கணவர் நாதனைப் பார்த்து,

''கிராமம்ங்க இது! பாவம் இப்படியா அந்த பொண்ணை பயமுறுத்துவீங்க?'' என கோபப்பட்டுக் கொண்டிருந்தாள்.

மெதுவாக காரை கிளப்பி முன்னே கொண்டு சென்ற நாதன், காரின் ஜன்னல் வழியே தலையை வெளியில் விட்டு,

''சாரிம்மா, பயமுறுத்திட்டேனா?'' என்றார்.

மெல்ல புன்னகைத்த அருந்ததி,

"இல்லை, நான் தான் கவனிக்காமல் நடந்தேன், பரவாயில்லைங்க" என்றாள்.

நாதனின் அருகே இருந்த லக்ஷ்மி, எட்டிப் பார்த்து,

"மேலத் தெருவுக்கு இப்படி போனால் ஒரு வழி இருக்குமே, அதில் கார் போகுமா? இல்லை வேற வழியே போகணுமா?" எனக் கேட்டாள்.

"இந்த பக்கம் வழி இல்லைங்க, அந்த பக்கம் வீடு வந்து வழி போயிடுச்சு. நீங்க காரை இப்படி நிறுத்திட்டு நடந்து போகலாம் இல்லை திருப்பிட்டு, மெயின் ரோட்டுக்குப் போய் போகணும்."

"அடடா! சரிங்க பிரேமா கிட்ட சாவி வாங்கிட்டு மெயின் ரோட் போய் போவோம்..."

லக்ஷ்மி நாதனிடம் பேசுவதைக் கவனித்த அருந்ததி,

"நீங்க பிரேமா சித்தியோட பிரெண்டா? அவங்க வீடு இது தான். சித்தி வேலையா இருக்காங்க, நான் போய் கூப்பிட்டுட்டு வரேன், நீங்க வீட்டுக்குள்ள வந்து உட்காருங்க..." என்றாள்.

ஆச்சர்யமாக அருந்ததியை பார்த்த லக்ஷ்மி,

"நான் சொல்ற பிரேமா உன் சித்தி தானான்னு தெரியலையே!"

"அவங்களே தான். சித்தி சொன்னாங்க அவங்க பிரெண்ட் சென்னையில இருந்து வராங்கன்னு. உங்க பேர் லக்ஷ்மி தானே?"

"ஆமாம்!"

"அப்போ என் சித்தி தான் உங்க பிரெண்ட் வாங்க, உள்ளே வந்து உட்காருங்க, நான் சித்தியை கூப்பிடு றேன்."

"சரிம்மா..." என்றாள் லக்ஷ்மி வாஞ்சையுடன்.

பிறந்த ஊருக்கு பல வருடங்களுக்குப் பின் வந்திருப்பது அவளின் மனதை நெகிழ்த்தி இருந்தது.

நாதன் காரை ஓரமாக நிறுத்த, அதனுள் இருந்து அவரின் குடும்பத்தினர் ஒவ்வொருவராக கீழே இறங்கினர்.

லக்ஷ்மி, ராதிகா, கௌஷிக், ஷிவா, நாதன் அனை வரும் இறங்கி அந்த கிராமத்து வீடுகளை நோட்டம் விட்டனர்.

அதற்குள் குடத்தை வீட்டினுள் வைத்து வந்த அருந்ததி,

"வாங்க, உள்ளே வந்து உட்காருங்க!" என்று உபசரித்தாள்.

"யாருன்னே தெரியாமல் வீட்டுக்குள்ளே வர சொல்றாங்க!" என ஆச்சர்யப்பட்டான் கௌஷிக்.

"கிராமத்தில் எல்லாம் அப்படி தான்! வாங்க உள்ளே போகலாம்" என்றாள் லக்ஷ்மி.

தயக்கத்துடன் உள்ளே வந்தவர்களை நாற்காலி யில் அமரச் சொல்லி உபசரித்தவள்,

"சித்தி பக்கத்தில தான் இருக்காங்க, இரண்டு நிமி ஷத்தில கூட்டிட்டு வந்திடுறேன், டிவி பார்க்குறீங் கன்னா பாருங்க."

சொன்ன வேகத்தில் நடந்தவள், கிணற்றடியில் வந்து தான் நின்றாள்.

''சித்தி உங்க பரெண்ட் குடும்பம் வந்துட்டாங்க! வீட்டில உட்கார சொல்லி இருக்கேன். வாங்க.''

''வந்துட்டாங்களா, சரி நான் போறேன், இந்த இரண்டு குடம்.....''

''அதை பத்திக் கவலைப்படாதீங்க சித்தி நான் எடுத்துட்டு வரேன்.''

பிரேமா சேலையை சரி செய்து விட்டு, கைகளை துடைத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள்.

அருந்ததி இரண்டு குடங்களையும் எடுத்து வைத்து விட்டு, சமையலறையில் எட்டி பார்த்தாள்.

பிரேமா, லக்ஷ்மியுடன் பேசியபடி தேனீர் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

''நீங்க போய் பேசுங்க சித்தி, நான் டீ போடு றேன்.''

இயல்பாக அடுப்பின் அருகே சென்று வேலையை தொடர்ந்த அருந்ததியை பார்த்த லக்ஷ்மி,

''இது யாரு பிரேமா?'' என்றாள் ஆர்வத்துடன்.

''உமா அக்கா பொண்ணு லக்ஷ்மி! பேரு அருந்ததி. அவ வீட்டில இருக்கற கிணத்தில தான் தண்ணி எடுத்துட்டு இருந்தேன்.''

''உமா அக்கா சாயல் அப்படியே இருக்கு! எங் கேயோ பார்த்த மாதிரி இருக்கேன்னு நினைச்சேன். அக்கா இறந்து கொஞ்சம் வருஷம் ஆச்சுல?''

லக்ஷ்மி தணிவாகப் பேசிய போதும், அருந்ததி பக்கம் ஒரு பார்வையைப் பார்த்து விட்டு பதில் சொன்னாள் பிரேமா.

''ஆமா, அவங்க இரண்டு பேரும் இறந்து ஏழு வருஷமாச்சு. அக்கா பொத்தி பொத்தி வளர்த்தா. ஹூம்ம்ம்ம்! கொஞ்சம் நாள் தாத்தா பாட்டி இருந்தாங்க, அவங்களுக்கு அப்புறம்... தனியா இருக்கா, ராத்திரி மட்டும் இங்கே வந்து அத்தையோட ரூமில படுத்துப்பா.''

''ஏன் அப்படி? இங்கேயே தங்கி இருக்க சொல்ல கூடாதா?''

''நான் கூப்பிட்டு பார்த்தேன், அவளுக்கு மன சில்லை. தள்ளி இருந்தா தான் சொந்தத்துக்குள்ள சண்டை வராதாம்!''

''பாரேன் பாட்டி போல பேச்சை!''

''இதுக்கே ஆச்சர்யப்பட்டால் எப்படி? இதை விட பெரிய மனுஷத்தனமா எல்லாம் செய்வா! மத்தபடியும் நம்ம ஊரில பயம் இல்லையே அதனால் அவளுக்கு பிடிச்சது போல இருக்கட்டும்னு விட்டாச்சு.''

அதற்குள் தேனீரை கோப்பைகளில் நிரப்பி எடுத்து வந்தாள் அருந்ததி. லக்ஷ்மிக்கும், பிரேமாவிற்கும் கொடுத்து விட்டு, ஹாலில் டிவியில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்த மற்ற நால்வர்க்கும் எடுத்துச் சென்றாள்.

நாதன், ராதிகா, கௌஷிக் என வரிசையாக ஒவ்வொருவரும் தேனீரை எடுக்க, இறுதியில்

ஷிவாவிற்கு கொடுக்க அவள் யத்தனித்த அதே நொடியில் ஷிவாவின் செல்போன் ஒலித்தது. பேன்ட்டில் இருந்து போனை எடுக்க எழுந்தவனின் உயரத்தை ஆச்சர்யத்தோடு பார்த்தாள் அவள்!

இத்தனை உயரமாக ஒருவனால் இருக்க இயலுமா?

அவளின் முகத்தில் இருந்த ஆச்சர்யம் மட்டுமில் லாமல், அவளையும் கவனிக்காமல் தேநீரை எடுத்துக் கொண்டு, தானாக,

''தேங்க்ஸ்'' என்ற ஷிவா அதற்கு மேல் எதையும் கவனிக்காமல் தன்னுடைய செல்போன் பேச்சில் தன்னை மறந்தான்.

''வீடு பக்கத்தில இருக்கு லக்ஷ்மி அதுக்கு எதுக்கு கார்? நடந்து போனா பத்து நிமிஷம் கூட ஆகாது.''

''சரி நடந்தே போகலாம்.''

''நீயும் வா அருந்ததி, போயிட்டு சீக்கிரம் வந்திர லாம்.''

''இல்லை சித்தி நீங்க போயிட்டு வாங்க.''

''சும்மா தானே இருக்கணும், வா எங்களுக்கும் துணையா இருக்கும்.''

''ஆமாம், வாம்மா!''

இருவரும் அழைக்க மறுக்க மனம் வராமல் அவர் களுடன் சென்றாள் அருந்ததி.

வீடுகளின் அருகே இருந்த ஒற்றை அடிப் பாதை யில் நடந்தவர்களில் லக்ஷ்மியை அடையாளம் தெரிந்து

கொண்டு சிலர் அன்புடன் விசாரித்தனர்! சிலர் பிரேமாவிடம் அது லக்ஷ்மியின் குடும்பம் என தெரிந்து கொண்டு, பார்த்து எத்தனை ஆண்டுகளாகி விட்டது என ஆரம்பித்து நலம் விசாரித்தனர்!

கௌஷிக்கும், சிவாவும் பேசியபடி ஒன்றாக நடக்க ராதிகா, அருந்ததியுடன் நடந்தாள்.

"வெரி இன்ட்ரஸ்டிங்! இன்னும் கூட அம்மாவை இத்தனை பேர் ஞாபகம் வச்சிருக்காங்க."

"பக்கத்தில இருக்கவங்க நிறைய பேர் சொந்த காரங்க, பல வருஷமா இருப்பவங்க அதனால எப்படி யும் தெரியும்."

"ரொம்ப நல்லா இருக்கு இந்த ஊர். நான் சின்ன வயசில வந்திருக்கேன்னு அம்மா சொன்னாங்க, ஞாபகமே இல்லை."

"அது தான் இப்போ வந்துட்டீங்களே, பொறுமையா எல்லா இடத்தையும் வேண்டிய வரைக்கும் சுத்தி பாருங்க."

"சுத்தி பார்க்கணும்னு இல்லை, இந்த கிளை மேட்டே போதும் சூப்பரா இருக்கு. இனிமேல் அப் பப்போ வரணும். அதுதான் தாத்தா வீடு இருக்கே."

"வீடு எந்த நிலமையில இருக்குன்னு தெரியலை. சித்தப்பாவும், பசங்களும் அங்கே தான் இருக்காங்க."

"உங்க சித்திக்கு எத்தனை பசங்க?"

"இரண்டு பொண்ணுங்க, மூத்தவ ரோஹினி, சின்னவ அஸ்வினி."

"ஒரே நட்சத்திர பேரணியா இருக்கே!"

"ஆமாம், என் பேர் அருந்ததி!" என்று சொல்லி புன்னகைத்தாள் அருந்ததி.

அந்தச் சின்னப் புன்னகையில் அழகுற மின்னிய அவளின் முகத்தை எந்த விதப் பொறாமையும் இல்லாமல் பார்த்து ரசித்தாள் ராதிகா.

"எனக்கு எங்க அம்மா அப்பா பேரு வச்ச ஸ்டைலை பார்த்து சித்தியும், சித்தப்பாவும் தங்கைகளுக்கும் செலக்ட் செய்தாங்களாம்."

"கூல்! நீங்க தான் ட்ரெண்ட் செட்டர்னு சொல் லுங்க. என் பேர் ராதிகா."

"ஓ! நீங்களும் கூட ஸ்டார் தான்!"

"ராதிகான்னு நட்சத்திரம் இருக்கா என்ன?"

"அந்த ஸ்டார் இல்லை, ஆனால் நடிக்குற ஸ்டார் நம்ம சித்தி ராதிகா இருக்காங்களே!"

"அட ஆமாம்! கலக்குறீங்க! என்ன படிச்சிருக் கீங்க?"

"பி.எஸ்ஸி மேத்ஸ்."

பேசியபடி ஏழு பேரும் அந்தப் பெரிய வீட்டை அடைந்தனர்.

"வாவ்! அம்மா, நீங்க தான் பெரிய வீட்டு பண் ணக்காரர் பொண்ணா? வீடு சூப்பரா இருக்கே."

ராதிகா சொன்னது போல் வீடு பழையதாக இருந் தாலும் அழகாக இருந்தது.

வாசல் கதவைத் திறந்து அவர்கள் உள்ளே சென்ற அரவம் உணர்ந்து எட்டி பார்த்த கண்ணன், வந்திருப் பவர்கள் யாரென்று புரிந்து கொள்ள முடியாமல் மனைவி பக்கம் பார்த்தார்.

''என்ன கண்ணன், என்னையும் அடையாளம் தெரியலையா? நீ அப்படியே தான் இருக்க நான்தான் முடி எல்லாம் கொட்டி போய் கிழவனாகிட்டேன்.''

''சும்மா இருங்க, போதும் உங்க அழகை பத்திய புராணம்! எப்படி இருக்கீங்க அண்ணா?''

''நல்லா இருக்கேன்மா! நிஜமாவே அடையாளம் தெரியலை நாதன்! ஆளே மாறி போய் இருக்கீங்க!''

பல வருடங்களுக்கு பிறகு சந்திப்பவர்கள் தங்களுக் குள் குசலம் விசாரித்துக் கொள்ள மற்றவர்கள் அவர் களை வேடிக்கைப் பார்த்தனர். ஒரு வழியாக விசாரிப் புகள் முடிய, வீட்டைச் சுற்றிப் பார்த்தனர்.

''அஞ்சு ரூம் கிளீன் செய்திருக்கோம். கிச்சனும் சரி செய்தாச்சு. ஆனால் ஒரே ஒரு பெரிய பிரச்சனை மட்டும் இருக்கு.''

''என்னண்ணா?''

''கரண்ட் கனக்ஷன் இருக்கு.. ஆனால் எங்கேயோ ஏதோ சரி இல்லை, லைன் வேலை செய்ய மாட்டேங் குது. பையனைப் பார்க்கச் சொல்லி இருக்கேன். பழைய வீடாச்சே கொஞ்சம் கவனமா தான் பார்க்கணும்.''

''அதனால என்ன, நல்லா ஜில்லுன்னு இருக்கே, பேன் தேவையே இல்லை, அப்படியே நல்லா தூக்கம் வரும்'' என்றார் நாதன்.

"இல்லை இல்லை அப்படி எல்லாம் கனவு காணா தீங்க! கொக உங்களை கடிச்சு பக்கத்துக்கு ஊரில தூக்கிட்டுப் போய் போட்டுடும்."

"அவ்வளவு கொசுவா?"

"ஆமாம், நிறைய கொசு இருக்கு."

"அப்போ வேலை முடியுற வரைக்கும் என்ன செய்றது?"

"எதுக்கு இவ்வளவு யோசிக்கணும் சித்தி, நம்ம வீட்டிலேயே தங்கலாமே?" என்றாள் அருந்ததி.

"நானும் அதையே தான் சொல்றேன், நம்மளை தொல்லை செய்யக் கூடாதாம் இந்த மஹாராணிக்கு."

"ஆமாம் அருந்ததி, எனக்காக பிரேமாவும், அண்ணாவும் ஏற்கனவே நிறைய சிரமம் எடுத்திருக்காங்க, இதுக்கு மேல அவங்களை தொல்லை செய்யக்கூடாது."

"வார்த்தைக்கு வார்த்தை அண்ணா அண்ணான்னு சொல்லிட்டு அப்புறம் என்ன தொல்லை நொல் லைன்னு? வாங்க வாங்க கிளம்புவோம். வாங்கடா குட்டிஸ்! வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுப்போம்."

அதுவே இறுதி முடிவாக கொண்டு, அந்த பெரிய வீட்டை பூட்டி விட்டு அனைவரும் மீண்டும் வீடு நோக்கி நடக்கத் துவங்கினர்.

ரோஹினி காலேஜ் முதல் ஆண்டு படிக்கிறாள். அஸ்வினி பதினோராம் வகுப்பு படிக்கிறாள் இருந்தும் சித்தப்பாவிற்கு அவர்கள் இருவரும் இன்னமும் சின்ன பாப்பாக்கள் தான்! மனதில் ஓடிய

எண்ணத்துடனே மற்றவர்களுடன் நடந்த அருந்ததி, தன் முன்னே சென்று கொண்டிருந்த மற்றவர்களை எடை போட்டாள்.

ரோகிணி, அஸ்வினி புடை சூழ நடந்து கொண்டிருந்த சித்தப்பாவுடன் பேசியபடி நடந்துக் கொண்டிருந்தார் நாதன்.

அவருக்கு பின்னே அந்த உயர்ந்தவனும், ராதிகாவின் கணவனும் சென்று கொண்டிருந்தார்கள்.

அவனுடைய பெயர் என்னவாக இருக்கும்?

''என்ன பலத்த யோசனை? சும்மா பேச்சுக்கு சொன்னால், இவங்க இப்படிக் கிளம்பிட்டாங்கா ளேன்னு யோசிக்குறீங்களா?''

ராதிகாவின் குரலும், முகமும் அது கேலிப் பேச்சு என்பதை உணர்த்திய போதும் பதறிப் போய் பதிலளித்தாள் அருந்ததி!

''என்ன இப்படி சொல்லிட்டீங்க?''

''ரிலாக்ஸ் அருந்ததி! நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்.''

''புரிஞ்சது, சாரிங்க நான் அப்படி தான்! எல்லாத்துக்கும் பதறுற டைப். இத்தனை வருஷம் கழிச்சு வந்திருக்கீங்க? உங்களை கொசுக்கு நடுவில விட முடியுமா? சித்தி சமையல் ஏ ஒன்னா இருக்கும். சாப்பிட்டுப் பார்த்துட்டு நீங்களே சொல்வீங்க, இதை போய் மிஸ் செய்திருப்போமேன்னு.''

''நீங்க தானா உங்க சித்தியோட கொ.ப.செ?''

"அப்படின்னா?"

ஆர்வமும், அப்பாவித்தனமும் கலந்து அவள் கேட்டது ராதிகாவிற்கு மிகவும் பிடித்திருந்தது.

கனிவுடன் அவளின் கையை பற்றிக் கொண்டு நடந்தவள்,

"கொ.ப.சென்னா கொள்கை பரப்பு செயலாளர். ஒவ்வொரு கட்சிக்கும் கொள்கை இருக்குமே, அதை மக்கள் கிட்ட பரப்ப கொ.ப.சென்னு ஒருத்தர் இருப் பார்."

"ஓஹோ! ஆனால் இப்போ தான் வீட்டுக்கு ஒரு கட்சி இருக்கே! கட்சி பேரை பரப்ப தனி செயலாளர் வைக்கணும் முதல்ல!"

"ஹா ஹா ஹா! ஐ லைக் இட்! உன்கிட்டேயும் நல்ல ஹ்யூமர் சென்ஸ் இருக்கு."

அப்போது மட்டுமில்லாமல், தொடர்ந்து வந்த நேரங்களிலும் அருந்ததியும், ராதிகாவும் ஒன்றாகவே இருந்தார்கள். சமையல் வேலையில் ஈடுபட்டபடி பிரேமாவும், லக்ஷ்மியும் கதை பேச, அவர்களுக்கு உதவியபடி அருந்ததியும், ராதிகாவும் பேசினார்கள்.

மதிய உணவிற்கு பின், அன்று ட்யூஷன் இல்லை என்பதை அருகிலிருந்த வீட்டினருக்கு தெரிவித்து விட்டு, ராதிகாவிற்கு ஊரைச் சுற்றிக் காட்டினாள் அருந்ததி.

இருவருக்கும் நேரம் போனதே தெரியாமல் சுற்றி னார்கள்.

''வாங்க தென்னந்தோப்பில் இளநீர் குடிச்சிட்டுப் போவோம்.''

ராதிகாவை கையை பிடித்து அழைத்துச் சென்றவள், அங்கே இருந்த காய்களில் தேடி ராதிகாவிற்கென ஒன்றை வெட்டி எடுத்து வந்தாள்.

''என்ன நீங்க பாட்டுக்கு வந்து எடுக்குறீங்க? யாரும் எதுவும் சொல்லாமல் அமைதியா இருக்காங்க? யார் வேணா எடுக்கலாமா?''

''நல்ல கேள்வி கேட்டீங்க! யார் வேணா எடுக்கலாம்னா இத்தனை ஆளுங்க எதுக்கு? இது நம்ம தோப்பு.''

''நம்மன்னு சொன்னால் உங்களுடையதா?''

''ஆமாம்! என்னுதுன்னு சொன்னால் ரொம்ப தலைகனத்தோட பேசுற மாதிரி இருக்கே!''

ராதிகா அவளை அருங்காட்சியகத்தில் பார்க்கும் பல்லாயிரக்கணக்கான வருடங்கள் முந்தைய அபூர்வ பொருளைப் போல் பார்த்தாள்.

''என்ன அப்படி பார்க்குறீங்க?''

சென்னையில் ராதிகாவின் நட்பு வட்டத்தில், இல்லாததையும் இருப்பதாக சொல்வது தான் மரியாதையாக கருதப்பட்டது.

ஏன் ராதிகாவே கௌஷிக்கின் வேலை, வாகனம் பற்றி மற்றவர்களிடம் மாற்றிச் சொன்னதுண்டு!

''ஒண்ணுமில்லை அருந்ததி! யூ ஆர் ஸோ ஸ்வீட்!''

"நான் என்ன ஸ்வீட், நீங்க தான் ஸ்வீட்டோ ஸ்வீட். ரொம்ப அழகா இருக்கீங்க. உங்க பாப்பா லட்டு பாப்பா போல சூப்பரா இருக்கும்."

ராதிகாவின் முகம் வாடிப் போனது!

பொதுவாக அருந்ததி மற்றவர்களின் மனம் வருந்த பேசுபவள் இல்லை. அதிலும் திருமணமான தோழி ஒருத்திக்கு குழந்தை இல்லை என்பதை வைத்தே அவளுக்கு அறிவுரை வழங்குகிறேன் பேர்வழி என்று மற்றவர்கள் அவளின் இதயத்தை கிழித்துக் கூறு போடுவதைப் பார்த்திருந்ததால் அது போன்ற விஷயங்களை பேசுவதைத் தவிர்த்து விடுவாள்.

தன் பாட்டில் பேசப் போக, ராதிகாவின் முகம் வாடி போனதைப் பார்த்து கலங்கிப் போனவள்,

"சாரி, நான் தப்பா சொல்லிட்டேன்னு தெரியுது! சாரி" என்றாள் அவசரமாக.

கலக்கத்தோடு ஒலித்த அருந்ததியின் குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்த ராதிகாவிற்கு அவளின் மனதில் இருந்த சிறிய வருத்தம் கூட மறந்து போனது.

தன்னை மறந்து சிரித்தவள்,

"அருந்ததி! யூ ஆர் அ க்யுட்டி! எப்படி இப்படி இருக்க? ஸோ ஸ்வீட்! நீ தப்பா எதுவும் கேட்கலை, எனக்கே நீ சொன்ன மாதிரி லட்டு பாப்பா வேணும்னு ஆசை தான். என்ன செய்றது, கல்யாணம் ஆகி ஆறு வருஷம் ஆகப் போகுது, இன்னமும் குழந்தை இல்லை. இப்போ அம்மா கோவிலுக்கு வந்திருப்பது கூட இந்த அஜன்டாவோட தான்."

"ஆறு வருஷம் தானே ஆச்சு? நான் எங்க அம்மா அப்பாக்கு ஏழு வருஷம் கழிச்சு தான் பிறந்தேன். அம்மா சொன்னது சரி தான்! நீங்க போகப் போற கோவில் ரொம்ப சக்தி வாய்ந்தது, மனம் உருகி வேண் டிக்கிட்டா கேட்டது அப்படியே கிடைக்கும். நீங்க வேணா பாருங்க, அடுத்த வருஷம் லட்டு பாப்பா வோட கோவிலுக்கு வந்து சாமிக்கு நன்றி சொல்லப் போறீங்களா இல்லையான்னு!"

ராதிகா பதில் சொல்லாமல் அருந்ததியை பார்த் திருந்தாள்!

வெள்ளை மனதுடன் இவள் சொல்வது பலிக்கத் தான் போகிறது என்று அவளுக்குத் தோன்றியது.

அடுத்த நாள் கோவிலுக்குச் சென்று மஹா தேவரை தரிசித்தார்கள். பன்னிரண்டு சிவாலயங் களில் மூன்றாவதாக இருக்கும் அந்த ஆலயத்தில் வீரபத்ரராக தோற்றம் அளிக்கும் சிவ பெருமானைக் கண்டு மனமுருகி வேண்டினர்.

ராதிகாவும், கௌஷிக்கும் தங்களுக்கென ஒரு குழந்தை வேண்டுமென வேண்டிக் கொண்டனர்.

பிரேமா தன குடும்பத்தாரின் நலனுடன், அருந்த திக்கு விரைவில் திருமணம் நடக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டாள்.

நாதனும், லக்ஷ்மியும், தங்களின் இரு மக்களின் நலனுக்காக வேண்டிக் கொண்டனர். ராதிகாவிற்குக் குழந்தை வரமும், ஷிவாவிற்குத் திருமணப் பலனும் தருமாறு வேண்டிக் கொண்டனர்.

ஷிவாவும், அருந்ததியும், பொதுவாக அனைவருக்காகவும் வேண்டிக் கொண்டனர்!

தங்களையும் அறியாமல் இருந்த மனப் பொருத்தம் அவர்கள் இருவருக்கும் அப்போது தெரியவில்லை! ஆனால் எல்லாம் தெரிந்த இறைவனுக்கு புரிந்தது!!!

''ஹேய் அக்காவை ஏமாத்தாதீங்க! உள்ளே போடு!''

அஸ்வினி, ரோஹினியோடு பல்லாங்குழி ஆடிக் கொண்டிருந்த ராதிகாவிற்கு உதவிக் கொண்டிருந்தாள் அருந்ததி.

''இரண்டும் வாலுங்க, கொஞ்சம் கவனிக்காமல் விளையாடுனீங்க, அப்படியே தூக்கி சாப்பிட்று வாங்க!''

''போ அக்கா! சும்மா சொல்லாதே!''

''ராதிகா இதை எடுத்து விளையாடுங்க அப்போ அந்த வெற்றுக்குழி பக்கத்தில இருக்கது எல்லாம் உங்களுக்கு தான்.''

''இது பொய் ஆட்டம், போ அக்கா!''

''ஆமாமாம் பொய் பொய்!!! எங்களை இரண்டு பேருமா ஏமாத்துறீங்க!''

''ஹேய், அவங்களுக்கு விளையாட தெரியாதுல, சும்மா இருங்க.''

ராதிகா மட்டுமில்லாமல், அருந்ததி, ரோஹினி, அஸ்வினி அனைவரின் முகத்திலும் சிரிப்பு இருந்தது.

லக்ஷ்மியுடன் பேசியபடி அவர்களின் விளையாட்டைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் பிரேமா.

மற்ற நாட்களை போல் இரவு தூங்க வந்திருந்த அருந்ததி, ராதிகாவிற்கு விளையாட உதவிக் கொண்டிருந்தாள்.

''அருந்ததியும் உன் பொண்ணும் நல்ல செட் ஆகிட்டாங்க!''

''ஆமாம்.....''

லக்ஷ்மி பதில் சொல்லத் துவங்கிய நேரம்,

''அம்மா, தூக்கம் வருதும்மா, நான் தூங்கட்டுமா?'' எனக் கேட்டபடி வந்தான் ஷிவா.

''மணி எட்டு தானேப்பா ஆச்சு?''

''ஒண்ணுமே செய்யாமல் இவ்வளவு நேரம் இருந்து பழக்கம் இல்லையே. மத்த நாள் தான் லேட்டா தூங்குறேன் இப்போவாவது சீக்கிரம் தூங்குறேனே.''

''சரிப்பா! குட் நைட்.''

ஷிவா மாடிக்குச் சென்ற மறு நிமிடமே, மாடியில் இருந்து அவன் குரல் கேட்டது!

''அம்மா, என் பிரஷ் எங்கே? பேஸ்ட்டையும் காணும்? எங்கே வச்சீங்க?''

''அங்கே தான்ப்பா இருக்கும்.''

''வந்து எடுத்துக் கொடுத்துட்டுப் போங்க.''

''நல்ல பையன்டா நீ! இரு பிரேமா, நான் போயிட்டு வரேன்.''

''இந்தா உன் பிரஷ், பேஸ்ட்! இங்கேயே தானே இருக்கு? இனிமேலாவது நிம்மதியா தூங்கு.''

''எங்கே இருந்து தூங்க? எனக்கு பேஸ்புக் பார்க்காம தூக்கமே வராது. இந்த ஊரில் சிக்னலே இல்லை.''

''ரொம்ப முக்கியம் அதெல்லாம் மறந்துட்டு படுத்து தூங்கு.''

''போர் அடிக்குமே அம்மா! நான் தூங்குற வரைக்கும் இங்கேயே இருங்களேன்.''

''உன்னை திருத்த முடியாது! இப்படி சின்ன குழந்தை போல தூங்குற வரைக்கும் இருங்க அம்மா, பேஸ்ட் கொடுங்க அம்மா, பிரஷ் கொடுங்கன்னு கேட்டுட்டே இரு, நாளைக்கு நீ கட்டிக்குறவ என்னை வந்து கன்னா பின்னான்னு திட்ட போறா!''

''அப்படி திட்டுற பொண்ணா செலக்ட் செய்யா தீங்க, உங்களுக்கு நல்லா செட் ஆகுற பொண்ணா செலக்ட் செய்ங்க.''

லக்ஷ்மியின் மனதில் சட்டென்று பல்ப் எரிந்தது. கடந்த சில நாட்களாக அவளுடன் உலாவி கொண்டிருக்கும் அருந்ததியின் முகம் தோன்றியது.

அருந்ததியிடம் அடக்கம், படிப்பு, மரியாதை, பண்பு அனைத்தும் இருக்கிறது. கூடுதலாக பணமும், அழகும் கூட இருக்கிறது!!!

பிறந்த ஊருடன் விட்டுப் போயிருந்த தொடர்பு திடீரென ஏற்பட்டதும் இதற்காக தான் இருக்குமோ?

வீரபத்ரரிடம் வேண்டிக் கொண்டதற்கு அவர் காட்டும் வழி இது தானோ?

"டேய் கண்ணா, நான் ஒண்ணு கேட்கவா?"

மொபைலில் கேம் விளையாடிக் கொண்டிருந்தவன், அம்மாவை சந்தேகமாகப் பார்த்தான்.

"என்னடா கண்ணா அப்படி பாக்குற?"

"இந்த கண்ணா, வந்தா, ஏதோ விவகாரமான விஷயம்னு அர்த்தமாச்சே இப்போ என்னன்னு யோசிக்குறேன்."

"ரொம்ப தெரியுமாக்கும் உனக்கு?"

"சரிம்மா, இதை எல்லாம் விடுங்க, என்ன விஷயம் சொல்லுங்க."

"இந்த ஊரில் இருந்து பொண்ணு எடுத்தா உனக்கு ஓகேவா?"

"அது உங்களுக்கு ரொம்ப சந்தோஷத்தை கொடுக்கும்னு எனக்கு தெரியும், ஸோ டபுள் ஓகே."

"நிஜமா தானே சொல்ற?"

"ஆமாம்! நிஜமா... நிஜமா தான் சொல்றேன்."

"அப்போ அருந்ததியைப் பார்க்கலாமா?"

"அருந்ததியா? யாரு?"

"என்னப்பா இப்படிக் கேட்குற, பிரேமாவோட அக்கா பொண்ணு! நாம வந்த அன்னைக்கு கூட குடத்தோட நமக்கு வழி காமிச்சாளே?"

"நான் சரியா பார்க்கலை அம்மா! உங்களுக்கு பிடிச்சா எனக்கு எந்த அப்ஜெக்ஷனும் இல்லை."

"ஆனால் கல்யாணம் செய்துக்க போறது நீ தானே? இங்கே தான் இருக்கா, வா இப்போ கூட வந்து பார், உனக்கு பிடிச்சிருந்தா மேலே பேசலாம்."

"ப்ச் ப்ச் இந்த கதை எல்லாம் வேண்டாம்மா. எனக்கு நல்லது கெட்டது உங்களை விட யாருக்குத் தெரியும்? நீங்க செலக்ட் செய்ற பொண்ணு சரியா தான் இருப்பா. என்னுடையவள்ன்னு தெரிஞ்ச பிறகு நான் அவளைப் பத்தி தெரிஞ்சுக்குறேன், புரிஞ்சுக்கு றேன், லவ் செய்றேன். அது வரைக்கும் இந்த மனசில பெரிய சைஸ் பூட்டு போட்டு வச்சிருக்கேன்."

மகனின் வார்த்தைகள் லக்ஷ்மியின் மனதில் பூரிப்பை ஏற்படுத்தியது, ஆனாலும் வெளியில்,

"போடா, சரியான சாமியார் நீ!" என்றாள்.

சிறியவர்கள் இப்போதும் சிரித்துப் பேசியபடி விளை யாடிக் கொண்டிருந்தனர். பிரேமாவின் அருகில் அமர்ந்த லக்ஷ்மி, மெதுவாக மனதில் இருக்கும் பேச்சைத் தொடங்கினாள்.

"அருந்ததிக்கு இருபது, இருபத்தி ஒரு வயசிருக் குமா பிரேமா?"

"இருபத்தி மூணு இப்போ தான் ஆரம்பிச்சது லக்ஷ்மி."

"அவளுக்கு கலயாணத்திற்கு நீங்க தான் பார்க் கணும்ல?"

"ஆமாம், போன வருஷமே பார்க்கலாம்னு நினைச் சேன், இவர் தான் ஒத்தை வயசில தான் நல்லது செய்யணும்னு தள்ளி போட்டார். போன வாரம் தான்

ஜாதகத்தை எடுத்து வச்சேன், நல்ல பையனா பார்த்து பேசி முடிக்கணும்.''

''ரொம்ப தங்கமான பொண்ணு.''

''ஆமாம் லக்ஷ்மி, ரொம்ப நல்ல மனசு. கொஞ்சம் வெகுளி! ஆனால் ரொம்ப அழுத்தக்காரி.''

''அழுத்தக்காரியா? ஏன் அப்படி சொல்ற?''

''மனசில இருப்பதை யார்கிட்டேயும் சொல்ல மாட்டா. எல்லாத்தையும் அப்படியே மூடி மறைச்சு வச்சுப்பா.''

''தனியா இருப்பதாலா இருக்கும்.''

''ஹூம்! பாவம் லக்ஷ்மி அவ!''

''நீங்க எல்லாம் என்ன சொல்றீங்க? ஷிவா ஓகே சொல்லிட்டான்.''

நாதன் யோசனையுடன் மனைவியை பார்த்தார்.

''அவன் ஓகே எங்கே சொன்னான், உனக்கு பிடிச்ச பொண்ணுக்கு சரின்னு சொன்னான்.''

''எனக்கு அருந்ததியை பிடிச்சிருக்கு!''

''எனக்கும் அவளை ரொம்பப் பிடிச்சிருக்கு அம்மா! ஆனால் நம்ம வீட்டு போலி சாமியாரை பத்தி தான் யோசிக்க வேண்டி இருக்கு!''

''சும்மா சும்மா அப்படி சொல்லாதே. அவன் நல்ல பையன் அவ்வளவு தான்! இவள் தான் மனைவின்னு தெரிஞ்ச பிறகு மனசார நேசிப்பேன்னு சொல்றான். இந்த காலத்தில இப்படி ஒரு தங்கமான பையனை பார்க்க முடியுமா?''

''கல்யாணத்திற்கு அப்புறம் பீல் செய்வார்னு நினைக்குறேன் அத்தை!''

கௌஷிக் தன் பழக்க தோஷத்தில் கிண்டலடிக்க, ராதிகா அவனை பார்த்து முறைத்தாள்.

நாதன் வாய் விட்டு சிரித்தார்!

''சரியா சொன்னீங்க!''

''உங்களுக்கு எல்லாம் எப்படி என் மகனோட அருமை தெரியும்! சரி அருந்ததியை ஷிவாக்கு கேக்க லாமா வேண்டாமா?''

''உனக்கும் சிவாக்கும் பிடிச்சிருந்தா, நான் தடை சொல்ல என்ன இருக்கு? அந்த பொண்ணும் நல்ல பொண்ணு போல தான் இருக்கா?''

''நல்ல பொண்ணு போலவா? தங்கமான பொண்ணு அப்பா அவ!''

''அப்போ எல்லோருக்கும் ஓகே! ரொம்ப சந் தோஷம்!'' என்ற லக்ஷ்மியின் முகமும் சந்தோஷத்தில் பளபளத்தது!

''பிரேமா, என் மகனுக்கு அருந்ததியைக் கல் யாணம் செய்து வைக்கலாமுன்னு யோசிக்குறேன்.''

பிரேமா உடனே பதில் சொல்ல முடியாமல் லக்ஷ் மியை பார்த்தாள்.

''என்ன இப்படி பார்க்குற? நேத்தே கேட்டு இருப் பேன், எல்லோர் கிட்டேயும் பேசிட்டு கேட்கலாம்னு நினைச்சேன். உனக்கு சம்மதம்னா அருந்ததியை கேட்டு சொல்லு.''

"லக்ஷ்மி, எனக்கு சம்மதமில்லாமல் எப்படி போகும்? ரொம்ப தேங்க்ஸ்ப்பா! அருந்ததி உனக்கு நல்ல மருமகளா இருப்பா!"

"முதல்ல நீ அவகிட்ட பேசு! அவ சரின்னு சொன்னால் சிம்பிளா நாங்க கிளம்புறதுக்கு முன் நிச்சயத்தை முடிச்சிடலாம்."

அருந்ததியால் நம்பவே இயலவில்லை! அவள் திகைத்து நிற்பதை பார்த்து பரிவுடன் பேசினாள் பிரேமா.

"ரொம்ப நல்ல குடும்பம் அருந்ததி. ஷிவா நல்லா படிச்சிருக்கான், நல்ல வேலைக்கு போறான். எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லை."

அவளுக்கு தான் தெரியுமே! ஒருமுறை, ஒரு முறை கூட அவளை நேராக நிமிர்ந்தும் பார்க்காதவன் அவன்!

"சித்தி உன் நல்லதுக்கு தான் சொல்றேன், சரின்னு சொல்லுடா!"

மனதினுள் சந்தோஷ ஊற்று பொங்க,

"சரி சித்தி" என்றாள் அவள்.

மாப்பிள்ளையாக தோரணையாக அமர்ந்திருந்த ஷிவாவின் மனதில் சொல்ல முடியாத பரவசம் இருந்தது. எத்தனையோ நாளாக அவன் கனவு கண்டிருந்த நாள் அது... அவனுக்கே அவனுக்கான அவளை அவன் சந்திக்கப் போகும் நாள்!

அம்மா சொன்னதை வைத்து, அடங்காத ஆசை யுடன் எதிர் வீட்டில் இருந்தவளைக் காண நேற்று மாலையே மாடியில் இருந்து பார்க்க முயன்றான். குழந்தைகளின் மழலையோடு கிள்ளையாக ஒலித்த அவளின் குரல் மட்டுமே அவனுக்குக் காதில் கேட்டது!

அவள் தான் அவனுடையவள் என்று தெரிந்திருந் தால் இத்தனை நாட்களை வீணடித்திருக்க மாட் டானே!

எப்போது தான் அவளை வரச் சொல்வார்கள்?

பொறுமையை இதற்கு மேல் சோதிக்க இயலுமா?

ஷிவா பொறுமை இழந்து மனதினுள் புலம்பிக் கொண்டிருக்க, அந்த புலம்பலை நிறுத்த ஒலிப்பது போல் கூட்டத்தின் சலசலப்பையும் மீறி மெல்லிய கொலுசொலி கேட்டது!

ஷிவாவின் இதயம் பல்மடங்கு வேகத்துடன் அடித்தது!

அவனருகில் நின்றிருந்த கௌஷிக்,

''மச்சான், உன் ஆள் வந்தாச்சுப்பா, வெட்க படாமல் நிமிர்ந்து பார்'' என்றான்.

அதற்காகவே காத்திருந்தது போல் நிமிர்ந்து நேராகப் பார்த்த ஷிவா இமைக்க மறந்து போனான்!

தங்க நிற பட்டு புடவையில் ஆங்காங்கே சிவப்பு நிற பூக்கள் ஜரிகைகளாக பூத்திருக்க, சிவப்பு நிற பார்டருடன் கூடிய அந்த சேலையில் பொன்னென ஜொலித்தாள் அவள்.

நிலவை போன்ற வட்டமான அழகிய முகம்!

வெட்கத்தில் தாழ்ந்திருந்தாலும் பட்டாம் பூச்சி களாக சிறகடித்த இமைகள்!

நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சியினால் சிவந் திருந்த அந்த மாசற்றக் கன்னங்கள்!

அந்த வினாடியில் அவனின் இதயம் அவளிடம் தொலைந்து போனது!

''டேய் போலி சாமியார், இத்தனை நாள் பார்க் காமல், இப்போ ஏன்டா இப்படி பட்டிக்காட்டான் மிட் டாய் கடையைப் பாக்குற மாதிரி ஆன்னு பாக்குற? கொஞ்சம் அடக்கி வாசி!''

ராதிகாவின் பேச்சில் பார்வையை திருப்பிய போதும், அடுத்த சில நொடிகளில் அவனின் கண்கள் தானாக அவளிடமே சென்றது!

காந்தம் இருக்கும் பக்கம் இரும்பு ஈர்க்கப்படுவது தானே வேதியல் விதி!

ஷிவா தன்னவளைப் பார்த்து கிறங்கி இருந்த அதே நேரம் அருந்ததியின் வயிற்றினுள் பட்டாம்பூச் சிகள் பறப்பது போல் புது வித உணர்வு தோன்றி இருந்தது.

நிமிர்ந்து பார்க்காத போதும், உள்ளுணர்வில் உணர்ந்து கொண்ட அவனின் பார்வை, அவளை மேலும் வெட்கமடையச் செய்தது.

இன்பமும் வெட்கமும் போட்டி போட்டுக் கொண்டு தோன்றி அவளைத் திக்கு முக்காடச் செய்து கொண் டிருந்தன!

நிலத்தை பார்வையால் அளந்து விட விரும்புபவள் போல், தலையை நிமிர்த்தாமல் பூமியையே பார்த்திருந்தாள் அவள்.

நிச்சயதார்த்தம் குறிப்பிட்ட நேரத்தில் துவங்கியது! இரண்டு வீட்டுப் பெரியவர்களும் பேசி, தங்களுக்கு திருமணத்தில் சம்மதம் என்று தெரிவித்தனர்.

"பொண்ணோட அப்பா மாப்பிள்ளைக்கு செயின் போடுங்க."

கண்ணன், ஷிவாவிற்கு தங்கச் செயினை அணிவித்தார்.

ஷிவாவின் மனதில் ஏமாற்றம் இருந்தது! அவள் அருகே செல்ல முடியாதா?

அவனை ஏங்க வைக்காமல்,

"பொண்ணுக்கு நகை போடுங்க" என்ற குரல் கேட்டது.

சின்னப் பெட்டியைத் திறந்து மோதிரத்தை எடுத்து ஷிவாவின் கையில் கொடுத்தாள் லக்ஷ்மி.

"அதைப் போட்டுட்டு, அப்புறம் இதை போட்டு விடு" என்று மறு கையில் இருந்த ப்ரெஸ்லேட்டைக் காட்டினாள்.

தலை அசைவுடன் ஆர்வத்துடன் சென்றவன், மயிலென நின்றிருந்தவளின் அருகே சென்று கையை நீட்டினான்.

அவள் மெல்ல தயக்கத்துடன் நீட்டிய கையை அழுத்தத்துடன் பற்றியவனின் உடலில் என்ன என்று விவரிக்க முடியாத இன்ப உணர்வு எழுந்தது.

அவளுள்ளும் அது போன்ற உணர்வு தோன்றி யதின் அறிகுறியாக சிலிர்த்தது அவனின் கையுள் இருந்த அவளின் கரம்!

மயக்கத்துடனே விரல் பற்றி மோதிரத்தை அணி வித்தவன் இன்னமும் மயங்கிப் போனான்!

பெண்ணின் விரல் இத்தனை மென்மையாக இருக்குமா?

இவளின் உள்ளங்கையும் பஞ்சு போல் தான் இருக் கிறது!

அவளின் கையை விட மனதே இல்லாதவனைப் போல் ஸ்லோ மோஷனில் மோதிரத்தை அணிவித் தவன், அதே சிலிர்ப்புடன், மயக்கத்துடன் ப்ரெஸ் லேட்டையும் அணிவித்தான்.

அதன் பின்னும் உடனே கையை விடாமல் அவன் நிற்க, இன்ப அவஸ்தையுடன் அவனை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தாள் அருந்ததி!

அதுவரை அவளிடம் சரணாகதி அடையாமல் இருந்த அவனின் உடலின், மனதின் ஒன்றிரண்டு அணுக்களும் தங்களின் எதிர்ப்பை உடனே கைவிட்டு அவளிடம் மண்டி இட்டன!

"டேய், போதும்டா ஜொள்ளு விட்டது! இப்படி யாடா பப்ளிக்கா செய்வ? போதும்பா சாமி, வா வந்து உட்கார்!"

ராதிகாவின் பரிகாசக் குரல் அவனை நிஜ உல கிற்கு அழைத்து வந்தது ஆனாலும், ஒருமுறை

அவளின் கையை மெல்ல அழுத்தி விட்டே விடுவித்தான் ஷிவா!

அருந்ததியுடன் ஒரு முறையேனும் பேசி விட வேண்டுமென்று மனதினுள் ஆசையுடன் இருந்தான் ஷிவா. நிச்சயதார்த்ததிற்கு பிறகு, உணவு உண்ணும் போது மட்டுமே அவனால் அவளைப் பார்க்க முடிந்தது! அதன் பின் மாய மோகினியாக அவனின் கண்ணில் தோன்றாமல் மறைந்து போனாள் அவள்!

பொறுமையின்றி அலைந்தவன், கேட்காமல் எதுவும் நடக்காது என்ற முடிவுடன், சொந்தக்காரப் பெண்ணுடன் பேசி விட்டு வந்து கொண்டிருந்த பிரேமாவிடம் சென்றான்.

''நான் வீட்டை சுத்தி பார்க்கட்டுமா ஆன்ட்டி?''

கேலிப் புன்னகையுடன் அவனைப் பார்த்த பிரேமா,

''பாருங்க பாருங்க உங்களுக்கு இல்லாத உரிமையா?'' என்றாள்.

பின் மெல்லிய குரலில்,

''அருந்ததி மாடியில இரண்டாவது ரூமில் இருக்கா, கூட என் பசங்க இருப்பாங்க, நான் கூப்பிட்டேன்னு சொல்லுங்க'' என்றாள்.

''தேங்க்ஸ் ஆன்ட்டி'' என்றவன் அவள் கண் இமைக்கும் முன், மாடிப் படி ஏறி முடித்திருந்தான்.

சின்னப் புன்னகையுடன் கண்டு கொள்ளாமல் சென்றாள் பிரேமா!

பிரேமா சொன்ன அறையின் அருகிலேயே பேச்சு சத்தம் கேட்டது, மெல்லக் கதவைத் தட்டி விட்டுத் திறந்தான்!

அங்கே அவனின் தேவதை அவளின் தங்கைகள் புடை சூழ இருந்தாள்!

அவனை அங்கே பார்த்த அதிர்ச்சியில் எழுந்து நின்றவள் அசையாத சிலை போல நின்றாள்!

அவன் ஏதும் சொல்லும் முன்பே தங்களுக்குள் கிசுகிசுத்து விட்டு ஓட்டம் பிடித்தனர் ரோஹிணியும், அஸ்வினியும்!

புன்னகையோடு அவர்கள் செல்வதைப் பார்த்தவன், அருந்ததியின் அருகே வந்தான்!

அருந்ததி ஏற்கனவே விதிர்விதிர்த்து போய் இருந்தாள்!

அவளின் இதயத்தின் துடிப்பு பல்மடங்காகி அவ ளுக்கே தெளிவாகக் கேட்டது!

''ஹாய்!''

....

''நீ ரொம்ப அழகா இருக்க!''

...

''இந்த சாரீயில் தேவதை போலவே இருக்க.''

...

''நான் நாளைக்கு கிளம்பிடுவேன், பேசாமல் கிளம்ப மனசு வரலை.''

பதில் சொல்லாத போதும், தயக்கத்துடன் மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் அவள்!

''உன் மொபைல் நம்பர் கொடேன்.''

''ஹூஹூம்ம்.''

அவளின் தலை அசைவுக்கு ஏற்ப அழகாக அபிநயம் புரிந்தன அவளின் ஜிமிக்கிகள்!

''ஏன்?''

''மொபைல் இல்லை.''

''என்னுடைய மொபைல் வச்சுக்கோ நான் பேசுறேன்.''

''இங்கே சிக்னல் சரியா வராது, வேண்டாம்.''

''ப்ச்... என்ன செய்றது!'' என யோசித்தவன்,

''ஐடியா!'' என்றபடி அவளின் அருகே நெருங்கி, அவள் என்ன என்று யோசிக்கும் முன் அவளின் பட்டு கன்னத்தில் முத்தமிட்டான்!

மின்சாரம் தாக்கியது போல் அவள் பின்னே செல்ல, சின்ன புன்னகையுடன் அவளின் கன்னத்தை செல்ல மாகத் தட்டினான்.

''தேங்க்ஸ், இன்னும் கொஞ்ச நாளுக்கு இது தாங்கும்!'' என்றான் உல்லாசமாக!

''இதுக்கு மேல இங்கே இருந்தால் ஆபத்து நான் கிளம்புறேன், பை ரதி!''

சொல்லிவிட்டு படிகளில் இறங்கியவனின் முகத் தில் இன்னமும் உல்லாசப் புன்னகை இருந்தது!

அறையினுள் இருந்த அருந்ததி, சிலையாக மாறி விட்டது போல் திகைத்துப் போய் நின்றிருந்தாள்!

3

எப்போதும் போல் ருக்மணியின் அறையில் படுத்திருந்த அருந்ததிக்கு தூக்கம் வரவில்லை. எப்படி புரண்டு படுத்தாலும் ஷிவாவின் நினைவே வந்து அவளைப் பாடாக படுத்தியது. வலது கன்னத்தை மெல்லத் தடவிப் பார்த்தாள். ஷிவா முத்தமிட்ட நினைவில் உடலெங்கும் மின்சாரம் பாய்ந்தது போல் புது வித உணர்வு தோன்றியது. அந்த இன்ப உணர்வின் பரவசம் மனதிலும் பரவி அவளை மயக்கியது.

ஆனாலும் என்ன என்று சொல்ல முடியாத தயக்கமும் அவளிடம் இருந்தது. ஷிவாவை அவளுக்குப் பிடித்திருந்தது, மிகவும் பிடித்திருந்தது. ஆனால் அவன் அவளருகே நெருங்கும் போது அவளையும் அறியாமல் மனதினுள் ஒரு வித பயமும் தோன்றியது. அதை பற்றி யாரிடம் பேசுவது என்று அவளுக்குத் தெரியவில்லை.

டக் டக் டக்.

என்ன சத்தம் என்று பார்த்த அருந்ததி மயக்கம் போட்டு விழாத குறையாக திடுக்கிட்டுப் போனாள். ஷிவா ஜன்னல் அருகே நின்று ஓசை எழுப்பி அவளை அழைத்துக் கொண்டிருந்தான். கண்களை

இறுக மூடித் தூங்குவது போல் பாவனை செய்தாள். மேலும் சில நிமிடங்கள் முயற்சி செய்து விட்டு அங்கிருந்து சென்றான் ஷிவா.

அதன் பின்பே கண்களைத் திறந்தவள், அதன் பின் தூங்காமல் விழித்தே இருந்தாள்!

காலையில் உணவு தயாரிக்க பிரேமாவிற்கு உதவினாள் அருந்ததி.

"அருந்ததி, ஷிவா சாப்பிட வந்திருக்கார், போ போய் அவருக்கு பரிமாறிட்டு வா."

அருந்ததி அசையாமல் விழித்தபடி நின்றிருந்தாள்.

"போம்மா போ, போய் பரிமாறு! இன்னைக்கு அவங்க ஊருக்கு கிளம்பிடுவாங்க, அதுக்கு மேல கல்யாணத்துல தான் பார்க்க முடியும்."

"சரி சித்தி."

இட்லி மற்றும் சட்னியை எடுத்துக் கொண்டு மெல்லச் சென்றவள், அங்கே ஷிவா மட்டும் இருப்பதைப் பார்த்து தயக்கத்துடன் சென்றாள்.

அருந்ததியை பார்த்த ஷிவாவின் முகம் மலர்ந்தது. பச்சை நிற சேலையில் மரகதக் கல்லாக ஜொலித்தவளை இமை மூடாமல் பார்த்து ரசித்தான் அவன்.

மனதில் இருந்த படபடப்பை வெளிக் காட்டாமல் அவனுக்கு இட்லி, சட்னி, சாம்பார் என ஒவ்வொன்றாக எடுத்து அவள் பரிமாற, அவளையே பார்த்தபடி இருந்தான் அவன்.

பச்சை நிறமே பச்சை நிறமே...

மெல்லிய் குரலில் அவன் பாட திகைத்துப் பார்த்து விட்டு சமையலறைப் பக்கம் செல்லத் திரும்பினாள் அவள்.

"ஹேய் ரதி எங்கே போற?"

அவளின் கையை பிடித்து நிறுத்தியவன்,

"நேத்து நீ தூங்காம முழிச்சு தானே இருந்த?"

...

"எனக்கு தெரியும் நீ தூங்கலை. ஆனாலும் எழுந்து வரலை."

"கையை விடுங்க."

"ஏன் விடணும்?"

"சித்தி சீக்கிரம் வர சொன்னாங்க."

"அப்படியா? நான் அத்தை கிட்ட அப்படியான்னு நேரா கேட்கிறேன்."

"ஐயோ."

"இப்போ என்ன?"

"ப்ளீஸ்."

"பொய் தானே சொன்ன."

அவள் ஆம் என்பது போல் தலை அசைத்தாள்.

"பொய் சொன்னால் தண்டனை உண்டு. உனக்கு என்ன பனிஷ்மென்ட் கொடுக்கலாம்?"

அவள் அவன் கையில் சிக்கிக் கொண்டிருந்த கையை விலக்க முயன்றாள். ஆனால் அவனின் இரும்புப் பிடியை அசைக்க முடியவில்லை

"பேசாம உன்னை அப்படியே கடத்திட்டு போயிடவா? கல்யாணத்துக்கு இரண்டு மாசம் இருக்கே நான் உன்னைப் பார்க்காம எப்படி இருக்கிறது?"

"இரண்டு மாசம் தானே?"

"ஹ்ஹூம் அப்படிச் சொல்லக் கூடாது இரண்டு மாஆஆஆசம்ன்னு இழுத்து சொல்லணும்."

"சரி! கையை விடுங்க."

"நீ நேத்து நைட் தூங்காமலே தூங்குற மாதிரி நடிச்சு என்னை ஏமாத்தின, இப்போ அத்தை மேல வீணா பழியைப் போட்டு பொய் சொன்ன! இதெல் லாம் ரொம்பத் தப்பு! கட்டாயம் தண்டனை உண்டு."

...

"என்ன தண்டனை தரலாம்?"

அவன் போலியாக யோசிப்பது போல் பாவனை செய்தபடி தவிப்புடன் நின்றிருந்தவளைப் பார்த்தான்.

"சரி சின்ன பொண்ணு சின்ன தண்டனை தரேன். நேத்து நான் உனக்கு கொடுத்ததையே நீ எனக்கு கொடு போதும்."

அருந்ததி அதிர்ந்து போனாள்!

"அதெல்லாம் தப்பு, கையை விடுங்க."

"தப்பா? ஏன் தப்பு?"

"அதெல்லாம் அப்படி தான் கையை விடுங்க ப்ளீஸ்."

"ஏமாத்துறது, பொய் சொல்றது தப்பில்லையா? நீ செஞ்ச தப்புக்கு தண்டனையா இன்னொரு தப்பு செய்யலாம்.. தப்பே இல்லை."

அவள் பதில் சொல்லாமல் மும்முரமாக அவளின் கையை பிடித்திருந்த அவனின் விரல்களை பிரிக்க முயன்றாள்

"உன்னால முடியாது! நான் சொன்னதைக் கொடுத் துட்டு நீ பாட்டுக்கு போ, நான் தடுக்கவே மாட்டேன்."

"ஹூஹூம்ம்."

"கம்பன் வீட்டு கட்டுத் தறியும் கவி பாடும்ன்னு கேள்வி பட்டிருக்கேன். என் ரதி போடும் கம்மல் எல்லாம் அபிநயம் பிடிக்கும்னு இப்போ தானே தெரியுது. நேத்து போட்டிருந்த ஜிமிக்கியும் அழகு இப்போ போட்டிருக்கும் இந்த பூ கம்மலும் அழகு. உனக்கு எல்லாமே அழகு தான்."

"என்ன இப்படி செய்றீங்க? எல்லோரும் சாப்பிட வருவாங்க கையை விடுங்க."

"இப்படிச் சொல்லி தப்பிச்சுக்கலாம்னு திட்டமா? எந்தப் பிரயோஜனமுமில்லை! யார் வந்தாலும் சரி, நான் சொன்னது கிடைக்காமல் கையை விட மாட்டேன்."

"என்ன..."

அந்த நேரம் அங்கே வந்த ராதிகா,

"ஹேய் ஜோடி புறாஸ் என்ன செய்றீங்க?" என்றாள்.

அருந்ததிக்கு வெட்கம் அதிகமானது. ஷிவாவிடம் இருந்த கையை விலக்கி கொள்ள முயன்றாள். ஷிவா எந்த பாதிப்பும் இல்லாமல் அமைதியாக இருந்தான்.

ராதிகாவிற்கு சிரிப்பு வந்தது.

"டேய் பி.எஸ் பாவம்டா அருந்ததி. ஏன் இப்படி பயமுறுத்துற கையை விடு."

"கையை விட என்ன செய்யணும்னு சொல்லிட் டேன், அவள் தான் கேட்காமல் அடம் பிடிக்குறா."

"அவன் அப்படி தான் பிடிவாதக்காரன் அருந்ததி. அவன் சொன்னதை செஞ்சுடு."

ஷிவாவின் முகத்தில் இருந்த மந்தகாசப் புன்னகை அதிகமானது.

அருந்ததி பாவமாக விழித்தாள். என்ன செய்வது என்று புரியாமல் கெஞ்சுவது போல் ஷிவாவைப் பார்த்தாள். அவன் கண்டுகொள்ளாமல் இருந்தான்.

அருந்ததிக்கு உதவுவது என்று முடிவு செய்த ராதிகா,

"டேய் பி.எஸ் ஒழுங்கா அவள் கையை விடு. இல்லை அம்மா கிட்ட ஏதாவது புதுக் காரணம் சொல்லி கல்யாணத்தை ஆறு மாசம் தள்ளி வைக்கச் சொல்லிடுவேன்."

"ஹேய் என்ன நீ? சும்மா விளையாடிட்டு இருந் தேன்! என்னோட செல்ல அக்கா சொன்னதுக்காக விடுறேன். ஆனால் தண்டனை தண்டனை தான்!"

விடுபட்ட கையை எடுத்து தடவிய அருந்ததி, விட்டால் போதுமென அங்கிருந்து ஓடிச் சென்றாள்.

''சரிம்மா நாங்க கிளம்புறோம். கல்யாணத்தில் பார்ப்போம்! இப்போவே உன் முகத்தில் கல்யாண களை தெரியுது.''

அன்புடன் பேசிய லக்ஷ்மியிடம் பதிலாகப் புன்னகையைத் தந்தவள், அருகிலேயே நின்று அவளைக் குறுகுறுவென பார்த்துக் கொண்டிருந்த ஷிவாவின் பார்வையில் கன்னம் சிவந்தாள்.

லக்ஷ்மி காரில் ஏறி அமர, ஷிவா அருந்ததியின் அருகே வந்தான்.

''ஓகே கிளம்புறேன் ரதி.''

''ம்ம்ம்...''

அவளின் அருகே குனிந்தவன் மெல்லிய குரலில்,

''காலையிலே தப்பிச்சிட்டதா நினைப்பா? வட்டியோட சேர்த்து வசூலிக்கிறேனா இல்லையா பார்! என்னோட வட்டி விகிதம் ரொம்ப அதிகம்!''

...

''டேய் போதும்டா! அப்புறமா கல்யாணத்துக்கு அப்புறம் பொறுமையா பேசலாம், வா வண்டியில ஏறு. ஏற்கனவே ரொம்ப லேட் ஆகிடுச்சு.''

மனமே இல்லாமல் காரில் ஏறிய ஷிவா, அருந்த திக்கும் சற்று தள்ளி நின்றிருந்த பிரேமா குடும்பத் திற்கும் கை அசைத்தான்.

கார் மெல்ல நகர தொடங்கியது! அருந்ததிக்கு இதயத்தையே கிள்ளி எடுத்து விட்டது போல் வலித்தது!

ஒரே நாளில் அவளின் இதயத்தை கொள்ளை கொண்டு சென்றவனை நினைத்தபடி நின்றிருந் தாள்!

"வா அருந்ததி, உள்ளே போகலாம்."

பிரேமாவின் குரல் கேட்டு அமைதியாக வீட்டினுள் சென்றவள், மனதினுள் இருக்கும் கேள்வியை பிரேமாவிடம் எப்படிக் கேட்பது என்று தயங்கினாள்.

"சித்தி."

"என்ன அருந்ததி?"

"வந்து வந்து..."

"என் கிட்ட சொல்ல என்ன தயக்கம் சொல்லு!"

"அவர் வந்து என் பக்கத்தில வந்து..."

முகம் சிவந்து சொல்ல தடுமாறியவளை பார்த்துச் சிரித்தாள் பிரேமா.

"ராதிகா காலையிலே நடந்த கூத்தை சொன்னாள். உன் மேல எவ்வளவு ஆசை பார்த்தீயா அவனுக்கு."

மனதில் இருக்கும் பயத்தை எப்படிச் சொல்வது என்று அருந்ததி யோசிக்க,

"இதை எல்லாம் பெரிசா நினைக்காதே அருந்ததி. கல்யாணம் நிச்சயமான அப்புறம் இப்படி தான் இருப்பாங்க. கல்யாணம் ஆகி ஒரு ஒண்ணு இரண்டு

வருஷம் குட்டி போட்ட பூனை மாதிரி பொண்டாட்டி பின்னாடியே சுத்துவாங்க.''

''ம்ம்ம்...''

''சரி சரி நான் போய் சமையல் வேலை பார்க்கு றேன்.''

பிரேமா சமையலறைக்குள் புகுந்து கொள்ள, அருந்ததி காலையில் ஷிவா பிடித்திருந்த இடத்தை பரார்த்தாள். மெலிதாக சிவந்திருந்தது!

அந்த இடத்தை மெல்ல வருடியவளுக்கு நீறு பூத்த நெருப்பாகக் குளிரவும் செய்தது, அதே நேரம் அனலடிக்கவும் செய்தது.

மனதிலிருக்கும் இந்த பயத்தை யாரிடம் சொல்வது? என்ன என்று சொல்வது?

புரியாமல் குழம்பி நின்றாள்!

நாட்கள் வேகமாக ஓடின!

ஷிவா சென்னைக்கு மாற்றல் கேட்டு வாங்கி வந் திருந்தான்.

''பெங்களூருவில் இருந்தா தான் க்ரோத் இருக் கும்னு கதை விடுவ? இப்போ என்னடா திடீர்னு சென்னை மேல பாசம்?''

''சென்னை மேல இவனுக்கு என்ன பாசம் எல்லாம் அருந்ததி மேல இருக்க பாசம், என்ன ஷிவா?''

''அருந்ததி மேல பாசமா, என்னம்மா சொல்றீங்க?''

''தனியா பெங்களூரூவில் இருந்தா அருந்ததி வீட்டு வேலை எல்லாம் தனி ஆளா செய்யனுமாம்.

அவள் இளைச்சு போயிடுவாளாம்! இங்கே எல்லோரும் சேர்ந்து செய்யலாமாம்.''

''அட பாருடா! ஏங்க நீங்க என்னைக்காவது என்னைப் பத்தி இவ்வளவு யோசிச்சிருக்கீங்களா?''

அமைதியாக சாப்பிட்டு கொண்டிருந்த கௌஷிக்,

''என்னை எதுக்கு இப்போ நீ வம்புல இழுக்குற? புது கல்யாண மாப்பிள்ளையை மட்டும் தான் இப்போ கவனிக்கணும்'' என்றான்.

''அது தானே! அருந்ததி கிட்ட பேசினேன்டா தம்பி! உனக்கு என்ன பிடிக்கும்னு கேள்வி மேல கேள்வி கேட்டு போட்டுத் தாக்கிட்டா! மேடம் ரொம்ப சீரியஸா புது புது சமையல் ஐட்டம் கத்துக்குறாங்களாம்.''

''உன் கிட்ட அவ்வளவு பேசினாளே! நான் பேசினால் இரண்டு வார்த்தை பேசிட்டு சித்தி கிட்ட கொடுக்குறேன்னு ஓடி போயிடுறா.''

''சின்ன பொண்ணுல ஷிவா. அப்படி தான் இருப்பா'' என்றார் லக்ஷ்மி.

''அது என்னவோ போங்கம்மா! ஆனால் ராது அடுத்து அவ கிட்ட பேசும் போது ரொம்ப நேரம் எல்லாம் கிச்சனில இருக்க வேண்டாம்னு சொல்லு! அவளுக்கு ஒத்துக்காது!''

''அவளுக்கு ஒத்துக்காதுன்னு உனக்கு ரொம்ப தெரியுமாக்கும்? உன்னுடைய வழிசல் தாங்கலையேடா!''

ஷிவா வருங்கால மனைவிக்கு என்று தன் அறையை சீர் படுத்தினான். கண்ணில் காணும் அழகு சாதன பொருட்கள், உடைகள் என்று வாங்கி குவித் தான்...

அவை அனைத்தையும் ரகசியமாக தன்னுடைய அறையில் பூட்டி வைத்திருந்தான்...

ஒருநாள் எதையோ தேட ஷிவாவின் அறைக்கு சென்று பீரோவை திறந்த ராதிகா திகைத்துப் போனாள்!

''அம்மா இங்கே பாருங்க ஒரு புடவை கடையே வாங்கி வச்சிருக்கான்! நமக்கு ஒரு சாரீ வாங்கத் தெரி யாதுன்னு சொல்றவன், கல்யாணம்ன்னு சொன்ன வுடன் செய்றதைப் பார்த்தீங்களா?''

லக்ஷ்மியின் முகத்திலும் சிரிப்பு மட்டுமே இருந்தது.

''செய்யட்டும் விடு ராதிகா! அவன் அவனுக்கு பிடிச்சது போல செய்யட்டும்'' என்றார் அவர்.

நாட்கள் மெல்ல நகர்ந்து திருமண நாளும் வந்து சேர்ந்தது.

மண மேடையில் அமர்ந்து ஐயர் சொல்லிய மந்திரங்களை சொல்லிக் கொண்டிருந்த ஷிவாவின் கண்கள் மணமகள் அறை பக்கமே சென்று வந்து கொண்டிருந்தது.

ஒரு வழியாக பெரிய மனது வைத்து,

''பொண்ணை வரச் சொல்லுங்க'' என்ற குரல் ஒலிக்க, பிரேமா அழைத்து வர நிலவென வந்தாள் அருந்ததி.

அவளைப் பார்த்தவனின் முகத்தில் பெருமை பொங்கியது. மனதில் காதல் கசிந்துருகியது.

அவளை கண்களால் படம் பிடித்தபடி அமர்ந்திருந் தவனின் அருகே வந்து அமர்ந்தவள் சிறிய இடை வெளி விட்டு அமர்ந்தாள்.

அந்த சிறிய இடைவெளியை விரும்பாதவனாக அவளருகே நகர்ந்து அமர்ந்தான் ஷிவா.

வெட்கத்தில் முகம் சிவந்தவள், மீண்டும் சிறு இடைவெளி விட்டு சற்றே தள்ளி அமர்ந்தாள்.

ஷிவாவும் அவளை உரசியபடி மீண்டும் அருகில் அமர்ந்தான்.

மேடை மீது நின்று அவர்களின் நாடகத்தை பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு சிரிப்பு வந்தது.

''விட்டால் உன் மருமகள் மடியில் ஏறி உட்காந் திருவான் போல இருக்கே உன் மகன்.''

மனைவியின் காதில் ரகசியமாக சொன்னார் நாதன்.

''பெரியவரா லட்சணமா இதை எல்லாம் கண்டுக் காமல் இருங்க'' என்று அவருக்கு அறிவுரை வழங்கி னாள் லக்ஷ்மி.

''கெட்டி மேளம்! கெட்டி மேளம்!''

நாதஸ்வர ஓசை மங்கள இசையை எழுப்ப, அருந்ததி யின் கழுத்தில் மங்கள நாணைப் பூட்டினான் ஷிவா.

அந்தக் கணத்தில் இருவரின் கண்களும் ஒரு வினாடி சந்தித்துக் கொண்டன!

கணவனாகி விட்டவனின் கண்ணில் மின்னிய காதலில் அன்பில் மெய் சிலிர்த்து, வெட்கித் தலை குனிந்தாள் அருந்ததி.

"டேய் ஷிவா, கழுத்தில் இருந்து கையை எடுடா! அது தான் தாலியை கட்டியாச்சே!"

ராதிகாவின் கேலிக் குரலில் கையை அவசரமாக எடுத்து விட்டு நிமிர்ந்து அமர்ந்தான் ஷிவா!

4



சிறு குழந்தையை பத்திரமாக அழைத்து செல்வது போல் கெட்டியாக அவளின் கரத்தை பிடித்து அக்னியை வலம் வந்தவனின் பரிவில் அருந்ததிக்கு மனம் குளிர்ந்து போனது.

"மெட்டி போட அருந்ததியோட வலது பாதத்தை தூக்கி இப்படி அம்மியில வைப்பா."

ஷிவா எந்தத் தயக்கமுமின்றி மனைவியின் காலைப் பிடித்தான்! ஆனால் மிகவும் தயக்கத்துடன் பாதத்தை எடுத்து வைத்தாள் அருந்ததி!

மெல்லப் பூவைப் போல் அவளின் பாதத்தைப் பிடித்து மெட்டியை அணிவிக்க முயன்றான் ஷிவா!

அருந்ததியின் விரல் அளவிலேயே இருந்த அந்த மெட்டி உள்ளே செல்லாமல் அடம் பிடித்தது.

"கொஞ்சம் அழுத்தி போடு ஷிவா."

"இல்லை இல்லை" என்றவன் அந்தப் புத்தம் புது மெட்டியை கைகளால் வளைத்து அதன் வளைவை பெரிதாக்கினான்.

"டேய் அது உடைஞ்சு கையோடு வரப் போகுது."

"பரவாயில்லை புதுசா வாங்கிக்கலாம்" என்றவன் இப்போது எளிதாக அருந்ததியின் கால் விரலில் சென்ற மெட்டியை அணிவித்து அவளுக்கு சிறிதும் நோகாத வண்ணம் சரி செய்து விட்டான்.

அடுத்த காலிலும் அவன் அதையே செய்ய, ராதிகா அருகில் நின்ற கௌஷிக்கைப் பார்த்து கண் சிமிட்டினாள்!

"என் தம்பி கிட்ட இருந்து நீங்க நிறைய கத்துக் கணும் போலருக்கே!"

மெல்லிய குரலில் சொன்னவளை பார்த்து மெலிதாகச் சிரித்த கௌஷிக்,

"இன்னும் கொஞ்சம் நாள் போகட்டும் அப்புறம் பார்ப்போம்" என்றான்.

அருந்ததி பார்க்கும் சடங்கின் போது, ஷிவா, அருகே இருந்த மனைவியை இமைக்காமல் பார்த்து அவளை கன்னம் சிவக்க வைத்தான்.

"மச்சான் உன்னை பார்க்கச் சொன்னது வானத்தில இருக்க அருந்ததியை!"

"ஹி ஹி ஹி."

''மூணு மாசமா நீ செய்ற அட்டகாசம் தாங்க முடியலை.''

''என் தம்பியை எதுவும் சொல்லாமல் சும்மா இருங்க!''

''ஆமாம் ஆமாம் நீ மட்டும் தான் அவனை கலாய்க் கலாம்.''

ஷிவா அவர்களின் வாக்குவாதத்தை கவனிக் காமல் தன் கையில் இருந்த அருந்ததியின் கரத்தில் ஐந்து விரல்கள் மட்டும் தான் இருக்கின்றதா என்று அறிந்து கொள்ளும் மிக பெரிய முக்கியமான ஆராய்ச் சியில் ஈடுபட்டிருந்தான்.

அருந்ததி திரிசங்கு சொர்க்கம் போல் இனம் புரியாத புதிய உலகத்தில் இருந்தாள்! இயல்பாக ஏற் பட்ட வெட்கம், மனதில் இருந்த பயம், கணவனின் ரகசிய தீண்டலில் ஏற்பட்ட இன்ப கிளுகிளுகிளுப்பு என்று தடுமாறிக் கொண்டிருந்தாள்.

''இதோ பாருங்க இந்த பானைக்குள்ள ஒரு மோதிரம் போடுறேன் யார் முதல்ல எடுக்குறீங்க பார்ப்போம்.''

ஷிவா முதலில் பானைக்குள்ளே கையை நுழைத் தான். அருந்ததி எந்த அவசரமும் இல்லாமல் பொறு மையாக கையை விட்டாள்.

முதலில் கையை விட்டவனோ மோதிரத்தை எடுக்க எந்த அவசரத்தையும் காட்டவில்லை! அதற்கு பதில் அவனை தொடர்ந்து கரத்தை உள்ளே விட்ட மனைவியின் கரத்தை பற்றிக் கொண்டான்.

அருந்ததி திகைத்து போய் அவனைப் பார்த்தாள்!

அவளின் பார்வையை எதிர்பார்த்திருந்தவனாக உல்லாசமாக கண் சிமிட்டினான் அவன்.

அருந்ததியின் முகம் வெட்கத்தில் சிவந்தது.

கையை கணவனிடம் இருந்து எடுக்க வெளிப் படையாக முயன்றால் சுற்றி இருப்பவர்கள் அனை வருக்கும் தெரியும், அவர்களின் கேலிச் சிரிப்பும் பேச்சும் இன்னும் அதிகமாகும். அதற்காக கையை விடுவிக்க முயற்சியும் செய்யாமல் இருக்க முடியாது!

என்ன செய்வது என்று புரியாமல் பாவமாக ஷிவாவை பார்த்தாள்.

ஷிவாவும் அவளையே தான் பார்த்துக் கொண் டிருந்தான்.

திருமண பேச்சு முடிவாகி, அவனுடைய மறுபாதி இவள் தான் என்று தெரிந்து கொண்ட நொடி முதலே அவளைப் பற்றியே பெரும்பாலும் கனவு கண்டு கொண்டிருந்தவனுக்கு இந்தத் திருமணச் சடங்குகள் மிகவும் பிடித்திருந்தன.

அருந்ததியின் இயற்கையான அழகை, அந்த பட்டுச் சேலையும், நகைகளும் அதிகபடுத்திக் காட்டின என்றால், அவளின் முகத்தில் இருந்த வெட்கமும், கண்ணில் மின்னிய கெஞ்சும் பாவனையும் சிவாவை மொத்தமாக ப்ளாட் ஆக்கின!

இருக்கும் இடம், சுற்றி இருந்த உறவினர் அனை வரையும் மறந்து அவளையே இமைக்காமல் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்!

இருவரில் ஒருவர் மோதிரத்தை வெளியே எடுப் பார்கள் என்று காத்திருந்த பிரேமா, அப்படி ஒன்று நடப்பதற்கான அறிகுறி தென்படாததால்,

''க்கும்'' என்று தொண்டையைக் கனைத்து மணமக்கள் இருவரையும் நடப்புக்குக் கொண்டு வர முயன்றாள்!

அவர்கள் தான் சந்திர மண்டலத்தில் உலாவிக் கொண்டிருந்தார்களே அவ்வளவு சீக்கிரம் வந்து விடுவார்களா என்ன? பூமிக்கும் சந்திரனுக்கும் இடையில் எத்தனை தூரம் இருக்கிறது!

''ஷிவா, அருந்ததி மோதிரத்தை தயாரிக்குறீங் களோ? எப்போ அதை செஞ்சு முடிச்சு வெளியே எடுப்பீங்க?'' என்றாள் ராதிகா.

ஷிவா அவனின் ரதியின் கையை மெல்ல வருடி விட்டு விடுவித்தான்.

நன்றியோடு அவனைப் பார்த்தவளுக்கு மீண்டும் கண் சிமிட்டல் மட்டுமே பதிலாக வந்தது

கையை அவசரமாக வெளியே எடுக்க முயன்ற வளை தடுத்து மோதிரத்தைக் கொடுத்தான் ஷிவா.

''அப்பாடியோ! ஒரு வழியா கையை வெளியே எடுத்துட்டாங்க!''

''ஹை! எங்க அக்கா தான் ஜெயிச்சாங்க!''

''மச்சான் இப்படி கவுத்துட்டியே!''

சுற்றி கேட்ட பேச்சுக்கள் எதுவுமே அருந்ததியை இந்த முறை சலனப்படுத்தவில்லை. அவள்

கணவன் அவளுக்காக விட்டுக் கொடுத்தான் என்பது மட்டுமே அவளுக்கு அழுத்தமாக மனதில் பதிந்தது!

அடுத்த இரண்டு முறையும் கூட ஷிவா அருந்ததியே மோதிரத்தை எடுக்க விட்டு விட அருந்ததிக்கு உச்சி குளிர்ந்து போனது!

அன்பு பொங்க நேராக கணவனைப் பார்த்தாள்!

''அம்மா, இங்கே மதுரை ஆட்சி தான் நடக்க போகுது. நீங்க தயாரா இருங்க!''

லக்ஷ்மி பதில் சொல்லும் முன் முந்திக் கொண்ட கௌஷிக்,

''அதெல்லாம் நம்ம குடும்ப சொத்து ராது! அத்தை மாமா, எங்க அம்மா அப்பா, இப்போ நீ நான்.''

வேண்டுமென்றே அவன் பேச்சை முடிக்காமல் இழுக்க ராதிகா அவனை பார்த்து பொய்யாக முறைத்தாள்.

பிரேமாவும், லக்ஷ்மியும் மனம் விட்டு சிரித்தனர்!

தொடர்ந்து மற்ற சடங்குகள், உறவினர்களின் அறிமுகம், பரிசுகள், மதிய உணவு என நேரம் சென்றது! நேரத்திற்கு திருமண மண்டபத்தை காலி செய்து விட்டு ஷிவாவின் வீட்டிற்கு கிளம்பினார்கள்.

பெருத்த உபசரிப்பும், வரவேற்பும் புடை சூழ, வலது காலை எடுத்து வைத்து கணவனின் வீட்டினுள் நுழைந்தாள் அருந்ததி!

திருமணம் என்பது பெண் எனும் உயிருள்ள கொடியை மொத்தமாக வேரை பிடுங்கி வேறு ஒரு

இடத்தில் பாத்தி செய்வது போன்ற நிகழ்ச்சி. அன்பு, பாசம், புரிதல், காதல், விட்டுக் கொடுத்தல் என்ற நற் பண்புகளினால் அது செழித்து வளரவும் செய்ய லாம், பிடிவாதம், வெறுப்பு, பொறாமை, பேராசை என அந்தக் கொடி பட்டும் போகலாம்!

ஆனால், ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்புடன், நல்வழியில் இல்லறத்தை நடத்த, பெற்றோர், உறவினர், நண்பர் என அனைவரின் வாழ்த்துக்களு டன் நடைபெறும் திருமணம் மிகவும் அவசியமே!

அருந்ததியின் பின்னே சுற்றிக் கொண்டிருந்த ஷிவாவை மற்ற வேலைகளுக்கு உதவச் சொல்லி அனுப்பி விட்டு, அருந்ததியை அறைக்குள் அழைத்துச் சென்றாள் லக்ஷ்மி.

"ஊரில இருக்க உன் வீட்டுக்குப் பக்கத்தில பார்த் தால் வீடு சின்னதா தெரியும்."

"என்ன லக்ஷ்மி பேசுற? மெட்ராஸில இவ்வளவு பெரிய பங்களாவில் அருந்ததி வாழப் போறான்னு நாங்க சந்தோஷப் பட்டுட்டு இருக்கோம்."

லக்ஷ்மியும், பிரேமாவும் பேசுவதை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தாள் அருந்ததி.

அருந்ததிக்காக பிரேமாவும், கண்ணனும் தந்திருந்த சீர்வரிசைகளை லாரியில் இருந்து இறக்கி அடுக்கும் பணியில் பெரும்பாலானோர் ஈடுபட்டிருக்க, ஷிவா அதில் கவனத்தை செலுத்த இயலாமல் அவனுடைய அறைக்குச் சென்றான்.

காலையில் மூன்றாவது மோதிரத்தையும் பானை யினுள் இருந்து எடுத்து விட்டு அவனை காதலுடன் பார்த்த அருந்ததியின் முகம் அவனின் கண் முன் தோன்றியது.

முகம் என்று சொல்வதை விட அந்தப் பார்வை!

அந்த அழகிய கண்கள்!

அதில் மின்னிய அந்தக் காதல்!

கன்னியரின் கடைக்கண் பார்வை பட்டால்

காளையற்கு மாமலையும் ஓர்

கடுகாம்!

எத்தனை அழகாகச் சொல்லி இருக்கிறார் பாரதி தாசன்!

மனதைக் கவர்ந்த பெண்ணின் பார்வைக்கு தான் எப்பேர்பட்ட சக்தி இருக்கிறது!

ரதி அவனை நேராகப் பார்ப்பதே அரிது, அப்படியே பார்த்தாலும் கெஞ்சும் பாவனை தான் பெரிதும் இருக்கும்!

முதல் முதலாக அந்த வட்டத்தினுள் இருந்து வெளியே வந்து அவள் பார்த்த அந்த காந்தப் பார்வை அவனைத் திக்குமுக்காடச் செய்திருந்தது.

அவளுக்காக மலையை என்ன உலகையே கூட புரட்டிப் போட அவன் தயார் தான்!

மனைவியுடன் பேச, நேரத்தைச் செலவிட மனம் ஏங்க அலுப்புடன் கடிகாரத்தைப் பார்த்தான். மணி நான்காகி இருந்தது!

இந்த டைமுக்கு என்ன பிரச்சனையோ? மற்ற நாளை எல்லாம் விட ஸ்லோ மோஷனில் நகர்கிறதே!

அவளை கண்ணில் கூட காட்டாமல் கண்ணா மூச்சி ஆடிக் கொண்டிருக்கிறார்கள்! ச்சே!

இருபத்தி ஏழு வருடங்கள் பொறுமையாக காதிருந் தவனுக்கு அந்த ஒரு சில மணி நேரங்கள் காத் திருப்பது கஷ்டமாக இருந்தது!

பட்டுசேலை சரசரக்க, கை வளையல்கள் குலுங்க, கொலுசொலியும், மெட்டி ஓசையும் ஒலிக்க, கண் ணில் மின்னும் காதலுடன் ரதியின் பிம்பம் அவனின் அருகே நடந்து வந்து அவனை மயக்கியது!

சரியான மயக்கும் மாய மோகினி என மனதினுள் மனைவியை செல்லமாக திட்டிக் கொண்டு தன் கற்பனையிலேயே லயித்து அமர்ந்திருந்தான்.

அதே நேரத்தில் அருந்ததியும் அறையில் இருந்த கடிகாரத்தை தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இன்னும் ஒரு சில மணி நேரங்கள் தான்!

அவளின் மனதினுள் இருந்த பயம் சட்டென்று விஸ்வரூபம் எடுத்தது!

மற்றவர்களின் பேச்சில் கலந்து கொள்ளாமல் மனதில் இருக்கும் கலக்கத்தில் மூழ்கி போனாள்!

"ஹாய் அருந்ததி என்ன அன் ஈசியா இருக்கா? ஏன் அமைதியா இருக்க?"

ராதிகாவின் குரலில் கலைந்து,

"அதெல்லாம் இல்லை" என்ற அருந்ததி, எதையோ யோசித்தவளாக,

"அண்ணி" என்று தயக்கத்துடன் சேர்த்துக் கொண்டாள்..

அருந்ததியின் கரத்தை அன்புடன் பற்றிக் கொண்ட ராதிகா,

"நீ எதை நினைச்சும் கவலை பட வேண்டாம்! எங்க அம்மா அப்பா, உனக்கும் அம்மா அப்பா போல தான். கௌஷிக் உனக்கு அண்ணன் போல! நான் உனக்கு ஒரு நல்ல பிரெண்ட். என்னை அண்ணின்னு எல்லாம் கூப்பிட வேண்டாம் எல்லோரையும் போல ராதுன்னு கூப்பிடு. இந்த பார்மாலிட்டி எல்லாம் வேண்டாம்."

"அது நல்லா இருக்காதே."

"நீ என்ன என்னை வாடி போடின்னா கூப்பிடப் போற? பேசும் போது மரியாதை கொடுத்துப் பேசுறீயே அதுவே போதும். சரி அதை விடு, மாடியில ஒரு சாமியார் இருக்கானே, அவன் ஒரு மார்க்கமா இருக்கான்! ரூமுக்குள்ளேயே உட்கார்ந்து தவம் செய்றான்."

...

"ஏன்னு கேட்க மாட்டீயா?"

...

"அவனோட தேவதையை இங்கே பிடிச்சு வச்சிருக்காங்களாம். காப்பாத்த தான் சார் தவம் செய்றார்!"

...

"அதுக்கு பேர் ஜோக் அருந்ததி!"

அருந்ததி பாவமாக விழித்தாள்!

"சரி சரி முதல் நாளே இதுக்கு மேல ஜோக் சொல்லி உன்னை பயமுறுத்த விரும்பலை, பிழைச்சு போ. ஊரில உனக்கு என்ன பிடிக்கும் அதைச் சொல்லு!"

அருந்ததியை அமைதியாக்க, சரியாக ஊகித்து அவளுக்கு பிடித்த விஷயத்தைப் பற்றி பேசத் துவங்கினாள் ராதிகா.

நேரம் மெல்ல நகர்ந்தது! எத்தனை மெதுவாகச் சென்றாலும் இரவு வரத் தான் செய்தது!

பயம் அருந்ததியின் வயிற்றை பிசைந்தது!

தன் மனதில் இருந்த குழப்பத்தை போக்க ஒரே ஒரு வழி தான் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது! காலையில் தனக்காக விட்டுக் கொடுத்த கணவனிடம் மனதில் இருக்கும் பயத்தை, தயக்கத்தை நேராகச் சொல்லி விடுவது என்று முடிவு செய்தாள்!

அருந்ததியை அலங்கரிக்கும் வேலையை எடுத்துக் கொண்டிருந்த ராதிகா, அவளைக் கேலி செய்தபடி ஒருவழியாக அலங்கரித்து முடித்தாள்.

கதவின் அருகே கேட்ட சலசலப்பில் ஆர்வத்துடன் திரும்பிப் பார்த்த ஷிவா, அழகு தேவதையாக நின்றிருந்த மனைவியைப் பார்த்து ஒரு வினாடி அசையாமல் நின்றான்.

மெல்லிய ஊதா வண்ண சேலையில் அவளும் அழகிய பூவாகவே தான் தெரிந்தாள்!

அவளிடம் இருந்த தயக்கத்தை புரிந்து கொண்டவ னாக சின்ன சிரிப்புடன் அவளருகே சென்றான்.

"நீ ரொம்ப அழகு ரதி."

அருந்ததி என்ன சொல்வது என்று புரியாமல் நின்றிருந்தாள்.

அவளின் கையை பிடித்து அழைத்துச் சென்றவன், அவளின் கை வளையல்கள் எழுப்பிய ஓசையை ரசித்தபடி

"இப்படி நிறைய வளையல் போட உனக்கு பிடிக் குமா? எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு? இட்ஸ் வெரி ரொமான்டிக்."

....

அதே போல தான் இந்த மெலிசா சத்தம் போடுற கொலுசும், மெட்டியும். அந்த கொலுசு நானே உனக் காக செலெக்ட் செய்தேன், பிடிச்சிருக்கா?"

அவள் 'ஆம்' என்பது போல் தலை அசைத்தாள்.

"இந்த சாரி உனக்கு அழகா இருக்கு."

...

"சாரிக்கு தனி அழகு உண்டு! காலையிலே அந்த ஆரேஞ் சாரியிலும் நீ அழகா இருந்த."

...

"உனக்கு எல்லாமே அழகு தான். அன்னைக்கு ஊரில சிம்பிளா உன்னைப் பார்த்தபோதே நான் மயங்கி போயிட்டேன் தெரியுமா?"

....

"நான் பொண்ணுங்ககிட்ட ரொம்ப பழகினது இல்லை ரதி. அம்மா அக்கா மட்டும் தான் நான் அதிகமா பேசினது. மத்தபடி ஸ்கூல், காலேஜ், ஆபீஸ்ல எல்லாம் தேவைக்குப் பேசுறதோட சரி. அன்னைக்கு நிச்சயதார்த்தம் முடிஞ்சு நீ எனக்கானவள்ன்னு தெரிஞ்ச பிறகு சும்மா இருக்க முடியலை. உன்னோட சப்பி சீக்ஸ் டிம்பிள் சின் என்னை ரொம்பப் பாடா படுத்திடுச்சு போ! அந்த சாம்பிள் முத்தம் வேற ரொம்ப டீஸ் செய்திருச்சு. நைட் ஆசையோட வந்தா துங்குற மாதிரி நடிச்சு ஏமாத்திட்ட திருடி! ஆனால் அப்போ கூட அழகா இருந்த!"

...

"இந்த அழகு எல்லாம் விடு, உன் கிட்ட எனக்கு ரொம்ப பிடிச்சது என்ன தெரியுமா? உன்னோட இன்னொசன்ஸ் தான். அப்பப்போ பாவமா ஒரு பார்வை பார்ப்ப பாரு, அதிலேயே நான் அப்படியே உன்கிட்ட சரணாகதி அடைஞ்சுட்டேன்."

அதுவரை தலையை குனிந்து நிலத்தில் பார்வையை வைத்திருந்த அருந்ததி, நிமிர்ந்து ஷிவாவைப் பார்த்தாள்.

அவளின் பார்வையை சந்தித்தவனுக்கு உடலில் 440 வோல்ட்ஸ் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது.

அதுவரை இருந்த பொறுமை பிறக்க, அவளின் அருகே சென்று அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அருந்ததியின் உடல் மெல்ல நடுங்கியது.

ஷிவா இருந்த மனநிலையில் அதை கவனிக்க வில்லை!

அருந்ததி அவனின் இரும்புப் பிடியில் இருந்து அசையவும் முடியவில்லை!

தூக்கத்தில் புரண்டு படுத்த ஷிவா, அருகே இருந்த மனைவியின் மீது கரத்தை அழுந்தப் போட்டு, அவளைத் தன்னருகே இழுத்துக் கொண்டு, அணைத்த படி தூக்கத்தைத் தொடர்ந்தான்.

அவனை விட்டுச் சற்றுத் தள்ளிப் படுத்துத் தூங் காமல் விழித்திருந்த அருந்ததி பதறிப் போனாள். மெல்ல அவனின் கையை விலக்கி விட்டு மீண்டும் சற்றுத் தள்ளிப் படுத்தாள்.

5

டொக்.. டொக்.. டொக்.

கதவு தட்டும் ஓசை கேட்டு கண் விழித்த அருந்ததி, ஷிவா பக்கம் பார்த்தாள். அவன் எந்த அசைவும் இல்லாமல் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

அவசரமாக எழுந்து சேலையைச் சரி செய்து விட்டு கதவைத் திறந்தாள். அங்கே லக்ஷ்மி சிறிய தட்டில் இரண்டு டம்பளர்களுடன் நின்றிருந்தாள்.

"குட் மார்னிங் மருமகளே!"

"குட் மார்னிங் அத்தை! மன்னிச்சுக்கோங்க அத்தை, தூங்கிட்டேன்!"

"அதெல்லாம் அப்புறமா பேசலாம். இது அவனுக்கு ராகி கஞ்சி, அது உனக்கு காபி! உனக்கு என்ன பிடிக்கும்னு தெரியலை அதனால காபி போட்டேன்."

"காபி டீ இரண்டுமே எனக்கு பிடிக்கும் அத்தை. உங்களை வேலை செய்ய வச்சுட்டேன், சாரி!"

"பரவாயில்லை அருந்ததி, நீயும் எனக்கு ராதிகா போல தான்!"

அவர்களின் செல்லம் கொஞ்சலை சற்றுத் தள்ளி நின்று ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த ராதிகா,

"ஹாங்! அநியாயமா இருக்கே! ஒரே நாள்ல அவளும் நானும் ஒண்ணாகிட்டோமே?" என்றபடி அவர்கள் இருவரும் நின்றிருந்த கதவருகே வந்தாள்.

வந்தவள் சும்மா இருக்காமல் உள்ளே எட்டி பார்ப்பது போல் பாவனை செய்து,

"என்ன புது பொண்ணே, எப்படி இருக்கீங்க? எங்கே அந்த சாமியார்? இன்னும் தூங்குறானா?" என்றாள் கேலி மின்ன.

அருந்ததி தயக்கத்துடன் நெளிவதை கண்டு கொண்ட லக்ஷ்மி,

"ஹேய் ராது! உன் கேலி கிண்டல் எல்லாம் அப்புறம் வச்சுக்கோ, பாவம் அவ சின்ன பொண்ணு

பயந்திட போறா! உனக்காக ஸ்பெஷலா இடியாப்பம் செஞ்சுருக்கேன், வா, வா வந்து சூடா சாப்பிடு'' என்று மகளிடம் சொல்லிவிட்டு, அருந்ததியிடம்,

''குளிச்சிட்டு வந்து நீயும் நேரத்துக்கு சாப்பிடு. அவனைத் தூக்கத்தில இருந்து எழுப்பாதே, அவனா மெதுவா எழுந்திருக்கட்டும்'' என்றாள்.

''சரி அத்தை!''

கையில் அந்த சிறிய தட்டுடன் மீண்டும் அறைக்குள் வந்த அருந்ததி சத்தம் வராமல் கதவைச் சாத்தினாள்.

தானாகவே அவளின் பார்வை கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த ஷிவாவிடம் சென்றது!

அவள் இருக்கும் இடத்தில் வேறு ஒருத்தி இருந்திருந்தால் மனம் குளிர்ந்து சந்தோஷத்தில் மிதந்து கொண்டிருந்திருப்பாள்!

பெற்ற தாயைப் போல் அன்புடன் இருக்கும் மாமியார்! தோழியாக பழகும் நாத்தனார்!

அதை எல்லாம் விட இந்த காலத்தில் இப்படி நல்ல பண்பும், அதிக அளவில் அன்பும் வைத்திருக்கும் ஷிவாவைப் போன்ற ஒரு கணவன் கிடைக்கவே அவள் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!

மனதுக்கு பிடித்தவனுடன் திருமணமாகி முதல் இரவு முடிந்த ஒரு மணப்பெண் மகிழ்ச்சிக் கடலில் அல்லவா மூழ்கி இருக்க வேண்டும்! ஏன் அவளுக்கு மட்டும் மனதில் பயமும், குற்ற உணர்வும் மட்டுமே இருக்கின்றது?

எல்லாமே சரியாக அமைத்திருக்க அவள் மட்டும் ஏன் இப்படி இருக்கிறாள்?

தூக்கத்தினோடு புரண்டு படுத்த ஷிவா அருகே இருந்த தலையணையை கட்டிக் கொண்டு தூக்கத்தைத் தொடர்ந்தான்.

பயத்தையும் விட அதிகமாக குற்ற உணர்வு மேலோங்க கையில் இருந்த தட்டை மேஜை மீது வைத்து விட்டு, குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

''பி.எஸ், நீ எழுந்தாச்சா? எங்கே உன் ஹீரோயின்? சாப்பிட வருவான்னு இவ்வளவு நேரமா டைனிங் டேபிளிலேயே காத்துட்டு இருந்தேன் ஆளையே காணும்.''

''குளிக்க போனாள், குளிக்கிறாள். குளித்துக் கொண்டே இருக்கிறாள்! மெட்ராஸ்ல தான் தண்ணி பஞ்சம்னு நினைச்சா அவ ஊரிலேயும் தண்ணி பஞ்சம் போல இருக்கு.''

''போடா அரட்டை! அருந்ததியை சீக்கிரம் வர சொல்லு! அவளுக்காக அவ சித்தியும் காத்திட்டு இருக்காங்க.''

''எனக்கும் கூட தான் பசிக்குது.....''

ஷிவாவின் புலம்பலை நின்று கேட்காமல் ராதிகா சென்று விட, அலுப்புடன் பேச்சை பாதியில் நிறுத்தி விட்டு திரும்பியவன், பேச்சு என்ன, மூச்சு விடவும் மறந்து போனான்!

பனியில் நனைந்த மலராக, அழகிய முகத்தில் ஆங்காங்கே சிறு சிறு நீர் துளிகளுடன் நின்றிருந்த அருந்ததியை பார்த்து அசந்து போனவன் உல்லாச மாக விசில் அடித்தான்!

''அநியாயத்துக்கு அழகா இருக்கீயே உன்னை என்ன செய்யலாம்???''

காதலும் சரசமுமாக அவன் சொல்ல, அருந்ததி யின் முகம் வெட்கத்தில் சிவப்பதற்கு பதிலாக பயத்தில் வெளிறியது!

இந்த முறை அவள் முக மாற்றத்தை கண்டு கொண்ட ஷிவா,

''ஹேய் ரதி, நான் உன் ஹீரோ, வில்லன் இல்லை. நான் சொன்னதைக் கேட்டு நீ வெட்கப்படணும், என்னை மயக்குற மாதிரி ரொமாண்டிக்கா லுக் விட ணும், நீ என்ன வில்லன பாக்குற மாதிரி பார்த்து பயப் படுற.''

சிரிப்புடனே பேசியபடி அருகில் வந்தவனை விட்டு இரண்டடி விலகி நின்றாள் அருந்ததி!

''என்னடா என்ன ஆச்சு?''

அவனின் பரிவான கேள்வியில் மனம் சுட, தட்டுத் தடுமாறி, திணறலாக,

''பயமாருக்கு, ப்ளீஸ்'' என்றாள் அருந்ததி.

''பயமா, என்ன பயம்? அதுவும் என்.....''

ஷிவா பேசி முடிக்கும் முன், ராதிகாவின் படபடக் கும் குரல் கேட்டது.

"அருந்ததி குளிச்சு முடிச்சாச்சா, வா வா! நீ வந்தா தான் சாப்பிடுவேன்னு உன் சித்தி சத்யாக்ரகம் இருக் காங்க பாவம் எவ்வளவு நேரம் பசியோட இருப் பாங்க. டேய் உன்கிட்ட அருந்ததி வந்த உடனே அனுப்பி வைக்க சொல்லிட்டு தானே என் ரூமுக்கு போனேன்?"

கதவை மூடாமல் விட்டதற்கு மனதினுள் தன் னையே திட்டிக் கொண்டவன்,

"அவ இப்போ தான் வந்தாக்கா" என்றான்.

"சரி சரி, நீயும் சீக்கிரம் குளிச்சிட்டு வா, நீ வா அருந்ததி" என அருந்ததியின் கையை பிடித்து கிட் டத்தட்ட இழுத்துச் சென்றாள் ராதிகா.

ஏமாற்றத்துடன் பார்த்துவிட்டு பல்லைக் கடித்துக் கொண்டான் ஷிவா.

"இந்தாங்கம்மா உங்க மருமகளை உங்க மகன் கிட்ட இருந்து காப்பாத்திக் கஷ்டப்பட்டு அழைச் சிட்டு வந்திருக்கேன். இனி நீங்க ஆச்சு அவ ஆச்சு."

லக்ஷ்மியிடம் சத்தமாக பேசிய ராதிகா, அருந்ததி யின் கையை விட்டு விட்டு, மெல்லிய குரலில்,

"அவன் கிட்ட இருந்து உன்னை காப்பாத்திட்டு வந்தேனா, இல்லை உன் கிட்ட இருந்து அவனை காப்பாத்தினேனான்னு தான் சந்தேகமா இருக்கு. உன்னை பார்த்த நாள்ல இருந்து ஒரு மாதிரியா தான் இருக்கான் அவன்!" என்றாள்.

"நானா? நான் என்ன செஞ்சேன்."

செல்லமாக தம்பியின் மனைவியின் கன்னத்தை கிள்ளியவள்,

''நீ ஒண்ணும் செய்யலை, எனக்கு உன்னுடைய இந்த அப்பாவியான முட்டை கண்ணு லுக் ரொம்ப பிடிக்கும், அதை பார்க்க தான் சும்மா சொன்னேன்'' என்றாள்.

''என்ன நீங்களும் அவரை போலவே சொல்.....''

வெகு தாமதமாகவே உணர்ந்து கொண்டு, பேச்சை நிறுத்தி உதட்டை கடித்துக் கொண்டாள் அருந்ததி!

''ஓஹோ நம்ம சாமியாருக்கும் உன்னோட முட்டை கண்ணு லுக் பிடிக்குமா? அதை பார்த்து தானா ஐயா இப்படி சாமி ஆடுறார்?''

''அப்படி எல்லாம் இல்லை அண்ணி.''

''ஹேய் இந்த அண்ணி தண்ணி எல்லாம் வேண் டாம் உதை வாங்குவ!''

''ராதிகா கௌஷிக் சாப்பிடுறார் போய் பரிமாறு! அருந்ததியை ஏன் தொல்லை செய்திட்டு இருக்க?''

''க்கும்! நீங்க மட்டும் செல்லம் கொஞ்சலாம் நான் செல்லம் கொஞ்ச கூடாதா!''

''யாரு வேண்டாம்னு சொன்னா? அவர் தனியா சாப்பிடுராறேன்னு சொன்னேன்.''

''அதெல்லாம் அவரே எடுத்து பரிமாறி சாப்பிடு வார்.''

''கஷ்டம்! நல்ல பொண்ணு போ! அருந்ததி, நீ ஏன் இப்படி ஈரமா முடியை டவல்ல கட்டி வச்சிருக்க? சளி பிடிக்க போகுது, இங்கே வா.''

அருகே வந்த அருந்ததியின் தலையில் இருந்த துவாலையை எடுத்து தலை துவட்டிக் கொடுத்தாள் லக்ஷ்மி.

"அம்மாடியோ என்ன அடர்த்தியான முடி அருந்ததி."

"ராது கண்ணு வைக்காத! அருந்ததிக்கு திருஷ்டி சுத்தி போடணும். ஊரு கண்ணு எல்லாம் என் மருமக மேல தான்."

"கல்யாணமாகி வந்து ஒரு நாள் ஆகலை அதுக் குள்ள ரொம்ப ஓவர் பில்ட்-அப்பா இருக்கே! என்ன லஞ்சம் கொடுத்த அருந்ததி?"

பேசியபடி அருந்ததியின் முகத்தை பார்த்த ராதிகா கலங்கி இருந்த அவளின் விழிகளைப் பார்த்து பதறிப் போனாள்.

"ஹேய் என்ன ஆச்சு? ஏன் கண்ணெல்லாம் கலங்கி இருக்கு? நான் சும்மா விளையாட்டுக்கு தான் பேசிட்டு இருந்தேன். ஹர்ட் செய்ற மாதிரி ஏதாவது சொல்லிட்டேனா, சாரிப்பா."

"இல்லை இல்லை! அம்மாக்கு அப்புறம் என் கிட்ட இப்படி உரிமையா தலை துவட்டி எல்லாம யாரும் விட்டதில்லை! அம்மா ஞாபகம்..... ஹ்ம்ம்..... வந்துருச்சு."

நெகிழ்ந்த மனதுடன், பேச முடியாமல் தொண் டையை சரி செய்தபடி அவள் பேசவும், லக்ஷ்மி, ராதிகா இருவருமே நெகிழ்ந்து போனார்கள்.

அவளை அன்புடன் அணைத்துக் கொண்ட லக்ஷ்மி,

''நான் தான் சொன்னேனே நீ எனக்கு மகள் போலன்னு, அப்போ நான் உனக்கு அம்மா மாதிரி தானே? இனிமேல் இப்படி எல்லாம உளற கூடாது, புரியுதா?''

''சரி அத்தை.''

''நல்ல பொண்ணு நீ! பிரேமாவை வர சொல்றேன், நீயும் சாப்பிடு.''

''இல்லை அத்தை, அவரும் வரட்டும்.''

தலையை குனிந்து கொண்டு அவள் சொன்னதைக் கேட்டு லக்ஷ்மியின் முகம் மலர்ந்தது. இவளை பார்த் தாவது கற்றுக் கொள் என்ற அர்த்தமுள்ள பார்வையை மகள் பக்கம் வீசி விட்டு தோழியைத் தேடிச் சென்றாள்.

''நீ சரியே இல்லை அருந்ததி.''

''என்ன செஞ்சேன்?''

''அம்மா கொடுத்துட்டு போன லுக் பார்த்தல்ல அதுக்கு என்ன அர்த்தம் தெரியுமா? என் மருமகளை பார்த்து கத்துக்கோடின்னு அர்த்தம்.''

''நீங்க என்னை பார்த்து கத்துக்கணுமா? என்ன கத்துக்கணும்?''

''அது தான் ஷிவா கூட சாப்பிடுறேன்னு நீ சீன் போட்டீயே அதை சொல்றாங்க.''

''நான் சீன் எல்லாம் போடலை'' என்று ரோஷத் துடன் மறுத்தவள்,

''நீங்க ஏன் அண்ணாவை தனியா சாப்பிட விட்டீங்க? பாவம் அவர்!''

''ரொம்ப பாவம் தான். அவர் கூட சாப்பிட போனேன்னு வை, என் தட்டில இருக்கறது தான் நல்லா இருக்குன்னு சொல்லி பாதியை அவரே எடுத்து சாப்பிட்டு எல்லார் முன்னாடியும் மானத்தை வாங்கிடுவார். வீட்டில பரவாயில்லை, இப்படி எல்லார் முன்னாடியும் நடந்தா என்ன செய்றது?''

''ஓஹோ! இது தானா நீங்க ஸ்லிம்மா இருக்கும் ரகசியம்?''

''ஆமாம் ஆமாம் தங்கமலை ரகசியம் யார் கிட்டேயும் சொல்லிடாதே.''

முகத்தில் சிரிப்புடன் ராதிகாவிடம் பேசிக் கொண்டிருந்த அருந்ததியை பார்த்தபடி மாடிப் படிகளில் இருந்து இறங்கி வந்த ஷிவாவின் மனதினுள் இருந்த சின்னக் கலக்கம் மறைந்தது.

மஞ்சளும் பச்சையும் கலந்தோடிய அழகிய சேலையில், ஈரக் கூந்தல் பளபளக்க நின்றிருந்தவளை கண்களால் அள்ளிப் பருகியபடி அவர்கள் அருகே வந்தான் அவன்.

''பார்த்துடா, ஒரே பக்கமா பார்த்து கண்ணு வலிக்க போகுது!''

''ஹி ஹி ஹி.''

''இதுக்கு நீ பார்த்தே தொலைக்கலாம்! தயவு செய்து சிரிச்சு பயமுறுத்தாதே!''

ராதிகா பரிமாற, ஷிவா, அருந்ததி, லக்ஷ்மி, நாதன், பிரேமா, கண்ணன் அனைவரும் கதை பேசியபடி உணவு உண்டனர்.

அப்போதென்று இல்லாமல் அதன் பின் வந்த பல மணி நேரங்கள் ராதிகாவுடனே செலவிட்டாள் அருந்ததி.

சிறு வயதில் ஷிவா செய்த லூட்டிகள், அவன் வாங்கிய பரிசுகள் என்று அவள் சொல்லிக் கொண்டே போக நேரம் போனதே தெரியாமல் கேட்டுக் கொண்டே இருந்தாள் அருந்ததி.

"அருந்ததி, நாங்க கிளம்பட்டுமா?"

பிரேமா கிளம்பத் தயாராகி வந்து கேட்ட போது, 'இனி எப்போது சித்தியை பார்ப்பது' என பெண்ணுக்கே உரிய தாய் வீட்டு பாசத்தில் மனம் துணுக்குற்ற போதும், பாதுகாப்பான இடத்தில் வந்து சேர்ந்து இருக்கிறோம் என்ற அவளின் மனதினுள் திருப்தியும் இருக்கவே செய்தது!

"அருந்ததி நீ போய் ஷிவாவை வரச் சொல்லு."

"நானா?"

"அப்புறம் வேற யாரு போவா? சீக்கிரம் போயிட்டு வா!"

தயக்கத்துடன் மாடி அறைக்குச் சென்றவள், அங்கே லேப்டாப்பை வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருத்த கணவனிடம்,

"சித்தி, சித்தப்பா கிளம்புறாங்க, நீங்க கீழே வரீங்களா?" என்றாள்.

அவளை ஆராய்வது போல் ஒரு பார்வை பார்த்த ஷிவா,

"வரேன் ரதி! அதுக்கு முன் ஒரு கேள்வி. என் மேல உனக்கு கோபமா?"

"கோபமா உங்க மேலயா? இல்லையே?"

எப்போதும் போல அவளின் பேச்சுக்கு ஏற்ப அவளின் அழகிய கம்மல்கள் அபிநயம் பிடிக்க, அதில் காந்தமாக ஈர்க்கப்பட்ட மனதை அடக்கிக் கொண்டு,

"இல்லை காலையிலே ஒரு மாதிரி இருந்தீயே."

"அது.....வந்து....."

"நேத்தைக்கு உன்கிட்ட ரொம்ப முரட்டுத் தனமா நடந்துக் கிட்டேனா?"

அருந்ததி என்ன சொல்வது என்று தோன்றாமல் அமைதியாக நின்றாள்.

"சாரிடா! அது உன் மேல இருந்த ஆசையில தான்! நீ ரொம்ப அழகு ரதி....."

.....

அவளின் அமைதி அவனைக் குழட்ப,

"எப்படிச் சொல்றதுன்னு தெரியலை! ஆனால் இனி மேல் அப்படி எல்லாம் நடந்துக்க மாட்டேன். இ வில் பி சாப்ட் ஓகே? சாரிம்மா, ரொம்ப சாரி! ஐ லவ் யூ வெரி மச்!" என்றான்.

6



"ஃஃஃஃ....."

அவளின் இந்தப் பதிலை எப்படி எடுத்துக் கொள்வது என்று ஷிவாவிற்குப் புரியவில்லை!

"உனக்கு என்னை பிடிச்சிருக்குல?"

அருந்ததி விழிகளை நிமிர்த்தி ஷிவாவை நேராகப் பார்த்தாள்.

ஷிவா தடுமாறிப் போனான்.

இருபத்தி ஏழு ஆண்டுகள் சலனமின்றி வாழ்ந்தவனுக்கு இப்போது மனதை அடக்குவது பெரும் பிரயத்தனமாக இருந்தது!

கஷ்டப்பட்டு பார்வையை மனைவியிடம் இருந்து திருப்பியவன்,

"கீழ எல்லோரும் நமக்காகக் காத்துட்டு இருப்பாங்க, போகலாம்" என்றபடி நடந்தான்.

"நாங்க கிளம்புறோம் அருந்ததி! லக்ஷ்மி, அருந்ததி சின்ன பொண்ணு....."

"பிரேமா, எல்லோரும் சொல்ற அதே வசனத்தை நீ என்கிட்ட சொல்லணுமா? அவளைப் பத்தி நீ கவலையே படாதே!"

"ஆமாம் அத்தை, நான் அருந்ததியைப் பார்த்துக்குறேன்! இந்த வீட்டிலேயே அவள் என்னோட தான் ரொம்ப க்ளோஸ்."

ஷிவாவைச் சீண்ட அவனைப் பார்த்து சிரிப்புடன் ராதிகா சொன்ன போதும் ஷிவா ஒரு சின்னப் புன்னகை தவிர வேறு எதுவும் சொல்லாமல் நின்றான்.

மேலும் சில கொஞ்சல்கள் மற்றும் அறிவுரைகளுடன் பிரேமாவின் குடும்பத்தினர் கிளம்பினார்கள்.

அவர்களின் கார் கண் பார்வையில் இருந்து மறைந்த உடன் ராதிகா அருந்ததியின் அருகே வந்து நின்றாள்.

"ம்ம்ம் என்னை ரொம்ப டிஸ்ஸபாயின்ட் செய்திட்டியே."

"என்ன?"

"நீ அழுற அழுகையில் வர கண்ணீரில் இன்னும் ஒரு மாசத்துக்கு நம்ம வீட்டில தண்ணியே தேவை இருக்காதுன்னு நினைச்சேன். நீ என்ன இப்படி காஞ்சு போன ஆறு மாதிரி ஒரு சொட்டு கண்ணீர் கூட விடாமல் இருக்க?"

"ப்ச்! எல்லா கண்ணீரும் ஏழு வருஷத்துக்கு முன்பே காலி ஆகிடுச்சு."

அலுப்புடன் சொன்னவளை அன்புடன் பார்த்த ராதிகா,

"இதுக்கு ஏன் இவ்வளவு பீல் செய்ற? அம்மா கூட உட்கார்ந்து நாலு சீரியல் பாரு அப்புறம் இதை சொல்லவே மாட்ட."

மிகுந்த மன வருத்தத்துடன் சொல்லி விட்டு ராதிகா ஏதேனும் ஆதரவாக சொல்ல போகிறாள் என்று நினைத்திருந்த அருந்ததி, அவள் சொன்னதைக் கேட்டு வாயை பிளக்காத குறையாக விழித்தாள்.

"நான் சும்மா சொல்லலைடா, இங்கே பாரு!"

அந்த 'டா'வில் கரைந்து போன அருந்ததி, ராதிகா தன்னுடைய செல்போனில் காட்டிய பேஸ்புக்கில் இருந்த படத்தை ஆர்வத்துடன் பார்த்தாள்!

பார்த்தவள் தன்னையும் மறந்து வாய் விட்டு சிரித்தாள்!

"ஐயோ என் க்யுட்டி! யூ ஆர் ஸோ ஸ்வீட்! பி.எஸ் ரொம்ப லக்கி!"

அருந்ததி வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

"அப்பப்போ பி.எஸ், பி.எஸ்ன்னு சொல்றீங்களே அப்படின்னா என்ன?"

"அதுவா போலி சாமியார்!"

"ஓஹோ! எனக்கும் இப்படி ஏதாவது பேர் வைப் பீங்களா?"

"அது தான் ஏற்கனவே வச்சாச்சே, க்யூட்டி!"

"ஹா ஹா ஹா."

அருந்ததி மீண்டும் சிரித்தாள்!

"நீ என்னோட பேசி சிரிப்பதை பார்த்து அங்கே பார் ஒரு ஜீவனுக்கு காதில இருந்து ஸ்டீம் எஞ்சின் விட அதிகமா புகை வருது."

ராதிகா கண்ணால் காட்டிய திசையில் ஷிவா நின் றிருந்தான்.

அவன் கண்களில் ராதிகா சொன்னது போல் பொறாமையும் இருந்தது. ஆனால் அதையும் விட கேள்வியும் இருந்தது.

அருந்ததியின் மனம் கணவனுக்காக உருகியது!

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நிற்பதை கவனித்த ராதிகா,

''ஷிவா, க்யூட்டி இன்னும் வீடு முழுசா பார்க்கலையாமே, நீ அழைச்சிட்டு போய் காட்டேன்!'' என்றாள்.

ஷிவாவிற்கு அருந்ததியுடன் பேச தனிமை தேவைப்பட்டது. அதற்கு வழி வகுத்து கொடுத்த அக்காவை நன்றியுடன் பார்த்தவன், அருந்ததியிடம்,

''வா!'' என்றான்.

மாடியில் இருந்த நான்கு அறைகளை காட்டி விட்டு, மனைவியை மொட்டை மாடிக்கு அழைத்து வந்த ஷிவா,

''எனக்கு ரொம்பப் பிடிச்ச இடம் இது! ஸ்கூல் படிக்கும் போது இங்க தான் வந்து படிப்பேன். அந்த வேப்ப மர நிழல்ல உட்கார்ந்து படிக்க ரொம்பப் பிடிக்கும்.''

''பயமா இருக்காதா?''

''என்ன பயம்?''

''வேப்ப மரத்தில பேய் இருக்குமாமே!''

''முதல்ல கொஞ்சம் பயமா இருந்துச்சு அப்புறம் இரண்டு டைரி மில்க் வாங்கி கொடுத்ததில் பேய் எல்லாம் பிரெண்ட் ஆகிடுச்சு.''

''பேய் சாக்லேட் எல்லாம் சாப்பிடாது, பொய் சொல்றீங்க!''

"அப்பாடியோ! இவ்வளோ தெரிஞ்சு வச்சிருக்கியே குட்!" என்றவன் அவளின் முகத்தை ஆராய்வதை போல் பார்த்தான்.

அது வரை இயல்பாக பேசிக் கொண்டிருந்த அருந்ததியை இந்தப் பார்வை தடுமாறச் செய்தது.

இயல்பாக அதை ரசித்தவன்,

"உன் கிட்ட நிறைய பேசணும் ரதி! காலையில பயம்னு ஏதோ சொன்னீயே, என்ன விஷயம்?"

"அது அது....."

"என்னை ஒரு பிரெண்டா நினைச்சுக்கோ! உன் மனசு நோகாமல் உன்னை பார்த்துக்க வேண்டியது என்னோட பொறுப்பு! உன் மனசில இருக்குறதை தயங்காமல் சொல்லு."

"ம்ம்ம்....."

"சொல்லு கண்ணம்மா!"

"கண்ணம்மா!"

அந்த ஒரு வார்த்தை!

அதை ஷிவா உணர்ந்து உச்சரித்த அந்த விதம் அருந்ததியின் பேச்சுக்கு இருந்த தளைகளை நீக்கியது!

"சாரி."

"எதுக்கு?"

"நான் நான்..."

ஷிவா அவளருகே நெருங்கி வந்தான். அருந்ததி தன்னையும் அறியாமல் இரண்டடி பின்னே சென்றாள்.

ஷிவா புரியாமல் பார்த்தான்!

"இப்படி நீங்க பக்கத்தில வரும் போது..... எனக்கு என்னவோ போல..... கொஞ்சம் பயமா இருக்கு....."

"நிறைய வருஷமா தனியா இருந்தீயே அதனால உனக்கு....."

"இல்லை இல்லை! அன்னைக்கு நிச்சயம் முடிஞ்ச அன்னைக்கு நீங்க ரூமில..... வந்து..... வந்து..... அப்போ இருந்து தான் இந்த பயம்! அதை எப்படி சொல்றதுன்னு தெரியலை! யார்கிட்டேயும் சொல்லவும் முடியலை. உங்க கிட்ட மட்டும் தான் சொல்றேன். எனக்கு நீங்க பக்கத்தில வந்து..... வந்து..... நீங்க தொடும் போது என்னவோ போல..... கொஞ்சம் கூசுற போல இருக்கு..... ரொம்ப பயமா இருக்கு."

தட்டுத் தடுமாறி முகத்தை குனிந்து கொண்டு முகம் சிவக்க அவள் சொன்னதை கேட்டு மனதில் எழுந்த அதிர்ச்சி அலைகளையும் மீறி அவனின் அன்பு மனது அவளை ரசிக்க தான் செய்தது!

ஷிவாவிற்கே இந்த உறவின் ஆதிக்கம் வியப்பாக இருந்தது!

உலக அழகியாக இருந்தாலும் கூட அசைக்க முடியாத இரும்பு கோட்டையாக அவன் வைத்திருந்த மனதை எத்தனை எளிதாக ஒரே பார்வையில், ஒரே சிரிப்பில் வென்று விட்டாள் இவள்!

இவள் மனம் வருந்தக் கூடாது! முகம் வாடக் கூடாது என என்னமாக தவிக்கிறது இவனது மனது!

காதல் என்பதும் அன்பின் வெளிப்பாடு தானே!

பெற்றோருக்காக மனதை கட்டிக் காப்பாற்றி வைத்தாலும் கூட இவள் மீது ஏற்பட்டிருக்கும் அன்பு வெறும் பெயருக்காகவோ, இல்லை தாலி கட்டிய கடமையினாலோ ஏற்பட்டதாக அவனுக்குத் தோன்ற வில்லை!

என்ன ஏது என்று விளக்க முடியாத பந்தம்! இதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது!

மின்னலென மனதினுள் ஓடிய எண்ணங்களை அடக்கியவன், இப்போதும் தரையைப் பார்த்தபடி தயக்கத்துடன் நின்றிருந்த மனைவியை கூர்ந்து கவனித்தான்.

''நான் உன் கிட்ட ஒரு விஷயம் கேட்கலாமா?''

''ம்ம்ம்.....''

''நீ வேற யாரையாவது காதலிச்சியா?''

நிமிர்ந்து பார்த்த அருந்ததியின் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாக தெரிந்தது.

அந்தப் பார்வையே (வழக்கம் போல்) அவனுக்கு பதிலை கொடுத்து விட, அந்தக் கேள்வியை அப்ப டியே விட்டு விட்டு,

''நமக்கு ஒருத்தரை ஒருத்தர் பத்தி எதுவும் தெரியாதே அதனால தான் உனக்கு இப்படி இருக்கு. நாம ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுப்போம். இரண்டு

பேரும் கொஞ்ச நாளுக்கு ஊட்டி போயிட்டு வரு வோமா?'' என்றான்.

''தனியாகவா?''

அருந்ததியின் கேள்வியில் பயம் மட்டுமே இருந்தது!

''ஹனிமூன் தனியா போகாமல், ஊரை கூட்டிட்டா போவாங்க?''

.....

அவளின் அமைதியில் முதல் முதலாக ஷிவா விற்கு மெலிதாக ஏமாற்றம் ஏற்பட்டது. கஷ்டப்பட்டு தன்னை அடக்கியவன்,

''சரி இப்போ வேண்டாம், கொஞ்ச நாள் கழிச்சு போவோம்'' என்றான்.

''உங்களுக்கு கோபமா?''

''இல்லை ரொம்ப குளுகுளுன்னு இருக்கு!''

''சாரி.''

''இங்கே பார் நீயும் நானும் அந்நியர்கள் இல்லை! கணவன் மனைவி! இனி இந்த உலகத்தில உயிரோட இருக்க வரைக்கும், எனக்கு துணை நீ, உனக்கு துணை நான்! இந்த உறவில தேங்க்ஸ், சாரி எல்லாம் கிடையாது! இன்னொரு தடவை சாரி சொன்ன கடிச்சுச் சாப்பிட்ருவேன்!''

திடுக்கிட்டுப் பார்த்தவள், அவனின் முகத்தில் இருந்த குறும்பை புரிந்து கொண்டவளாக புன்னகைத் தாள்.

''ஹாய் க்யூட்டி தனியா உட்கார்ந்து என்ன செய்ற? எங்கே உன் ஹீரோ?''

''லேப்டாப்ல ஏதோ செஞ்சுட்டு இருக்கார்.''

''என்னதிது! அவன் கல்யாணத்துக்கு முன்னாடி காட்டின ஷோக்கு ஒரு நாலஞ்சு மாசம் உன்னை விட்டு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் நகர மாட்டான்னு நினைச்சேன்.''

.....

''என்ன ஆச்சு? ஊடலா?''

''ம்ம்ம்ம்ம்.....''

''சூப்பர்! ஊடல் இல்லாத காதல் போர்! இப்போன்னு இல்லை எத்தனை வருஷம் ஆனாலும் அப்பப்போ ஹஸ்பண்ட் கூட செல்லமா சண்டை போடணும். அதுக்காக மூனு நாலு மாசம் மூஞ்சியைத் தூக்கியும் வச்சுக்கக் கூடாது. நாம் இறங்கி வரது தெரியாத மாதிரி லைட்டா இறங்கி வந்து அந்த சைட் காம்ப்ரமைஸ் செய்ய வைக்கணும்! புரியுதா?''

''கொஞ்சம் கொஞ்சம்!''

''இப்போதைக்கு இது போதும்! சார் ரொம்ப முறுக்கிட்டு இருந்தா சொல்லு, நான் இரண்டு தட்டு தட்டுறேன்!''

''ஹி ஹி ஹி!''

செல்லமாக அவளின் கன்னத்தை கிள்ளி,

''இது தான் உனக்கு சரி!'' என்றாள் ராதிகா.

வானில் இருந்த நட்சத்திரங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஷிவா, கதவு திறந்த சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான்.

அருந்ததி தயக்கத்துடன் உள்ளே வருவது தெரிந்தது.

''என்ன ரதி இவ்வளவு தயக்கம்? வா, இது உன் ரூமும் தான்.''

''ம்ம்ம்ம்....''

''உனக்கு பிடிக்காதது எதுவும் நான் செய்யலை சரியா?''

.....

''உனக்கு என்ன மாதிரி படம் பிடிக்கும் சொல்லு, ஏதாவது பார்க்கலாம்.''

''இல்லை, வேண்டாம், நான் தூங்கட்டுமா?''

''இதை எல்லாம் கேட்கணுமா? ஆனால் அதுக் குள்ளே தூக்கமா? கொஞ்சம் நேரம் பேசலாமே?''

''இல்லை, அத்தையே எல்லா வேலையும் செய் றாங்க, நான் சீக்கிரம் எழுந்து அவங்களுக்கு ஹெல்ப் செய்யணும்.''

''ஓ! சரி! குட் நைட்!''

''குட் நைட்!''

மெல்ல முணுமுணுத்து விட்டு கட்டிலின் ஒரு ஓரத்தில் சென்று படுத்து கொண்டாள் அவள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த ஷிவாவால் எத்தனை முயன்றும் மனதில் ஆசை எழுவதை அடக்க முடியவில்லை!

கஷ்டப்பட்டு பார்வையைத் திருப்பிக் கொண்டு பெருமூச்சு விட்டான்!

விருப்பமில்லாத விஷயங்களில் மனைவியாகவே இருந்தாலும் கூட கட்டாயப் படுத்துவது தவறு என்பது அவனுள் இருந்த ஜென்டில்மேன் மனதிற்கு புரிந்தது! ஆனால் மனைவியிடமும் ஜென்டில் மேனாக நடந்துக் கொள்ள வேண்டி இருக்கிறதே என்ற ஆதங்கத்தை அவனால் தடுக்க இயலவில்லை!

மெல்ல ஒரு வாரம் ஓடிச் சென்றது! அருந்ததி அந்த வீட்டில் செல்லப் பெண்ணாக மாறிப் போயிருந்தாள். லக்ஷ்மியும், ராதிகாவும் அவளை தாங்கோ தாங்கென்று தாங்கினார்கள் என்றால் அவளும், அவர்களுடன் வெகு நாட்கள் பழகியவளை போல் எளிதாக நட்புடன் உறவை ஏற்படுத்தி இருந்தாள்.

நாதன் மற்றும் கௌஷிக்குடன் எப்போதேனும் ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டுமே பேசுபவள், ஷிவாவிடம் இப்போதும் தள்ளியே இருந்தாள்.

எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் திருமணம் செய்து கொண்டிருந்த ஷிவாவிற்கு வருத்தமாக இருந்தது!

அதையும் விட மனதில் எழும் ஆசைகளையும் அதை அடக்குவதனால் ஏற்படும் ஏமாற்றங்களையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருப்பது தான் அவனுக்கு கொடுமையாக இருந்தது!

அவன் ஓரடி பக்கம் வந்தால் அருந்ததி பத்தடி தள்ளிச் சென்றாள்!

அவன் அவளுடன் பேச எடுத்த முயற்சிகளும் பலனளிக்கவில்லை.

இரவில் அவளுக்கு அறைக்குள் வந்த உடனேயே தூக்கம் வந்தது! காலையில் வேலை இருந்தது! மதியம் ராதிகாவுடன் பேச ஆயிரம் விஷயங்கள் இருந்தன! மாலையில் லக்ஷ்மியுடன் கோவிலுக்குச் செல்ல வேண்டி இருந்தது!

என்ன செய்வதென்று புரியாமல் குழம்பி இருந் தவன், இப்படியே இருந்தால் பைத்தியம் பிடித்து விடும் என்று தோன்றவும், ஆபீஸ் செல்வது என்ற முடிவுடன் கிளம்ப, படி இறங்கி வந்தான்.

கீழே ஒரே சிரிப்பு சத்தம் கேட்டது!

ராதிகா ஏதோ சொல்ல, அதை கேட்டு அருந்த தியும், லக்ஷ்மியும் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஷிவாவிற்கு மனதினுள் ஜுவாலையாக ஒருவித மான உணர்வு தோன்றியது!

''ஹே ஷிவா? என்னடா புல் மேக்கப்புல வந் திருக்க?''

''ஆபீஸ்ல ஒரு சின்ன வேலை இருக்கு ராது, நான் போயிட்டு வந்திடுறேன்.''

''என்ன பேசுற நீ? உன் கல்யாணத்துக்காக நான் 2 வாரம் லீவ் போட்டு இருக்கேன், நீ ஆபீஸ் போறீயா? உதைப்பேன்! பாவம் என் க்யூட்டி.''

''வீட்டில இருந்து என்ன செய்ய? ஆபீஸ்க்கு போனாலாவது வேலை செய்யலாம்.''

தம்பியை உற்று நோக்கிய ராதிகா,

''சரி முக்கியமான வேலைனா போயிட்டு வா. இன்னைக்கு உன் செல்லத்தோட மீன் குழம்பு தான் சாப்பிட்டுட்டு போ! செம டேஸ்ட்!'' என்றாள்.

''சரி.''

''அருந்ததி, ஷிவாக்கு பரிமாறு!''

மனைவி பரிமாறுவதை அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தான் ஷிவா.

அவன் உணவு உண்ண தொடங்கவும்,

''எப்படிடா அது இவ்வளவு நேரம் கண்ணு சுளுக் காம பார்க்குற? வாட் இஸ் யுவர் சீக்ரட்?'' என்றாள் ராதிகா.

பதில் சொல்ல நிமிர்ந்தவனின் கண்ணில் அருந்ததி ராதிகாவை பார்த்து வெட்கத்துடன் சிரிப்பது தெரிந்தது!

அவ்வளவு தான் அத்தனை நாள் அடக்கி வைத் திருந்த ஏமாற்றமோ! கோபமோ! ஆசையோ! வேறு ஏதோ ஒன்றோ! அல்லது அவை அனைத்தின் மொத்த கலவையோ, அவனின் கட்டுபாட்டை மீறிப் பொங் கியது!

''என்ன சாப்பாடு இது? மனுஷன் சாப்பிடுவானா? அம்மா, எனக்கு என்ன பிடிக்கும்னு உங்களுக்கு தானே தெரியும்! எதுக்கு இவளை சமைக்கச் சொன் னீங்க? ச்சே ஒரு வாய் சாப்பிட முடியலை!''

கோபத்துடன் கத்தியவன் மேஜை மீதிருந்த தட்டை எடுத்து விசிறி அடித்தான்!

தட்டு எங்கோ சுவரில் மோதி கீழே விழுந்தது!

டங்டங்டங்ட்ங்.....

அடுத்து வந்த சில நொடிகள், கீழே விழுந்த தட்டின் ஓசை தவிர வேறு எதுவும் கேட்கவில்லை!

எழுந்து கையை கழுவிய ஷிவா, சுவரில் தொங்கிக் கொண்டிருந்த சாவியை எடுத்துக் கொண்டு வேக மாக நடந்தான்.

வாசலை அடைந்தவன், ஒரு வினாடி தயங்கி நின்று,

''நான் ஆபீஸ் போயிட்டு வரேன்ம்மா!'' என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்து சென்றான்.

''அவன் இப்படி கோபப்பட்டு நான் பார்த்ததே இல்லை!''

''சும்மா இருங்கம்மா! பாவம் அருந்ததி! ஆசை ஆசையா சமைச்சுப் பரிமாறினால் நல்லாவே இல் லைனா கூட சாப்பிட அவனுக்கு கசக்குதா?''

''அருந்ததி எங்கே ராது?''

''மாடியில இருக்கா!''

''குழம்பு நல்லா தான் இருந்தது! நான் டேஸ்ட் செய்து பார்த்தேனே.''

''நல்லா இல்லாமல் என்ன, அந்த ஷிவாக்கு கொழுப்பு.''

"அவனை சும்மா திட்டாதேடி! என்ன விஷயம்னு தெரியலையே. அவங்களுக்குள் ஏதாவது சண்டையோ என்னவோ! அவன் கிட்ட நான் பேசுறேன், நீ போய் அருந்ததியைச் சமாதானப் படுத்து! பாவம் சின்ன பொண்ணு."

"நானா?"

"ஆமாம் போய் பேசு ராது! அவ சித்தி கிட்ட நான் பார்த்துக்குறேன் பார்த்துக்குறேன்னு வசனம் பேசிட்டு ஒரு வாரத்தில இப்படின்னா நான் என்ன சொல்ல?"

"சரி பேசுறேன்!"

அருந்ததி எதிரில் தெரிந்த சுவரை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள். ஷிவாவின் கோபத்தை விட அவனின் கோபத்திற்குக் காரணமான அவளின் மீதே அவளுக்குக் கோபம் அதிகமாக இருந்தது!

அவனும் அவளிடம் எத்தனையோ விதங்களில் பேச முயற்சி செய்தான்! அவளுக்கு அது புரிந்த போதும், வேலை அது இதென்று சொல்லி அவள் தட்டிக் கழித்துக் கொண்டிருந்தாள்.

ராதிகாவுடனும், லக்ஷ்மியுடனும் பேசும் போதெல்லாம் ஷிவாவை பற்றி தான் கேட்டு தெரிந்து கொண்டாள்!

ஆனால் அந்த அன்பை வெளிபடுத்த வேண்டிய இடத்தில் தான் வெளிபடுத்த இயலாமல் ஏதோ ஒன்று அவளைக் கட்டிப் போட்டிருந்தது.

தள்ளி நின்றாலும் பேசாமல் இருந்தாலும் கூட, ஷிவா அவளுக்கு உயிருக்கும் மேலானவனாகி இருந்தான்!

அவனை பார்க்காமல் ஒரு நாள் கூட இருக்க முடியும் என்று அவளுக்குத் தோன்றவில்லை!

இரவில் தூங்குவதாக அவள் பாவனை செய்த பல மணி நேரத்திற்கு பின்தான் அவன் உறங்குவது தெரிந்த போதும், காட்டிக் கொள்ளாமல் படுத்திருந்து விட்டு, அவன் தூங்கிய பின், அவனையே பார்த்துக் கொண்டு படுத்திருப்பது கடந்த சில நாட்களாக அவள் தவறாமல் செய்து வருவது!

ஷிவாவுடன் பேச வேண்டும், பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆவலை மனதினுள் இருந்த பயம் கட்டிப் போட, தான் ஒரு நல்ல மனைவி இல்லை என்ற குற்ற உணர்வு அவளை அவனை விட்டு பல மைல்கள் தள்ளி வைக்க, மனதினுள் புழுங்கி தவித்துக் கொண்டிருந்தாள் அவள்.

கதவை தயக்கத்துடன் தட்டிய ராதிகா, அது தாழிடப் படாமல் திறந்து இருப்பதை உணர்ந்து மெல்லத் திறந்து உள்ளே சென்றாள்.

அருந்ததி அங்கே இருந்த நாற்காலியில் அமர்ந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்!

"அருந்ததி!"

அவசரமாக எழுந்த அருந்ததி,

"எதோ யோசனையில் அப்படியே உட்கார்ந்திட் டேன்! கீழே இருந்து கூப்பிட்டீங்களா, சாரி சத்தம் கேட்கலை!"

"கூப்பிடலைடா! உன்னைக் காணுமேன்னு பார்க்க வந்தேன்."

பேசியபடி அருந்ததியின் முகத்தை ஆராய்ந்தவள், எப்படி இவளைச் சமாதானப்படுத்துவது என்ற யோசனையுடனே,

''என்ன பலத்த யோசனையில இருந்த?'' என்றாள்.

''அவரோட ஆபீசில கேண்டீன் இருக்கா?''

''யாரு பி.எஸ் ஆபீஸ்லேயா, இருக்கே ஏன்?''

''இல்லை சாப்பிடாமல் கிளம்பிப் போயிட்டாரே! பசிக்குமே!''

''க்கும்!''

என்ற ராதிகாவின் பேச்சில் இப்போது தயக்கம் எல்லாம் போய் வழக்கமான மலர்ச்சி வந்திருந்தது.

''கோபமா கிளம்பிப் போனாரே போயிட்டு போன் செய்தாரா?''

''ரொம்ப முக்கியம்! நீ இப்படி 1950 காலத்து ஹீரோயினா இருந்தா உன் தலையில அந்த பி.எஸ் மிளகா அரைச்சிடுவான்! கொஞ்சமாவது கெத்தா இருக்க கத்துக்கோ.''

''ம்ம்ம்ம்... நான் உங்க கிட்ட ஒண்ணு சொல்லட் டுமா?''

''சொல்லேன்.''

''நாம பரெண்ட்ஸ் தானே? சொன்னால் கோபப் பட மாட்டீங்களே?''

''இல்லை, சொல்லுடா.''

''அவர் உங்க தம்பி! என்னை விட உங்களுக்கு தான உரிமை அதிகம்..... ஆனாலும்.....''

''ஆனாலும்???''

''அவரை இப்படி பி.எஸ், போலி சாமியாருன்னு எல்லாம் கூப்படாதீங்களேன்!''

ராதிகா கேள்வியாக பார்த்தாள்!

''கல்யாணத்துக்கு முன்னாடி பரவாயில்லை, இனிமேல் வேண்டாமே! வேற ஏதாவது பேர் வைங்க! நான் ஒண்ணும் சொல்ல மாட்டேன்!''

ஒன்றிரண்டு வினாடிகள் அமைதியாக இருந்த ராதிகா, சிரிக்க ஆரம்பித்தாள்! விழுந்து விழுந்து சிரித்தாள்!

அருந்ததியின் முகத்தைப் பார்த்து விட்டு சிரிப்பை நிறுத்தியவள்,

''காதல் காவியங்களை சினிமாவில் பார்த்திருக்கேன், டிவியில் பார்த்திருக்கேன், பக்கத்து வீட்டில பார்த்திருக்கேன், எதிர் வீட்டில பார்த்திருக்கேன், ஏன் பஸ் ட்ரெயின்ல கூட பார்த்திருக்கேன், இப்படி வீட்டில கண் முன்னாடி பார்ப்பேன்னு நினைக்கவே இல்லை! என்னா லவ்வுடா இது!!!!''

7

ராதிகா ஒருவழியாக சிரிப்பை நிறுத்திய போது, அருந்ததி பாவமாக அவளைப் பார்த்திருந்தாள்.

"சாரிடா என் அமூல் பேபி, கோவிச்சுக்காதே."

"ப்ச், போங்க."

"நான் ஒண்ணு சொல்லட்டுமா க்யூட்டி, இந்த ஷிவா போல ஒரு ஜீவனைப் பார்ப்பது ரொம்ப ரேர்!"

"....."

"நான் அவன் அக்கா என்பதற்காகச் சொல்லலை. பொதுவா சொல்றேன். அவனைப் போல, அம்மா, அப்பா, என்மேல, கௌஷிக் மேல பாசம் வச்சிருக் கவங்களை பார்க்கவே முடியாது. நான் ஹையர் செகண்டரி படிச்சப்போ ஒருத்தன் என் பின்னாடி சுத்தி லவ் லெட்டர் கொடுத்து தொல்லை செய்துட்டு இருந்தான். சரின்னு சொல்லலைன்னா என்னென் னவோ செய்வேன்னு சொல்லி பயமுறுத்திட்டு இருந்தான். அம்மா கிட்ட சொல்லி அழுதேனா, இவன் என்ன செஞ்சான் தெரியுமா, அந்த பையனுக்கு இவன் யாருன்னு தெரியாத மாதிரி முகத்தை மூடிட்டு, அடி பின்னி எடுத்திட்டான். ராதிகா பக்கம் வந்த அவ்வளவு தான்னு அவன் மிரட்டின மிரட்டல்ல இன்னைக்கு என்னைப் பார்த்தா கூட அவன் திரும்பிப் போயிடுவான்னா பார்த்துக்கோயேன்."

"ரொம்ப நல்ல தம்பி உங்களுக்கு."

"ம்! எங்க மேல மட்டும் இல்லை அருந்ததி அவனுக்கு வர போற மனைவி மேலயும் அவனுக்கு அளவுக்கு கடந்த அன்பு உண்டு. சின்ன வயசில டிவில, தியேட்டர்ல ஏதாவது லவ் ஸ்டோரி பார்க்கும் போது அம்மா எங்களுக்காக அட்வைஸ் செய்றது

தெரியாத மாதிரி பிரெண்ட்ஸ் சம்மதத்தோட கல்யாணம் செய்துப்பதை பத்தி நிறைய சொல்வாங்க. எங்க இரண்டு பேர் மனசிலுமே அது பதிஞ்சு போய் இருந்தது. ஆனால் அதை ஷிவா ப்ராக்டிகலா காட்டிய விதம் நம்பவே முடியாதது.''

''.....''

''ஒரு பொண்ணு கிட்டேயும் தேவை இல்லாமல் பேச மாட்டான். ஸ்கூல் வரைக்கும் பாய்ஸ் ஸ்கூல் பிரச்சனை இல்லை, ஆனால் காலேஜில் இவனை என்ன எல்லாமோ சொல்லி கிண்டல் செய்தாலும் அசரவே இல்லை. படிப்பு, ஸ்போர்ட்ஸ் இது தான் அவனுடைய மனசு முழுக்க இருந்தது. வேலைக்கு போக ஆரம்பிச்சப்புறமும் கூட அப்படியே தான். போலி சாமியார்ன்னு நான் கிண்டல் செய்தாலும் எனக்கு மனசுக்குள்ள கொஞ்சம் பயமும் இருந்தது.''

''பயமா என்ன பயம்?''

''அவன் எங்கே சாமியாராகிடுவானோன்னு தான் பயம்.''

''ஹாங்!''

''வாயை பிளக்காதே! கொஞ்சம் கொஞ்சம் பயமிருந்தது! ஆனால் கல்யாணம் நிச்சயம் செய்தாங்களோ இல்லையோ எனக்கு பயமெல்லாம் போச்சு! அவனுடைய ஜொள்ஸ் தான் தாங்க முடியலை.''

அருந்ததி வெட்கத்தோடு புன்னகைத்தாள்.

''உன்னை போல ஒரு ஸ்வீட் க்யூட்டி அவனுக்கு மனைவியா வந்ததில் எனக்கு ரொம்ப ரொம்ப

சந்தோஷம். ஆனால் நீ ஒண்ணு புரிஞ்சுக்கணும், அவன் இத்தனை நாள் சேர்த்து வச்ச அன்பை எல் லாம் உன் கிட்ட கொட்டணும்னு ஆசைப் படுவான். அதுக்கு நீ தயாரா இருக்கணும்.''

''ம்ம்ம்.....''

''அவன் உனக்குன்னு வாங்கி வச்சிருக்க கலக்ஷன் பார்த்தீயா?''

''கலக்ஷனா?''

''ஐயா இன்னும் உன்கிட்ட காட்டலையா? சர்ப் ரைஸ் தர நினைச்சிருப்பானோ.''

''அவர் நினைச்சது இருக்கட்டும் நீங்க சொல்லுங்க, என்ன அது?''

''சரி உனக்காக சொல்றேன் அவன் கிட்ட போட்டு கொடுத்துராதே! இங்கே வா.....''

ராதிகா அந்த அறையின் ஒரு மூலையில் இருந்த அலமாரியைத் திறந்தாள்!

''உள்ளே இருப்பதை எல்லாம் பார்த்தீயா, எல்லாம் உனக்கு தான்! இந்த மூணே மாசத்தில சார் வாங்கி குவிச்சது இதெல்லாம்.''

அருந்ததி நம்ப முடியாமல் விழிகளை விரித்துப் பார்த்தாள்.

''ஆரம்பிச்சிட்டீயா முட்டை கண்ணி! இதுக்கு மேல அவன் உனக்கு காட்டும் போது பார்த்துக்கோ, உங்க ரொமான்ஸ் நடுவில் நான் வரலை'' சொல்லியபடி அலமாரியை மூடியவள்,

''இதெல்லாம் ஏன் உனக்கு சொல்றேன்னா, அவன் இன்னைக்கு கோபப்பட்டதை மறந்திருன்னு சொல்ல இல்லை, அவன் இப்படி கோபப்படாமல் ஸ்மார்ட்டா நடந்து உன் முந்தானையில் முடிச்சு வச்சுக்கோன்னு சொல்ல!''

''நானா?''

''இல்லை, அதுக்கு இனி நான் வேற ஒருத்தரை கூட்டிட்டு வரேன்.''

''விளையாட்டுக்கு கூட அப்படி சொல்லாதீங்க.''

''இதோ பாருடா! இந்த அமுல் பேபிக்கு வர கோபத்தை!''

ராதிகா சிரித்துக் கொண்டிருக்கும் போதே லக்ஷ்மி மெல்ல கதவை தட்டி விட்டு வந்தாள்.

''ராது, என்னடி சிரிச்சுட்டு இருக்க? பாவம் அருந்ததி இப்படி பாவமா முழிக்குறா.''

''யார் இந்த பொண்ணா பாவம்? இப்படி பாவமா லுக் விடுறவங்களை நம்பக் கூடாதும்மா. மேடம் என்ன சொன்னாங்க தெரியுமா? உங்க புள்ளைய போலி சாமியார்ன்னு கூப்பிடக் கூடாதாம். அவருக்குக் கல்யாணம் ஆகிடுச்சாம்.''

லக்ஷ்மியின் முகத்திலும் மெல்லிய கீற்றாகப் புன்னகை தோன்றியது.

''அவ சொல்றதும் சரி தானே? பேரை மாத்தி வை.''

''ஹ்ம்ம்ம்... என்ன பேர் வைக்கலாம்மா அந்த பையனுக்கு.....''

''விஸ்வாமித்ரர், வசிஷ்டர் இப்படி எதையாவது வை.''

''ஏன் உங்க மருமக என்னை மொத்தவா? இவங்க எல்லாம் கூட ரிஷிங்க தானே?''

''ஆனால் இவங்க எல்லாம் பிரம்மச்சாரிங்க இல்லை. கல்யாணம் செய்துகிட்டவங்க.''

''ஓஹோ!'''

''இப்படி எல்லோருக்கும் பேர் வைப்பீங்களா?''

விழிகள் விரிய கேட்டாள் அருந்ததி.

''அம்மாடியோ! எப்படி இப்படி கண்ணைப் பிளக்குற? சின்ன வயசில தமிழ் மிஸ் ஏதேதோ தலைவி கண்ணு அப்படி இருந்துச்சு இப்படி இருந்துச்சுன்னு சொன்னப்போ எல்லாம் நான் நம்பவே இல்லையே!''

''ப்ச்... போங்க... எப்போ பாரு என்னைக் கிண்டல் செய்துட்டே இருக்கீங்க.''

''இவளுக்கு சின்ன வயசில இருந்தே இதே வேலை தான் அருந்ததி. ஸ்கூல்ல ஒரு பொண்ணை விட்டு வைக்குறதில்லை. பொண்ணுங்க மட்டுமா, எல்லா டீச்சர்ஸ்க்கும் கூட பேர் வைக்குற வேலை தான். எல்லா கிளாஸ்லேயும் லாஸ்ட் பெஞ்ச் செட் இருப்பாங்கள்ள அது போல இவ கிளாஸ் லாஸ்ட் பெஞ்ச் ரவுடி செட் தலைவி இவ தான்.''

''ஹா ஹா! எப்படி அத்தை உங்களுக்கு பேர் வைக்காம விட்டாங்க?''

''யார் விட்டா, அம்மாவோட செல்ல பேர் கே.ஆர்.விஜயா.''

''ஹாங்! அத்தையோட ஸ்மைல்க்காகவா?''

''நீ பிழைச்சுப்படி என் செல்லம்! இப்படி கூசாம ஐஸ் வைக்குற! ஆனால் அதில்லை ரீசன்! சிவாஜி கே.ஆர்.விஜயா படம் எல்லாம் பார்த்திருக்கீயா? அதில இருக்க கெமிஸ்ட்ரி வேற எங்கேயும் பார்க்க முடியாது. அம்மாவும் அப்பாவும் அப்படி தான். அது மட்டுமில்லாமல் அப்பாக்கு வச்சிருக்கும் பேர் எஸ்.பி.சௌதரி.''

''மாமா ஒண்ணும் போலீஸ்காரர் இல்லையே?''

''அது மட்டும் தான் க்யூட்டி குறைச்சல். மத்தபடி சரியான ஸ்ட்ரிக்ட் அப்பா. நாங்க இரண்டு பேரும் அம்மா பின்னாடி ஒளிஞ்சுப்போம். இன்ட்ரஸ்டிங்லி தங்கபதக்கத்தில கே.ஆர்.விஜயா பேரும் லக்ஷ்மியே தான்!''

''ஓ! ஆனால் உங்க தம்பி ஒண்ணும் அந்த படத்தில வர ஸ்ரீகாந்த் மாதிரி இல்லையே, ரொம்ப நல்லவர்!''

''ஹாங்! முடியலையே அம்மா என்னால! ஏன், சொல்லேன் அந்த படத்துல அவங்களுக்கு ஒரே ஒரு பையன்தான்னு! அப்படி சுத்தி இப்படி சுத்தி அவன் கிட்டேயே வந்து நில்லு.''

''அவளாவது நல்ல பொண்ணா இருந்துட்டு போகட்டுமே, ராது விடு!''

"சொல்லுவீங்கம்மா சொல்லுவீங்க, மருமக வந்த உடன் இந்த மாசற்ற மாணிக்கம் ராதிகா தேவை இல்லாம போயிட்டேன்ல?"

"ஹப்பா! இவ இம்சை தாங்க முடியலையே! எப்போ திரும்ப வேலைக்குப் போக ஆரம்பிக்கப் போற?"

"அம்மா!!!! க்யூட்டி, உன் முன்னாடியே என்னை டீஸ் செய்றாங்க, நீ அமைதியா இருக்க?"

"அமைதியா எல்லாம் இல்லை சிரிச்சுட்டு இருக்கேன்."

"அடிப்பாவி!"

அருந்ததி சிரிப்பதை பார்த்த லக்ஷ்மியின் முகமும் மலர்ந்தது.

"தேங்க்ஸ் ராது!" என்று மகளிடம் பரிவுடன் கூறிய லக்ஷ்மி, அருந்ததி பக்கம் பார்த்து,

"ஷிவா அப்படி கோபப்பட்டுட்டு போனானேன்னு ரொம்ப கவலையா இருந்தது. திரும்ப உன் முகத்துல இந்த சிரிப்பை பார்க்கும் போது தான் நிம்மதியா இருக்கு" என்றாள்.

"க்கும்! அதுக்கு எல்லாம் நாம தான் பீல் செய்றோம்மா. இவளுக்கு அதெல்லாம் பிரச்சனை இல்லையாம். சார் ஆபீஸ் போயிட்டு போன் செய்தாரான்னு தான் கவலை!"

"அட ஆமாம் நானும் கூட அவனை கூப்பிட்டு கேக்கணும்னு நினைச்சேன். உன் போன் கொடேன் அருந்ததி."

"போனா? என்கிட்டே இல்லையே அத்தை."

"என்னது?"

ராதிகாவும், லக்ஷ்மியும் வேற்று கிரகவாசியை பார்ப்பது போல் அவளைப் பார்த்தார்கள்.

"ஊருல சித்தி வீட்டுல லேன்ட்லைன் இருந்தது. எனக்கு யார் போன் செய்வான்னு நான் தனியா போன் வாங்கலை."

"புரியுதுடா! ஆனால் ஒரு பாதுகாப்புக்கு கைல ஒரு போன் வாங்கி வச்சுக்கோ. நான் ஷிவா கிட்ட சொல்றேன்."

"சரி அத்தை....."

அருந்ததி பேச்சை முடிக்காமல் இழுக்கவும், லக்ஷ்மி 'என்ன' என்பது போல் பார்த்தாள்.

"அவர் கிட்ட பேசுறேன்னு சொன்னீங்களே....."

"என் செல்லம் நான் பேசுறேன். இரண்டு பேரும் வாங்க சாப்படுவோம்."

"அவர் கிட்ட பேசி அவர் சாப்பிட்டாரான்னு கேளுங்க அத்தை."

"நான் கேட்குறேண்டா செல்லம், நீங்க வாங்க."

லக்ஷ்மி மருமகளின் கன்னத்தை செல்லமாக தட்டி விட்டு, வாயெல்லாம் பல்லாக ஷிவாவை அழைக்க சென்றாள்.

அருந்ததி பக்கம் பார்த்த ராதிகா,

"அது தான் உன் அத்தை போயாச்சே இன்னும் எதுக்கு இந்த நல்ல பொண்ணு லுக்? மவளே

உன்னோட இந்த சென்டிமென்ட் இம்சை தாங்க லையே! நீ இப்படியே இருந்த நான் அம்மா கிட்ட மாட்டி திட்டு வாங்க வேண்டியது தான். உன்னை மாத்தியே தீரணும். சரி அதெல்லாம் அப்புறம் இப்போ வா சாப்பிட போகலாம்...''

''ஆனால் அவர்.....''

''ஹேய் வேண்டாம்! என்னை டெரரிஸ்ட்டா மாத்தாதே.''

''ஹி ஹி ஹி..... நீங்க டென்ஷன் ஆகுறது பார்க்க நல்லா இருக்கு அதுக்காக தான் சொன்னேன்.''

''ம்ம்ம்ம்ம்ம்..... நீ பிழைச்சுப்படி! சரி சரி, வா.''

ஷிவா தலையில் கையை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

ஆபீஸில் அனைவரின் அன்பு விசாரணைகள், வாழ்த்துக்கள் எல்லாம் தாண்டி வருவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது!

வீட்டில் செய்து வந்த காரியத்தை நினைத்து இப்போது கவலையாக இருந்தது.

போன் செய்து பேசலாமா? ராதிகா அவனை திட்டியே தீர்த்து விடுவாளே! ஆனாலும்.....

அவனின் சிந்தனையை தடை செய்து செல்போன் ஒலித்தது. வீட்டு நம்பர் என்பதை தெரிந்து கொண்டு அவசரமாக எடுத்து,

''ஹலோ அம்மா'' என்றான்.

"எங்கே இருக்க ஷிவா? ஆபீஸ் போயாச்சா?"

"ம் வந்துட்டேன்ம்மா."

"சரி, அதை கேக்க தான் போன் செய்தேன். ஏதாவது வாங்கி சாப்பிடு."

லக்ஷ்மி எதுவும் கேட்காவிட்டாலும், ஷிவாவின் மனதில் குற்ற உணர்வு இருந்ததால்,

"சாரிம்மா" என்றான்.

"என்கிட்டே எதுக்கு சொல்ற? சொல்ல வேண்டியவ கிட்ட சொல்லு."

"ம்ம்ம் சரி."

"நீ சாப்பிடாம கிளம்பிட்டியேன்னு அவளுக்கு ரொம்ப வருத்தம். எதையாவது வாங்கிச் சாப்பிடு."

"ம்."

"நான் கூட நீ கோபப்பட்டதை பத்தி தான் யோசிச் சுட்டு இருந்தேன் அவளுக்கு உனக்கு பசிக்குமேன்னு கவலை! பார்த்தீயா, மனைவிங்குறவ அம்மா பாசத் தையும் சேர்த்து தரவ."

"ம்."

"சரி உனக்கு வேலை இருக்கும்! சாப்பிட்டுட்டு வேலையை சீக்கிரம் முடிச்சுட்டு நேரத்துக்கு வா."

"சரிம்மா..... அப்புறம்....."

"அப்புறம் என்ன?"

"அவளையும் சாப்பிடச் சொல்லுங்க!"

லக்ஷ்மியின் முகத்தில் புன்னகை தோன்றியது.

''நான் சொல்றதை விட நீயே அவ கிட்ட சொல்லிடேன். நான் அவளைக் கூப்பிடுறேன்.''

''இல்லைம்மா, நான் நேராவே பேசுறேன்.''

''சரிப்பா, நேரத்துக்கு வீட்டுக்கு வந்திரு.''

''சரிம்மா.''

போனை மேஜை மீது வைத்தவனின் நினைவுகள் முழுவதும் அருந்ததியே ஆக்ரமித்திருந்தாள்.

அவளை நிச்சயத்தன்று பார்த்தது துவங்கி, ஒவ்வொரு நிகழ்வையும் மனதினுள் ரீவைன்ட் செய்து பார்த்தபடி தனக்குள் சிந்தனையைத் தொடர்ந்தான்.....

பாவம் அவள்!

அவனுடைய கோபத்துக்கான காரணத்தை அவளிடம் சொல்ல வேண்டும்!

ஆனாலும் அவள் ஏன்.....

'இல்லை இல்லை! அன்னைக்கு நிச்சயம் முடிஞ்ச அன்னைக்கு நீங்க ரூமில..... வந்து..... வந்து..... அப்போ இருந்து தான் இந்த பயம்! அதை எப்படி சொல்றதுன்னு தெரியலை! யார்கிட்டேயும் சொல்லவும் முடியலை. உங்க கிட்ட மட்டும் தான் சொல்றேன். எனக்கு நீங்க பக்கத்தில வந்து..... வந்து..... நீங்க தொடும் போது என்னவோ போல..... கொஞ்சம் கூசுற போல இருக்கு..... ரொம்ப பயமா இருக்கு.'

சட்டென்று அவன் மனதில் பல்ப் எரிந்தது!

அவள் தெள்ளத் தெளிவாக தான் சொல்லி இருக்கிறாள்! அவனுக்கு தான் புரியவில்லை!

இனி அடுத்து என்ன செய்வது என யோசிக்கத் துவங்கினான்!

ஷிவா மாலையில் வீடு திரும்பிய போது வீட்டின் முன் இருந்த இடத்தில் அருந்ததியும் ராதிகாவும் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அவன் வீட்டின் வலது புறத்தில் இருந்த கேட்டின் வழியே வந்து பைக்கை நிறுத்தி விட்டு வந்ததால், இருவரும் அவனை கவனிக்காமல் விளையாடிக் கொண்டிருந்தனர்.

"சூப்பர் க்யூட்டி நல்லா இம்ப்ரூவ் ஆகிட்ட, இது தான் லைன், இதை விட்டு வெளியே போகாம பாலை அடிக்கணும். ஓகே, ரெடி?"

ராதிகா அவனின் மனைவிக்கு டென்னிஸ் விளை யாட சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

மனைவியையே இமைக்காமல் பார்த்தபடி, அமைதி யாக நின்று கவனித்தவனுக்கு, சிறு வயதில் படித் திருந்த திருக்குற்றாலக் குறவஞ்சி பாடல் நினைவு வந்தது

இந்திரையோ இவள் சுந்தரியோ தெய்வ

ரம்பையோ மோகினியோ – மன

முந்தியதோ விழி முந்தியதோ கர

முந்தியதோ வெனவே – உயர்

சந்திர சூடர் குறும்பல ஈசுரர்

சங்கணி வீதியிலே – மணிய

பைந்தொடி நாரி வசந்த ஒய்யாரி

பொற்பந்து கொண்டாடினாளே!

இவள் திருமகளோ, ரதியோ,

ரம்பையோ, மோகினியோ என்று கண்டவர்கள் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தனர்

இவள் பந்தாடும்போது, அந்த பந்தை அடிக்க இவளின் மனம் முன் செல்கிறதா? இவள் கண்கள் முந்திச் செல்கின்றனவா?

இவள் கைகள் முந்துகின்றனவா? எது முதலில் முன் செல்கிறது? என்று ஆச்சர்யப்படும் அளவுக்கு

மூன்றாம் பிறையை அணிந்து தில்லையில் கூத்தாடிய சிவ பெருமான்

வீற்றிருக்கும் குற்றால மாநகர் வீதியில்

தங்க வளையல்களை அணிந்திருக்கும் ஒய்யாரி வசந்த வல்லி

பந்தாடினாள்.

இருவரையும் மாலை சிற்றுண்டி உண்ண அழைக்க வந்த லக்ஷ்மி, மனைவியை இமைக்காமல் பார்த்தபடி நின்றிருந்த மகனைப் பார்த்து முதலில் ஆச்சர்யப்பட்டாள். பின் சந்தோஷப்பட்டாள்!

திருமண வாழ்வு என்பது காதலும், அன்பும் மட்டும் நிறைந்தததில்லை. அதில் அவ்வபோது கோபமும் எட்டிப் பார்க்கும் என்பதை நன்கு உணர்ந்தவள் என்பதால், மதியம் நடந்தது கணவன் மனைவிக்குள் ஏற்பட்டிருக்கும் ஊடலின் அடையாளம் என முடிவு செய்து மன நிம்மதியடைந்தாள்.

''என்ன ஷிவா அங்கேயே நின்னுட்ட?''

கணவனின் பெயரைக் கேட்ட உடனேயே அருந்ததி டென்னிஸ் பேட்டை கீழே போட்டாள்!

''இதோ இவ இப்படி பயந்து நடுங்குவான்னு தான் அவன் மறைந்திருந்து ரசிச்சிட்டு இருந்திருப்பான். டேய், அப்படி என்னடா உனக்கு கோபம் வருது? ஒரு மாசத்துக்கு உப்பு, காரம் இல்லாம சாப்பாடு தர சொல்றேன்.''

''தர சொல்லு! ஆனால் அதை அருந்ததியை செஞ்சு தர சொல்லு.''

''ஏன், திரும்ப தட்டை தூக்கி அடிக்கவா?''

ஷிவா அருந்ததியைப் பார்த்தான். அதுவரை அவனை பார்த்தபடி நின்று கொண்டிருந்தவள் சட்டென லக்ஷ்மியின் பின்னால் ஒளிந்து கொண்டாள்.

மேலே எதுவும் பேசாமல் அமைதியாக உள்ளே சென்றான் அவன்.

ஷிவா அன்றைய மாலை பொழுது முழுவதையும் அறையிலேயே கழித்தான். இரவு உணவு வேளை யின் போதும் ஏதோ சிந்தனையுடனே இருந்தான்.

ராதிகாவின் கேலி பேச்சோ, கௌஷிக்கின் வழக்க மான பேச்சோ அவனை மாற்றவில்லை!

தன் அறையில் சிந்தனையுடனே நடந்து கொண் டிருந்தவன், உள்ளே வந்த மனைவியை அதே சிந் தனையினூடே பார்த்தான்.

சாதாரணமாக இருப்பதை விட அவளின் முகம் சிவந்திருந்தது!

தானாகவே அவனின் முகம் கனிந்தது!

எப்போதும் போல் நேராக தூங்கச் செல்லாமல் தயக்கத்துடன் யோசனையோடு நின்றாள் அவள்.

அவன் பார்த்தபடி நிற்க, அவள் அதே தயக்கத் துடன் அவனருகே வந்தாள்.

''உங்களுக்குக் கோபமே வராதுன்னு அத்தை சொன்னாங்க.''

''ம்.''

''என் மேல இருந்த கோபத்துல தானே சாப்பாட்டைத் தூக்கி அடிச்சிட்டு கோபத்தோட போனீங்க? உங்க மேல தப்பில்லை எனக்குப் புரியுது. வந்து..... எனக்கு பிடிக்கலைன்னு நீங்க யோசிக்க வேண்டாம். நான்..... வந்து..... உங்களுக்கு பிடிச்சது போலவே.....''

ஷிவா பதில் சொல்லாமல் மனைவியைப் பார்த்த படி நின்றான்.

அருந்ததி என்ன செய்வதென்று புரியாமல் விழித் தாள்!

"தப்பு என் மேல தான். கல்யாணத்துக்கு முன்னா டியே நான் உங்ககிட்ட பேசி இருக்கணும். நான்..... எனக்கு உங்களை..... மன்னிச்சுக்கோங்க."

சொல்ல வந்ததைக் கோர்வையாகச் சொல்ல முடியாமல் திணறி திண்டாடியவளை பார்த்தபடி இப்போதும் அமைதியாக நின்றான் அவன்.

அதற்கு மேல் என்ன சொல்வதென்று புரியாமல் அவனின் பதிலுக்காக ஒரு சில வினாடிகள் காத்திருந் தவள் அவன் அமைதியாக இருக்கவே, கட்டில் பக்கம் செல்ல திரும்பி இரண்டடி எடுத்து வைத்தாள்.

"உன்னோட நான் பேசணும்."

கணவனின் குரல் கேட்டு நின்றவள், தயக்கத் துடன் திரும்பிப் பார்த்தாள்.

"அது தான் எனக்கு பிடிச்ச மாதிரி என்ன வேணா செய்யலாம்னு சுதந்திரம் கொடுத்திட்டீயே, அப்புற மும் என்ன பேச கூப்பிட்டா வராமல் நிக்குற?"

அருந்ததி தயக்கத்துடன் மீண்டும் திரும்பி வந் தாள்.

பால்கனிக்கு செல்ல இருந்த கதவைத் திறந்தவன், அங்கே இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்துவிட்டு, அருகே இருந்த மற்றொன்றை நல்ல இடைவெளி விட்டி நகர்த்திவிட்டு,

"வா, வந்து உட்கார்" என்றான்.

புரியாத விதத்தில் ஷிவா நாற்காலியை தள்ளி போட்டு விட்டு அவளை அமரச் சொன்னது அவளின் மனதை நோகடித்தது.

திருமணம் நிச்சயம் ஆன நாள் முதல் ஷிவா ஆவலுடன் பேசும் பேச்சில், பார்க்கும் பார்வையில், தீண்டும் தீண்டலில் எல்லாம் உரிமை நிறைந்திருக்கும். நீ எனக்கானவள் எனச் சொல்லாமல் சொல்லும் உரிமை.

இந்த நாற்காலிகளுக்கு இடையிலான இடைவெளி அந்த உரிமை இல்லாமல் போனதை உரைப்பது போல் அவளுக்கு தோன்றியது.

நிச்சயதன்று அவன் கொடுத்த அந்த முத்தம்!

சித்தி வீட்டில் காலை உணவு உண்ணும் போது அவளின் கைகளை பிடித்துக் கொண்ட அந்த குறும்பு!

திருமண நிகழ்ச்சியின் போது அவனின் சீண்டல்கள், குறுகுறு பார்வைகள்!

"ப்ச், வேணும்னா சேரை இன்னும் தள்ளி போட்டுக்கோ, வா வந்து உட்கார் நான் உன்கிட்ட பேசணும்."

அவன் தவறாக புரிந்து கொண்டதை உணர்ந்து கொண்டு, அவசரமாகச் சென்று நாற்காலியில் அமர்ந்தாள் அவள்.

தலையை குனிந்து கொண்டு இரண்டு கை விரல்களையும் கோர்ப்பதும் பிரிப்பதுமாக அமர்ந்திருந்தாள்!

அவளையே பார்த்தபடி இருந்தவன், மெல்லப் பார்வையை திருப்பிக் கொண்டு பெருமூச்சை வெளியேற்றினான்.

"உனக்கு ரொம்ப தாராள மனசு, பெரிய தியாகம் எல்லாம் செய்ற?"

அவள் புரியாமல் பார்த்தாள்!

''என்ன பாக்குற? என்னைப் பார்த்தா உனக்கு வில்லன் போல இருக்கா? அது என்னது அது, உங்களுக்கு பிடிச்சது போலவே.....''

அவன் அவள் சொன்னதை சொன்ன விதத்தில் அவள் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

''உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? நான் கல்யாணத்துக்கு முன் பொண்ணுங்களை நிமிர்ந்துகூட பார்த்ததில்லை. இதை பெருமைக்காக சொல்லலை, என்னோட மன உறுதியை பத்தி உனக்கு சொல்லச் சொல்றேன். எனக்குன்னு வரவ கிட்ட மட்டும் தான் என் மொத்த அன்பையும் கொட்டணும்னு காத்திருந்தேன்.''

''ம்ம்ம்..... உங்க அக்கா சொன்னாங்க.''

''அதனால தான் முதல் நாள் தப்பு நடந்து போச்சு. நான் உனக்கு சம்மதமான்னு கேட்ருக்கணும்! ஐ ஆம் சாரி.''

''என்ன நீங்க தப்புன்னு எல்லாம் சொல்லிட்டு! என்கிட்டே போய் சாரி எல்லாம் கேட்குறீங்க? உங்க மேல ஒரு தப்பும் இல்லை, எனக்கு தான்.... நான் தான்....''

ஷிவா மேலே பேசாமல் அவளையே பார்த்திருந்தான்.

அவன் மனதில் எந்த குற்ற உணர்வும் இருந்து விட கூடாது என நினைத்தவளாக,

''நான் உங்களை எந்த விதத்திலும் தப்பு சொல் லவே முடியாது. நேரா உங்க கிட்ட பேச எனக்கு எத்தனையோ வாய்ப்பு இருந்தது, நான் தான் சரியா பயன்படுத்திக்கலை.''

அவளைக் கூர்மையாகப் பார்த்தவன்,

''சரி, யார் மேல தப்பு சரின்னு நாம பழசைப் பத்தி ஆராய்ச்சி செய்ய வேண்டாம். இனிமேல் நடக்கப் போறதை பத்தி பார்ப்போம் சரியா?''

''ம்ம்ம்'' அருந்ததி சரியென ஏற்றுக் கொண்டு தலை அசைத்தாள்.

''மனைவி என்பவள் பிசிகல் ரிலேஷன்ஷிப்க்காக மட்டுமில்லை. அதையும் தாண்டி தோழியாக, அம்மா வாகவும் இருக்கலாம்.''

''.....''

''நான் சொல்றது சரியா?''

''ம்.''

''கணவனும் கூட அப்படியே தான்.''

''.....''

''நான் சொல்றது புரியுதா?''

''ம்ம்ம்ம்...''

மீண்டும் ஆம் எனத் தலை அசைத்தாள் அவள்.

''எனக்கு மத்தியானம் கோபம் உன் மேல தான் ஆனால் அது நீ நினைக்கும் காரணத்துக்காக இல்லை.''

“.....”

“என் கோபத்துக்கு காரணம் தெரியுமா?”

“ஹூஹூம்ம்.”

“நாம இரண்டு பேரும் சந்திச்சு மூணு மாசத்துக்கு மேல இருக்கும், நீ இது வரைக்கும் என்னோட சரியா பேசினதே இல்லை. ஆனால் அம்மா கிட்ட, அக்கா கிட்ட அப்படி 'விழுந்து விழுந்து செல்லம் கொஞ்சுற.”

அருந்ததி விழிகளை உயர்த்தி அவனை எப்போதும் மயக்கும் அந்தப் பார்வையை பார்த்தாள்!

மனைவியின் விழிகளில் மூழ்கிப் போனவனாக ஒரு சில வினாடிகள் இருந்தவன், மெல்ல தன்னை சுதாரித்துக் கொண்டு, பார்வையை திருப்பினான்.

“நான் ஒண்ணும் அரக்கனோ ராட்சஸனோ இல்லை. உன் மேல ரொம்ப, ரொம்பவே நிறைய அன்பு வச்சிருக்கவன், நீ என்னை இப்படி ஒதுக்கி வைக்குறது ரொம்ப வலிக்குது. உனக்கு என்ன பிடிக்கும் பிடிக்காதுன்னு சொன்னா தானே எனக்குத் தெரியும். உனக்குப் பிடிக்காததா நான்.....”

அவன் பேசி முடிக்க காத்திருக்காமல் முதல் முறையாக அவனின் பேச்சின் குறுக்கே பேசினாள் அருந்ததி.

“ஐயையோ தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க! நான்..... என் மேல தான் தப்பு..... என் மனசில இருக்க குற்ற உணர்வில.....”

ஷிவாவிற்கு புரிந்தது!

மெல்ல புன்னகைத்தவன்,

"அப்பாடியோ இப்போ தான் நிம்மதியா இருக்கு!" என்றான்.

அவள் குழப்பத்தோடு பார்க்கவும்,

"இல்லை இல்லை நீ குற்ற உணர்வோட இருக்குறதுக்கு சந்தோஷப் படலை எங்கே உனக்கு என்னை பிடிக்கலையோன்னு பயப்பட்டேன்."

"உங்களை யாருக்கு பிடிக்காமல் போகும்?"

இதை ஷிவா பலர் சொல்ல கேட்டிருக்கிறான், லக்ஷ்மி, ராதிகா, நான் என்றில்லாமல், நண்பர்கள், அலுவலகத்தில் தெரிந்தவர்கள் என எத்தனையோ பேர், ஆனால் இன்று மனைவியின் வாயால் அதைக் கேட்ட போது அடைந்த அந்த மகிழ்ச்சி வேறு எப் போதும் ஏற்பட்டதில்லை.

"யாருக்கு பிடிக்குதோ இல்லையோ உனக்கு பிடிச்சா சரி தான்! ஓகே, நம்ம இரண்டு பேர் மன சிலும் எந்த குற்ற உணர்வும் வேண்டாம். பழசை எல் லாம் விட்டுட்டு, நம்ம எதிர்காலத்தை பத்தி யோசிப் போம். நீ என்னை பார்த்தால் நாலு அடி தள்ளி ஓட கூடாது, சாதாரணமா பேசணும், டீல்?"

"சரி."

"குட் கேர்ள்."

அருந்ததி அழகாக புன்னகைத்தாள்!

அவளை ரசனையோடு பார்த்தவன்,

"ஆமாம் இன்னைக்கு ரூமுக்கு வந்த போது முகமே வித்தியாசமா இருந்தது, என்ன விஷயம்?"

யோசித்தவள், நினைவு வந்தவளாக மீண்டும் வெட்கப் பட்டாள்.

"அக்கா கிண்டல் செய்துட்டு இருந்தாங்க. நீங்க வீட்டுக்கு வந்தப்போ சத்தம் போடாமல் நின்னுட்டு இருந்ததை அத்தை சொன்னாங்க....."

"ஓ!" என்றவன் அப்போது பார்த்த காட்சியின் நினைவில் புன்னகைத்தான்.

"என்ன சிரிக்குறீங்க?"

"சொல்றேன், இப்போ இல்லை, நமக்குள்ள எல்லாம் சரியான அப்புறம் ஞாபகம் இருந்தால் கேளு சொல்றேன்"

அவனின் பேச்சிலும், பார்வையிலுமாக வெட்கப் பட்டவளை பார்த்து ரசித்தப்படி இருந்தவன், நினைவு வந்தவனாக,

"சொல்ல மறந்துட்டேனே, நான் பெங்களூரு போகணும், ஒன்னு இரண்டு நாளாகும், சீக்கிரம்....."

"ஒண்ணு இரண்டு நாளா?"

ஏதோ வருடக் கணக்கில் பிரியப் போவதாக அவன் சொன்னது போல் திகைப்புடன் நம்ப முடியாமல் கேட்டவளை இழுத்து அணைத்துக் கொள்ள வேண் டும் என்று எழுந்த பேராவலை அடக்க அவன் பெரிதும் போராட வேண்டி இருந்தது!

''ம்ம்ம்..... வேலை இருக்கு! அங்கே இருக்க வீட்டை காலி செய்யணும்.''

''ஓ!''

ஷிவாவின் கண்கள் அவனையும் மீறி மனைவியின் மீது படர்ந்தது....

மாசு மருவற்ற அந்த முகம், கள்ளம் கபடம் இல்லாத அவளின் கண்கள், அவனை ஈர்க்கும் அவளின் பார்வை, அழகிய உதடுகள், ஏன் அவளின் காதணிகள் கூட அவனை மயக்கத் தானே செய்கின்றன!

சங்கைப் போன்ற அழகிய கழுத்து.....

கட்டுக் கடங்காமல் ஓடிய எண்ணங்களை முயன்று அடக்கியவன்,

''அருந்ததி, நான் ஒண்ணு கேட்கவா?'' என்றான்.

''ம்.....''

''உனக்கு இருக்க இந்த பயத்தை மாத்த நல்ல சைக்கியாட்ரிஸ்ட் பார்ப்போமா?''

அவள் அடிபட்ட பாவத்துடன் அவனைப் பார்த்தாள்.



8

தான் அவசரப்பட்டுவிட்டதைப் புரிந்து கொண்ட ஷிவா, பேச்சை மாற்றினான்.

"இனிமேல் என்ன செய்யலாமுன்னு இருக்க?"

அருந்ததி அவனின் கேள்வி புரியாமல் பார்த்தாள்.

ஏற்கனவே மனதைக் கட்டுபடுத்த முயன்று கொண்டிருந்த ஷிவா தடுமாறி போனான்!

இவள் வேறு நேரம் காலம் புரியாமல் இப்படி பறக்கும் தட்டை போல் கண்ணை விரித்துப் பார்த்துக் கொண்டு!

"சின்ன வயசில உனக்கு மனசில ஏதாவது ஆசை இருந்திருக்குமே! வளர்ந்து இதைச் செய்யணும் அதை செய்யணும்னு அப்படி ஏதாவது....."

"ப்ச்! அதெல்லாம் இனிமேல் நடக்காது."

"ஏன்?"

"சின்ன வயசில டாக்டர் ஆகணும்னு ரொம்ப ஆசை இனிமேல் நான் டாக்டர் ஆக முடியுமா?"

"ட்வெல்த்ல எவ்வளவு மார்க் எடுத்த?"

ரோஷத்துடன் அவனைப் பார்த்த அருந்ததி,

"மார்க் எல்லாம் ஒண்ணும் குறைஞ்சு போகலை! எம்.பி.பி.எஸ் படிக்கணும்னு நினைச்சிருந்தா படிச்சிருந்திருக்கலாம், எனக்கு அந்த டைம்ல ஆசை போயிடுச்சு" என்றாள்.

"அது ஏன் அப்படி மனசு மாறி போச்சு?"

"அம்மா அப்பாக்கு உடம்பு சரியில்லாம இருந்தப்போ ஊரில ஹாஸ்ப்பிட்டல்ல பார்த்த காட்சி எல்லாம் மனசில அழுத்தமா பதிஞ்சிருச்சு! ஹாஸ்பிட்டல்னாலே எனக்கு இப்போ அலர்ஜி!"

அவளைப் பரிவுடன் பார்த்தான் ஷிவா.

''புரியுது ரதி! உனக்கு பிடிக்காததை பத்தி பேச வேண்டாம். வேற ஏதாவது உனக்கு ஆசை இருந்தா சொல்லு, மேலே படிக்கணும் இல்லை, வேலைக்கு போகணும் இப்படி எதுவா இருந்தாலும் சொல்லு. ஊரு போல ட்யூஷன் எடுக்குறதா இருந்தாலும் எடு. ஷிவாவோட மனைவின்னு இல்லாம உனக்கு பிடிச்ச மாதிரி உனக்கே உனக்கா அடையாளம் வேணும்!''

அருந்ததிக்கு உச்சி குளிர்ந்து போனது!

எத்தனை பேருக்கு இது போன்ற திருமண வாழ்வு அமையும்?

ஷிவா கணவனாக கிடைக்க அவள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!

மனதில் ஓடிய எண்ணங்களுடனே அவனைக் காதலுடன் பார்த்தாள்!

அவள் பார்த்த சாதாரண பார்வையிலேயே தலைக் குப்புற விழுந்திருந்தவன், அந்தக் காதல் பார்வையில் மெய் மறந்து மூழ்கிப் போனான்!

அடி ராட்சஸி, இப்படி பார்த்துப் பார்த்து என்னை ஏன் கொல்லாமல் கொல்கிறாய்?

கஷ்டப்பட்டு பார்வையைத் திருப்பியவன், மன தையும் திருப்ப பேச்சைத் தொடர்ந்தான்.

''எதை வச்சு பி.எஸ்ஸி மேத்ஸ் செலக்ட் செய்த ரதி? மேத்ஸ் ரொம்ப பிடிக்குமா?''

"மேத்ஸ் சொல்லும் வாழ்க்கை தத்துவம் ரொம்ப பிடிச்சிருந்தது அதனால் அதை செலக்ட் செய்தேன்."

"கணக்குல தத்துவமா? இன்ட்ரஸ்டிங்! அப்படி என்ன தத்துவம் சொல்லுது?"

"உலகத்துல தீர்க்க முடியாத பிரச்சனை எதுவுமே இல்லை! எல்லா ப்ராப்ளமுக்கும் ஒரு பதில் இருக்கு!"

ஆச்சர்யமாக மனைவியைப் பார்த்தவன்,

"உன்னை சின்ன பொண்ணுன்னு நினைச்சேன்! அசத்துறீயே! ஆனால் கணக்கிலேயும் சால்வ் செய்ய முடியாத விஷயங்கள் இருக்கே! இப்போ டிவிஷன் பை ஜீரோக்கு பதில் இன்டேபனைட் தானே? அப்போ நீ சொல்ற லாஜிக் தப்பா இருக்கே!"

"எல்லாம் சரியா தான் இருக்கு! ஜீரோன்னா என்ன ஒண்ணுமே இல்லைன்னு அர்த்தம்! ஒண்ணுமே இல்லாத விஷயத்தை வச்சு தலையை பிச்சுகிட்டா அது இன்டேபனைட்டா இல்லாம வேற எப்படி இருக்கும்?"

ஷிவா அசந்து போனான்!

இவள் அழகிலும், அடக்கத்திலும் மட்டுமில்லை அறிவிலும் சிறந்தவள்!

அவனின் மனதில் பெருமை பொங்கியது!

"எப்படி இது? நான் உன்னை சின்னக் குழந்தைன்னு நினைச்சேன்? இப்படிப் போட்டுத் தாக்குற?"

"எல்லாம் அக்கா ட்ரேயினிங்."

"எந்த அக்கா?"

"வேற யாரு, உங்க அக்கா தான்."

"அவள் உனக்கும் அக்காவா? அதென்ன எப்போ பாரு அவளோட செல்லம் கொஞ்ச வேண்டி இருக்கு?"

அவன் பேச்சில் இழையோடிய மெல்லிய கோபமும், பொறாமையும் அவளுக்குப் பிடித்திருந்தது.

ஆனால் அவனின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அமைதியாக இருந்தாள்.

"சரி ரதி, தூங்கலாம், நாளைக்கு ஈவ்னிங் பெங்களூர் கிளம்பலாம்னு இருக்கேன். அங்கே வேலை எல்லாம் முடிச்சிட்டு வீடை காலி செய்துட்டு வெள்ளி இல்லை சனி திரும்பி வந்திருவேன்."

"நாளைக்கே போகணுமா? வெள்ளிக்கிழமை போனால் போதாதா?"

"நாளைக்கே போகணும்னு இல்லை? ஆனால் ஏன் கேட்குற?"

அவளையும் பெங்களூரு அழைத்துச் செல்ல அவனின் மனதினுள் ஆசை இருந்தது! ஒருவேளை அவளுக்கும் ஆசை இருக்குமோ?

"அவசரமா கொஞ்சம் பொருள் வாங்கணும். நீங்க இருந்தா உங்க கூட கடைக்குப் போகலாம்...."

"அப்படி என்ன அவசரமா வாங்கணும்?"

"உங்க அக்காக்கு ஒரு சர்ப்ரைஸ் கொடுக்க பிளான் செய்திருக்கோம். அடுத்த வாரத்திலருந்து அவங்க

ஆபீஸ் போறாங்க. அவங்க புது சாரியில சிம்பிள சர்தோசி எம்ப்ராயிடரி செய்யணும்....."

பேசிக் கொண்டே போனவள் ஷிவாவின் முகத்தைப் பார்த்து விட்டு நிறுத்தினாள்.

"உங்களுக்கு பிடிக்கலைன்னா, செய்யலை....."

"பிடிக்காமல் என்ன? எப்போ பாரு அவ கூடவே சுத்துற வேலையாப் போச்சு உனக்கு! அதென்ன ப்ளான் செய்திருக்கோம்? வேற யாரு அது?"

"அம்மா... உங்க அம்மா.... அத்தை!"

"சரி சரி! முகத்தை இப்படித் தூக்கி வச்சுக்காதே. எங்கே போகணும்?"

"ராயபேட்டா மாலுக்குப் போகணும். அங்கே வேண்டியதெல்லாம் கிடைக்கும்னு அத்தை சொன்னாங்க."

"சரி போகலாம். நாளைக்கு காலையில பத்து மணிக்கு ஷார்ப்பா கிளம்பி இரு, கூட்டிட்டுப் போறேன். காலையிலேயே இந்த வேலை முடிஞ்சிடுமே, நான் ஈவனிங் பெங்களூர் போறேன்."

"அவசரமில்லைனா, இரண்டு நாள் வெயிட் செய்யுங்களேன்..... ப்ரைடே எல்லோருமா பெங்களூர் போவோமே?"

"எல்லோரும்னா?"

"எல்லோரும்! அத்தை, மாமா, அண்ணா, அக்கா எல்லோரும்."

'ராட்சசி! குட்டி சாத்தான்!'

மனதினுள் செல்லமாக மனைவியைத் திட்டியவன்,

''ஏன் ஊரில இருந்து உன் சித்தியையும் வரச் சொல்ல வேண்டியது தானே?'' என மெல்ல முணுமுணுத்தான்.

''என்ன சொன்னீங்க? எனக்கு கேக்கலை?''

''சரி போகலாம்னு சொன்னேன்.''

''தேங்க்ஸ்ங்க.''

ஷிவாவின் கண்கள் மனைவியின் முகத்தில்..... அவளின் உதடுகளில் பதிந்தது!

அழகிய உதடுகள் பிரிந்து, இடையே வெண் பற்கள் மின்ன அவள் சொன்ன அந்த நன்றி அவனைக் கட்டிப் போட்டது!

ஒரு பெண்ணிடம் அவன் இப்படி மயங்கிப் போவான் என்று ஆறு மாதங்களுக்கு முன் யாரேனும் சொல்லி இருந்தால் அவன் நம்பியே இருக்க மாட்டான்.....

''நீங்க ஆபீஸ் வேலை பார்க்கும் போது நாங்க எல்லோருமா சேர்ந்து வீட்டைக் காலி செய்ற வேலையைப் பார்த்துக்குறோம். வேலையும் ஈசியா முடியும்.''

''ம்ம்ம்..... சரி..... இப்போ லேட்டாச்சு தூங்கலாம் வா.....''

அவனின் பார்வையும், பேச்சில் சிறியதாக கலந்திருந்த அலுப்பும் அருந்ததிக்கு புரிந்தது. மீண்டும் குற்ற உணர்வு தலை தூக்க,

"சாரி....." என்றாள்

"இப்போ எதுக்கு இந்த சாரி?"

"என்னால தானே உங்களுக்கு இந்த கஷ்டம். வேற பொண்ணைக் கல்யாணம் செய்திருந்தா....."

"ஷ்! ரதி, இப்படிப் பேசின எனக்குக் கோபம் வரும்! எனக்கு நீ தான் வேணும் வேற யாரும் வேண்டாம். காத்திருப்பதில் எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை."'

"....."

வருத்தத்துடன் தலையைக் குனிந்து அமர்ந்திருந்த வளின் தலையில் கை வைத்து, பட்டு போன்ற கேசத்தை வருடியபடி பேசினான் ஷிவா!

"இங்கே பாருடா உனக்கு இப்போ இருபத்தி மூணு வயசு, எனக்கு இருபத்தி ஏழு! இன்னும் எத் தனையோ வருஷம் நமக்கு முன்னால இருக்கு. தேவையே இல்லாமல் மனசை குழப்பிக்காதே. குற்ற உணர்வோட இருக்காதே. காதல் என்பது இயற்கை யானது. உன்னிடம் மட்டும் எப்படி இல்லாமல் போகும். எத்தனை வருஷம் ஆனாலும் உன் குழப்பம் தீரும் வரைக்கும் நான் காத்திருக்கேன்....."

பௌர்ணமியை நெருங்கி கொண்டிருந்த நிலவின் மங்கிய ஒளியில், இரவிற்கே உரிய அமைதியில், அருகே இருந்த வேப்பமரத்தினால் வீசிய மெல்லிய காற்றில், கணவனின் மிருதுவான வருடலில், அவனின் மனைத மயக்கும் பேச்சில் மயங்கி போய் நிமிர்ந்து பார்த்தாள் அருந்ததி!

சிறு வயதில் கண்ணுக்குக் கண்ணாகச் செல்லம் கொஞ்சி பெ ித்திப் பொத்தி வளர்த்த பெற்றோரின் நினைவு வந்தது!

கணவனின் இந்த வருடல் அம்மாவின் கைத் தொடலை நினைவு படுத்தியது.

எழுந்து சென்று அவனை இறுக அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது!

திடுக்கிட்டுப் போனாள்!

அவளையே பார்த்திருந்தவன்,

''என்னம்மா என்ன ஆச்சு?'' என்றபடி அவளின் காதோரத்தில் இருந்த சின்ன சுருட்டை முடிகளை பின்னுக்குத் தள்ளினான்.

என்ன சொல்வது என்று தடுமாறியவள், சமாளித் துக் கொண்டு,

''அம்மா ஞாபகம் வந்துச்சு'' என்று பாதி உண் மையை சொன்னாள்.

காதருகில் இருந்த கையை நகர்த்தி அவளின் முகத்தை வரி வடிவமாக அளந்தவன்,

''மனசை குழப்பிக்காத ரதி! ரொம்ப நேரம் ஆச்சு தூங்கு, காலையில உன்னோட செல்ல அக்காக்கு வேற சர்ப்ரைஸ்க்கு ரெடி செய்யணுமே.''

''ஆமாம் ஆமாம். அவங்களை அசத்தணும்.''

கண்கள் மின்ன சொன்னவளைக் கனிவுடன் பார்த் தவன்,

"குட் நைட்" என்றான்

இருவரும் கடந்த சில நாட்களைப் போலவே கட்டிலின் ஒவ்வொரு மூலையில் படுத்தனர்...

ஷிவாவிற்கு தூக்கம் வரவில்லை!

அவனின் மனதைக் கவர்ந்தவள்..... மனைவி என்ற உரிமையுள்ளவள்..... கை தொடும் தொலைவிலேயே அழகுப் பதுமையாக அருகேயே இருக்கிறாள்..... ஆனாலும் அவன் தள்ளி தான் நிற்க வேண்டும்.....

சொல்வதற்கு எளிதாக இருந்தாலும் செயலாற்ற அவனுக்குக் கடினமாக இருந்தது!

அவர்களின் உரையாடலை மனதினுள் மெல்ல அசைப்போட்டான்.... அவனின் அருகாமை அவளுக்கு அவளுடைய அம்மாவை நினைவுபடுத்தியதின் நினைவில் அவனுக்குப் புன்னகை தோன்றியது.

அவள் அவனுக்கு மனைவி மட்டுமில்லை..... குழந்தை..... அவனின் செல்லக் குழந்தை..... அவளாக கனியட்டும்..... காத்திருப்பதில் தவறில்லை.....

கண்களை இறுக மூடித் தூங்க முயன்றான் அவன்.....

அருந்ததிக்கும் தூக்கம் வரவில்லை! அவளின் மனமும் கணவனையே நினைத்துக் கொண்டிருந்தது!

அவளின் பயத்தைப் புரிந்து கொண்டு, கோபப் படாமல், பொறுமையாக அவளுக்காக பேசியவனின் உயர்ந்த குணநலனில் அவளின் மனம் பூரித்தது.....

அவனின் மனைவி என்றில்லாமல் அவளுக்கென தனி அடையாளம் வேண்டும் என்று சிந்திக்கும் அவனின் மனோபாவத்தில் அவளுக்குப் பெருமை யாக இருந்தது!

ஆனால் இப்படி அவனை விட்டுத் தள்ளி இருந்து பெருமைபட்டுக் கொள்வதில் பலனில்லை! ஏதாவது செய்ய வேண்டும்!

என்ன செய்வது, எப்படி செய்வது என்ற யோசனை யுடன் படுத்திருந்தாள் அவள்.....

''ரதி லேட் ஆச்சும்மா! சீக்கிரம் கிளம்பு!''

''அஞ்சே நிமிஷங்க! அத்தை வந்த உடனே கிளம் பிடலாம்.''

''அம்மா எங்கே?''

''அக்கா வீட்டுக்குப் போயிருக்காங்க.''

''சாவியை கதவு மேல வச்சுட்டு போகலாம். அம்மாக்கு சாவி எங்கே இருக்கும்னு தெரியும். நாங்க எப்போதும் அப்படி தான் வச்சுட்டு போவோம். வா வா கிளம்பலாம் லேட் ஆச்சு.''

''அஞ்சே அஞ்சு நிமிஷங்க.''

''எதுக்கு?''

அவன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, லக்ஷ்மி பரபரப்பாக உள்ளே வந்தாள்.

''இந்தா அருந்ததி சின்ன பீஸ் தான் கட் செய்ய முடிஞ்சது.''

லக்ஷ்மி கொடுத்த அந்த சின்னஞ்சிறு துணியை வாங்கி பத்திரமாக கைப்பையில் வைத்துக் கொண்டாள் அருந்ததி!

"இது போதும் அத்தை! இதை வச்சே நான் எல்லாம் வாங்கிடுவேன். அக்கா நான் எங்கேன்னு கேட்டால்....."

"ஷிவா கூட வெளியே போயிருக்கேன்னு சொல்றேன், நீ கவலைபடாதே."

"உங்க செல்லம் கொஞ்சல் முடிஞ்சிடுச்சா? இப்போவாவது கிளம்புவோமா?" என்றான் ஷிவா அலுப்புடன்.

"இதென்னடா என் மருமகள் கிட்ட இப்படி அலுத்துக்குற வேலை? ஒழுங்கா பேசு!"

"எல்லாம் என் நேரம்!" என்று மேலும் அலுப்புடன் பதில் சொன்னாலும் லக்ஷ்மிக்கும் அருந்ததிக்கும் இடையில் இருந்த அந்த நல் உறவு அவனுக்கு மிகவும் பிடிக்கத் தான் செய்தது!

9



அருகில் இருந்த சீட்டில் அமர்ந்திருந்த அருந்ததியின் பார்வை தன் மீது அவ்வப்போது பட்டுச் செல்வதை உணர்ந்த போதும் கண்டு கொள்ளாமல் இருந்த ஷிவா, அவள் மீண்டும் அவன் பக்கம்

பார்க்கவும் அவள் பக்கம் பார்த்துப் புன்னகைத் தான்.

''என்ன அப்பப்போ அப்படி ஒரு ஆச்சர்யப் பார்வை பாக்குற?''

''இந்த வண்டி எவ்வளவு பெரிசா இருக்கு! எப்படி இவ்வளவு ஈசியா அதை கட்டுபடுத்தி ஓட்டுறீங்க!''

ஷிவாவிற்கு அருந்ததியின் தயக்கம் பற்றி தெரிந் திருந்ததால், பைக்கை எடுத்து வராமல் மஹிந்திரா ஸ்கார்பியோவை எடுத்து வந்திருந்தான்.

''எனக்கு டிரைவிங் ரொம்ப பிடிக்கும். இந்த வண்டி என்ன, எவ்வளவு பெரிய வண்டியா இருந் தாலும் கண்ட்ரோல் செய்வதெல்லாம் ஜுஜுபி!''

''ஓ!''

அப்பாவித்தனம் மிளிர அவள் சொன்ன அழகில் மயங்கியவன் மேலும் ஒரு சில வினாடிகள் அவளைப் பார்த்து விட்டே ரோட்டின் பக்கம் கண்களைத் திருப்பினான்.

அன்பு என்பது குறைகளை மறக்கடிக்க வைக்கும் தன்மை கொண்டது!

ரோஜாவை ரசிக்கும் கண்கள் அதைச் சுற்றி இருக்கும் முட்களை கண்டுகொள்வதில்லை. அதே போல் முதல் பார்வையிலேயே தன்னை அருந்தது யிடம் இழந்திருந்த ஷிவாவிற்கு அவளிடம் இருந்த எதுவுமே குறையாகப் படவில்லை!

அவளுக்கு ஏற்றாற்போல் தன்னை மாற்றிக் கொள்ளவே அவன் விரும்பினான்.

நான்காம் மாடியில் இருந்த அந்த கடைக்குள் ஜோடியாக நுழைந்தனர் இருவரும். நேரெதிரே இருந்த கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தில் இருவரும் ஜோடியாக தெரிவதைப் பார்த்து ரசித்த அருந்ததிக்கு, அவர்களின் ஜோடிப் பொருத்தத்தை பார்த்து பெருமையாக இருந்தது.

அவளுக்கு வாழ்வில் எல்லாமே இருந்தது, ஆனால் எதுவுமே இல்லை!

சந்தோஷமான வாழ்க்கை அமைந்ததற்கு திருஷ்டிப் பரிகாரமாக தான் அவளுக்கு இந்தத் தயக்கமும், பயமும் ஏற்பட்டு இருக்கிறதா?

அந்தக் கடையில் வேலை செய்யும் பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்த ஷிவாவை பார்த்தவளின் மனம் கனத்தது.

அவள் மனதின் பயத்தை பற்றி ஷிவாவிடமும் கூட சொல்லாமலே இருந்திருக்கலாமோ?

அவள் மனதினுள் கலக்கத்துடன் வாழ வேண்டி இருந்தாலும் அவனாவது சந்தோஷமாக இருந்திருப்பான். இப்போது அவளும் மகிழ்ச்சியாக இல்லை, அவனும் இல்லை!

ஆனாலும் ஷிவாவிடம் மனதில் இருக்கும் எதையும் மறைக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. யாரிடமும் சொல்லாமல் அவள் மனதில்

மறடி வைத்திருந்த அந்த விஷயத்தை அவனிடம் சொன்ன பிறகு தான் அவளின் மனமே ஆசுவாசப் பட்டது!

எத்தனை இயல்பாக அவள் சொன்னதை ஏற்றுக் கொண்டுவிட்டான் அவன்? கோபமில்லை, குற்றம் சாட்டும் பார்வையில்லை! எத்தனை நல்லவன் இவன்?

அவ்வப்போது அவள் பக்கம் பார்க்கும் அந்த காந்தப் பார்வை மட்டும் தான்!

முன் தின இரவில் அவன் அவளைப் பார்த்த பார் வையின் நினைவில், வானமும் மேகமும் இல்லாமல், கடைக்குள்ளேயே அவளுக்காக மட்டும் சில்லென மழை பெய்தது!

''ரதி! ரதி!''

''ஹாங்! என்னங்க?''

ஷிவா இப்போது அவளருகே நின்றிருந்தான்.

இவன்(ர்) எப்போது இங்கே வந்தான்(ர்)?

அவனின் கண்ணில் தெரிந்த சின்ன மின்மினிகள் அவளைக் குழப்பியது!

''எவ்வளவு நேரமா கூப்பிடுறேன், அப்படி என்ன யோசனை?''

''என்ன யோசனை?''

என்ன என்பது ஞாபகம் வரவும், அழகாக முகம் சிவந்தாள் அவள்.

"சார் என்ன வேணும்னு சொன்னீங்கன்னா நான் ஹெல்ப் செய்றேன்."

விற்பனைப் பெண்ணின் குரலில் கடைக்கு வந்த காரணம் நினைவு வரவும், லக்ஷ்மி தந்திருந்த அந்த ஒரு இன்ச் துணியை கைபையில் இருந்து பத்திரமாக வெளியே எடுத்தவள்,

"இந்த கலருக்கு மேட்ச் ஆகுற மாதிரி நூல், பீட்ஸ் வேணும்" என்றாள்.

அடுத்து வந்த அரை மணி நேரம் ஷிவாவிற்கு மனைவியை பார்த்து ரசிக்கும் (சைட் அடிக்கும்) வேலை மட்டுமே இருந்தது!

அவள் பொறுமையாக நூல், ஊசி, முத்துக்கள் என வாங்குவதை வேடிக்கைப் பார்த்தபடி நின்றிருந்தான்.

பணத்தை கட்டி பொருட்களை வாங்கி வெளியே வந்த பின்,

"அந்த ஒன் இன்ச் துணியோட மர்மம் என்ன, என்கிட்டே சொல்ல கூடிய ரகசியம்தானா?" என்றான் ஷிவா ஆர்வமாக.

"ரகசியம் எதுவுமில்லைங்க! அது அக்காவோட புது சாரில இருந்து அத்தை நைசா அவங்களுக்குத் தெரியாமல் கட் செய்துட்டு வந்தது."

"ஓஹோ! உனக்கு அம்மா வேற உடந்தையா?"

"ஆமாம்! நான் கூட தயங்கித் தயங்கி தான் கேட் டேன். ஆனால் அத்தை சந்தோஷமா ஹெல்ப் செய்தாங்க. இனிமேல் சாரிக்கு ஓரம் தச்சுத் தரேன்னு

சொல்லி அக்கா கிட்ட இருந்து வாங்கி சர்தோசி வொர்க் செய்து அவங்களை அசத்த வேண்டியது மட்டுமே பாக்கி!''

மகிழ்ச்சி பொங்க அவள் சொன்ன விதம், அது அவளின் மனதில் பொங்கும் உண்மை சந்தோஷத்தைக் காட்டுவது என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

''என்னவோ போ, அம்மா, அக்கா கூட சேர்ந்து நீ அடிக்குற லூட்டி தாங்க முடியலை. உன் சித்தி கிட்ட பேசினீயா?''

''நேத்து அத்தை பேசினப்போ பேசினேன். உங்களையும் ரொம்ப விசாரிச்சாங்க சொல்ல மறந்துட்டேன்.''

''தட்ஸ் ஓகே! உங்க சித்தப்பா கிட்டேயும் பேசினீயா?''

''ஹூஹூம்மம்ம்ம்.''

''அவர் கிட்டேயும் பேசி இருக்கலாம்ல?''

''நான் எப்போதும் சித்தி கிட்ட தான் பேசுவேன், ஏதாவது வேணும்னாலும் சித்தி கிட்ட சொன்னால், அது சித்தப்பா காதுக்கு போயிடும்.''

அவளை யோசனையோடு பார்த்தவன்,

''ரதி நான் ஒண்ணு கேப்பேன், தப்பா எடுத்துக்க மாட்டீயே'' என்றான் தயக்கத்துடன்.

''உங்களைப் போய் தப்பா நினைப்பேனா கேளுங்க.''

''நீ மட்டும் ஊரில தனியா இருந்தியே, அப்போ உன் கிட்ட யாராவது, தப்பா, மோசமா ஏதாவது.....''

''ச்சேச்சே அதெல்லாம் எதுவுமில்லை. எங்க சித்தப்பா பார்க்க தான் சாதுவா தெரியுறார், அவர் கிட்ட இருக்க அருவாள் பார்த்தீங்களா?''

''அருவாளா?''

''ம்ம்ம்.... பெருசா, கூரா பளபளன்னு இருக்கும்! அடுத்த தடவை ஊருக்கு போறப்போ காட்டுறேன். யாராவது வம்பு பண்ணினால் அவ்வளவு தான்.''

''என்ன செய்வார் சினிமாவில் வர மாதிரி போட்டு தள்ளிடுவாரா?''

''கிட்டத்தட்ட அப்படி தான்.''

''அம்மாடியோ! அவ்வளவு முரடரா உங்க சித்தப்பா? பார்க்க அப்படி அமைதியா இருந்தாரே!''

அவனின் முகத்தை பார்த்து பொங்கிய சிரிப்பை அடக்கியபடி அவனுடன் இணைந்து நடந்தவள், திடீரென நினைவு வந்தவளாக,

''இது எந்த மாடிங்க? இரண்டாவது மாடியில இருக்க இன்னொரு கடைக்குப் போகணும்'' என்றாள்.

''இது தான் இரண்டாவது மாடி, எந்த கடைக்குப் போகணும்?''

''நான் போக வேண்டிய கடைக்குள்ள இப்படி கவரெல்லாம் எடுத்துட்டுப் போக முடியாது. நீங்க இங்கே இந்த சேர்ல உட்கார்ந்திருங்க, நான் சீக்கிரம் போயிட்டு வந்திடுறேன்.''

"நோ நோ! உன்னைத் தனியா அனுப்ப முடியாது."

"ப்ளீஸ்ங்க அஞ்சு நிமிஷத்துல வந்திடுறேன். நான் என்ன சின்னக் குழந்தையா தொலைஞ்சு போக?"

"இல்லை....."

"ப்ளீஸ்."

அவளின் கெஞ்சல் மனதை இளக்க, அரை மனதுடன்,

"சரி" என்றவன், தன்னுடைய மொபைல் போனை அவளிடம் கொடுத்து அனுப்பி வைத்தான்.

பதினைந்து நிமிடங்களில் திரும்பியவளின் கையில் ஒரு பிளாஸ்டிக் கவர் இருந்தது!

அவள் கையில் இருந்த கவரைக் கண்களால் ஆராய்ச்சி செய்தபடி,

"வாங்கியாச்சா? என்ன வாங்கின?" என ஆர்வத்துடன் கேட்டான் ஷிவா.

"சொல்றேன்! வாங்க, கார்ல போய் பேசலாம்" என அமர்த்தலாக பதில் சொல்லியபடி நடந்தாள் அருந்ததி.

பார்க்கிங் இடத்தில் இருந்த காரைக் கிளப்பியவன்,

"எல்லாம் வாங்கியாச்சுல, நேரா வீட்டுக்குப் போகலாமா? இல்லை உனக்கு ஜூஸ், லைட் ஸ்நாக்ஸ் ஏதாவது வேணுமா?" என்றான்.

"வேணாம் வேணாம்! சீக்கிரம் வீட்டுக்குப் போகலாம். அத்தை இன்னைக்கு எனக்குப் பிடிச்ச வெண்டைக்காய் பொரியல் செய்றேன்னு சொல்லி இருக்காங்க."

சிறு எரிச்சலுடன் பார்த்தவன்,

"அக்கா, அம்மா இவங்களை விட்டால் உனக்குப் பேச எதுவுமே இல்லையா?" என்றான் கடுகடுப்பாக.

"வேற என்ன பேசுறது?"

"பேசுறதுக்கு விஷயமா இல்லை? எவ்வளவோ பேசலாம்! நீ மட்டும் தனியா போய் வாங்கிட்டு வந்து இப்போவும் கூட உன் கூடவே பத்திரமா வச்சிருக்கியே அந்த கவர்ல என்ன இருக்குன்றதை பத்தி பேசலாம்."

"அதை பத்தி பேச முடியாது?"

"ஏன்? அப்படி என்ன என்கிட்ட சொல்லக் கூடாத ரகசியம் அதுல இருக்கு?"

"ரகசியம் தான்! ஆனால் நீங்களே வேணா பார்க்கலாம்! இது உங்களுக்காக நான் ஸ்பெஷலா வாங்கின பொருள்..."

"வாட்?"

அவனிடம் கையிலிருந்த கவரை நீட்டினாள் அருந்ததி.

அதை கையில் வாங்கியவன், காரை சாலையின் ஓரம் நிறுத்தினான்.

"என்ன இது ரதி?"

அவனின் குரலில் இருந்த ஆர்வம் இப்போது பலமடங்காக உயர்ந்திருந்தது.

"நீங்களே பிரிச்சு பாருங்க!"

"ஹேய் என்ன நீ, ரொம்ப சஸ்பென்ஸ் வைக்குற?"

பேசியபடி திறந்து பார்த்தவன் அதிசயித்து போனான்! அது ஒரு டிஜிட்டல் பேனா!

"நீங்க எப்போதும் பேப்பர்ல எழுதிட்டு அப்புறமா திரும்ப கம்ப்யூட்டர்ல அதையே டைப் செய்வீங் கன்னு அக்கா சொன்னாங்க. இதை யூஸ் செய்தால், பேப்பர்ல எழுதுறதை அப்படியே கம்ப்யூட்டர்ல பார்க்கலாமாம்....."

"வாவ்! அசத்திட்டடா ரதி! எப்படி இதை கண்டு பிடிச்ச?"

"எனக்கு என்ன தெரியும் இதை பத்தி எல்லாம்! அக்கா ஐடியா கொடுத்தாங்க! இந்த கடை பத்தியும் அவங்க தான் சொன்னாங்க!"

"தேங்க்ஸ்டா! நீ எனக்காக வாங்கினது ரொம்ப சந்தோஷமா இருக்கு."

கண்கள் பளபளக்க, பேசியபடி, தன்னுடைய பழக்க மாக, தலை முடியைக் கோதியவனின் கையைத் தடுத்து, இது என்ன கெட்டபழக்கம் என்று சொல்லி அவனின் கேசத்தை கலைத்து விளையாட வேண் டும் என்ற ஆவலில் அவளின் உள்ளங்கை பரபரத்தது!

ராதிகா யோசனையுடன் அமர்ந்திருந்தாள்.

"என்ன டார்லிங் இல்லாத மூளையை இந்த பாடு படுத்திட்டு இருக்க?"

அக்கறையோடு கேட்டபடி மனைவியின் அருகே உரசியபடி வந்தமர்ந்தான் கௌஷிக்.

''ப்ச்..... க்யூட்டி இல்லாம ரொம்ப போர் அடிக்குது!''

''க்யூட்டியா? அது யாரு பூனைக்குட்டியா? எனக்குத் தெரியாம பூனை வேற வளக்குறீயா நீ?''

''ப்ச்! நான் அருந்ததியைச் சொல்றேன்!''

''ஓ! புது மருமகள்!''

''ஷீ இஸ் வெரி ஸ்வீட் கௌஷி.''

''உன்னை விட ஸ்வீட்டா இருக்கவே முடியாது டார்லிங்!''

''ப்ச் சும்மா கலாய்க்காதீங்க. அவகிட்ட பேசுனீங்கள்ள உங்களுக்கும் தெரிஞ்சிருக்கணுமே.''

''எனக்கு தெரிஞ்ச வரை, அன்னைக்குச் சாப்பிடும்போது ஏதோ ஒன்று இரண்டு வார்த்தை சொன்னது மட்டும் தான் அருந்ததி என்கிட்டே பேசினது.''

''ரியல்லி?''

''ஆமாம்! சரி இன்னைக்கு உன்கிட்ட சொல்லாம அப்படி எங்கே போனா?''

''ஷிவா வெளியே அழைச்சிட்டுப் போனானாம்.''

''அப்பாடியோ! இப்பவாவது அவனுக்கு புத்தி வந்துச்சே!''

''ஹலோ, நானே அவன் என்கிட்ட சொல்லாமல் அவளை கூட்டிட்டுப் போயிட்டான்னு கடுப்புல இருக்கேன், நீங்க வேற இன்னும் கடுப்பேத்தாதீங்க.''

''உனக்குக் கல்யாணமாகி ஆறு வருஷமாச்சுன்னு சொன்னால் யாராவது நம்புவாங்களா?''

''ஏன்?''

''புதுசா கல்யாணமானவங்க அவங்களுக்குள்ள தானே டைம் ஸ்பெண்ட் செய்ய ஆசை படுவாங்க? அவங்க ஏன் ஹனிமூன் போகாம இருக்காங்கன்னு தெரியலை. பட் நீ இப்படி உன் தம்பிக்கும் அருந்த திக்கும் நடுவில நந்தி போல இருந்தா அவன் உன் கிட்ட சொல்லிட்டு எப்படி அவளை அவுட்டிங் அழைச்சிட்டு போவான்?''

''ப்ச்.....''

''அவனாவது ஸ்மார்ட்டா வேலை செஞ்சு தப்பிச் சிட்டான். உண்மையில் இங்கே பாவப்பட்ட ஜீவன் நான் தான்! உன்னை போல ஒரு மக்கு பொண்ணை வைச்சுட்டு.''

''வாயை மூடுங்க! அடி வாங்க போறீங்க.''

''இந்த மிரட்டலுக்கு ஒரு குறைச்சலும் இல்லை.''

''வேற எதில குறை வச்சேன்?''

''இது நியாயமான கேள்வி! வேற எதுல குறை? செல்லம் கொஞ்சுறதுல தான் குறை! உன் தம்பிக்கு கல்யாணம் ஆச்சோ இல்லையோ, அவன் அவனோட அருந்ததி பின்னாடி சுத்துறானோ இல்லையோ, நீ எப்போ பாரு அருந்ததி புராணம் தான் பாடிட்டு இருக்க, இந்த பாவப்பட்ட கௌஷிக் ஞாபகமாவது உனக்கு வந்துச்சா?''

கணவனைப் பார்த்து ஒரு முறை முறைத்தவள்,

"இன்னைக்கு வொர்கிங் டே ஆச்சே, நீங்க ஏன் இன்னும் வீட்டுல இருக்கீங்க, கிளம்புங்க ஆபீஸ் போங்க."

"காலையிலேயே அம்மா போன் செய்து மூட் ஆப் செய்துட்டாங்க."

"....."

எதை பற்றி பேசி இருப்பார்கள் என்பது தெரிந் திருந்தபடியால் ராதிகா அமைதியாக இருந்தாள்.

எப்போதும் கல கலவென இருக்கும் மனைவியின் முகத்தில் தெரிந்த சின்ன வருத்தத்தையும் தாங்க முடியாமல், அவளை மாற்றும் முயற்சியில் ஈடுபடத் துவங்கினான் கௌஷிக்.

"இப்போ கிளம்பலாம்னு தான் இருந்தேன்..... லஞ்ச் பத்தி பேச தான் உன் கிட்ட வந்தேன்..... ஆனால் இப்போ....."

"இப்போ என்ன ஒண்ணும் குறைஞ்சு போகலை, லஞ்ச் வெளியே வாங்கி சாப்பிடுங்க, கிளம்புங்க!"

"நோ வே! நான் மனசை மாத்திட்டேன், இன் னைக்கு ஆபீசுக்குப் போகப் போறதில்லை!"

"அப்புறம்?"

இரண்டு உள்ளங்கைகளையும் தேய்த்த படி அவளை ஒரு பார்வை பார்த்தவன்,

"அப்புறம்....." என்று சொல்லி முடிக்காமல் இழுத்த படி மேலும் அவளை உரசியபடி அமர்ந்தான்.

"ப்ச்... போங்க.... ஆபீஸ்ல வேலை இருக்கும் கிளம்புங்க, ஈவ்னிங்....."

"நோ நோ நோ! அப்படி எதுவும் சொல்லி எஸ்கேப் ஆக முடியாது என் செல்லக்குட்டி! எல்லா வேலையும் தள்ளிப் போடலாம்! ஷிவா கல்யாணத்தை சொல் லியே என்னை காயப் போட்டு வருத்தெடுத்துட்ட. இன்னைக்கு மாட்டின."

"ப்ச்.... போடா....."

"அத்தை! அத்தை! இங்கே இருக்கீங்களா? எல்லாம் வாங்கியாச்சு. இனி...."

அப்போது தான் லக்ஷ்மியின் முகம் வித்தியாசமாக இருப்பதை கவனித்த அருந்ததி,

"என்ன ஆச்சு அத்தை? முகம் டல்லா இருக்கு? உடம்பு ஏதாவது சரியில்லையா?" என்றாள் அக்கறை யுடன்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை அருந்ததி! ஷிவா எங்கே?"

"அவர் என்னை இறக்கி விட்டுட்டு ஆபீஸ் போயிட் டார். உங்களுக்கு என்ன செய்யுது? டாக்டர் கிட்ட போகணுமா? நான் ஆட்டோ பிடிச்சுட்டு வரட்டுமா?"

"இல்லைம்மா, அதெல்லாம் எதுவும் வேண்டாம். எப்போதும் வர B.P.யா இருக்கும். கல்யாண வேலைக்கு நடுவுல நான் சரியா மாத்திரை சாப்பிடலை."

"அப்போ கூட இப்போ B.P. ஏறுற மாதிரி என்ன நடந்துச்சு?"

"ராதிகாவோட மாமியார் போன் பேசினாங்க, அதுவே போதாதா B.P ஏற?"

"ஏன் அத்தை ஏதாவது பிரச்சனையா?"

"பிரச்சனைன்னு தேடினால் கண்டுபிடிக்கவா முடியாது? ராதிகாவுக்கு குழந்தை இல்லைன்னு குத்தி காட்டுறதை தவிர அவங்களுக்கு வேற வேலை யில்லை. பாவம் அவள், இன்னும் எத்தனை நாள் அவங்களோட பேச்சை கண்டும் காணாமலும் இருக்க போறாளோ?"

"கவலைப்படாதீங்க அத்தை, சீக்கிரமே அக்காக்கு அவங்களை போலவே அழகா பாப்பா பிறக்க தான் போகுது!"

"உன் வாய் முகூர்த்தம் பலிக்கட்டும்மா! வேண்டிய எல்லா பொருளும் கிடைச்சுதா?"

"எல்லாம் கிடைச்சுது அத்தை... அக்கா கிட்ட இன்னைக்கு சாரியை வாங்கி வேலையை ஆரம்பிக்க வேண்டியது தான் பாக்கி!"

"அப்புறம் அருந்ததி, நீங்க கடைக்கு போயிருந் தப்போ ஷிவாவோட பிரெண்ட் குடும்பத்தோட வந்திருந்தார். கல்யாணத்துக்கு வர முடியலையாம், அதனால பார்த்து விஷ் செய்ய வந்திருந்தார். வேலை இருக்குன்னு உடனே கிளம்பிட்டாங்க. இந்த கார்டை அப்புறமா ஷிவா கிட்ட கொடுத்து போன் செய்து பேச சொல்லு."

"சரி அத்தை" என்றபடி அந்த விசிட்டிங் கார்டை கையில் வாங்கி பார்த்தாள் அருந்ததி.

அதில் இரண்டு பெயர்களுடன் விலாசமும் இருந்தது.

Dr. சூர்யா எம்.டி நியூராலஜிஸ்ட், Dr. கீதா எம்.டி கன்சல்டன்ட் சைக்கியாட்ரிஸ்ட்.

சைக்கியாட்ரிஸ்ட் என்பதை பார்த்தவளின் மனதில் மின்னல் வெட்டியது!

மாடிக்குச் சென்றவள் சற்று யோசித்து விட்டு, போனில் டாக்டர் கீதாவின் தொலைபேசி எண்ணை அழுத்தினாள்!

10



அந்தப் பக்கம் ரிங் போனதே தவிர யாரும் எடுக்க வில்லை.

இறுதியில்,

"The subscriber you are trying to reach is currently not able to accept your call. Please try again later."

என்ற பதிவு செய்யப்பட்ட பெண் குரல் கேட்டது.

ஏமாற்றத்துடன் அவள் ரீசிவரை கீழே வைக்கும் போதே,

"ஹேய் க்யூட்டி, சொல்லாமல் கொள்ளாமல் காலை யிலேயே எங்கே போயிட்ட?" என்ற ராதிகாவின் உற்சாகக் குரல் கேட்டது.

அதே உற்சாகத்துடன் ராதிகா பக்கம் பார்த்த அருந்ததிக்கு ராதிகாவிடம் ஏதோ வித்தியாசம் தெரிந்தது. அவள் என்ன என்று ஆராய்ச்சி செய்ய,

"நான் இந்த மன்டேவே வேலையில ஜாயிண் செய்திருப்பேன். ஷிவா நீ இங்கேயே இருக்க போறேன்னு சொன்னதால உனக்கு கம்பனி கொடுக்க தான் நான் லீவ் எக்ஸ்டெண்ட் செய்தேன். நீ என்னடான்னா....."

பேசிக் கொண்டே போனவள் அருந்ததியின் கேள்வி மின்னும் முகத்தைப் பார்த்து விட்டு,

"என்ன அப்படி பார்க்குற?" எனக் கேட்டாள்.

"இல்லை, உங்ககிட்ட என்னவோ இன்னைக்கு வித்தியாசமா இருக்கு... பேஷியல் ஏதாவது செஞ்சீங்களா என்ன?"

"நானா? நான் பயூட்டி பார்லர் பக்கம் கூட போனதில்லை. எப்போவாவது அம்மா கிட்ட பாலாடை வாங்கி முகத்தில போடறதோட சரி!"

ராதிகா பேசி முடித்த நேரம், கீழே இருந்து கௌஷிக்கின் குரல் கேட்டது,

"நான் ஹெல்ப் செய்றேன், நீங்க அங்கேயே வைங்க ஆன்ட்டி."

"ஓஓஓஓஓஓ இன்னைக்கு அண்ணாவும் லீவா?" என்றாள் அருந்ததி கேலி மின்ன!

ராதிகா எப்போதும் போல் பட்டென்று எதையோ சொல்லப் போகிறாள் என்று எதிர்பார்ப்புடன் அவள் பார்க்க ராதிகாவின் முகமோ அழகிய சிவப்பு நிற ரோஜாவாக மாறிப் போனது...

அவள் நிறம் மாறிய அழகை பார்த்து அருந்ததிக்கு சிரிப்பு வந்தது.

''ம்ம்ம்மம்ம்ம்..... நீங்க என்னை ரொம்பவே மிஸ் செய்திருக்கீங்க தெரியுது.''

''ஹேய், என்ன நீ என்னைக் கிண்டல் செய்ற?''

''பின்னே!!! உங்க முகத்தில் எப்படி இப்படி ரோஜாப்பூவா மின்னுதுன்னு இப்போ தானே தெரி யுது! அண்ணா ஸ்மார்ட் தான்.''

''நீ இவ்வளவு பேசுவீயா??? சரியான வாயாடியா மாறிட்டு வர! நீ நினைக்குற மாதிரி எல்லாம் எதுவும் இல்லை.''

''நான் என்ன நினைச்சேன், எதுவுமே நினைக்கவே இல்லையே.''

''சரிங்க மேடம் நீங்க எதுவுமே நினைக்க வேண் டாம், இப்போ வரீங்களா, சாப்பிடப் போவோம்? அடடா மறந்து உன்னைப் போய் கூப்பிடுறேன் பாரு!''

''ஏன், என்னை கூப்பிட்டா என்ன?''

''உனக்கு சாப்பிடப் போறதுக்கு முன் எத்தனை முக்கியமான வேலை எல்லாம் இருக்கு? ஷிவாக்கு போன் செய்யணும், செல்லம் கொஞ்சணும், சாப்பிட் டாச்சா கேட்கணும்! அவர்ர்ர் சாப்பிடாம நீங்க சாப் பிடுவீங்களா?''

''ஆனாலும் கூட நான் அவரை ஆபீசுக்காவது அனுப்பி வைக்குறேன். உங்களை மாதிரி சாரில கட்டிப் போட்டு வச்சுக்கலையே! வாங்க வாங்க

போகலாம், அண்ணா பாவம், உங்களை காணு மேன்னு தேடித் தேடி துரும்பா இளைச்சுப் போக ஆரம்பிச்சிருப்பார்.''

செல்லமாக அருந்ததியின் காதைத் திருகிய ராதிகா,

''வாயாடி! என்ன பேச்சு பேசுற நீ!!! வெளியே சொன்னால் யாராவது நம்புவாங்களா? சரி அதெல் லாம் அப்புறம், இப்போ பசிக்குது வா வா போகலாம்.''

''நிஜமாகவே சாப்பிட போக தானே கூப்பிடு றீங்க?''

''நீ உதை வாங்கப் போற!''

இருவரும் உணவறைக்கு வந்த போது கௌஷிக்கும் லக்ஷ்மியும் மதிய உணவுக்கான உணவுகளை மேஜை மீது எடுத்து வைத்திருந்தனர்.

''பசி பசின்னு சொல்லிட்டு எவ்வளவு நேரம் ராது செல்லம்? வா வா எல்லாம் ரெடியா இருக்கு வா.''

சின்ன கேலிச் சிரிப்புடன் ராதிகாவைப் பார்த்துக் கண் சிமிட்டிய அருந்ததி, ராதிகா மெலிதாக வெட்கப்படு வதைப் பார்த்துச் சிரித்தாள்.

ராதிகா அமர்ந்திருந்த நாற்காலிக்கு அருகிலேயே அமர்ந்து கொண்டு அவ்வப்போது அவளிடம் எதை யாவது பேசியபடி இருந்தான் கௌஷிக்!

லக்ஷ்மியை போலவே இங்கிதமாக அவர்களை கண்டு கொள்ளாமல் அமைதியாக தன் தட்டில் இருந்த உணவை உண்டாலும், அருந்ததியின் மனதில் என்னவென்று சொல்ல முடியாத ஏக்கம் ஏற்பட்டது!

கணவன் மனைவி உறவு என்பது என்ன மாதிரி யான உறவு?

தாய்மை, நேசம், பாசம், அன்பு, அரவணைப்பு, காதல், காமம் என எல்லாமே கலந்தது.

ஷிவா அன்புடன் அவளின் தலையை வருடிய நினைவில் அவளுக்கு மட்டுமாக பூமழை பொழிந்தது.....

நிச்சயதார்த்தத்தில் அவன் அவளைப் பார்த்த பார் வையின் வேகத்தில் இப்போதும் அவளுக்கு வெட்க மாக இருந்தது....

திருமண நாளின் இரவில்.....!

மேலே நினைக்க கூடாமல் அவளின் மனதில் சில்லென்ற ஒரு வித கலக்கம் தோன்றியது! அதை பயம் என்றும் சொல்ல முடியவில்லை, தயக்கம் என்றும் சொல்ல முடியவில்லை! என்ன என்றே சொல்ல முடி யாத கலக்கம்!

முதல் நாள் ஷிவா அவளை முத்தமிட்டது முதல் தோன்றிய கலக்கம்.....

ஷிவாவை அவளுக்கு மிகவும் பிடித்திருக்கிறது, அப்புறம் ஏன்.....

"அருந்ததி!!!!!"

ராதிகாவின் கிட்டத்தட்ட அலறும் குரலில், நிமிர்ந்து பார்த்தவள், மற்ற மூவரும் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதை புரிந்து கொண்டு, என்ன விஷயம் என்று தெரியாமல் விழித்தாள்!

"ஆரம்பிச்சிட்டீயா உன்னோட எக் ஐ லுக்கை? அடியே அருந்ததி! இப்படி முட்டை கண்ணு லுக் விட்டு தானே சாமியாரா இருந்த என் தம்பி ஷிவாவை இப்படி மாத்தி வச்சிருக்க?"

அருந்ததி திரைப்பட பாணியில் ராதிகா பேசிய வசனத்தில் மற்றவர்கள் சிரிக்க, அருந்ததியும் மெல்ல இயல்புக்கு திரும்பினாள்!

கௌஷிக் கை கழுவ எழுந்து செல்ல, லக்ஷ்மியும் சமையலறைக்குச் சென்றாள்.

ராதிகாவிடம்,

"சாரி என்ன கேட்டீங்க? எதோ யோசிச்சிட்டு இருந்தேன்" என்றாள் அருந்ததி.

"பின்னே! கல்யாணமாகி ஒரு வாரம் ஆன பொண்ணை இப்படி ஹீரோவை விட்டுப் பிரிச்சு வில்லன் வில்லி மாதிரி நாங்க பக்கத்தில இருந்தா வேற எப்படி இருக்கும்?"

"ஒரு வாரம் ஆனா பரவாயில்லை, ஆறு வருஷம் கழிச்சும் அதே போல இருக்கவங்களை என்ன செய்றது?"

"சும்மா டீஸ் செய்யாதே க்யூட்டி! எனக்கு வெட்கம் வெட்கமா வருது."

அருந்ததி சத்தம் எழுப்பாமல் அழகாக சிரித்தாள்.

"இன்னைக்கு கொஞ்சம் மூட் அவுட்ல இருந்தேன் க்யூட்டி. என்னை சமாதானப் படுத்துறதுக்காக அவர் வீட்டில இருக்கார். லீவ் இல்லை, வீட்டில இருந்தே வேலை செய்வார்."

"ம்ம்ம்ம்..... என்ன வேலை செய்தாருன்னு உங்களை பார்த்தாலே தெரியுதே!"

"வாலு! நீ அடங்க மாட்டீயா?"

"சரி என்ன மூட் அவுட் உங்களுக்கு? அதை சொல்லுங்க."

"ப்ச்..."

"சொல்லுங்க! யாரு அது உங்களை மூட் அவுட் ஆக வச்சது?"

"தெரிஞ்சா என்ன செய்வ?"

"ஏதாவது செய்வேன், நீங்க முதல்ல விஷயத்தை சொல்லுங்க."

"பெரிசா எதுவுமில்லை க்யூட்டி. காலையில அவரோட அம்மா போன் செய்து பேசினாங்களாம்....."

"ஆமாம் அத்தை கிட்டேயும் பேசினாங்கன்னு சொன்னாங்க."

"ஹூம்ம்ம்ம்.... எங்களுக்கு குழந்தை இல்லைன்றது எனக்கு கஷ்டமா இருக்காதா என்ன? எப்போ பாரு அதை பத்தியே பேசுவாங்க. அவங்களால எங்கேயும் போக முடியலையாம், எங்கே போனாலும் இன்னுமா கௌஷிக்குக்கு குழந்தை இல்லைன்னு எல்லாரும் கேட்குறாங்களாம்..... அந்த டாக்டர் கிட்ட போ, இந்த டாக்டர் கிட்ட போ..... டெஸ்ட் ட்யூப் பேபி பெத்துக்கோ இப்படி எப்போ பாரு ஒரே அட்வைஸ் மழை....."

"அவங்க சொன்னா சும்மா கேட்டுக்க வேண்டியது தானே?"

"எத்தனை நாளுக்கு அருந்ததி? ஒரு நாள்? ஒரு மாசம்? ஒரு வருஷம்? அஞ்சரை வருஷமா இதையே தான் சொல்றாங்க! இப்படியே தான் பேசுறாங்க அவங்க ஆதங்கம் எனக்கு புரியுது, ஆனால் நான் என்ன செய்ய?"

"விடுங்க, நான் வேற....."

"இல்லை பிரச்சனை குழந்தை இல்லாதது இல்லை, அது என்னவோ அவங்களுக்கு முதல்ல இருந்தே என்னை அவ்வளவா பிடிக்காது. அவங்க சொந்தத் தில ஒரு பொண்ணை பார்த்து வச்சிருந்தாங்களாம். இப்போ இந்த பேச்சுக்கு நடுவில அந்த பொண் ணுக்கு கல்யாணமான ஒரே வருஷத்தில ட்வின்ஸ் பிறந்த கதையை வேற கேட்க வேண்டி இருக்கு.... எவ்வளவு நேரம் தான் வலிக்காத மாதிரி காட்டிக்குறது? நான் இப்போல்லாம் அவங்க கால் அட்டென்ட் செய் றதே இல்லை. அதனால தான் அப்பப்போ அம்மா கிட்ட, இவர் கிட்ட போன் செய்து குற்றப் பத்திரிக்கை வாசிக்குறாங்க."

"அவங்க எங்கே இருக்காங்க?"

"தூத்துக்குடில இருக்காங்க. கௌஷிக்கோட தம்பி பேமிலி அங்கே இருக்காங்க."

"ஓ! விடுங்க எல்லாம் சரியாகிடும்!"

"என்னவோ....."

''நீங்க ஏன் நல்ல டாக்டரை போய் பார்க்கக் கூடாது?''

நீயும் ஏன் இப்படி பேசுகிறாய் என்பது போல் பார்த் தாள் ராதிகா.

''என் கூட காலேஜுல படிச்ச பிரெண்ட் ஒருத்தி டாக்டர் கிட்ட போய் கன்சல்ட் செய்தப்போ, அவ ளுக்கு எந்த பிரச்சனையும் இல்லைன்னு சொல்லி, வெறும் டானிக் தான் கொடுத்தாங்க. அதை கேட்டே மனசில பாதி பாரம் குறைஞ்சிடுச்சுன்னு சொன்னாள்.''

''ப்ச்.....''

''ஏன் இப்படி அடம் பிடிக்குறீங்க?''

''ஒருவேளை ஏதாவது பிரச்சனைன்னு தெரிஞ்சா என்ன செய்றது?''

''அதுக்கு வேண்டிய ட்ரீட்மென்ட் எடுத்துக்க வேண்டியது தான், வேற என்ன?''

''ம்ம்ம்ம்ம்.....''

''என்னன்னு தெரியாமா குழம்பிட்டு இருக்குற துக்கு, டாக்டர் கிட்ட போய் பேசி என்னன்னு தெரிஞ் சுக்குறதுல தப்பில்லையே.''

''நீ சொல்றதும் சரியா தான் இருக்கு.''

கௌஷிக் ஹாலில் இருந்து குரல் கொடுத்தான்.

''ராது, வீட்டுக்கு கிளம்பலாமா?''

''வரேங்க....'' என்ற ராதிகா, அருந்ததியின் கேலி மின்னும் பார்வையை பார்த்து விட்டு, ஆட்காட்டி

விரலை உயர்த்தி பத்திரம் என சைகை செய்து விட்டு எழுந்தாள்.

''சரிம்மா நான் கிளம்புறேன்...'' சமையலறை பக்கம் பார்த்து குரல் கொடுத்தாள் ராதிகா.

சமையலறையில் இருந்து வெளியே வந்த லக்ஷ்மி,

''ராதிகா, உன் புது சாரிக்கு ஓரம் தைக்கணும்னு சொல்லிட்டு இருந்தியே, தச்சாச்சா?'' எனக் கேட்டாள்.

''இல்லைம்மா.''

''தாங்க, நான் தச்சு தரேன்'' என்றாள் அருந்ததி.

''உனக்கு ஏன் இந்த வேண்டாத வேலை க்யூட்டி?''

''இதுல என்ன இருக்கு? என்கிட்ட கொடுங்க நான் தச்சு தரேன்.''

''சரி ஈவ்னிங் வரும் போது எடுத்துட்டு வரேன்.''

''நானும் இப்போ உங்க வீட்டுக்கு வரேன் என் கிட்ட கொடு, அவளுக்கு போர் அடிக்கும் போது அவ ஸ்டிச் செய்வாள்ல.''

''சரி வாங்க!''

அருந்ததியும் லக்ஷ்மியும் ரகசியமாகப் பார்த்து தங்களின் மகிழ்ச்சியை பகிர்ந்துக் கொண்டார்கள்.

அருந்ததி மும்முரமாக ராதிகாவின் சேலையில் எம்ப்ராயிடரி செய்வதை ரகசியமாக பார்த்து ரசித்துக் கொண்டிருந்த ஷிவா, தொலைபேசி ஒலிக்கவும் மனமே இல்லாமல் மனைவியை விட்டு பார்வையை திருப்பி ரீசிவரை எடுத்தான்.

"ஹலோ, ஷிவா ஹியர்."

"டேய் ஷிவா எப்படிடா இருக்க? நான் சூர்யா பேசுறேன்டா."

"டேய் மச்சான் நான் நல்லா இருக்கேன்டா! நீ எப்படி இருக்க?"

"சூப்பரா இருக்கேன்டா! ஏண்டா கல்யாணத்துக்கு வரலை?"

"ஒரு முக்கியமான கேஸ் இருந்துச்சுடா. காலை யிலே வீட்டுக்கு வந்திருந்தேன், உன்னை தான் பார்க்க முடியலை."

"ஆமாம்டா மச்சான் உன்னை மிஸ் செய்துட்டேன். திரும்ப எப்போ மீட் செய்யலாம்?"

"நான் பெங்களூர்வாசிடா! உன் வீட்டில இருந்து நேரா பெங்களூர் கிளம்பியாச்சு. வீட்டுக்கு வந்தப் புறம் தான் உன் கால் பார்த்தேன். ஏண்டா கீதா நம் பருக்கு கால் செய்த?"

"காலா? நான் செய்யலையே."

"இதே நம்பர்ல இருந்து தான் கால் வந்திருந்தது."

"தெரியலையேடா, அம்மா எதுக்காவது கால் செய் திருக்கலாம்."

"சரி அதை விடு, அது முக்கியமில்லை. நாம எப்போ மீட் செய்யலாம்?"

"நீ பெங்களூர், நான் சென்னை! நினைச்ச நேரம் மீட் செய்ய முடியுமா? பார்ப்போம்."

"டேய் மாப்பிளை என் கிட்டேயே கதை விடற பார்த்தியா? இந்த வீகென்ட் நீங்க எல்லோரும் பெங்களூர் வரதா அம்மா சொன்னாங்க."

"ஆமாம்டா வீடை காலி செய்யணும் அப்புறம் ஆபீசில் கொஞ்சம் பார்மாலிட்டி இருக்கு.... டைம் இருக்காதுடா மச்சான்."

"மவனே இங்கே வந்துட்டு இப்படி கதை எல்லாம் சொல்லி தப்பிக்கலாம்னு ப்ளானா? அதெல்லாம் நடக்காது."

"வந்த உடனே என்ன போன்ல பேச்சு, எனக்கு ஹெல்ப் செய்ங்க வாங்க..."

சூர்யாவின் அருகே பெண் குரல் ஒலித்தது.

"டேய் மச்சான் உன் பாஸ் கூப்பிடுறாங்க போ போ போய் ஹெல்ப் செய்டா."

"நீ பெங்களூர் வந்தப்புறம் கால் செய் நாம பேசலாம், ஓகே?"

"ஓகேடா."

தனிக்காட்டு ராஜாவாக சுற்றிக் கொண்டிருந்த நண்பன் மனைவியின் குரலைக் கேட்ட உடனே தொலைபேசியை வைத்து விட்டுச் சென்றதை நினைத்து சிரித்துக் கொண்டான்.

சூர்யா என்ன அவனே கூட அப்படித் தானே!

தானாக அருந்ததி பக்கம் பார்த்தவன், அவள் தன்னை தான் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என் பதை தெரிந்து கொண்டு ஆச்சர்யப்பட்டான்.

கணவனை ரகசியமாக பார்ப்பதை அவன் பார்த்து விட்டான் என்ற உணர்வில் உதடுகளை கடித்துக் கொண்டு தலையை குனிந்துக் கொண்டாள் அருந்ததி.

அவளின் அந்த வெட்கத்தை, அந்த வெட்கப் படும் அழகை பார்த்து ரசித்தபடி நின்றான் ஷிவா.

குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக காரில் பெங்களூருக்கு பயணம் செய்தது மிகவும் இனிமை யான அனுபவமாக இருந்தது.

அவர்கள் அப்படி குடும்பத்துடன் 'லாங் டிரைவ்' காரில் செய்வது வழக்கம் தான். ஷிவா, கௌஷிக், நாதன் மூவருக்கும் காரை ஓட்டுவதில் ஆர்வம் இருந்தது. அதனால் மூவரும் மாறி மாறி காரை ஓட்டும் வேலையை பகிர்ந்துக் கொள்வதால் எப்போதும் ஒருவருக்கும் அலுப்பு தெரியாமல் இருக்கும்.

முதல் முறையாக மனைவியுடன் இது போல் லாங் டிரைவ் செல்வதால் ஷிவாவிற்கு அவளை இம்ப்ரஸ் செய்யும் வேலையும் கூடுதலாக இருந்தது.

அவன் அப்படி செய்தவற்றை கண்டுபிடித்து கேலி செய்வது ராதிகாவின் முக்கிய வேலையாக இருந்தது.

கலகலப்பாக பேசியபடி, இரண்டு மணி அளவில் பெங்களூருவை அடைந்தவர்கள், ஷிவாவின் வாடகை வீடு இருந்த பகுதியில் இருந்த ஹோட்டலில் மதிய உணவை முடித்துக் கொண்டனர்.

ஹோட்டலை விட்டு வெளியே வரும் பொழுது,

"ஹலோ ஷிவா" என்ற பெண் குரல் கேட்டது.

அங்கே அஸ்வினி நின்றிருந்தாள்.

"இவங்க என் கொலீக்" என ஷிவா பொதுவாக அறிமுகப் படுத்தவும், மற்றவர்கள் ஒரு சின்னப் புன்னகையை பகிர்ந்துக் கொண்டு கார் பக்கம் சென்றார்கள்.

"எப்படி இருக்கீங்க ஷிவா?"

"நல்லா இருக்கேன் அஸ்வினி. ஆபீஸ் போகலையா நீங்க?"

"பிரெண்ட்ஸ் கூட லஞ்ச்க்கு வந்தேன். பை தி வே கங்கிராட்ஸ்! சாரி கல்யாணத்துக்கு வர முடியலை."

"இட்ஸ் ஓகே, தேங்க்ஸ் பார் யுவர் விஷஸ்."

"எங்கே உங்க வைப்? எனக்கு இன்ட்ரோ செய்ய மாட்டீங்களா?"

"ஷூயர்! அதோ அந்த பிங்க் சாரீல இருக்குறது தான் என் வைப்."

ஷிவா சுட்டிக் காட்டிய திசையில் பார்த்த அஸ்வினிக்கு சின்னதாக பொறாமை ஏற்பட்டது.

அருந்ததி ராதிகாவுடன் எதோ பேசிக் கொண்டிருந்தாள்.

சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததால் அவளின் கண்ணிலும் மகிழ்ச்சி மின்னல்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தது!

காற்றில் நெற்றியில் விழுந்த முடிக் கற்றையை ஒதுக்கியபடி அவள் பேசுவதை கவனித்த அஸ்வினிக்கு

அவளின் அழகின் மீதும், சிரிப்பின் மீதும், முகத்தில் இருந்த மகிழ்ச்சியின் மீதும் ஏனோ கோபம் ஏற்பட்டது!

ஷிவா பக்கம் பார்த்தவள், அவன் மனைவியை இமைக்கவும் மறந்து பார்த்து ரசித்துக் கொண்டிருப்பதைக் கவனித்தாள்!

மனதில் சின்னப் பொறியாக தோன்றி இருந்த பொறாமை கணல் ஜுவாலையாக மாறி வீசத் துவங்கியது!

11



ஷிவா, அஸ்வினி இருவரும் தன்னை பார்ப்பதை உள்ளுணர்வில் உணர்ந்ததாலோ என்னவோ, அருந்ததி அவர்கள் நின்றிருந்த பக்கம் பார்த்தாள்.

கணவனின் பார்வையில் தானாக அவளின் முகத்தில் மெல்லிய வெட்கம் தோன்றியது.

"ரதி, இங்கே வா, அஸ்வினி உன்னோட பேசணுமாம்!" என்றான் ஷிவா.

தன்னுடைய அழகிய மனைவியை மிக அருகில் பார்க்கும் ஆர்வம் அவனுக்கு!

இவள் பெயர் ரதியா? ஷிவா கொடுத்த பத்திரிகையில் வேறு பெயர் இருந்ததோ? தன்னுள் கேள்வி கேட்டுக் கொண்டாள் அஸ்வினி.

அருந்ததி ராதிகாவிடம் சொல்லி விட்டு ஷிவாவும், அஸ்வினியும் நின்றிருந்த இடத்திற்கு வர,

''ரதி, நான் சொன்னேன்ல, இவங்க என்னோட வேலை செய்றவங்க. பேர் அஸ்வினி! அஸ்வினி இது தான் என் வைப் அருந்ததி'' என்று இருவரையும் மீண்டும் அறிமுகம் செய்தான் ஷிவா.

மனதில் பூத்திருந்த வெட்கத்தினால் லேசாக செம்மை படர்ந்திருந்த அருந்ததியின் முகத்தை விட்டு விழிகளைத் திருப்ப முடியாமல் நின்றான் அவன்.

ஓ! அருந்ததியின் செல்லச் சுருக்கமா, ரதி!!!

அஸ்வினிக்கு ஷிவாவின் மீது இப்போது பெரிதாக நாட்டமோ ஆர்வமோ இல்லை என்ற போதும், அவனின் இந்த 'வழிசல்களும்' அருந்ததியின் முகத்தில் மின்னிய மகிழ்ச்சியும் ஏனோ அவளுக்கு வயிற்றெரிச்சலைக் கொடுத்தது.

தான் வயிற்றெரிச்சலுடன் இருக்கும் போது இன்னொருவர் மகிழ்ச்சியுடன் இருப்பதா?

அருந்ததியின் முகத்தில் இருக்கும் அந்தச் சிரிப்பை நிறுத்த வேண்டும் என அவளின் மனதினுள் இருந்த பொறாமை எனும் சாத்தான் ஆணையிட்டது!

தன் எதிரில் நின்றிருந்தவளின் மனதை அறியாதவளாக, அழகாக கரங்களை குவித்து,

''வணக்கம்ங்க'' என்றாள் அருந்ததி.

இந்தக் காலத்திலும் இப்படி எல்லாம் வணக்கம் சொல்லும் ஆட்கள் இருக்கிறார்களா? சரியான பட்டிக்காடு தான் போலும்!!!

''ஹலோ! ஷிவா கல்யாணம்ன்னு சொன்னதும் எங்க எல்லோருக்கும் ரொம்ப ஆச்சர்யமா இருந்தது. இப்போ உங்களைப் பார்த்த உடனே, நீங்க சொன்ன இந்த வணக்கத்தை கேட்ட உடனே விஷயம் புரிஞ்சு போச்சு. உங்களை பார்த்து இவர் தலை சுத்தி விழுந்திருப்பாரே? சிம்பிளா, ஆனால் ரொம்ப அழகா இருக்கீங்க.''

போலியாய்ச் சிரித்து, பொய்யாகப் புகழ்ந்தாள் அஸ்வினி.

ஏற்கனவே ஷிவாவின் பார்வையினால் பூரிப்பும், வெட்கமுமாக நின்றிருந்த அருந்ததி, அஸ்வினியின் அந்தப் பொய்யான புகழ்ச்சியை உண்மை என்று நம்பிச் சிரித்தாள்.

ராதிகாவுடன் பேசிக் கொண்டிருந்த கௌஷிக், ஷிவா பக்கம் திரும்ப,

''ஷிவா, க்ளீன் செய்ய துடைப்பம் அது இது எல்லாம் வீட்டில இருக்கா?'' என்றான்.

''ம்ம்ம்..... தெரியலையே.....''

''நான் தான் சொல்றேன்ல ராது, ஷிவா பேச்சிலரா இருந்தப்போ தங்கி இருந்த வீடு. துடைப்பம் எல்லாம் இருக்க சான்சே இல்லை.'' என்று மனைவி யிடம் சொன்ன கௌஷிக், சிவாவிடம்,

''சரி ஷிவா நாங்க பக்கத்தில் இருக்க மால்ல போய் வேண்டியது வாங்கிக்குறோம். நீயும் எங்க கூட வரீயா, இல்லை ஆபீஸ் போறீயா?'' எனக் கேட்டான்.

''உங்களால மேனேஜ் செய்ய முடியும்னா நான் ஆபீஸ் போய் எல்லா பார்மாலிடிசும் முடிச்சிட்டு வந்திடுறேன்'' என்றான் ஷிவா.

''ஷுயர்! ஷுயர்! ராது இருக்கும் போது என்ன பிரச்சனை? அவ எல்லாத்தையும் பார்த்துப்பா. எதையும் மேனேஜ் செய்திடலாம்!!! சரி தானே ராது?''

ராதிகா செல்லமாக அவனைப் பார்த்து முறைக்க, கௌஷிக் அதைக் கண்டு கொள்ளாமல் அவளை பார்த்துக் கண் சிமிட்டினான்.

அவர்கள் பக்கம் இருந்து பார்வையைத் திருப்பிய ஷிவா,

''சரி அப்போ நான் ஆபீஸ் கிளம்புறேன், நீங்களும் வரீங்களா அஸ்வினி?'' என்றான்.

''இல்லை ஷிவா, நீங்க கிளம்புங்க. நான் ஒரு பிரெண்ட்க்கு கிப்ட் வாங்கணும். நானும் மால்க்கு தான் போயிட்டு இருக்கேன்.''

''ஓ கூல் என் பேமிலி கூடவே நீங்களும் போங்களேன்.''

''ஆமாம் எங்க கூட வாங்க'' என்றாள் அருந்ததியும்.

''உங்களுக்கு தொந்தரவு இல்லையே?''

''அவங்களும் அங்கே தானே போறாங்க, இதுல என்ன தொந்தரவு?''

''ஓகே, அப்போ சரி.''

அனைவரும் காரில் ஏறிக் கொள்ள கதவை முடிய ஷிவா,

''ராது, உன்னை நம்பி தான் ரதியை அனுப்புறேன். அவளை பத்திரமா பார்த்துக்கோ. பெங்களூர், இந்த கூட்டம் எல்லாம் அவளுக்குப் பழக்கமில்லை.''

ராதிகா பதில் சொல்லும் முன்,

''உன்னை விட என் மருமகள் மேலே எனக்கு அக்கறை இருக்குடா! அவளை ராதிகா பார்த்துக்குறாளோ இல்லையோ நான் பார்த்துக்குறேன், நீ வேலையை முடிச்சிட்டு சீக்கிரம் வா.'' என்றாள் லக்ஷ்மி

''க்யூட்டியை பார்த்துக்குறதை பத்தி நீ என் கிட்ட சொல்லணுமா? கிளம்புற வேலையை பாருடா'' என்றாள் ராதிகா.

''சரி சரி.....'' என்று அரை மனதுடன் சொன்னவன், மனைவிக்கு கண்களால் 'பை' சொல்லி விட்டு காரை விட்டு விலகி நின்றான்.

கடையில் வேண்டியதை வாங்கி பில் போட கௌஷிக்கும், ராதிகாவும் கவுண்டர் பக்கம் செல்ல, ரெஸ்ட் ஏரியாவில் அமர்ந்திருந்த லக்ஷ்மி மற்றும் நாதனை நோக்கி அருந்ததி நடக்கத் துவங்கிய நேரம்,

''ஹலோ மிஸர்ஸ் ஷிவா'' என்ற அஸ்வினியின் குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது.

'மிஸர்ஸ் ஷிவா' என்ற அழைப்பு ஒன்றே அருந்ததியின் மனம் வானத்தில் பறக்கப் போதுமானதாக இருந்தது!!!

(முப்பத்தி இரண்டு பற்களும் தெரிய) புன்னகைத்தபடி அஸ்வினியிடம்,

''ஹலோ! இவ்வளவு சீக்கிரம் கிப்ட் செலக்ட் செய்துட்டீங்களா?'' என்றாள் அருந்ததி.

''இல்லைங்க, என் பிரெண்ட்க்கு சூட் ஆகுற மாதிரி எதுவும் கிடைக்கலை. நீங்க பர்சேஸ் முடிச்சாச்சா?''

''முடிச்சாச்சுங்க! அண்ணியும் அண்ணாவும் பில் போடப் போயிருக்காங்க. அத்தை மாமா அங்கே இருக்காங்க. வாங்களேன் அவங்க பில் போட்டு வர வரைக்கும் பேசிட்டு இருக்கலாம்.''

அஸ்வினி அங்கே இருந்து அசையாமல் நின்றபடி அருந்ததியை இரக்கத்தோடு பார்த்தாள்.

''என்ன இப்படி பார்க்குறீங்க?''

''ஷிவா எப்படி இருக்கார்?''

''ஏன் கேக்குறீங்க? நீங்க தான் பார்த்தீங்களே, நல்லா இருக்கார்.''

''நான் அதை கேட்கலை! சரி அதை விடுங்க! நல்ல வேளை, உங்களுக்கு இன்-லாஸ் ஆவது நல்ல வங்களா இருக்காங்க.''

''அவங்களாவது நல்லவங்களா இருக்காங்கன்னா, யார் நல்லபடியா இல்லை? என்ன சொல்றீங்க?'' அருந்ததி புரியாமல் குழப்பத்துடன் கேட்டாள்.

''கம் ஆன் அருந்ததி. இந்த காலத்தில யார் பர் பெக்ட்டர் இருக்கிறது? ஷிவா அஞ்சு ஆறு வருஷமா பெங்களூர்ல தனியா இருந்திருக்கார். இதுக்கு மேல

நான் ஏதாவது சொல்லணுமா என்ன? சும்மாவா ஒரு கிராமத்துல தேடி கண்டுபிடிச்சு உங்களைக் கல்யாணம் செய்துக்கிட்டார்?''

என்ன சொல்ல வருகிறாள் இவள்? அவளுடைய ஷிவாவை பற்றித் தவறாகச் சொல்கிறாளா?

அருந்ததிக்கு பொல்லாத கோபம் வந்தது. பல்லை கடித்துக் கொண்டு கோபத்தை கட்டுபடுத்த முயன்றாள் அவள்.

அதைக் கண்டுக் கொள்ளாமல், அஸ்வினி மேலே பேசிக் கொண்டே போனாள்.

''ஷிவா தான் கொஞ்சம் ஒரு மாதிரி போல இருக்கு! அவரோட பேமிலி மெம்பர்ஸ் இவ்வளவு நல்லவங்களா இருக்காங்களே!''

''என்ன பேசுறீங்க? அவரை பத்தி.....''

''கோபப் படாதீங்க அருந்ததி. எனக்குப் புரியுது! பழைய பழக்கம் எல்லாம் விட்டுட்டு இனிமேலாவது ஷிவா நல்லபடியா இருந்தால் சரி தான்.''

அருந்ததிக்கு அதற்கு மேல் நின்று அவளுடன் பேச பிடிக்கவில்லை!

''ரொம்ப தேங்க்ஸ்'' என்று சொல்லி விட்டு திரும்பினாள்.

''உங்களுக்கு ஷிவாவை எவ்வளவு நாளா தெரியும் அருந்ததி? மூணு மாசம்? ஆறு மாசம்? ஒரு வருஷம்? எனக்கு அவரை மூணு வருஷமா தெரியும். இந்த மூணு வருஷத்தில் அவர் சென்னைக்குப்

போன நாட்களை கை விட்டு எண்ணிடலாம். எனிவே அதெல்லாம் முடிஞ்சு போன விஷயம். விடுங்க! நான் கிளம்புறேன். அப்புறமா பார்க்கலாம்."

பொறாமையைப் போலவே சந்தேகம் என்பதும் கொடிய வியாதி! தன்னையும் தன்னைச் சுற்றி இருப்பவர்களைச் சுட்டெரிக்கும் பொல்லாத வியாதி!

அஸ்வினியின் பொறாமை எனும் ஜ்வாலை ஏற்றி வைத்த சின்ன சந்தேகம் எனும் தீப்பொறி அவளையும் அறியாமல் அருந்ததியின் மனதில் கனன்று கொண்டே இருந்தது.

சும்மாவா ஒரு கிராமத்துல தேடி கண்டுபிடிச்சு உங்களைக் கல்யாணம் செய்துக்கிட்டார்?

இந்த காலத்தில யார் பர்பெக்ட்டா இருக்கிறது? ஷிவா அஞ்சு ஆறு வருஷமா பெங்களூர்ல தனியா இருந்திருக்கார். இதுக்கு மேல நான் ஏதாவது சொல்லணுமா என்ன?

என்ன சொல்ல நினைத்தாள் அஸ்வினி?

ஷிவாவிற்குக் கெட்டப் பழக்கங்கள் உண்டு என்றா?

அவளிடம் நின்று முழுவதுமாக கேட்டு வந்திருக்க வேண்டுமோ?

மனதில் அடித்துக் கொண்டிருந்த புயலை வெளிக் காட்டாமல் ஷிவாவின் பொருட்களை அடுக்கும் வேலையில் அவள் ஈடுபட, ராதிகாவும், கௌஷிக்கும் அதை அட்டை பெட்டியினுள் வைத்துக் கட்டினார்கள். லக்ஷ்மியும், நாதனும் வீட்டை சுத்தம் செய்யும் வேலையைத் தொடங்கினார்கள்.

அந்த குடும்பத்திற்கே உரிய விதமாக எப்போதும் போல் பேச்சும் சிரிப்புமாக வேலை நடந்தது.

அருந்ததியின் அமைதியை கவனித்த ராதிகா,

"ஹேய் க்யூட்டி என்ன ரொம்ப அமைதியா இருக்க?" என்றாள்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை."

"என்ன ஒண்ணும் இல்லை, அந்த போலி சாமி யாரை மிஸ் செய்ற, அதை சொல்லு."

"இல்லை....."

"இல்லையா? அவன் வரட்டும் சொல்றேன் இரு, இரு!!! அவன் எப்படியும் லேட்டா தான் வருவான்."

"ஏன் லேட்டா வருவார்?"

"பின்ன அவன் ஆபீஸ்ல இருக்க எல்லா பொண்ணுங்க கிட்டேயும் பிரியா விடை பெற்று வர வேண்டாமா? சார் பெரிய பாப்புலர் ஹீரோ ஆச்சே!"

அருந்ததி பதில் சொல்லவில்லை!

அவளின் மூளையின் மொத்த செயல் திறனும் (!!!) வேறு ஒரு சிந்தனையில் ஈடுப்பட்டுக் கொண்டிருந்தது!

பெண் சிநேகிதிகள்????

அப்படியும் இருக்குமா?

"....காத்திருப்பதில் எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை."

ரொம்பவே சமர்த்தான அவளின் நினைவலைகள் எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது

போல் அவளுடைய சந்தேகத்தை அதிகப்படுத்தும் விதமாக ஷிவா அவளிடம் சில நாட்களுக்கு முன் சொன்னதை நினைவுக்கு கொண்டு வந்தது.

உண்மையிலேயே ஷிவா மனைவி என்று ஒருத்தி வருவதற்காகக் காத்திருந்திருந்தால், அவள் தன் மனதில் இருக்கும் பயத்தைச் சொல்லி, அவனிடம் விலகி இருப்பதை அத்தனை எளிதாக ஏற்றுக் கொண்டு எந்தக் கஷ்டமும் இல்லை என்று சொல்லி இருப்பானா?''

கோபப்பட்டிருக்க மாட்டான்?

எனக்கு ஏன் இப்படி ஒரு பெண்ணை திருமணம் செய்து வைத்தீர்கள் என்று கேள்வி கேட்டிருக்க மாட்டான்?

ஆனால் அவனோ ஒன்றுமே இல்லாதது போல் அல்லவா இருக்கிறான்!

அவனுக்கு அவளின் மீது உண்மையில் அன்போ, ஆர்வமோ இல்லையோ?

அவள் இல்லாவிட்டாலும் வேறு ஒருத்தி கிடைப் பாள் என்ற அலட்சியமா?

அப்புறம் இந்த திருமணம் எதற்கு?

பெற்றோருக்காகவா?

ஒரு சில கணங்களில் (சூறாவளியாக) அவளின் மனம் அவளின் கதாநாயகனை வில்லனாக மாற்றி யோசித்தது.

இல்லை அப்படி எல்லாம் இருக்காது!!!!

ஷிவாவின் கண்களில் தெரிவதும், அவளிடம் பேசும் போது அந்த வார்த்தைகளில் கலந்திருப்பதும் அன்பு தான்! உண்மையான அன்பு தான்!

ஆனால்.....!

சந்தேகம் என்பது அத்தனை எளிதாக போய் விட கூடிய வியாதியா என்ன?

அருந்ததியின் மனம் குழம்பித் தவித்தது.

தோழியாக பழகிய ராதிகாவிடமும் எதுவும் சொல்லாமல் மனதினுள் எதை எதையோ நினைத்து, யோசித்து குழம்பிக் கொண்டிருந்தாள் அவள்!

மாலையில் வீடு திரும்பிய ஷிவாவின் முகம் அருந்ததியை பார்த்த உடனே பளிச்சிட்டது!

இல்லை இது பொய்யாக இருக்க முடியாது!

ஷிவாவிற்கு உண்மையிலேயே அவள் மீது அன்பு இருக்கிறது.

''வாவ்! என்ன மேஜிக் செய்தீங்க எல்லோரும்? வீடு இப்படி துடைச்சு வச்ச மாதிரி மாறி போச்சு.''

''ஹி ஹி! கடின உழைப்பு தம்பி!''

''உங்களை எல்லாம் பார்ட்னரா வச்சு கொள்ளைக் கூட்டம் ஆரம்பிக்கலாம் போல இருக்கே! ஒரு மணி நேரத்தில வீட்டுல இருக்குறதை துடைச்சு எடுத்து பேக் செய்திடுவீங்க போலருக்கே!''

''புத்தி போறதை பாரு! நல்லதாகவே யோசிக்க மாட்டீயாடா நீ.''

"அவன் விளையாட்டுக்கு தானே சொல்றான், விடு ராதிகா" என்றாள் லக்ஷ்மி.

"இந்த அம்மாங்க தான் பசங்களைக் கெடுக்குறது."

ஷிவா ராதிகாவிற்கு பதில் சொல்லாமல்,

"ரொம்பக் கஷ்டமான வேலையை கொடுத்திட் டேனா ரதி? முகமெல்லாம் வேர்த்து போய் இப்படி வாடி இருக்கு!" என்று கனிவுடன் அருந்ததியிடம் கேட்டான்.

"ஆமாம்டா எங்களை எல்லாம் பார்த்தால் உனக்கு அப்படியே ஏ.ஸி. ரூம்ல உட்கார்ந்து எழுந்து வந்த மாதிரி இருக்கு, அவளைப் பார்த்தால் மட்டும் தான் உனக்கு வேலை செய்த மாதிரி இருக்கு! ரொம்ப டூ மச்டா!"

"ராது, நீ எப்போதுமே பரெஷ்ஷா அழகா இருக்க அதான் அவனுக்கு தெரியலை!"

கிடைத்த வாய்ப்பை விடாமல் மனைவிக்கு 'ஜிங்கு-ஜாங்' போட்டான் கௌஷிக்.

"சரி சரி, போதும் நீங்க வம்பளந்தது!!!! வீடு காலி பண்ற வேலை முடிஞ்சாச்சு. இன்னும் இரண்டு நாள் இருக்கு என்ன ப்ளான் சொல்லுங்க" என்றார் நாதன்.

"வேறென்ன? பெங்களூர சுத்தி பார்க்குற வேலை தான்! இன்னைக்கு இதுக்கு மேல யாரும் எந்த வேலையும் செய்ய வேண்டாம். மூவி போவோம், நைட் வெளியே சாப்பிட்ருவோம்! நைட் வந்து

தூங்கிட்டு, காலையில எழுந்து லால் பாக், பேலஸ் எல்லாம் பார்க்க கிளம்பிடுவோம்.''

''தூக்கமா? நான் இன்னைக்கு தூங்குற மாதிரியே இல்லையே, வேற மெகா ப்ளான் வச்சிருக்கேனே.....'' மிக மெல்லிய குரலில் அருகில் இருந்த மனைவிக்கு மட்டும் கேட்குமாறு சொன்னான் கௌஷிக்.

அவனின் கையில் மற்றவர்க்கு தெரியாமல் கிள்ளி விட்டு,

''சூப்பரா ப்ளான் செய்றீயே என் தங்கம்! உன் அருந்ததியை மட்டும் தனியா பெங்களூர் அழைச் சிட்டு வந்து சுத்தி காட்ட ப்ளான் செய்து வச்சிருந் தீயா என் தங்க கம்பி? சாரிப்பா நாங்கலாம் ட்யூப் லைட், நேரா சொன்னால் மட்டும் தான் புரியும்! அதான் புரியாமல் நீ கூப்பிட்ட உடனே கிளம்பி வந்துட் டோம்'' என்றாள் ராதிகா.

''இவ்வளவு சீக்கிரமாவது உனக்கு புரிஞ்சுதே என் ட்யூப் லைட் அக்கா! அடுத்த தடவை நான் எங்கே யாவது எங்களோட வரியான்னு கூப்பிட்டால், மறக் காமல் வரலைன்னு சொல்லிடு!''

''அப்படியே தம்பி!''

''போதும் உங்க அறுவை! இந்த ரம்பத்தை தாங்க முடியலை! அதென்ன ஷிவா வரும் போது அத்தனை கவர் எடுத்துட்டு வந்த?''

''ஆபீஸ்ல கொடுத்த கிப்ட்ஸ்ம்மா.''

''ஹேய் பி.எஸ், ஏன்டா முதல்லேயே சொல்லலை? கொடு பார்ப்போம்.''

மேஜை மீது வைத்திருந்த கவர்களில் இரண்டை மட்டும் கையில் வைத்து கொண்டு மற்றவற்றை ராதிகாவிடம் கொடுத்தான் ஷிவா.

அமைதியாக நடப்பவற்றை கவனித்துக் கொண்டிருந்த அருந்ததியின் கண்கள் ஷிவாவின் கையில் இருந்த அந்த இரண்டு கவர்களின் மீது பதிந்தது.

''நீ போய் முகம் கழுவு ஷிவா, நான் அருந்ததி கிட்ட காபி கொடுத்து அனுப்புறேன்'' என்றாள் லக்ஷ்மி.

துவாலையில் முகத்தை துடைத்தபடி வந்த ஷிவா கையில் காபியுடன் வந்த அருந்ததியை பார்த்து புன்னகைத்தான்.

அவள் அமைதியாக கோப்பையை நீட்ட, வாங்கிக் கொண்டு,

''தேங்க்ஸ் டா!'' என்றான்.

அருந்ததியின் பார்வை தானாக ஷிவா மேஜை மீது வைத்திருந்த அந்த கவர்களின் மீது விழுந்தது.

''ஏன் ஒரு மாதிரி டல்லா இருக்க? வேலை அதிகமா? சாரி! ஆபீஸ்ல எல்லோர் கிட்டேயும் சொல்லிட்டு கிளம்ப லேட் ஆகிடுச்சு! இல்லைன்னா நானும் வந்து ஹெல்ப் செய்திருப்பேன்.''

''உங்க ஆபீஸ்ல எத்தனை பொண்ணுங்க வேலை செய்றாங்க?''

இதென்ன கேள்வி என்ற பாணியில் பார்த்தாலும்,

''நிறைய பேர் இருக்காங்க! இருபது இருபத்தஞ்சு பேர் இருப்பாங்க. ஏன்?'' என்று மனைவியின் கேள்விக்கு பதில் சொன்னான் ஷிவா.

''எல்லோர் கிட்டேயும் சொல்லிட்டு கிளம்ப லேட் டாச்சுன்னு சொன்னீங்களே. அது தான் எத்தனை பேருன்னு பார்த்தேன்.''

''ஹேய் என்ன ஆச்சு உனக்கு இன்னைக்கு? கேள்வியா கேட்குற? என்னவோ போல பேசுற?''

''ம்ம்ம்ம்... அந்த இரண்டு கவர்ல என்ன இருக்கு?''

''அதெதுக்கு இப்போ? உன்கிட்ட சொல்லாமல் இருப்பேனா? சொல்றேன்... ஆனால் அப்புறமா சொல்றேன்.....''

''உங்க ஆபீஸ்ல கொடுத்த கிப்ட் தானே? மறைச்சு வைக்க என்ன இருக்கு? என்னன்னு சொல்லுங்க?''

''ப்ச்.... உனக்காக தான் வேண்டாம்னு....''

''நீங்க அதை என் கிட்ட காட்ட மாட்டீங்கன்னு எனக்கு தெரியும்! அது உங்க பெண் ஸிநேகிதி யாரோ கொடுத்தது.''

''ஆமாம் என் கேர்ள் பிரெண்ட் கொடுத்தது தான், இப்போ என்ன?''

அருந்ததியின் மன நிலையை புரிந்து கொள்ளாமல் கிண்டலாக பதில் சொன்னான் ஷிவா.

''இரண்டே இரண்டு கவர் தான் இங்கே இருக்கு! ஆச்சர்யமா இருக்கே! நான் கேள்வி பட்டதை வச்சு பார்த்தால் இன்னும் நிறைய இருக்கணுமே.''

முதல் முறையாக அருந்ததியை கேள்வியாகப் பார்த்தவன்,

''என்ன கேள்வி பட்ட அருந்ததி? எதுவா இருந்தாலும் நேரா சொல்லு'' என்றான்.

அவன் ரதி என்று சொல்லாமல் அருந்ததி என்று அழைத்தது அவளுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

''நீங்க ஏன் முன்னாடி எல்லாம் பெங்களூரே கதின்னு இங்கேயே இருந்தீங்க? வீட்டுக்கு எப்போதாவது தான் போவீங்களாமே?''

கைகளை மார்புக்கு குறுக்கே கட்டிக் கொண்டு மனைவியை கூர்மையாகப் பார்த்தபடி,

''ஆமாம் இருந்தேன். அதனால இப்போ என்ன?'' என்றான்.

''என்னவோ பாசம் பொங்கி வழியுற மாதிரி இப்படி உருகுறீங்க, அப்புறம் ஏன் ரெகுலரா போகாமல் இருந்தீங்க. அம்மா அப்பா அக்காவை விட முக்கியமான விஷயம் இங்கே வேறென்ன இருந்திச்சு?''

''உன் கேள்விக்கெல்லாம் பதில் சொல்றேன், அதுக்கு முன்னாடி ஏன் இந்த கேள்வி எல்லாம் கேட்குறேன்னு எனக்கு சொல்லு.''

''எனக்கு எல்லாம் தெரிஞ்சு போச்சு.''

''என்னத்த தெரிஞ்சு போச்சு?''

''நீங்க என் மேல எந்த அக்கறையும் இல்லாமல், என் மேல எந்த ஆசையும் இல்லாமல், உனக்கு பிடிக்கலையா சந்தோஷம்ன்னு சொல்லிட்டு தள்ளிப்

போய் நிற்குறீங்களே அது எல்லாம் தெரிஞ்சு போச்சு.''

ஷிவாவின் கோபம் அவனின் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது!

அதே இடத்தில் நின்றபடி அவளை ஒரு சில வினாடிகள அமைதியாக பார்த்தவன், பின் வேகமான நடையுடன் அவளின் அருகே சென்றான்.

அவள் அசையவும் வாய்ப்பு தராமல் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''எனக்கு உன் மேல ஆசையில்லை? இதுக்கு நான் வேறெப்படி பதில் சொல்றது?''

பேசியபடி, அவனின் இரும்பு பிடியில் இருந்து விலக திமிறிக் கொண்டவளின் முகத்தை கைகளில் ஏந்தி அவளின் இதழ்களில் அழுத்தமாக, முரட்டுத் தனமாக முத்தமிட்டான்.

தன்னிச்சை செயலாக பெண்ணுக்கே உரிய விதத் தில் அவனை தன் மொத்த பலத்தையும் கொண்டு பிடித்து தள்ளினாள் அருந்ததி.

அத்தனை பலத்தை மனைவியிடம் எதிர்பார்த் திராததாலோ என்னவோ, தடுமாறி விழப் போன ஷிவா, அருகே இருந்த மர அலமாரியின் உதவியி னால் கீழே விழாமல் நின்றான்.

அடுத்த வினாடி தான் செய்துவிட்ட செயலை எண்ணி அருந்ததி திகைத்து நிற்க, ஷிவா ஆத்திரத் துடன் அவளைப் பார்த்து முறைத்தான்.

''ச.....''

"ஷட் அப்! உனக்கு பைத்தியம் தான் பிடிச்சிருக்கு! இல்லை இல்லை தப்பு உனக்கு என்னை பிடிக்கலை! அது தான் நிஜம்!"

"இல்லை....."

"பேசாதே! உனக்கு இதுல என்ன இருக்குன்னு தானே தெரியணும், இந்தா பார்த்துக்கோ!"

மேஜை மீதிருந்த அந்தக் கவர்களை அவள் நின்றிருந்த பக்கம் தூக்கி எரிந்தான்!

"நான் இனிமேல் உன் கிட்ட வந்து எதுவும் கேட்கலைம்மா தாயே! நீயும் என் கிட்ட பேசாதே!"

ஷிவா கோபத்தில் பொரிந்து தள்ளினான்....

நிறுத்தாமல் பேசி கொண்டே இருந்தான்.

ஆனால் அருந்ததி அதை கவனிக்கவில்லை! அவளின் பார்வை ஷிவா தூக்கி எறிந்த கவர்களின் இருந்து தெறித்து வந்து அவளின் காலடியில் விழுந்து இருந்த பொருட்களின் மீது இருந்தது!

குற்ற உணர்வோடு கணவனைப் பார்த்தாள்!

அவன் பல்லை கடித்துக் கொண்டு நின்றிருந்தான்.

12



அருந்ததியின் காலடியில் விழுந்திருந்தது குழந்தை பொம்மை, பீடிங் பாட்டில் மற்றும் சின்ன தொட்டில்.

ஷிவாவின் நெருங்கிய நண்பர்கள் யாரோ அவனுக்கு திருமணத்திற்கு பின் வரும் குழந்தை செல்வத்திற்காக வாழ்த்தி கொடுத்திருக்க வேண்டும்! திருமணத்தின் போது இது போல் கேலியாக நண்பர்கள் பரிசு தருவது வாடிக்கையான விஷயம் தானே!

ஷிவா சொன்ன,

'...உன்கிட்ட சொல்லாமல் இருப்பேனா? சொல்றேன்... ஆனால் அப்புறமா சொல்றேன்.....'

என்பதின் அர்த்தம் அவளுக்கு உடனே புரிந்தது.

இந்த பரிசு பொருட்களை பார்த்தால் அவள் மனதில் குற்ற உணர்வு வரலாம்..... ராதிகா கேலி செய்யலாம், அதனால் அவள் வருத்தப்படலாம்....

அவன் அவளுக்காக யோசித்திருக்கிறான்!

தன் அவசர புத்தியை எண்ணி மனசுக்குள் திட்டியபடி குற்ற உணர்வுடன் கணவனைப் பார்த்தாள்.

அவன் அப்போதும் கோபம் பொங்க நின்றிருந்தான்.....

அவனின் கோபத்திலும் நியாயம் இருக்கிறதே!

எப்படி மன்னிப்பு கேட்பது என்று அவள் யோசிக்க, ஷிவா கோபத்துடன் அந்த அறையை விட்டு வெளியே சென்றான்.

அவன் சென்ற பின்னும் ஒரு சில நிமிடங்கள் அசையாது நின்றிருந்தவள், பாரமான இதயத்துடன் அறையை விட்டு வெளியே வந்தாள்.

ஷிவாவிடம் எப்படி மன்னிப்பு கேட்பது? என்ன சொல்லி சமாதானப்படுத்துவது என்ற கேள்விகள் மட்டுமே அவளின் மனதில் இருந்தது.

யோசித்தபடி நடந்தவள் எதிரில் வந்த ராதிகாவை கவனிக்காது இடித்துக் கொண்டாள்.

"சாரி சாரி! கவனிக்கலை!"

"ஹேய் க்யூட்டி இதுக்கு எதுக்கு இவ்வளவு பீல் செய்ற? இட்ஸ் ஓகே! ஷிவா எங்கே? மூவி போக லாம்னு சொன்னான் ஆனால் என்ன படம்னு சொல் லவே இல்லையே!"

அருந்ததி பதில் சொல்லாமல் அமைதியாக நின் றிருந்தாள்.

"என்ன ஆச்சு க்யூட்டி ஏன் ஒரு மாதிரி இருக்க? முகமெல்லாம் வித்தியாசமா இருக்கு. அந்த சாமியார் ஏதாவது சொன்னானா? என்ன ஆச்சு?"

அதற்காகவே காத்திருந்தது போல் அருந்ததியின் கண்களில் இருந்து நீர் கொட்டியது!

ராதிகா பதறிப் போனாள்!

"ஹேய் அழுறீயா நீ? என்ன ஆச்சுன்னு சொல்லு."

அருந்ததி அமைதியாக அழுகையைத் தொடர, ராதிகா அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

"என்ன நடந்துச்சு? அவன் ஏதாவது கோபமா பேசிட் டானா?"

அருந்ததி இல்லை என்பது போல் தலை அசைத் தாள்.

"அப்போ நீ அவனை திட்டுனீயா?"

மும்முரமாக தலையை குனிந்து அழுது கொண்டிருந்தவள், ராதிகாவை நிமிர்ந்து பார்த்தாள்.....

ராதிகாவிற்கு சிரிப்பு வந்தது!

"நீ தான் திட்டுனீயா? பரவாயில்லையே! அவனை திட்டிட்டு, அதுக்காக அழுறீயா? நல்ல பொண்ணு நீ! எதுக்காக திட்டுன?"

"காலையில அஸ்வினி...."

"அஸ்வினியா எந்த அஸ்வினி?"

"அவரோட வேலை செய்றவங்க. நாம கூட மாலுக்கு கார்ல அழைச்சிட்டு போனோமே...."

"ஓ ஓ..... இதெல்லாம் அந்த மேடமோட திருவிளையாடலா? அந்த பொண்ணோட முகத்தை பார்த்தாலே சரி இல்லை! என்ன சொன்னாள் அவ? அவக்கிட்ட நீ எப்போ தனியா பேசின?"

"நீங்க பில் போட போனப்போ வந்து பேசினா....."

"அதானே பார்த்தேன்! அருந்ததி, யார் என்ன சொன்னாலும் அப்படியே நம்பிடுறதா? அப்படி என் தம்பியை பத்தி என்ன சொன்னா அவ?"

அருந்ததி அஸ்வினி சொன்னதை நினைவில் கொண்டு வந்து ஒப்பித்தாள்.

'இந்த காலத்தில யார் பர்பெக்ட்டா இருக்கிறது? ஷிவா அஞ்சு ஆறு வருஷமா பெங்களூர்ல தனியா இருந்திருக்கார். இதுக்கு மேல நான் ஏதாவது

சொல்லணுமா என்ன? சும்மாவா ஒரு கிராமத்துல தேடி கண்டுபிடிச்சு உங்களை கல்யாணம் செய்துக் கிட்டார்?'

'உங்களுக்கு ஷிவாவை எவ்வளவு நாளா தெரியும் அருந்ததி? மூணு மாசம்? ஆறு மாசம்? ஒரு வருஷம்? எனக்கு அவரை மூணு வருஷமா தெரியும். இந்த மூணு வருஷத்தில் அவர் சென்னைக்கு போன நாட்களை கை விட்டு எண்ணிடலாம்.'

"இவ்ளோ தானா? இதுல தப்பா நினைக்க என்ன இருக்கு? சரி சரி முழிக்காதே! ஒண்ணுமே இல்லா ததா ஆனால் தப்பாவும் உன்னோட சூப்பர் டூப்பர் மூளை யோசிக்க வைக்குற மாதிரி பேசி இருக்கா எனக்கு புரியுது. ஷிவா இருப்பது மார்கெட்டிங் பீல்ட்ல. இதுல நினைச்ச நேரத்துல எல்லாம் வர முடி யாது..... வீகென்ட்லேயும் ஏதாவது திடீர்னு வேலை வரும். சில சமயம் டார்கட் அச்சீவ் செய்யலைனா எக்ஸ்ட்ரா எப்பர்ட் போடணும்..... அவன் ஒரு மனு ஷனா முழுசா இருப்பதே இப்போ தான். முன்னாடி எல்லாம் வேலை, ப்ரொமோஷன் இதெல்லாம் மட்டும் தான் அவன் கவனத்துல இருந்தது..... மத்தபடி இந்த வயசில இவன் எப்படி இந்த டெசிக் னேஷன்ல இருக்க முடியும்?"

அருந்ததி குற்ற உணர்வு இன்னும் அதிகமாக சேலையை திருகியபடி நின்றிருந்தாள்....

"அந்த பொண்ணு ஏன் உன்கிட்ட வேலை மெனக்கெட்டு வந்து இதை சொல்லணும் அதுவும்

யாரும் இல்லாம நீ மட்டும் இருக்கும் போது சொல்லணும்னு போசிச்சிருந்தாலே உனக்கு புரிஞ்சிரிந்திருக்கும். மத்தபடியும் அவள் கண்ணை பார்த்தாலே அதுல இருந்த பொறாமை தெரிஞ்சிருக்கும்..... சரி அதை பத்தி பேசி எதுவும் ஆக போறதில்லை.... இப்போ உன் ஹீரோவை சமாதானப்படுத்தும் வழியை பார்ப்போம்..... முதல்ல இதை தெரிஞ்சுக்கோ இந்த எக்ஸ்ட்ரா அன்பு, கோபம், ஊடல், சண்டை எக்ஸட்ரா எக்ஸட்ரா எல்லாம் பொண்ணுங்க நம்ம பிறப்புரிமை! இதெல்லாம் இருந்தா தான் நாம உண்மையா அன்பு வச்சிருக்கோம்னு அர்த்தம்..... ஹி ஹி ஹி!!!!! ஆனால் இப்படி அழுதேன்னு வை, எல்லா ஃபன்னும் (fun) ஸ்பாயில் ஆகிடும்! இது தான் நம்ம ரூல் நம்பர் ஒன்! மத்த ரூல்ஸ் பத்தி எல்லாம் பேசுறதுக்கு முன்னாடி முதல்ல இதை சொல்லு, ஷிவா மேல உனக்கு இன்னும் சந்தேகம் இருக்கா?''

அருந்ததி அவசரமாக இல்லையென தலை அசைத்தாள்.

''குட்! அப்போ போய் அவனை சமாதானப் படுத்து.''

''நானா? எப்படி?''

''கஷ்டம்டா சாமி! அஸ்வினி சொன்ன ஒரு வார்த்தையை கேட்டுட்டு அவன் கிட்ட போய் சண்டை போட்டப்போ கேக்க வேண்டியது தானே? நானா? எப்படி சண்டை போடன்னு! இப்போ மட்டும் கேள்வி எல்லாம் கேட்குற?''

"அவரை ரொம்ப ஹர்ட் செய்துட்டேன்..... என் கிட்ட பேசாதேன்னு சொல்லிட்டார்....."

சொல்லி முடிக்கும் முன் அருந்ததியின் கண்ணில் இருந்து மீண்டும் கண்ணீர் வழிந்தது.

"அடடா, ப்ளாக் அண்ட் வைட் படம் மாதிரி இப்படி நிமிஷத்துக்கு அழுதால் எப்படி? இதெல்லாம் சரியா தான் செய்யுற! அப்புறம் ஏன் இந்த காலத்து ஹீரோயின் போல யோசிக்காமல் திட்டின?"

"நீங்களும் என்னை திட்டுறீங்க, போங்க....."

"அட கஷ்டமே! இதுக்கு பேர் தான் உனக்கு திட்றதா? எங்க அம்மாவை உன் முன்னாடி என்னை ஒரு தடவை திட்ட சொல்றேன் அப்போ தான் உனக்கு திட்றதுன்னா என்னன்னே தெரியும்."

"அதெல்லாம் அப்புறம் நான் இப்போ அவரை சமாதனப்படுத்தணும்."

"இதிலையாவது தெளிவா இருக்கியே சந்தோஷம்! இதுக்கு ஷார்ட் கட் எல்லாம் கிடையாது. நேரா போய் அவன் கிட்ட சாரி சொல்லிடு....."

"ம்ம்ம்மம்ம்ம்மம்ம்ம்."

"உன் மேல தப்பு இருக்குன்னு உனக்கு தோணுதுல?"

"ம்ம்ம்ம்...."

"அப்போ ஈகோ, ப்ரெஸ்டிஜ் எதுவும் பார்க்காம போய் அவன் கிட்ட சாரி சொல்லிடு. இனிமேல் யோசிக்காமல பேச மாட்டேன்னு சொல்லிடு.... இது தான் நம்ம ரூல் நம்பர் டூ!"

"சரி...."

"சரின்னு சொல்லிட்டு இப்படியே நின்னால் எப்படி? போ, போய் சீக்கிரம் அவனைச் சமாதானப்படுத்து அப்போ தான் நாம டைமுக்கு கிளம்ப முடியும்."

"ம்ம்ம்....."

"இன்னும் என்ன?"

"வந்து..... நான் தான் உங்க கிட்ட அவரை சாமியாருன்னு கூப்பிடாதீங்கன்னு சொன்னேனே.... ஆனாலும் நீங்க....."

"ரொம்ப முக்கியம் இப்போ! இதை எல்லாம் ரொம்ப சரியா சொல்லு! அவனை மறந்து போய் பி.எஸ், சாமியாருன்னு சொல்லிட்டேன் என் செல்லமே. இனி மேல் சொல்லவே மாட்டேன். அவனுக்கு புது பேர் செலக்ட் செய்தாச்சு."

"என்ன பேரு?"

"ஸி.ஹெச்!"

"அப்படின்னா??????"

"நீ போய் முதல்ல செய்ய வேண்டிய வேலையை பாரு, அப்புறம் சொல்றேன்....."

"ம்ம்ம்....."

"க்யூட்டி ஒண்ணு சொல்லவா?"

"சொல்லுங்க."

"அன்போட பேசுறப்போ என்ன எதுன்னு யோசிக்காமல் மனசில இருக்குறதை அப்படியே பட்டு

பட்டுன்னு பேசி கொட்டிடலாம், தப்பே இல்லை! ஆனால் கோபம் குழப்பம் இருக்கும் போது ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்! வார்த்தையைக் கொட்டினால் திரும்ப அள்ள முடியாது! உணர்ச்சி வசப்பட்டு பேசிட்டு அப்புறம் வருத்தபடாமல் அந்த நேரத்துல அமைதியா இருந்துட்டு மனம் கொஞ்சம் ரிலாக்ஸ் ஆனப்புறம் பேசணும்..... அதை எல்லாம் விட சந்தேகம் ரொம்ப தப்பு! ஷிவா பத்தரை மாத்து தங்கம்! அந்த பொண்ணு பேச்சை நம்பி நீ அவன் கிட்ட கேள்வி கேட்டேன்னு உன் வழியா கேள்விப்படும் போதே எனக்கு ஒரு மாதிரி இருக்கு, அப்போ மனைவிக்கு மட்டுமே நான் சொந்தம்னு வாழ்றவனுக்கு கோபம் வராதா? அவனை பத்தி தப்பா நினைக்காத! அவனால.....”

“எனக்கு புரிஞ்சிடுச்சு.... இனிமேல் இப்படி அவசரப்பட்டு எதையும் செய்ய மாட்டேன்....” என்ற அருந்ததி, ராதிகாவின் கன்னத்தில் மெல்ல முத்தமிட்டு,

“தேங்க்ஸ் அண்ணி!” என்றாள்.

“என்னது தண்ணியா???”

“சாரி சாரி மறந்து போயிட்டேன்! தேங்க்ஸ்!”

“அது!!!! போ, போய் உன் மிஷனை (mission) ஸ்டார்ட் செய்.”

அருந்ததி சிவாவை தேடி செல்வதை மலர்ந்த முகத்தோடு பார்த்து விட்டு, கன்னத்தை துடைத்தபடி மறுபக்கம் திரும்பி நடந்தாள் ராதிகா.

''ஹேய் என்ன செய்ற?'' என்றபடி கௌஷிக் அவள் முன் வந்து நின்றான்.

''ஒண்ணும் செய்யலைங்க ஹீரோ! அருந்ததிக்கு அட்வைஸ் மழை பொழிஞ்சுட்டு வரேன்.... என்னோட அட்வைஸை கேட்டு புல்லரிச்சு போய் நானே எக்ஸ்பெக்ட் செய்யாமல் சட்டுன்னு கிஸ் செய்துட்டு போயிட்டா.....''

''என்னது!!!''

''நீங்க ஏன் இப்படி அலறுறீங்க?''

''அலறாமல் சிரிக்கவா முடியும்! இந்த பட்டு கன்னம் இரண்டும் எனக்கே எனக்கு மட்டுமே சொந்தம்! அதுல.....''

''ஹலோ என்ன நக்கல்ஸா????'' என்றபடி அருகே இருந்த பேப்பரை எடுத்து சுருட்டி அவனை அடிக்கப் போவது போல் பாவனை செய்தாள் ராதிகா!

''நல்லா தானே இருக்க, அப்பப்போ ஏன் இப்படி சுவர்ணாக்காவா மாறிடுற?''

''யாரு நானு? நீங்க தான் தெலுங்கு படத்துல வர வில்லன் மாதிரி இருக்கீங்க.....''

''ஹோய் என்னை பார்த்து.....''

அந்த நேரம் அங்கே வந்த லக்ஷ்மி, அவர்களின் கலாட்டவை பார்த்து,

''என்ன நடக்குது இங்கே? ராது, பாவம் கௌஷிக் கொஞ்சம் நேரம் வாயை மூடு!'' என்றாள்.

"யாரு இவரா பாவம்?"

"பாருங்க அத்தை உங்க முன்னாடியே என்னை எப்படி கண் கலங்க வைக்குறான்னு....." கௌஷிக் அழுவது போல் பாவனை செய்ய, ராதிகா இப்போது நிஜமாகவே கையில் இருந்த பேப்பரை வைத்து அவனுக்கு ஒரு அடி கொடுத்தாள்.

"ராதிகா என்ன இதெல்லாம்? அருந்ததியை பார்த்து கத்துக்கோ! அவ எத்தனை அமைதியா அடக்கமா இருக்கா!"

"அவ தானே! ஆமாங்கம்மா! எல்லாம் என் நேரம்!"

"ஷிவா எங்கே? எத்தனை மணிக்கு கிளம்பணும்னு கேட்கணும்...."

"உங்க அமைதியின் சொரூபம், அடக்கத்தின் மறு உரு எக்ஸட்ரா எக்ஸட்ரா பட்டங்கள் தாங்கிய செல்ல மருமகள் இன்னும் கொஞ்ச நேரத்துல வந்து அந்த இன்பர்மேஷன் ஷேர் செய்வா. அதுவரைக்கும் எப் போதும் போல நல்ல மாமியாரா அமைதியா போய் டி.வி பாருங்க, இல்லை அப்பா கூட கடலை போடுங்க!"

"வாயாடி! எல்லாம் நீங்க கொடுக்குற இடம் கௌஷிக்!"

"அத்தை, ப்ளாக் போர்ட் ப்ளாக்கா இருந்தா தான் அதுக்கு அழகு! நம்ம ராது இப்படி இருந்தா தான் நம்ம குடும்பத்துக்கு அழகு!"

"இரண்டு பேரும் எப்படியோ போங்க...." என்ற படி லக்ஷ்மி அங்கேருந்து சென்றாள்.

"போர்ட் ப்ளாக்கா இருந்தான்னு சொன்னால் கூட பரவாயில்லை, ப்ளாக் போர்டுன்னு சொல்லிட்டு அப் புறம் என்ன ப்ளாக்கா இருந்தான்னு வேற எக்ஸ்ட்ரா பிட்டிங்?"

"அப்போ ப்ளோல அது தான் தோணிச்சு ராது.... செல்லம், அத்தை சொன்னதை கேட்டீயா? இரண்டு பேரும் எப்படியோ போங்கன்னு சொன்னாங்க, அப்போ நாம போவோமா?"

"உங்களை!!!!" என்றபடி மீண்டும் பேபரை கொண்டு அடிக்க கையை தூக்கிய போதும், ராதிகா வின் முகம் சிவந்து பளபளத்தது.

ஷிவா ஜன்னலில் தெரிந்த மரத்தை வெறித்து பார்த்தபடி நின்றிருந்தான்.....

மெல்லிய கொலுசொலி கேட்டது.....

அருந்ததி வந்திருப்பது அவனுக்குப் புரிந்தது ஆனாலும் அவளை திரும்பி நேராக பார்க்க மனமில் லாமல் அப்படியே நின்றிருந்தான்.....

"சாரி.... நான் அப்படி கோபமா பேசி இருந்திருக்க கூடாது! தப்பு தான்! உங்க கொலீக் அஸ்வினி சொன் னதை நான் தப்பா புரிஞ்சிக்கிட்டேன்..... என்னை மன்னிச்சுக்கோங்க....."

பேச்சை முடித்த போது அவளின் குரல் உடைந்து போய் ஒலித்தது!

சட்டென்று திரும்பியவன், அவளின் முகத்தை ஆராய்ந்தான்..

"அழுறீயா ரதி?"

இல்லை என்ற அர்த்தத்தில் தலை அசைத்தவளின் கண்ணில் இருந்து ஒன்றிரண்டு துளிகள் சிதறியது....

அவள் முன்பே அழுதிருப்பதும் புரிந்தது!

வேகமாக அவளருகே சென்றவன், சட்டென தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு,

"கண்ணை துடை ரதி! ப்ளீஸ்..... நீ அழுதால் எனக்கு கஷ்டமா இருக்கு! நானும் அப்படி பதிலுக்கு கோபப்பட்டிருக்க கூடாது! சாரி!"

"இல்லை....."

"இல்லை ரதி, உன் கிட்ட பெரிய பெரிய டைலாக் எல்லாம் சொல்லிட்டு வில்லன் போல நடந்துக்கிட் டேன்.... ஐ ஆம் சாரிம்மா! இனிமேல் அது போல் கோபப்படமாட்டேன்....."

அருந்ததியின் மனதில் சின்ன மின்னல் வெட் டியது!

"உனக்கு என் மேல ரொம்ப கோபம் இருக்கும்....."

"இல்லை அப்படி எதுவும் இல்லை. தப்பு என் மேல தான்!"

"ஓகே, தப்பு நம்ம இரண்டு பேர் மேலேயும் இருக்கு! இரண்டு பேரும் அதை தப்புன்னு அக்ஸப்ட் செய்துக்கிட்டோம்! ஸோ, நோ மோர் கோபம் அண்ட் அழுகை, ஓகே?" என்றபடி தன் வலதுக்கரத்தை அவள் பக்கம் நீட்டினான் ஷிவா.

தயக்கமில்லாமல் மறுகணம் அதை தன் வலக்கரத் தால் பற்றி,

"ஓகே..." என்றாள் அருந்ததி.

"தாங்க்ஸ் டா..... உன் கிட்ட நான் நிறைய பேசணும்..... ஆனால் நாம அப்புறம் பொறுமையா பேசுவோம்... இப்போவே அஞ்சு மணி ஆக போகுது.... சிக்ஸ் ஓ கிளாக் ஷோ மிஸ் செய்தால் ப்ளான் ஸ்பாயில் ஆகிடும்...."

"அதெல்லாம் ஆகாது! எல்லோரும் ரெடியா இருக் காங்க.... நானும் டென் மினிட்ஸ்ல கிளம்பிடுவேன்... டைமுக்கு நாம கிளம்பிடலாம், நீங்களும் ரெடி ஆகுங்க."

பதினைந்து நிமிடங்கள் கழித்து ஸ்கார்ப்பியோ வில் வீட்டிலிருந்து நாதனின் குடும்பம் கிளம்பி னார்கள்.

கௌஷிக் வண்டியை ஓட்ட, ஷிவா அவனருகில் இருந்த இருக்கையில் அமர்ந்துக் கொண்டான்.

டிரைவர் சீட்டுக்கு பின்னால் இருந்த சீட்டில் லக்ஷ்மியும் நாதனும் இருக்க, அதன் பின்னே இருந்த சீட்டில் ராதிகாவும், அருந்ததியும் இருந்தனர்.

அவ்வப்போது ஏதாவது பேசுவது போல் திரும்பத் திரும்ப அருந்ததியை மறக்காமல் சைட் அடித்த ஷிவாவிற்கு அவளின் முகத்தில் தற்போது தெரிந்த மலர்ச்சி மனதிற்கு மகிழ்ச்சியை கொடுத்தது.... ஆனால் கூடவே சில கேள்விகளையும்.....

திருமணமான முதல் நாள், அவளின் மீதிருந்த அன்பும், ஆசையும் கண்ணை மறைக்க அவன் நடந்துக் கொண்டதற்கு, பயந்து போய் அவனை விட்டு பத்து மைல் விலகி இருந்தவள், இப்போது அவன் அவளுக்காக என மனதைக் கட்டுபடுத்தி விலகி இருக்க முயற்சி செய்தால், என் மீது உங்களுக்கு ஆசையில்லையா என்ற கேள்வியைக் கேட்கிறாள்!

அவள் கோபத்தில் பேசினாலும் கூட மனதில் இல்லாததா வெளியே வந்தது?

அதற்காக மனதில் குழப்பமும் கலக்கமுமாக இருப்பவளை கட்டாயப்படுத்தவும் அவனுக்கு மனம் வரவில்லை!

வேறு என்ன செய்வது? இதை எப்படி சரி செய்வது?

ஷிவாவின் பார்வைகளை கண்டுகொண்டு மனதினுள் மகிழ்ந்து கொண்டிருந்த அருந்ததியின் மனதிலும் வேறு நினைவுகள் ஓடிக் கொண்டிருந்தன...

சற்று முன் அவளுக்கு ஷிவாவைச் சமாதானப் படுத்துவது தான் பெரிதாகத் தோன்றியதே தவிர, அவன் அவளை அணைத்து முத்தமிட்டதை வித்தியாசமாக கூட நினைக்கத் தோன்றவில்லை!

ஷிவா அவளிடம் அதை மறைமுகமாக நினைவு படுத்தி மன்னிப்பு கேட்கும் வரையில் அது அவளின் மனதை உறுத்தக் கூட இல்லை!

அப்படி என்றால்.....!?

13



கணவன் மனைவி இருவரும் மனதில் ஓடிக் கொண்டிருந்த கேள்விகள் மற்றும் குழப்பங்களை மறைத்துக் கொண்டு சகஜமாக இருப்பதாக காட்டிக் கொண்டு குடும்பத்தினருடன் அந்த திரை அரங்கிற்குச் சென்றார்கள்.

ராதிகா தேர்வு செய்த திரைப்படத்திற்கு டிக்கட் வாங்கினார்கள்.

''ஓகே நீங்க எல்லாம் பொய் உட்காருங்க, நான் ஸ்நாக்ஸ் வாங்கிட்டு வரேன்.'' என்றான் ஷிவா.

''நீ மட்டும் தனியா எப்படி வாங்கிட்டு வருவ ஷிவா? இவரையும் வர சொல்லு.''

''இல்லை, உங்க கூட அவர் வந்தா ஸேப்ட்டியா இருக்கும். நான் மேனேஜ் செய்துப்பேன்...''

''சரி, சீக்கிரமா வா...''

''சரி....'' என்ற ஷிவா, அருந்ததி பக்கம் பார்த்து,

''உனக்கு என்ன வேணும் ரதி?'' என்றான்.

''டேய், எங்க யார் கிட்டேயாவது என்ன வேணும்னு கேட்டீயா? உன் சாய்ஸ்படி வாங்க தானே கிளம்பின?

அப்புறம் என்ன மிசர்ஸ் ஷிவாக்கு மட்டும் தனி கவனிப்பு?''

''ராது, உங்களுக்கு எல்லாம் பாப்கார்ன் பிடிக் கும்னு தெரியும். அருந்ததிக்கு வேற ஏதாவது தனி விருப்பம் இருக்கலாம்ல?''

''அது சரி! ஹேய் க்யூட்டி போதும் என் தம்பியை வச்ச கண்ணு எடுக்காம பார்த்து ரசிச்சது. சீக்கிரம் உனக்கு என்ன பிடிக்கும்னு சொல்லு, எனக்கு கால் வலிக்குது, உள்ளே போய் சீட் கண்டு பிடிச்சு உட் காருவோம்.''

''நான் வேணும்னா உன்னை தூக்கிட்டு போகட் டுமா செல்லம்?'' என எப்போதும் போல் கிடைத்த சின்ன இடைவெளியில் மனைவியிடம் தன் காதல் ரசத்தை பொழிந்தான் கௌஷிக்.

ராதிகா அவனை (பொய்) கோபத்துடன் பார்க்க, அருந்ததி கணவனுக்கு பதில் சொன்னாள்.

''எனக்கும் பாப்கார்ன் போதும்.''

''சரி, பார்த்து போ! ராதிகா கூடவே போ.''

''டேய், தியேட்டர்ல கூட்டமே இல்லை. இல்லை னாலும் அவள் என்ன சின்ன குழந்தையா? நான் வேணா அம்மாவை கையை பிடிச்சு பத்திரமா கூட் டிட்டு போக சொல்றேன். நீ படம் ஆரம்பிக்குற முன் னாடி சீக்கிரமா வந்து சேரு..'' என்றார் நாதன்.

''சரிப்பா....'' என்று கேன்டீனை நோக்கி நடந் தவன், மீண்டும் ஒருமுறை நின்று அருந்ததி ராதிகா

வுடன் செல்கிறாள் என்பதை உறுதி செய்து விட்டு நடந்தான்.

அப்பா சொன்னது போல் அவள் என்ன சிறு குழந்தையா, என மனதினுள் கேள்வி எழுந்தாலும், அவளின் மீது அப்படி கூடுதல் அக்கறை காட்டாமல் இருக்க முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை.

அவளுக்காக பார்த்து பார்த்து எல்லாம் செய்ய வேண்டும்.... அவள் முகத்தில் சிறு வருத்தமும் தோன்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.....

மனம் எங்கோ இருக்க, எதிரில் வந்தவனை பார்க்காமல் இடித்துக் கொண்டான் ஷிவா!

அவசரமாக விலகி அவன் சுதாரிக்கும் போது,

"ஹேய் ஷிவா? வீட்டுக்கு வர டைம் இல்லை? தியட்டர்ல வந்து படம் பார்க்க டைம் இருக்கா?" என்ற குரல் கேட்டது.

எதிரில் நின்ற அந்த குரலுக்கு சொந்தக்காரனான அந்த உயரமான மனிதனை ஆராய்வது போல் பார்த்தவன், சில நொடிகளிலேயே அடையாளம் கண்டு கொண்டான்.

"சூரி, நீயாடா? அடையாளமே தெரியலை."

சூர்யாவின் அருகே நின்றிருந்த பெண்ணை அப்போது தான் கவனித்தவனாக,

"ஹலோ சிஸ்டர்" என்றான்.

"நீ இன்னும் மாறவே இல்லை, ஒரு பொண்ணை பார்த்தால் சிஸ்டர்ன்னு உடனே சொல்லணுமா?

கீத்ஸ் இவன் தான் நான் சொன்னேனே பிரம்ம ரிஷி!''

கீதா அழகாக சிரித்தாள்.

''உங்களை பத்தி நிறைய சொல்லி இருக்கார். நீங்க காலேஜ் படிச்சப்போ அடிச்ச கூத்தெல்லாம் சொல்லி சொல்லி மாளாது இவருக்கு. சாரி உங்க கல்யாணத் துக்கு வர முடியலை.''

''பரவாயில்லைங்க! முக்கியமான வேலை இல் லாமல் சூரி வராமல் இருக்க மாட்டான்னு தெரியும்.''

''ஆமாம் ஷிவா, ரொம்ப முக்கியமான கேஸ் இருந்தது. எங்கே உன் வைப்? பெங்களூர்லேயே ஹனிமூனா?''

''ஹனிமூன் இல்லை சூரி, வீடு காலி செய்துட்டு ஆபீஸ்ல கொஞ்சம் பார்மலிட்டிஸ் முடிச்சிட்டுப் போக வந்தேன். என் மனைவி மட்டுமில்லை அம்மா, அப்பா, அக்கா பேமிலி எல்லோரும் வந்திருக்காங்க. நாங்க ஸ்க்ரீன் 3, நீங்க?''

''நாம எந்த ஸ்க்ரீண்டா கீத்ஸ்?''

''ஸ்க்ரீன் 5ங்க! இன்னைக்காவது உங்க மனை வியை சந்திச்சே ஆகணும். படம் முடிஞ்சப்புறம் மீட் செய்வோமா?''

''ஹேய் கீத்ஸ், உன்னோட பேஷண்ட் இன் னைக்கு ஒன்பது மணிக்கு மேல வரேன்னு சொல்லி இருக்காங்களே, மறந்துட்டியா?''

''என்னங்க ஒன்பது மணிக்கு மேல எல்லாம் பேஷண்ட் பார்க்குறீங்க? நாளைக்கு வந்து பார்க்க சொல்லுங்க.''

''இல்லை ஷிவா, அவ சைக்கியாட்ரிஸ்ட் ஆச்சே, சில சமயம், சில பேர் இப்படி அன்-டைம் ப்ரிபேர் செய்வாங்க. இப்போ எல்லாம் நான் ரொம்ப அலோ செய்றதில்லை. ரொம்ப தெரிஞ்சவங்க, முக்கியமான பேஷண்ட்ஸ்க்கு மட்டும் எக்ஸப்ஷன்.''

சூர்யா சொன்ன முதல் வாக்கியத்திலேயே ஷிவா வின் மனம் லயித்திருந்ததால், அவன் சொன்ன மற்ற விஷயங்கள் அவனின் காதை எட்டவே இல்லை.

சூர்யாவின் மனைவி மனநல மருத்துவரா?

''ஹேய் ஷிவா? என்ன ஆச்சு? ஏன் இப்படி சிலை போல நிக்குற?''

வேகமாக முடிவு எடுத்தவனாக,

''சூரி எனக்கு ஒரு ஹெல்ப் வேணும்டா..... சிஸ்டர் ஒரு டூ மினிட்ஸ்.....'' என்று கீதாவிடம் சொல்லி விட்டு சூர்யாவின் கையை இழுத்துக் கொண்டு மறுபக்கம் சென்ற ஷிவா,

''சூரி நானும் ஒரு சைக்கியாட்ரிஸ்ட் தேடிட்டு இருந்தேன்டா. உன் வைப் வழியா ஒரு ஹெல்ப் வேணும்.''

''என்ன மச்சான் என்ன பிரச்சனை? இதை கேக்கவா இப்படி தனியா அழைச்சிட்டு வந்த? வா கீதா கிட்டேயே நேரா பேசு.''

"இல்லை சூரி எனக்கு அவங்க கிட்ட இதை பத்தி பேச கொஞ்சம்....."

"என்ன? வெட்கமா இருக்கா? உன்னோட இன்சைடா! சொல்லு என்ன விஷயம், என்ன பிரச்சனை உனக்கு?"

"பிரச்சனை எனக்கில்லை, என் மனைவிக்கு....." என்ற ஷிவா, அருந்ததி தன்னிடம் சொன்னதை மேலோட்டமாக நண்பனிடம் கூறினான்.

"ஓ!"

"இதை எப்படி ஹாண்டில் செய்றதுன்னு குழப்பமா இருக்கு சூரி! அவ மனசு வருத்தப் படக் கூடாதுன்னு நான் முடிந்த அளவுக்கு தள்ளி இருக்கேன். ஆனால் இன்னைக்கு ஏதோ கோபத்துல பேசும் போது, உங்களுக்கு என்மேல ஆசை இல்லை, அக்கறை இல்லைன்னு சொல்லிட்டா. பக்கத்துல போனாலும் தப்பு தள்ளி இருந்தாலும் தப்புன்னா நான் என்ன செய்ய?"

"அது அவங்க கோபத்துல யோசிக்காமல் சொன்னதா இருக்கும். உனக்கு கீதாவோட ஹெல்ப் வேணும் அவ் வளவு தானே? அவளை கவுன்சிலிங் செய்ய சொல் றேன்."

"அதில இரு சின்ன சிக்கல்."

"என்ன சிக்கல்?"

"என் மனைவிக்கு தெரியாமல் கவுன்சலிங் செய் யணும். ஒரு தடவை சைக்கியாட்ரிஸ்ட்ன்னு பேச்சு எடுத்ததுக்கே அவள் முகம் ஒரு மாதிரி ஆகிடுச்சு."

''ஓ..... சரி நீ வா நான் கீதா கிட்ட பேசி பார்க்கிறேன்.''

''தேங்க்ஸ்டா.''

கேன்டீனில் இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கன்னத்தில் கை வைத்தபடி அவர்கள் இருவரும் வருவதை பார்த்த கீதா, அவர்கள் இருவரும் அருகே வரவும்,

''என்ன ரகசியம் பேசி முடிச்சாச்சா?'' என்றாள்.

''சாரி சிஸ்டர் தப்பா எடுத்துக்காதீங்க.''

''டேய் இந்த பார்மாலிட்டிஸ் விடு! கீத்ஸ், இவனோட மனைவிக்கு உன் ஹெல்ப் வேணும். அதை பத்தி உன் கிட்ட நேரா பேச இவர் சங்கோஜப் படுறார்.''

''வாவ்! உங்களுக்கு எப்படி இப்படி ஒரு பிரெண்ட் இருக்கார்?''

''ஹேய் நான் ரொம்ப நல்லவன், டேய் ஷிவா சொல்லேன்டா.''

''ஆமாம் ஆமாம் ரொம்ப நல்லவன், ஒரு நாளுக்கு மூணே மூணு தம் தான் அடிப்பான்..... வெறும் நாலஞ்சு பொண்ணுங்களை மட்டும் தான் சைட் அடிப்பான்..... அப்புறம்.''

''வேண்டாம்டா என் நண்பா, இதுவரைக்கும் நீ செய்த உதவியே போதும்டா! அவன் சும்மா சொல்றான் கீத்ஸ், நீ முறைக்காத.....''

''சைட் அடிக்குறது எனக்கே தெரியும், தம் வேறயா?''

''ஹேய் ஹேய்! அதெல்லாம் ரொம்ப வருஷத் திற்கு முன்பே விட்டாச்சு.''

''உங்களை இருங்க பேசிக்குறேன். தேங்க்ஸ் ஷிவா, நீங்களும் நானும் இப்போ இருந்து பிரெண்ட்ஸ்.''

''ஓகே சிஸ்டர்! டீல்!''

''மவனே, உனக்கு ஹெல்ப் செய்ய நினைச்சால் நீ எனக்கே ஆப்பு வைக்குரீயா?''

''ஒரு டாக்டர் பேசுற மாதிரியா பேசுறீங்க? என்ன லாங்வேஜ் இது? ஒழுங்கா பேசுங்க! சரி சரி மூவி ஸ்டார்ட் செய்ற டைமே ஆச்சு! ஷிவா உங்க வைப்பை மூவி முடிச்சு வரும் போது மீட் செய்றேன். இவர் கிட்ட இருந்து விஷயத்தை தெரிஞ்சுக்குறேன்.''

''தேங்க்ஸ் சிஸ்டர்..... அப்புறம் மீட் செய்யும் போது எதிர்பாராமல் சந்திக்குற மாதிரி காட்டிப்போம்.''

''ஏன்?''

''நான் சொல்றேன் கீத்ஸ், இப்போ வா போகலாம், அப்புறம் டைட்டில் கார்ட் பார்க்கலைன்னு வருத்தப் படுவ. சரிடா ஷிவா நாங்க இந்த என்ட்ரன்ஸ் கிட்ட இருப்போம்.....''

''தேங்க்ஸ்டா! தேங்க்ஸ் சிஸ்டர்.''

''இன்னும் நாங்க எதுவும் செய்யவே இல்லையே. சோ உங்க நன்றியை அப்புறமா சொல்லுங்க.''

ஷிவா பதிலுக்கு புன்னகைக்க, இருவரும் அவ னிடம் விடை பெற்று கிளம்பினார்கள்.

"எவ்வளவு நேரம் ஷிவா? இனிமேல் எப்போதும் இதோ இந்த பொண்ணையும் கூட அழைச்சிட்டு போ! ஏன் அவரை இன்னும் காணும் காணும்னு சொல்லி என்னை டார்ச்சர் செய்துட்டா."

ராதிகாவிற்கு பதில் சொல்லாமல் அருகே இருந்த அருந்ததியை கனிவுடன் பார்த்தவன்,

"சாரிம்மா, லேட் ஆச்சு....." என்றான்.

"இல்..... இல்லை..... ப..... பரவாயில்லை....."

"ஹலோ சார், கேள்வி கேட்டவ நான், பதில் சொல்றது அவளுக்கா?"

"ராது, புதுசா கல்யாணம் ஆனவங்க, கொஞ்சம் நேரம் அவங்களை டிஸ்டர்ப் செய்யாமல் இரேன்! எனக்கு சொல்வீயே அந்த மாதிரி கொஞ்ச நேரத்திற் காவது நல்ல நாத்தனாரா இரேன்."

"யூ டூ அம்மா!"

"நீ கலங்காதே செல்லம்! நான் இருக்கேன்! என்னை எவ்வளவு வேணா டிஸ்டர்ப் செய், நான் எதுவுமே சொல்ல மாட்டேன்."

"தேங்க்ஸ் கௌஷிக்! நீங்க தான் நல்லவர்."

"நமக்குள்ள என்ன செல்லம் தேங்க்ஸ் எல்லாம்?"

அவர்கள் இருவரின் பேச்சை கண்டுகொள்ளாமல், வாங்கி வந்திருந்த பாப்கார்னை ஒவ்வொருத்தரிடமும்

கொடுத்து விட்டு, அருந்ததியின் அருகே இருந்த இருக்கையில் அமர்ந்தான் ஷிவா.

அவன் வெறுங்கையுடன் இருப்பதை கவனித்த அருந்ததி,

''உங்களுக்கு எதுவும் வாங்கலையா?'' எனக் கேட்டாள்..

''இதோ இருக்கே.....'' என்று அவளின் கையில் இருந்ததை காட்டிவிட்டு அவன் செல்லமாகக் கண் சிமிட்டவும், அவள் முகத்தில் நாணம் எட்டிப் பார்த்தது.

அவனின் பார்வை, சின்னச் சின்ன சீண்டல்கள் என அனைத்திற்கும் அவள் வெட்கப்பட்ட பாங்கு அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அப்படி வெட்கப்படும் போது அவளின் முகத்தில் மின்னிய அந்தக் கூடுதல் அழகு காந்தமாக அவனை இழுத்தது.....

மனதை அடக்கி பார்வையைத் திருப்பியவன், மெல்ல நகர்ந்து மனைவியின் தோளை உரசியபடி அமர்ந்தான். அவளின் கரத்தை எடுத்து பிணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவலைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

சூர்யாவை சந்தித்ததும் நல்லதாக போய் விட்டது! கீதாவின் மீது அவனுக்கு உயர்ந்த அபிப்பிராயம் எழுந்திருந்தது.

எல்லாம் சீக்கிரமே சரி ஆகி விடும் என்ற நம்பிக்கை அழுத்தமாக மனதினுள் எழுந்தது.

"செம மொக்கை படம்!"

"நீ செலக்ட் செய்த படம் வேற எப்படி இருக்கும்?"

"சும்மா இப்படி குறை சொல்ல கூடாது. ஒரு படத்தை எடுக்குறது ஈசி இல்லை. எவ்வளவு பேரோட உழைப்பு அதுல அடங்கி இருக்கு! பிடிக்காததை விட்டுட்டு பிடிச்சதை மட்டும் எடுத்துக்கப் பழகிக்கணும்."

"ஏன்ப்பா நீங்க அம்மாவை கல்யாணம் செய்தப் புறம் இப்படி தத்துவ ஞானியா மாறுனீகளா இல்லை எப்போவுமே இப்படி தானா?"

நாதன் மனைவியின் பக்கம் பார்த்துவிட்டு பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தார்.

"அடடா! அப்பா பதில் சொல்லக்கூட பயப்படுறார்! அம்மா நீங்க ரொம்ப மோசம்! எஸ்.பி. சௌத்ரியான எங்க அப்பாவை இப்படி மிரட்டி வச்சிருக்கீங்க."

"வாயாடி! வாயை மூடிட்டு சும்மா வா! பெரிய வங்க சின்னவங்கன்னு ஒரு வித்தியாசமும் இல்லை."

"எப்படி வரும் அம்மா? உங்களை பார்த்தால் என்னை விட ஒண்ணு இரண்டு வயசு பெரிய அக்கா போல இருக்கீங்க? அப்புறம்....."

ஆட்காட்டி விரலை மிரட்டுவது போல் காட்டிய லக்ஷ்மி,

"ஓவரா பேசின அவ்வளவு தான்" என்றாள்.

"வார்த்தைல இருக்க கோபம் முகத்துல காணும்? ஏதோ ரொம்ப சந்தோஷப்படுற மாதிரி இருக்கு!"

"ஹேய்...."

"இல்லை இல்லை, உங்களை இதுக்கு மேல எதுவும் சொல்லலை, ஓகே க்யூட்டி இது உன் டர்ன்."

"என்னது?"

"படத்துல வந்த செகன்ட் பாட்டோட பர்ஸ்ட் லைன் சொல்லு பார்ப்போம்."

"எந்த பாட்டு."

"அதான் ட்ரெயின் மேல பறந்துட்டே ஒரு பாட்டு பாடினாங்களே அது...."

"அது....."

"பாவம் ராது அவ! இந்த படத்தை வச்சு எக்ஸாமா எழுத போறா?"

"அதில்லை இங்கே பாயிண்ட், மேடம் படத்தை கவனிக்கவே இல்லை, அது தான் விஷயம்! அவங்க அவங்களோட ட்ரீம் லேண்ட்ல இருந்தாங்க."

ஷிவாவின் அருகாமையில், அவனால் மனதினுள் ஏற்பட்டிருந்த கிளர்ச்சியில், அருந்ததி உண்மையி லேயே படத்தை கவனிக்கவில்லை தான். எனவே என்ன சொல்வது என்று அவள் விழித்தாள்.

"இருந்தா இருந்துட்டு போகட்டும். புதுசா கல் யாணம் ஆனவங்க....."

ராதிகாவின் அருகே அதுவரை அமைதியாக நடந்து கொண்டிருந்த கௌஷிக்,

"ராது, புதுசா கல்யானமானவங்கன்னு இல்லை, நான் கூட வானத்துல பறந்துட்டு தான் இருந்தேன்.

அந்த படத்தோட காச் மூச் சத்தம் எதுவுமே என் காதில விழலை தெரியுமா?'' என்றான்.

இம்முறை அவனைப் பொய்யாகவும் முறைக்காது அன்புடன் பார்த்தவள், மேலே பேசாமல் அமைதியாக இருந்தாள்.

கௌஷிக் எப்போதும் இப்படித்தான்! அவனின் அதீத அன்பில் அவளைத் திக்குமுக்காட செய்து வாயடைக்க செய்து விடுவான்.

ஆறு வருடங்களாக பழகிப் போயிருந்த அவனின் இந்த அன்பில் அப்போதும் மனம் நெகிழ, வழக்க மான கலகல பேச்சை விட்டு விட்டு அமைதியாக அவனுடன் நடந்தாள்.

ஷிவா அவர்களின் பேச்சில் கலந்து கொள்ளாமல் கண்களால் சூர்யாவையும், கீதாவையும் தேடிக் கொண்டிருந்தான்.

''ஷிவா, அது உன் பிரெண்ட் தானே? அன்னைக்கு வீட்டுக்கு வந்திருந்தாங்கன்னு சொன்னேனே.''

லக்ஷ்மி சுட்டிக் காட்டிய திசையில் நின்றிருந்த சூர்யா, கீதாவைப் பார்த்தவனுக்கு மனதினுள் ஆசு வாசம் ஏற்பட்டது.

''ஆமாம்மா.....'' என்றவன், வேகமாக நடந்து சூர்யா நின்றிருந்த பக்கம் சென்றான்.

''எந்த பிரெண்ட்ம்மா?''

''சூர்யா ஞாபகம் இருக்கா? இவனோட டாக்டர் பிரெண்ட்.''

"ஓ! அவனா?"

"ஆமாம் அவன் மனைவியும் டாக்டராம். அன்னைக்கு வீட்டுக்கு வந்திருந்தாங்க ஆனால் ஷிவா அப்போ வீட்டில் இல்லை."

ஷிவா பக்கமே பார்வையை வைத்திருந்த அருந்ததியின் காதுகளில் லக்ஷ்மி சொன்னது காதில் விழுந்தது.

அப்படி என்றால் இது டாக்டர் கீதாவா?

எப்படியாவது டாக்டரிடம் பேசி அவளின் குழப்பத்திற்கு தீர்வு காண வேண்டும்.

"இவனை ஞாபகம் இருக்காப்பா? சின்ன வயசில கிரிக்கெட் விளையாடி நம்ம வீட்டு ஜன்னலை எப்போதும் உடைப்பானே சூர்யா."

"டேய் அங்கிளுக்கு என்னை இன்ட்ரோ செய்ய இதை விட நல்ல விஷயம் எதுவும் கிடைக்கலையா? எப்படி இருக்கீங்க அங்கிள்? கொஞ்சம் கூட மாற்றமே இல்லாமல் அப்படியே இருக்கீங்க?"

"டாக்டர் சார், அப்பாக்கு வைக்குற ஐஸை மறக்காமல் அம்மாக்கும் வைங்க! இல்லைன்னா அம்மா...."

"நீங்க சொல்லணுமா அக்கா? ஆன்ட்டி கிட்ட இதை எல்லாம் அன்னைக்கு வீட்டுக்கு வந்திருந்த போதே சொல்லியாச்சு. நீங்க எப்படி இருக்கீங்க?"

மேலும் சில வினாடிகள் நல விசாரிப்புகளை தொடர்ந்தார்கள்....

"நாங்க சன்டே கிளம்பிடுவோம்..... சன்டே லஞ்ச் எல்லோரும் வெளியே போய் சாப்பிடுவோமா?" என்றான் ஷிவா.

''போகலாமே, எந்த ஹோட்டல் போகலாம்?'' என்று மனைவியை பார்த்து கேட்டான் சூர்யா.

''உங்க சாய்ஸ்'' என்றாள் கீதா.

''வெளியே ஏன்? வீட்டிலேயே சாப்பிடலாமே?'' என்றாள் அருந்ததி தயக்கத்துடன்.

வீட்டில் என்றால் கீதாவுடன் தனிமையில் பேச வாய்ப்பு கிடைக்கலாம் என்ற எண்ணம் அவளுக்கு.

கீதா ஆர்வத்துடன் அருந்ததியை கவனித்தாள். அழகு மட்டுமில்லாமல் அந்த முகத்தில் மின்னிய கனிவு, பரிவுடன் கலந்த அப்பாவித்தனமும் அவளை கவர்ந்தது.

''ஆமாம் நானும் அதையே தான் சொல்ல வந்தேன். இரண்டு பேரும் சன்டே காலையிலேயே வீட்டுக்கு வாங்க.... ஒண்ணா டைம் ஸ்பெண்ட் செய்துட்டு, நாங்க சென்னை கிளம்புறோம்'' என்றாள் லக்ஷ்மி.

''உங்களுக்கேன் ஆன்ட்டி வீண் சிரமம்?''

''இதில என்னம்மா சிரமம் இருக்கு?''

சூர்யாவும், சிவாவும், கீதா பக்கம் பார்த்தார்கள்.

''என்ன இரண்டு பேரும் இப்படி பார்க்குறீங்க? நான் சமையல்ல ரொம்ப வீக்! வீட்டு சமையல் கிடைச்சா மிஸ் செய்வோமா என்ன? சன்டே ஆன்ட்டி சமையலை ஒரு வெட்டு வெட்டிடுவோம்'' என்றாள் கீதா.

"உனக்கு என்ன பிடிக்கும்னு சொல்லு. உனக்கு பிடிச்சது போலவே செய்து அசத்திடுவோம்."

"நீங்க இப்படிக் கேட்டதே போதும் ஆன்ட்டி. உங்களுக்கு பிடிச்சதா ஈசியா எதை வேணா செய்ங்க.... நான் சமையல்ல வீக், எனக்கு ஹெல்ப் எல்லாம்....."

"இதுக்கெல்லாம் பீல் செய்யாதீங்க. நீங்க மட்டும் இல்லை நான் கூட சமையல் சப்ஜெக்ட்டில வீக் தான்....." என்றாள் ராதிகா.

அவர்களின் பேச்சில் கலந்து கொள்ளாமல் இரண்டு மனங்கள், ஞாயிற்றுக்கிழமை சீக்கிரம் வர வேண்டுமே என்று வேண்டிக் கொண்டிருந்தன...

ரதிக்கு தெரியாமல், பேசி கீதாவால் விஷயங்களை சேகரித்து உதவ முடியுமா? என்று ஷிவாவும், மற்றவர்களுக்கு தெரியாமல் ஞாயிறு கீதாவுடன் எப்படி பேசுவது என்று அருந்ததியும் மனதினுள் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தனர்.

14



"வாடா! வாங்க சிஸ்டர்! சொன்னது போல கரக்ட் டைமுக்கு வந்துட்டீங்களே! சூப்பர்!"

"ஆன்ட்டி சமையல் சாப்பிடுற ஆர்வத்துல நான் நைட்டெல்லாம் தூங்கவே இல்லைடா. நாக்கு செத்து போயிருக்கு!"

கணவனை ரகசியமாக பார்த்து முறைத்த கீதா, ''உங்களை வீட்டில் கவனித்துக் கொள்கிறேன்'' என்று ரகசிய 'பயங்கர' செய்தியை அவனுக்கு அனுப்பி விட்டு மற்ற பெண்களைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

அவளருகில் வந்து வாஞ்சையுடன் கையை பற்றிக் கொண்ட ராதிகா,

''அவங்களுக்கெல்லாம் இப்படி நம்மளை வாருற வேலை தான், இதுக்கு எதுக்கு நீங்க டென்ஷன் ஆகுறீங்க?'' என்றாள்.

வாயை பிளக்காத குறையாக ஆச்சர்யப்பட்ட கீதா,

''எப்படிங்க இப்படிலாம்? சில சமயம் நான் கொடுக்குற மெசேஜ் அவருக்கு புரியவே புரியாது.''

''அவங்க எல்லாம் நம்ம ரேஞ்சுக்கு புத்திசாலியா மாறினால் அப்புறம் நம்ம கெத்து என்ன ஆறது?''

''அதை சொல்லுங்க!'' என்றாள் கீதா சிரிப்புடன்.

ஆண்கள் ஹாலில் அமர்ந்து பேச, பெண்கள் சமையலறை பக்கம் தங்கள் பேச்சை தொடர்ந்தனர்.

கீதாவும், ராதிகாவும் நாற்காலிகளில் அமர்ந்து பேச, லக்ஷ்மி சமையலில் ஈடுப்பட்டபடி அவர்களின் உரையாடலில் அவ்வப்போது கலந்து கொண்டாள்.

லக்ஷ்மிக்கு உதவிக் கொண்டிருந்த அருந்ததி மௌனத்தில் மூழ்கிப் போனவளைப் போல் அமைதி யாக இருந்தாள்.

கீதா வந்த போது வரவேற்க என்று சிந்திய புன்னகை தவிர ஒரு வார்த்தையும் பேசவில்லை.

கீதாவின் பார்வை அவ்வப்போது அருந்ததியின் பக்கம் போவதை கவனித்த ராதிகா,

''ஷிவா செம லக்கி கீதா. அருந்ததி சமையல்ல ரொம்ப கெட்டிக்காரி. அவள் சமையலை சாப்பிட்டால் அம்மா சமையல் கூட செகன்ட் ஆகிடும்'' என்று வழக்கமான குரலில் சொல்லிவிட்டு, பின், குரலை தணித்துக் கொண்டு,

''அவ கொஞ்சம் ரிசர்வ்ட் டைப் கீதா. ரொம்ப அமைதி! நம்மளை போல எல்லாம் இல்லை ரொம்ப நல்ல பொண்ணு! அமைதியா பேசாமல் இருக்கா ளேன்னு தப்பா நினைக்காதீங்க'' என்றாள்.

கீதா ஆர்வத்துடன் ராதிகாவைப் பார்த்தாள்.

''என்ன பார்க்குறீங்க?''

''இல்லை இந்த அளவுக்கு அவங்களை தாங்குறீங் களேன்னு ஆச்சர்யமா இருக்கு. பொதுவா சிஸ்-இன்-லா உறவு கொஞ்சம் கடி ஆச்சே?''

''அவள் ஷிவாவோட மனைவின்னு மட்டுமில்லை எனக்கு நல்ல ப்ரெண்டும் கூட! அந்த ஷிவா பையன் தான் நமக்கு கடி, க்யூட்டி செம ஸ்வீட்டி.''

''ஹா ஹா! டி.ஆர் ரேஞ்சுக்கு ரைமிங் வசனம் எல்லாம் பேசுறீங்க! அருந்ததி எப்படி உங்களை சமாளிக்குறாங்க.''

''அவ அமைதியான டைப்புன்னு சொன்னதுக்காக கேட்குறீங்களா? மேடம் செம ஸ்மார்ட்! தேவையான விஷயத்துக்கு எல்லாம் நல்லா பேசுவாங்க! ஷிவாக்கு

நான் செல்லமா போலி சாமியார்னு பேரு வச்சிருந் தேனா....."

"சாமியாருன்னா?"

"ஆமாம், அவன் அப்படி தான் இருந்தான். அதை விடுங்க, அது நமக்கு முக்கியமில்லை. இந்த மேடம் மத்த விஷயத்துக்கு எல்லாம் முட்டை கண்ணை காமிச்சு அப்பாவியா ஒரு லுக் விடுவாங்க, ஆனால் இந்த பேரை கேட்டுட்டு என்ன சொன்னாங்க தெரியுமா?"

"என்ன சொன்னாங்க?" எனக் கேட்டாள் கீதா வெகு ஆர்வத்துடன்.

"அவருக்கு தான் கல்யாணம் ஆகிடுச்சே இன்னும் ஏன் சாமியாருன்னு சொல்றீங்க? வேற பேரு ஏதாவது வைங்கன்னு சொன்னாள்! நான் வேற பேரு வச்சாலும் மேடம் கட்டாயம் லொட்டு லொசுக்குன்னு ஏதாவது சொல்வாங்க! அவனுக்கு நான் பேரு வச்சா இவங்க ளால தாங்க முடியுமா? செம பொஸஸிவ்!"

"ஓ!" என்றாள் கீதா யோசனையோடு.

"பட் செம க்யூட்! எனக்கு நிறைய பிரெண்ட்ஸ் கிடையாது, இவள் வந்தப்புறம் அந்த குறை இல் லாமல் போச்சு."

"நம்பவே முடியலையே!"

"ஏன் நாங்க இரண்டு பேரும் பிரெண்ட்சா இருக்க கூடாதா?"

"அதைச் சொல்லலை, உங்களுக்கு பிரெண்ட்ஸ் இல்லைன்னு சொன்னீங்களே அதை தான் நம்ப கஷ்டமா இருக்கு!"

''பேசுறவங்க எல்லோரையும் பிரெண்டுன்னு சொல்ல முடியுமா என்ன? அதிலும் பாதி பேர் மன சில ஒண்ணை வச்சுட்டு வெளியே ஈன்னு இளிச் சுட்டுப் பேசுறவங்க! ஆனால் அருந்ததி அப்படி இல்லை!''

''வெரி இன்ட்ரஸ்டிங்.''

அப்போது அவர்கள் பக்கம் எட்டிப் பார்த்த லக்ஷ்மி,

''என்ன இரண்டு பேரும் ரகசியாமா பேசுறீங்க? அப்படி என்ன எங்களுக்கு தெரியக் கூடாத விஷயம்?'' எனக் கேட்டாள்.

''ரகசியம் இல்லை ஆன்ட்டி. டிவி சீரியல் விட சுவா ரசியமான ஒரு குடும்பக் கதையை ராதிகா சொல் லிட்டு இருந்தாங்க.''

''என்ன சொன்னா? அருந்ததி அவளோட பெஸ்ட் பிரெண்டுன்னா?''

''வாவ்! எப்படி ஆன்ட்டி?''

''இரண்டு மூணு வாரமா இதையே தானே சொல் லிட்டு இருக்கா! அருந்ததி அவளைப் போலவே எனக்கு கூட பெட் தான்னு சொன்னால் கேட்க மாட்டாள், அவளுக்கு மட்டும் தான் பிரெண்டுன்னு கதை விடுவா. உண்மையில் அருந்ததி எங்க வீட்டுல எல்லோருக்கும் செல்லப் பொண்ணு!''

தன் கையை மெல்ல கிள்ளிப் பார்த்துக் கொண்ட கீதா,

"ஹா ஹா! இதெல்லாம் நிஜம் தானா? இல்லை எல்லோரும் சும்மா பில்ட்-அப் கொடுக்குறீங்களா?" என்றாள்.

லக்ஷ்மி சொன்னதைக் கேட்டு முகத்தில் பெரிய புன்னகையுடன் அதுவரை அமைதியாக இருந்த அருந்ததி,

"சந்தேகமே வேண்டாம் டாக்டர், அண்ணியும் அத்தையும் சொல்றது ரொம்ப குறைவு! என்னோட அதிர்ஷ்டம் இப்படி உறவுகள் கிடைத்தது" என்றாள்.

அவளை அமைதியாக ஒரு பார்வை பார்த்த கீதா,

"யெஸ் அருந்ததி யூ ஆர் வெரி லக்கி!" என்றாள்.

"என்னம்மா கீதா அதுக்குள்ளே எழுந்துட்ட? இன்னும் கொஞ்சம் சாதம் போட்டுக்கோ!"

"அம்மாடியோ! நோ ஆன்ட்டி, இதுக்கு மேல ஒரு பருக்கை சாப்பிட்டாலும் அவ்வளவு தான்!"

"ஆன்ட்டி நீங்க வருத்தப்படாதீங்க, அதெல்லாம் இந்த பக்கம் கொடுங்க. என் வயிறு அமுதசுரபிக்கு ஆப்போசிட்! எவ்வளவு கொடுத்தாலும் அக்ஸெப்ட் செய்துக்கும்."

"ஆப்போசிட் கதை எல்லாம் ஏன்! உங்களுக்கு இருக்குறது யானை பசி நோய்."

"டாக்டருக்கே வியாதியா? உனக்கு உடம்பு சரி இல்லைனா யாருடா வைத்தியம் பார்ப்பது?"

"ஹா அதையேன் கேட்குற ஷிவா, தெரியாத் தனமா டாக்டரைக் கல்யாணம் செய்துக்கிட்டேன்,

எனக்கு தப்பி தவறி சளி பிடிச்சதுன்னு வை அவ் வளவு தான்.....''

சூர்யா புலம்பிக் கொண்டிருக்க, அதைக் கண்டு கொள்ளாமல் கை கழுவி வந்த கீதா, ஒரு ஓரமாக நின்றிருந்த அருந்ததியின் அருகே சென்றாள்.

''நீங்க சாப்பிடலையா?''

''சாப்பிடணும்..... என்ன நீங்க இவ்வளவு கம்மியா சாப்பிட்டீங்க?''

''இது கம்மியா? அப்போ நான் தினம் சாப்பிடு றதை பார்த்தால் என்ன சொல்வீங்கன்னு தெரியலை. ஆமாம், எப்போ சென்னை கிளம்புறீங்க?''

''இன்னைக்கு ஈவ்னிங் டாக்டர்.''

''எல்லாத்தையும் பேக் செய்தப்புறம் நாங்க வந்து தொல்லை செய்திட்டோமோ?''

''இல்லை டாக்டர்! எங்களுக்கு சமைக்கன்னு தேவையான பாத்திரம் வெளியே வச்சிருந்தோம். மத்தபடியும் இவர் திங்க்ஸ் எல்லாம் மட்டும் தான் எடுத்து பேக் செய்தோம்.''

''இந்த வீடு ரொம்ப நல்லா இருக்கு! நல்லா காத்தோட்டமா இருக்கு. ஷிவா மட்டும் தான் இங்கே தங்கி இருந்தாரா?''

''ஆமாம்! அத்தை, மாமா எல்லாம் அப்பப்போ வருவாங்களாம் அதனால தனியா தான் தங்கி இருந்தார்'' என்ற அருந்ததியின் பார்வை கணவனின் பக்கம் சென்றது.

நண்பனுடன் பேசிக் கொண்டிருந்த ஷிவாவும் அவளை தான் பார்த்துக் கொண்டிருந்தான். கீதா ஏதேனும் கேட்டு அவள் மனம் வருந்தி விட கூடாதே என்ற கவலை அவனுக்கு!

அருந்ததியின் பார்வையை தொடர்ந்து பார்த்த கீதாவின் முகத்தில் சின்னப் புன்சிரிப்பு தோன்றியது.

சூர்யா, நாதன், கௌஷிக், ராதிகா என அனை வருடனும் அரட்டை அடித்தபடி உணவு உண்டு கொண்டிருந்தான்.

ராதிகா சாப்பிட்டு முடித்து வந்தால் அருந்ததி யுடன் தனிமையில் பேசுவது கடினம் என்பது புரிந்த தால், அவசரமாக யோசித்து,

''சும்மா, மொட்டை மாடி போய் பார்த்துட்டு வர லாமா அருந்ததி?'' என்றாள்.

அதற்காகவே காத்திருந்தது போல்,

''வாங்க....'' என ஆர்வத்துடன் அவளை அழைத்துச் சென்றாள் அருந்ததி.

இருவரும் மாடிக்குச் செல்வதை கவனித்த ஷிவா வின் மனதினுள் பட்டாம்பூச்சிகள் படபடத்தன!

புது பிரச்சனை எதுவும் வராமல் இருக்க வேண் டுமே....!!!!

தாளிடப் பட்டிருந்த மாடிக் கதவை திறந்த அருந்ததி, கீதா உள்ளே வர காத்திருந்து, பின் அதை சாத்தி விட்டு,

''டாக்டர் விருந்துக்கு வந்த வீட்டில இப்படி கேட்குறேன்னு தப்பா நினைக்காதீங்க! உங்க கிட்ட ஒரு முக்கியமான விஷயத்தை பத்திப் பேசணும்'' என்றாள்.

''அம்மா அருந்ததி எங்கே?''

''இங்கே தானே இருந்தா ராது, நான் பார்க் கலையே, சாப்பிடாமல் எங்கே போனாள்?''

''நேரத்துக்கு சாப்பிடுற பழக்கமே இல்லை. இதுக்கு தான் அப்போவே சாப்பிட கூப்பிட்டேன். நீங்களும் வந்திருந்தா அவளும் சாப்பிடிருப்பா.''

''மணி ஒன்னரை தானே ஆகுது ராது! அவளுக்கு பசிச்சிருக்காது.''

''ப்ச்! என்னம்மா நீங்க! டேய் ஷிவா அருந்ததி எங்கேடா?''

அவசரமாக கை கடிகாரத்தை பார்த்த ஷிவா, கீதாவும், அருந்ததியும் மாடிக்குச் சென்று முக்கால் மணி நேரம் ஆகி இருப்பதை உணர்ந்துக் கொண்டு,

''இவன் வைப்போட மாடிக்குப் போனாள் ராது'' என்றான்.

இதற்கும் மேல் அவளை கீதாவுடன் தனியே விட்டு வைக்க அவனுக்குக் கவலையாக இருந்தது. சின்னச் சின்ன விஷயங்களுக்கு எல்லாம் குழந்தை யாக விழிப்பவள், கீதா கேட்கும் கேள்விகளை எப்படி ஏற்றுக் கொள்வாள்?

இந்த திட்டமே பைத்தியக்காரத்தனம்! மெதுவாக ரதியிடம் பேசி கீதாவுடன் பேச வைத்திருக்க வேண்டும்.

இப்போது கீதாவையும் தர்ம சங்கடமான நிலைக்குத் தள்ளி விட்டு விட்டான்.

ராதிகா மாடிக் கதவை திறந்த போது, கீதா அருந்ததியிடம் மும்முரமாக எதையோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

''என்ன இரண்டு பேரும் பயங்கர ரகசிய டிஸ்கஷனில் இருக்கீங்க?''

ராதிகாவின் குரலை கேட்டு இருவரும் அவள் பக்கம் பார்த்தனர்.

''டிஸ்கஷன் எல்லாம் இல்லை ராதிகா, அருந்ததி அவங்க ஊரு பத்தி சொல்லிட்டு இருந்தாங்க.''

''ஓ! மேடம்க்கு அந்த ஊரைப் பத்தி பேச ஆரம்பித்தால் நேரம் போவதே தெரியாதே.''

''ஆமாம்! அவங்க சொன்னதை கேட்டு எனக்கும் கூட அந்த ஊரை ரொம்ப பிடிச்சிருச்சு.''

''இவளை தானே பேசாமடந்தைன்னு நினைச்சீங்க? நான் தான் சொன்னேனே வேண்டிய விஷயத்துக்கு எல்லாம் மேடம் வாய் கிழிய பேசுவாங்க. என்ன க்யூட்டி சரி தானே?''

''எல்லாம் உங்க ட்ரெயினிங் புண்ணியம் தானே?''

''சரி, வா வா, அப்புறம் என்னோட புகழ் பாடலாம்! வந்து சாப்பிடு. அம்மா உனக்காக வெயிட் செய்துட்டு இருக்காங்க.''

"அடடா அத்தை இன்னும் சாப்பிடலையா, வாங்க போகலாம்." என்றபடி ராதிகாவின் பின் நடந்த அருந்ததி, கீதாவிடம் கண்களால் நன்றி சொன்னாள்.

புரிந்துக் கொண்டவளாக சின்ன கண் அசைப் புடன் பதிலுக்குப் புன்னகைத்தாள் கீதா.

ஷிவாவிற்கு தலையை பிய்த்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது.

மாடியில் இருந்து வந்த அருந்ததியின் முகத்தில் அவன் கலவரப்பட்டது போல் எந்த மாற்றமும் இல்லை மாறாக அவள் சிந்தனையில் ஆழ்ந்திருப்பது புரிந்தது.

கீதாவோ அவன் பக்கமே பார்க்காமல் ராதிகாவுடன் கதை பேசிக் கொண்டிருந்தாள்.

பேச வேண்டிய விஷயத்தை பேசினார்களா இல் லையா?

"கீத்ஸ், நாம கிளம்புவோமா? நாம கிளம்பின பிறகு தான் மீதி இருக்கும் பொருள் எல்லாத்தையும் எடுத்து பேக் செய்துட்டு அவங்க கிளம்புவாங்க."

"என்ன பிரெண்ட் நீங்க? நாமளும் ஹெல்ப் செய்வோமே?"

"இல்லைம்மா, வேண்டாம், நாங்களே மேனேஜ் செய்துப்போம்" என்றார் நாதன்.

"இப்படி ஏதாவது செய்து சாப்பிட்டதை டைஜெஸ்ட் செய்துட்டு திரும்ப ஒரு ரவுண்ட் வெட்டலாம்னு நினைச்சேன். என்ன அங்கிள்....?"

"அதுக்காக நீ கஷ்டப் பட வேண்டாம் கீதா. உங்க இரண்டு பேருக்கும் வீட்டுக்கு எடுத்துட்டுப் போக நான் தனியா எடுத்து வச்சாச்சு!" என்ற லக்ஷ்மி மேஜை மீதிருந்த பெரிய டிபன் கேரியரைக் காட்டினாள்.

"வாவ் ஆன்ட்டி, தேங்க் யூ, தேங்க் யூ! இதுக்கா கவே நான் வேலை செய்தாகணுமே!" என்றான் சூர்யா.

அதன் பின் அனைவரும் மும்முரமாக மீதி இருந்த பொருட்களை அடுக்கும் வேலையை செய்தார்கள்.

பின் ஏற்கனவே அட்டை பெட்டிகளில் வைத் திருந்த பொருட்களுடன் அவற்றையும் சேர்த்து காரில் வைத்தார்கள்.

சிறிய பெட்டிகளை அமர்பவர்களுக்கு தொல்லை தராத வண்ணம் அடுக்கி வைத்தவர்கள், மற்றவற்றை காரின் மேலே கட்டி வைத்தார்கள்.

"இந்த சேர், டேபிள் எல்லாம் வைக்க இடம் இல் லையே?"

"அதெல்லாம் ஏடுத்துட்டு போற ப்ளான் இல் லைடா. ஆல்ரெடி ஹவுஸ் ஓனர் கிட்ட பேசிட்டேன் அவர் வீட்டிலேயே வச்சுட்டு போக சொன்னார்."

"ஓகே! அப்போ வேலை முடிஞ்சது! வீட்டுக்குப் போய் அடுத்த ரவுண்ட் சாப்பாடை சாப்பிட வேண் டியது தான்."

"ஏன்டா சாப்பாடை கண்ணிலேயே பார்ததில் லைன்ற மாதிரி இப்படி ஷோ காமிக்குற? முன்னாடி

பார்த்ததுக்கு இப்போ நல்லா வெயிட் போட்டு இருக்க! சிஸ்டர் சமையலை சாப்பிடாமலா இந்த எக்ஸ்ட்ரா கிலோ எல்லாம் வந்திச்சு.''

''அதை சொல்லுங்க ஷிவா! கிச்சன்ல எதைச் செய்தாலும் செய்து முடிக்குறதுக்கு முன்னாடி எடுத்து சாப்பிட்டு காலி செய்றது, அப்புறம் வந்து இப்படி ஷோ காட்ட வேண்டியது. ஆனால் ஆன்ட்டி, அருந்ததி உங்க இரண்டு பேர் கை வண்ணம் அருமையோ அருமை! இன்வைட் செய்ததுக்கு ரொம்ப தேங்க்ஸ். இன்னைக்கு டே எப்படிப் போச்சுன்னே தெரியலை! உங்களைப் போல ஒரு பேமிலியை நான் பார்த்ததே இல்லை. நிறைய நாள் உங்களை எல்லாம் மிஸ் செய்ய போறேன்.''

கீதாவின் கரத்தை பற்றிய ராதிகா,

''அதெல்லாம் மிஸ் செய்ய மாட்டீங்க. உங்க போன் நம்பர் கொடுத்திருக்கீங்கல்ல, நாங்க அதெல்லாம் கரெக்ட்டா டச்ல இருப்போம்.'' என்றாள்.

''தேங்க்ஸ் ராதிகா..... நீங்களும் டைம் கிடைக்கும் போது பேசுங்க அருந்ததி.''

''பேசுறேன் டாக்டர்.''

''ப்ச்.... என்னை கீதான்னு கூப்பிடுங்கன்னு சொன் னேனே!''

''கீத்ஸ் போதும் செல்லம் கொஞ்சல்ஸ், கிளம்பு வோமா?''

''கிளம்பலாம்ங்க....''

இருவரும் மற்றவர்களுக்கு கை அசைத்து விட்டு தங்களின் காரில் அமர, ஷிவா குழப்பத்துடன் அருகே வந்தான்.

''என்ன சிஸ்டர் ஒண்ணுமே சொல்லாமல் கிளம்புறீங்க?''

''இப்போ எப்படி பேசுறது ஷிவா? நீங்க சென்னைக்கு போயிட்டு கால் செய்ங்க நான் விபரம் சொல்றேன்.''

''நல்லா சொல்றீங்க போங்க! அதெல்லாம் நடக்குற விஷயமா?'' என்ற ஷிவா, திடீரென குரலை உயர்த்தி,

''ஸ்ட்ரெயிட்டா போய் லெப்ட் எடுத்தா மெயின் ரோட் வரும். அதுல ஸ்ட்ரெயிட்டா போய், ஒரு இரண்டு கிலோ மீட்டர் கழிச்சு ரைட் எடுக்கனும்... என்னடா இப்படி முழிக்குற?'' என்றான்.

பின் திரும்பி பார்த்து,

''அப்பா, இவனுக்கு சரியா வழி தெரியலை, நான் கொஞ்சம் கைட் செய்துட்டு வரேன்'' என்றான்.

''நீ எப்படி திரும்பி வருவ? கௌஷிக்கை.....''

''இல்லை வேண்டாம்ப்பா, நான் வந்திருவேன். நீங்க ரெடியா இருங்க. நான் வந்த உடனே சாவியை ஓனர் கிட்டக் கொடுத்துட்டு கிளம்பிடலாம்.''

''ஓகேப்பா!''

ஷிவா ஏறிக் கொள்ள, காரைக் கிளப்பிய சூர்யா,

"நான் பத்து வருஷமா பெங்களூரில் இருக்கேன், எனக்கு வழி தெரியாதா? உனக்கு...."

"ப்ச்.... அவர் பாவம் விஷயம் தெரிஞ்சுக்க எதோ வாயில வந்ததைச் சொன்னால் அதுக்குப் போய் இவ்வளவு பேசுறீங்க, அமைதியா இருங்க."

"நீ டீச்சரா போய் இருக்க வேண்டியவ! தெரியாத் தனமா உங்க அப்பா உன்னை டாக்டருக்குப் படிக்க வச்சுட்டார்."

அவனுக்கு மீண்டும் பழைய 'பயங்கர' செய்தியை கண்களால் அனுப்பி விட்டு ஷிவா பக்கம் பார்த்தாள் கீதா.

"பேசுனீங்களா சிஸ்டர்? அவ என்ன சொன்னாள்? நீங்க கேட்டதை தப்பா எடுத்துக்கலையே? நான் தான் உங்களை பேசச் சொன்னேன்னு அவளுக்கு தெரிஞ்சிடுச்சா?"

உடனே பதில் சொல்லாமல் ஷிவாவை அமைதி யாகப் பார்த்தாள் கீதா.

அவளின் பார்வையின் பொருளை புரிந்துக் கொள்ள முடியாமல் மேலும் குழம்பினான் அவன்.

"இந்த ஐடியாவே தப்பு. நான் கொஞ்சம் பொறு மையா இருந்திருக்கனும்... ச்சே என் புத்தி ஏன் இப்படி போச்சு?"

"இப்போ சொன்னீங்களே அது ரொம்ப சரி. கொஞ்சம் பொறுமையா இருந்திருந்தா பிரச்சனை சின்னதாக இருந்திருக்கும்."

''என்ன சொல்றீங்க, எனக்கு புரியலையே!''

''ஷிவா, முதல்ல உங்க குழப்பத்தை எல்லாம் தூக்கி போடுங்க. அதெல்லாம் அவசியமே இல்லை. அருந்ததிக்கு உங்க மேல ரொம்ப அன்பு இருக்கு.''

''....''

''எந்த அளவுக்கு அன்புன்னா, என்கிட்ட தனியா பேச வாய்ப்பு கிடைச்ச உடனே, நீங்க ஒரு மனநல டாக்டருன்னு தெரியும், என்னோட பிரச்னையை தீர்க்க நீங்க தான் ஹெல்ப் செய்யணும்னு கேட்குற அளவுக்கு.....''

''வாட்???''

''யெஸ் ஷிவா! நான் அவங்க கிட்ட பொய் சொல்லி பேச வேண்டிய அவசியமே ஏற்படலை, அவங்களே என்கிட்டே நேரா பேசினாங்க.''

''பேசுனீங்களா சிஸ்டர்? அவளுக்கு என்னை பிடிச்சிருக்குன்னா வேற என்ன தான் பிரச்சனை? வேற யாராவது அவக் கிட்ட தப்பா எதாவது நடந்து இருக்காங்களா? அதனால தான் இப்படி இருக்காளா?''

''ஷிவா, ஷிவா!! ஸ்டாப்! ரொம்ப யோசிக்காதீங்க ஷிவா! ரிலாக்ஸ்! உங்களுக்கு ஒரு நல்ல விஷயத்தை முதல்ல சொல்லிடுறேன்! அருந்ததி கிட்ட இருக்கும் பயத்துக்கான காரணம் வேற! நீங்க நினைப்பது போல தப்பா எதுவுமில்லை.''

ஷிவா அமைதியாக இருந்தான்.

ஒன்றிரண்டு நிமிடங்களுக்கு பின் பேசிய கீதா,

"அரேஞ்ச்ட் மேரேஜ் என்பது ஒரு வித்தியாசமான விஷயம் ஷிவா. பொதுவா சின்ன வயசில இருந்து பொண்ணுகளை அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே, அப்படிச் சிரிக்காதே, இப்படிப் பேசாதேன்னு நிறைய கண்டிப்போட வளர்த்துட்டு, திடீர்னு ஒரு நாள் இவன் தான் உன்னோட கணவன், இனிமேல் உன் வாழ்க்கை துணை, உன் வாழ்க்கை அவனோட தான்னு சொல்லிடறாங்க! இதுக்கு மேல பிசிக்கல் ரிலேஷன்ஷிப் வேற! யோசிச்சு பாருங்க எவ்வளவு வியர்ட் சிச்சுவேஷன் இதுன்னு...."

"....."

"பட் இன்னைய காலத்துல இதெல்லாம் கொஞ்சம் மாறிட்டு வருது. அரேஞ்ச்ட் மேரேஜ்ல கூட, நிச்சயம் முடிஞ்ச பிறகு போன்ல பேசுறாங்க, வெளியே போறாங்க..... சோ ஓரளவுக்கு அவங்களுக்குள்ளே ஒரு rapport வந்திருது."

"....."

"அருந்ததி விஷயத்துல அது நடக்கலை என்பது தான் ரொம்ப அன்ஃபார்ச்சுனேட் விஷயம். அவங்களுக்கு உங்களை ரொம்ப பிடிச்சிருக்கு ஆனால் இது எக்ஸ்ட்ரா பிரிவிலேஜ் உள்ள உறவுன்னு அவங்களால இன்னும் ஏத்துக்க முடியலை. முதல் நாள்ல நீங்க இன்னும் கொஞ்சம் பொறுமையா நடந்திருந்திருக்கலாம்...."

ஷிவாவின் முகம் அடிப்பட்ட பாவனையை காட்டியது.

அதுவரை அமைதியாக கீதா பேசுவதை கவனித்துக் கொண்டிருந்த சூர்யா,

''இந்த மாதிரி காம்ப்ளிகேஷன்ஸ் இருக்குனு அவனுக்கு தெரிஞ்சிருக்காது கீத்ஸ். ஷிவா ரொம்ப நல்லவன்....''

''அவர் நல்லவரா கெட்டவரா என்பது கேள்வியே இல்லை! அருந்ததிக்கும் அதில் சந்தேகம் இல்லை... ஆனால் அவருடன் இருக்கும் இந்த உறவுமுறை ஒரு எல்லைக்குள் இல்லாமல் ரொம்ப இன்டிமேட் ஆனது என்பதை தான் அவங்களால இன்னும் ஏத்துக்க முடியலை....''

''ஏன் சிஸ்டர்? எதனால?''

''ஷி ஹாஸ் தி பியர் ஆஃப் பீயிங் டச்ட். இதை மெடிக்கல் டேர்ம்ஸ்ல haphephobiaன்னு சொல்வாங்க. Genophobiaவோட தொடர்புள்ள ஒரு மன வியாதி இது!''

''எனக்கு புரியுற மாதிரி சொல்லுங்களேன்....''

''சொல்றேன்..... haphephobia என்பது கொஞ்சம் அரிய வகையான மன வியாதி. தன்னை யாராவது தொட்டால் இல்லை தொட போறாங்கன்னு தெரிஞ்சாலே பயப்பட வைக்கும் இயல்புடைய ஒரு வியாதி. Genophobia என்பது பொதுவாக பாலியல் உறவு சம்மந்தப்பட்ட ஒரு வியாதி. இரண்டும் கொஞ்சம்

கொஞ்சம் தொடர்புடையது. இதுக்கு காரணம் இதுதான்னு சொல்ல முடியாது. நீங்க சொன்னது போல யாராவது பேஷண்ட் கிட்ட தவறாக நடந்திருந் தாலும் இது போல் போபியா வரலாம். சில சமயம் மனசில இருக்கும் எண்ணங்கள் பயங்களே கூட இது போல மன வியாதிக்கு காரணமா அமைஞ்சிடுது. அருந்ததி விஷயத்தில இரண்டாவது சொன்ன காரணம் தான் சரின்னு எனக்கு தோணுது.''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''அவங்களோட பேசினதில் எனக்கு புரிஞ்சது என்னன்னா, அருந்ததியோட பேரெண்ட்ஸ் இறந் தப்போ அவங்களுக்கு வயசு பதினஞ்சு. ஒரு சின்ன பொண்ணு அடோலசன்ட் ஸ்டேஜுக்கு வர, இல்லை வந்து ஒரு ஒன்று இரண்டு வருஷமாகும் பீரியட் அது. அந்த ட்ரான்ஸிஷன் பீரியட்ல அம்மா அப்பாவை இழந்து தனியா நின்னதால அவங்க தெரிஞ்சோ தெரியாமலோ தனக்கு தானே ஒரு திரையை போட்டு கிட்டாங்க. தன்னைக் காப்பாற்றும் ஒரு திரை போல....''

''அப்படினா?''

''ஸீ, அந்த வயசில அவங்க அம்மா இனிமேல் நீ பசங்க கூட தொட்டு பழகக் கூடாது, தள்ளி நின்னு பேசணும் இப்படி ஏதாவது அட்வைஸ் கொடுத்திருந் திருக்கலாம். அம்மா இறந்த பிறகு, பெண்களுக்கு இயல்பாக மனதில் தோன்றும் பாதுகாப்பு எண்ணங் களுக்கு மேலே அவங்களே அவங்களுக்கு ஒரு எக்ஸ்ட்ரா லேயர் பாதுகாப்பு மாதிரி மனசுக்குள்ள

வளர்த்து வச்சிருக்காங்க.... இப்போ டார்டாயிஸ்க்கு மேலே இருக்க அந்த ஷெல் போல!''

''ஓ!!!''

''யெஸ்! அந்த ஷெல் உடைக்காமல் டார்டாயிசை டச் செய்ய முடியாது....''

''ம்ம்ம்....''

''இது ஒரு ட்ரிக்கி சூழ்நிலை ஷிவா! அவங் களுக்கு உங்க மேல அன்பிருக்கு பாசமிருக்கு, காதல் கூட இருக்கு! ஆனால் அவங்க ஏழு எட்டு வருஷமா போட்டு வச்சிருக்க அந்த கண்ணுக்குத் தெரியாத வளையத்துக்குள்ள உங்களை விட இன்னும் அவங்க ப்ரெயின் இடம் கொடுக்க மாட்டேங்குது.''

''ம்ம்ம்ம்.....''

''நான் இன்னைக்கு அப்சர்வ் செய்ததிலேயே ஒரு விஷயத்தை கவனிச்சேன். ராதிகா, ஆன்ட்டி என் கூடன்னு சகஜமா பேசுற அருந்ததி, ஆண்களை பார்த்தால் பத்தடி தள்ளி நிற்குறாங்க! தேவைக்கு அதிகமா ஒரு வார்த்தை கூட பேச மாட்டேங் குறாங்க!''

''யெஸ்! நீ சொல்லும் போது தான் எனக்கும் ஸ்ட்ரைக் ஆகுது. இன்னைக்கும் சரி அன்னைக்கு தியேட்டரில் பார்த்தபோதும் சரி, ஒரு ஸ்மைல் தவிர வேற எதுவும் அவங்க பேசவே இல்லை!''

ஷிவாவிற்கும் அவள் ஆண்களிடம் காட்டும் ஒதுக்கம் புரிந்தது....

கௌஷிக், அப்பா என்றில்லாமல் அன்று அவளுடைய சித்தப்பா பற்றி கேட்ட போதும் கூட பேசுவதில்லை என்று தானே சொன்னாள்!!!

''நான் சொன்னது போல இது கொஞ்சம் ட்ரிக்கியான விஷயம் ஷிவா. நம்ம மனதை போல சக்தி வாய்ந்த விஷயம் எதுவுமே இல்லை! பெரிய பெரிய வியாதியை எல்லாம் கூட மனோ திடத்தோட எதிர்த்து வெற்றி பெற்று இருக்காங்கன்னு கேள்விபட்டிருக்கோம் தானே? அப்படி சக்தி வாய்ந்த அந்த மனம் அருந்ததிக்குள் போட்டிருக்கும் அந்த வளையத்தை உடைத்து, அவங்களுள் ஏற்படும் பயத்தை போக்கினால் எல்லாம் சரி ஆகிடும். பட் ஞாபகம் வச்சுக்கோங்க, உங்களுக்கு கல்யாணம் ஆன முதல் நாள் நடந்துக்கிட்டது போல் நீங்க நடப்பது எந்த விதத்திலும் பிரயோஜனப்படாது!''

''புரியுது சிஸ்டர்....'' என்றான் ஷிவா இறங்கி விட்ட குரலில்.

''நீங்க பீல் செய்ய எதுவுமில்லை ஷிவா. எனக்கு மட்டுமில்லை, அருந்ததிக்கும் கூடத் தெரியும்.... பட் அன்னைக்கு நடந்த சம்பவம் அவங்களுள்... எப்படி சொல்றது....''

''எனக்கு புரியுது....''

''ம்ம்ம்.... ஷீ இஸ் நாட் எட் ரெடி பார் தட். அப்படி தொடர்ந்து ஏதாவது நடந்தால், அவங்களுடைய இந்த பயம் நிரந்தரமாகி விடவும் வாய்ப்பு இருக்கு. ஸோ முதல்ல உங்களுக்கு பொறுமை அவசியம்.''

''ம்ம்ம்ம்.... அப்புறம் வேற என்ன செய்யணும் சிஸ்டர்? ரெகுலரா செக்கப் அழைச்சிட்டு வரணுமா? கவுன்சிலிங் செய்யணுமா?''

''ஹுஹும்! நான் அவங்க கிட்ட மொபைல்ல போசிக்குறேன். நீங்க ரொமான்டிக் ஹீரோவா மாறி, அவங்களை முடிந்த வரை தொடாமல் WOO செய்ய பாருங்க! நீங்க சொல்லி இருப்பது போல காதல் என்பது வெறும் உடல் சம்பந்தப்பட்டது இல்லையே.''

''நான் சொன்னதா?''

''ஆமாம் நீங்க தான் பெரிய பெரிய டையலாக் எல்லாம் சொல்லி அவங்களை அசத்தி வச்சிருக்கீங்களே.''

''இதை எல்லாம் அவ உங்க கிட்ட சொன்னாளா?''

''யெஸ்! ஷி அடோர்ஸ் யூ அ லாட்! பின்னே சும்மாவா அவங்களே ஒரு சைக்கியாட்ரிஸ்ட் கிட்ட ஹெல்ப் கேட்கப் போறாங்க? தட் ஷுட் ஆல்சோ எக்ஸ்ப்ளைன், ஏன் அவங்க சில சமயம் உங்க அருகாமையில் பயப்படுறாங்க, சில சமயம் நீங்க பக்கத்தில வரலைன்னு கோபப்படுறாங்கன்னு! அவங்களுக்குள்ளும் பெரிய போராட்டமே நடந்துட்டு இருக்கு! அவங்ககிட்ட கொஞ்சம் பாசிட்டிவா யோசிக்க சொல்லி இருக்கேன். பட் அதை எல்லாம் விட, இங்கே இருந்து நீங்க செய்ய போகும் விஷயங்கள், அவங்ககிட்ட நடந்துக்க போகும் விதம் இது தான் முக்கியம்.''

''ம்ம்ம்....''

''அப்புறம் இன்னுமொரு விஷயம்...'' என்றாள் கீதா தயக்கத்துடன்.

''சொல்லுங்க.....''

''நான் ஆரம்பத்துல சொன்னது வெறும் குட் நியூஸ் தானே? பேட் நியூஸ் என்னன்னா, இந்த போஃபியால இருந்து அவங்க எப்போ விடுபட்டு வருவாங்கன்னு தெளிவா சொல்ல முடியாது. இட் கேன் ஹாப்பன் இன் அ டே, அ மந்த் ஆர் ஆன் அ இயர்..... அதுக்கு மேலேயும் ஆகலாம்....''

''.....''

''என்ன ஷிவா, தெரியாமல் இப்படி மாட்டிக் கிட்டேனேன்னு யோசிக்குறீங்களா?''

''நோ நோ! நாட் அட் ஆல்! பாவம் ரதி..... அந்த சின்ன வயசில மனசுக்குள்ள எத்தனை புழுங்கி இருந்தா அவளோட பூவை போன்ற மனசு இப்படி இறுகி போயிருக்கனும்!''

கீதா ஷிவாவை ஒரு சில வினாடிகள் பார்த்தாள்!

''அருந்ததி இஸ் வெரி லக்கி ஷிவா! உங்களை போல ஒரு புரிந்து கொள்ளும் கணவன் கிடைத்தது அவங்க அதிர்ஷ்டம். இது போல மனவியாதியோட ஒவ்வொரு நாளும் பிடிக்காமல் வாழ்ந்து செத்து செத்து பிழைக்கிற பொண்ணுங்க நிறைய பேர் இருக்காங்க. நீங்க அவங்களுக்காக இவ்வளவு யோசிக்குறீங்களே! குட் குட்! சரியான டைரக்ஷன்ல

போறீங்க! நல்லதே நடக்கும் அதுவும் சீக்கிரமா நடக்கும்னு நம்புவோம்.''

''சரி சிஸ்டர்.''

''பை தி வே, நீங்க என் கிட்ட பேச சொன்னதை பத்தி நான் அவங்க கிட்ட சொல்லலை. அவங்களே பேசியதாலே எனக்கு விஷயங்கள் தெரிஞ்சுக்கவும் ஈசியா இருந்தது. நீங்களும்.....''

''சொல்லலை சிஸ்டர்!''

''குட்! அவங்க நம்பர் என்கிட்ட இருக்கு அப் பப்போ நான் பேசுறேன். தேவைபட்டா உங்க கிட் டேயும் சொல்றேன்.''

''ஓகே சிஸ்டர்!''

''ஆல் தி பெஸ்ட்டா ஷிவா!''

''தேங்க்ஸ்டா! தேங்க்ஸ் சிஸ்டர்! உங்க உதவிக்கு ரொம்ப நன்றி!''

''உங்க குடும்பம் போல ஒரு அழகான சுழலில் அவங்களுக்கு சீக்கிரமே சரி ஆகிடும்! கவலையே படாதீங்க! நம்பிக்கையோட இருங்க!''

''ஆமாம்டா! வைப் கிட்ட ரொமான்டிக் ஹீரோவா நடந்து காதலிக்க எத்தனை பேருக்கு வாய்ப்பு கிடைக்கும்? நீ வருத்தப்படாமல் மனசை சரி செய்து என்ஜாய் செய்! சீக்கிரமே எவ்ரிதிங் வில் பீ பைன்.''

ஆட்டோவில் வந்து இறங்கிய ஷிவாவின் முகத்தில் இருக்கும் சிந்தனையைக் கவனித்த லக்ஷ்மி,

"என்னப்பா என்ன ஆச்சு?" என்றாள்.

"ஒண்ணுமில்லைம்மா.... சரி நாம கிளம்புவோமா? சாவி எங்கே, நான் போய் ஓனர் கிட்ட கொடுத்துட்டு வரேன்."

"அந்த வேலையையும் உனக்கு வைக்காமல் நானும் அப்பாவும் கொடுத்தாச்சு ஷிவா. நேரா கிளம்ப வேண்டியது தான்" என்றான் கௌஷிக்.

"சரி கிளம்புவோம், நீங்களே இப்போவும் டிரைவ் செய்றீங்களா?"

"கரும்பு தின்ன கூலியா? ஷூயர் ஷூயர்!"

கௌஷிக் சந்தோஷமாக டிரைவர் இருக்கையில் அமர மற்றவர்கள் ஒவ்வொருவராக காரில் ஏறத் தொடங்கினார்கள். அருந்ததியுடன் பேசியபடி பின் சீட்டிற்கு சென்ற ராதிகாவை தடுத்த ஷிவா,

"ராது, நீ ஃபிரன்ட் சீட்டில உட்கார்ந்துக்கோ" என்றான்.

ஏன் என்று கேட்க வாயைத் திறந்தவள், தம்பியின் பார்வை அவனின் மனைவி மீது இருப்பதை பார்த்து விஷயம் புரிந்து கொண்டு, சிரிப்புடன்,

"ஓகே!" என்றபடி சென்றாள்.

அருந்ததியுடன் பின் இருக்கைக்கு சென்ற ஷிவா,

"நீயே ஏறிடுவீயா? ஹெல்ப் வேணுமா?" எனக் கேட்டான்.

அவனின் அருகிலேயே அமர்ந்து ஆறு மணி நேரம் பயணம் செய்யப் போகிறோம் என்ற சந்தோஷத்தில் மிதந்து கொண்டிருந்த அருந்ததி,

"ஹூஹூம்.... நானே ஏறிடுவேன்!" என்றபடி ஏறி அமர்ந்தாள்.

அவளின் 'ஹூஹூம்'க்கு ஏற்ப ஆடிய அவளின் காதுகளில் இருந்த ஜிமுக்கிகளின் நடனத்தில் மயங்கி போனவன், தன் பார்வையைத் திருப்பப் படாத பாடு பட வேண்டி இருந்தது!

'ஷிவா இப்போ இருந்து நீ ஒரு ரொமான்டிக் ஹீரோ! ஓவர் ஆக்ட் செய்து வில்லனாக மாறி விடாதே!'

தனக்குள் சொல்லிக் கொண்டு காரினுள் ஏறி அமர்ந்து, கதவை மூடினான்....

இரும்பிடம் ஈர்க்கப்படும் காந்தம் போல் மனைவி யின் முகத்தின் பக்கம் தானாக சென்ற தன் கண்களை கஷ்டப்பட்டு திருப்பி காரின் முன் தெரிந்த ரோட்டைப் பார்த்தான்!

இன்னும் அவன் கடக்க வேண்டிய தூரம் அதிகம் இருக்கிறதோ.....???

15



காரில் அனைவரும் பேசிக் கொண்டிருக்க அருந்ததியும், ஷிவாவும் மட்டும் அமைதியாக இருந் தார்கள்.

பயணம் தொடங்கிய போது எதிரே தெரிந்த சாலையின் மீது பார்வையை பதித்த ஷிவா தன்னுடைய பார்வையை திருப்பவே இல்லை!

ஷிவாவின் எதிரே அமர்ந்திருந்த அருந்ததி அவ்வப்போது சாலையை பார்ப்பதும், எதிரில் அமர்ந்திருந்த கணவனைப் பார்ப்பதுமாக இருந்தாள்.

கீதாவிடம் பேசியது அவளின் மனதில் சிறிது அமைதியை ஏற்படுத்தி இருந்தது என்றால், அவளின் மனதில் இருக்கும் கலக்கம் சாதாரண விஷயம் என்பது போல் கீதா பேசி இருந்தது அவளுக்கு புது விதத் தெம்பை அளித்திருந்தது.

ஷிவா அவளைப் புரிந்து நடப்பதால், ஷிவாவிடம் சாதாரணமாக பேசிப் பழகுமாறு கீதா அறிவுறுத்தி இருந்தாள்.

ஆனால் அவளை நேராகவும் பார்க்காமல் இருக்கும் கணவனிடம் என்ன என்று பேசுவது? எப்படி பேச்சை தொடங்குவது?

அவனை குற்றம் சொல்லவும் முடியாதே! அவனின் இந்த மாற்றத்திற்கு காரணம் அவள் தானே? அவளுக்காக தானே அவன் தன் மனதை அடக்கி நடந்துக் கொள்கிறான்!

எப்படி அவனிடம் பேசுவது, என்ன பேசுவது என்று புரியாமல் குழம்பியபடி அமர்ந்திருந்தாள் அவள்.

ஷிவாவும் தன் காதல் மன்னன் வேலையை எப்படித் தொடங்குவது என்பதைப் பற்றி தான் மும்முரமாக சிந்தித்துக் கொண்டிருந்தான்.

இந்தமுறை யோசித்து, பக்காவாகத் திட்டமிட்டு தன்னுடைய வேலையைத் தொடங்குவது என்று அவன் முடிவு செய்திருந்தான்.

''கௌஷிக் ஏதாவது டீக்கடைப் பக்கத்தில நிறுத்துங்க, ஒரு டீ குடிச்சிட்டுப் போவோம்'' என்றார் நாதன்.

''இது ஒரு கெட்ட பழக்கம் உங்கக்கிட்ட!'' என்று அங்கலாய்த்தாள் லக்ஷ்மி.

''அங்கிள் எனக்காக சொல்றார் ஆன்ட்டி. டிரைவ் செய்யும் போது சின்ன சின்ன ப்ரேக் எடுத்தால் கொஞ்சம் ஈசியா இருக்கும்'' என்று மாமனாருக்கு சப்போர்ட் செய்தான் கௌஷிக்.

அப்படியா என்பது போல் கணவன் முகத்தைப் பார்த்த லக்ஷ்மி, கணவர் முகத்தில் இருந்த புன்ன கையில் என்ன கண்டு கொண்டாளோ மேலே பேச வில்லை.

நாதன் கேட்டது போல் சிறிய கடையின் அருகே ஸ்கார்ப்பியோவை நிறுத்தினான் கௌஷிக்.

''உனக்கு ஏதாவது வேணுமா ரதி?''

ஷிவாவின் கேள்வியை விட அவன் தானாக அவளிடம் பேசியதில் அருந்ததிக்கு சந்தோஷமாக இருந்தது.

''ஹூஹூம் வேண்டாம்'' என்று அவளின் வழக்க மான ஸ்டைலில் பதில் அளித்தவள்,

"நீங்க டீ குடிக்க போறீங்களா?" எனக் கேட்டாள் தயக்கத்துடன்.

"இல்லை ஏன் கேட்குற?"

"உங்க கிட்ட ஒண்ணு கேட்கணும்."

"என்ன?"

"என் மேல உங்களுக்கு ஏதாவது கோபமா?"

"உன் மேல கோபமா? ஏன் இப்படி ஒரு கேள்வி?"

"இல்லை வந்து..... வந்து....."

நீ ஏன் என்னை பார்க்காமல் ஒன்றரை மணி நேரமா ரோட்டை வெறித்து பார்த்துக் கொண்டிருந்தாய் என்று எப்படி கேட்பாள் அவள்?

நிச்சயம் நடந்த நாள் முதல் அவன் அவளை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டே தானே இருந்தான்..... அவள் தானே அதெல்லாம் பிடிக்க வில்லை என்றது!!!

எதிரில் இருந்த கணவனை கவனிக்காமல் அவள் குழம்ப, (அத்தனை நேரம் பார்க்காததற்குமாக சேர்த்து) மனைவியை உற்றுக் கவனித்துக் கொண் டிருந்த ஷிவாவிற்கு அவளின் குழப்பம் ஓரளவிற்குப் புரிந்தது.

பாவம் எதை எல்லாம் நினைத்து தான் குழம்புவாள் அவள்! மனதினுள் மனைவிக்காக பரிதாபப்பட் டவன், அவளை மேலே குழம்ப விடாமல்,

"நான் ப்யூச்சர் பத்தி யோசிச்சிட்டு இருந்தேன் ரதி!" என்றான்.

"என்னது?"

"நமக்குன்னு மட்டுமில்லை, நம்ம குழந்தைங்க எதிர்காலம் பத்தியும் யோசிக்கணுமே. இப்போவே படிப்புக்கு லட்சக் கணக்குல தேவை படுது, போக போக கோடி இருந்தாலும் பத்துமான்னு தெரியலையே. நாம தெளிவா ப்ளான் செய்து வைப்பது நல்லதுன்னு தோணுது."

அவளுக்கு குழந்தைகள் பற்றிய தன் குறிப்பு புரியுமா என்ற எதிர்பார்ப்புடன் அவன் சொல்ல, தெளிவாகப் புரிந்தது என்பதை மெல்லச் சிவந்த அவளின் கன்னங்கள் சொல்லாமல் சொல்லின!

அதெப்படி இம்மெனும் முன் இவளுக்கு அப்படி ஒரு வெட்கம் வருகிறது, கூடவே முகம் இப்படி சிவக்கிறது?

விரல் நுனியில் தான் ரத்த ஓட்டம் அதிகம் என் பார்கள் பெண்களுக்கு முகத்திலும் அப்படித் தானா?

ஆனாலும் அவனுடைய ரதியை போல இத்தனை அழகாக யாராலேனும் வெட்கப்பட முடியுமா?

மனைவியின் முகத்தை அங்குல அங்குலமாக ரசித்துக் கொண்டிருந்தவனுக்கு, சட்டென நினைவு வர, அவசரமாக பார்வையைத் திருப்பினான்.

"ஹேய் கடைல மசால் வடை வச்சிருக்காங்க. உனக்கு ரொம்ப பிடிக்குமே, நான் வாங்கிட்டு வரேன்...."

அவள் பதில் சொல்லும் முன் கார் கதவை திறந்து இறங்கிச் சென்றான் ஷிவா.

அதற்கு மேல் காரினுள் தனியாக அமர்ந்திருக்க விருப்பமில்லாமல் இறங்கி வெளியே வந்தாள் அருந்ததி.

"என்ன மஹாராணி, ஐயா நல்லா சாமரம் வீசினாரா? ஆள் அட்ரசே காணும்?"

ராதிகாவின் கேலி பொங்கும் கேள்விக்கு சிரிப்பை மட்டும் பதிலாக்கி அமைதியாக நின்றாள்.

திரும்பி "இந்த நல்ல பொண்ணு ரோலுக்கு மாறிட்டீயா? உன்னை என்ன செய்றது?"

அப்போதும் அருந்ததி அமைதியாக நின்றாள்.

"நீ இப்படியே அமைதியின் சொருபமா நில்லு, நான் போய் எனக்கு ஒரு கோக் வாங்கிட்டு வரேன்....."

அம்மா அப்பாவுடன் பேசியபடி அந்த டீக்கடை யின் அருகே நின்றிருந்த கணவனைப் பார்த்து விட்டு, பக்கத்தில் இருந்த பேக்கரி போன்ற கடையில் இருந்த ராதிகாவை பார்த்தாள் அருந்ததி!

இவர்கள் அனைவருமே அவளுக்கு கடந்த சில வாரங்களாக உறவானவர்கள் தான்! ஆனால் ஏனோ பல வருடங்கள் பழகியதை போல் அவளுடன் ஒன்றி போன உறவுகளாகி இருந்தனர்.

அவளின் மனம் அறிந்து நடக்கும் ஷிவா!

ஆனால் அவனாவது அவளின் வாழ்க்கை துணை, அவளிடம் அன்பாக நடந்துக் கொள்ள கடமை பட்டவன், ஆனால் லக்ஷ்மி, ராதிகா?

அவர்களை போல் அன்பை மட்டுமே கொடுக்கும் உறவுகள் அமைவது எத்தனை பெரிய வரம்?

ராதிகா அவளுக்கு தோழி மட்டுமில்லை, நல்ல வழிகாட்டியும் கூட!

அவளுக்கு சகோதரி ஒருத்தி இருந்திருந்தால் இப்படி தான் இருந்திருக்குமோ என்னவோ?

"ராது இஸ் சோ ஸ்வீட்ல?"

கனவில் ஒலிப்பது போல் கேட்ட அந்த குரல் அவளை நிஜ வாழ்க்கைக்கு இழுத்து வந்தது!

அவசரமாக திரும்பிப் பார்த்தவள், அங்கே கௌஷிக் நிற்பதைக் கண்டாள். அவன் பார்வை ராதிகாவின் மீதே இமைக்காமல் படர்ந்திருந்தது! ஏதோ கனவுலகத்தில் இருப்பவன் போல் நின்றிருந் தான்.

தான் மட்டுமே அவன் அருகே சில பல மீட்டர் இடைவெளி விட்டு நிற்பதை புரிந்து கொண்டவள், தன்னுடைய வழக்கமாக இன்னும் சிறிது இடைவெளி விட்டு விலகி நின்றாள்!

பின் தயக்கத்துடன்,

"என் கிட்டேயா சொன்னீங்க?" என்றாள்.

அவளைப் போலவே திடுக்கிட்டு விழித்துக் கொண்ட கௌஷிக்கின் முகத்தில், எதையோ உளறி விட்டோம் என்ற உணர்வில் அவனையும் மீறி முகத்தில் மெல்லிய வெட்கம் தோன்றியது! ஆனால் உடனேயே சமாளித்துக் கொண்டவனாக,

"ஆமாம்! ராது பத்தி சொன்னேன். ஷீ இஸ் வெரி ஸ்வீட்." என்றான்.

அவனை போலவே ராதிகா பக்கம் பார்த்தவள்,

"யெஸ் அவங்க ரொம்ப ஸ்வீட்" என்று அவன் சொன்னதை ஒத்துக்கொண்டாள்.

"ம்ம்ம்ம்.... உனக்கு ஒண்ணு தெரியுமா அருந்ததி! ராதிகா எல்லா விதத்திலும் பர்பெக்ட்! அவளை விட ஒரு நல்ல மனைவி கிடைக்கவே முடியாது! ஆனால் எனக்கு தான் மனசுக்குள்ள ஒரே ஒரு சின்ன குறை இருக்கு....."

ராதிகாவிடம் குறையா? குழந்தை பற்றி சொல்கிறானா?

அருந்ததி பதில் சொல்லவும் காத்திருக்காமல், அவனே பேசினான்.

"எல்லா விஷயத்திலும் என்னை புரிஞ்சு நடப்பவள், எனக்கு ஏத்த மனைவியாக இருப்பவள் அதென்னவோ என் அம்மா விஷயத்தில மட்டும் தலை கீழ இருக்கா."

கௌஷிக்கின் அம்மா பற்றி தான் அறிந்திருந்தவற்றை மனதுக்குள் அவள் அசைபோட, அவன் பேச்சைத் தொடர்ந்தான்.

"ஐ நோ, அம்மா பக்கம் சில தப்பு இருக்கு. ஆனால் அவங்க பெரியவங்க தானே? என்னையும் என் தம்பியையும் அத்தனை கஷ்டப்பட்டு வளர்த்தாங்க, படிக்க வச்சாங்க! இப்போ என்னால எதுவுமே செய்ய முடியலை! அம்மாவோட பேசும் போது

கஷ்டமா இருக்கு! பட் இதுல ராதிகாவை மட்டும் தப்பு சொல்ல முடியாது. எனக்கு தெரியும் நான் சொன்னால் ராதிகா கேட்பாள், ஆனால் அம்மா அவளை குழந்தை விஷயத்தை சொல்லி டார்மென்ட் செய்திருவாங்க! இவங்களை என்ன செய்றதுனே புரியலை. இரண்டு பேரும் இன்டிவிஜுவலி நல்ல வங்க! ரொம்பவே நல்லவங்க! ஆனால் அவங்க இரண்டு பேருக்குள்ள மட்டும் ஒத்து போக மாட் டேங்குது!''

அவன் சொல்வதைக் கொஞ்சம் அதிர்ச்சி கலந்த ஆச்சர்யத்துடன் அவள் கேட்டுக் கொண்டிருக்க,

''ப்ச்..... எது எப்படியோ, ராது எனக்கு ஒரு நல்ல மனைவி! நானும் அவளுக்கு ஒரு நல்ல கணவனா நடந்துப்பேன்....''

பேசிக் கொண்டே இருந்தவன், அருந்ததி என்று ஒருத்தி அங்கே இல்லவே இல்லை என்பது போலவும், அவளிடம் பேசிக் கொண்டிருக்கிறோம் என்ற நினைவே இல்லாதவன் போலவும்,

''என்னம்மா ராதிகா? சேஞ்சா? என் கிட்ட இருக்கு நான் தரேன்'' என்றபடி மனைவி நோக்கி சென்றான்.

அவன் செல்லும் திசையை கவனித்திருந்தாள் அருந்ததி!

அவன் அவளிடம் பேச வேண்டும் என்று பேச வில்லை! தன் மனதில் இருந்த வருத்தத்தை சொல்லி இருக்கிறான்!

பிரச்சனை இல்லாத வாழ்க்கையே இல்லை போலும்! கௌஷிக் நல்ல கணவன்! நல்ல மகனாகவும் நடந்து கொள்ள விரும்புகிறான். ஆனால் அதற்கு வழி இல்லை!

வழி இல்லாமல் எங்கே போனது? ராதிகாவிடம் குறை என்று சொல்ல ஒன்று இருப்பதா? சரி இல் லையே!!!!!

''ரதி, இந்தா உனக்காக சுட சுட செஞ்சு வாங் கிட்டு வந்தேன். சாப்பிடு.''

கணவனின் குரலில் ராதிகா, கௌஷிக், அவர் களின் சின்ன பிரச்சனை அனைத்தும் அவளுக்கு மனதில் தற்காலிகமாக பின்னோக்கிச் சென்றது.

அவன் கையில் இருந்த பொட்டலத்தில் இருந்து ஒரு வடையை எடுத்துக் கடித்தவள், அவன் அவளைப் பார்த்தபடி நிற்பதை கவனித்து,

''உங்களுக்கு? நீங்க சாப்பிடலையா?'' என்றாள்.

''எனக்கு வேண்டாம்! ஆனால் உன் கையில இருக்க அந்த ஸ்பெஷல் வடையை எனக்கு தரேன்னா தா, சாப்பிட நான் ரெடி.''

அவளின் எச்சில் பட்ட வடையை கேட்பவனிடம் என்ன சொல்வது? என்று (இல்லாத :-) மூளையை பிரட்டி அவள் யோசிக்க வாய்ப்பு கொடுக்காமல்,

''ரொம்ப டைம் ஆச்சு கிளம்புவோம், வாங்க வாங்க'' என்ற நாதனின் குரல் கேட்டது.

அதை தொடர்ந்து ஒவ்வொருவராக காரில் ஏற, அதை பயன்படுத்தி பதில் சொல்லாமல் காரில் ஏறி அமர்ந்தாள் அருந்ததி.

அவளை அப்படி எல்லாம் எளிதாக தப்பிக்க முடியாது என்பது போல், அவளின் எதிரே இருந்த சீட்டில் அமர்ந்த ஷிவா,

''தர மாட்டேன்னு சொல்ல வேண்டியது தானே, அதுக்கு ஏன் இப்படி ஓடுற?'' என்றான்.

சற்றுத் தயங்கியவள்,

''உங்க கையில அத்தனை வடை இருக்கு, அப்புறம் என்ன என்கிட்டே இருக்குறது வேணும்னு அடம் பிடிக்குறீங்க? உங்க கையில இருப்பதில இருந்து ஒண்ணு எடுத்துச் சாப்பிடுங்க'' என்றாள்.

ஷிவா பதில் சொல்லாமல் இருந்தான்!

அவள் கேள்வியாக பார்க்க,

''இந்த உலகத்திலேயே அதி பயங்கர புத்திசாலி நீ தான் ரதி! உன் பக்கத்துல கூட யாரும் வர முடியாது!!!!!'' என்றான் ஷிவா!

16

''உங்களுக்காக நானும் அத்தையும் ஸ்பெஷலா ஒரு கிஃப்ட் வச்சிருக்கோமே.''

"எனக்கு கிஃப்ட்டா? எதுக்கு? என்ன கிஃப்ட்?"

"கெஸ் செய்ங்க பார்ப்போம்."

"க்யூட்டி இப்படி மண்டையை காய விடாமல் பட்டுன்னு சொல்லு பார்ப்போம்."

"அதெப்படி ராது? அதெல்லாம் உடனே சொல்ல முடியாது யோசி, யோசி."

"என்னம்மா நீங்க!!!" என்று சிணுங்கிய ராதிகா அருகே அமர்ந்திருந்த கௌஷிக் தொடங்கி, நாதன், ஷிவா என ஒவ்வொருவராகப் பார்த்தாள். ஒரு உதவி யும் கிடைக்காமல் போகவே,

"சாக்லேட்?" என்றாள்.

"ராது செல்லம், நீ குழந்தைடா!"

கௌஷிக்கை செல்லமாக முறைத்து விட்டு, அருந்ததியைப் பார்த்தவள்,

"க்யூட்டி செய்ற விஷயம்னா ஏதோ கிராப்ட் போலவா?"

"கிராப்ட் இல்லை, கிட்டத்தட்ட அது போல."

"ஹ்ம்ம்.... ஏதாவது எம்ப்ராயிடரி வொர்க்???? அந்த மாதிரி ஏதாவதா?"

"சூப்பர் அண்ணி! கலக்குறீங்க!"

"அப்போ கரக்ட்டா சொல்லிட்டேனா?"

"ஆமாம், இருங்க எடுத்துட்டு வந்து தரேன்....." என்றபடி எழுந்து சென்றாள் அருந்ததி.

"எதுல எம்ப்ராய்டரி வொர்க் செய்தாம்மா?"

"அவளே எடுத்துட்டு வந்து தருவா வாங்கி பாரு."

"என் பொறுமையை பத்தி உங்களுக்கு தெரியாதா? சொல்லுங்கம்மா."

"அவ உன்னை ஆச்சர்யப்படுத்தன்னு பார்த்து பார்த்து செய்தது. நானே என்ன ஏதுன்னு சொன்னால் நல்லா இருக்காது. ஒரு இரண்டு நிமிஷம் பொறுமையா இரு."

"ம்ம்ம்ம்..... டேய் தம்பி உனக்கு தெரியுமா?"

"தெரியும் ஆனால் தெரியாது."

"அதானே, நீ சும்மாவே ரொம்ப தெளிவா இருப்ப, இப்போ கல்யாணம் ஆனப்புறம் கேட்கவே வேண்டாமே."

"ஆனாலும் ராது....."

ஷிவா பேசி முடிக்கும் முன் அருந்ததி வரும் அரவம் உணர்ந்து அனைவரும் கவனமும் அந்தப் பக்கம் சென்றது.

"ஹேய் ஹேய் என்ன கவர் அது? கொடு கொடு....."

"உங்களுக்கு பிடிக்குமான்னு தெரியலை, கொஞ்சம்....."

"அருந்ததி போதும் போதும் பில்ட் அப் கொடு பார்ப்போம்."

அருந்ததியின் கையில் இருந்த அந்த பிளாஸ்டிக் பையை கிட்டத்தட்ட பிடுங்குவது போல் வாங்கிய

ராதிகா, அதை அவசரமாக பிரித்து, உள்ளே இருந்த சேலையை வெளியே எடுத்தாள்.

''வாவ்! இது என்னோட அதே சாரீயா??? அமேஸிங்!!!''

அந்த மெஜந்தா நிற சேலையின் இரு ஓரங்களிலும் அருந்ததி செய்திருந்த பூ வடிவ வேலைபாடுகள் கண்ணைக் கவர்ந்தது.

''எப்போ இந்த வேலை எல்லாம் செய்த நீ? அமேசிங்! ரொம்ப நல்லா இருக்கு!''

''உங்களுக்கு நிஜமாகவே பிடிச்சிருக்கா?''

''இதென்ன கேள்வி? கடையில வாங்கினால் மினிமம் இருபதாயிரம் கேட்பாங்க, ரொம்ப அழகா இருக்கு! நான் சாரியை உன் கிட்ட கொடுத்தே ஒரு வாரம் கூட இருக்காதே? அதுக்குள்ளே செய்தீயா? சூப்பர் டாலேன்ட் க்யூட்டி.''

சேலையை தன் மீது போட்டுப் பார்த்த ராதிகா,

''எப்படி இருக்கேன்?'' எனக் கேட்டாள்.

''நீ எப்போவுமே அழகு ராது!'' என்றான் கௌஷிக்.

''அது எனக்கும் தெரியும், இந்த சாரீயில எப்படி இருக்கேன்?''

''உன் பக்கத்தில பார்க்கும் போது கொஞ்சம் அழகு கம்மியா தான் தெரியுது, மத்தபடி செமையா இருக்கு.''

''கௌஷிக், சும்மா சும்மா பொய் சொல்லாதீங்க!''
''ராது, இந்த கலர் உனக்கு ரொம்ப நல்லா இருக்கு.

இந்த வேலைபாடோட சாரீ ரொம்ப கிராண்டா தெரி யுது. உனக்கு ரொம்ப நல்லா இருக்கு!!!!''

''தேங்க்ஸ் அம்மா! அப்பா நீங்க சொல்லுங்க.''

''நல்லா இருக்கும்மா....'' என்ற நாதன், மருமகள் பக்கம் பார்த்து,

''ரொம்ப அருமையா செஞ்சிருக்க அருந்ததி.....'' என்று புகழ்ந்தார்.

அருந்ததியின் முகம் பூவாக மலர்ந்திருந்தது.

''நாளைக்கு ஆபீஸ்க்கு இந்த சாரீ தான் கட்டிட்டுப் போக போறேன்....'' ராதிகா மகிழ்ச்சியுடன் ஆர்ப் பரித்துக் கொண்டிருந்தாள்.

ஷிவா அமைதியாக நடப்பவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

அடுத்து சில நிமிடங்கள் சேலை, சேலையில் அருந்ததி செய்த வேலைபாடுகள் என்ற பேச்சில் சென்றது.

ராதிகாவிற்குத் தான் செய்த வேலை பிடித்திருப்பது மட்டுமில்லாமல் அனைவரும் தன் வேலையை புகழ்ந்த திலுமாக மனம் குளிர்ந்திருந்த போதும், ஷிவாவின் அமைதி மட்டும் அருந்ததியின் மனதை உறுத்திக் கொண்டே இருந்தது.

லேப்டாப்பில் எதையோ நோண்டிக் கொண்டிருந்த கணவனின் அருகே சென்ற அருந்ததி,

''என்னங்க....'' என்றாள்.

நிமிர்ந்து பார்த்தவன்,

"என்னையா கூப்பிட்ட?" என்று கேட்டான்.

"ம்."

"என் பேரை எப்போ மாத்தினாங்க?"

"ப்ச்! வேற எப்படி கூப்பிடுறது?"

"ஹை இது நல்ல கேள்வியா இருக்கே!"

"உங்களை நான் பேர் சொல்லி கூப்பிட முடியுமா?"

"ஏன் கூப்பிட்டால் என்ன?"

"....."

"சரி செல்லமா பேர் வை, நான் உனக்கு ரதின்னு வச்சிருக்க மாதிரி."

"....."

"சரி அதை அப்புறம் டிஸ்கஸ் செய்வோம், இப்போ ஏதோ கேட்க வந்தீயே என்ன விஷயம்?"

"அக்கா சாரீல செய்த வொர்க் பத்தி நீங்க ஒண்ணும் சொல்லவே இல்லை."

"அதான் எல்லோரும் புகழோ புகழ்ன்னு புகழ்ந்தாங்களே, அப்பறம் என்ன?"

"அவங்க எல்லோரும் சொன்னாங்க, ஆனால் நீங்க ஒண்ணும் சொல்லவே இல்லையே?"

மனைவியை அமைதியாக ஒரு சில நொடிகள் பார்த்த ஷிவா,

"அவங்க அத்தனை பேர் நல்லா இருக்குன்னு சொன்னாலும் நான் சொல்வது உனக்கு ஸ்பெஷலா?" எனக் கேட்டான்.

"ஆமாம், நீங்க தான் எனக்கு ஸ்பெஷல்."

"ம்ம்ம்ம்ம்.... நிஜமாவா? எப்படி ஸ்பெஷல்?"

"அது.... ஸ்பெஷல் அப்படி தான்....."

"என் ரதி செல்லம்! உனக்கு எல்லாம் தெரியுது ஆனால் தெரிய மாட்டேங்குது! இப்போ நான் கேட்ட கேள்விக்கு மட்டும் நீ கரக்ட்டான பதில் கண்டு பிடிச்சிட்டன்னு வை, உன்னை போல ஸ்மார்ட் வைப் யாருமே இல்லை."

"???"

"இந்த திரு திரு முழியோட அப்படியே போய் படுத்துத் தூங்கிடுவியாம். எனக்கு ஒரு ரிபோர்ட் முடிக்குற வேலை இருக்கு."

"ரொம்ப நேரம் ஆகுமா? காபி டீ ஏதாவது போட்டு எடுத்துட்டு வரவா?"

மனைவியின் அக்கறையில் கரைந்தவன்,

"வேண்டாம்டா ரதி. நான் சீக்கிரம் முடிச்சு தூங் கிடுவேன். நீ போய் தூங்கு" என்றான்.

ஏற்றுக் கொண்டு மெத்தையில் தன் ஓரத்தில் படுத்தவளின் மனதில், ஷிவா தனக்கு எந்த விதத் தில் ஸ்பெஷல் என்ற கேள்வியே உழன்று கொண் டிருந்தது.

"என்ன ஒரு மாதிரி இருக்கீங்க?"

புது சேலையில் அழகாக மின்னிக் கொண்டிருந்த ராதிகா,

"இல்லையே அதெல்லாம் ஒன்றுமில்லை" என்றாள் தடுமாற்றத்துடன்.

புரியாமல் பார்த்தாலும், அருந்ததி அதற்கு மேல் கேள்விகளைக் கேட்டு ராதிகாவை மேலும் தடுமாற வைக்கவில்லை.

ஷிவா, நாதன், ராதிகா, கௌஷிக் என அனைவரும் அலுவலகம் சென்று விட, லக்ஷ்மியின் அருகே சென்ற அருந்ததி,

"அத்தை, இன்னைக்கு அக்கா கொஞ்சம் வித்தியாசமா இருந்தாங்கள்ல?" என்றாள்.

"ராதிகாவா? நானும் கூட நினைச்சேன்! நேத்து இருந்த அந்த ப்ரைட்னஸ் காணும். என்ன ஆச்சுன்னு தெரியலை. ஒருவேளை கௌஷிக் கூட சண்டை போட்டாளோ என்னவோ?"

"ச்சே ச்சே அண்ணா அண்ணியை எதுவுமே சொல்ல மாட்டார்."

"உனக்கும் தெரிஞ்சுடுச்சா? ஆமாம் அதென்ன ஒரு சமயம் அக்கா, ஒரு சமயம் அண்ணின்னு சொல்லி குழப்புற?"

"அது....."

"பரவாயில்லைம்மா, உனக்கு பிடிச்ச மாதிரி கூப்பிடு. இல்லை எங்களை போல ராதுன்னே கூப்பிடு."

வெளியே கேட் திறக்கப்படும் சத்தம் கேட்டது.

இந்த நேரத்தில் யார் என இருவரும் எட்டி பார்க்க, கௌஷிகின் கார் உள்ளே வருவது தெரிந்தது.

''இப்போ தானே கிளம்பிப் போனாங்க? என்ன ஆச்சு?''

''தெரியலையே அத்தை.''

இருவரும் வாசல் கதவைத் திறந்து கேள்வியோடு வெளியே வந்தார்கள்.

காரில் இருந்து இறங்கிய கௌஷிக்கும், ராதிகாவும் தங்களுக்குள் ஒரு முறை பார்த்துக் கொண்டார்கள்.

''என்ன ஆச்சு ராது, கௌஷிக்? இப்போ தானே கிளம்புனீங்க?''

''அத்தை உள்ளே வாங்க.....'' என்று சொல்லியபடி வேகமாக உள்ளே சென்ற கௌஷிக், தன் கையில் இருந்த சின்ன டப்பாவை திறந்து, லக்ஷ்மியிடம் நீட்டினான்.

''இந்தாங்க எடுத்துக்கோங்க அத்தை!''

''ஸ்வீட்டா? என்ன? எதுக்கு?''

புரியாமல் கேட்ட லக்ஷ்மியை பார்த்து முப்பத்தி இரண்டு பற்களையும் காட்டிப் புன்னகைத்த கௌஷிக்,

''நீங்க சீக்கிரம் பாட்டியாக போறீங்க அத்தை!!!!'' என்றான்.

விஷயம் புரிய அருந்ததிக்கும், லக்ஷ்மிக்கும் ஒன்றிரண்டு வினாடிகளே தேவைபட்டது.

''அட என் செல்லம்!!!''

''வாழ்த்துக்கள் அண்ணி!''

ராதிகாவின் முகம் மகிழ்ச்சி மற்றும் வெட்கத்தினால் அழகாகப் பிரகாசித்தது!

17

''என்ன ராது நீ என் கிட்ட கூட சொல்லவே இல்லை. சொல்லி இருந்தா பெங்களூர் போகாமல் இருந்திருக்கலாமே? இந்த நேரத்தில் ரொம்ப டிராவல் செய்ய கூடாதுடா.''

''எனக்கெப்படிம்மா தெரியும்.....'' என ராதிகா சிணுங்க,

''கரக்ட்டா சொன்னீங்க அத்தை. வேலைக்கு போகாமல் ரெஸ்ட் எடுக்க சொல்லுங்க..... நான் சொன்னா கேக்க மாட்டேங்குறா.''

''சும்மா இருங்க நீங்க!''

கௌஷிக் உதவி வேண்டி லக்ஷ்மி பக்கம் பார்த்தான்.

''ஒரு இரண்டு, மூணு நாள் லீவ் போடுடா ராது'' என்று மருமகனின் கோரிக்கையை நிறைவேற்றி வைத்தாள் லக்ஷ்மி.

''ரெண்டு மூணு நாள்ன்னா பரவாயில்லை, இவர் வேலையை விட்டுட்டு வீட்டில இருக்க சொல்றார்.''

''என்ன கௌஷிக்?''

''அத்தை வேலை வேணா அப்புறம் கூட தேடிக் கலாம். இப்போ ராதிகாவோட ஹெல்த் தான் முக்கியம்....''

''டாக்டர் பார்த்தீங்களா என்ன?''

''இன்னுமில்லைம்மா. ஆபீஸ் போற வழியில இருக்க மெடிகல் லேப் போனோம்.... பக்கத்திலேயே டாக்டர் இருக்காங்க. இன்னைக்கு ஈவ்னிங்க்கு அப்பாயின்ட்மென்ட் வாங்கி இருக்கோம்.''

''எந்த டாக்டர்?''

''டாக்டர் ஈஸ்வரி அத்தை.''

''நல்ல ராசியான டாக்டர்! டாக்டர் என்ன சொல் றாங்கன்னு கேட்டுட்டு அவ முடிவெடுக்கட்டும் கௌஷிக். அவ ரொம்ப பிரியப்பட்டு தேர்ந்தெடுத்த வேலை.....''

''இதை சொல்ல இவ்வளவு தயங்கணுமா அத்தை??? அவ சந்தோஷமா இருக்கணும், அது தான் எனக்கு முக்கியம்.''

ராதிகாவின் முகத்தில் மகிழ்ச்சியுடன் வெட்கமும் கலந்து இருந்தது. லக்ஷ்மியும், கௌஷிக்கும் மாறி மாறி செல்லம் கொஞ்சியதில் அவளின் முகம் இன்னும் அதிகமாக சிவந்திருந்தது.

அத்தனை நாள் பார்த்திருந்த ராதிகாவிற்கும் இப் போது பார்க்கும் ராதிகாவிற்கும் இருக்கும் வித்தி யாசம், அருந்ததியை ஆச்சர்யப் பட வைத்தது.

''அவ இன்னைக்கு லீவ்..... நான்ன்.....''

''நீங்க ஆபீஸ் போங்க கௌஷிக், நானும் அருந்த தியும் இருக்கோமே.''

கௌஷிக் மனமில்லாமல் மனைவியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அருந்ததி, வா நாம பாயசம் ரெடி செய்வோம். அவங்க பேசி ஒரு முடிவுக்கு வரட்டும்."

அருந்ததி ராதிகாவை பார்த்துச் செல்லமாகக் கண் சிமிட்டி விட்டு லக்ஷ்மியை தொடர்ந்து சென்றாள்.

அவர்கள் செல்வதற்காகவே காத்திருந்தவனாக, கௌஷிக் ராதிகாவின் அருகே சென்று அவளை இறுக அணைத்துக் கொண்டான். ஒரே ஒரு வினாடி தான்! பின் அவசரமாக விலகி, அவளை மெல்ல அணைத்தவன்,

"பாப்பாக்கு வலிக்குமோ?" என்றான் கேள்வியாக.

"என் டுபுக் ஹஸ்பண்ட் நீ ரொம்ப புத்திசாலி."

"நான் என்னவா வேணா இருந்துட்டு போறேன். நீ இப்படி எல்லாம் ரொம்ப அசையக் கூடாது."

"அப்புறம்!!!"

"அமைதியா, பொறுமையா இருக்கணும்! பேசணும்! நடக்கணும், புரியுதா?"

"ம்ம்ம்ம்..... சரியே இல்லையே!"

"கொஞ்சோண்டு நாளுக்கு பொண்ணா இருக் கணும்."

"ஹா!!!!! உங்களுக்கு ரொம்ப வாய் அதிக மாகுதே!!!!"

"ஹி ஹி.... என் வாயை எப்படி அடைக்கணும்னு உனக்கு தெரியாதா என்ன? ஹி ஹி... என் கண்ணு, என் செல்லம்!!!"

அசடு வழிய செல்லம் கொஞ்சும் கணவனை சின்னச் சிரிப்புடன் பார்த்த ராதிகா,

"அடடா கௌசி, உங்களுக்கு இது தெரியாதா?"

"என்ன தெரியாதா?"

"பாப்பா வர வரைக்கும் உங்களுக்கு இப்படி ப்ரீ உம்மா எல்லாம் கிடையாது....."

"வாட்?"

"ஆமாங்க! குழந்தை பிறந்தப்புறம் கூட ஒன்று இரண்டு வருஷத்துக்கு எல்லாமே குட்டி பாப்பாக்கு தான்."

"இதெல்லாம் சரி இல்லை."

"அது அப்படி தான் கௌசி! நீங்களும் கொஞ்ச நாளுக்கு ஒரு ஆம்பளையா, நல்லவரா இருக்கணும்."

"அதெல்லாம் முடியாது!" என்ற கௌஷிக், ராதிகா பேச இடைவெளி விடாது அவளை அணைத்து கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டான்.

கணவனின் மார்பில் சலுகையாக சாய்ந்து கொண்டவள்,

"எனக்கு மட்டும் அத்தனை கண்டிஷன் ம்ம்ம்ம்???"

"சும்மா சொன்னேன்டா ராது! நீ உனக்கு பிடிச்ச மாதிரி இரு! உனக்கு என்ன வேணும்னாலும் என் கிட்டே சொல்லு, சரியா?"

"எனக்கா?"

"ஆமாம் உனக்கு தான் வேற யாருக்கு?"

''எனக்கு உன்னை மட்டும் தான் பிடிச்சிருக்கு கௌசி. வேற எதுவும் பிடிக்கலை.''

மனைவியின் அந்த அன்பு மொழியில் கௌஷிக்கின் மனம் கனிந்தது.

''நானும் லீவ் போடவா? எனக்கு உன் கூடவே இருக்கணும் போல இருக்கு!''

''ஹுஹும்ம்.... எனக்கு என்னவோ போல இருக்கு, நான் தூங்க போறேன். நீங்க இருந்து என்ன செய்ய போறீங்க? ஆபீஸ் போயிட்டு சீக்கிரம் வாங்க.''

''அப்பாயின்ட்மென்ட் அஞ்சு மணிக்கு தானே?''

''நாலு மணிக்கு வர பாருங்க கௌசி.... டைம் ஆனால் அம்மா வருவாங்க, ஆனால் எனக்கு உங்க கூட டாக்டர் கிட்ட போகணும்னு ஆசை.....''

''என்ன ராது இதெல்லாம் நீ சொல்லணுமா என்ன?? எனக்கு தெரியாதா? நான் சீக்கிரம் வந்திரு வேன். நீ எந்த ரூம்ல தூங்க போற? நீ தூங்கினப்புறம் நான் கிளம்புறேன்.''

''நம்ம வீட்.....''

''வேண்டாம் ராது, நீ தனியா இருக்க வேண்டாம், இங்கேயே இரு.''

''ம்ம்ம்..... சரி..... ஐ வில் மிஸ் யூ டா.....''

''மீ டூ டா.....''

ராதிகா சௌகர்யமாக படுக்க தலையணை வைத்து, போர்வையால் போர்த்தி விட்டான் கௌஷிக். அவள்

தூங்கும் வரை அவளருகிலேயே இருந்து விட்டு, ஓசை எழுப்பாமல் மெல்ல கதவை சாத்தி விட்டு வெளியே வந்தான்.

சமையலறையில் இருந்த லக்ஷ்மியிடம்,

"அத்தை, ராதிகா தூங்குறா. அவளா எழுந்திருக் கட்டும். நீங்க எழுப்பாதீங்க."

"சரிப்பா...." என்றாள் லக்ஷ்மி, பொங்கி எழுந்த சிரிப்பை அடக்கியபடி.

"ஈவ்னிங் நான் சீக்கிரம் வந்திருவேன் ஆன்ட்டி. ஒருவேளை கொஞ்சம் லேட் ஆனாலும் வெயிட் செய்ங்க! நானே வந்து அவளை டாக்டர் கிட்ட அழைச்சிட்டு போறேன்."

"ம்ம்ம்....."

"லஞ்ச்க்கு அவளுக்கு என்ன பிடிக்கும்னு கேட்டு கொஞ்சம் சிரமம் பார்க்காமல் செஞ்சு கொடுங்க ஆன்ட்டி."

"சரிப்பா."

"வேற ஏதாவது வேணும்னா, எனக்கு உடனே போன் செய்ங்க, நான் எப்படியாவது அரேன்ஜ் செய்து தரேன்."

"கௌஷிக், நீங்க வர வரைக்கும் நான் அவளை கவனிச்சுக்குறேன். நீங்க கவலை படாமல் ஆபீஸ் போயிட்டு வாங்க."

"எப்போவா இருந்தாலும், எனக்கு போன் செய்ங்க.... நான்....."

"அடடா கிளம்புங்க, ரொம்ப லேட் ஆச்சு."

அவன் ஒரு வழியாக கிளம்பிச் செல்ல,

"இந்த காலத்து பசங்களை என்ன சொல்ல? இரண்டாவது மாசம் ஆரம்பிக்குறதுக்கே இவ்வளவு சொல்றாங்க" என்றாள் லக்ஷ்மி.

"ரொம்ப நாள் காத்திருந்து நடந்திருப்பதால் இன்னும் ஸ்பெஷல் தானே அத்தை?"

"ஆமாம்.... நீ அப்படி எல்லாம் வருஷத்தை தள்ளி போடாமல் சீக்கிரமா குட்டி ஷிவா, இல்லை அருந்ததி பெத்துக் கொடு சரியா?"

கன்னத்தை தடவி வாஞ்சையோடு லக்ஷ்மி சொல்ல, அருந்ததியின் மனதினுள் அந்த ஆசை அலையாய் எழுந்தது.....

கணவனைப் போன்றே அழகான அமுல் பேபி போன்ற ஒரு குண்டான குழந்தையை கையில் ஏந்தி இருப்பது போல் அழகிய காட்சி அவளின் கண் முன் தோன்றியது!

ஷிவாவை போல பெண் குழந்தை என்றால் இன்னமும் அழகாக இருக்கும்.... ஆனால் ஆண் குழந்தையாக இருந்தாலும் பரவாயில்லை..... ஷிவா சாயலில் இருக்க வேண்டும்...

குழந்தைக்கு எப்படி பெயர் தேர்வு செய்வது? ஷிவாவுக்கு எந்த மாதிரியான பெயர் பிடிக்கும்?

"அருந்ததி! அருந்ததி."

சட்டென சுதாரித்துக் கொண்டு,

"என்ன என்ன அத்தை???" என்றாள் அருந்ததி.

"பாயசம் பொங்குது பாரு, கொட்டிட போகுது! திடீர்னு எந்த கனவுலகத்துக்கு போயிட்ட?"

பதில் சொல்லாமல் தணலைக் குறைத்து கரண்டியால் பாயசத்தைக் கிண்டியவளின் மனதினுள் சற்று முன் கற்பனையில் கண்ட காட்சி ஒருவிதமான ஏக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

18

"இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்க....."

"ஆமாம் இன்னும் கொஞ்சம் சாதம் போட்டுக்கோ ராது."

"அடடா உங்க இரண்டு பேர் இம்சை தாங்க முடியலையே! இவ்வளவு நாள் போலவே இருங்களேன்."

"அதெப்படி இவ்வளவு நாள் நீ வெறும் ராதிகா."

"ஆமாம் இப்போ இரண்டு ராதிகாவா மாறிட்டேன். சும்மா இருங்கம்மா."

"உண்மையாகவே அப்படி தான்... இப்போ நீ இரண்டு பேருக்காக சாப்பிடணும்!"

"ப்ச் அம்மா இந்த டையலாக் எல்லாம் நிறுத்துங்க. என் பிரெண்ட் கன்சீவ் ஆகி இருந்தப்போ அவ

டாக்டர் ஹெல்தி சாப்பாடு சாப்பிடணும், நிறைய சாப் பிடணும்னு அவசியம் இல்லைன்னு சொன்னாங்க...''

''உன் பிரெண்ட் நல்லா சாப்பிடுவாளா இருக்கும். நீ ஒரு கரண்டி சாதம் சாப்பிடுற. இது உனக்கே பத் தாது. இதுல எங்கே இருந்து குழந்தைக்கு பத்தும்?''

''அம்மா....''

''அக்கா செல்லம் கொஞ்சாமல் இன்னும் கொஞ்சம் சாதம் சாப்பிடுங்க.''

''நீ அவ தட்டுல வை அருந்ததி...''

ஒருவழியாக ராதிகாவை விழுந்து விழுந்து கவ னித்து விட்டு, மூவரும் ஒருவாறாக சாப்பிட தொடங் கினார்கள்.

''கௌஷிக் ஆபீசில வேலை செய்ராரோ என்னவோ. அவரை கிட்டத்தட்ட பிடிச்சு தள்ள வேண்டியதா போச்சு...''

''சொன்னார்....''

''சொன்னாரா? எப்போ?''

''நான் தூங்கி எழுந்த உடனே போன் செய்தேன் அப்போ சொன்னார்.''

''அது தானே! இரண்டு பேரும் பார்த்து நாலு வருஷம் ஆச்சே, பேசாமல் பின்ன எப்படி? ஆனாலும் ராது நல்ல வேளை நீ போன் செய்த இல்லை அவர் வீட்டுக்கே வந்து நின்னிருந்தாலும் நின்னுருப்பார்.''

''அம்மா! உங்களுக்கு அப்பா தான் சரி. அப்பா இருக்கும் போது எப்படி அமைதியா இருக்கீங்க!''

"அப்புறம் அவரும் பேசுவார் அந்த அறுவையை யார் கேக்குறது?"

"பார்த்தீயா க்யூட்டி, இவங்க இப்படின்னு சொன்னா யாராவது நம்புவாங்களா? யாரைக் கேட்டாலும் இவங்களை போல அமைதியானவங்க, நல்லவங்க உலகத்தில இல்லைன்னு சொல்றாங்க."

"அது யார் சொன்னது?" எனக் கேட்டாள் லக்ஷ்மி சிரிப்பு பொங்க.

"சிரிக்காதீங்க. வேற யார் உங்க மருமகன் தான்! அவருக்கு உங்க புகழ் பாடி தீராது. ஒரு நாள் பெரிய செய்யுள் பாடினாலும் பாடுவார்."

"பார்த்தீயா அருந்ததி, கௌஷிக் என்னை பத்தி இரண்டு வார்த்தை புகழ்ந்து பேசினால் கூட இவளுக்கு என்ன பொறாமைன்னு. இந்த காலத்து பொண்ணுங்க எல்லாம் ஏன் இப்படி ஓவர் பொசசிவா இருக்கீங்க?"

"க்கும் நீங்க மட்டும் ரொம்ப நல்லவங்க. ஒரு போட்டோல தெரியாத்தனமா அப்பா பக்கத்தில கமலா ஆன்ட்டி நின்னுட்டாங்கன்னு என்ன சீன் கிரியேட் செய்தீங்க நீங்க."

மகளுக்கு பதில் சொல்ல வாய் திறந்த லக்ஷ்மி, அருந்ததி அவர்கள் இருவரையும் பார்த்தபடி அமைதி யாக இருப்பதை கவனித்து,

"என்ன அருந்ததி அமைதியா இருக்க? நீ என் சைட் தானே, எனக்கு சப்போர்ட் செய்" என்றாள்.

''க்யூட்டி எப்போதும் என் சைட் தான். ஆனால் அம்மா, மேடம் இப்போ வேற முக்கியமான யோசனை யில இருக்காங்க....''

''இல்லை....''

''ஹேய் ஹேய் நடிக்காதே! உன் ஆளு ஆபீசில சாப்பிட்டானா என்னன்னு தெரியாம உனக்கு தலையை பிச்சிக்குது, என்ன சரியா?''

''அதெல்லாம் இல்லை...''

''ஹேய் என் கிட்டேயே கதை சொல்ற.''

''இல்லை அண்ணி, அவருக்கு ஒரு மணிக்கு லஞ்ச் டைம். டைமுக்கு தினமும் சாப்பிட்ருவேன்னு சொன்னார்...''

''ஓஹோ..... அவன் ஒருவேளை லஞ்ச் டைம் மிஸ் செய்தாலும் உனக்கு டெலிபதில தெரிஞ்சுடும்ல!''

''ராது, எதுக்கு அவளை சும்மா கலாட்டா செய்ற?''

''இங்க பாருடா! கல்யாணமாகி ஒரு மாசம் ஆன புதுப் பொண்ணை கிண்டல் செய்யாமல் வேற என்ன செய்வாங்க? நீங்களே பார்த்தீங்க தானே மேடம் ட்ரீம் லேண்ட்ல இருந்தாங்க.''

''வேற யோசிச்சிட்டு இருந்தேன்க்கா ஆனால் கனவெல்லாம் ஒன்னும் இல்லை.''

''சும்மா பொய் சொல்லாதே...''

''அவ பொய் சொல்றாளோ உண்மை சொல்றாளோ, இந்த அக்கா, அண்ணி என்னை ரொம்பக் குழப்புது.

இப்போ அதுக்கு ஒரு முடிவு எடுங்க. ராது உனக்கு எது பிடிச்சிருக்கு?''

''இரண்டும் பிடிக்கலை. ராதிகான்னு கூப்பிடு க்யூட்டி.''

''அது....''

''இந்த பிலிம் எல்லாம் வேண்டாம். ஏதோ ஷிவா பேரை கூப்பிட வெட்கப்பட்டா பரவாயில்லை. ரா---- தி--- கா எவ்வளவு சிம்பிள் பேரு.... எங்கே சொல்லு பார்ப்போம்...''

அருந்ததி அமைதியாக இருக்க,

''எனக்கு ஒரு ஐடியா தோணுது ராது.... அவளை கான்னு கூப்பிடச் சொல்லு... அது உன் பேர்லயும் இருக்கு, அவளுக்கு அக்கான்னு கூப்பிட்ட ஃபீலும் வரும்..'' என்று கலாய்த்தாள் லக்ஷ்மி.

''அம்மா...'' என்று சிணுங்கிய ராதிகா, அருந்ததி பக்கம் பார்த்தாள்.

''ஹேய் என்ன திரும்ப கனவுக்கே போயிட்டீயா?''

''கனவில்லை, ஒரு விஷயம் யோசிச்சிட்டு இருந்தேன்....''

''என்ன?''

''சொன்னால் கோவிச்சுக்க மாட்டீங்களே?''

''அப்போ வெவகாரமான விஷயம்னு சொல்லு! இன்ட்ரஸ்டிங்! சொல்லு சொல்லு....''

''அண்ணாவோட அம்மாகிட்ட சொன்னீங்களா?''

ராதிகாவின் முகத்தில் மெல்லிய மாற்றம் ஏற்பட்டது. உடனே பதில் சொல்லாமல் தட்டில் இருந்த உணவை உண்ணத் தொடங்கியவள்,

''அவர் சொல்லி இருப்பார்....'' என்றாள்.

லக்ஷ்மி கேள்வியாக அருந்ததியைப் பார்த்தாள். அருந்ததி தொடர்ந்து பேசினாள்.....

''காலையில அண்ணா கிளம்பினப்புறம் யோசிச் சிட்டு இருந்தேன்...''

மற்றவர்கள் இருவரும் அமைதியாக இருந்தார்கள்...

''நான் ஊரில பொண்ணு வீட்டுக்கு வர மாப் பிள்ளை சிலரை பார்த்திருக்கேன்... ரொம்ப பந்தா செய்வாங்க... அவர் முன்னாடி பொண்ணோட அம்மா உட்கார கூட மாட்டாங்க... அவர் கிட்ட ரொம்ப மரி யாதை கொடுத்துப் பேசுவாங்க... விழுந்து விழுந்து கவனிப்பாங்க... ஆனால் அண்ணா ரொம்ப வித்தி யாசம்... அத்தைக்கு கிட்டத்தட்ட இன்னொரு மகன் போலவே இருக்கார்...''

ராதிகா அமைதியாக இருந்தபோதும் அவளின் முகத்தில் இப்போது பழைய மலர்ச்சி வந்திருந்தது.

''மகன் போலன்னு இல்லை அருந்ததி. கௌஷிக் என் மகனே தான்.''

''புரியுது அத்தை..... வீட்டுக்கு வந்து கொஞ்ச நாளில் என்னை உங்க மக போல நடத்துறீங்க, அப்போ அண்ணா மட்டும் வேற எப்படி இருப்பார்... ஆனால் அண்ணாக்கும் அவங்க அம்மா மேல பாசம்

இருக்குமே, வெளிய காட்டலைனாலும் மனசுக்குள்ள இருக்கும்...''

ராதிகாவின் முகத்தை கவனித்து விட்டு,

''அதெல்லாம் இப்போ எதுக்கு அருந்ததி? நான் அவங்க கிட்ட பேசுறேன். விஷயத்தை சொல்றேன். அவங்களும் சந்தோஷப் படுவாங்க. குழந்தை இல்லை இல்லைன்னு தானே ரொம்ப வருத்தப்பட்டுட்டு இருந்தாங்க'' என்றாள் லக்ஷ்மி.

''ஏன் அத்தை, அவங்களை வேணா கொஞ்ச நாளுக்கு இங்கே வந்து தங்க சொல்வோமா?''

ஒரு சில கணங்கள் ஊசி விழும் ஓசை கேட்கும் அமைதியில் சென்றது....

திடீரென ராதிகா சிரித்தாள்.....

''அப்புறம் வேற என்ன ப்ளான் எல்லாம் வச்சிருக்க க்யூட்டி?''

''தப்பா எடுத்துக்காதீங்க..... அண்ணா அத்தை கிட்ட இப்படி அன்பா பாசமா நடந்துக்கும் போது சந்தோஷமா இருக்கு.... அவரோட அம்மா கிட்ட நாம அப்படி பாசமா இருந்தால் அவரும் சந்தோஷ படுவாரேன்னு தோணிச்சு.... சாரி....''

''சாரி எல்லாம் எதுக்கு அருந்ததி. மனசில பட் டதை எங்க கிட்ட சொன்ன. இதுல என்ன இருக்கு. அவங்க வந்து தங்குறது எல்லாம் சரி படாது...''

லக்ஷ்மி பேசிக் கொண்டிருக்க, ராதிகாவின் மனம் வேறு சிந்தனையில் இருந்தது.

கௌஷிக் மகிழ்ச்சி அடைவான் என்று அருந்ததி சொன்னது அவளை யோசிக்க வைத்திருந்தது...

திருமணமான புதிதில் கௌஷிக்கே அவளிடம் அதை சொல்லி இருக்கிறான்.....

அவனுக்காக என்றே அவள் அவனுடைய அம்மா விடம் அன்பாக இருக்க பிரயத்தனப் பட்டிருக்கிறாள்.....

எங்கே எது எப்போது தவறாக போனது என்று தெரியவில்லை...

ஏனோ அவர்கள் இருவருக்கும் ஏதாவது ஒரு விதத் தில் பிரச்சனை தோன்றிக் கொண்டே இருந்தது.....

ஓரளவிற்கு மேல் ராதிகா முயற்சி செய்வதையும் விட்டு விட்டாள். இதுதான் பிடிக்கவில்லை என்றால் பரவாயில்லை... காரணமே இல்லாமல், எங்கேயும் எதிலேயும் தவறு கண்டுபிடித்தால் அவள் என்ன செய்ய முடியும்?

கௌஷிக் வருடத்திற்கு இரண்டு முறையேனும் தவறாமல் ஊருக்கு சென்று வருவான்.

ராதிகா சில சமயம் அவனுடன் செல்வாள்... அப்போ தெல்லாம் அவன் கூடுதல் மகிழ்ச்சியுடன் இருப்ப தாக தோன்றும்....

அவனுடன் செல்வதில் ராதிகாவிற்கு எந்த ஒரு சிறு மனத்தடையும் இருந்ததில்லை...

அவனுடைய அம்மா என்றில்லை வேறு ஒருவரும் அவளை ஒரு வார்த்தை சொல்லவும் கூட அவன் அனுமதிக்க மாட்டான்... அவளை சிறு குழந்தை போல பார்த்துக் கொள்வான்....

ஒருவேளை அது தான் அவளுக்கும் அவனுடைய அம்மாவிற்கும் இடையே பிரச்சனை வர காரணமாக இருந்ததோ?

தான் தூக்கி வளர்த்த மகன் தன்னை விட தன் மனைவியை நேசிக்கிறான் என்ற எண்ணம் காரணமா?

ராதிகாவிற்கு குழப்பமாக இருந்தது.

''ராது, என்ன யோசிச்சிட்டு இருக்க? சின்ன பொண்ணு ஏதோ மனசில பட்டதை சொன்னாள், அதை போய் பெரிசா எடுத்துக்கிட்டு.... விடு.... சாப்பிடு....''

''இல்லைம்மா அத்தையை கூப்பிடலாம்னு நானும் நினைக்கிறேன். அவர் வரட்டும் அவர் கிட்ட கூப்பிடச் சொல்றேன். நீங்க இப்போ பேச வேண் டாம்...''

லக்ஷ்மி, அருந்ததி இருவருமே நம்ப முடியாமல் ராதிகாவை பார்த்தார்கள்.

''ஹேய் நான் தான் சாரி சொல்றேன்ல.''

கெஞ்சிய கணவனை பார்த்து மனதினுள் ரசித்தாள் ராதிகா. அவன் நிஜ வருத்தத்துடன் சொல்வது அவ ளுக்கு தெரியும். இருந்தாலும் அவனோடு இப்படி சீண்டி விளையாடுவது அவளுக்கு பிடிக்கும்....

சில சமயம் அவனும் அவளிடம் அதையே செய்வான்.....

அன்பான அன்னியோன்யமான தம்பதிகளிடையே வழக்கமாக நடக்கும் விளையாட்டு தானே இது!

மனதில் இருந்த கனிவை காட்டிக்கொள்ளாமல் சிடுசிடுத்தாள் அவள்.

"பேசாதீங்க என்னோட! எத்தனை தடவை சொல்லி அனுப்பினேன், சீக்கிரம் வாங்கன்னு. உங்களுக்கு என் மேல கொஞ்சமும் அக்கறை இல்லை... அன் பில்லை...."

"ப்ளீஸ் ப்ளீஸ் அப்படி எல்லாம் சொல்லாத ராது! ஜி.எம் திடீர்னு கூப்பிட்டார், நான் என்ன செய்ய? ஐ ஆம் சாரி. தோப்புக்கரணம் போடவா?"

காரை ஓட்டியபடி கேட்டவனை பார்த்து முறைத் தாள் ராதிகா.

"கார் ஓட்டும் போது எப்படி தோப்புக்கரணம் போட முடியும்? எல்லாம் பொய்."

"இல்லைம்மா வீட்டுக்கு போனப்புறம் போடு றேன்... ஒரு பத்து? இருபது? அம்பது? நூறு?"

"ப்ச்..."

"இருநூறு?"

"ப்ச்... ஆயிரம்!"

"என்னது?"

"தவுசண்ட் மிஸ்டர் கௌஷிக்...."

"நீ சந்தோஷப்படுவன்னா ஓகே."

"டீல் சார்."

அதற்குள் வீடு வந்துவிடவே, கௌஷிக் அவன் காரை ஓரமாக நிறுத்தினான்.

கார் ஓசைக் கேட்டு லக்ஷ்மி ஆவலுடன் வந்து பார்த்தாள்.

"என்ன ராது சொன்னாங்க டாக்டர்?"

"நான் சொல்றேன் ஆன்ட்டி. அவளை நல்லா ரெஸ்ட் எடுக்க சொல்லி இருக்காங்க. ட்ராவல் அவாய்ட் செய்யச் சொல்லி இருக்காங்க... சோ வேலைக்கு லீவ் போடச் சொல்லி இருக்காங்க."

"புதுசா என்ன ரெஸ்ட்? அவ வீட்டில இருக்க நேரத்தில வேற என்ன செய்றா?"

"அம்மா!!!"

"என்ன அத்தை நீங்க? இப்போ எல்லாம் ராதுவை இப்படி டீஸ் செய்ய கூடாது. சின்ன குழந்தை போல பார்த்துக்கணும்...."

லக்ஷ்மி பதில் சொல்லாமல் சிரிப்புடன் நடந்தாள்.

பின் மாலையில் ஷிவா, நாதன் வீடு திரும்பிய பின் அவர்களுக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டு வீடு முழுவதும் கலகலப்பாக இருந்தது....

அது நாள் வரை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருந்தாலும் மனதினுள் இருந்த குறை அகன்று விட்ட மகிழ்ச்சி அனைவருக்கும்....

"வேலைக்கு போகாமல் வீட்டில இருந்தா உனக்கு போர் அடிக்குமே. என்ன செய்ய போற ராது?"

"ஒரு ஐடியா வச்சிருக்கேன்ப்பா."

"என்ன ஐடியா?"

''நம்ம அருந்ததி ஆரி, சர்தோசின்னு ஏதேதோ கத்து வச்சிருக்கா. அவ வேலை செய்துக் கொடுத்த சாரீ கூட எனக்கு நல்ல ராசி.... சோ அவக்கிட்ட இருந்து அதை கத்துக்கலாம்னு இருக்கேன்...''

''நல்ல ஐடியா ராது. நானும் அவக்கிட்ட அதை சொல்லிக் கொடுக்குற மாதிரி ப்ரீ டைம்ல கிளாஸ் எடுக்க சொன்னேன்'' என்றான் ஷிவா.

''அப்போ நான் தான் என் செல்ல க்யூட்டியோட பர்ஸ்ட் ஸ்டுடென்ட்.''

''இல்லையே, நான் உனக்கு முன்னாடியே அருந்ததி கிட்ட எனக்கு சொல்லித் தரச் சொல்லி இருக்கேன். நான் தான் அவளோட முதல் ஸ்டு டென்ட்'' என்றாள் லக்ஷ்மி.

''அப்பா, வர வர நீங்க அம்மாக்கு ரொம்ப இடம் கொடுக்குறீங்க! இவங்க அட்டூழியம் தாங்க முடி யலை!''

''ராது, ஆன்ட்டியை அப்படி சொல்லாதே. எல்லாத் திலேயும் பர்ஸ்ட் ப்ரிபெரன்ஸ் ஆன்ட்டிக்கு தான்.''

''நீங்க எப்போதுமே மாமியார் மெச்சிய மருமகன் கௌஷிக்'' என்றான் ஷிவா.

''கௌஷி ஒரு விஷயம் கேட்க மறந்துட்டேனே.... உங்க அம்மா கிட்ட பேசினீங்களா?''

''பேசினேன் ராது. ரொம்ப சந்தோஷப்பட்டாங்க! உன் கிட்ட பேசணும்னு சொன்னாங்க... உனக்கு டைம் இருக்கும் போது பேசு.''

''கொஞ்ச நாளுக்கு அத்தையை இங்கே வர சொல்லுங்களேன்..... அவங்க இங்கே வந்தே ரொம்ப நாள் ஆச்சு.....''

கௌஷிக்கின் முகம் பளிச்சென்று ஒளி பெற்றது!

லக்ஷ்மி, அருந்ததி தவிர மற்ற இருவரும் தன் காதில் கேட்டதை நம்ப முடியாமல் பார்த்தார்கள்.

''ஆனால் ராது நீ இங்கே தங்க போற..... அம்மா.....''

''அதனால என்ன கௌஷிக் அவங்க வேணா உங்களை கவனிச்சுக்கட்டும்....'' என்ற அம்மாவை பார்த்து முறைத்த ராதிகா,

''அவர் என்ன சின்ன குழந்தையா, ஒருத்தங்க இருந்து கவனிச்சுக்க?'' என்றாள் கோபமாக.

''கூல் டவுன் ராது! நீ இங்கே தங்கும் போது கௌஷிக் மட்டும் ஏன் தனியா இருக்கணும்? அவரும் இங்கேயே இருக்கட்டும். நம்ம வீட்டில இடமா இல்லை, அத்தையையும் இங்கே தங்க சொல்லலாம்... ஏன் கௌஷிக், நீங்க அவங்க கிட்ட பேசி....''

''அது ப்ராப்ளமே இல்லை ஷிவா. நான் அவங்க கிட்ட சொல்றேன்.''

''அப்புறம் என்ன? எல்லோரும் இங்கேயே இருக் கலாம்.''

''கொஞ்ச நாளுக்கு வீட்டில தீபாவளின்னு சொல் லுங்க....''

''கொஞ்ச நாள் என்னப்பா நம்ம வீட்டில எப்போ வுமே தீபாவளி தான்.''

அந்த மாத இறுதியில் அனுப்ப வேண்டிய ரிப் போர்ட்களை தயாரித்து மண்டை காய்ந்து கொண் டிருந்த ஷிவா, தன்னை சற்றே ஆசுவாசப்படுத்திக் கொள்ள லேப்டாப் பக்கம் இருந்து கண்களை திருப்பினான்.

சற்று தள்ளி இருந்த சோபாவில் அமர்ந்திருந்த அருந்ததி அவன் கண்ணில் பட்டாள்.

அவனின் பார்வையை கவனிக்காமல் மும்முரமாக ஏதோ வேலையில் ஈடுப்பட்டிருந்தாள். கையில் இருந்த பேப்பரில் எதையோ அழித்தாள், பின் பென் சில் கொண்டு எழுதினாள்.... பின் மீண்டும் அழித் தாள்....

அவளை ஆர்வத்தோடு பார்த்தவன், மீண்டும் தன் வேலையில் ஈடுபட்டான்....

ஆனால் மனம் அதில் லயிக்கவில்லை....

மீண்டும் மனைவியைப் பார்த்தான்...

அவள் இப்போதும் எதையோ எழுதி அழித்துக் கொண்டிருந்தாள்....

அதற்கு மேல் ஆவலை அடக்க இயலாமல், அங் கிருந்து எழுந்து நடந்தவன், அவள் அமர்ந்திருந்த ஷோபாவில் அவளருகே அமர்ந்தான்.

"என்ன செய்ற ரதி?"

அதுவரை கணவனைக் கவனிக்காமல் இருந்த அருந்ததி திகைத்துப் போனாள்.... சட்டென தன்

கையில் இருந்த பேடில் மாட்டப்பட்டிருந்த தாள்களை மார்போடு அணைத்துக் கொண்டாள்.....

''ஒண்ணுமில்லை.....''

''ஒண்ணுமில்லை???''

''அது....''

''அந்த பேப்பரை கொடு பார்ப்போம்....''

''இல்லை....''

''ரதி..... கொடு.....''

அவள் அதை தயக்கத்தோடு நீட்ட, ஆர்வத்துடன் வாங்கிப் பார்த்தான் ஷிவா...

அந்த பேடின் மேலே அவனின் சிறிய போட்டோ ஒன்றிருந்தது....

அதன் கீழே பென்சிலால் வரையப்பட்ட சின்னக் குழந்தை முகம் இருந்தது....

அடுத்த அடுத்த பக்கத்திலும் சிறு குழந்தையின் படங்களே இருந்தன....

மனைவியை நேராக பார்த்தான் ஷிவா!

''சும்மா.....''

''இப்படி கஷ்டப்படுறதுக்கு என்னோட சின்ன வயசு போட்டோ பார்த்தால் வேலை ஈசியா முடிஞ்சிருக்குமே?''

''அது அது... இதெல்லாம் பொண்ணு பாப்பா.....''

''ஓ! உனக்கு இந்த ஷிவா பொண்ணு கெட்டப்ல எப்படி இருப்பான்னு தெரியணும் அவ்வளவு தானே?

இப்போ பாரு....'' என்றவன், காற்றில் பறந்துக் கொண்டிருந்த மனைவியின் முந்தானையை எடுத்து தலையை மூடினான்....

அப்படியே வாயையும் மூடினான்....

''எப்படி இருக்கா இந்த மீசை தாடி இல்லாத ஷிவா? அழகா இருக்காளா?''

அவன் தன் சேலையை எடுத்து செய்த வேலை யில் திகைத்திருந்தவள், அவன் கண்ணை சிமிட்டி பேசிய விதத்தில் தன்னை மறந்து சிரித்தாள்.

''எப்படி இருக்கான்னு கேட்டா சிரிக்குற?''

''ரொம்ப அழகா இருக்கா.''

''அது! இப்போ வரை, ரொம்ப ஈசியா இருக்கும்....''

''ம்ம்ம்ம்.....''

''அக்கா விஷயம் கேட்ட எபக்ட்டா?''

அருந்ததி பதில் சொல்லாமல் கையில் இருந்த பென்சிலால் பேப்பரில் கோலம் போட்டுக் கொண் டிருந்தாள்.

''நான் கூட ரொம்ப எல்லாம் யோசிச்சதில்லை.... ஆனால் நம்ம நிச்சயத்துக்கு அப்புறம் யோசிச்சிருக் கேன்....''

அருந்ததி ஆர்வத்துடன் கணவனைப் பார்த்தாள்....

''உன்னை மாதிரியே ஒரு அமுல் பேபி பிறந்தா எப்படி சூப்பரா இருக்கும்னு யோசிச்சேன்....''

அருந்ததி விழிகளை விரித்தாள்!

அவனுக்குப் பிடித்த அந்த பார்வையை ரசித்தபடி,

''என்ன?'' என்றான் அவன்.....

''நான் உங்களை போல அமுல் பேபி பாப்பா இருந்தா நல்லா இருக்கும்னு நினைச்சேன்....''

''என்னை மாதிரியா? நோ! உன்னை மாதிரி தான் இருக்கணும்....''

''ப்ச்....''

''சரி நம்ம இரண்டு பேர் போலவும் ஓகேவா?''

''ம்ம்ம்....'' என்றவளுக்கு எங்கே இருந்து வந்தது என்று புரியாமலே நாணம் வந்தது....

ஷிவா அவளின் நெற்றியில் இருந்த சின்ன முடியை சரி செய்து விட்டான்.....

''என்னால உங்களுக்கு ஏமாற்றம்....''

அவள் முகத்தில் இருந்து கையை எடுக்காமல் தன் வழக்கமாக அவளின் முகத்தை விரல்களால் அளந்த படி,

''இல்லையே! ஸ்வீட் சர்ப்ரைஸ்ன்னு வேணா சொல்லலாம்...'' என்றான்.

அவனின் அருகாமையில், தொடலில் சிலிர்த்த படி, என்ன என்று கண்களால் கேட்டாள் அவள்...

''எனக்கு தான் கல்யாணம் ஆன உடனேயே இந்த சின்ன குட்டி பாப்பா கிடைச்சிருக்கு! வேற யாருக்கு இப்படி ஒரு லக் கிடைக்கும்?''

அவன் தன்னை தான் குழந்தை என்கிறான் என்பது புரிந்து அவளுக்கு மனதினுள் எதுவோ அசைந்தது....

தன்னையும் அறியாமல் அவனிடம் நெருங்கி அமர்ந்து அவன் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்.

"என் குட்டி செல்லம் நீ...."

ஷிவாவின் அதீதமான அன்பு, அந்த செல்லம் கொஞ்சல் எல்லாம் அவளுக்குப் பிடித்திருந்தது....

அவளிடம் குறை இருப்பதாக எண்ணாமல், வெகு இயல்பாக இருக்கும் அவன் மீது மரியாதை பன் மடங்கு உயர்ந்தது....

இவன் என்னவன்....

என் மீது அன்பு வைத்திருப்பவன்....

ஏனோ சம்மந்தமில்லாமல் டாக்டர் கீதாவின் நினைவு வந்தது....

அவனிடம் அவள் சொல்லவில்லையே!

சட்டென அவனை விட்டு விலகி அமர்ந்தவள்,

"நான் உங்க கிட்ட சொல்லாமல் ஒரு விஷயம் செஞ்சுட்டேன்...." என்றாள்.

"என்ன விஷயம்? எதுவா இருந்தாலும் இப்படியே பக்கத்தில...."

"இல்லை, இது வேற விஷயம்.... வந்து.... நான் உங்க டாக்டர் பிரெண்டோட வைப் கிட்ட பேசினேன்... அவங்களும் டாக்டர்..... பெங்களூர்ல பார்த்தோமே.... உங்க கிட்ட சொல்லலை.... நான்...."

ஷிவா மார்பில் கைகளை கட்டிக் கொண்டு திக்கி திணறி பேசிக் கொண்டிருந்தவளைப் பார்த்தான்.

19



"என்ன பேசின?"

மனைவியிடம் கேள்வி கேட்கும் போதே ஷிவா வின் மனதினுள் அவள் விஷயத்தை சொன்ன பின் என்ன செய்வது என்ற கேள்வியும் ஓடியது.

"வந்து..... வந்து..... நான் ஏன் இப்படி வித்தி யாசமா இருக்கேன்னு கேட்டேன்..."

"ம்ம்ம்..."

"கோபமா? உங்க பிரெண்ட் வைப் கிட்ட பேசுற துக்கு முன்னாடி உங்களை கேட்டிருக்கணும்."

ஷிவா அமைதியாக மனதினுள் அவன் சூர்யாவிட மும் கீதாவிடமும் பேசியதை பற்றி சொல்வதா வேண்டாமா என்று 'இங்கி பிங்கி பான்கி' போட்டுக் கொண்டிருந்தான்.

ஷிவாவின் அமைதி அருந்ததியை பெரிதும் பாதித்தது. அவசரப்பட்டு விட்டோமோ என்ற கேள்வி எழுந்தது.....

குழப்பமும், தயக்கமும் சேர்த்து குழைந்து,

''சாரிங்க..... எனக்கு அன்னைக்கு யோசிக்க தோணலை..... பக்கத்திலேயே சைக்கியாட்ரிஸ்ட் இருக்காங்களேன்னு கேட்டுட்டேன்.....''

ஒரு வழியாக மனைவியின் குரலில் இருந்த வேறுபாடு ஷிவாவிற்கு புரிந்தது. அவளைத் தேற்றும் எண்ணத்துடன்,

''ஹலோ, நீ ஏன் இப்படி அழுது வடியுற? கீதா கிட்ட பேசின, சரி, அவங்க என்ன சொன்னாங்க?'' என்றான்.

''உங்களுக்கு கோபம் இல்லையா?''

''கோபம் எல்லாம் எதுவும் இல்லை ரதி. கீதா என்ன சொன்னாங்க?''

''அது.... பெருசா எதுவும் சொல்லலை..... தனியா வளர்ந்ததால இப்படி இருக்கேன், கொஞ்ச நாள்ல எல்லாம் சரி ஆகிடும்னு சொன்னாங்க....''

மெல்லிய வெட்கப் பூச்சுடன் சொன்ன மனைவியை பார்த்து ரசித்தான் ஷிவா.

''ரதி.....''

''ம்ம்ம்ம்.....''

''நானும் உன் கிட்ட ஒண்ணு சொல்லணும்....''

''சொல்லுங்க.''

''உன்னை மாதிரியே நானும் ஒரு வேலை செய்தேன். உன் கிட்ட சொல்லாமல் செய்தேன்.''

''என்ன?''

"நீ சொன்ன மாதிரி, சூர்யா என் பிரெண்ட்....."

"ம்ம்ம்..... '

"கீதா அவன் வைப்....."

"அதான் எனக்கும் தெரியுமே....."

"அவன் வைப் சைக்கியாட்ரிஸ்ட்ன்னு தெரிஞ்ச உடனே...."

"உடனே??????"

"சும்மா இருக்க முடியலை..... அவங்க கிட்ட நமக்குள்ள இருக்க பிரச்சனை பத்தி சொன்னேன்..... உன் கிட்ட தெரியாத மாதிரி பேசச் சொன்னேன்..... அன்னைக்கு வீட்டுக்கு வந்தப்போ பேச சொன் னேன்....."

"என்னது?"

"நீ யோசிச்ச மாதிரி தான் நானும்....."

"அப்போ கூட நீங்க பாட்டுக்குப் போய் பேசுவீங் களா?"

"இல்லை ரதி....."

"பேசாதீங்க! அதெப்படி நீங்களா பேசலாம்?"

"நீ யோசிச்ச மாதிரியே தான் நானும் யோசிச் சேன்....."

சிவாவை கோபமாக பார்த்த அருந்ததி,

"நான் அன்னைக்கு அவங்க டாக்டர்ன்னு தெரிஞ்சும் பேச அவ்வளவு யோசிச்சேன்... நீங்க அது எதுவுமே யோசிக்கலை?"

மேலே எதையோ சொல்ல வந்தவள், பேச்சை நிறுத்தி விட்டு கட்டிலில் சென்று சுவரை பார்த்து திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

அருந்ததியின் கோபத்தை எதிர்பார்த்திராத ஷிவா, அவளைச் சமாதானம் செய்ய அவளின் பின்னே சென்று கட்டிலின் மறு பக்கத்தில் அமர்ந்தான்.

"நீ இப்படி கோபப்படுறது நியாயமே இல்லை. நீ யோசிச்ச மாதிரி உனக்கு நல்லதுக்காக தான் நானும் யோசிச்சேன்."

அருந்ததி பதில் சொல்லவில்லை.

"அன்னைக்கு நடந்தது உனக்கு ஞாபகம் இருக்குல? நான் ஆபீஸ்ல இருந்து வந்தப்போ நீ என்ன எல்லாமோ சொன்ன. அன்னைக்கு நீ பேசினது என் மனசை ரொம்ப காயப் படுத்திச்சு, அப்போ சூர்யாவையும் கீதாவையும் பார்க்கவே....."

அருந்ததி காதை பொத்திக் கொண்டாள்.

"நீ ரொம்ப ஓவராக்ட் செய்ற ரதி. நீ என்கிட்டே சொல்லாம செஞ்சதுக்கு நான் கோபப்பட்டேனா? நீ மட்டும்...."

அருந்ததி திரும்பிப் பார்த்து முறைத்தாள். ஷிவா பேச்சை நிறுத்தி விட்டு அவளைப் பார்த்தான்.

"சரி நான் செஞ்சது உனக்கு பிடிக்கலை, சாரி....."

அருந்ததியிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

"நீ இந்த மாதிரி நடக்கும் போது எனக்கு கோபமா வருது ரதி. நான் என்ன தப்பு செஞ்சேன்? நீ இப்படி

கோபப்பட? நீ தானே சைக்கியாட்ரிஸ்ட்கிட்ட போவோம்னு சொன்னா பேன்னு முழிச்சு பய முறுத்துன?''

அருந்ததி பதில் சொல்லவில்லை ஆனால் ஷிவா பக்கம் திரும்பி சூடாக ஒரு பார்வை பார்த்தாள்.

ஷிவா பேச்சை நிறுத்தவில்லை.....

''ஆனாலும் உனக்கு இவ்வளவு கோபம் வரகூடாது. நீ செய்ததுக்கு எல்லாம் நான் தான் கோபப்படணும், இல்லை உட்கார்ந்து அழணும்.....''

அருந்ததி எழுந்து அமர்ந்து கணவனைப் பார்த் தாள்.....

ஷிவா கண்டுக்கொள்ளாமல் பேசிக் கொண்டே போனான்....

''கல்யாணம் ஆயிடுச்சுன்னு சந்தோஷமா பக்கத்துல வந்தா நாலு அடி தள்ளி போய் நின்னு பயமா இருக் குன்னு சொல்ல வேண்டியது.... சரி பாவமா இருக் கேன்னு தள்ளி இருந்தா ஊர்ல இருக்க பொண்ணு பின்னாடி எல்லாம் சுத்துறீங்க அதனால தான் என் பக்கத்திலேயே வரதில்லைன்னு குற்றபத்திரிக்கை வாசிக்க வேண்டியது.... நான் வேற என்ன தான் செய்றது? ஏதோ அவனைப் பார்த்தேன் சொன்னேன், அப்போ கூட உனக்காக யோசிச்சு சாதாரணமா பேச சொன்னேன்.....''

அவன் சொன்ன விதத்தில், அருந்ததியின் மனம் உருகிப் போனது... அவளின் முகத்தில் இப்போது

கோபமில்லை அமைதி இருந்தது, ஆனாலும் ஷிவா பேச்சை நிறுத்தவில்லை.

"எனக்கு நல்லா வேணும்... தெரியாத்தனமா இந்த கல்யாணத்தை செய்துட்டு நான் படுற அவஸ்தை இருக்கே! நீ என்னை செய்ற கொடுமை இருக்கே! போதும்மா சாமி! ஒன்றரை மாசத்திலேயே எனக்கு கல்யாண வாழ்க்கை வெறுத்து போச்சு."

அருந்ததி முகத்தில் இப்போது சின்னதாக புன்னகை தோன்றி இருந்தது. கட்டிலின் விளிம்பில் சாய்ந்து அமர்ந்து கால்களை மடித்துக் கொண்டு, முட்டியில் கைகளை ஊன்றியபடி கணவனைப் பார்த்திருந்தாள்.

"என்ன சிரிப்பு வேண்டி இருக்கு உனக்கு? ஆனாலும் நீ சிரிக்காமல் என்ன செய்வ? சிரி, நல்லா சிரி! ஆனால் என்னை பத்தி உனக்கு தெரியாது! நான் ஆஞ்சநேயரோட தீவிர பக்தன், விவேகானந்தரோட சீடன்.... என் மனசை எல்லாம் அசைக்க முடியாது?"

புன்னகை பெரிதாகி கண்களிலும் மலர்ச்சி தெரிய அவனைப் பார்த்தவள், விழிகளை விரித்து,

"அப்படியா?" என்றாள்.

அந்த சிரிப்பில், விரிந்திருந்த அழகிய விழிகளில் ஒரு கணம் நிலை குலைந்தவன், பார்வையைத் திருப்பிக் கொண்டு,

"ஆமாம், நீ எந்த ரதியா இருந்தாலும் என்னை மயக்க முடியாது" என்றான்.

"இனிமேல் தானா மயக்கணும்?"

"என்னது?"

"ஒண்ணும் இல்லை."

"இங்கே பார், இப்போ இருந்து நீயும் நானும் சண்டை, டூ கா..... உனக்காக நான் பார்த்து பார்த்து எல்லாம் எதுவும் செய்ய மாட்டேன்..... உனக்கு ஏதாவது வேணும்னா நீயே என்கிட்ட வந்து அந்த இளிக்குற வாயை வச்சு கேளு."

"ஏன்?"

"ஏன்னா? உனக்காக யோசிச்சு யோசிச்சு ஒரு மாசத்தில பாதி முடி கொட்டிப் போச்சு..... நான் அவ் வளவு அக்கறையோட செஞ்சா, இந்தம்மா மூஞ் சியை தூக்கி வச்சுக்குறாங்க....."

"நான் தானே? சாரி...."

"வேண்டாம் வேண்டாம் இந்த கதை எல்லாம் வேண் டாம். இப்போ இருந்து எல்லாமே 'ஆன் டிமாண்ட்' தான்...."

அருந்ததி அவனை இப்போதும் சிரிப்புடன் பார்த் திருந்தாள்.

"என்ன இளிப்பு வேண்டி இருக்கு உனக்கு? என்னை பத்தி உனக்கு தெரியாது..."

"தெரியாது தான்! ஆனால் ரொம்ப பிடிச்சிருக்கு..... ஊரில என் கிட்ட ட்யூஷன் படிச்ச பசங்க இப்படி தான் அப்பப்போ சண்டித்தனம் செய்வாங்க..... பதில் தெரியலைன்னு பாவமா பாப்பாங்க....."

"ஓஹோ நான் மக்கு பையன்னு சொல்றீயா?"

"நான் சொல்லலைப்பா.... ஆனால் ஹி ஹி....."

"ஹோய் என்ன???"

"கல்யாணத்துக்கு அப்புறம் சண்டை இவ்வளவு சுவாரசியமா இருக்கும்னு நான் நினைக்கவே இல்லை..... சரி எனக்கு நாளைக்கு நிறைய வேலை இருக்கு, நான் தூங்குறேன். நீங்களும் ரெஸ்ட் எடுங்க....."

சொல்லிவிட்டு அருந்ததி திரும்பி படுத்துக்கொள்ள, ஷிவா அவள் பக்கம் சில வினாடிகள் பார்த்திருந்து விட்டு,

"இனி மேல் எதுவா இருந்தாலும் நீயே தான் சொல்லணும்.... எதுவா இருந்தாலும் புரியுதுல்ல?" என்றான் ஷிவா.

திரும்பாமல், பதில் சொல்லாமல் படுத்திருந்தாலும் அவன் சொல்லும் 'எதுவா' எது என்பது அவளுக்கு தெளிவாகப் புரிந்தது.

கையில் இருந்த பைலில் கவனம் இருப்பதாக காட்டிக் கொண்டாலும், கௌஷிக்கின் முழு கவனமும் ராதிகாவிடமே இருந்தது.

"ராது...."

"ம்ம்ம்."

"மணி பத்தாச்சு."

சுவாரசியமாக படித்துக் கொண்டிருந்த நாவலில் இருந்து கண்களை நிமிர்த்தி பார்த்த ராதிகா,

"அதனால என்ன?" என்றாள்.

"நீ இப்படி எல்லாம் கண்ணு முழிக்க கூடாது. டைமுக்கு தூங்கனும்."

"இன்னைக்கு ஆல்மோஸ்ட் புல் மார்னிங் தூங்கி இருக்கேன். தூக்கம் வரலை கௌஷி!"

"பரவாயில்லை, சும்மா படுத்துக்கோ. மாத்திரை சாப்பிட்டியா?"

"சாப்பிட்டாச்சு."

"படுத்துக்கோடா...."

"இன்னும் ஒரு நூறு பேஜ் தான்...."

"ப்ளீஸ்ம்மா நாளைக்கு படி...."

"சரி...."

புத்தகத்தில் ஒரு புக்மார்க் எடுத்து வைத்து விட்டு மூடி வைக்கும் மனைவியை பார்த்துக் கொண்டிருந் தான் கௌஷிக்.

புத்தகத்தை வைத்து விட்டு திரும்பியவள், அவனின் பார்வையை கவனித்து விட்டு,

"என்ன இந்த குட் பாய் லுக்? பேட் பாயா என்ன செஞ்சீங்க? என்ன விஷயம்?" என்றாள்.

"ராது நான் ஒண்ணு கேட்பேன், தப்பா நினைக்க மாட்டீயே?"

"பில்ட் அப் எல்லாம் பயங்கரமா இருக்கு என்ன விஷயம் கௌஷி?"

"அருந்ததி உன்கிட்ட ஏதாவது சொன்னாளா?"

ராதிகா ஆர்வத்துடன் கணவனைப் பார்த்தாள்.

"எதை பத்தி?"

"அம்மா பத்தி....."

யோசனையுடனே,

"ஏன் கேட்குறீங்க?" என்றாள்.

"அன்னைக்கு பெங்களூர்ல இருந்து வந்த அன்னைக்கு அம்மா கிட்ட பேசினேன். தம்பி கோபமா எதையோ சொல்லிட்டான்னு வருத்தப்பட்டாங்க. நான் என்ன சொல்ல சொல்லு? அவன் கிட்ட பேசுறேன்னு சொல்லி வச்சுட்டேன்....."

"சரி இதுல அருந்ததி எங்கே வரா?"

"நீ அன்னைக்கு கோக் வாங்க போனப்போ தான் அம்மா கிட்ட பேசினேனா, அந்த எபெக்ட்ல அருந்ததி கிட்ட என்னையும் அறியாமல் புலம்பிட்டேன்."

"ஓ....."

"அவ ஏதாவது சொன்னாளா?"

"அத்தையைக் கூப்பிடலாம்னு ஐடியா கொடுத்தது அவ தான். ஆனால் நீங்க சொன்னீங்கன்னு சொல்லலை....."

"சாரிடா உன்னை குறை சொல்லணும்னு நான் எதையும் சொல்லலை."

"சொன்னாலும் தப்பில்லை, உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்கு."

அவளின் கைகளை எடுத்து தன் கைகளுடன் சேர்த்து அணைத்துக் கொண்டவன்,

"உன் கிட்ட கோபப்பட, குறை சொல்ல, எல்லா உரிமையும் இருக்கு, ஆனால், வேற யார் கிட்டேயும் சொல்ல இல்லை."

"பரவாயில்லை கௌஷி, நான் தப்பா நினைக்கலை. உங்க மனசில இருக்க ஆசையை நான் புரிஞ்சுக்கா மலே இருந்திருக்கேனே. அப்புறம்? சொல்லிட்டீங் களா?"

அவள் பொதுவாக கேட்டாலும், எதை கேட்கிறாள் என்பது புரிந்ததால்,

"பேசினேன்..... இங்கே வந்து தங்குறதான்னு கொஞ்சம் பிகு செஞ்சாங்க ஆனால் வரேன்னு சொல்லிட்டாங்க. வியாழன் வந்திருவாங்க."

"ம்ம்ம்....."

அமைதியாக பதிலளித்த மனைவியை பார்த்து கௌஷிக்கிற்கு மனதினுள் கிலி ஏற்பட்டது. அம்மா வருவதில் அவனுக்கு சந்தோஷமே! ஆனால், இந்த வருகை பெரிய பிரச்சனையில் போய் முடியாமல் இருக்க வேண்டுமே!

வியாழன் தன் அம்மா மகேஸ்வரியை ரயில் நிலையத்தில் இருந்து கௌஷிக் வீட்டிற்கு அழைத்து வரும் போதே மணி ஒன்பதரை ஆகி இருந்தது.

"எனக்கு முக்கிய மீட்டிங் இருக்கு, நான் இன் னைக்கு வீட்டில் இருக்க முடியாதும்மா.... சாயந்தரம் சீக்கிரம் வரப் பார்க்கிறேன்."

மகேஸ்வரியிடம் சொன்னாலும் அது ராதிகாவிற் காக அவன் சொன்ன செய்தி.....

ராதிகாவிற்கும் புரிந்தது, ஆனால் அவள் அமைதியாக இருந்தாள்.

தன்னிடம் நேராக சொல்லாமல் இப்படி செய்தியாக அவன் சொன்னது அவளுக்கு பிடிக்கவில்லை.

"நீ போயிட்டு வாப்பா...."

அரை மனதுடன் கிளம்பிச் சென்றான் கௌஷிக்.

"இது தான் புது மருமகளா?"

"ஆமாம் பேரு அருந்ததி."

"நீங்க பாட்டுக்கு திடீர்னு கல்யாணம்னு நாள் குறிச்சு சொல்லிட்டீங்க. பொசுக்குனு கிளம்பி வர முடியுமா? அதான் வர முடியலை. மத்தபடியும் நான் வந்து என்ன ஆகப் போகுது? நானே ஒரு அமங்கலி."

"என்ன இப்படி எல்லாம் பேசுறீங்க? அப்படி எல்லாம் யோசிக்காதீங்க."

"விடுங்க வயசானா பேச்செல்லாம் அப்படி தான்...."

தான் எடுத்து வந்திருந்த பையினில் இருந்து ஒரு சின்ன பொட்டலத்தை எடுத்துப் பிரித்தாள் மகேஸ்வரி.

அதில் புத்தம் புதிதாக மின்னிய நான்கு தங்க வளையல்கள் இருந்தன.

"இந்தாம்மா அருந்ததி! உங்க கல்யாணத்திற்காக வாங்கினது. அப்போ கொடுக்க முடியலை."

அந்த வளையல்களின் அகலம் அவற்றின் மதிப்பை சொல்ல, அருந்ததி தயக்கத்துடன் லக்ஷ்மி பக்கம் பார்த்தாள்.

வாங்கிக் கொள்ள லக்ஷ்மி கண்ணால் ஜாடை சொல்லவும், அமைதியாக பெற்றுக் கொண்டாள்.

"பரவாயில்லையே, உங்க மருமகள் நல்ல மாதிரி போலருக்கு. தங்க நகையை பார்த்து ஆன்னு வாயை பிளக்காமல் கேட்டு வாங்கிக்கிறாளே! மத்தவங் களுக்கும் இந்த நல்ல குணம் எல்லாம் வந்தால் பர வாயில்லை....." ராதிகாவை ஓரக்கண்ணால் பார்த்த படி சொல்லி முடித்தாள் மகேஸ்வரி.

ராதிகாவிற்கு மட்டுமில்லாமல் அருந்ததிக்கும் முகம் மாறிப் போனது!

அருந்ததிக்கு மகேஸ்வரி சொன்ன விஷயம் புரியவில்லை ஆனாலும் ராதிகாவை குத்திக் காட்ட சொன்னது என்பது வரை புரிந்தது.

லக்ஷ்மி, தன் வயதிற்கே உரிய அனுபவத்துடன்,

"சின்னப் பசங்க மெல்ல தான் கத்துப்பாங்க. ஆனால் கத்துப்பாங்க.... நீங்க குளிச்சிட்டு வாங்க, சாப்பிடலாம்.... ராதிகா, அத்தைக்கு ரூமை காட்டிட்டு வா..." என்றாள்.

ராதிகாவும், மகேஸ்வரியும் அறை நோக்கிச் செல்ல, குழம்பிய முகத்துடன் நின்றிருந்த அருந்த தியைப் பார்த்த லக்ஷ்மி,

"என்ன அதுக்குள்ளே இப்படி இருக்க? இப்போ தானே ஆரம்பிச்சிருக்கு, இன்னும் என்ன எல்லாமோ இருக்கு" என்றாள் தன்னுடைய பாணியில்.

பேருக்கும் சிரிக்கத் தோன்றாமல், தேவையில் லாமல் ராதிகாவிற்கு பிரச்சனையை உருவாக்கி

விட்டோமா என்ற கேள்வி மட்டுமே அருந்ததியிடம் இருந்தது.



20

லக்ஷ்மி சொன்னதை நிரூபிப்பதை போல அன்று எல்லாம் நடந்தது. ராதிகா மகேஸ்வரியை விட்டு ஒதுங்கி இருந்ததன் காரணமும் அருந்ததிக்கு தெளிவாகப் புரிந்து போனது.

அருந்ததி எப்போதும் சேலை அணிந்தே பழக்கப் பட்டவள். சென்னையிலும் அதையே பின்பற்றிக் கொண்டிருந்தாள். ராதிகா பொதுவாக சுரிதார் அணிவதையே வழக்கமாக வைத்திருந்தாள்.

காலை உணவு உண்ணும் போது அதை பற்றிய பேச்சை ஆரம்பித்தாள் மகேஸ்வரி.

''புடவை தான் நம்ம ஊரு ட்ரஸ். நம்மோட பாரம் பரியம். அதோட அழகு வேற எதிலாவது வருமா? சின்ன பொண்ணுக்கு தெரியுது! ஹூம், இதெல்லாம் கூடவா நாம சொல்லிக் கொடுக்க முடியும்? கல்யாணம் ஆனால் என்ன போடுறதுன்னு ஒரு விவஸ்தை வேண்டாம்? இந்த மாதிரி டிரஸ் போடுறதை விட்டுட்டு அழகா புடவை கட்டக் கூடாதா?''

"ஆபீஸ் போகும் போது போட்டு பழக்கம் ஆகிடுச்சு அத்தை. இது தான் வசதியா இருக்கு."

"சேலை கட்டிட்டு அடுப்பு சூடுல வேலை செய்ற வங்களுக்கு எல்லாம் தெரியாத வசதி உங்களுக் கெல்லாம் தான் புதுசா தெரியுது."

"அப்பப்போ சாரீயும் கட்டுவேன் அத்தை."

"ஓ, அதான் உங்க வெயில் காயுற சென்னையில எப்போவாவது மழையும் பெய்யுதா?"

முதலில் உண்மையான ஆதங்கத்தில் மகேஸ்வரி பேசுகிறாள் குறை சொல்ல இல்லை என்று தான் அருந்ததி நினைத்தாள். ஆனால் அது தவறு என்பது புரிந்து போனது!

ராதிகா உணவில் கருவேப்பிலையை ஒதுக்கி உண்பது சரியில்லை!

சோபாவில் அமரும் போது நேராக உட்கார வில்லை!

சமையலில் உப்பு பார்க்கத் தெரியவில்லை!

பார்க்கும் டிவி சேனல் சரி இல்லை!

இன்னும் ஏதேதோ!

அருந்ததி மாமியார் மருமகள் மோதல்களை கேள்வி பட்டிருக்கிறாள். ஊரில் சில வீடுகளில் நடப்பதை பார்த்தும் இருக்கிறாள். ஆனால் இங்கே மஹேஸ்வரி ராதிகாவிடம் நடந்து கொள்வது போல் அவள் பார்த்ததில்லை, கேள்வியும் பட்டதில்லை!

வேண்டாத மருமகள் தொட்டதெல்லாம் குற்றம் என்பதை நிரூபிப்பது போல் ராதிகாவை பார்க்கும் போதெல்லாம், சின்ன சின்ன விஷயங்களுக்கும் குறை சொல்ல, குத்திக் காட்டி பேச மகேஸ்வரியிடம் ஏதேனும் ஒன்று இருந்தது, இல்லை என்றாலும் அவளாக எதையாவது கண்டுப் பிடித்துக் கொண் டாள்.

அந்த பேச்சின் கூடவே துணையாக அருந்ததியை யும் அவள் சேர்த்துக் கொண்டது தான் அருந்ததியை கலவரப்படுத்தியது.

அனால் அவை அனைத்தையும் விட, இதை எல்லாம் ராதிகா அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த விதம் தான் அருந்ததியை பெரிதும் கவர்ந்தது. ராதிகா அந்த வீட்டில் இளவரசி, இல்லை இல்லை ராணி போல. எப்போதும் கலகலப்பாக இருக்கும் அவளை அனைவரும் அன்புடன் தாங்கினர்.

ஆனால் காலை முதல் தன்னிடம் நடந்து கொண்டிருந்த நேரடி தாக்குதல்களை அமைதியாக ராதிகா ஏற்றுக் கொண்டாளே தவிர கோபப்பட்டு ஒரு வார்த்தையும் பேசவில்லை. கௌஷிக் மீது இருக்கும் அன்பினால் தான் அவள் அமைதியாக இருக்கிறாள் என்பது புரிந்தது!

ராதிகா அமைதியாக இருக்கிறாள் என்றால், லக்ஷ்மியும் நடந்ததைப் பார்த்து எதுவும் சொல்ல வில்லை. கண்டும் காணாமலும் இருந்தாள். மற்ற படியும் லக்ஷ்மி என்ன செய்ய முடியும்?

தன் மகனின் வாரிசை தாங்கிக் கொண்டிருக்கும் ராதிகா தவறே செய்தாலும் இந்நேரத்தில் மகேஸ்வரி கண்டு கொள்ளாமல் அல்லவா விட்டிருக்க வேண்டும்? இப்படி சிறு குழந்தை போல நடந்துக் கொண்டால் எந்த மருமகள் தான் அன்புடன் நடந்துக் கொள்வாள்?

ராதிகாவிடம் மகேஸ்வரி நடந்து கொள்ளும் விதம் பார்த்து அருந்ததிக்குக் கோபம் பொங்கியது.

தான் தொடங்கி வைத்த இந்தப் பிரச்சனையில் இருந்து ராதிகாவைக் காப்பாற்றுவது எப்படி என்று அருந்ததி யோசிக்கத் தொடங்கினாள். யோசித்து யோசித்து தலை வலித்ததே தவிர உருப்படியாக ஒரு ஐடியாவும் தோன்றவில்லை.

தங்கள் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி யோசித்துக் கொண்டிருந்தவள், மெல்லிய குரலில் பாடலை முணுமுணுத்தபடி வந்த ஷிவாவை மற்ற நாட்களை விட சந்தோஷம் பொங்கப் பார்த்தாள்.

''நல்ல வேளை இன்னைக்கு சீக்கிரம் வந்துட்டீங்க. வாங்க வாங்க, எனக்கு உங்க கிட்ட ஒரு விஷயம் பேசணும்'' என்றாள் மனதின் மகிழ்ச்சி குரலிலும் ஒலிக்க.

''என்ன வரவேற்பு எல்லாம் பலமா இருக்கு? நேற்று இல்லாத மாற்றம் என்னது.....!!??''

அவன் குறும்புப் புன்னகையுடன் அவளைக் கண்களால் அளந்தபடி கேட்கவும், அருந்ததிக்குத் தன்னையும் அறியாமல் வெட்கம் தோன்றியது.

அதை மறைக்க முயன்றபடி,

''முக்கியமான விஷயம்ங்க! உங்களுக்கு ரொம்ப பசிக்குதா? பேசிட்டு சாப்பிட்டால் போதுமா? ஹூஹூம்..... ஒருநாள் பசிச்சால் பரவாயில்லை, கொஞ்சம் பொறுத்துக்கோங்க..... இப்படி உட்காருங்க, நான் சொல்றேன்.''

''ஹலோ? எனக்கு பசிச்சா நீ என்ன எனக்காக முடிவெடுக்குறது? நான்....''

''ப்ளீஸ் ப்ளீஸ் எனக்கு ஒரு ஐடியா மட்டும் கொடுத்துட்டு போங்க. பொதுவா அக்கா கிட்ட கேட்டிருப்பேன், பாவம் அவங்களே டல்லா இருக்காங்க, தொந்தரவு செய்ய மனசு வரலை.''

''ராது டல்லா இருக்காளா? ஓ, அத்தையம்மா வேலையா? இதெல்லாம் தெரிஞ்ச விஷயம் தானே.''

''அக்கா எப்போவும் கலகலன்னு இருப்பாங்க. இன்னைக்கு அவங்க அமைதியா இருக்கும் போது வீடு என்னவோ போல இருக்கு.''

''இப்போ உனக்கு என்ன வேணும்?''

''காலையிலே வந்ததில் இருந்து பெரியம்மா அக்காவை எதாவது சொல்லிட்டே இருக்காங்க. ஒரு நாளுக்கே இப்படி, அதுவும் பக்கத்தில இருந்து பார்க்கும் எனக்கே இப்படி இருக்கே, அக்காக்கு எப்படி இருக்கும், எப்படியாவது பெரியம்மா மனசை மாத்தணும்.''

''மாத்தி?''

''நம்ம அக்கா எவ்வளவு நல்லவங்க.....''

''வல்லவங்க, வீராதி வீராங்கனைன்னு அவங்களுக்குப் புரிய வைக்கணுமாக்கும்.''

''ஆமாம், ப்ளீஸ் ஏதாவது ஐடியா கொடுங்க.''

''ம்ம்ம்.... என்னை நம்பி கேட்க்குற.... ம்ம்ம்ம்..... இந்த பழமொழி கேள்வி பட்டிருக்கீயா? முள்ளை முள்ளால எடுக்கனும்.''

''புரியலையே????''

''அவங்க செய்றதை அவங்களுக்கே திருப்பிக் கொடுங்க. அவங்களைப் போலவே நீங்களும் தப்பு சொல்லுங்க.''

''ஆ! அவங்களை போல உட்காருறது சரி இல்லை, சாப்பிடுறது சரியில்லைன்னு எல்லாம் சொல்ல முடியுமா?''

''சொன்னால் என்ன? அவங்க சொல்றாங்கல்ல?''

''ஆனால் அப்படி செய்யும் போது இன்னும் கோபம் தானே வரும்? அக்கா மேல அவங்களுக்கு பாசம் எப்படி வரும்?''

''ஓஹோ..... ஆனால் ரதி நான் ஒண்ணு சொல்லட்டுமா?''

''சொல்லுங்க.''

''நீ ஏன் தேவை இல்லாமல் இந்த விஷயத்தில தலை போடுற? அத்தை இப்படின்னு தெரியும், தெரிஞ்சும் ராதுவே தானே அவங்களை வருந்தி வருந்தி வர சொன்னா? அவளே அனுபவிக்கட்டும் விடு.''

"என்ன தம்பிங்க நீங்க?"

"நல்ல தம்பி!"

அருந்ததி அவனை கோபமாக ஒரு பார்வை பார்த்தாள்.

"ஹோய் என்ன முறைக்குற? நான் என்ன செய்ய முடியும்? நானா அவளை அவங்களை கூப்பிடச் சொன்னேன். அவங்க அப்படின்னு தெரியும். ஒழுங்கு மரியாதையா வேலையை பார்த்துட்டு போகாமல், வீட்டுக்கு கூப்பிடுற வேலை எல்லாம் எதுக்கு?"

"ப்ச்..... பாவம் அக்கா அவங்க இப்படி....."

"அவளுக்கு நட்டு கழண்டு போயிருக்கும், நீ விடு!"

"அப்படி எல்லாம் விட முடியாது."

"ஏன்?"

"அக்கா அத்தையை கூப்பிட காரணம் நான் தான்."

"நீயா?"

"ம்ம்ம்ம்."

"அப்படி என்ன செஞ்ச?"

"அண்ணா அத்தைக்கிட்ட அன்பா நடந்துக்குற மாதிரி அக்காவும் அவரோட அம்மா கிட்ட நடந்துக் கிட்டா, அண்ணா சந்தோஷப் படுவாருன்னு சொன்னேன்."

"ஓஹோ நீங்க தானா அந்த சமாதான புறா?"

அருந்ததி மீண்டும் கணவனை பார்த்து முறைத்தாள்.

"செய்றது எல்லாம் செஞ்சுட்டு என்னை பார்த்து முறைச்சா, நான் என்ன செய்ய? அம்மாடியோ இந்த பொண்ணுங்களை நம்பவே கூடாதுப்பா! நீ என்னை பார்த்து முறைக்குற கோபப்படுறேன்னு சொன்னால் யாரவது நம்புவாங்களா? வேற யாரையாவது விடு, என்னோட அம்மா நம்புவாங்களா? அப்பாவி போல முட்டை கண்ணை உருட்டி உருட்டி மனசை மயக்கிட்டு இப்போ செய்றது எல்லாம் பாரு!"

"நான் எவ்வளவு சீரியஸா பேசிட்டு இருக்கேன், உங்களுக்கு கொஞ்சம் கூட உங்க அக்கா மேல பாசமே இல்லையா?"

அருந்ததியின் அந்த கோபத்தை, முறைப்பை ஷிவா வெகுவாக ரசித்தான்!

பெண்களின் கண்கள் காட்டும் உணர்ச்சிகளை, அது செய்யும் மயக்கும் மாயா ஜாலங்களை பற்றி ஒரு புத்தகமே எழுதலாம் என்று அவனுக்குத் தோன்றியது!

அவள் அப்பாவியாக விழிகள் விரித்து பார்ப்பது அவனை மயக்கியது என்றாள், அவளின் இந்த கோப பார்வை, பாவனை அவனை மொத்தமாக குப்புற விழச் செய்தது.

இவளை இப்படிக் கோபப்பட வைத்து பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறதே!

ஷிவா அருந்ததியைப் பார்த்தபடி தன் சொந்த ஆராய்ச்சியில் ஆழ்ந்திருக்க, அருந்ததியை அவனின் அந்த பார்வை என்னவோ செய்தது!

ஆனாலும் சுதாரித்துக் கொண்டு,

''உங்களைப் போய் நல்லவருன்னு நம்பி கேட்க வந்தேன் பாருங்க, என்னைச் சொல்லணும்'' என்றாள்.

''நான் கெட்டவன்னு சொல்ற மாதிரி என்ன செஞ்சுட்டேன் சொல்லு? செய்யலையேன்னு தான் நானும் மனசுக்குள்ள பீல் செஞ்சுட்டு இருக்கேன்.''

அவன் சொல்வது புரிந்து அவளின் முகத்தில் இருந்த கோபம் மறைந்து வெட்கம் எட்டி பார்த்தது.

''நீ எவ்வளவு அழகா இருக்கேன்னு உனக்கு தெரியுமா ரதி? சில சமயம் உன்னை அப்படியே கடிச்சு சாப்பிட்டுடலாம் போல தோணுது. ஆனாலும் ஏதோ கொஞ்சோண்டு நல்லவனா இருக்குறதால தான் பொறுமையை இழுத்து பிடிச்சிட்டு இருக்கேன்.''

''.....''

''என்னடா இப்படி பேசுறானேன்னு யோசிக்குறீயா? நான் சொன்ன வார்த்தை மாற மாட்டேன். ஆனால் என் மனசில இருக்குறது உனக்கும் புரியணுமே. கீதா சிஸ்டர் சொன்னது போல சீக்கிரம் உன் பயம் எல்லாம் போயிடும்னு காத்துக்கிட்டே இருக்கேன்.''

''.....''

"உனக்கு நான் சொல்றது ஏதாவது புரியுதா?"

"எனக்கா? எனக்கெப்படி புரியும்? இங்கே பெரிய அனுமார் பக்தர், விவேகானந்தரோட தீவிர சிஷ்யர் ஒருத்தர் இருக்கார் அவருக்கு வேணா தெரியும்?"

குறும்பு மின்னச் சொன்னவளை இமைக்க மறந்து பார்த்தான் அவன்!

இன்னும் என்னென்ன பாவனைகள் வைத்திருக் கிறாள் இவள்?

"ப்ச், என்னங்க நீங்க? வேற யார் கிட்ட போய் நான் ஐடியா கேட்க? அத்தை கிட்ட கேட்டா திட்டிடுவாங் களோன்னு பயமா இருக்கு. சும்மா இருந்த அக்காவை பாவம்....."

"பீல் செய்யாதேடா ரதி. நீ நல்லது நினைச்சு தானே செய்த."

"ஆனால் நடக்குறது நல்லதா இல்லையே. முதல் நாள் ஊரில பார்த்ததில் இருந்தே என்கிட்ட அத் தனை அன்பா இருக்கவங்க அக்கா. அவங்களை என் சொந்த அக்காவா தான் மனசில நினைச்சிருக்கேன். அவங்களை இப்படி சிரிப்பில்லாமல் பார்த்தால் நல்லாவே இல்லை. ஒரு நாளுக்கே இப்படி இருக்கு, தினம் தினம் இப்படி நடந்தா அக்காவும், அத்தையும் ஏதாவது சொல்றாங்களோ இல்லையோ நான் பெரியம்மா கிட்ட கோபமா ஏதாவது சொல்லிட போறேன்."

"அதை செய்யேன்! எல்லா பிரச்சனையும் முடிஞ்சு போயிடும்."

"என்னங்க இப்படி சொல்றீங்க? நீங்க எவ்வளோ புத்திசாலி, கட்டாயம் ஏதாவது ஐடியா சொல்வீங்கன்னு நினைச்சேன்..."

"ஹே ஹே இரு இரு.... நீ இவ்வளவு சொல்லும் போது உனக்கு உதவாமல் விட்ருவேனா? யோசிப்போம்.... ம்ம்ம்ம்..... ஒரு ஐடியா."

"என்ன? என்ன?"

"முள்ளை முள்ளால எடுக்கணும்னு சொல்ற மாதிரியே இன்னொரு பழமொழியும் இருக்கு. சாட்சிக்காரன் கால்ல விழுறதை விட சண்டைக்காரன் காலில விழலாம்!"

"புரியலையே! பெரியம்மா கிட்ட போய், அக்கா கிட்ட அப்படி பேசாதீங்கன்னு கெஞ்ச சொல்றீங்களா?"

"இல்லை ரதி! அந்த பழமொழி சும்மா சொன்னேன். இப்படி யோசிச்சு பாரு. ராதிகாவுக்கும் அத்தைக்கும் என்ன பிரச்சனைன்னு யாருக்கும் தெரியாது. ராதிகா மேல அவங்களுக்கு எதனாலோ கோபம். அதை தான் இப்படி காட்டுறாங்க. அந்த கோபத்தை மாத்திட்டா? நீ சொன்னது போல ராது எவ்வளவு நல்லவ, வல்லவன்னு அவங்களுக்கு புரிஞ்சுட்டா....."

"புரிஞ்சுக்கிட்டா, அக்கா கிட்ட இப்படி பேச மாட்டாங்க. ரொம்ப கரெக்ட். பெரியம்மாக்கு எப்படி யாவது அக்காவை பத்தி புரிய வைக்கணும்."

"கரெக்ட்."

"அதே போல அத்தைக்குப் பிடிச்ச மாதிரி ராதுவை நடக்க சொல்லு. உலகத்துல வீக்னஸ் இல்லாத ஆள் இருக்காங்களா என்ன?"

"அதுவும் சரி தான். தேங்க்ஸ்ங்க! நான் போய்....."

"ஹலோ, வேலை முடிஞ்ச உடனே ஓட பார்க்குற பார்த்தீயா?"

"தேங்க்ஸ் சொல்லிட்டு தானே போறேன்னு சொன்னேன்?"

"உன்னோட தேங்க்ஸ் எல்லாம் எனக்கு வேண்டாம்."

"வேற என்ன வேணும்?"

கேட்கும் போதே அவளின் குரல் குழைந்தும், நடுக்கத்துடனும் ஒலித்தது.

"என்ன வேணும்னு நினைக்குற?"

அவளின் அழகிய இதழ்களை பார்த்தபடி அவன் கேட்க, அருந்ததியின் இதயம் தாறுமாறாக அடிக்க தொடங்கியது....

மனதினுள் ஆசையும், பயமும் கலந்து எழுந்தன.....

ஷிவா சோபாவில் அவளின் அருகே, வெகு அருகே நகர்ந்து அமர்ந்தான்!

ஷிவாவின் பார்வையை தாங்க முடியாமல், மன தினுள் இருந்த பயத்தையும் மீறி, அவளின் கண்கள் தானாக மூடிக் கொண்டன.

"... நீங்க ரொமான்டிக் ஹீரோவா மாறி, அவங் களை முடிந்த வரை தொடாமல் woo செய்ய பாருங்க!....."

மனதினுள் மனப்பாடம் செய்து வைத்திருந்த கீதாவின் அறிவுரை நினைவில் வந்தது....

அருகே இருந்த மனைவியை பார்த்தவன், மனதினுள் எழுந்த ஆசையை அடக்கிக் கொண்டு, மெல்ல அவளின் முகத்தில் ஊதினான்.....

கண்களை திறந்தவளின் முகத்தில் நிம்மதியும் கூடவே ஏமாற்றமும் இருந்தது!

"என்ன பார்க்குற? நான் சொன்னேன்ல, எதுவா இருந்தாலும் இனி மேல் ஆன் டிமான்ட் மட்டும் தான்! நீயா தான் சொல்லணும், கேட்கணும்....."

ஏமாற்றத்தையும் மீறி, அவனை ஒரு வினாடி பெருமையாக பார்த்தவள், அடுத்த வினாடி அங்கிருந்து எழுந்து ஓடி மறைந்தாள்.

மனதில் பொங்கும் சந்தோஷத்துடன் அருந்ததி ராதிகாவின் அறை நோக்கி சென்றாள்.

ஷிவா போல ஒரு கணவன் கிடைக்க அவள் என்ன புண்ணியம் செய்தாள்? திருமணத்திற்கு முன் காதலியிடம் கூட முத்தம் கிடைக்கும்..... திருமணமாகி மனதில் அத்தனை ஆசை இருந்தும், அவளுக்காக மனதை அடக்கி..... அதுவும் அவள் மயக்கத்துடன் இருக்கும் போதும் கூட....

சரியான அசட்டுக் கணவன்! முத்தமிட்டால் அவனுக்கு என்ன குறைந்தா போகிறது? ஆன் டிமான்டாம், ஆன் டிமான்ட்!

மனதினுள் யோசித்தபடி ராதிகாவின் அறைக் கதவைத் திறந்தவள் திகைத்து நின்றாள்!

அங்கே கௌஷிக்,

"என் செல்லம்ல சிரிடா!" என்று செல்லம் கொஞ்சியபடி தோப்புக்கரணம் போட்டுக் கொண்டிருந்தான்.

புரியாமல் அவள் திகைத்து நிற்க, அரவம் உணர்ந்து திரும்பிய ராதிகாவும், கௌஷிக்கும் தங்கள் பங்குக்கு திகைத்து நின்றனர்.

அடுத்த சில வினாடிகள் யார் அசடு வழிவதில் வல்லவர் என்று போட்டி நடப்பது போல் மூன்று பேர் முகத்திலும் டன் டன்னாக அசடு வழிந்தது!

ஒரு வழியாக முதலில் தன்னிலை பெற்ற கௌஷிக்,

"அத்தை ஹார்லிக்ஸ் போட்டு வச்சிருக்கேன்னு சொன்னாங்க, நான் போய் வாங்கிட்டு வரேன்" என்றான்.

"இல்லை இல்லை அண்ணா! சாரி நீங்க வந்திருப்பீங்கன்னு எனக்கு தோணவே இல்லை.... நீங்க பேசிட்டு இருங்க...."

சொல்லும் போதே அருந்ததிக்கு சிரிப்பு பொங்கியது.

அத்தனை பெரிய நிறுவனத்தில் மேனேஜராக பணி புரிபவன்! யாராக இருந்தால் என்ன காதலில் பாகுபாடில்லையே!

அவளின் சிரிப்பை பார்த்து கௌஷிக்கின் முகத்தில் இன்னும் கொஞ்சம் அசடு வழிந்தது.

"இல்லை நான் கிளம்பிட்டு இருந்தேன்.... நீங்க பேசுங்க....." என்றபடி அறையை விட்டு சென்றான்.

ராதிகாவின் அருகே சென்ற அருந்ததி, அவளின் முகத்தில் இருந்த சிரிப்பை பார்த்து சந்தோஷப் பட்டாள்.

"சாரிக்கா, கரடி போல வந்துட்டேன். ஒரு விதத்தில அண்ணாவை காப்பாத்திட்டேன் போல தோணுது!"

"அப்படி எல்லாம் அவர் எஸ்கேப் ஆக முடியாது. மூணு நாளா ட்யுல இருக்க பனிஷ்மன்ட். வந்து கண்டின்யூ செய்வார்."

"பாவம் அவர். ஆனால் அவர் வந்த உடனே உங்க முகத்தில தானா சிரிப்பும் வந்திருச்சே. பேசாமல் அண்ணாவை வேலையை விட்டுட்டு வீட்டிலேயே இருக்க சொல்லிடலாம்!"

"அய்யோ என் க்யூட்டிக்கு என்ன அறிவுடா! சரி அப்படி என்ன சொல்ல அவ்வளவு அவசரமா வந்த அதை சொல்லு."

"உங்க அத்தையை மாத்த ஒரு ஐடியா வச்சிருக்கேன்."

"ப்ச்...."

"நான் சொல்றதைக் கேளுங்க. உலகத்தில எல் லோருக்கும் ஏதாவது வீக் பாயிண்ட் இருக்கும். பெரி யம்மாவோட வீக் பாயிண்ட் என்னனு கண்டு பிடிச்சு அவங்களை மாத்திடுவோம்."

"எல்லோரும் ஒண்ணும் அப்படி இல்லை. எனக்கு எல்லாம் எந்த வீக் பாயிண்டும் இல்லை."

''அப்படியா என்ன? உங்களுக்கு ஒரு பெரிய பெரிய வீக் பாயிண்ட் இருக்கே.''

''எனக்கா, என்ன அது எனக்கு தெரியாதது?''

''அண்ணா! அண்ணாக்குன்னு சொன்னால் உங்களுக்கு பிடிக்காததையும் செய்றீங்க! உங்களையே மாத்திக்கிட்டு நடந்துக்குறீங்க! அவர் பக்கத்தில இருந்தாலே உங்களுக்கு எல்லா வருத்தமும் பறந்து போகுது! முகத்தில அப்படி ஒரு சிரிப்பு..... என்ன சரியா?''

''வாலு! அந்த சாமியார் எப்படி இப்படி மாறினான்னு இப்போ தானே தெரியுது. இப்படி பேசியே மயக்கி இருப்ப.''

''போங்க அக்கா..... ஆனாலும் என்ன நீங்க.....''

அவள் முடிக்கும் முன்,

''சாரி சாரி சாரி! மறந்து போய் சாமியாருன்னு சொல்லிட்டேன் என் செல்லம். அவனுக்கு வேற என்ன பேரு வைக்குறது'' என்றாள் ராதிகா.

''ஏன் காதல் மன்னன்னு வைங்க.''

''என்னது.''

''ஹி ஹி ஹி! சரி அக்கா, அண்ணா வரார். அவர் மீதி தோப்புக்கரணம் போடும் போது அப்படியே பெரியம்மா விஷயம் கேட்டு வைங்க. நம்ம கூட்டணிக்கு எப்போதும் வெற்றி தான். பெரியம்மாவை மயக்கி ஜெயிச்சிடுவோம்.''

அவள் சொன்ன விதத்தில் ராதிகாவிற்கும் சிரிப்பு வந்தது.

''ஜெயிப்போம்! டன்!'' என்றாள்!

21



''சொல்லுங்க சொல்லுங்க என்ன சொன்னார் அண்ணா?''

''அவரா, இதெல்லாம் தேவை இல்லாத வேலைன்னு அட்வைஸ் கொடுத்தார். வேறென்ன!''

''அண்ணா அப்படி எல்லாம் சொல்லி இருக்க மாட்டார் நீங்க கொடுத்த தண்டனையில டையர்ட் ஆகி ரெஸ்ட் எடுக்க நினைச்சிருப்பார்.''

''ஏன் சொல்ல மாட்ட நீ? நானே காலையிலேருந்து மூணு தடவை வாந்தி எடுத்து ஒரு மார்க்கமா இருக்கேன்.''

''மூணு தடவையா? அச்சச்சோ டாக்டர் மருந்து எதுவும் தரலையா? நான் உங்களுக்கு குடிக்க ஏதாவது போட்டுக் கொண்டு வரவா? நீங்க இப்படி டல்லா இருந்தா பாப்பா எப்படி லட்டு பாப்பா போல இருக்கும்?''

அருந்ததி கேள்வி மேல் கேள்வியாக அடுக்கிக் கொண்டு போக, ராதிகா அவளை அன்புடன் பார்த்தாள்.

''போதும் போதும் உன்னோட அன்பு மழை. மருந்து சாப்பிட்டாலும் இப்படி தான் இருக்குமாம். அம்மா இப்போ தான் அட்வைஸ் மழை பொழிஞ்சு முடிச்சிட்டு போனாங்க. இன்னும் இரண்டு மாசம் இப்படியே தான்.''

''குழந்தை என்பது எத்தனை பெரிய விஷயம்ல அண்ணி?''

தம்பி மனைவியின் கன்னத்தை சிறு குழந்தையை செல்லம் கொஞ்சுவது போல், இரு கைகளால் செல்லமாகக் கிள்ளிய ராதிகா,

''ஆமாம், ஆமாம் பெரிய விஷயம் தான். ஆனால் உன்னைப் போல எப்போதுமே சின்ன குழந்தையா இருக்குறவங்களை கவனிச்சுக்குறது அதை விட பெரிய விஷயம்.''

''போங்க அண்ணி, நான் ஒண்ணும் சின்னக் குழந்தை இல்லை.''

''சரிங்க பாட்டி.''

''தெரியுதுல, இனிமேல் நான் சொல்றதை கேட்டு ஒழுங்கு மரியாதையா நடக்கணும், புரியுதா?''

அருந்ததி மகேஸ்வரி பாணியில் பேச, ராதிகா மனம் விட்டுச் சிரித்தாள்.

''நீ கூட இருக்குறதால தான் ஓகே, இல்லை போர் அடிச்சு இல்லை அந்த இரண்டு அம்மாஸ் பேச்சை கேட்டு என் நாள் முழுக்க வேஸ்ட்டா போயிருக்கும்.''

''அதெப்படி போகும், நாம தான் உங்களை மாமியார் மெச்சும் மருமகளா காட்டும் முக்கியமான வேலை எடுத்து செஞ்சுட்டு இருக்கோமே.''

''கௌஷி எந்த க்ளூவும் கொடுக்கலையே க்யூட்டி, அப்புறம் என்ன செய்றது?''

''அவர் சொல்லாமல் போனால் என்ன, நாம ஒரு வழி கண்டுபிடிப்போம். எங்க சித்தி எப்போதும் சொல்வாங்க, சமையலைப் போல மனுஷங்களை மயக்கும் சக்தி எதுக்குமே இல்லையாம். பொண்ணுங்க சமையலை வச்சே வீட்டில சண்டை சச்சரவு இல்லாமல் பார்த்துக்கலாம்னு சொல்வாங்க. நாம பெரியம்மாக்கு பிடிச்ச மாதிரி சமைச்சு அவங்களை மயக்கிடுவோம்.''

''ஐடியா எல்லாம் கேட்க நல்லா தான் இருக்கு. ஆனால் எனக்கு சமைக்க வராதே மேடம்! நான் இனி மேல் சமைக்க கத்துக்கிட்டு, நல்லா சமைச்சு அத்தையை மயக்கும் போது நானே பாட்டி ஆகிடுவேன்.''

''அய்யோ அண்ணி, நான் எதுக்கு இருக்கேன்? உங்களுக்கு சமைக்கத் தெரிஞ்சாலும் இந்த நேரத்தில உங்களை கிச்சனுக்குள்ள விட்ருவேனா? நீங்க ரெஸ்ட் எடுங்க. நான் சமைக்கிறேன். பெரியம்மாக் கிட்ட நீங்க சமைச்சதுன்னு பொய் சொல்லுவோம்.''

''அவங்களும் வீட்டில தானே இருக்காங்க அருந்ததி. நீ சமைக்குறதை பார்க்க மாட்டாங்களா?''

''ஆமாம் அது ஒரு பிரச்சனை....'' என்றபடி யோசித்த அருந்ததி,

''அதுக்கு ஒரு ஐடியா இருக்கு அண்ணி....'' என்றாள்.

சமையலறையின் அருகே இருந்த உணவறை மேஜையின் மீது வைத்து லக்ஷ்மி வெங்காயம் நறுக்கி கொண்டிருக்க, மஹேஸ்வரி அவளுடன் மும்முரமாக பேசிக் கொண்டிருந்தாள்.

ராதிகாவும், அருந்ததியும் அங்கே வருவதை பார்த்த லக்ஷ்மியின் முகத்தில் கேள்வி தோன்றியது. கொஞ்சம் முன்பு தான் ராதிகாவை அவளுடைய அறையிலேயே இருந்து ஓய்வெடுக்கச் சொல்லி விட்டு வந்திருந்தாள்.

''அத்தை, இன்னைக்கு அண்ணி சமையல் செய்ய போறாங்களாம்.''

''என்ன?'' என்ற லக்ஷ்மியின் குரலில் அதிர்ச்சி இருந்தது.

ராதிகா அம்மாவை பார்த்து முறைக்க, அருந்ததி,

''என்ன அத்தை, பெரியம்மா வந்திருக்காங்க, அண்ணிக்கு அவங்களுக்கு ஆசையா சமைச்சு பரிமாற ஆசை இருக்காதா?'' என்றாள்.

லக்ஷ்மிக்கு அவர்கள் இருவரும் ஏதோ திட்டத்துடன் இருக்கிறார்கள் என்பது புரிந்தது.

''அதுக்கில்லை அருந்ததி, பாவம் வாந்தி எடுத்து டையர்டா இருந்தாளே....''

''இப்போ பரவாயில்லை அம்மா, நான் மேனேஜ் செய்துப்பேன்.''

''நான் கூட இருக்கேனே அத்தை, ஒத்தாசையா இருந்து பார்த்துக்கிறேன்.''

''சமைக்க கத்துக்கிட்டியா ராதிகா?''

மகேஸ்வரியின் கேள்வியில் ஆர்வம், கேலி இரண்டுமே இருந்தது.

''ஏதோ கொஞ்சம் தெரியும் அத்தை. இன்னைக்கு ஒரு நாளாவது என் சமையல் சாப்பிட்டுப் பாருங்களேன்.''

மஹேஸ்வரி, அதற்கு பதில் சொல்வதற்கு முன், நடுவில் புகுந்த அருந்ததி,

''அண்ணி சமையல் சூப்பரா இருக்கும் பெரியம்மா. நான் அவங்க கிட்ட தான் இப்போ சமையல் கத்துக்கிட்டு இருக்கேன்... நாங்க சீக்கிரமா சமையல் செய்றோம், நீங்க இரண்டு பேரும் கோவிலுக்குப் போயிட்டு வரீங்கன்னா போயிட்டு வாங்க. இன்னைக்கு அம்மனுக்கு ஏதோ விசேஷம்னு சொன்னாங்க....'' என்றாள்.

''பக்கத்து தெரு அம்மன் கோவில்ல தானே? காலையில இருந்து ஒரே சத்தமா இருந்தது. வாங்களேன் நாம போயிட்டு வருவோம்'' என்றாள் மஹேஸ்வரி.

''சரி போகலாம்..... பதினொன்றரை பன்னெண்டுக்கு கோவில் நடை சாத்திடுவாங்க, சீக்கிரம் கிளம்புவோம்.....''

லக்ஷ்மியும், மகேஸ்வரியும் அங்கிருந்து செல்ல, ராதிகாவும், அருந்ததியும் மகிழ்ச்சியுடன் கையைக் குலுக்கி கொண்டார்கள்.

''என்ன சமைக்கிறது? அவங்களுக்கு என்ன பிடிக்கும்னு தெரியுமா?''

''யாருக்கு தெரியும்? கௌஷி அத்தையோட வெண்டைக்காய் காரக்குழம்பு ரொம்ப நல்லா இருக்கும்னு நிறைய தடவை சொல்லி இருக்கார்.''

''அப்போ அதையே செய்திடுவோம். எங்க சித்தி சூப்பரா செய்வாங்க, அவங்க செய்றதை பார்த்திருக்கேன்.''

''பார்த்தே உனக்கு செய்யத் தெரிஞ்சிடுமா?''

''பின்னே இதுக்காக தனியா ஸ்கூலுக்கா போக முடியும்?''

''அதென்னவோ க்யூட்டி, எனக்கு சமையல் எப்போதும் புரியாத பாஷை.''

''அப்படி எல்லாம் இல்லை அண்ணி. ஆர்வத்தோட கத்துக்கிட்டா எதை வேணா கத்துக்கலாம். நீங்களே அண்ணாக்கு ஸ்பெஷலா சமையல் செய்து அசத்தினா எப்படி இருக்கும், யோசிச்சு பாருங்க.''

''கேவலமா இருக்கும்.''

''ச்சோ..... நல்ல வேளை வெண்டைக்காய் இருக்கு. கடைக்கு போய் வாங்கிட்டு வர லேட்டாகி இருக்கும்.....''

அப்போது வேக நடையுடன் அங்கே வந்த லக்ஷ்மி,

''வாலுங்களா, என்ன செய்றீங்க இரண்டு பேரும்?'' என்றாள்.

''சீக்ரட் மம்மி. உங்க கிட்ட சொல்ல முடியாது.''

''சீக்ரட்டோ பீக்ரட்டோ, நீ சமைக்குறேன்னு சொல்லி எனக்கு ஹார்ட் அட்டாக்கே கொடுத்துட்ட! என்ன பக்கத்துல ஹோட்டல்ல இருந்து வாங்கிட்டு வந்து கொடுக்குற ப்ளானா?''

''கிரேட் இன்சல்ட் அம்மா. இதுக்காகவே நான் சமையல் கத்துக்குறேன்.''

''இதையே தான் டென்த் ஸ்டாண்டர்ட் லீவ்ல இருந்து சொல்ற. கத்துக்குற வழியைத்தான் காணும். இரண்டு பேரும் ஏதோ கூட்டா களவாணித்தனம் செய்றீங்கன்னு தெரியுது, ஏதும் பிரச்சனை வராமல் பார்த்துக்கோங்க.''

''அதெல்லாம் எதுவும் வராது அத்தை.''

''ஆமாம் அம்மா, இன்னைக்கு அத்தை என்னைப் புகழ போறாங்க பாருங்க.''

''அது நடக்குதோ இல்லையோ, என்னை தனியா அவங்க கிட்ட மாட்டி விட்டுட்டீங்க! உங்க இரண்டு பேரையும் சாயந்திரம் கவனிச்சுக்கிறேன்.''

''போதும்மா ரொம்ப பந்தா செய்யாதீங்க. அவங்க யார் உங்க பேவரைட் மருமகனோட அம்மா, ஸோ அவங்களுக்கு கம்பெனி கொடுத்தா ஒண்ணும் குறைஞ்சு போக மாட்டீங்க.''

''எல்லாம் என் நேரம் ராது. ஏன் நீயும் கம்பெனி கொடுக்க வாயேன்.''

''அம்மா!''

''அலறாதே, போ போ.....''

மகேஸ்வரியும் கிளம்பித் தயாராகி வர, பெரிய வர்கள் இருவரும் கோவிலுக்கு கிளம்பினார்கள்.

அவர்கள் அந்தப் பக்கம் செல்லவும், பெண்கள் இரு வரும் மும்முரமாக தங்கள் வேலையில் ஈடுபட்டனர்.

அருந்ததி ராதிகாவை எதுவுமே செய்ய விடவில்லை. அவளை ஓய்வாக ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்க சொல்லிவிட்டு தானே எல்லா வேலையையும் எடுத்து செய்தாள்.

காரக்குழம்பு, பொரியல், அப்பளம், சாதம் என ஒவ்வொன்றாகத் தயாரித்து, அதை தயாரிக்கும் முறை பற்றியும் சொல்லியபடி வேலையைச் செய்தாள்.

ராதிகாவிற்கு அவள் சொன்ன சமையல் குறிப்பில் பாதி தான் கருத்தில் பதிந்தது ஆனால் அருந்ததியின் அன்பு அவளை வெகுவாக நெகிழ்த்தி இருந்தது.

தங்களுக்குள் இருக்கும் இந்த உறவும், நட்பும் கலவையான அன்பை பற்றிய சிந்தனையிலேயே இருந்தாள்.

கோவிலில் இருந்து வீடு திரும்பிய லக்ஷ்மி, மகேஸ்வரியை வீட்டில் சூழ்ந்து இருந்த கம கம நறுமணம் வரவேற்றது.

''நான் கூட சும்மா தான் சொல்றான்னு நினைச் சேன். நல்லா சமைக்கக் கத்துக்கிட்டா போலருக்கே! வாசனை ஆளைத் தூக்குது, குழம்பு நல்ல பக்கு வத்துல வந்திருக்கு போலருக்கே.''

மகேஸ்வரியின் வார்த்தைகளைக் கேட்ட லக்ஷ்மிக்கு அப்பாடியோ என்றிருந்தது. இரண்டு வாலுகளுமாக

(மகளும், மருமகளும் தான்!!!) புதிதாக எந்த குழப் பத்தையும் ஏற்படுத்தி விடக் கூடாதே என்ற கவலை அவருக்கு மனதினுள் இருந்து கொண்டே இருந்தது.

''சின்ன பசங்க சீக்கிரம் எல்லாத்தையும் கத்துப் பாங்க'' என்றபடி நேராக பார்த்த லக்ஷ்மிக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது.

ராதிகா சேலை கட்டி, முடியை தளரப் பின்னி நின்றிருந்தாள்.

''என்ன ராது?''

''கிச்சன்ல வேலை செய்து ரொம்ப கசகசன்னு இருந்துச்சும்மா, குளிச்சேன், சரி அத்தை சொன்ன மாதிரி சாரீ கட்டி பார்க்கலாம்னு நினைச்சேன்.''

''இப்போ தான் வீடே நிறைஞ்சு இருக்கு. தினமும் இப்படியே இரு!''

மகேஸ்வரி சொன்னதைக் கேட்டு சின்ன அதிர்ச்சியுடன் அருந்ததி பக்கம் பார்த்தாள் ராதிகா.

அமைதியாக இருங்கள் என கையால் சைகை செய்தாள் அருந்ததி.

பொறுமையை இழுத்து பிடித்துக் கொண்டு,

''வாங்க அத்தை, அம்மா, எல்லாம் சூடா இருக்கு. சாப்பிடுங்க..... வாங்க.''

ராதிகாவையே பரிமாற விட்டுவிட்டு ஒரு ஓரமாக நின்றிருந்தாள் அருந்ததி.

பெரியவர்கள் இருவருக்கும் சமையல் வெகுவாக பிடித்திருந்தது புரிந்தது. லக்ஷ்மி வாயாரப் புகழ,

மகேஸ்வரி ஆஹா ஓஹோவென்று சொல்லா விட்டாலும் குறை எதுவும் சொல்லாமல், நன்றாக இருப்பதாக சொல்லவும், ராதிகாவின் முகம் மலர்ந்தது.

சாப்பிட்டு முடித்து மஹேஸ்வரி தான் தங்கி இருந்த அறைக்கு சென்றுவிட,

"பிரேமா சொல்லிக் கொடுத்த காரக் குழம்பா அருந்ததி?" என மருமகளிடம் கேட்டாள் லக்ஷ்மி

"ஆமாம் அத்தை எப்படி கண்டுபிடிச்சீங்க?"

"உங்க சித்தி சின்ன வயசில இருந்தே இந்த குழம்பு ரொம்ப நல்லா செய்வா. எங்க எல்லோருக்காகவும் தனியா நிறைய எடுத்துட்டு வருவா... ஆமாம் அப்பளம் மட்டுமே போதுமே, எதுக்கு இந்த பொரியல் வேற செஞ்ச?"

"பொரியல் அண்ணிக்காக செய்தது அத்தை. அவங்களுக்கு அப்பளம் போல எண்ணெயில பொரிச்சது எல்லாம் சாப்பிடக் கூடாது."

"அட என் செல்லம், நீ தங்கம்டா!"

"அம்மா, மருமகளையே புகழ்ந்தா எப்படி, என்னையும் செல்லம் கொஞ்சுங்க."

ராதிகாவின் சிணுங்கலை ரசித்த லக்ஷ்மி,

"உனக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகுதுன்னு சொன்னால் நம்ப முடியுதா? செல்லம் கொஞ்சுறதை பாரு."

"ம்ம்ம்ம்...."

"சரி சரி கோபப் படாதே. நீயும் என் செல்லம், அருந்ததியும் என் செல்லம்."

"யாரு ரொம்ப செல்லம்?"

"இரண்டு பேருமே."

"முன்னாடி என்னையும் ஷிவாவையும் இப்படி சொல்வீங்க, இப்போ அவனை அம்போன்னு விட்டுட்டீங்க."

"அவனுக்கு பதில் தான் அருந்ததி இருக்காளே."

"அவன் வரட்டும் அவன் கிட்ட சொல்றேன்."

"சொல்லு அவன் என்ன உன்னை மாதிரி குழந்தையா? ஆனாலும் எப்படியோ உன் மாமியார் வாயில இருந்து ஒரு நல்ல வார்த்தை வாங்கிட்ட. அதிசயமோ அதிசயம்!!! உன்னை சாரீயில பார்த்து ஒரு நிமிஷம் அடையாளமே தெரியலை, யாருடா இந்த பொண்ணுன்னு நினைச்சேன்."

"பின்னே நான் உங்க பொண்ணாச்சே எப்படி பொண்ணு மாதிரி இருக்க முடியும்?"

"உதை வாங்குவ."

தங்களின் திட்டத்தின் முதல் அடியில் வெற்றி பெற்ற சந்தோஷத்தில் மூவரும் மகிழ்ச்சியுடன் சிரித்தனர்.

"தூங்குறீங்களா பெரியம்மா?"

"இல்லை இல்லை உள்ளே வா."

"நீங்க சுடு தண்ணி குடிப்பீங்கன்னு அண்ணா சொன்னாராம். அண்ணி கொடுக்க சொன்னாங்க."

சொன்னபடி கையில் இருந்த நீர் நிறைந்த பாத்திரத்தை மேஜை மீது வைத்தாள் அருந்ததி.

"ஏன் மஹாராணி எடுத்துட்டு வந்து தர மாட்டாங்களா?"

"அவங்க எடுத்துட்டு வந்தாங்க, பார்க்க ரொம்ப டையர்டா இருந்தாங்க அதனால நான் தரேன்னு எடுத்துட்டு வந்தேன்."

"ஓ."

"பாவம் மத்தியானம் சாப்பிட்டது எல்லாத்தையும் வாந்தி எடுத்துட்டாங்க. காலையிலேயும் வாந்தி, மதியமும் இப்படி. இதுல சமையல் வேலை வேற..... பாவம்."

மகேஸ்வரியின் முகத்தில் சிந்தனை கோடுகள் தோன்றின!

"அப்படி என்ன இந்த நேரத்துல பழக்கமில்லாத வேலை எல்லாம் இழுத்து போட்டு செய்ய வேண்டி இருக்கு?"

"அண்ணி எப்போதுமே அப்படி தான் பெரியம்மா. ஏதாவது செஞ்சுட்டே இருப்பாங்க."

"நீ அவளை குறைச்சா சொல்லுவ? நீ என்ன விபரம் புரியாதவளா இருக்க?"

"என்ன?"

"நீயும் ஷிவாவுமா, தனிக் குடித்தனம் போகாம, எதுக்கு இங்கே உட்கார்ந்து இவங்களுக்கு சாமரம் வீசிட்டு இருக்க? எப்படியும் சொத்து பத்தில்லாத பொண்ணைக் கல்யாணம் செய்து வச்சிருக்க மாட்டாங்க. உனக்கும் நகை, பணம், சொத்து எல்லாம் இருக்கணுமே."

அருந்ததி அமைதியாக நின்றிருந்தாள்.

"என்ன பார்க்குற? இப்போ எல்லாம் தனிக்குடித் தனம் போறது எல்லா வீட்டிலேயும் நடக்குதே."

"அது பத்தி எனக்குத் தெரியாது. என்னோட அம்மா அப்பா இறந்து ஏழு வருஷமாச்சு. ஏழு வருஷமா பாதி நாளை தனியா சுவரைப் பார்த்துக் கழிச்சிருக்கேன். இப்போ கொஞ்ச மாசமா அண்ணி, அத்தைன்னு இந்த குடும்பத்துல ரொம்ப சந்தோஷமா இருக்கேன்."

"அடடா! ஊர்ல தனியாவா இருந்த?"

"பக்கத்துல சித்தி சித்தப்பா இருந்தாங்க."

"சரி சரி... ஆமாம் உன் நகை எல்லாம் எங்கே இருக்கு?"

"ஏன் கேட்குறீங்க?"

"பத்திரமா பூட்டி வச்சுக்கோ! அன்பா இருக்காங்க, பாசமா இருக்காங்கன்னு தூக்கி கொடுத்திராத."

முதல் நாள் போலவே இப்போதும் விஷயம் புரியா விட்டாலும் இது ராதிகா சம்மந்தப் பட்ட விஷயம் என்று அருந்ததிக்கு புரிந்தது. அதனால் மேலே யோசிக்காமல்,

"அப்படி இல்லை பெரியம்மா. அத்தை எனக்குன்னு தனியா பீரோ கொடுத்து வைக்கச் சொல்லி இருக் காங்க. இரண்டு சாவியும் என் கிட்ட தான் இருக்கு" என்றாள்.

"அப்போ சரி."

ஷிவா மாலையில் வீடு திரும்பிய உடனேயே அவனிடம் தங்களின் அன்றைய திட்டம் வெற்றி

பெற்றதை சொல்லி விட வேண்டும் என்ற ஆவல் அருந்ததியினுள் அலையாக பொங்கிக் கொண் டிருந்தது.

ஆனால் ஷிவா வந்தது முதலே மொபைலில் பேசிய படி வேலையில் ஆழ்ந்து போனதால் அவளால் எதை யும் அவனிடம் பகிர்ந்து கொள்ள முடியவில்லை.

இரவு உணவிற்குப் பின் சமையலறையைச் சுத்தம் செய்வதில் லக்ஷ்மிக்கு உதவி விட்டு, ஆர்வத்துடன் அவள் அவர்களின் அறைக்குச் சென்ற போதும் அவன் லேப்டாப்பின் முன்பே அமர்ந்திருந்தான்.

சிறு ஏமாற்றத்துடன் சோபாவில் அமர்ந்தவள், சில நாட்களுக்கு முன் வரைந்த படங்களை ஆவலுடன் எடுத்துப் பார்த்தாள்.

ஒவ்வொரு பக்கமாக பொறுமையாக அவள் பார்த்து முடித்த போதும் ஷிவா வேலையிலேயே ஆழ்ந்திருந்தான். அத்துடன் பொறுமை இழந்தவ ளாக, எழுந்து கணவனின் அருகே சென்றவள்,

"உங்களுக்கே இது நல்லா இருக்கா?" என்றாள்.

திடீரென அருகே ஒலித்த அருந்ததியின் குரலில் திகைத்துப் பார்த்த ஷிவா, மனைவியைப் பார்த்து முகம் தானாக மலர,

"என்ன நல்லா இருக்கா?" என்றான்.

"சாயந்தரத்தில இருந்து உங்க கிட்ட பேசணும்னு பார்க்கிறேன், நீங்க பாட்டுக்கு இப்படி லேப்டாப்பும் கையுமா இருந்தா எப்படி?"

''சாரிம்மா..... சென்னை ஆபீஸ்க்கு நான் புது ஆள். ஒரு நல்ல பொசிஷன் ஓபனா இருக்கு. அது மட்டும் எனக்கு கிடைச்சா ரொம்ப நல்லா இருக்கும். ஏற்கனவே இருக்குறவங்களை தாண்டி எங்க பிரான்ச் ஜி.எம் என்னை ரெகமன்ட் செய்ய வைக்க அதிகமா வேலை செய்ய வேண்டி இருக்கு.''

''உங்க பெங்களூர் மேனேஜர் ஹெல்ப் செய்ய மாட்டாரா?''

''கேட்டால் என்னை பத்தி நல்லதா சொல்வார். ஆனால் இந்த ஜி.எம் கேட்கணுமே.''

''புரியுது..... சரி நீங்க வேலையை பாருங்க.''

''ஹேய் என்ன அதுக்குள்ளே டல்லாகுற? வா வா பேசலாம். உன்னோட கொஞ்ச நேரம் பேசுறதால எனக்கு ஒண்ணும் குறைஞ்சு போயிடாது.'' என்றபடி நாற்காலியில் இருந்து எழுந்தவன், சோபாவில் சென்று அமர்ந்து கொண்டு,

''காரக்குழம்பு சாப்பிட்டு அத்தை மயங்கிப் போயிட்டாங்களா?'' என்றான்.

சற்று இடைவெளி விட்டு அவனருகே அமர்ந்தவள்,

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றாள்.

''அம்மா உன் புகழ் பாடினதை கேட்டு கேட்டு எனக்கு காதுல இருந்து ரத்தமே வந்திருச்சு.''

''ஓஹோ அத்தை சொல்லிட்டங்களா?''

''பின்னே உன் பெருமையைப் பத்தி சொல்லாட்டா அவங்களுக்கு தலை வெடிச்சிடாது..... சரி, நீ சொல்லு எல்லாம் கிராண்ட் சக்சஸ் தானே?''

"ஆமாம்!"

"ராதுக்கு மாமியாரை மயக்குவது எப்படின்னு சொல்றது எலலாம் இருக்கட்டும், நீ முதல்ல ஹஸ் பண்டை கைக்குள்ள வச்சுக்குறது எப்படின்னு அவக் கிட்ட இல்லை அம்மா கிட்ட இருந்து கத்துக்கோ."

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்."

"ஏன்?"

"இப்போவே நீங்க என் கைக்குள்ள பத்திரமா தான் இருக்கீங்க."

சொன்னபடி தன் வலது உள்ளங்கையை அவன் பக்கம் நீட்டினாள் அருந்ததி. மோதிர விரலைக் கண் களால் காட்டி,

"பார்த்தீங்களா?" என்றாள்.

ஷிவா என்று பெயர் பொதிக்கப் பட்டிருந்த மோதிரத்தில் அவன் பெயர் தன் உள்ளங்கை பக்கம் இருக்குமாறு திருப்பி அணிந்திருந்தாள் அவள்.

விரல்களை மடித்தவள்,

"இப்போ உங்களை கைக்குள்ள வச்சு மூடியாச்சு, சரியா? எப்போவுமே இப்படி தான் என் கைக்குள் ளேயே இருக்கீங்க" என்றாள்.

ஷிவா நீட்டியிருந்த அவளின் கையையும், முகத் தையும் பார்ப்பதுமாக அமர்ந்திருந்தான். அவனின் மனதில் என்ன என்று சொல்ல முடியாத கிளர்ச்சி ஏற்பட்டிருந்தது.

மனைவியின் உரிமையான பேச்சும், மயக்கும் மொழியும் அவனின் சிந்தையை மயக்கின!

"என்ன ஒண்ணும் சொல்ல மாட்டேங்குறீங்க?"

"என்ன சொல்ல? எனக்கு எப்படி ரியாக்ட் செய்யன்னு புரியலை ரதி. அப்படியே கட்டி பிடிச்சு உம்மா கொடுக்கணும் போல இருக்கு. அது தான் முடியாதே. ஹூம்ம்ம்..... உனக்கு அம்மாவை, அக்காவை ரொம்ப பிடிக்கும்னு தெரியும், ஆனால் என்னை..."

அவனின் பதிலில் ஏற்பட்ட வெட்கத்தில் சிவந்த போதும், சமாளித்துக் கொண்டு,

"எனக்கு அவங்களை எல்லாம் பிடிக்கும் ஆனால் உங்களை மட்டும் தான் ரொம்பப் பிடிக்கும். ரொம்ப ரொம்பப் பிடிக்கும்" என்றாள்.

வெட்கத்தின் அடையாளமாக மெலியதாக சிவந்திருந்த அவளின் முகத்தை இமைக்காமல் பார்த்திருந்தான் ஷிவா. ஏற்கனவே மனதில் ஏற்பட்டிருந்த கிளர்ச்சி அவனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது.

மனதைக் கட்டுப்படுத்த முயன்றபடி, மனைவியை பார்த்திருந்தான்.

கணவனின் பார்வையால் தாக்கப்பட்டவளாக, கண்களை தாழ்த்திக் கொண்ட அருந்ததி,

"யோசிச்சுப் பார்த்தா ஆச்சர்யமா இருக்கு. சின்ன வயசில இருந்து தெரிஞ்ச சித்தி, சித்தப்பா, தங்கைங்க, யார் கூடவும் மனம் விட்டுப் பேசணும்னு எல்லாம் தோணியதே இல்லை.... உங்க கிட்ட மட்டும் தான்

எல்லாத்தையும் ஒப்பிக்கணும்னு தோணுது. சாயந் தரத்தில இருந்து உங்க கிட்ட பேசாமல், மனசில இருக் கிறதை சொல்லாமல் தலையே வெடிச்சிடும் போல இருந்தது.... என்னை இப்படி தலைகீழ மாத்திட்டீங்க நீங்க....''

கண்களில் காதல் மின்ன, முகம் சிவந்து பளபளக்க, அழகிய உதடுகளை அசைத்து அவள் பேசிக் கொண்டே செல்ல, ஷிவா மனதில் இருந்த கட்டுப் பாடுகள் உடைந்து வேகமாக அவளை இழுத்து இறுக அணைத்துக் கொண்டான்.

அவனின் உதடுகள் பொறுமை இல்லாமல் சூடாக அவளின் கழுத்தில் பதிந்தன.

அருந்ததிக்கு என்ன நடக்கிறது என்று புரியவே சில வினாடிகள் தேவைப் பட்டது.

புரிந்த உடனே அவளின் உடலின் மொழியும் மாறி போனது....

சற்று முன் காதலும் மயக்கமுமாக குழைந்து இருந்தவள், இப்போது விறைத்து போய் அவனின் அணைப்பில் இருந்தாள்.

அவளின் மாற்றத்தை கவனிக்காமல்,

''ரதி, என் ரதி....'' என்றபடி அவளை மேலும் வாகாக அணைத்தபடி, அவளின் முகத்தை நிமிர்த்தி, முத்த மிட குனிந்தவன், அவளின் கண்களைப் பார்த்தான்.

ஒரு வினாடிக்கும் குறைவான நேரம் தான் பார்த் தான்.....

ஆனாலும் அதில் இருந்த மாற்றம் அவனுக்கு உரைத்தது. மூளை விழித்துக் கொள்ள, தன் கையில் அகப்பட்டிருந்த மனைவியிடம் இருந்த மாற்றம் அவனுக்குப் புலப்பட்டது.

அவசரமாக அவளை விட்டு விலகி அமர்ந்தான்.

சற்று முன் இருந்த உணர்ச்சி வேகம் காணாமல் போய், குற்ற உணர்ச்சி தோன்றியது. அவளை நேராகப் பார்க்க முடியாமல்,

''சாரி ரதி... நான்.... ஐ ஆம் சாரி'' என்றான்

அருந்ததியிடம் இருந்து பதில் எதுவும் வரவில்லை.

''சாரி ரதி. நான்.....''

''என்னால புரிஞ்சுக்க முடியுது....''

அவளின் பதிலில் திகைத்து அவள் பக்கம் பார்த்தான்.

''நான் உங்களை தடுக்கவே இல்லையே.''

''ஆனால்.....''

''நான் பொறுத்து....''

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று புரிந்து கொண்டவனாக அவள் அருகே நகர்ந்து, வலது கரத்தால் அவளின் வாயை மூடினான்.

''பைத்தியம் மாதிரி பேசாதே. நான் தான் அறிவில் லாமல் முரட்டுத் தனமா நடந்துக்குறேனா, நீ வேற பைத்தியம் மாதிரி பேசாதே.''

''நீங்க சரியா தான் நடந்துக்குறீங்க, பேசுறீங்க.... நான் தான் சரி இல்லை.''

"இன்னொரு தடவை என் ரதியைப் பத்தி குறைச்சு சொன்ன அவ்வளவு தான்!"

அவன் சொன்னதைக் கேட்டு அவள் முகத்தில் மீண்டும் புன்னகை தோன்றியது.

"சில சமயம் என் மண்டையை எதாவது பாறாங் கல்லை போட்டு உடைச்சிடலாமான்னு கோபமா வருது. எனக்கு உங்களை தான் பிடிச்சிருக்கு. உங்களை மட்டும் தான் பிடிச்சிருக்கு ஆனாலும் உங்களை என் பக்கத்தில கூட வர விடாமல், என்ன இதுன்னு ஆத்திரமா வருது..."

அவளின் வலது கரத்தை எடுத்தவன்,

"நான் உன் கூடவே, உன் கிட்டேயே தானே இருக் கேன். இரண்டு பேரும் கொஞ்சம் பொறுமையை வளர்த்துப்போம். எல்லாம் சீக்கிரமே சரி ஆகிடும். நான் இனிமேல் அவசரப்பட மாட்டேன், நீ இப்படி எல் லாம் யோசிச்சு உன் கிட்டேயே கோபப்படக் கூடாது."

"ம்ம்ம்ம்..."

"நான் ப்ராமிஸா குட் பாயா இருப்பேன்."

அவள் புன்னகையோடு அவனைப் பார்த்தாள்.

"ஹே, இந்த நக்கல் பார்வை எல்லாம் வேண்டாம். பழைய ப்ராமிஸ் போல இல்லை, இந்த தடவை கட்டாயம் கோடு தாண்ட மாட்டேன்."

"க்கும்!"

அவள் உதட்டை சுழித்த விதத்தில் மயங்கிப் பார்த் திருந்தான்.

''நீங்களும் உங்க பிராமிஸும்!'' என்றாள் அவள் கேலியாக.

22



அவளையே பார்த்திருந்தவன்,

''நீ பெரிய ஆள்! பிள்ளையைக் கிள்ளி விடுறதையும் விட்டுட்டு, அப்புறம் அப்படி அப்பாவி மாதிரி பில்ட் அப் கொடு!''

''நான் என்ன செஞ்சேன் நான் எதுவுமே செய்யலை.''

விளையாட்டுத்தனம் காணாமல் போய் அவள் முகத்தில் கேள்வி தெரிந்தது.

''சரி செய்யலை'' என்றான் ஷிவா குழந்தையை ரசிக்கும் பாவனையுடன்.

அவள் பதில் சொல்லாமல் மும்முரமாக சேலையின் ஓரத்தில் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தாள்.

ஓசை எழுப்பாமல் மெல்ல நகர்ந்து அவளை உரசியபடி அமர்ந்தான் ஷிவா.

ஷிவா தன்னருகே நெருங்கி அமர்வது தெரிந்தும் தெரியாதது போல் தன் சேலை ஓர ஆராய்ச்சியை தொடர்ந்தாள் அவள்.

ஷிவாவிற்கு அவசரமாக முடிக்க நினைத்த வேலை எல்லாம் நினைவில் இருந்து மறைந்து காணாமல் போயிருந்தது.

இவளை பார்த்துக் கொண்டே, இப்படி உரசியபடி அமர்ந்து பேசிக் கொண்டே இருந்தால் போதுமென்று தோன்றியது! இந்த உணர்வுக்கு பெயரென்ன? காதலா? இல்லை மனைவியிடம் இயல்பாக ஏற்படும் பரிவா? அவனுக்குப் புரியவில்லை!

மேலும் சில வினாடிகள் அவளை பார்த்து ரசித்தவன்,

"ஏன் ரதி, ஆ வுன்னா என்னை பிடிக்கும்னு கதை சொல்றீயே, உனக்கு என்னை பத்தி என்ன தெரியும், சொல்லு பார்ப்போம்?"

"நிறைய எல்லாம் தெரியாது."

"இப்படி எல்லாம் சொல்லி எஸ்கேப் ஆக முடியா துங்க ரதி மேடம்."

"என்ன இப்படி ங்கன்னு எல்லாம் சொல்றீங்க?"

"இந்த செல்லம் கொஞ்சல்ஸ் எல்லாம் அப்புறம், முதல்ல என் கேள்விக்கு பதில் சொல்."

"நீங்க ரொம்ப நல்லவர்."

"அப்படியா? அப்புறம்?"

"அப்புறம் இன்னமும் ரொம்ப நல்லவர்."

"நீ ஸ்மார்ட்றா ரதி! சும்மாவா ராதுக்கு உன்னை அவ்வளவு பிடிக்குது!"

"அது வேற விஷயம், நிஜத்தில அவங்களுக்கு அண்ணாவை தவிர வேற யாருமே இந்த உலகத்தில வேண்டவே வேண்டாம். அவங்க இரண்டு பேர் மாதிரி ஒரு சூப்பர் ஜோடி நான் பார்த்ததே இல்லை."

"ம்ம்ம்ம்."

"சொன்னா நம்ப மாட்டீங்க அண்ணா உங்க அக்காக்கு தோப்புக்கரணம் எல்லாம் போடுறார்."

"க்கும் இது பெரிய பிபிசி நியூஸ். எங்க அப்பா பார்க்க எப்படி இருக்கார் ஆனால் அம்மாக்கு காலு பிடிச்சு விடுவார். இதெல்லாம் எங்க குடும்பத்து சொத்து."

"ம்ம்ம்! அப்படி எனக்கு ஒண்ணும் தெரியலையே!"

அவளின் கண்களில் மின்னிய குறும்பு புரிந் தாலும், புரியாதவனாக காட்டிக் கொண்டு,

"சும்மா சும்மா இப்படி நக்கலா எல்லாம் பார்க்காத. அப்புறம் என் ப்ராமிஸ் எல்லாம் காத்துல பறக்க விட்ருவேன்" என்றான்.

அருந்ததி கணவனை நிமிர்ந்து பார்த்தாள்.

பாவம் இவன்! வீட்டினரே சாமியார் என்று கேலி செய்யும் அளவிற்கு பெண்களிடம் இருந்து விலகி இருந்து தனக்கென வருபவளுக்காகக் காத்திருந்தவன்!

திருமணம் ஆன பின்பும் அவளுக்காக அலைபாயும் மனதை அடக்கிக் கொண்டு இருப்பவன்.

நிச்சயதார்த்தம், திருமண சடங்குகள் பின் வந்த இரவு என அனைத்தும் வேகமாக அவளின் மனதில் ஓடியது. எத்தனை எத்தனை சின்னச் சின்ன சீண்டல்கள்!!!

எத்தனை ஆவலுடன் திருமணம் செய்து கொண் டிருப்பான்!

அவளின் மனநிலை அவனுக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றமாக இருந்திருக்கும்!

உண்மையைச் சொல்லாமல் மறைத்து பல்லைக் கடித்துக் கொண்டிருந்திருக்க வேண்டுமோ?

''என்னாச்சு ரதி? என்ன அப்படி யோசிக்குற?''

''பாவம்ங்க நீங்க! உங்களை போல ஒரு நல்லவருக்கு இப்படி குறையோட நான் மனைவியா வந்திருக்க வேண்டாம். உங்களுக்கு ஏத்த மாதிரி.....''

அவள் பேசி முடிக்க காத்திருக்காமல்,

''வாயை மூடு!'' என்றான் அவன்.

அவள் பற்களால் கீழ் உதட்டை கடித்துக் கொண்டு அமைதியாக இருந்தாள்.

''குறையாம் குறை! என்ன பேசுற நீ? நீ நினைக்குற அளவுக்கு எல்லாம் நான் நல்லவன் இல்லை ரதி. என் கிட்ட bias இருக்கு prejudice இருக்கு, கோபம் வரும்...''

''ப்ச்... இதெல்லாம்.....''

''இரு இரு கொஞ்சம் பொறுமையா கேளு. உன் மேல அளவு கடந்த ஆசையோட தான் கல்யாணம் செய்துக்கிட்டேன். நீ நான் பக்கத்தில வந்தால் பிடிக் கலைன்னு சொன்னப்போ அதிர்ச்சியா இருந்தது...''

''அப்ப.....''

''இரு ரதி, நான் பேசி முடிச்சிடுறேன். ஏமாற்றமே இல்லைன்னு பொய் எல்லாம் சொல்ல மாட்டேன். கோபமா கூட இருந்தது... ஆனால் எனக்கு உன் மேல இருந்தது வெறும் உடல் ரீதியான அட்ராக்ஷன் மட்டு மில்லைடா... ஒரு பொண்ணை வெறும் சதையா பார்க்குற மாதிரி என்னோட அம்மா என்னை

வளர்க்கலை... எது நடந்தாலும் அது ஒரு காரணத் திற்காகன்னு நம்புறவன் நான். இந்த கல்யாணத் தினால எங்க அம்மா அப்பாக்கு அருமையான மருமகள் கிடைச்சிருக்கா, எங்க அக்காக்கு நல்ல பிரெண்ட் கிடைச்சிருக்கா, எனக்கு ஒரு நல்ல மனைவி மட்டுமில்லாமல் தோழியும் கிடைச்சிருக்கா! நம்ம கல்யாணம் நடக்காமல் நீ மட்டும் யோசிக்காமல் முரடனா இருக்குற வேற யார் கிட்டயாவது மாட்டி இருந்தால்...''

''என்ன இப்படி பேசுறீங்க?''

''சாரிடா ரதி! எனக்கும் பிடிக்கலை ஆனால் யோசிச்சு பாரு, கடவுள் உன் நல்ல மனசுக்கு உனக்கு ஏத்த மாதிரி நல்ல குடும்பத்தையும் கொடுத்திருக் கார். காதல் என்பது இயற்கையானது. அதை செயற் கையா உருவாக்க முடியாது. அதுக்காக தான் உனக் காக உனக்கு தோழியா, அம்மாவா, நண்பனா இருக்க எல்லோரையும் கொடுத்திருக்கார். சீக்கிரமே இயற் கையின் மாற்றம் உன்கிட்டேயும் வந்திரும். அதற்கு தோதான குடும்ப சூழ்நிலையை உனக்காக அமைச்சுக் கொடுத்திருக்கார். மத்தபடி அம்மாக்கு ஏன் திடீர்னு ஊருக்கு வந்த இடத்தில உன்னைப் பிடிக்கனும்? கல்யாணம் பேசணும்?''

அருந்ததி கண்களை இமைக்காமல் கணவனைப் பார்த்தபடி இருந்தாள்.

''உன்கிட்ட இருப்பது குறையே இல்லை. பெண்களிடம் இயற்கையாக இருக்கும் ஜாக்கிரதை

உணர்ச்சி கொஞ்சம் அதிகமா இருக்கு அவ்வளவு தானே? குறை இல்லாதவங்க யாருமே இல்லை. ராதுவை பாரு, அவ பயங்கர ஸ்மார்ட். ஆனால் அவளுக்கு அவளோட மாமியாருக்கு பிடிச்ச மாதிரி நடக்க தெரியலை. நீ பாரு வந்து ஒரு மாசத்தில வீட்டில எல்லோரையும் அன்பால எப்படி கட்டி போட்டு வச்சிருக்க. மத்தபடியும் உன்கிட்ட ஒரு குறை இருந்தா என்கிட்டே ஆயிரம் குறை இருக்கு. நானும் சராசரி மனுஷன் தான் ரதி. இன்னைக்கு சொன்ன வார்த்தையை மீறலையா? அன்னைக்கு தட்டை தூக்கி அடிக்கலையா? நீ மனைவியா வந்தது என் அதிர்ஷ்டம்.''

அருந்ததி பேச மறந்து விட்டவளை போல் அமைதியாக கணவனைப் பார்த்தபடி இருந்தாள்.

''இங்கே பாரு, இந்த மாதிரி சென்டிமென்டலா எல்லாம் யோசிக்காத. உன்னைப் பத்தி குறைச்சும் நினைக்காத. அக்காக்கு செய்யும் சோஷியல் சர்விஸ் போக கிடைக்குற நேரத்தில உனக்கு பிடிச்ச மாதிரி கிளாஸ் நடத்து, வேற ஏதாவது செய்யனும்னாலும் செய். உன் மனசு மாற நான் அப்பப்போ கொஞ்சம் கொஞ்சம் தடுமாறினாலும் காத்திருப்பேன்.''

அவன் புன்னகையுடன் சொன்னதைக் கேட்டு அவள் முகத்திலும் தானாக மெல்லிய புன்னகை தோன்றியது.

''ஒருவேளை என் மனசு மாறவே இல்லைனா?''

''அடுத்த ஜென்மத்தில ஈயா பேயா பறந்தாவது உன்னோட வந்து ஜாயின் செய்றேன்'' என்றான் ஷிவா கண்ணடித்து!

''க்கும்... பார்த்திபன் இப்படி தான் ஒரு படம் எடுத் தார், மனைவி அம்மாவா இருந்தாலே போதும்னு. படம் ஓடவே இல்லை!''

ஷிவாவின் முகத்தில் இருந்த சிரிப்பு பெரிதானது!

''நியாயமான வருத்தம் ரதி! நாம நம்ம காதல் காவியத்தை அப்படி ப்ளாப் ஆக விட கூடாது! நீ கவலைப்படாதே, இதை கோல்டன் ஜூபிலி ஹிட் டாக்க நான் வழி கண்டு பிடிக்குறேன்.''

''என்ன செய்வீங்க?'' என்றாள் அவள் ஆர்வத் துடன்.

''நீ அப்பப்போ இப்படி ஒரு மயக்கும் முட்டை கண்ணு லுக் கொடு, போதும்! ஐயாக்கு ஆட்டோ மேட்டிக்கா ஐடியா வரும்.''

''ஹ்ம்ம்.... என் கண்ணு தான் முட்டை மாதிரி இருக்கா? உங்க கண்ணு என்ன ரவுண்டாவா இருக்கு? சைன்ஸ்ல படிச்சதில்லை எல்லோர் கண்ணும் அதே ஷேப்பில தான் இருக்கும்.''

''வார்ரே வா! அப்படி போடு! ரதியா சும்மாவா! என் வாயாடி செல்லம்! உன் கிட்ட பேசிட்டு இருந்தாலே போதும் வேற ஏதுவுமே எனக்கு வேண்டாம்.''

''அடடா! நான் மறந்தே போயிட்டேன், ஏதோ முக்கியமான வேலை இருக்குன்னு சொன்னீங்களே, நீங்க செய்ங்க. ரொம்ப டைம் ஆகிடுச்சே!''

''நீ என்ன செய்ய போற?''

''வேற என்ன செய்ய தூங்கப் போறேன்!''

''எனக்கு வேலை செய்ய மூட் இல்லை.''

''இப்படி சொன்னா, எப்படி உங்க ஜி.எம் கிட்ட நல்ல பேர் வாங்குறது? எழுந்திருங்க..'' சோபாவில் இருந்து எழுந்து கணவனுக்காக கையை நீட்டினாள் அருந்ததி.

ஆவலுடன் அவளின் கையைப் பற்றியபடி எழுந்தவன்,

''எனக்கு சின்ன டானிக் தரீயா ரதி?'' என்றான்.

அவனின் குரலில் இருந்த மாற்றமும், கண்களும் சொன்ன செய்தியும் எதையோ உணர்த்த,

''என்ன டானிக்?'' என்றாள் அவள் மெல்லிய குரலில்.

மெல்ல குனிந்து அவளின் வலது கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டவன்,

''இது தான்!'' என்றான் சின்னப் புன்னகையுடன்.

மெலியதாக சிவந்த முகத்துடன் அவள் நிற்கவும்,

''இதெல்லாம் என் சத்தியத்துக்கு உள்ள இருக்க விஷயம் இல்லை, அதுக்கு வெளியில இருக்க விஷயம்!''

''ஹ்ம்ம்!!!''

''எல்லாம் உனக்காக தான்!''

''எனக்காகவா?''

''நீ தானே நம்ம லவ் ஸ்டோரியை சூப்பர் ஹிட் டாக்கணும்னு ஆசைப்பட்ட?''

''ம்ம்ம்.....'' என்றவள் அவளின் இடது கன்னத்தை அவன் பக்கம் மெல்லத் திருப்பிக் காட்டினாள்.

ஒரு வினாடி திகைத்த போதும் தாமதிக்காமல் (!!!!) அவளின் இடது கன்னத்திலும் மென்மையாக ஆனால் அழுத்தமாக முத்தமிட்டான் அவன்.

முகம் முழுவதும் சிவந்து விட, மெல்லிய குரலில், ''குட் நைட்!'' என்று முணுமுணுத்து விட்டுச் சென்றாள் அவள்.

மறுநாள் காலையில் ஷிவா ஆபீஸ் கிளம்பும் வரை அவன் பின்னே சுற்றி அவனுக்கு வேண்டியதை அதிக அக்கறையுடன் செய்தாள் அருந்ததி.

ஷிவாவிற்கும் மனைவியின் இந்த 'கூடுதல்' கவனிப்பு மிகவும் பிடித்திருந்தது. ஆபீஸ் கிளம்பவே அவனுக்கு மனம் வரவில்லை..... ஏதேதோ சொல்லி நேரத்தைக் கடத்தியவன் இறுதியில் வேறு வழி இல்லாமல் அரை மனதாகக் கிளம்பினான்.....

மற்றவர்களிடம் அவன் சொல்லி விட்டுக் கிளம்ப, அருந்ததி மட்டும் அவனுடன் சென்றாள்.

''ரதி, நாம இரண்டு பேருமா எங்கேயாவது சின்ன டூர் போயிட்டு வருவோமா?''

''ஹ்ம்ம்.... போகலாம்.... ஆனால்....''

''ஹேய் என்ன இவ்வளவு தயக்கம் இன்னுமா என் மேல உனக்கு நம்பிக்கை இல்லை?''

''அப்படி இல்லைங்க, அண்ணிக்கு குழந்தை பிறக்கட்டும் அப்புறம் போவோமே, இப்போ அத்தை மட்டும் பாவம் தனியா என்ன எல்லாம் செய்வாங்க?''

''அம்மாடியோ! என் ரதி என்ன பிரிலியன்ட்! என்னமா யோசிக்குறா?'' பேசியபடி பைக் அருகே சென்றவன்,

''சரி கிளம்பட்டுமா?'' என்றான்.

''ம்ம்ம்ம்... மெதுவா ஒட்டிட்டு போங்க....''

''சரிடா.''

''போயிட்டு முடிஞ்சா போன் செய்ங்க..... இல்லை டைம் கிடைக்கும் போது பேசுங்க.''

''சரிடா, கிளம்பட்டுமா?''

''ம்ம்ம்ம்....''

''அவ்வளவு தானா?''

''என்ன?''

''மனசுக்குப் புத்துணர்ச்சி கொடுக்குற டானிக் நைட் மட்டுமில்லை காலையில கூட எடுத்துக்கலாம்!''

அருந்ததிக்கு எங்கிருந்தோ வெட்கம் பொங்கியது! முகம் சட்டென நிறம் மாறிப் போனது!

கணவனின் பேச்சும், அவனின் கண்களில் மின்னிய காதலும் அவளை மயக்கியது.

மெல்ல அவனருகில் நெருங்கி கன்னத்தைக் காட்டினாள்.

''தேங்க்ஸ்டா'' என்றபடி முத்தமிட்டவன், இன்னமும் அவளை குறுகுறுவெனப் பார்த்தான்.

அவனின் பார்வைக்கு அர்த்தம் புரியாமல் அவள் விழிக்க,

''நேத்து மட்டும் தான் ஒன் ஃபார் ஒன் ப்ரீயா? இன்னைக்கு இல்லையா?'' என்றான்.

''ம்ம்ம்... நீங்க தானே எதுவா இருந்தாலும் ஆன் டிமான்ட்ன்னு சொல்லிக் கொடுத்தவர், அப்புறம் இப்போ என்ன கேள்வி?'' என்றாள் அவள்.

''வாயாடி! அதான் இப்போ டிமான்ட் செய் தாச்சே???? ப்ளீஸ் ரதி.''

''என்ன நீங்க? கிளம்புங்க....''

''பாரு கிளம்பும் போது என் மனசை வருத்தப் பட வச்சுட்ட! நான் இப்படியே....''

அவன் பேசி முடிக்கும் முன், மறு கன்னத்தை அவன் பக்கம் திருப்பிக் காட்டினாள்!

சந்தோஷம் பொங்க முத்தமிட்டவன்,

''தேங்க் யூ ஸோ மச் ரதி!!! மனசெல்லாம் ரெக்கை கட்டி பறக்குற மாதிரி இருக்கு! ஐ லவ் யூ...'' என்றபடி ஹெல்மட் அணிந்து கொண்டு,

''பை....'' என்று கை அசைத்தபடி கிளம்பினான்.

பதிலுக்கு கை அசைத்தவள், அவன் கண் பார்வை யில் இருந்து மறைந்த பின்பும் அதே திசையை பார்த்தபடி நின்றிருந்தாள்.

முன் தின இரவில் ஷிவா பேசிய வார்த்தைகள் அவளுக்கே புரியாத வகையில் அவளுள் ஒருவித மான மாற்றத்தை ஏற்படுத்தி இருந்தது.

அவன் நல்லவன் என்பது மட்டுமில்லாமல் அவள் மீது அளவு கடந்த அன்பும் நேசமும் வைத்திருப்பவன் என்பது தெளிவாகப் புரிந்தது...

அவனே சொன்னது போல் இறைவன் அவளுக்காக பிரத்தியேகமாக அமைத்துக் கொடுத்த வாழ்க்கை இது! அவள் இழந்து போன எல்லாவற்றுக்கும் வட்டியும் முதலுமாக சேர்த்துக் கொடுத்திருக்கும் அழகிய குடும்பம் இது!

மனதில் சிறு மயக்கத்துடனே உள்ளே சென்றவள், லக்ஷ்மியும், மகேஸ்வரியும் சமையலறைப் பக்கம் இருப்பதைப் பார்த்தாள்.

"அருந்ததி, ராதிகாக்கு இந்த ஹார்லிக்ஸ் கொடுக்குறீயா? வாந்தி எடுத்துட்டு ஒரே புலம்பல். கொஞ்சம் முன்ன தான் அதட்டிட்டு வந்தேன்."

காலையில் இருந்து ராதிகாவை பார்க்கவில்லை என்பது நினைவு வரவும், லக்ஷ்மியிடம் இருந்து ஹார்லிக்ஸ் வாங்கிக் கொண்டு அவசரமாக ராதிகாவின் அறை நோக்கி நடந்தாள் அருந்ததி.

"என்னங்க நீங்க, சின்ன பொண்ணு, முதல் குழந்தை வேற, பொறுமையா எடுத்துச் சொல்ல வேண்டியது தானே? நான் தான் கொஞ்சம் கோபமா அவக்கிட்ட பேசுறேன், நீங்களாவது பொறுமையா பேசுங்க..."

மகேஸ்வரி லக்ஷ்மியிடம் சொன்னது காதில் விழுந்தது!

பரவாயில்லையே நல்ல மாற்றம் தான் என்று நினைத்தபடி ராதிகாவின் அறையை அடைந்தவள்,

"குட் மார்னிங் அண்ணி! இந்தாங்க என் செல்ல லட்டு பாப்பாக்கு ஸ்பெஷல் ஹார்லிக்ஸ்" என்றபடி கோப்பையை ராதிகாவிடம் நீட்டினாள்.

"குட் மார்னிங் க்யூட்டி!" என்றபடி அருந்ததியை ஒரு பார்வை பார்த்த ராதிகா, அவளிடம் இருந்து ஹார்லிக்ஸை வாங்கிக் கொண்டாள்.

ராதிகாவின் அந்த புதிய பார்வைக்கான பொருள் புரியாமல் விழித்த போதும், அதை விட்டு விட்டு,

"மொபைல்ல என்ன பார்த்துட்டு இருந்தீங்க?" என்றாள் அருந்ததி.

ராதிகாவின் முகத்தில் சட்டென்று ஒளி பரவியது!

"இங்கே பாரேன், எட்டு வாரத்தில குட்டி பாப்பா எப்படி இருக்கும்னு போட்டு இருக்காங்க."

ராதிகா சற்று தள்ளி அமர்ந்து அருந்ததிக்கு இடம் கொடுக்க, அங்கே அமர்ந்து ராதிகாவின் போனை வாங்கி பார்த்த அருந்ததி 'ஆ' என வாயை பிளந்தாள்!

"பார்த்தீயா பாப்பா சின்ன பீன்ஸ் சைஸ்ல தான் இருக்குமாம் ஆனாலும் பாரேன் கண் இமை, கை, கால் முட்டி எல்லாம் வந்திருமாம்... என்ன ஒரு அதிசயம் இல்லை? கடவுள் இஸ் ஸோ கிரியேட் டிவ்!"

அருந்ததிக்கு ஷிவாவின் பேச்சு நினைவில் வந்தது. அவர்கள் உறவும் கூட இப்படி வளரும் நிலையில் தான் இருக்கிறதோ?

கடவுள் அமைத்து வைத்த மேடை இணைக்கும் கல்யாண மாலை!

எவ்வளவு உண்மை!!!!!

''ஹே க்யூட்டி!!!! எந்த ட்ரீம்லேண்ட்க்கு போயிட்ட? இன்னும் பைக் சைட் ரொமான்ஸ்ல இருந்து வெளியே வரலையா?''

முதல் கேள்விக்கு என்ன சொல்லி சமாளிப்பது என்று யோசிக்க தொடங்கியவளை, ராதிகாவின் இரண்டாவது கேள்வி திக்குமுக்காட வைத்தது!

''என்ன ஹீரோயின், திரும்ப எக் ஐ லுக்???? இவ்வளவு பெரிய வீட்டில உங்க இரண்டு பேருக்கும் ரொமான்ஸ் செய்ய வேற இடமே கிடைக்கலையா? பைக் ஸ்டாண்ட் தான் கிடைச்சுதா?''

''அப்படி எல்லாம் இல்லை அண்ணி....''

முகம் சிவக்க சொன்னவளைப் பார்த்து கேலியாக சிரித்த ராதிகா,

''அதான் உன் முகத்தைப் பார்த்தாலே, அப்படி இல்லைன்னு தெரியுதே! அவன் தான் பித்து பிடிச்சு சுத்திட்டு இருந்தான், இப்போ நீயும் அவன் ரேஞ் சுக்கு வந்தாச்சுன்னு சொல்லு! நடத்துங்க இரண்டு பேரும்.''

''சும்மா இருங்க அண்ணி! அதெல்லாம் ஒண்ணு மில்லை.''

''ஒண்ணுமில்லையா? வீட்டுக்குள்ளேயே இருந்து போர் அடிக்குது கொஞ்சம் வெளி காத்துல நடப் போம்ன்னு வெளியே வந்தா, சாருக்கு டானிக் வேணுமாமே.... அது சரி!''

''ஹி ஹி.. அது அது.....''

''சரி சரி விடு.... உன்னோட லட்டு பாப்பாக்கு போட்டியா சீக்கிரமே எனக்கு பிடிச்ச பட்டு பாப்பா வர போகுதுன்னு சொல்லு!''

23



அருந்ததி பதில் சொல்லாமல் கட்டியிருந்த சேலையின் ஓரத்தைத் திருகியபடி இருந்தாள்.

''நீங்க இரண்டு பேர் ஹனிமூன் போகலையா?''

ராதிகாவை நிமிர்ந்து பார்த்தவள்,

''இல்லை, இப்போ போகலை. அவர் கூட கேட்டார். உங்களுக்கு குழந்தை பிறந்தப்புறம் போகலாம்னு சொன்னேன்.''

''நீ என்ன லூஸா? அதுக்குள்ளே உங்களுக்கே குழந்தை வந்திரும். இதெல்லாம் இந்த டைம்ல தான் என்ஜாய் செய்ய முடியும் க்யூட்டி. எதை எல்லாம் தள்ளிப் போடுறதுன்னு உங்க இரண்டு பேருக்கும் கொஞ்சம் கூட விவஸ்தை இல்லையா?''

''அத்தை தலை மேல எல்லா வேலையும் போட்டுட்டுப் போக மனசு வர மாட்டேங்குது!''

''உனக்கே இது ரொம்ப ஓவராத் தெரியலை? இப்போ புதுசா அம்மாக்கு அப்படி என்ன வேலை வந்திருச்சு? எப்போதும் அவங்க செய்றது தான்

செய்றாங்க. ஏதோ குழந்தை பிறந்த அப்புறம்னு சொன்னால் கூட கொஞ்சம் வேலை அதிகம்னு சொல்லலாம்.''

தயக்கத்துடன் சேலை ஆராய்ச்சியை தொடர்ந்த அருந்ததி, ராதிகாவிடம் என்ன சொல்வது என்ற யோசனையுடனே,

''இல்லை..... நான்.....'' என்று இழுத்தாள்.

''இங்கே பார் க்யூட்டி, என்னோட சொந்த அனுபவத்தில இருந்து சொல்றேன். கல்யாணம் ஆன உடனே இப்படி கொஞ்சம் நாள் ப்ரீயா போயிட்டு வரது நல்லது. இங்கே இருந்தா அவன் வேலை வேலைன்னு சுத்திட்டு இருப்பான். நீ அம்மாக்கு ஹெல்ப் செய்றேன்னு பிலிம் காட்டிட்டு இருப்ப...''

ராதிகாவின் பேச்சின் நடுவே புகுந்த அருந்ததி,

''நீங்க ரொம்ப மோசம்....'' என்றாள்.

''இருந்துட்டு போறேன்! நான் சொல்றதை கேள்! ஒரு வீடு கட்டும் போது பவுன்டேஷன் எவ்வளவு முக்கியமோ அதே போல தான் கல்யாணம் ஆன புது சுல கணவன் மனைவிக்குள்ள வர அன்டர்ஸ்டாண்டிங். ஹனிமூன் பத்தின பொதுவான அபிப்ராயத்தை விட, அது புதுசா கல்யாணம் ஆன இரண்டு பேர் மனசு விட்டு பேச, வேலை, மத்தவங்கன்னு எந்தத் தொல்லையும் இல்லாமல் ப்ரீயா நேரம் ஸ்பெண்ட் செய்ய கிடைக்குற ஒரு கோல்டன் ஆப்பர்ச்சூனிட்டி.... இந்த காலத்தில கல்யாணம் பிக்ஸ் ஆனப்புறம் போன்ல பேசுறாங்க, நேரா மீட் செய்றாங்க. நீங்க

இரண்டு பேரும் அப்படி பேசினது போலவும் இல்லை. கல்யாணம் ஆகி ஒன்றரை மாசம் ஆச்சு. ஆனால் அவன் என்னடான்னா வேலை வேலைன்னு இருக்கான். நீயும் வீட்டு வேலை அது இதுன்னு இழுத்து போட்டுட்டு இருக்க? நாளைக்கே குழந்தைன்னு வந்துட்டா அப்புறம் எப்போ உட்கார்ந்து இரண்டு பேரும் மனசு விட்டு பேசுவீங்க? கௌஷிக்குக்கும் எனக்கும் கூட கல்யாணம் ஆன புதுசுல சண்டை இருந்தது... எங்க ஹனிமூன் எங்களுக்கு ரொம்ப உதவியா இருந்தது!''

''சண்டையா? உங்களுக்கும் அண்ணாக்குமா? ஏன் அண்ணா கிட்ட சண்டை போட்டீங்க?''

''ஹலோ! சண்டைன்னா நான் தான் போடணுமா?அவர் போட கூடாதா?''

''அண்ணாவாவது உங்க கூட சண்டை போடுறதாவது! இதெல்லாம் நடக்குற விஷயமா? ஆனால் அண்ணி நாங்க தான் போன்ல பேசலை அண்டர் ஸ்டாண்டிங் வரலை, உங்க இரண்டு பேருக்கும் என்ன? பெரியம்மா பேச்ச வச்சு பார்த்தால் அண்ணா விருப்பபடி தான் கல்யாணம் நடந்திருக்கு. அப்புறம் என்ன?''

''அதெல்லாம் அப்படி தான்.''

''சொல்லுங்க அண்ணி!''

''இன்ரஸ்டிங்கா சொல்ல எதுவும் இல்லை க்யூட்டி மேடம்.''

''பரவாயில்லை சொல்லுங்க.''

பழைய நட்களை அசை போடுவது போல் ராதிகா யோசனையுடன் அமைதியாக இருந்தாள். பின்,

''அவரும் நானும் முதல்ல மீட் செய்தது என் ஆபீஸ்ல.''

''என்னது ஆபீஸ்லயா? அப்போ உங்களுடையது லவ் மேரேஜா? யாருமே சொல்லவே இல்லையே.''

''அம்மா தாயே! உன் கற்பனை குதிரையை கொஞ்சம் நேரம் கட்டி வைக்குறீயா? நடுவுல நடுவுல கேள்வி கேட்காதே!''

''சாரி சாரி சொல்லுங்க.''

''ஒரு ஆறரை, ஏழு வருஷம் இருக்கும்.....''

''அப்போ சந்திச்சு ஆறு மாசத்திலேயே கல்யாணம் செய்துக்கிட்டீங்களா???''

ஆர்வம் பொங்க கேட்டவளை பார்த்த ராதிகா,

''ஹூஹூம்ம்ம் நீ சரி பட மாட்ட போ... உனக் கிட்ட இதை எல்லாம் சொல்ல முடியாது.''

''இனிமேல் நடுவுல பேசலை சாரி சாரி சொல்லுங்க.''

''உங்களை மாதிரி பார்த்து ஒரு நாள்லேயே எங்க கல்யாணம் நிச்சயம் ஆகலை...''

''அண்ணி...!''

''உன்னை மட்டும் நான் எதுவும் சொல்ல கூடாதா?''

''பேச்சை மாத்தாமல் ஏழு வருஷம் முன் ஆபீஸ்ல என்ன நடந்துச்சுன்னு சொல்லுங்க.''

"எல்லாம் என் டைம்!"

"சொல்லுங்க!"

"சரி சரி..... வா ப்ளேஷ்பேக் போவோம்..... நான் அப்போ ஸாப்ட்வேர் என்ஜினீயரா இருந்தேன்...."

"ஆ....?"

"அதாவது இப்போ மாதிரி லீட் இல்லை..... சின்ன பொசிஷன்....."

"ஓஹோ!"

"எங்க கம்பெனில நிறைய ஸாப்ட்வேர் ப்ரா டக்ட்ஸ் செய்வாங்க. அதை வேற கம்பெனிங்களுக்கு விப்பாங்க. அவங்களுக்கு தேவைக்கு ஏத்த மாதிரி சின்ன சேஞ்சஸும் செஞ்சு தருவாங்க. நான் சொல்ற இந்த டைம்ல கொஞ்சம் ப்ராஜக்ட்ஸ் குறைவா இருந்தது. கம்பெனி ஒரு மாதிரி டல்லா போயிட்டு இருந்தது. நான் இருந்த ப்ராஜக்ட் முடிஞ்சு ப்ராஜக்ட் இல்லாமல் இருந்தேன். கம்பெனி சரியா போகலை ஆளுங்களை வேலையை விட்டு எடுத்தா கூட எடுப்பாங்கன்னு எல்லாம் சொல்லிட்டு இருந்தாங்க. அப்போ ஒரு சின்ன ப்ராஜக்ட் ஆறு மாசம் இல்லை அதை விட குறைவா தான் வரும், ஒரு ஷிப்பிங் கம்பெனிக்கு வித்த எங்க சாப்ட்வேரை அவங்களுக் காக கொஞ்சம் மாத்தித் தரணும்னு கேட்டிருந்தாங்க. ஷார்ட் டைம் ப்ராஜக்ட், எனக்கு அவ்வளவா பிடிக் கலை இருந்தாலும் ஏதாவது ப்ராஜக்ட் கிடைச்சா போதும்னு நானும் என் பிரெண்ட் ஜோதியும் அந்த ப்ராஜக்ட்டில் ஜாயின் செய்தோம். அந்த ஷிப்பிங்

கம்பெனியில இருந்து ஒருத்தர் வருவார்ன்னு சொல்லி இருந்தாங்க....."

"அண்ணா தானே அது?"

"நடுல பேசாதே, அதான் என்னாச்சுன்னு சொல்லிட்டு இருக்கேனே!"

"ஹி ஹி! சொல்லுங்க!"

"அன்னைக்கு கேன்டீன் போகலாம்னு நானும் ஜோதியும் லிப்ட்ல....."

"உங்க ஆபீஸ் எந்த மாடியில இருந்தது?"

"தர்ட் ப்ளோர்! ஏன் கேட்குற?"

"சும்மா தான், சொல்லுங்க."

"லிப்ட் க்ரவுண்ட் ப்ளோர் வந்து கதவு திறந்த உடனே இறங்க ட்ரை செய்தால் திடீர்னு.... ஒரு..... ஒரு..... எருமை மாடு மாதிரி ஒருத்தர்..... ஒருத்தன் மேலே வந்து மோதிட்டு லிப்ட் உள்ளே வந்தான்."

"எருமை மாடா????"

"பின்னே வேற என்ன சொல்ல? அமைதியா கேளு! அந்த காம்ப்ளக்சில பெரிய ஆபீசுங்க மட்டுமே இருந்தது. இந்த மாதிரி எல்லாம் யாரும் பீகேவ் செய்ய மாட்டாங்க. ரொம்ப அவசர வேலைன்னு வச்சுக் கிட்டா கூட, மேலே வந்து இடிச்சதுக்கு, ஒரு சாரி சொல்லணும்ல? ஐயா என்னடான்னா ஆன்னு ஒரு பார்வை பார்த்துட்டு அமைதியா நிக்குறார்."

"அப்புறம்?"

"எனக்கு கோபமா வந்தது.... கன்னாபின்னான்னு திட்டினேன். அவர் பாட்டுக்கு லிப்ட் பட்டன் பிரஸ் செய்துட்டு நிற்கிறார்....."

"ஒண்ணுமே சொல்லலையா?"

"ஹூஹூம்! ஒரு விதமா முழிச்சிட்டு நின்னார். ஒருவேளை காது கேட்காதோ, இல்லை பேச முடியாதோன்னு எனக்கே சின்ன சந்தேகம் வந்திருச்சு. ஆனாலும் நான் நல்ல டோஸ் விட்டேன். தர்ட் ப்ளோர் வந்து லிப்ட் நின்னு கதவு திறந்திருச்சு."

"தர்ட் ப்ளோரா? அப்போ அண்ணாவே தானா?"

"ஏன் வேற யாரும் தர்ட் ப்ளோர் போக கூடாதா?"

"ஆனால் மத்தவங்களுக்காக எல்லாம் எருமை மாடை அவர் இவர்ன்னு மரியாதையா சொல்ல மாட்டீங்களே!"

"பரவாயில்லையே! புத்திசாலி தான் நீ! கதவு திறந்த அப்புறமும் நான் பாட்டுக்கு டென்ஷன் ஆகி கத்திட்டே இருக்கேன். அவர்,

'எக்ஸ்க்யூஸ் மீ, நான் இந்த ப்ளோர்ல இறங்கணும்'னு சொல்லிட்டு போயிட்டார்."

"முதல் சந்திப்பே சூப்பர்! ஆனாலும் அண்ணாவா அப்படி!"

"அதைச் சொல்லு! எனக்கு அப்படி ஒரு கோபம். கேன்டீன் போயிட்டு திரும்ப வந்தா, இவர் தான் க்ளையன்ட் காண்டாக்ட்ன்னு சொல்லிட்டு என் லீட் பக்கத்தில உட்கார்ந்திருக்கார். அவங்க இன்ட்ரோ

செய்து வச்சா அதே போல ஒரு முழி வேற! நங்குன்னு ஒரு கொட்டு வைக்கணும்னு கோபமா வந்தது.''

''ஹா ஹா! செய்ய வேண்டியது தானே?''

''என்ன செய்றது, எல்லாம் என் நேரம்! எங்க டீம் அவரோட தான் வேலை செய்ய வேண்டி இருந்தது. ஒவ்வொரு வாரமும் இரண்டு மூணு நாள் எங்க ஆபீஸ் வருவார்.''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன, அவர் ப்ராஜக்ட் விஷயமா என்னை பார்க்கும் போதெல்லாம் தோளைத் தடவிட்டு ஒரு லுக் விடுவார்.''

வாலி பட பாணியில் காட்சியை கற்பனை செய்து கொண்டிருந்த அருந்ததிக்கு சிரிப்புப் பொங்கியது.

''சிரிக்குறீயா நீ, எனக்கு கடுப்பா வரும். இதை விட நாங்க கேன்டீன் போறப்போ எல்லாம் கரக்ட்டா லிப்ட்ல வேற ஆஜர் ஆகிடுவார்.''

''அண்ணா இப்படி காதல் லீலை எல்லாம் செஞ்சாரா?''

''இதுக்கு பேரு காதலாக்கும். அவர் செய்த அட்ட காசத்தில ஜோதி அவருக்கு ஜே.எஸ்.ன்னு பேரு வேற வச்சா.''

''ஜே.எஸா???''

''ஜொள்ஸ்!''

''ஹா ஹா ஹா! ஆனால் உங்களுக்கு கோபம் வந்திருக்கணுமே.''

"எனக்கு ஏன் கோபம் வருது?"

"அண்ணா பார்த்தது, வழிஞ்சது எல்லாம் உங்க கிட்ட மட்டுமா தான் இருக்கணும். அப்போ அவங்க அவருக்கு அப்படி பேரு வச்சப்போ உங்களுக்கு கோபம் வந்திருக்கணுமே???"

அருந்ததியின் சரியான யூகத்தை கேட்டு ராதிகா வின் இதழ்களில் புன்சிரிப்பு தோன்றியது. ஆனால் அவள் சொன்னதற்கு சரியென்றோ இல்லையென்றோ சொல்லாமல்,

"எப்படியோ நாலு மாசம் ஓடிப் போச்சு! அவங்க கம்பெனிக்கு செய்ற வேலையும் முடிஞ்சது."

"என்னது நாலு மாசத்திலேயே முடிச்சிட்டீங்களா? பாவம் அண்ணா! ஆறு மாசம்ன்னு சொன்னீங்க?"

"நாலு மாசத்தில கஸ்டமைசேஷன் வேலை முடிஞ் சிருச்சு. அதுக்கு மேல சப்போர்ட் மட்டுமே. ஸோ அவர் இங்கே வர வேண்டிய அவசியம் இல்லை. எங்க லீட் புனே போய் அவங்க ஆபீஸ்ல இன்ஸ்டால் செய்துட்டு ஏதாவது பிரச்சனை இருந்தா எங்களை சரி செய்ய சொல்வாங்க."

"ஓஹோ!"

"அவர் ஒரு புதன் கிழமை கிளம்பினார்! அப்போவும் அதே பார்வை அதே முழி தான். எனக்கு கோபமா வந்தது."

"ஏன் அவர் கிளம்புறாருன்னா?"

"அதெல்லாம் இல்லை கடைசி வரைக்கும் ஒரு சாரி சொல்லாமலே கிளம்புராறேன்னு கோபம்."

"ஓ சரி! அப்புறம் எப்படி சந்திச்சீங்க?"

"இரண்டு நாள் கழிச்சு ப்ரைடே ஆபீஸ்ல இருந்து வரேன், அம்மா பொண்ணு பார்க்க யாரோ வராங் கன்னு சொன்னாங்க."

"அம்மாடியோ, அண்ணா என்ன வேகமா வேலை செஞ்சு இருக்கார். ரெண்டே நாள்ல பெரியம்மாவை சம்மதிக்க வச்சுட்டாரா?"

"நீ தான் அவரை மெச்சணும்! அன்னைக்கு வரது அவர்ன்னு எனக்கு தெரியாதே!"

"ஸோ நீங்க சோகமா இருந்தீங்க."

"ஆமாம் அப்போ என் கண்ணுல இருந்து கொட்டின தண்ணியை தான் பின்னாடி கிணத்துல பிடிச்சு வச்சிருக்கேன்."

"சரி சரி நீங்க சோகமா இல்லை, அப்புறம் என்ன நடந்தது?"

"என்ன நடந்தது. அவர், அவங்க தம்பி, அம்மா வோட வந்தார். பேசினார்....."

"உங்களுக்கு இன்ப அதிர்ச்சியா இருந்திருக்கணுமே! உங்க கிட்ட பேசினாரா?"

"அதிர்ச்சியா இருந்தது, இன்பம் எல்லாம் இல்லை."

"பொய் தா..."

"அருந்ததி, இங்கே கொஞ்சம் வாம்மா....."

லக்ஷ்மியின் குரல் அவர்களின் உரையாடலுக்கு தடை விதித்தது.

"சுவாரஸ்யமான கட்டத்தில அத்தை கூப்பிடுறாங்களே. என்னன்னு பார்த்துட்டு வரேன். நீங்க அது வரைக்கும் ரெஸ்ட் எடுங்க!"

அருந்ததி சொல்லிவிட்டு வேகமாக அறையை விட்டுச் சென்றாள்.

கட்டிலில் சாய்ந்து அமர்ந்த ராதிகாவின் மனம் அப்போதும் பழைய நினைவுகளிலேயே இருந்தது. திரும்பி அருகே இருந்த மேஜையில் இருந்த டிஜிட்டல் போட்டோ பிரேமை பார்த்தவள், அதை கையில் எடுத்து ஒவ்வொரு புகைப்படமாக பார்த்தாள். எல்லாமே அவளும் கௌஷிக்கும் இருக்கும் படங்கள். அவளுக்கு பிடிக்கும் என்று கௌஷிக் அவர்களின் வீட்டில் இருந்து இங்கே எடுத்து வந்து வைத்திருந்தான்.

அதில் ஒன்று அவர்கள் தேனிலவிற்காக சிம்லா சென்ற போது எடுத்த படம்.

அதில் இருந்த கௌஷிக்கை பார்த்து ரசித்தவளுக்கு அவன் பெண் கேட்டு வந்த தினம் நடந்தவை மீண்டும் மனதில் வந்தது.

மகேஸ்வரியை அவன் வற்புறுத்தி அழைத்து வந்ததாலோ என்னவோ அவள் அன்று அதிகம் பேசவில்லை. பேசியது எல்லாம் கௌஷிக் தான். அவனுடைய பேச்சு அவளின் குடும்பத்தினர் அனைவருக்கும் பிடித்து போனது.

"அப்புறம் ஆன்ட்டி, அங்கிள் நீங்க தப்பா எடுத்துக்கலைன்னா நான் உங்க மகள் கூட ஒரு பத்து பதினஞ்சு நிமிஷம் தனியா பேசலாமா?"

நாதன், லக்ஷ்மி இருவருக்குமே எந்தத் தடையும் இருக்கவில்லை.

வீட்டில் இருந்த சின்னத் தோட்டத்தில் அவன் முகத்தில் சிரிப்புடன் நடக்க, அவள் சிடு சிடுவென்று கூட நடந்தாள்.

"என் மேல ரொம்ப கோபம் உங்களுக்கு!"

அது தான் முதன் முதலாக அவன் நேரடியாக அவளிடம் பேசிய வாக்கியம்.

அவள் போலியாக இல்லையென்று சொல்லாமல் ஆமென்று தலை அசைத்தாள்.

"ஓகே நான் சின்ன எக்ஸ்ப்ளனேஷன் தரேன். நான் பொண்ணுங்களையே பார்க்காதவன் இல்லை. ஏன் ப்ராஜக்ட்க்காக நெறைய கண்ட்ரீஸ் போய் இருக்கேன். அங்கே அவங்க கல்ச்சர்படி ஹக் செய்ற, கன்னத்துல கிஸ் செய்ற கோ-வொர்க்கர்ஸ் கூட எல்லாம் இருந்திருக்கேன். ஆனால் அன்னைக்கு உங்க ஆபீஸ் லிப்ட்ல என் மேல நீ..... அதை எப்படிச் சொல்லன்னு தெரியலை. அந்த மோதல் வெரி டிஃபரண்ட்! என்னால உன்னை விட்டு கண்ணை எடுக்க கூட முடியலை. அப்படியே கோபம் தெறிக்க நீ பேசின பாரு. அப்படியே கட்டிப் பிடிச்சு முத்தம் கொடுக்கணும்னு தோணிச்சு."

"வாட்?"

"அப்படி தான் தோணிச்சு! ரொம்ப கஷ்டப்பட்டுக் கையை கட்டிட்டு நின்னேன். பட் ரொம்ப கஷ்டப்

பட்டேன். உங்க ஆபீஸ்க்கு வீக்லி ஒன்ஸ் வந்தாலே போதும், உனக்காக தான் எக்ஸ்ட்ராவா கூடுதல் நாள் வந்தேன்.''

தன் மேல் இத்தனை பைத்தியமாக ஒருவன் இருக்கிறானா (அதுவும் இவன் இருக்கிறானா) என்ற மகிழ்ச்சி ஒருபுறமும், அது என்ன அது ஒரு பெண்ணை அவளுக்கு பிடிக்கிறதா பிடிக்கவில்லையா என்று கூட தெரியாமல் இப்படி கேவலமாக மனதில் நினைப்பது என்ற கோபம் ஒருபுறமுமாக ராதிகா அமைதியாக நின்றாள்.

''ஐ நோ யூ வில் பீ ஷாக்ட் டு ஹியர் இட். உன்னை பார்த்தே நீ ட்ரெடிஷ்னல் டைப்புன்னு புரிந்தது. அதனால தான் ஆபீஸ்ல நேரா எதுவும் பேசலை. எப்போடா அந்த வேலை முடியும்னு காத்துக்கிட்டு இருந்தேன். என் மனசில இருக்குறதை இனிமேல் மறைச்சு வைக்க வேண்டிய அவசியமில்லையே! வீ ஆர் ஆல்மோஸ்ட் கமிட்டட்.''

''நான் இன்னும் ஒரு முடிவும் எடுக்கலை.''

''சீக்கிரமா எடு ராது! ஐ கான்ட் வெயிட்! யூ ஆர் கோர்ஜியஸ்! ஐ..... எப்படி சொல்லன்னு தெரியலை, என்னால பொறுமையா இருக்க முடியலை. உனக்கு பிடிச்ச மாதிரி நான் நல்ல ஹஸ்பன்டா இருப்பேன். ஐ லவ் யூ! வில் யூ ப்ளீஸ் மேரி மீ?''

ராதிகா அவனின் ராது என்ற அழைப்பில், உரிமை யான பேச்சில் அசந்து போனாள் என்றால், அவனின் காதலுடன் கூடிய அந்தக் கனிவான கெஞ்சலில் தடுமாறிப் போனாள்.

படபடவென்று பொரிந்து கொட்டுபவள் என்ன சொல்வது எ'ாறு புரியாமல் நின்றாள்.

''சாரி, திடீர்னு இப்படி வந்து கேட்டால் உனக்கு குழப்பமா இருக்கும். உன் அப்பா அம்மா யோசிச்சு முடிவு எடுக்கும் போதே நீயும் ஒரு முடிவு எடு. ஆனால் நல்ல முடிவா எடு ப்ளீஸ்.''

பளீரென்ற புன்னகையுடன் பேச்சை முடித்தான் அவன்.

அவனின் வித்தியாசமான பார்வையையும், நட வடிக்கைகளையும் பார்த்திருந்தவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது. கூடவே அவள் தான் அதற்கு காரணம் என்று அவன் சொன்னது மெல்லிய கர்வத்தையும் கொடுத்தது!

அவள் அமைதியாக நிற்பதன் காரணம் புரியாமல் ஒரு சில வினாடிகள் பார்த்தவன்,

''என்னை புரிஞ்சுக்க ட்ரை செய் ராது. நான்.....'' பேசியபடி கௌஷிக் அவளருகே வரவும், ராதிகா யோசிக்காமல் பின்னே நகர்ந்து தள்ளி சென்று நின்றாள்.

''ஐ ஆம் சாரி... நீ யோசிச்சு முடிவு எடு!''

கௌஷிக் வீட்டினுள் சென்ற பின்பும் ராதிகா தோட்டத்திலேயே நின்றிருந்தாள்.

அவளுக்குக் குழப்பமாக இருந்தது!

அதன் பின் நாதன் மும்முரமாக கௌஷிக் பற்றிய விபரங்களை சேகரித்தார். அவனைப் பற்றி எந்த

விதமான தவறான கருத்தும் இல்லை. எல்லோரும் நல்ல கருத்துக்களையே பகிர்ந்து கொண்டனர்.

நாதன் லக்ஷ்மி இருவருக்கும் கௌஷிக்கை பிடித்திருந்தது. ராதிகாவிடம் கேட்ட போது, அவள் அவர்களையே முடிவெடுக்க சொன்னாள்!

அதன் பின் திருமண ஏற்பாடுகள் வேகமாக நடந்தன.

சந்திக்கும் போதெல்லாம் கிடைத்த கௌஷிக்கின் குறுகுறு பார்வைகளும், நடவடிக்கைகளும் ராதிகாவின் குழப்பத்தை அதிகரித்தன.

கல்யாணம் என்பது வெறும் உடல் சம்மந்தப் பட்டது இல்லையே! கௌஷிக்கிற்கு அவளை பார்த்த உடன் பிடித்தது சரி ஆனால், அவனுக்கு அவளை பற்றி என்ன தெரியும்? வெறும் அழகை பார்த்து முடிவு செய்வது சரியா?

கேள்விகள், குழப்பங்கள் இருந்த போதும், ராதிகாவிற்கு ஒரே ஒரு விஷயம் மன நிம்மதியைக் கொடுத்தது.

கௌஷிக் பார்க்கும் பெண்களை எல்லாம் 'சைட்' அடிக்கவில்லை. அவனுடைய குணத்தை பற்றியும் யாரும் தவறாக சொல்லவில்லை.

அவளிடம் தான் அவனுக்கு மயக்கம் என்றால் பரவாயில்லை..... தவறில்லை! ஆனால் அவனிடம் நேராகப் பேச வேண்டும். அவளுக்கு பிடித்த விஷயங்கள் பிடிக்காத விஷயங்களை அவனிடம் பேச வேண்டும்.

அவனைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்.

கல்யாணம் முடிந்த பின் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்க்கையை தொடங்க வேண்டும்.....

ராதிகா பெரிய பெரிய கோட்டைகளுடன் திருமண வாழ்வில் அடி எடுத்து வைத்தாள்.

திருமணம் நடந்த முதலிரவில் கௌஷிக்கிடம் என்ன பேச வேண்டும் எப்படி பேச வேண்டும் என்ற அரிய பெரிய பெரிய 'பிளான்'களுடன் அவள் அறைக்குள் செல்ல, அங்கே கௌஷிக் பொறுமை இல்லாமல் அலைந்து கொண்டிருந்தான்.

அவளைப் பார்த்த உடன் வந்து அள்ளிக் கொண்டான். அவளுக்கு பேசவே வாய்ப்பு தராமல் இறுக அணைத்துக் கொண்டு முத்த மழை பொழிந்தான்.

திகைத்து போன ராதிகா கிட்டத்தட்ட அவனைப் பிடித்து தள்ளினாள்.

"ராது! என்ன ஆச்சு?"

"ஷட் அப்! மனுஷனா நீங்க? என்னைப் பார்த்தால் உங்களுக்கு எப்படி இருக்கு? உங்க கண்ணுக்கு வெறும் இந்த அழகு மட்டும் தான் தெரியுதா? எனக்குள்ள இருக்க மனசு தெரியலையா?"

பொரிந்து தள்ளியவளை புரியாமல் பார்த்தான் அவன்.

"உனக்கு பிடிச்சு தானே கல்யாணத்துக்கு சம்மதிச்ச?"

"சம்மதிச்சா? உடனே கட்டிப் பிடிக்கணுமா? வேற எதுவுமே இல்லையா? என்னைப் பத்தி உங்களுக்கு

என்ன தெரியும்? பார்த்த உடனே உங்களுக்குப் பிடிச்சது, கட்டிப் பிடிக்கணும் போல இருந்தது. இதெல்லாம் கேட்குறது எனக்குப் பெருமையா? என் மனசில என்ன ஆசை இருக்கு? என்ன எனக்கு பிடிக்கும், என்ன பிடிக்காது எதையாவது தெரியுமா உங்களுக்கு? தெரிஞ்சுக்கணும்னாவது நினைச்சீங்களா?''

''அது தான் வாழ்க்கை முழுக்க இருக்கே பொறுமையா பேசலாம்னு நினைச்சேன் ராது.''

''ஆனால் வேற எதிலேயும் பொறுமை வேண்டாம் அப்படி தானே?''

கௌஷிக் ராதிகாவின் கண்களை நேராக பார்த்தான்.

''நான் நடந்துக்கிட்டது உனக்கு பிடிக்கலைன்னு தெரியுது. இனிமேல் நான் அப்படி நடந்துக்கலை. உனக்கு பிடிச்ச மாதிரி நடக்க முயற்சி செய்றேன்.''

''உண்மையா சொல்றீங்கன்னா, என்னைத் தொந்தரவு செய்யாமல் நீங்க இந்த சோபாவில் படுத்து தூங்குங்க.''

''சரி'' என்று ஒரே வார்த்தையில் பதில் சொன்ன கௌஷிக் சோபாவில் சென்று அவளுக்கு முதுகை காட்டி படுத்துக் கொண்டான்.

அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தப் படுக்கையில் சென்று அமர்ந்தவளுக்கு, எதற்கு என்ன என்று புரியாமல் அப்போதும் கோபமாக வந்தது!

அதன் பின் சென்ற ஒரு மாதமும் அவர்களுள் அதே போல் கண்ணாம்பூச்சி தொடர்ந்தது. ஊருக்கு,

விருந்துக்கு என சென்ற போதெல்லாம் அவர்கள் சாதாரணமாக நடந்து கொண்டார்கள் ஆனால் வீட்டினுள் ஒவ்வொரு மூலையில் வாழ்கையை நடத்தினர்.

அதற்காக பேசாமலே இருந்தார்கள் என்றும் சொல்ல முடியாது. தேவைக்கு பேசிக் கொள்ளவும் செய்தனர்.

''ராது, புது வீடு பார்த்திருக்கேன். அடுத்த மாசம் ஷிப்ட் செய்யணும்.''

''சரி.''

''புது வீடு உன்னோட அம்மா வீடு பக்கத்தில இருக்கு.''

''.....''

''உனக்கு வேலைக்குப் போக வசதியா இருக்கும். அத்தைக்கும் நீ பக்கத்தில இருந்தா சந்தோஷமா இருக்கும்.''

''.....''

''எங்க ஆபீஸ்ல நம்ம கல்யாணத்திற்கு சிம்லா டூ அண்ட் ப்ரோ டிக்கெட்ஸ் ப்ளஸ் ஹோட்டல் ரூம் புக் செய்து கொடுத்திருக்காங்க. இன்னும் ஒரு வாரத்தில அதை யூஸ் செய்தாகணும். பட் உனக்கு பிடிக்கலைனா போக வேண்டாம்.''

''போகலாம்! எப்போ கிளம்பணும்னு சொல்லுங்க நான் லீவ் போடுறேன்.''

''இந்த ப்ரைடே ஈவ்னிங் கிளம்புவோம்'' மகிழ்ச்சியோடு சொன்னான் கௌஷிக்.

சிம்லாவில் பதிவு செய்திருந்த அறை மிகப் பெரிய தாக அழகாக இருந்தது. அது ஹனிமூன் ஸ்பெஷல் அறை என்பது யாரும் சொல்லாமல் அங்கே இருந்த அலங்காரங்களை பார்த்தே புரிந்தது.

முதல் இரண்டு நாட்கள் வெளியே சுற்றினார்கள். ஒரு மாதமாக பரிச்சயமான அந்த கௌஷிக்கின் அருகாமை அவளுக்கும் பிடித்திருந்தது. அவன் ஒன்றும் அவள் 'நினைத்த அளவு' கெட்டவனில்லை என்பது அவளுக்கு இப்போது புரிந்திருந்தது.

மூன்றாம் நாள் மழை பொழியவே, ரூமிலேயே தங்கி இருந்தனர். மதிய உணவை ஆர்டர் செய்து அறையிலேயே வாங்கி முடித்து விட்டு,

''பால்கனில இருந்து கொஞ்சம் நேரம் பேசு வோமா?'' என்றான் கௌஷிக்.

அவள் சரி எனவும், பால்கனி செல்லும் கதவைத் திறந்தவன், அங்கே இருந்த திரைச் சீலைகளையும் திறந்து விட்டான். குளிர் உள்ளே ஊடுருவாமல் இருக்க கண்ணாடி இருந்தது. ஆனால் அங்கே பார்க்க கிடைத்த காட்சி கண்ணைப் பறித்தது.

''ஸோ ராது, இப்போ பேசுவோமா?''

இயற்கையில் லயித்து இருந்தவள்,

''என்னது? என்ன பேசுறது?''

''உனக்கு பிடிச்சது, பிடிக்காதது எல்லாத்தையும் தான்.''

''அது.....''

"ப்ளீஸ் ராது, சீக்கிரமா சொல்லு! என்ன எல்லாம் எனக்கு தெரியணுமோ சொல்லு! எல்லாத்தையும் கேட்டுக்குறேன். சொல்லிட்டு ஞாபகம் வச்சிருக்கே னான்னு டெஸ்ட் கூட வச்சு பார்."

ராதிகா முறைப்பதை கவனித்து விட்டு,

"சீரியஸா கேட்குறேன்...." என்றான்.

"ம்ம்ம்ம்ம்ம்."

"உனக்கு பிடிச்சதை எல்லாம் பேசலாம்....."

"ம்ம்ம்ம்ம்ம்ம்."

"ம்ம்ம் ம்ம்ம் ன்னு சொல்லிட்டு சும்மா இருந்தா எப்படி? சொல்லு."

"எனக்கு எதுவும் சொல்ல தோணலை."

"ஓ!"

"என்ன?"

"உனக்கு எப்போ சொல்ல தோணும், அப்புறம் நீ சொல்லணும்..... அப்புறம் தான்....."

"உங்களை என்ன செய்யலாம்?"

"என்ன வேணா செய்யலாம். இப்படி என் முன் னாடி வந்து உட்கார் உன்னை பார்த்துட்டே இருப்பேன்."

"....."

"எனக்கு உன்னைப் பத்தி எல்லாமே தெரியாது ஆனால் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். உனக்கு பிடிச்சது லைட் கலர்ஸ். நீ வச்சிருக்க எல்லா ட்ரெஸ்ஸும் லைட் கலர்ஸ். நீ கொஞ்சம் கொஞ்சம் பெமினிஸ்ட்.

அப்புறம், அப்பப்போ உன் முடியை முன்னால எடுத்து விட்டு கையை வச்சு நோண்டுறது உன் மேனரிசம். அதை நான் நிறுத்தியே ஆகணும். எவ்வளவு சாஃப்ட்டா பட்டு போல இருக்கு அது, இப்படியா அதை தொல்லை செய்றது?''

''ரொம்ப முக்கியம்.''

''முன்னாடி அவ்வளவு லாங்கா இருந்த ஹேரை ஏன் கட் செய்த?''

''உங்களுக்கு எப்படி அது தெரியும்?''

''உங்க ஆபீஸ் ஐடில இருக்க போட்டோல இருக்கே.''

''நீங்க எங்கே அதை பார்த்தீங்க?''

''அன்னைக்கு ஒரு நாள் உன் சிஸ்டம் யூஸ் செய்தேன். அப்போ அதில் இருந்து ஸ்க்ரீன் ஷாட் எடுத்து பிரிண்ட் செய்து வச்சிருக்கேன்.''

கௌஷிக் தன பர்சை திறந்து காட்டினான். அதில் அவளுடைய அந்தப் பழைய போட்டோ இருந்தது.

''இது நான் காலேஜ் படிச்சு முடிச்ச டைம்ல எடுத்தது. கன்றாவியா இருக்கு. முதல்ல கிழிச்சு போடுங்க.''

''எனக்கு ரொம்ப அழகாத் தெரியுது. ஒன் மன்த்தா இது தான் எனக்கு துணை. எத்தனை தடவை கட்டி பிடிச்சிருப்பேன் முத்தம் கொடுத்திருப்பேன் தெரியுமா?''

''.....''

''இருந்தாலும் உனக்கு கல் மனசு. நான் கெட்டவன் இல்லை ராது. ஏதோ கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு

ஒரு நாள் அவசரப்பட்டுட்டேன். அதுவும் அன்னைக்கு பட்டுப் புடவை எல்லாம் கட்டி பூ எல்லாம் நிறைய வச்சு நீ ரொம்ப அழகா இருந்த..... கல்யாணமாகிடுச்சேன்னு ஒரு எண்ணம் வேற! அதுக்காக என்னை இப்படி வருத்தி எடுக்குறீயே நியாயமா?''

''அதுக்கு முன்னாடி ரொம்ப நல்லவரா இருந்த மாதிரி தான் பேசுறீங்க!''

''முன்னாடியா? அப்போ வேற என்ன செஞ்சேன்? சைட் அடிக்க மட்டும் தானே செஞ்சேன் அது கூட தப்பா?''

''முதல் நாள் நாம சந்திச்சப்போ நடந்ததுக்கு ஒரு சாரியாவது சொன்னீங்களா?''

''அதுக்கு எதுக்கு சாரி?''

''கொழுப்பா?''

''அந்த க்ளாஷ்க்காக கடவுளுக்கு எத்தனை நன்றி சொல்லி இருக்கேன். அப்புறம் ஏன் உன் கிட்ட சாரி சொல்றேன். இப்போ கூட சொல்ல மாட்டேன். என் ஏஞ்சல் என் கண்ணில் பட்ட நாள் அது.....''

''சரியான ஜொள்ளு பார்டி நீங்க.''

''உன் கிட்ட மட்டும் தான் ராது. யூ ஆர் மை டார்லிங்.''

''ம்ம்ம்ம்ம்ம்ம் ஒரு மாசமா அமைதியா நல்லவரா இருந்துட்டு, இப்போ என்ன வந்தது உங்களுக்கு?''

கௌஷிக் எழுந்து அவளருகே வந்தான்.

"நீயே நான் நல்லவன்னு சொல்லிட்ட, கொஞ்சம் மனசு மாறக் கூடாதா? உன் மேல இருந்த அதிகபடியான ஆசையில எதோ செஞ்சிட்டேன். ஏற்கனவே ஒரு மாசம் ஆச்சு! இந்த ரூமை பாரு. இந்த கிளை மேட் எப்படி இருக்கு?"

"அப்புறம்? அவ்வளவு தானா டையலாக்?"

"இதை எப்படி எடுத்துக்குறது? இன்னும் பேசிட்டே இருக்க போறீயான்னு கேட்குறேன்னு எடுத்துக்கலாமா?"

"இவ்வளோ புத்திசாலியா நீங்க? ஒரு மாசமா வேஸ்ட்டா வெட்டியா டைமை ஓட்டிட்டுப் பேச்சை பாரு!"

"அண்ணி அண்ணி! எந்த உலகத்துல இருக்கீங்க?"

அருந்ததியின் குரலில் ராதிகா பழைய நினைவுகளில் இருந்து மீண்டு வந்தாள்.

"ஹாங்...! இந்த உலகத்தில தான் இருக்கேன், சொல்லு."

"நீங்க தான் சொல்லணும். அண்ணா பொண்ணு பாக்க வந்தார் அப்புறம் என்ன ஆச்சு?"

எதை எல்லாம் சொல்வது என்று யோசித்த ராதிகா,

"அப்புறம் பெருசா எந்த ட்விஸ்ட்டும் இல்லை. வீட்டில எல்லோருக்கும் அவரை பிடிச்சிருந்தது. கல்யாணத்துக்கு சம்மதிச்சு, கல்யாண நாள் பிக்ஸ் செய்தாங்க. கல்யாணம் நடந்துச்சு. அவ்வளவு தான்..."

"போங்க அண்ணி! என்ன சொல்லி ப்ளாஷ்பேக் ஆரம்பிச்சீங்க? சண்டை அப்படி இப்படின்னு சொன்னீங்க?"

"நான் தான் சொன்னேனே எனக்கு அவர் சாரி சொல்லலைன்னு கோபம்ன்னு. அதனால கோபமா இருந்தேன்."

"அதுக்காகவா சண்டை போட்டீங்க?"

"ஆமாம்!"

"பாவம் அண்ணா!"

"ஆமாமாம் ரொம்ப பாவம் தான்!"

"அப்புறம் உங்களை ஹனிமூன் கூட்டிட்டுப் போய் ஊரெல்லாம் சுத்திகாட்டி அண்ணா மயக்கிட்டார் அப்படியா?"

"அப்படி தான்னு வச்சுக்கோ."

"மோதலிலிருந்து வந்த காதல்! சூப்பர்!"

"கதை கேட்டது எல்லாம் சரி, முதல்ல ஷிவாவும் நீயும் சின்ன ட்ரிப் போடுங்க."

"அவர் கிட்ட பேசுறேன். இப்போ நீங்க கொஞ்சம் நேரம் தூங்குங்க."

"இல்லை க்யூட்டி இதுக்கு மேல தூங்க முடியாது. கொஞ்சம் நேரம் நடக்கலாம்னு இருக்கேன். உன்னோட அவர் வந்தா அப்புறம் ப்ரீயா வேற நடக்க முடியாது."

"போங்க அண்ணி! எப்போ பாரு என்னை ஏதாவது கிண்டல் செய்ங்க! ஒரு அரை மணி நேரம் கொடுங்க,

நானும் உங்க கூட வரேன். பாத்திரம் மட்டும் துலக்கிட்டு வரேன்.''

''சரி.''

ராதிகாவின் மனம் இப்போதும் இனிய நினைவுகளால் சூழப்பட்டு இருந்தது. ஏனோ கணவனுடன் உடனே பேச வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

பொதுவாக அவனுடைய ஆபீஸ் நேரத்தில் அவள் அவனைத் தொல்லை செய்வதில்லை. இருந்தாலும் இன்று ஏனோ பேச வேண்டும் என்று தோன்றியது!

கௌஷிக் அவனுடைய டீமில் இருந்த லக்ஷனாவை மும்முரமாக திட்டிக் கொண்டிருந்தான். அவள் செய்தது என்னவோ சிறிய தவறு தான். ஆனால் ஆபீசில் எப்போதும் கறார் பேர்வழியான கௌஷிக் அதை மலையாக்கி திட்டிக் கொண்டிருந்தான். அவனிடம் இருந்து எப்படி தப்பிப்பது என்று அவள் யோசிக்கும் போது, அவனின் செல்போன் அடித்தது.

ராதிகாவின் பெயரைப் பார்த்தவன், அவளிடம் அப்புறம் பேசச் சொல்லும் எண்ணத்துடன், அழைப்பை ஏற்றான்.

''ஹாய் கௌஷி, டிஸ்டர்ப் செய்றேனா?''

ராதிகாவின் குரல் குழைந்து ஒலித்தது.

கௌஷிக்கின் கோபம் எல்லாம் வடிந்து போனது. எதிரே இருந்த லக்ஷனாவைப் பார்த்தவன்,

''ஒன் மினிட் ராது'' என்று சொல்லி விட்டு,

"இனிமேல் பீ கேர்புல் லக்ஷனா... நவ் யூ கேன் கோ" என்றான்.

லக்ஷனாவிடம் தெரிந்த அந்த சின்ன கேலி புன்னகை கூட அவனை அசைக்கவில்லை.

தன்னுடைய கேபினில் இருந்து எழுந்து வெளியே வந்தவன்,

"சொல்லு ராது, உன் குரல் என்னவோ சொல்லுது! என்ன விஷயம்?"

"பெருசா ஒண்ணுமில்லை. நம்ம கல்யாணம் பத்தி யோசிச்சிட்டு இருந்தேன்."

"அப்போ அந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முதல் மீட்டிங்கையும் பத்தி யோசிச்சிருக்கணுமே?"

"ம்ம்ம்ம்ம்ம்."

"அது தானா குரல் இப்படி இருக்கு!"

"ம்ம்ம்ம்ம்ம் என்னவோ உங்க கிட்ட உடனே பேசணும்னு தோணிச்சு."

"உனக்கு எப்போ தோணினாலும் நீ பேசலாம்."

"ம்ம்ம்ம்ம்..... சரி நீங்க வேலையைப் பாருங்க. வைக்கவா? ஈவ்னிங் பார்த்து வாங்க."

"சரிம்மா. நீ ரெஸ்ட் எடு."

"என்ன அதிசயமா அமைதியா இருக்கீங்க?"

"உன் கிட்ட பழைய கதை எல்லாம் பேசிட்டு இருந்தேன்ல அதே பழைய நினைவுகள் இன்னும் ஒரு பக்கம் ஓடிட்டு இருக்கு."

''நீங்க இரண்டு பேரும் சூப்பர் ஜோடி! என் கண்ணே பட்டிருச்சு. இந்த ஞாயிறு சுத்தி போடணும்.''

''நீயும் ஷிவாவும் கூட நல்ல சரியான ஜோடி. அவன் மட்டும் கிறுக்குன்னு நினைப்பேன். அவனுக்கு சூட் ஆகுற மாதிரியே நீயும் கிடைச்சிருக்க.''

''அவர் கிறுக்குன்னா, அவரோட அக்கா நீங்க மட்டும் என்னவாம்?''

''அவனை பத்தி மட்டும் உன்கிட்ட எதுவும் சொல் லிட கூடாதே.''

''ஆமாம் சொல்லாதீங்க. அப்புறம் சொல்ல மறந்துட்டேனே, பெரியம்மா இன்னைக்கு அத்தை கிட்ட உங்களைப் பத்தி பெருமையா சொல்லிட்டு இருந்தாங்க.''

''ஹ்ம்ம்ம்....''

''நான் பொய் சொல்லலை உண்மையை தான் சொல்றேன்.''

''அதெல்லாம் அவ்வளவு சீக்கிரம் மாறாது. விடு.''

''ஏன் அப்படி?''

''அது அப்படி தான்.''

''அவங்க அப்பப்போ நகை வச்சு பேசுறாங்களே அது தான் காரணமா?''

''ஆமாம்!''

''அப்படி என்ன நடந்தது?''

''அது ஒரு பெரிய காமெடி.''

"காமெடியா? அவங்க சான்ஸ் கிடைக்கும் போதெல்லாம் எதையோ மனசுல வச்சு தான் குத்தி காமிச்சு பேசுறாங்க."

"எனக்கும் தெரியும். எனக்கு காமெடியான விஷயம் அவங்களுக்கு சீரியசா இருக்கு என்ன செய்ய?"

"என்ன விஷயம்னு சொல்லுங்க, அப்போ தானே...."

"இரு இரு பைக் சத்தம் கேட்குது, உன்னோட ஷிவா சார் வந்தாச்சு போல இருக்கு. முதல்ல உன் ஹீரோவை போய் கவனி, அப்புறமா என் விஷயத்தை கேட்கலாம்."

"ஒரு பத்து நிமிஷத்துல வந்திடுறேன். ஏதாவது வேணும்னா கூப்பிடுங்க" என்ற அருந்ததி, ஒரு சில வினாடிகளில் மறைந்து போனாள்.

"பார்ரா!" என வியந்த ராதிகா சிரிப்புடன் தன் வேலையை தொடர்ந்தாள்.

"எப்படி இருந்துச்சு இன்னைக்கு நாள்?"

"ஏ ஒண்ணா இருந்துச்சு! என்ன ரதி மேடம் ஒரே சந்தோஷமா இருக்கீங்க போல?"

"உங்க கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்."

"என்கிட்டேயா, என்ன?"

"நீங்க சொன்ன மாதிரி நாம எங்கேயாவது பக்கத்துல சின்னதா டூர் போகலாமா?"

ஷிவாவின் முகம் மாறியது!

"சாரி ரதி! புது மார்க்கெட்டிங் கேம்பைன் ஹெட்டா என்னைப் போட்டு இருக்காங்க. இன்னும் கொஞ்ச

நாளைக்கு எங்கேயும் போக முடியாது. நீ போன் செய்து சொல்லி இருக்கலாம்ல?''

''பெரிய பொறுப்பு போல இருக்கே! கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு. நாம மெதுவா போக லாம். நான் சும்மா தான் கேட்டேன்.''

சின்ன ஏமாற்றம் கூட இல்லாமல் பேசியவளை இமைக்காமல் பார்த்தவன்,

''நீ மனைவியா கிடைச்சது என் அதிர்ஷ்டம். உனக்கு தெரியுமா, இது முருகான்னு ஒருத்தருக்கு கொடுத்த வேலை. அவர் செய்ய முடியலைன்னு சொன்னதால என்கிட்டே வந்திருக்கு. அவர் என்கிட்டே தனியா பேசினார். வேலை எல்லாம் இழுத்துப் போட் டுட்டு செய்றார்ன்னு வைப் ஒரே கத்துறாங்களாம். கான்சென்ட்ரேட் செய்ய முடியலையாம்.''

''அவங்க கதை எல்லாம் நமக்கு எதுக்குங்க? உங்க கிட்ட வந்திருக்கு நல்லா செய்ங்க. இங்கே இந்த ஆபீஸ்ல இருக்குறவங்களுக்கும் உங்க திறமை தெரிய கிடைச்ச நல்ல வாய்ப்பு, பயன்படுத்திக்கோங்க.''

''உன்னோட ஸ்பெஷல் டானிக் இருக்கும் வரைக்கும் நான் மிஸ் செய்ய மாட்டேன் ரதி!''

''ஹ்ம்ம்...''

மெல்ல குனிந்து அவளின் கன்னத்தில் முத்தமிட் டவன், இந்த முறை அவளிடம் கேட்காமலே அடுத்த கன்னத்திலும் முத்தமிட்டான்.

திடீரென அறையில் இருந்த அமைதியை கிழித்துக் கொண்டு ஷிவாவின் செல்போன் அடித்தது.

பாக்கெட்டில் இருந்து அவன் அதை வெளியில் எடுக்க, டிஸ்ப்ளேவில் ஒளிவிட்ட பெயர் இருவருக்கும் தெரிந்தது!

'கீதா சூர்யா வைஃப்.'

என்றது அது!

24



டாக்டர் ஏன் இவருக்குப் போன் செய்கிறார்கள்?

இது தான் அருந்ததியின் மனதில் தோன்றிய முதல் கேள்வி.

அடுத்த வினாடி தானாக கணவனை விட்டு விலகி நின்றாள்.

அருந்ததியின் மனதில் ஓடிய எண்ணத்தை அறிந்திடாத ஷிவா, போன் அடிப்பதால் அவள் தள்ளி போவதாக நினைத்து,

"நல்ல டைம்ல போன் செய்றாங்க. எதுக்கு இப்போ கூப்பிடுறாங்க. எதுவா இருந்தாலும் அப்புறம் பேசலாம். என் ரதி தான் எனக்கு இம்பார்டன்ட்" என்றான்.

அந்த ஒரு சில கணங்களில் அருந்ததியின் அபாரமான மூளை 'இன்டல் ஐ7 பிராஸசரை' விட அதி வேகமாக வேலை செய்தது.

ஷிவா அவளிடம் முன்பு நடந்து கொண்ட முறைக்கும் இப்போது நடப்பதற்கும் வித்தியாசம் இருந்தது. இது எல்லாம் டாக்டரின் அறிவுரைபடி அவன் செய்வதோ?

அப்போது இந்த அன்பு, அக்கறை எல்லாம் உண்மை இல்லையோ?

''இந்த் கேம்பைன் சக்சஸ்ஃபுல்லா முடியட்டும் ரதி, அப்புறம் சின்ன ட்ரிப் என்ன பெரிய ட்ரிப் கூட போகலாம்.''

''மஹ்ம்ம் சரி.''

சற்று முன் எந்த விதமான ஏமாற்றமும் இல்லாமல் பேசிய அருந்ததிக்கும், இப்போது முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் பேசிய அருந்ததிக்கும் இடையே ஷிவாவிற்கு வேறுபாடு இருப்பது புரிந்தது ஆனால் என்ன என்று அவனுக்குப் புரியவில்லை!

''நீ முதல் முதலா என்கிட்ட கேட்டது, நான் வேண்டாம்னு சொல்லிட்டேனே, கோபமா?''

''இல்லை, கோபம் எதுவுமில்லை. அத்தை என்னை தேடிட்டு இருப்பாங்க நான் போறேன். நீங்க வேலையை பாருங்க.''

சொல்லிவிட்டு நிற்காமல் அறையை விட்டு வெளியே சென்றாள் அவள்.

ஷிவாவிற்கு ஒன்றும் புரியவில்லை! என்னவாகி விட்டது இவளுக்கு?

முதலில் நன்றாக தானே இருந்தாள்?

அதனால் தான் அவன் கூட டானிக்.....! ஓ, ஒருவேளை அது தான் அவளுக்குப் பிடிக்கவில்லையோ?

ஆனால் காலையில் பிடிக்காதது போல் தெரியவில்லையே, ஒருவேளை அவளை அதிகமாக தொல்லை செய்து விட்டானா?

ஷிவாவின் மூளை மனைவிக்கு நிகராக போட்டி போட்டுக் கொண்டு சிந்திக்கத் தொடங்கியது!!!

நல்ல வேளையாக அவன் கண்ணில் அவனின் லேப்டாப் பட்டது. தானாகவே செய்ய வேண்டிய வேலைகளும், எடுத்துக் கொண்டிருக்கும் கூடுதல் பொறுப்புகளும் நினைவுக்கு வந்தன.

அருந்ததியிடம் நேராக பேசி சரி செய்து விடலாம் என முடிவு செய்து, மனதை வேலையின் பக்கம் திருப்பினான்.

அறையை விட்டு வெளியே வந்த அருந்ததி, தோட்டத்தில் இருக்கும் ராதிகாவிடம் போக நினைத்தாள். ஆனால் அதே நேரம் வாசலில் கார் நிற்கும் ஓசை கேட்டது. கௌஷிக் போனில் பேசியபடி இறங்குவது தெரிந்தது.

இறங்கியவன் வீட்டினுள் வராமல் வலது பக்கம் இருந்த சிறிய பாதையின் வழியே தோட்டத்தின் பக்கம் செல்வதும் தெரிந்தது.

எனவே மனதை மாற்றிக் கொண்டு சமையலறைப் பக்கம் சென்றாள்.

அங்கே லக்ஷ்மி காய்கறி நறுக்கும் வேலையில் ஈடுபட்டிருக்க, அவளிடம் பேசிக் கொண்டிருந்த மகேஸ்வரி அருந்ததியை பார்த்து தன் பேச்சை நிறுத்தி விட்டு,

''என்னம்மா இளவரசி நீங்க வந்தாச்சு, மஹாராணி எங்கே காணும்?'' என்றாள்.

''அக்கா வாக்கிங் போனாங்க'' என்றாள் அருந்ததி அமைதியாக.

''இந்த காலத்துப் பொண்ணுங்களை என்ன சொல்றதுன்னே தெரியலை. ஒரு விதத்தில இவங்க இப்படி கெட்டுக் குட்டிச் சுவரா போக உங்களையும் என்னையும் போல அம்மா, மாமியார் தான் காரணம். ஒரு வேலையும் செய்றது கிடையாது.''

''அதெல்லாம் தேவைப்படும் போது செய்வாங்க, விடுங்க.''

''நான் நறுக்குறேன் அத்தை, நைட்டு சமைய லுக்கா இது? என்ன சமையல்?''

''ஆமாம் அருந்ததி, இன்னைக்கு சிம்பிளா சப்பாத்தி, சப்ஜி செய்திடுவோம்.''

''சரி அத்தை, நானே செஞ்சிடுறேன். நீங்க வேணா ரெஸ்ட் எடுங்க.''

''சரிம்மா, நான் சப்பாத்திக்கு மாவு பிசையுறேன் நீ சப்ஜி ரெடி செய்.''

லக்ஷ்மி விட்ட இடத்தில இருந்து வேலையை தொடர்ந்த அருந்ததிக்கு, மீண்டும் கேள்விகள் மேலோங்கின!

ஷிவா அவளிடம் நடந்து கொள்வது இயற்கையானதா, இல்லை செயற்கையாக அவளுக்காக அவன் நடந்து கொள்வதா?

கீதா சொல்லி தான் 'எல்லாமே' செய்கிறானா?

காலையில் இருந்து வானத்தில் பறப்பது போல் மிதந்து கொண்டிருந்தவள், இப்போது மனதில் பொங்கிய கோபத்தில், ஏமாற்றத்தில் 'தொபீ'ரென பூமியில் வந்து விழுந்தாள்!

''ஏம்மா அருந்ததி, கௌஷிக் இன்னும் வரலையா? அவன் கிட்ட ஒன்று, இரண்டு நாள் லீவு போட சொல்லணும். இங்கே திருவள்ளூர் கிட்ட அங்காள பரமேஸ்வரி கோவில் இருக்காமே! அந்த அம்மனை கும்பிடுறது கர்ப்பமா இருக்க பொண்ணுங்களுக்கு நல்லதுன்னு அன்னைக்கு கோவில்ல சொன்னாங்க.''

மகேஸ்வரியின் கேள்வியில் தன் மனதில் உறுத்திக் கொண்டிருந்த கேள்வியை விட்டு வெளியே வந்த அருந்ததி, கௌஷிக் தோட்டத்தின் பக்கம் சென்றது நினைவு வரவும், லக்ஷ்மி பக்கம் பார்த்து விட்டு,

''அண்ணாவை நான் பார்க்கலையே பெரியம்மா. இன்னும் அவர் ஆபீஸில இருந்து வரலைன்னு நினைக்கிறேன்'' என்றாள்

லக்ஷ்மியின் முகத்தில் மெல்லிய புன்சிரிப்பு தோன்றியது. அதை மறைக்க முயன்றபடி மகேஸ்வரி பக்கம் பார்த்து,

''ஆமாம் அன்னைக்கு கோவில்ல சொன்னதை நான் கூட கேட்டேன். போயிட்டு வாங்க.'' என்று மகேஸ்வரியிடம் பேச்சைத் தொடர்ந்தாள்.

ஆபீஸில் இருந்து கிளம்பி காரில் ஏறிய உடனே கௌஷிக் செய்த முதல் காரியம் ராதிகாவின் செல் போனுக்கு கால் போட்டது தான். ராதிகாவிற்கு காரை ஓட்டும் போது செல்போனில் பேசுவது பிடிக்காது, எனவே அவள் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருப் பதை மட்டும் சொல்லி விட்டு காலை கட் செய்து வைத்தாள்.

வீட்டிற்கு அருகே வந்த உடனே மீண்டும் மனைவி யிடம் பேசிய கௌஷிக், அவள் அப்போதும் தோட் டத்தில் இருப்பதாகச் சொல்லவும், நேரே தோட்டத் திற்குச் சென்றான்.

அந்த சின்ன தோட்டத்தில் அவளைக் கண்டு பிடிப்பது சிரமமில்லை.

அங்கே இருந்த சிமெண்ட் மேடையில் அமர்ந்திருந்த வளின் அருகே சென்று அமர்ந்தவன்,

''இது தான் நீ வாக்கிங் செய்ற லட்சணமா? உட் கார்ந்து பராக்கு பார்த்துட்டு இருக்க?'' என்று சீண்டி னான்.

''டையர்டாவே இருக்கு கௌஷி! வீட்டுக்குள்ளே இருந்து அப்படி இருக்குன்னு வெளியே வந்தேன், நாலு அடி எடுத்து வைக்குறதுக்குள்ள தலை சுத்துற மாதிரி இருக்கு, பயமா இருந்துச்சு.''

''சாரிம்மா, தெரியாம விளையாட்டா பேசிட்டேன். இப்போ எப்படி இருக்கு? டாக்டர் கிட்ட போவோமா? நீ ஏன் தனியா இங்கே வந்த?''

"தனியா வரலை அருந்ததி கூட வந்தேன்."

"அவ எங்கே?"

"ஷிவா வந்த உடனே அவ அப்படியே காத்துல கரைஞ்சு காணாமல் போயிட்டா."

"ஷிவா அதிர்ஷ்டசாலி."

கணவனின் சீண்டல் புரிந்து பார்த்தவள்,

"ஆமாம் அவன் நல்லவன் அதனால் அதுக்கு ஏத்த மாதிரி அதிர்ஷ்டம் அடிக்குது.. உங்களுக்கு உங்க ரேஞ்சுக்கு தான் இருக்கும்."

"எனக்கு இந்த ரேஞ்சே போதும்! இதுவே எனக்கு ஜாக்பாட் போல தான் இருக்கு."

"ஐயோ சார் போதும், இன்னும் இந்த ஜொள்ளு விடுற பழக்கம் போகலை?"

"அதெல்லாம் போகாது, கூடவே பிறந்தது! நீ வேற போன் செஞ்சு ஹஸ்கி வாய்ஸ்ல கௌஷின்னு கூப்பிட்டீயோ இல்லையோ, இன்னைக்கு அதுக்கு அப்புறம் எனக்கு வேலையே ஓடலை. என்ன ஒரு வாய்ஸ் ராது உனக்கு."

"போதும், போதும் அந்த பேச்சை நிறுத்துங்க! கௌஷி, உங்களுக்கு ஞாபகம் இருக்கா? நீங்க உங்க அம்மாவோட பொண்ணு கேட்டு வந்தப்போ, இதே தோட்டத்தில வந்து தான் பேசினோம். எல்லாமே அப்படியே இருக்கு, ஆனால் நான் எவ்வளவு மாறி போயிட்டேன்....."

உணர்ச்சி ததும்ப சொன்னவளை சாதாரண மனநிலைக்கு கொண்டு வர விரும்பிய கௌஷிக்,

''எதுவுமே மாறலையா? அப்போ இங்கே ரெட் ரோஸ் செடி இருந்துச்சு. இந்த பக்கம் கனகாம்பரம் இருந்துச்சு! இன்னும்.....''

ரொம்ப சீரியசாக பேசிக் கொண்டு போனவனை பார்த்து முறைத்தாள் ராதிகா.

''இப்போ எதுக்கு முறைக்குற? வேணா அம்மா கிட்ட கேட்டு பாரு, நான் சொன்னது சரின்னு சொல் வாங்க.''

''ரொம்ப முக்கியம் இப்போ? நான் என்ன ஒரு பீலோட பேசுறேன், நீங்க என்னடான்னா பூ, இலை, கொடின்னு பேசுறீங்க, உங்களை!!!''

''அன்னைக்கு என் கண்ணில பட்டதை சொன் னேன்.''

''ஓ, அப்போ இதெல்லாம் தான் அன்னைக்கு உங்க கண்ணில பட்டிச்சா?''

''ஹி ஹி ஹி.''

''சகிக்கலை, போதும் நிறுத்துங்க.''

''ராது, அன்னைக்கு என் மனசு எப்படி இருந்துச் சுன்னு உன் கிட்ட சொன்னேன்ல. உன்னை லிப்ட்ல பார்த்ததில் இருந்தே உன்னை நினைச்சு உருகுற, ஜொள்ளு விடுற வேலை மட்டுமே இருந்தது. இப்படி தனியா, சூப்பரான ஒரு இடத்தில உன் கூட இருந்தா என் நிலைமை எப்படி இருந்திருக்கும்?''

ராதிகாவின் முகத்தில் சிரிப்பும், வெட்கத்தில் உண்டான மெல்லிய சிவப்பும் தோன்றின!

''போதும், போதும் எனக்கு அதெல்லாம் தெரியவே வேண்டாம்! நீங்க முதல்ல வீட்டுக்கு போங்க. டிரஸ் மாத்திட்டு, ஸ்நாக்ஸ் சாப்பிடுங்க நான் வரேன்.''

''நீயும் வா, இங்கே இருந்து என்ன செய்ய போற?''

''இன்னும் தலை சுத்துற மாதிரியே இருக்கு. கொஞ்சம் நேரம் உட்கார்ந்துட்டு வரேன்.''

''டாக்டர் கிட்ட போவோமா ராது? நீ இவ்வளவு நாள்ல இப்படி டல்லா இருந்ததே இல்லையே?''

''இரண்டு மாசத்துக்கு மேல ஆச்சே, இன்னும் கொஞ்ச நாள் தான் கௌஷி, அப்புறம் சரி ஆகிடும். நெக்ஸ்ட் வீக் எப்படியும் செக் அப் போகணும், அப்போ டாக்டர் கிட்ட கேட்டுக்கலாம்.''

''சாரிம்மா, நீ இப்படி எல்லாம் கஷ்டப்படுறதை பார்க்க தான் முடியுது. வேற எதுவும் செய்ய முடியலை.''

''அசடு மாதிரி பேசாதீங்க! இதுல கஷ்டம் இல்லை! சாப்பிட முடியாம, ஏன் நிக்க முடியாமல் கூட இருந்தாலும் மனசுக்கு சந்தோஷமா இருக்கு. இந்த குழந்தை நம்ம வாரிசு.''

''யெஸ்! தேங்க்ஸ்டா ராது!''

''நீங்களும் உங்க தேங்க்ஸும்! சரி சரி மத்தியானம் சாப்பிட்டதுக்கு மேல எதுவும் சாப்பிட்டிருக்க மாட்டீங்க, போங்க போய் டிபன் சாப்பிடுங்க.''

''நீயும் வா.''

''நான் தான் சொன்னேனே, கொஞ்சம் நேரம் கழிச்சு.....''

''உன்னால நடக்க முடியாம போனால் என்ன? என்னால உன்னைத் தூக்க முடியுமே'' என்ற கௌஷிக், தோளில் இருந்த தன் லேப்டாப் பேகை முதுகுக்கு பின்னே தள்ளி விட்டு, இரண்டு கைகளாலும் மனைவியை குழந்தை போல தூக்கிக் கொண்டான்.

''கௌஷி!'' சிணுங்கினாலும், அவளின் கரம் தானாக அவனின் கழுத்தைச் சுற்றிப் படர்ந்தது.

அவளைக் குழந்தையைப் போல தாங்கிக் கொண்டு நடந்தவன்,

''சும்மாவே நீ அழகு, இப்படி எல்லாம் செல்லம் கொஞ்சினால் உன்னை என்ன செய்யலாம்?'' என்றான்.

''கௌஷி, நாம நம்ம வீட்டுக்குப் போயிடலாமா? எனக்கு இங்கே இருக்க பிடிக்கலை.''

கௌஷிக்கிற்கு ஆஸ்கர் விருது கிடைத்தது போல் சந்தோஷம் பொங்கியது. அவனின் மனைவி அவளின் பிறந்த வீட்டில் இருப்பதை விட அவனுடன் இருப் பதை விரும்புகிறாள்!!

மகிழ்ச்சி பொங்கிய போதும், அவளின் தற்போதைய உடல் நலத்தை மனதில் கொண்டு,

''இன்னும் கொஞ்ச நாள் ராது. அத்தையோட நீ இருந்தா எனக்கு ஆபீஸ் நேரத்துல கவலை இல் லாமல் இருக்கும்'' என்றான்.

''ஹ்ம்ம்ம்..... சரி.... இப்போ நீங்க செய்துட்டு இருக்க வேலையை உங்க அம்மா பார்த்தா என்ன ஆகும்???''

"என்ன ஆகும் நம்ம ரகசியம் இந்த உலகத்துக்கே தெரிஞ்சிடும்."

"ஹா ஹா..... நீங்க சரியான பராட் (fraud)! என் கிட்ட இப்படி சொல்லுங்க, அவங்க கிட்ட பேசும் போது அவங்களுக்கு பிடிச்ச மாதிரி பேசுங்க."

"மத்தபடி உங்க இரண்டு பேரையும் சமாளிக்குறது எப்படி?"

"போதும் போதும், உங்க பிரதாபம்! என்னை கீழே விடுங்க, யாரவது பார்த்தால் மானம் போக போகுது."

"இது நல்லா இருக்கே என் ராதுவை நான் தூக்கு வேன், செல்லம் கொஞ்சுவேன், இதுல யாருக்கு என்ன வந்துச்சு?"

"ஐயோ சார் போதும், விடுங்க."

"சரி வா கதவு பக்கத்துல வந்து இந்த அழகு பொக் கேவை இறக்கி வைக்குறேன்."

"என் ஹீரோ பேசுற வசனத்தை பாரு....." செல்ல மாக அவனின் தலை முடியைக் கலைத்து விளை யாடியவளுக்கு, மனமும் அதே போல் லேசாக இருந்தது.

ஆறு ஆண்டுகளாக அவளை இப்படி தான் தாங்குகிறான் அவன்! அன்பு அதிகமாகி இருக்கிறதே தவிர குறையவே இல்லை!

இவனைப் போலவே ஒரு நல்ல குழந்தையை பெற்றெடுத்து, வளர்க்க வேண்டும்!

நினைக்கும் போதே ராதிகாவின் மனதில் மஹேஸ் வரியின் நினைவு வந்து போனது!

மார்கெட்டிற்கு புதிதாக வந்திருக்கும் அந்தப் பொருட்களை பிரபலபடுத்தி, விற்பனையை அதி கரிக்க எந்த மாதிரியான உத்தி சரிபட்டு வரும் என்ற ஆராய்ச்சியில் ஆழ்ந்திருந்த ஷிவா, யோசனையுடன் எதிரே இருந்த கண்ணாடி ஜன்னலைப் பார்த்தான்.

அறையில் அவன் இருந்த இடத்தில் மட்டுமே வெளிச்சம் இருந்தது.

அருந்ததி இருட்டில் என்ன செய்கிறாள்?

எழுந்து கட்டிலின் பக்கம் சென்றவன், அங்கே விளக்கை அணைத்து விட்டு படுத்திருந்த மனை வியை ஆச்சர்யமாக பார்த்தான்.

''தூங்கி விட்டாளா?''

''ரதி! என்ன ஆச்சு? சீக்கிரம் தூங்குற? உடம்பு சரியில்லையா?''

''ம்ம்ம்ம்ம்.....''

''என்ன ரதி? ரொம்ப டல்லா இருக்கு உன் குரல், என்ன ஆச்சு?''

''தலை வலிக்குது.''

மனதில் இருக்கும் கோபத்தை மறைத்து பொய் சொன்னாள்!

''எல்லா வேலையையும் இழுத்து போட்டுட்டு செஞ்சா பின்னே தலை வலி வராமல் என்ன செய்யும். முதல்ல வேலைக்கு ஒரு ஆள் வைக்கணும்.....''

அவன் குரல் தேய்ந்து ஒலிக்க, என்ன செய்கிறான் என்று மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

அவன் அங்கே இருந்த சிறிய மேஜையில் எதையோ தேடிக் கொண்டிருந்தான்!

இவ்வளவு தானா இவனின் அக்கறை?

ஏமாற்றத்துடன் திரும்பி படுத்துக் கொண்டாள்.

அடுத்த ஒரு சில நிமிடங்களில்,

''ரதி கொஞ்சம் திரும்பிப் படேன்.....'' என்ற கணவனின் குரல் வெகு அருகே ஒலித்தது.

புரியாமல் அவள் திரும்ப, கையில் இருந்த அமிருத் தாஞ்ஜனை எடுத்து அவளின் நெற்றியில் தடவி விட்டான் அவன்.

''கண்ணை மூடிக்கோ, எரியும்! கொஞ்சம் நேரத்துல தலைவலி சரியா போயிடும். அப்படியே படுத்து தூங்கிக்கோ.''

''.....''

அவனின் வலிமையான கரம் அவளுக்கு வலிக் காத வண்ணம் இதமாக நெற்றிஃயை பிடித்து விடுவது அவளுக்கு புது விதமான அனுபவமாக இருந்தது....

அப்படியே அவளருகிலேயே இருக்க மாட்டானா என்ற ஆசையுடன் அசையாமல் படுத்திருந்தாள்.

சிறிது நேரம் கழித்து, மெல்ல அவளின் தலையை வருடியவன்,

''அப்படியே படுத்து தூங்கிக்கோ, சரியா?'' என்ற படி எழுந்திருக்க முயன்றான்.

கண்களைத் திறந்து கணவனைப் பார்த்தாள் அருந்ததி.

அந்தப் பார்வையில் என்ன புரிந்ததோ, மெல்ல குனிந்து அவளின் தலை உச்சியில் முத்தமிட்டவன்,

"எப்போதும் உனக்கு நான் இருக்கேன், உன்னை நல்லா பார்த்துப்பேன். தூங்கிக்கோ!" என்றபடி அவளின் இமைகளை மெல்ல மூடி விட்டான்....

அவனின் அந்த செயலுக்காகவே காத்திருந்தது போல் அவளின் இமைகள் கண்களுடன் ஒட்டிக் கொண்டன.....

அப்படியே தூங்கிப் போனாள்..... கணவனின் அன்பில் மனம் சிலிர்த்தபடி....

25



முகத்தில் புன்னகையுடன் வளைய வந்து கொண்டிருந்த அருந்ததியை அவ்வப்போது நோட்டம் விட்டபடி தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள் லக்ஷ்மி.

அங்கே வந்த ராதிகா,

"அம்மா, அத்தை எங்கேம்மா?" எனக் கேட்டாள்.

"ரூமுல இருக்காங்க ராது..." என்ற லக்ஷ்மியின் பார்வை மீண்டும் கேஸ் ஸ்டவ்வில் இருந்த குழம்பை

கவனித்தபடி ஏதோ பாடலை முணுமுணுத்துக் கொண்டிருந்த அருந்ததியிடம் சென்றது.

லக்ஷ்மியை தொடர்ந்த ராதிகாவின் பார்வையும் அருந்ததி பக்கம் சென்றது.

''என்னம்மா மேடம் ரொம்ப சந்தோஷமா இருக்காங்க போல?''

லக்ஷ்மியின் முகத்தில் பெரிய புன்னகை தோன்றியது.

''ஆமாம் ராது! காலையிலே இருந்து கவனிக்குறேன் முகத்துல அப்படி ஒரு சந்தோஷம். நேத்து என்னவோ கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தா.''

''உங்க செல்லப்பிள்ளையோட கைங்கரியம் போல!'' என்று லக்ஷ்மியிடம் சொன்ன ராதிகா,

''ஹேய் க்யூட்டி, என்ன பாட்டெல்லாம் களை கட்டுது?'' என்று அருந்ததி பக்கம் திரும்பிக் கேட்டாள்.

வேறு ஒரு கிரகத்தில் ஷிவாவுடன் டூயட் பாடிக் கொண்டிருந்த அருந்ததி, ராதிகாவின் குரல் கேட்டு மீண்டும் பூமிக்கு வந்து விட்டு அவள் என்ன கேட்டாள் என்று புரியாமல் விழித்தாள்.

''என்ன க்யூட்டி, இப்படி முழிக்குற? ஓ கனவு சீக்வன்சுல நான் நடுல வந்து தொல்லை செஞ்சுட்டேனா?''

''அதெல்லாம் இல்லை, என்ன கேட்டீங்க?''

''நீ ட்ரீம் லேண்ட்ல இல்லையா? அப்போ ஏன் நான் கேட்டது உன் காதுல விழலை? காதுல எதோ ப்ராப்ளம். ஷிவா வந்த உடனே உன்னை ஒரு நல்ல டாக்டர் கிட்ட அழைச்சிட்டுப் போகச் சொல்லணும்.''

"சும்மா சும்மா இப்படி எதாவது சொல்லாதீங்க."

"அடடா உனக்கு வெட்கம் எல்லாம் வேற வருமா? சரி என்ன விஷயம் ரொம்ப சந்தோஷமா இருக்க? இன்னைக்கும் பைக் ஸ்டாண்ட் ரொமான்ஸ் இருந் துச்சா???"

"அது என்னது அது?"

லக்ஷ்மியின் கேள்விக்கு பதில் சொல்லாமல் ராதிகா அருந்ததியை பார்க்க, அவள் கெஞ்சுவது போல் போல் பதில் பார்வை பார்த்தாள்.

"அதெல்லாம் எங்க ரகசியம்மா, உங்களுக்கு எதுக்கு? நான் சொல்ல வந்ததை விட்டுட்டு இந்த சின்ன பொண் ணோட கதையை பேசிட்டு இருக்கேன் பாருங்க. கௌஷிக் போன் செய்தார். லீவ் கன்பார்ம் ஆகிடுச்சாம். இன்னைக்கு ஈவ்னிங்கே கிளம்பலாம்னு சொன்னார்."

"இன்னைக்கு சாயந்தரமா? திருவள்ளூர்ல இருக்க கோவிலுக்குப் போக எதுக்கு இப்படி?"

"ஒரு கோவில் இல்லைம்மா, அத்தை நிறைய கோவில் லிஸ்ட் வச்சிருக்காங்க. கௌஷிக் எந்தெந்த கோவில்னு கேட்டு அட்ரஸ் எழுதி வைக்க சொன்னார்."

"எல்லா கோவிலுக்கும் இப்போவே போகணுமா? இந்த நேரத்துல ரொம்ப நேரம் டிராவல் செய்யக் கூடாது ராது."

"கௌஷிக் அதெல்லாம் பொறுமையா தான் ஓட்டுவார் கவலைப்படாதீங்க. அத்தை வேற ரொம்ப ஆசைப்பட்டு கேட்டாங்க."

"இதை கேட்டீயா அருந்ததி? எப்போ இருந்து இந்த அதிசயம் எல்லாம்?"

"அதிசயமெல்லாம் இல்லை. எவ்வளவு கஷ்டப் பட்டு கௌஷிக்கை வளர்த்திருப்பாங்கன்னு தோணிச்சு....."

"ராது நீ தானா பேசுறது? இல்லை சினிமால வர மாதிரி டபுள் ஆக்ட் ஏதாவதா?"

"சும்மா கலாய்க்காதீங்கம்மா!"

"ஆமாம் ஆமாம் நீயே நல்ல பொண்ணா மாறும் போது நான் ஏன் கெடுக்குறேன், போ போய் அவங்க கிட்ட பேசு. ரொம்ப சந்தோஷப்படுவாங்க."

"என்னை துரத்தி விட்டுட்டு நீங்க உங்க மருமக கூட இங்கே செல்லம் கொஞ்சலாம்னு ஆசையா?"

"அருந்ததியா? அவ இங்கே இருக்கான்னு தான் பேரு, ஆனால்....."

"இங்கே இல்லை, அப்படி தானே? கல்யாணம் முடிஞ்சா கையோடு ஒரு மாசம் ஹனிமூனுன்னு ஊர் சுத்த விடாமல் இப்படி வீட்டுல பிடிச்சு உட்கார வச்சு சமையல் செய்ய சொன்னால், அவ வேற என்ன செய்வா?"

"அட ஆமாம், அருந்ததி நானே கேட்கணும்னு இருந்தேன். இரண்டு பேரும் ஏன் இப்படி இருக் கீங்க? எங்கேயாவது போக கூடாதா?"

ராதிகாவை பார்த்த அருந்ததி, பின்,

"அது வந்து அத்தை....." என்று ஏதோ சொல்லத் தொடங்கினாள்.

நடுவில் குறுக்கிட்ட ராதிகா,

"இரு இரு இரு! திரும்ப என்கிட்டே சொன்ன அதே சென்டிமென்ட் வசனம் பேச போறீயா? என்னால தாங்க முடியாது. மாமியாரும் மருமகளும் என்ஜாய் மாடி! நான் போய் எங்க ட்ரிப்புக்கான வேலையை ஆரம்பிக்குறேன்." என்று சொல்லிவிட்டு மகேஸ் வரியை தேடிச் சென்றாள்.

"எவ்வளவு மாறி போயிட்டா இவ! சரி நீ என் னவோ சொல்ல வந்தீயே அருந்ததி அதை சொல்லு."

"அக்காக்கு குழந்தை பிறந்த பிறகு டூர் எல்லாம் போகலாம்னு இருக்கோம். இப்போ உங்களை தனியா எல்லா வேலையையும் செய்ய விட்டுட்டு எப்படி போறது அத்தை?"

அருந்ததியின் பதிலில் லக்ஷ்மிக்கு உச்சி குளிர்ந்து போனது.

"நீ தங்கமான பொண்ணு அருந்ததி."

"என்ன அத்தை நீங்க, எனக்கு உங்களைப் பார்க் கும் போதெல்லாம் அம்மா ஞாபகம் தான் வருது...."

"நீயும் எனக்கு ராதிகா போல மகள் தான். சரி சரி வேலை எல்லாம் முடிஞ்சிடுச்சே, இன்னும் ஏன் இங்கே இந்த கிச்சன் சூடுல நிக்குற, போ போய் கொஞ்சம் நேரம் ரெஸ்ட் எடு."

"இல்லை..."

"சொல்றதைக் கேளு, கொஞ்சம் நேரம் போய் டிவி பாரு, இல்லை ஏதாவது புக் படி. எப்போவும் இப்படி கிச்சன்லேயே இருந்தால் எப்படி போ போ....."

வேறு வழி இல்லாமல் சமையலறையில் இருந்து வந்த அருந்ததி, ராதிகாவை தொல்லை செய்ய விரும்பாமல் அவர்களின் அறைக்கு வந்தாள். என்ன செய்வது என்று புரியாமல் சில நிமிடங்கள் அறையில் உலாவியவளின் மனதில் மீண்டும் முன் தினமாலை சம்பவங்கள் உலா வந்தது.

ஷிவாவின் அன்பின் அருமை பெருமைகளுடன் (!!!!) கீதாவின் நினைவும் வந்தது. அதற்கு மேல் யோசிக்காமல் எழுதி வைத்திருந்த கீதாவின் நம்பரை எடுத்து போனில் அழைத்தாள்.

''ஹலோ டாக்டர் கீதா ஹியர்!''

''டாக்டர், நான் அருந்ததி, ஷிவாவோட மனைவி பேசுறேன்.''

ஷிவாவின் மனைவி என்று சொல்லும் போதே அவளையும் மீறி மனதினுள் குற்றால சாரல் வீசியது!

''ஹலோ அருந்ததி எப்படி இருக்க? சென்னை போன உடனே போன் செய்றேன்னு சொன்ன ஆளு தானே நீ?''

''சாரி டாக்டர்..... போன் செய்து பேச முடியலை. நேத்து அவருக்குக் கால் செய்திருந்தீங்க போல.....''

''ஆமாம், உனக்கும் தெரியுமா? அதனால தான் ஸார் போனை எடுக்கலையா?''

''அச்சோ அப்படி எல்லாம் இல்லை டாக்டர்.''

''நானும் சும்மா தான் சொன்னேன். ராதிகா நம்பர் சேவ் செய்யலை கேட்க போன் செய்தேன். ராதிகா எப்படி இருக்கா? நல்லா இருக்காளா?''

''நான் போன் செய்தால் நீங்க அண்ணியை பத்தியே விசாரிக்குறீங்க?''

''நீங்க எல்லாம் போன் செய்றேன்னு சொல்லிட்டு என்னை மறந்துட்டீங்க, ராதிகா தான் போன் செஞ்சு பேசினாங்க, ஸோ அவங்களை பத்தி தானே நான் கேட்க முடியும்?''

''அப்போ அண்ணி நம்பர் கேட்க மட்டும் தான் போன் செய்தீங்களா?''

அருந்ததியின் மனதில் சிறியதாக இருந்த கேள்வியும் கூட இப்போது ஓடிப் போனது!

''ஆமாம் ஏன் திரும்ப திரும்பக் கேட்குற?''

''அவர் எல்லாத்தையும் என்கிட்டே சொன்னார்....''

''யார் ஷிவாவா? எதை பத்தி?''

''உங்க கிட்ட என்னைப் பத்தி பேசினதை பத்தி சொன்னார்.''

''அடடா, என் கிட்ட சொல்லக் கூடாதுன்னு சொல்லிட்டு உன் கிட்ட சொன்னாரா? ரொம்ப நல்லவரா தான் இருக்கார். அப்புறம் எப்படி இருக்கீங்க இரண்டு பேரும்? இந்த அளவுக்கு ஷேர் செய்ய ஆரம்பிச்சிருக்கீங்களே, ரொம்ப நல்ல முன்னேற்றம் தான்.''

''ஆமாம் டாக்டர், அவர் கிட்ட மட்டும் தான் என்னால மனசு விட்டுப் பேச முடியுது.''

''குட், வெரி குட். கேட்கவே சந்தோஷமா இருக்கு. நீ சரியான திசையில போயிட்டு இருக்க அருந்ததி. அப்புறம் உன்னோட பயம் எல்லாம் எப்படி இருக்கு?''

"அதைப் பத்தி சொல்ல தெரியலை டாக்டர். அவர் கூடவே இருந்தால் நல்லா தான் இருக்கு ஆனால்....."

மேலே எப்படி சொல்வது என்று புரியாமல் தயங் கினாள் அருந்ததி.

கீதாவிற்கு அவளின் தயக்கம் புரிந்தது. எனவே பேச்சை மெல்லத் திசை திருப்பினாள்.

"ஸோ ஷிவா உன் கிட்ட அன்பா நடந்துக்குறார் அப்படி தானே?"

"என்ன இப்படி கேட்டுட்டீங்க? நேத்தைக்கு எனக்கு தலை வலின்னு சொன்னேனா....."

கணவனின் அன்பை புரிந்துக் கொண்ட மகிழ்ச்சி யில் இருந்த அருந்ததி, அதைப் பற்றி பேச கிடைத்த வாய்ப்பாக எடுத்துக் கொண்டு, கீதாவிடம் அவனைப் பற்றி புகழ்ந்து தள்ளினாள்.

அப்போது தான் தன் கிளினிக்கிற்கு வந்து சேர்ந் திருந்த கீதாவிற்கு சிறு குழந்தை போல் மகிழ்ச்சி பொங்க அவள் சொல்வதைக் கேட்டுச் சிரிப்பாக இருந்தது. ஆனாலும் அருந்ததியின் மனநிலையை, ஷிவாவைப் பேசும் வாய்ப்பை அவள் விரும்புவதைப் பற்றியும் தெரிந்திருந்ததால், அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தாள்.

முதல் பேஷண்ட் வந்திருப்பதாக சிஸ்டர் சொன்ன போதும், அவரைக் காத்திருக்க சொல்லி விட்டு அருந்ததியின் பேச்சை தொடர்ந்து கேட்டாள்.

பின் அருந்ததிக்கு பொறுமையாக அறிவுரைகள் வழங்கினாள்.

கிட்டத்தட்ட அரை மணி நேரம் கழித்து செல் போனை கீழே வைத்த போது, கீதாவின் முகத்திலும் பெரிய புன்னகை இருந்தது. அவளின் கண்கள் மேஜை மீதிருந்த கணவன் சூர்யாவின் புகைபடத் திடம் சென்றது.

''உன்னை போலவே உன் ப்ரெண்டும் நல்ல ரொமாண்டிக் ஹீரோதான்டா சூர்யா!'' என்று மானசீகமாக கணவனிடம் செல்லம் கொஞ்சியவள், மேஜை மீதி ருந்த மணியை ஒலித்து காத்திருக்கும் பேஷண்ட்டை உள்ளே அனுப்ப சொன்னாள்.

ஷிவாவிற்கு எதனாலோ அன்று மனம் ஒரு நிலை யில் இல்லை. ஏதோ கெட்டது நடக்கப் போவதாக அவனின் உள்ளுணர்வு அவனிடம் சொல்லி கொண் டிருந்தது.....

மனதினுள் எதுவோ உறுத்திக் கொண்டே இருந்தது....

செய்து கொண்டிருந்த வேலையை விட்டு விட்டு செல்போனை எடுத்து நோண்டியவனுக்கு, அப்போது தான் கீதாவின் அழைப்பு ஞாபகம் வந்தது. உடனேயே அவளை அழைத்தான்.

''ஹலோ ஷிவா, எப்படி இருக்கீங்க?''

கீதாவின் குரலில் மெல்லிய கேலி இருக்கிறதோ??

''நானா நல்லா இருக்கேன் சிஸ்டர். சாரி நேத்து உங்க கால் அட்டன்ட் செய்ய முடியலை.''

''அதை பத்தி எல்லாம் கவலையேபடாதீங்க ஷிவா. அருந்ததி காலையில பேசினாங்க. நான்

ராதிகா நம்பர் கேட்க தான் உங்களுக்கு கால் செய் தேன். உங்க வைப் செம பாஸ்ட். அவங்களும் பேசிட்டு, ராதிகா நம்பரும் கொடுத்தாங்க.''

''ஓ.... அருந்ததி என்ன சொன்னாள்?''

''என்னென்னவோ சொன்னாங்க..... ஏன் கேட்கு றீங்க?''

''இல்லை நான் அவளை ஏதாவது விதத்துல டிஸ்டர்ப் செய்றேனோ????''

''நல்ல கேள்வி கேட்டீங்க போங்க! இன்னைக்கு காலையில உங்க புகழைக் கேட்கவே எனக்கு ஒரு மணி நேரம் தேவை பட்டுச்சு. எப்படி ஷிவா அருந்த தியை இப்படி கவர் செய்து வச்சிருக்கீங்க?''

இப்போது சந்தேகமே இல்லாமல் கீதாவின் குரலில் கேலி இழையோடியது.

ஷிவாவிற்கு மெல்லியதாக வெட்கம் (அது சரி!!!!!) தோன்றியது.

''என்ன அமைதியா இருக்கீங்க? ஷிவா எப்படி இருக்கார்ன்னு தெரியாமல் ஒரு கேள்வி கேட்டுட் டேன் அவ்வளவு தான்! அவங்க ஒரு மணி நேரம் பேச்சை நிறுத்தவே இல்லை. அவங்களைப் பொறுத்த வரை சூப்பர் மேன், ஸ்பைடர் மேன், அயர்ன் மேன், ஏன் சூப்பர் ஸ்டார் கூட நீங்க தான்....''

''ம்ம்ம்...''

''அவங்க உங்க மேல ரொம்ப அன்பு வச்சு இருக் காங்க. நவ் ஐ ஆம் வெரி கான்பிடன்ட் தட் ஷி இஸ் கோயிங் டு பி ஆல்ரைட் சூன்.''

''தேங்க்ஸ் சிஸ்டர்.''

''ஆனாலும் நீங்க ரொம்ப கிரேட் ஷிவா. அருந்ததி இஸ் வெரி லக்கி. இப்படி ஒரு டெலிகேட் ஆன விஷயத்தை நீங்க ஹாண்டில் செய்யும் விதம் அருமை. கீப் இட் அப். எல்லாமே சீக்கிரம் சரியா ஆகிடும்.''

''எனக்கும் அந்த நம்பிக்கை இருக்கு சிஸ்டர். மத்தபடியும் அருந்ததி பக்கத்துல இருக்க லைப்பே எனக்கு போதும்!''

''அடடா!!!! இது எல்லாம் அருந்ததி கிட்ட சொல்ல வேண்டிய டையலாக் சார்! நீங்க நடத்துங்க! எப்போ எந்த ஹெல்ப் வேணும்னாலும் எனக்கு போன் செய்ங்க.''

''ஷூயர் சிஸ்டர்.''

ஷிவாவின் மனதினுள் இப்போது உல்லாசம் தோன்றி இருந்தது.

காலையில் இருந்து முடிக்காமல் வைத்திருந்த வேலைகள் அனைத்தையும் முடித்து விட்டு அவன் வீடு திரும்பும் போது மணி எட்டாகி விட்டது.

நாதன் ஹாலில் எங்கோ வெளியில் கிளம்பும் அடையாளமாக நல்ல பேண்ட் ஷர்ட் அணிந்து அமர்ந்திருந்தார்.

''என்னப்பா இப்போ தான் ஆபீசில் இருந்து வந்தீங்களா?''

''இல்லை ஷிவா. திண்டிவனத்துல என் பிரெண்ட் மக கல்யாணம் மறந்து போயிட்டேன். இப்போ

கிளம்பினால், காலையிலே அங்கே கல்யாணம் அட்டன்ட் செய்ய வசதியா இருக்கும்...''

''நைட் டிராவலா? ஏன்ப்பா?''

''வேற என்ன செய்றது சொல்லு?''

ஷிவாவிற்கு மீண்டும் காலையில் இருந்த அதே மன உறுத்தல் தோன்றியது!

கிளம்ப தயாராகி வந்த லக்ஷ்மி, அவளுடனே நடந்து வந்த அருந்ததியிடம்,

''நீங்க தான், ஹனிமூன் போக மாட்டேன்னு அடம் பிடிக்குறீங்க, உங்க இரண்டு பேருக்கும் நாங்க மூணு நாள் சுதந்திரம் கொடுக்குறோம்..... நல்லா சந்தோஷமா இருங்க. இந்த பையன் ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை போன் செய்து பேசுவான். அதெல்லாம் செய்ய விடாதே. அவனுக்கு உன் ஞாபகம் மட்டுமே இருக்க மாதிரி பார்த்துக்கோ.....'' என்றாள்.

அருந்ததியின் முகம் வெட்கத்தில் சிவந்தது.

''எது எப்படியோ, சீக்கிரமா எனக்கு ஒரு பேரனையோ பேத்தியையோ ரெடி செய்து கொடுக்கணும் சரியா?''

அருந்ததி பொதுப்படையாக தலை அசைத்து வைத்தாள்.

அருந்ததியும் ஷிவாவும் கை அசைத்து விடை கொடுக்க, நாதனும், லக்ஷ்மியும் காரில் கிளம்பினார்கள்.

''அக்கா எங்கே ரதி?''

"அவங்க பேமிலி எல்லோரும் கோவிலுக்கு போயி ருக்காங்க. திங்கள் தான் வருவாங்க...."

"ஓ!"

"அத்தையும் மாமாவும் கூட சன்டே நைட் இல்லை திங்கள் தான் வருவாங்க....."

"ம்ம்ம்....."

அருந்ததி ஆர்வத்துடன் ஷிவாவின் முகத்தைப் பார்த்தாள்.

ஆனால் அவன் முகத்தில் அவள் எதிர்பார்த்த உணர்ச்சி இல்லை..... ஏதோ பெறும் கவலையை சுமப்பவன் போல் நின்றிருந்தான்.

"என்னங்க ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?"

"என்னன்னு சொல்ல தெரியலை ரதி. ஏனோ பயமா இருக்கு..... ஏதோ கெட்டது நடக்கப் போகுதுன்னு தோணுது....."

26



லேப்டாப்பின் முன்பு அமர்ந்திருந்தாலும் ஷிவா வின் கவனம் அதில் இல்லை. மனதில் இன்னமும் என்னவென்றே சொல்ல முடியாத ஒரு விதமான எண்ண அலை அடித்துக் கொண்டிருந்தது.

அதே அறையில் இருந்த அருந்ததியின் பார்வையும் அவ்வப்போது கணவன் பக்கம் சென்று வந்து கொண் டிருந்தது. அவனின் மனநிலை சரியாக இல்லை என்பது அவளுக்குப் புரிந்தது!

காலை முதலே ஒரு விதமான மயக்கத்தில் இருந்த வளுக்கு கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது.

அன்றைய கணவனுடனான தனிமையை அவள் வெகு ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தாள்.

திருமணமான பின் ஒருவரும் இல்லாமல் அவர்கள் இருவருக்கும் மட்டுமாக கிடைத்திருக்கும் முதல் தனிமை அனுபவம் அது!

'ரோலர் கோஸ்டர்' ரைட் போல் விண்ணுக்கும் மண்ணுக்குமாக சென்று வந்து கொண்டிருந்தவளுள் ஏதேதோ மாற்றம் ஏற்பட்டிருந்தது...

ராதிகா சொன்ன அவளின் கதையினாலா, இல்லை ஷிவாவின் ஸ்பெஷல் டானிக்கினாலா, இல்லை அன்று மாலையில் ஷிவாவைப் பற்றி மனம் விட்டு கீதாவிடம் பேசக் கிடைத்த சந்தர்ப்பத்தினாலா, இல்லை அவை எல்லாமுமாக சேர்த்து தானோ என்னவோ அவளுள் மாற்றம்.. இல்லை.. இல்லை மயக்கம் ஏற் பட்டிருந்தது....

மனம் முழுக்க ஷிவாவும், அவனின் நினைவு களுமே ஆக்கிரமித்திருந்தன. அவனுடன் பேச, நேரம் செலவிட அவள் பெரிதும் விரும்பினாள்.

அதனாலேயே அன்றைய இரவை, புதிய தனிமை அனுபவத்தை வெகு ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந் தாள்...

ஆனால் எதிர்பாராத விதமாக ஷிவாவிற்கு அன்று மனதில் குழப்பம்...!

இன்று தானா அவனுக்கு குழப்பம் ஏற்பட வேண்டும்?

ஏமாற்றத்துடன் மீண்டும் ஷிவாவின் பக்கம் பார்த்த வளுக்கு அவள் மீதே கோபம் வந்தது. அவன் முகமே சரி இல்லை!

அவன் மனதில் வருந்திக் கொண்டிருக்க அவளின் எண்ணம் போகும் திசையைப் பார்!

தன்னையே திட்டிக் கொண்டு, கணவனின் அருகே சென்றாள்.

''இதோ பாருங்க, சும்மா குழம்பாதீங்க! கெட்டதா எதுவும் நடக்காது...''

''ம்ம்ம்ம்ம்.....''

''லேப்டாப்பை மூடி வச்சுட்டு தூங்குங்க. நாளைக்கு வேலை செய்யலாம்.''

''இல்லை ரதி எனக்கு இன்னைக்கு தூக்கமே வரா துன்னு நினைக்கிறேன். இதுனால பயம்னு தெரிஞ் சாலும் பரவாயில்லை.... இல்லை இப்படி தான்னு புரிஞ் சாலும் பரவாயில்லை, இது என்னவோ ஏதோன்னு திக்கு திக்குன்னு இருக்கு..... இன்னைக்கு பார்த்து தானா அக்கா, அம்மா, அப்பா எல்லோரும் வெளியே கிளம்பணும்?''

''இங்கே பாருங்க, நம்ம குடும்பத்துல எல்லோருக் கும் இருக்க நல்ல மனசுக்கு கெட்டதா எல்லாம்

எதுவும் நடக்காது..... இப்படியே இருந்தா உங்களுக்குக் குழப்பம் இருந்துட்டே தான் இருக்கும். நேரா அக்கா கிட்டேயும், மாமா, அத்தை கிட்டேயும் பேசுங்க....''

''என்ன பேச?''

''சும்மா பேசி எங்கே இருக்காங்க என்ன செய்றாங் கன்னு தெரிஞ்சுக்கோங்க, அப்போ மனசுக்கு கொஞ்சம் தெளிவா இருக்கும்....''

''இல்லை வேண்டாம் ரதி.''

''இப்படி அடம் பிடிச்சா எப்படி? உங்க போனை கொடுங்க நான் பேசுறேன்..... அக்கா நம்பர் போட்டு ஸ்பீக்கர் ஆன் செய்து தாங்க.''

''இல்லை....''

''ப்ளீஸ், பேசிட்டு தூங்குவோம்....''

ஷிவா அரை மனதுடன் ராதிகாவின் எண்ணை அழுத்தி ஸ்பீக்கர் ஆன் செய்து அருந்ததியிடம் கொடுத்தான்.

''ஹலோ ஷிவா.''

''அக்கா நான் அருந்ததி.''

''ஹேய் க்யூட்டி'' என ராதிகா சொல்லும் போதே, பின் னால் இருந்து 'ராது' என்று அழைக்கும் கௌஷிக்கின் குரல் கேட்டது.

''தப்பான நேரத்தில் கூப்பிட்டுட்டேனோ? சாரி.....''

''ஹேய் வாயாடி அப்படி எல்லாம் இல்லை, நானே போன் செய்யணும்னு இருந்தேன், நீ பேசிட்ட, அம்மா, அப்பா கிளம்பிட்டாங்களா?''

"கிளம்பிட்டாங்க, நீங்க எங்கே இருக்கீங்க? ரோட் சத்தம் எதுவும் கேட்கலையே?"

"நாங்க கௌஷிக் பிரெண்ட் வீட்டுல இருக்கோம் க்யூட்டி. இன்னைக்கு நைட் இங்கே ஸ்டே... காலையிலே சீக்கிரம் கோவிலுக்கு போகணும்...."

"ஓ, சரி சரி! சீக்கிரமா படுத்துத் தூங்குங்க..... நீங்க போன் செய்யலையேன்னு கேட்க தான் கூப்பிட்டேன்."

"சாரி, இவரோட பிரெண்ட் வைஃப் கிட்ட பேசிட்டு இருந்ததில் நேரம் போறதே தெரியலை."

"பரவாயில்லை, நீங்க தூங்குங்க, ரொம்ப ஸ்ட்ரெயின் செய்யாமல் உடம்பை பார்த்துக்கோங்க."

"சரிங்க பாட்டி! நீங்க ரெண்டு பேரும் என்ஜாய் செய்ங்க. உன்னை போன் பேச விட்டுட்டு என்ன செய்றான் அந்த பி.எஸ்???"

"ப்ச்....."

"அடடா மறந்தே போயிட்டேன் அவர் இப்போ உன்னோட கே.எம் ஆச்சே! சாரிங்க மேடம்."

"போனா போகுது அண்ணாக்காக உங்களை மன்னிச்சு விடுறேன் பிழைச்சு போங்க...."

"எல்லாம் என் நேரம்! சரி க்யூட்டி நாளைக்கு ஈவ்னிங் பேசுறேன்..... பை குட்நைட்..."

"குட் நைட்...!"

போனை கணவனிடம் நீட்டியவள்,

"அக்கா பேமிலி பத்திரமா இருக்காங்க, சரியா? இப்போ அத்தைக்கு போன் போடுங்க..." என்றாள்.

ஷிவா இந்த முறை மறுப்பு எதுவும் சொல்லாமல் லக்ஷ்மியின் நம்பரை அழுத்தி மனைவியிடம் கொடுத்தான்.

முதல் ரிங்கிலேயே எடுத்த லக்ஷ்மி,

"என்னப்பா ஷிவா, இன்னும் தூங்கலையா?" என்றாள்.

"அத்தை நான் அருந்ததி பேசுறேன்!"

"சொல்லும்மா.... உன் கிட்ட நான் என்ன சொல்லிட்டு வந்தேன், நீ என்ன செய்ற?"

"அதில்லை அத்தை....."

"அவன் தான் சின்ன குழந்தை போல கூப்பிட்டுட்டே இருப்பான்னு நினைச்சா, நீ அவனை விட மோசமா இருக்க?"

"இப்போ எங்கே இருக்கீங்க அத்தை?"

"கிண்டி பக்கத்துல இருக்கோம் அருந்ததி. இன்னும் தாம்பரம் கூட வரலை....."

"நைட் ட்ராவல் செய்றீங்க பார்த்து மெதுவா ஓட்ட மாமா கிட்ட சொல்லுங்க."

"உங்க மாமா ரொம்ப கேர்ஃபுல்லா தான் ஓட்டுவார். எங்களைப் பத்தி யோசிக்காமல் நீங்க இரண்டு பேரும் உங்களைப் பத்தி பேசுங்க. நான் திண்டிவனம் போய் சேர்ந்துட்டு மெசேஜ் அனுப்புறேன்."

"சரி அத்தை."

"வைக்குறேன் அருந்ததி...."

"சரி அத்தை."

போனை ஷிவாவிடம் கொடுத்தவள்,

"என்ன இப்போ ஓகேவா?"

"தேங்க்ஸ்! கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருக்கு."

"அப்படியே போய் படுத்து தூங்குவீங்களாம்...." என்றபடி ஷிவாவின் லேப்டாப்பை மூடி வைத்தாள் அருந்ததி.

"ஹேய் ஹேய், நான் எதையும் சேவ் கூட செய்யலை."

"பரவாயில்லை, நாளைக்கு திரும்ப செய்துக்கலாம், வாங்க தூங்குங்க....."

"இல்லை ரதி...."

"ஷ்ஷூ, இன்னைக்கு நான் சொல்றதைக் கேளுங்க, வாங்க வந்து தூங்குங்க...."

ஷிவாவின் கையைப் பற்றிக் கொண்டு அழைத்துச் சென்றாள் அவள். அமைதியாக அவளுடன் சென்றவன், நல்ல பிள்ளையாக கட்டிலில் படுத்துக் கொண்டு, தன் அருகே கை வைத்து காட்டினான்.

புரிந்துக் கொண்டு, அவனருகே அமர்ந்துக் கொண்டாள் அவள்.

அவளின் கையை பற்றியவன்,

"தேங்க்ஸ்டா ரதி....." என்றான்.

அருந்ததி பதில் எதுவும் சொல்லாமல் அமைதியாக இருந்தாள். அவளின் பார்வை கணவனின் முகத்திலேயே இருந்தது....

"நீ தூங்கலையா?"

"நீங்க தூங்கின பிறகு தூங்குறேன்..."

சொல்லியபடி அவனிடம் இருந்த கையை விடு வித்து அவனின் நெற்றியில் இதமாக மெல்ல தடவி விட்டாள். அவளையே பார்த்துக் கொண்டிருந்த ஷிவா, மெல்ல மெல்ல கண்கள் செருகி தூங்கிப் போனான்....

அவன் தூங்கி விட்டது தெரிந்த பிறகும், வெகு நேரம் அவனின் நெற்றியை வருடியபடி அமர்ந்திருந் தாள் அவள்....

".....இதுனால பயம்னு தெரிஞ்சாலும் பரவா யில்லை.... இல்லை இப்படிதான்னு புரிஞ்சாலும் பரவாயில்லை, இது என்னவோ ஏதோன்னு திக்கு திக்குன்னு இருக்கு....."

சற்று முன் ஷிவா சொன்ன வாக்கியம் அவளுக்கு நினைவில் வந்தது....

அவளால் அவனின் மனப் போராட்டத்தை புரிந்துக் கொள்ள முடிந்தது...

ஏழு வருடங்களுக்கு முன் அவள் அனுபவித்த போராட்டம் தானே அது..... ஊரில் பரவிய தொற்று வியாதியினால் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவ மனையில் அனுமதித்திருந்தனர். மற்றவர்கள் அவர் களை சென்று பார்க்க கூட அனுமதிக்கப்படவில்லை.

அவளின் அம்மா, அப்பா இருவருமே மருத்துவமனை யில் இருக்க, என்ன, ஏது, எப்போது எந்த செய்தி வரும் என்று புரியாமல் அவள் கலங்கிய நிலை.....!

அனுபவித்தவருக்கு மட்டுமே அது புரியும்.

ஷிவாவின் பக்கம் பார்த்தவள், அன்புடன் அவனின் கேசத்தை வருடி விட்டாள்.

சில மணி நேரத்திற்கு முன் அவளின் மனதில் இருந்த ஏமாற்றம் இருந்த இடம் தெரியாமல் ஓடிப் போயிருந்தது.....

அன்று அம்மா, அப்பாவிற்காக அவள் தவித்த போது அருகே, பிரேமா மற்றும் மற்ற உறவினர்கள் நண்பர்கள் என யார் இருந்த போதும், யாருமே இல் லாமல் தனியே தவிப்பதாக தான் அவளுக்குத் தோன்றியது.....

ஆனால் மனம் ஒன்றுபட்ட கணவன் மனைவி எனும் உறவில் அது போல் தனிமை இல்லை... இருவரும் ஒருவரே.....

அவளுடைய கலக்கங்கள் அவனுக்குப் புரிந்தது... தன்னுடைய ஆசைகளை ஒதுக்கி அவளுக்காக விட்டுக் கொடுக்க அவனால் முடிந்தது....

அவனுக்கு ஒரு குழப்பம் என்றால் அவளுக்கு வலித்தது..... குழப்பங்களை சீர் செய்து அவனுக்கு அமைதியைத் தர வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது....

இந்த உறவு மற்ற உறவைப் போல இல்லை.... முற்றிலும் மாறுபட்டது.....

இந்த உறவில் ஒளிவு மறைவு இல்லை....

ஒருவருக்கு ஒருவர் துணை.....

ஒருவருக்காக மற்றவர் வாழும் வாழ்க்கை....

நீ வழியாய் இருக்க, நான் விழியாய் இருப்பேன் என்று சொல்லும் உறவு....

புத்தருக்கு போதி மரத்தில் ஞானம் பிறந்தது போல், அருந்ததிக்கு கணவன் மனைவி எனும் உறவின் சாராம்சம் அந்த நேரத்தில் புரிந்தது.

அவளின் மனதை அழுத்திக் கொண்டிருந்த அந்த ஏதோ ஒன்று அவளை விட்டு விட்டு பறந்து சென்றது..... மனம் லேசாகிப் போனது!

அவளின் கவனம் மீண்டும் தூங்கிக் கொண்டிருந்த கணவனிடம் சென்றது.

இத்தனை நாட்களில் அவன் அவளுக்கு முன் உறங்கியதில்லை.... எப்போதும் அவளை கவனித்து, அவளுக்கு எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா என்று பார்த்து விட்டு தான் அவன் தூங்குவான்....

கணவன் மீது அவளுக்கு காதல் வெள்ளம் கரை புரண்டு ஓடியது....

மெல்லக் குனிந்து அவனின் நெற்றியில் முத்தமிட் டவள், அவனுக்கு அருகில் நெருங்கி படுத்துக் கொண்டாள்.

அவனை முதல் முதல் சந்தித்தது மனதில் ஆடியது....

நிச்சயதார்த்தத்தில் மோதிரம் அணிவிக்கிறேன் என்று அவளின் கையை வருடிய ஷிவா....

நிச்சயதார்த்தம் முடிந்த பின் அவளை சந்தித்த போது எதிர்பாராத முத்தம் கொடுத்த ஷிவா....

அன்று இரவு, பாட்டியின் அறை ஜன்னல் கதவைத் தட்டி குறும்பு மின்ன பார்த்த ஷிவா.....

மறுதினம் காலை உணவு வேளையில் அவளின் கையை பிடித்துக் கொண்டு வம்பு செய்த ஷிவா.....

திருமணத்தின் போது நாள் முழுவதும் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்த ஷிவா....

முதல் இரவின் போது காதல் பொங்க அவளை அணைத்துக் கொண்ட ஷிவா.....

அவளின் மனதில் இருக்கும் குழப்பம் பற்றி தெரிந்துக் கொண்ட போது எந்த வித தயக்கமும் இல்லாமல் மன்னிப்பு கேட்டு, அவளுக்காக காத்திருக்கும் ஷிவா.....

ஷிவா.... ஷிவா... ஷிவா...!

இவன் என்னுடையவன்...

எனக்காகவே பிறந்தவன்...

மேலும் நெருங்கி கணவனுடன் சேர்ந்து படுத்தவள், மெல்ல கையால் அவனை அணைத்தும் கொண்டாள்.

இப்போது அவளுள் எந்த கலக்கமும், குழப்பமும் இல்லை....

நாதன் காரை ஓட்டிக் கொண்டிருக்க, அருகே அமர்ந்திருந்த லக்ஷ்மி அவரிடம் பேச்சுக் கொடுத்தபடி இருந்தாள்.

''நீ வேணா தூங்கு லக்ஷ்மி.... எவ்வளவு நேரம் முழிச்சிருப்ப?'' என்றார் நாதன்.

''தூக்கம் வந்தா தூங்குறேன்..... இப்போ தூக்கம் வரலைங்க.....''

''குடும்பத்தோட ட்ராவல் செய்தே பழக்கமாகிடுச்சு..... பசங்க இல்லாமல் கார் ரொம்ப அமைதியா இருக்க மாதிரி இருக்கு.....''

லக்ஷ்மி அமைதியாக இருந்தாள்.

அவள் பக்கம் பார்த்த நாதன்,

''என்னம்மா எதுவும் சொல்லாமல் இருக்க?'' என்றார்.

''இல்லைங்க, நம்ம பசங்கன்னு இல்லாமல், கௌஷிக், அருந்ததியும் கூட ரொம்ப நல்ல மாதிரி. அவங்க நமக்கு மருமகனா, மருமகளா வந்தது நம்ம அதிர்ஷ்டம்.....''

''நிஜம் தான் லக்ஷ்மி....'' என்று நாதன் சொல்லிக் கொண்டிருந்த வேளையில் திடீரென அந்த கார் அவர்களின் முன் அசுர வேகத்தில் நேரே வந்தது....

''என்னங்க.... கார்.....'' என்று அலறினாள் லக்ஷ்மி.....

எதிர் திசையில் வந்து கொண்டிருந்த பேருந்தை 'ஓவர்டேக்' செய்ய எண்ணி இவர்களின் பக்கம் வந்த அந்த கார், எதிரில் வந்த நாதனின் காரை கவனிக்க வில்லை.....

நாதன் கவனமாக வாகனத்தை ஓட்டுபவர் என்ப தால் உடனேயே நடப்பதை புரிந்து கொண்டார்....

நேருக்கு நேர் இரண்டு கார்களும் மோதாமல் இருக்க இடது பக்கமாக காரை ஒடித்துத் திருப்பினார்....

ஆனால் திடீரென கட்டுப்பாடில்லாமல் திருப்பிய தால் டயர்களின் கிரீச் எனும் சத்தத்துடன் தறி கெட்டு ஓடிய அந்த கார், சற்று தள்ளி இருந்த மரத்தின் மீது 'டமாலென' மோதி நின்றது!!!

நள்ளிரவின் நிசப்தத்தை கிழித்துக் கொண்டு ஷிவாவின் செல்போன் வீறிட்டது!

தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்த ஷிவா பதறி எழுந்தான். அவனுக்கு வெகு நெருக்கமாக படுத்து, அணைத்தபடி தூங்கிக் கொண்டிருந்த அருந்ததியின் கரத்தை மெல்ல விலக்கி விட்டு எழுந்து அமர்ந்து போனை கையில் எடுத்தான்.

அது அழைப்பது 'அம்மா' என்று காட்டியது.

அதற்குள் திண்டிவனம் சென்றிருக்க வாய்ப்பில் லையே...

"ஹலோ அம்மா...."

"ஹலோ சார், என் பேர் மணி.... TN 01 8216 நம்பர் இருக்க ஸ்கார்பியோ கார் உங்களுக்கு தெரிஞ்சவங் களுடையதா?"

"அது என் அப்பாவோட கார்.... நீங்க யார்? அப்பா, அம்மா எங்கே?"

"இங்கே தாம்பரம் பக்கத்துல ஆக்சிடன்ட் சார்.... உங்க அப்பாவோட கார் மரத்துல மோதிருச்சு.... ஆம் புலன்ஸ் போன் செய்திருக்காங்க... வந்துட்டே இருக்கு.... இந்த போன் உங்க அம்மா கையில இருந்தது. இந்த நம்பர் கால் லிஸ்ட்ல மேல இருந்தது...."

"ஆக்சிடன்ட்டா??? அம்மா அப்பாவுக்கு என்ன ஆச்சு?"

"பதறாதீங்க சார்.... குரோம்பேட்டை கவர்ண்மென்ட் ஹாஸ்பிட்டல்க்கு முடிஞ்ச அளவு சீக்கிரம் வாங்க...."

ஷிவாவின் பேச்சு சத்தத்தில் தூக்கத்தில் இருந்து விழித்திருந்த அருந்ததி,

"என்ன ஆச்சு?" என்றாள் குழப்பத்துடன்.

"அப்பா கார் ஆக்சிடென்ட் ஆகிடிச்சாம்..." சொல்லும்போதே ஷிவாவின் குரல் உடைந்து போனது.

"என்ன???" பதறினாள் அருந்ததி.

"முழுசா விபரம் தெரியலை ரதி! பயமா இருக்கு... குரோம்பேட்டை ஹாஸ்பிட்டல்க்கு வர சொல்லறாங்க...."

"உடனே கிளம்பலாம் வாங்க.... அக்காக்கு...."

"வேண்டாம் ரதி அவகிட்ட இப்போ எதுவும் சொல்ல வேண்டாம். முதல்ல நாம ஹாஸ்பிட்டல் போவோம்..."

இருவரும் அவசர அவசரமாகக் கிளம்பினார்கள். இரவு நேரம் என்பதால் போக்குவரத்து நெரிசல் இல்லை.

எனவே வேகமாகவே மருத்துவமனையை அடைந்தார்கள்.

அந்த அரசு மருத்துவமனை அந்த நடுநிசியிலும் ஆள் நடமாட்டத்துடன் இருந்தது.

எங்கே போவது என்று புரியாமல் பார்த்த ஷிவா எதிரில் வந்த ஒரு நர்சை நிறுத்தி பேசினான்.

''சிஸ்டர், இங்கே தாம்பரம் பக்கத்துல கார் ஆக்சிடன்ட்ல இரண்டு பேர் அட்மிட் செய்திருக்காங்க....''

அவன் பேசி முடிக்கும் வரை காத்திருக்க பொறுமை இல்லாமல்,

''இரண்டு பேர் இல்லை, பத்து பேருக்கு மேல அட்மிட் ஆகி இருக்காங்க... லெம்ஃப்ட் சைட் போங்க, ஐ.சி.யூ வரும்....'' என்று அவசரமாக சொல்லிவிட்டு நகர்ந்தாள் அந்த நர்ஸ்.

ஷிவா வேகமான நடையுடன் நர்ஸ் கை காட்டிய திசையில் செல்ல, அருந்ததி அதே வேக நடையுடன் அவனை தொடர்ந்தாள்.

ஐ.சி.யூ பகுதி மிகவும் பரபரப்பாக இருந்தது....

வெள்ளை சீருடை அணிந்திருந்த ஒருவனிடம்,

''இங்கே தாம்பரம் பக்கத்துல ஆக்சிடன்ட் ஆகி...''

என ஷிவா கேட்க துவங்கும் போதே, அருகே நின்றிருந்த ட்ராபிக் போலீஸ் ஒருவர் அவன் அருகே வந்து,

''உள்ளே அட்மிட் ஆகி இருக்காங்க.... நீங்க...?'' என்றார்.

''என் பெயர் ஷிவா... ஸ்கார்பியோவில வந்தவங்களோட மகன்....''

''ஓ! சரி சரி... நான் தான் உங்களுக்கு போன் செய்தேன்.... இந்தாங்க உங்க அம்மாவோட போன்.

இரண்டு பேரும் உள்ளே தான் இருக்காங்க. டாக்டர் பார்த்துட்டு இருக்கார்...''

''என்ன ஆச்சு சார்?''

''கண்ணு மண்ணு தெரியாத அவசரம் வேற என்ன? ஒரு பஸ்சை ஓவர் டேக் செய்ய ட்ரை செய்து ஆப்போசிட் சைட்ல வந்திருக்கான்... எதிருல வேற வண்டி ஏதாவது வருதான்னு பார்க்க வேண்டாம்.... இப்படியா காரை ஓட்டுவான்? பைத்தியக்காரன்! உங்க அப்பா, எதோ புத்திசாலித்தனமா காரை ஒடிச்சுத் திருப்பிட்டார்.... அவருக்கு பின்னாடி வந்த காரோட ஹெட் ஆன் கொலிஷன்! நாலு பேர் ஸ்பாட்லேயே அவுட்! மீதி பேரை இங்கே அட்மிட் செய்திருக்கோம். நல்ல வேளை இந்த டைம்ல டாக்டர் இருக்கார்....''

''அப்பா, அம்மாக்கு நினைவு இருந்துச்சா சார்? பெரிய அடி எதுவுமில்லையே?''

அவனை பரிதாபமாக பார்த்த அந்த ட்ராபிக் போலீஸ்,

''நான் போலீஸ், டாக்டர் இல்லை சார். டாக்டர் உள்ளே இருக்கார். அவர் வரும் போது நிலைமை தெரிஞ்சிடும் தைரியமா இருங்க'' என்றார்.

ஷிவாவிற்கு உள்ளம் பதறியது!!!

கைகளை பிசைந்தபடி நின்றிருந்தான்.

அருந்ததி அமைதியாக அவனின் அருகேயே நின்றபடி அனைத்து தெய்வத்திடமும், இருவரையும் காப்பாற்றச் சொல்லி வேண்டிக் கொண்டிருந்தாள்.

செய்தி தெரிந்து மற்றவர்களின் உறவினர்கள் வரவும், மணி அவர்களிடம் விபரம் சொல்ல சென்றார்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கு பின் ஐ.சி.யூவில் இருந்து வெளியே வந்த டாக்டரை காத்திருந்த அனைவரும் சூழ்ந்துக் கொண்டனர்.

அவருக்கு உதவிக்கு வந்த மணி,

''டாக்டரை பாருங்க ரொம்ப டையர்டா இருக்கார். அவர் ரூமுக்கு போகட்டும், ஒவ்வொருத்தராய், போய் பேசுங்க...'' என்றார்.

தள்ளுமுள்ளுக்களை மீறி ஷிவாவும் அருந்ததியும், ஒரு வழியாக டாக்டரின் அறைக்குள் சென்றார்கள்.

''டாக்டர், எங்க அப்பா பேர் நாதன்... ஸ்கார்பி யோவில் வந்தாங்க... மரத்தில இடிச்சிடுச்சுன்னு போலீஸ் சொன்னாங்க....''

அங்கே இருந்த நர்ஸ், கேஸ் பைல்களை பார்த்து டாக்டரிடம் தர, அதில் பார்வையை பதிய விட்ட டாக்டர்,

''உங்க அப்பாக்கு பெருசா ஒண்ணுமில்லை. ஹி இஸ் ஆல் ரைட்.... சின்ன காயம், கூட ஷாக் அவ் வளவு தான்...'' என்றார்.

''தேங்க்ஸ் டாக்டர்.... அம்மா.... அம்மா எப்படி இருக் காங்க டாக்டர்?''

''உங்க அம்மாக்கு தலையில் காயம் பட்டிருக்கு.... பெரிய காயம்னு சொல்ல முடியாது... ஆனால்....''

அவர் முடிக்காமல் வாக்கியத்தை இழுக்கவும்,

''ஆனால், என்ன டாக்டர்'' என்று பதறினான் ஷிவா....

''அவங்க அன்-கான்ஷியஸா இருக்காங்க... இது அந்த காயத்தினால ஏற்பட்ட பாதிப்பான்னு இன்னும் சரியா தெரியலை... முழிப்பு வந்துட்டா பயமில்லை... அதுவரைக்கும் எதையும் தெளிவா சொல்ல முடியாது....''

''டாக்டர்.....''

''சாரி, கொஞ்சம் நேரம் காத்திருப்பதை தவிர இப்போ எதுவும் சொல்ல முடியாது. அவங்களோட B.P. வேற ரொம்ப அதிகமா இருக்கு..... இருபத்திநாலு மணி நேரம் பார்ப்போம்....''

''டாக்டர்.....''

''பயப்படாதீங்க, அவங்களுக்கு ஞாபகம் வந்தால் மெடிசின் கொடுத்து நார்மல் டெஸ்ட் எடுத்து பார்த்திடலாம்.... இருபத்தி நாலு மணி நேரமாகியும் ஞாபகம் வரலைன்னா அடுத்து என்ன செய்றதுன்னு பார்ப்போம்... இப்போதைக்கு பொறுமையா காத்திருப்பதை தவிர வேற எதுவும் செய்ய முடியாது. உங்க அப்பாவை இன்னும் கொஞ்ச நேரத்துல போய் பார்க்க முடியும். அவர் கிட்ட உங்க அம்மா பத்தி எதையும் பேசாமல் இருக்கிறது நல்லது.''

டாக்டரின் அறையை விட்டு வெளியே வந்த ஷிவா நிற்க முடியாதவனைப் போல் தள்ளாடினான்.

அவனின் அருகேயே இருந்த அருந்ததி,

"இங்கே பாருங்க, தைரியமா இருங்க.... அத்தைக்கு ஒன்னும் ஆகாது... சீக்கிரமே கண்ணு முழிச்சு பார்க்க போறாங்க பாருங்க...." என்றாள் அவனை தைரியப்படுத்தும் நோக்கத்துடன்.

அவளின் கையை பற்றிக் கொண்டு நடந்த ஷிவா, ஐ.சி.யூவின் எதிரே இருந்த காலி நாற்காலியில் தோய்ந்து போய் அமர்ந்தான். அருந்ததி அவனின் அருகிலேயே நின்றாள்.

"எனக்கு பயமா இருக்கு ரதி.... அம்மா..."

"என்ன இது சின்ன குழந்தை போல? அத்தைக்கு ஒண்ணும் ஆகாது.... பொறுமையா இருங்க...."

"இல்லை ரதி..... அம்மா இன்னைக்கு வரைக்கும் சின்ன தலைவலின்னு சொல்லி கூட படுத்ததில்லை..... டாக்டர் என்ன எல்லாமோ சொல்றார்....."

"அதை சொல்ல வேண்டியது அவருடைய கடமை. எனக்கு நம்பிக்கை இருக்கு, அத்தைக்கு ஒன்னும் ஆகாது.... யோசிச்சு பாருங்க, ரைட் சைட்ல தான் மரத்துல கார் மோதிச்சுன்னு அந்த போலீஸ்காரர் சொன்னார். அந்த பக்கம் இருந்த மாமாக்கே சின்ன அடி எனும் போது இன்னொரு பக்கம் இருந்த அத்தைக்கு பெருசா எதுவும் இருக்காது.... தேவை பட்டால் கொஞ்சம் நேரம் பார்த்துட்டு வேற ஹாஸ்பிட்டல் வேணா மாத்தி பார்ப்போம்...."

"ம்ம்ம்ம்ம்ம்..... சின்ன வயசுல ஒரு தடவை நான் விளையாடும் போது மரத்துல இருந்து விழுந்துட்டேன் அப்போ அம்மா, அம்மா...."

ஷிவாவிற்கு கண்கள் கலங்கியது....

அதுநாள் வரை பார்த்த கம்பீரமான முரடனுக்குள் இப்படி ஒரு சிறுவனா?

ஷிவாவை எப்படி சமாதானப்படுத்துவது என்று புரியாமல் திகைத்தவள், அடுத்த வினாடி எதையும் யோசிக்காமல் அவனை தன்னுடன் இறுக்க அணைத்துக் கொண்டாள்.

ஷிவாவிற்கும் அந்த அரவணைப்பு தேவையாக இருந்தது... தாய் பறவையின் சிறகில் ஒண்டிக் கொள்ளும் பறவை குஞ்சை போல் அவளுடன் ஒன்றிக் கொண்டான்.

மெல்ல அவனின் தலை கேசத்தை வருடியவள்,

''அத்தைக்கு ஒண்ணும் ஆகாது.... தைரியமா இருங்க.... நாம கும்பிடுற கடவுள் நம்மளை கை விட மாட்டார்....'' என அவனை தைரியப்படுத்தும் வண்ணம் ஏதேதோ பேசியபடி இருந்தாள்.

எத்தனை மணித்துளிகள் சென்றதோ.... திடீரென,

''அந்த ஆக்சிடெண்ட் கேஸ்... ஸ்கார்பியோவில வந்தவங்க சொந்தக்காரங்க யாருங்க? அவங்களுக்கு ஞாபகம் வந்திருச்சு, டாக்டர் கூப்பிடுறார்....'' என்ற நர்சின் குரல் கேட்டது.

ஷிவா நாற்காலியில் இருந்து துள்ளி எழுந்தான்.

''ரதி...!''

''நான் தான் சொன்னேனே.... வாங்க முதல்ல டாக்டர் கிட்ட போய் பேசுவோம்...''

அவளின் கையை இறுக பற்றிக் கொண்டவன், அப்படியே டாக்டரின் அறைப் பக்கம் சென்றான்.

"நான் பயந்த மாதிரி எதுவுமில்லை. கார் எதிருல வந்து உங்க அப்பா திருப்பினதையும் கார் கண்ட்ரோல் இல்லாமல் ஓடினதையும் பார்த்து அவங்க அப்போவே மயக்கம் ஆகிட்டாங்க... ஆக்சிடெண்ட் இம்பாக்ட்ல பெருசா எதுவுமில்லை. ஆனால்...."

அவர் மீண்டும் முன்பு போல இழுக்கவும், ஷிவா குழப்பத்துடன் பார்த்தான்....

"பயப்படாதீங்க, பயப்பட எதுவுமில்லை... உங்க அம்மாக்கு பி.பி இருக்கு. அவங்க அந்த மாத்திரை சரியா சாப்பிடுறது இல்லை போல இருக்கு. அதை மட்டும் கொஞ்சம் கவனிச்சு பார்த்துக்கோங்க. மத்தபடி ஷி இஸ் ஆல் ரைட். உங்க அப்பாவை நார்மல் வார்ட்க்கு மாத்த சொல்லிட்டேன். உங்க அம்மாவையும் இன்னும் கொஞ்ச நேரத்துல நார்மல் வார்டுக்கு மாத்திடலாம்.... இரண்டு பேரையும் காலையிலேயே டிஸ்சார்ஜ் செய்திடலாம்... நீங்க போய் பார்க்குறீங்கன்னா பாருங்க. இப்போ அவங்க ஐ.சி.யூ வார்டுல இருக்குறதால பார்த்துட்டு உடனே வந்திருங்க...."

"தேங்க்ஸ் டாக்டர்.... தேங்க்ஸ்...."

"நான் எதுவுமே செய்யலை. எல்லாம் கடவுள் அருள். அவருக்கு நன்றி சொல்லுங்க."

இருவரும் முதலில் நாதனை சென்று பார்த்தனர். அவர் கேட்ட முதல் கேள்வியே மனைவியை பற்றி தான்.

''அம்மா நல்லா இருக்காங்க அப்பா. இப்போ தான் டாக்டர்கிட்ட பேசிட்டு இங்கே வரேன். உங்களுக்கு வலி எதுவும் இருக்காப்பா?''

''ஸ்டீயரிங்ல மோதினதுல செஸ்ட் கொஞ்சம் வலிக்குது. மத்தபடி எதுவும் தெரியலை....''

''சரிப்பா, உங்களை நார்மல் வார்ட் மாத்த போறேன்னு சொன்னாங்க, நான் அதுக்குள்ளே அம்மாவை பார்த்துட்டு வரேன்....''

''சரி.... எனக்கு ஸ்டீயரிங் இடிச்சுது அது இதுன்னு எதாவது சொல்லி அவளை பயமுறுத்தாதே. நான் நல்லா இருக்கேன்னு சொல்லு...''

''சரிப்பா....''

நாதனை விட லக்ஷ்மி மிகத் தெளிவாக இருந்தாள்.

''உங்க இரண்டு பேரையும் சதி செஞ்சாவது தனியா விடலாம்னு பார்த்தால், முடியலை பாரு!'' என்றாள்.

''எங்களை பயமுறுத்திட்டு பேசுறதை பாரு! இனிமேல் நைட் எங்கேயாவது ட்ராவல் செய்றேன்னு சொல்லி பாருங்க, அவ்வளவு தான்....''

''டேய் உன் மனைவியை பக்கத்துல வச்சுட்டு சின்ன பையன் மாதிரி செல்லம் கொஞ்சாதேடா...''

''நீங்க வேற அத்தை இதெல்லாம் பரவாயில்லை கொஞ்சம் நேரத்துக்கு முன்ன அழ வேற செஞ்சார்....''

''என்னது?''

''ரதி சும்மா இரு! நான் அழலாம் இல்லை....''

''சார், இது ஐ.சி.யூ.... டிஸ்டர்ப் செய்யாதீங்க. இவங்களை இன்னும் கொஞ்ச நேரத்துல வார்ட்க்கு அனுப்பிடுவோம் அப்போ வந்து பேசுங்க...''

லக்ஷ்மியிடம் விடை பெற்று விட்டு இருவரும் வெளியே வந்தார்கள்.

இன்னமும் அங்கே கூட்டம் இருந்தது....

இந்த கூட்டத்திற்கு நடுவிலா கணவனை அணைத்துக் கொண்டு நின்றாள்???? அருந்ததிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது....

''ரதி, மனைவி என்பவள் தோழியா, தாயாக இருப்பவள்ன்னு சொல்லி கேள்விப்பட்டிருக்கேன். இன்னைக்கு தான் நேரா அனுபவிச்சேன்.... நீ மட்டும் என் கூட இல்லைனா நான் என்ன ஆகி இருப் பேனோ.... தேங்க்ஸ்டா....''

கணவனை நேராக பார்த்தவள்,

''நமக்குள்ள என்ன தேங்க்ஸ் எல்லாம்?'' என்றாள் அன்புடன்.



27

''இந்த கீரை பத்து ரூபாய் சொல்றான். என்னன்னு சொல்றது? அநியாயத்துக்கு விலையை ஏத்தி விக்கு றாங்க.''

''அத்தை, இந்தாங்க தண்ணி குடிங்க.''

''தண்ணியா? எனக்கு இப்போ வேண்டாம் அருந்ததி!''

''இப்படி கோபம் வரும் போதெல்லாம் தண்ணி குடிச்சா கோபம் குறைஞ்சு போயிடுமாம்.''

''நல்ல கதை!''

''நல்ல கதையோ கெட்ட கதையோ. குடியுங்க! உங்களுக்கு பி.பி ஏறாமல் பார்த்துக்குறேன்னு மாமா கிட்ட வாக்குறுதி கொடுத்திருக்கேன். சின்னதா கூட நீங்க கோபப்பட கூடாது.''

''கீரை வாங்கி தான் எனக்கு பி.பி வரணுமாக்கும்! திடீர்னு அவ்வளவு ஸ்பீடா கார் நேரா வந்தா யாருக்கு தான் பி.பி ஏறாது? அதுக்காக எல்லாம் நான் கோபப் படாமல் வசூல் ராஜா எம்.பி.பி.எஸ் பிரகாஷ்ராஜ் மாதிரி சிரிச்சுட்டேவா இருக்க முடியும்? அவர் சொல்றதை எல்லாம் சீரியஸா எடுத்துக்காதே அருந்ததி.''

''நீங்க ஈசியா சொல்றீங்க. மாமா மட்டும் இல்லை, அன்னைக்கு இவர் செய்த கலாட்டா எல்லாம் பார்த் திருந்தீங்க அவ்வளவு தான். நீங்க கிளம்பினதில் இருந்தே மனசு சரியில்லை சரியில்லைன்னு புலம் பிட்டே இருந்தார்.''

லக்ஷ்மி அருந்ததியை உற்றுப் பார்த்தாள்.

''என்ன அத்தை அப்படி பார்க்குறீங்க?''

''இ.....''

லக்ஷ்மி பேச வாய் திறந்த நேரம்,

"ரதி டைம் ஆச்சு டிபன் எங்கே???" என்ற ஷிவா வின் குரல் கேட்டது.

"நீ அவனுக்கு டிபன் எடுத்து பரிமாறு, நாம அப்புறம் பேசுவோம்" என்றாள் லக்ஷ்மி.

டைனிங் ஹாலில் ஷிவாவுடன் ராதிகாவும் இருந் தாள்.

"குட் மார்னிங் அக்கா! அண்ணா காலையிலேயே ஆபிஸ் கிளம்பிட்டாரு, பெரியம்மா எங்கே?"

"ட்ராவல் செய்தது அசதியா இருக்குன்னு சொன் னாங்க. கௌஷி தான் அவங்களை கொஞ்சம் ரெஸ்ட் எடுக்க சொன்னார்."

"ஓ, அப்போ சரி, என்ன அதிசயமா அமைதியா இருக்கீங்க?"

"மாமியாரும் மருமகளும் செல்லம் கொஞ்சிட்டு இருந்தீங்க, நடுவுல நான் ஏன்னு விட்டுட்டேன். ஹேய் என்ன இரண்டு தட்டு மட்டும் வச்சிருக்க, உட்காரு! நீயும் சாப்பிடு."

"நான் அத்தை கூட சாப்பிடுறேன், நீங்க சாப் பிடுங்க."

"மவளே ஒழுங்கு மரியாதையா உட்கார்ந்து சாப் பிடு. எவ்வளவு நேரம் தான் இப்படி பிலிம் காட் டிட்டே இருப்ப? எங்க அம்மா பாவம் ஆல்ரெடி உருகி போயிருக்காங்க. இதுக்கு மேல உன்னோட ஐஸை தாங்க மாட்டாங்க."

"உங்களுக்கு அண்ணா இல்லாமல் போர் அடிக்கு துன்னு சொல்லுங்க. அதை விட்டுட்டு எதுக்கு என்னை மிரட்டுறீங்க?"

"ஆமாங்க மேடம் அப்படியே வச்சுக்கோங்க. இப்போ சாப்பிடுங்க."

அருந்ததியிடம் பேசியபடி ஷிவாவை கவனித்தாள் ராதிகா.

அவன் அவர்கள் இருவரையோ, அவர்களின் பேச்சையோ கவனித்ததாக தெரியவில்லை. வேறு ஏதோ உலகத்தில் இருந்தான்.

தனக்கு அடுத்திருந்த நாற்காலியில் அமர்ந்து சாப்பிட துவங்கி இருந்த அருந்ததியின் அருகே முகத்தை நீட்டி,

"என்ன ஆச்சு உன் ஆளுக்கு? என்னவோ மலேரியா கொசு போல உட்கார்ந்திருக்கான்?" மெல்லிய குரலில் கேட்டாள்.

"அவருக்கு ஆபிஸ் பிரச்சனைக்கா. அத்தை மாமா ஹாஸ்பிட்டல்ல இருந்தப்போ வேலையை மறந்து வீட்டுக்கும் ஹாஸ்பிட்டலுக்கும் போயிட்டு இருந் தாருல, வேலை எல்லாம் தங்கி போச்சாம்....."

அருந்ததியும் அதே மென் குரலில் பதில் சொன் னாள்.

"சரி அவனை விடு. உன்னோட கிளாஸ்க்கு ஆன்லைன்ல அட்வர்டைஸ்மெண்ட் போட நாலு சைட் செலக்ட் செய்து வச்சிருக்கேன். இந்த ஏரியா

கொஞ்சம் posh ஏரியா. எம்ப்ராயிடரி கிளாஸ்க்கு இன்டிரஸ்ட் காட்டுவாங்களான்னு தெரியலை. பக்கத்துல நிறைய பேர் கிளாஸ் நடத்துறாங்க, அங்கே இருந்து இங்கே வர ஏதாவது ரீசன் இருக்கணுமே, என்ன செய்யலாம்?''

''இதென்ன பெரிய விஷயம்? ஆரி க்ளாஸ்க்கு வந்தால், எம்ப்ராயிடரி கிளாஸ் பீஸ் பாதியா குறைச்சுக்கலாம்! அதே போல சர்தோசிக்கும் சொல்லலாம். அப்புறம்....''

அதுவரை அமைதியாக இருந்த ஷிவா,

''வாவ்! என்ன ஒரு ஐடியா. எனக்கு ஏன் இது தோணவே இல்லை. என்னோட கேம்பைன்க்கு இதையே யூஸ் செய்ய போறேன்'' என்றான் உற்சாகத்துடன்.

அருந்ததியும், ராதிகாவும் அவனைப் புரியாமல் பார்த்தார்கள்.

அவர்களின் பார்வையை கண்டுக்கொள்ளாமல்,

''நல்ல ஐடியா கிடைச்சிருச்சு. தேங்க்ஸ் ரதி'' என்றபடி, அருந்ததி எதிர்பார்க்காத நேரத்தில் அவளின் கன்னத்தில் குனிந்து சட்டென முத்தமிட்டவன்,

''பை'' என்றபடி வேகமாக நடந்து சென்றான்.

அருந்ததி திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.

''டிவில சினிமா, பாட்டு பார்த்தால் தான் ஏதேதோ சீன் வருதுன்னு பார்த்தால், வர வர வீட்டிலேயே ஒரு சென்சார் போர்ட் வைக்கணும் போல இருக்கே!!!''

ராதிகாவின் கிண்டலில் முகம் சிவந்த போதும், அருந்ததி உடனே பதில் சொல்லவில்லை.

''வாக்கிங் போகலாம்னா, பைக் ஸ்டாண்டில் ரொமான்ஸ் செய்றாங்கப்பா! சாப்பிடலாம்னா டைனிங் ஹால்லேயும் ரொமான்ஸா? இனிமேல் கண்ணை கட்டிட்டு தான் வீட்டுல சுத்தணும் போலருக்கே.''

அருந்ததி மும்முரமாக தட்டில் இருந்த இட்லியை நோண்டிக் கொண்டிருந்தாள்.

''சரி சரி, ஹீரோயின் உங்க ரியாக்ஷன் எல்லாம் பார்த்தாச்சு, அந்த இட்லியை விட்ருங்க.''

''அவருக்கு புதுசா ஆபிஸ்ல பொறுப்பு கொடுத்திருக்காங்க, அதை பத்தியே யோசிச்சிட்டு இருந்திருப்பார்.''

''அதுக்காக இப்படியா? இங்க்லீஷ் படம் எல்லாம் கூட உங்க பக்கத்துல வர முடியாது போல இருக்கே?''

''அண்ணி!!!''

''ஆஹா! நாளைக்கு என் குழந்தையை உங்க இரண்டு பேரையும் பக்கத்திலேயே வச்சுட்டு நல்ல பிள்ளையா எப்படி வளர்க்கிறது?''

''சும்மா இருங்க அண்ணி!!!''

அருந்ததியின் சிணுங்கலை கேட்டபடி வந்த லக்ஷ்மி,

''என்ன அருந்ததி? என்ன சொல்றா இந்த பொண்ணு?'' என்று மருமகளிடம் கேட்டாள்.

"அவளை ஏன் கேட்குறீங்க? என்னை கேளுங்க! இந்த வீட்டுல நடக்குற விஷயம் எல்லாம் உங்களுக்கு தெரிய மாட்டேங்குது" என்றாள் ராதிகா.

"அப்படி என்ன நடக்குது? சொல்லு தெரிஞ்சுக்குறேன்" என்றாள் லக்ஷ்மி ஒரு நாற்காலியில் அமர்ந்தபடி.

இப்போதும் அருந்ததியை பார்த்தபடி,

"நானும் அருந்ததியும் ஷிவாவும் சாப்பிட்டுட்டே இருந்தோமா" என்று கதை சொல்வது போல் தொடங்கினாள் ராதிகா.

அருந்ததி அவளிடம் கண்களால் கெஞ்சினாள்.

"சாப்பிட்டீங்க அப்புறம் என்ன ஆச்சு???" என ராதிகாவிடம் கேட்டாள் லக்ஷ்மி.

"விடுங்கம்மா, எத்தனையோ விஷயம் உங்களுக்கு தெரியாமல் நடக்குது, இதுவும் அதுல ஒண்ணா போகட்டும், விடுங்க." என்றாள் ராதிகா.

"அப்படி என்ன எனக்கு தெரியாமல் நடக்குது?"

"எவ்வளவோ விஷயம் நடக்குது."

"எது, அன்னைக்கு நீ வாக்கிங் போனப்போ, ஷிவா ஆபிஸ் கிளம்புற ஜோர்ல அருந்ததிக்கு முத்தம் கொடுத்தது போலவா?"

அருந்ததி, ராதிகா இரண்டு பேரும் நம்ப முடியாமல் லக்ஷ்மியை பார்த்தார்கள்.

அருந்ததி சந்தேகமாக ராதிகாவைப் பார்த்தாள்.

''க்யூட்டி, என்ன என்கிட்ட லுக் விடுற? நான் சொல்லலை! உங்களுக்கு எப்படிம்மா தெரியும்????''

''பெரிய தங்கமலை ரகசியம். நம்ம கிச்சன்ல ஷெல்ப் பக்கம் இருக்க ஜன்னல திறந்து வச்சா நம்ம வீட்டு கார், பைக் எல்லாம் தெரியும். காத்து வரும், கூடவே ஆள் நடமாட்டம் இருந்தாலும் தெரியும்னு நான் அந்த ஜன்னலை எப்போதும் திறந்தே தான் வைப்பேன்.''

''சூப்பர்ம்மா... இவ்வளவு விஷயம் தெரிஞ்சும் ஒண்ணும் தெரியாத மாதிரி இருக்கீங்க???''

''பின்ன உன்னை மாதிரி இதை எல்லாம் பப்ளிக்கா சொல்லிட்டா இருக்க முடியும்? பெரியவங்களா டீசன்ட்டா பார்க்காத மாதிரி இருக்க வேண்டியது தான்.''

அருந்ததி ராதிகாவைப் பார்த்துச் சிரித்தாள்.

''ஹேய் சிரிக்காதே நீ! அம்மா உங்க மகனும் மரு மகளும் செய்ற வேலை எல்லாம் முழுக்க உங்களுக்கு தெரியாது.''

''தெரியாமல் என்ன? கிச்சன்ல இருந்து பைக் ஸ்டாண்டே தெரியும் போது, நாலு அடி எடுத்து வச்சா வர டைனிங் ஹால்ல நடக்குறது தெரியாதா??''

''அத்தை???''

''அம்மாடியோ! எத்தனை கண்ணு வச்சிருக்கீங் கம்மா? இப்படி எல்லாத்தையும் நோட் செய்துட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி இருக்கீங்க? நம்ம ஷிவா

உங்களை போலன்னு நினைக்கிறேன். இந்த பொண்ணை கல்யாணம் செய்துக்குறதுக்கு முன்னாடி எப்படி இருப்பான், இப்போ பாருங்க இவ முந் தானையை பிடிச்சிட்டு பின்னாடியே சுத்துறான்.''

''அண்ணி! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை.''

''இல்லையா? அப்புறம் வேற என்ன செய்றான் அவன்?''

''அண்ணாவை வேணா சொல்லுங்க, எல்லோரும் நம்புவாங்க. உங்க தம்பியை சொல்லாதீங்க.''

''பார்த்தீங்களாம்மா இவ சொல்றதை???''

''அவ சொல்றதும் சரி தானே ராது?''

''என்னது???''

''அவனாவது கல்யாணத்துக்கு அப்புறம் தான் இப்படி இருக்கான். கௌஷிக் ஒரு படி மேல ஆச்சே.''

''ஒரு படி இல்லை அத்தை பத்து பதினஞ்சு படி மேல'' என்றாள் அருந்ததி.

''நீ சும்மா இரு க்யூட்டி. யூ டூ அம்மா? மருமக ளுக்கு ஜால்ரா போடுறீங்க?''

''ஜால்ரா எல்லாம் போடலை. கௌஷிக் பத்தி நீ ஒரு வார்த்தையும் எங்ககிட்ட சொல்லலை. ஆனால் கௌஷிக் பொண்ணு பார்த்துட்டு போன அடுத்த நாளே என்னை வந்து பார்த்து உங்க ஆபிஸ்ல நடந்த கதை எல்லாம் சொன்னார்.''

''என்னது????''

''ஆமாம், பின்ன ஏன் அவ்வளவு சுறுசுறுப்பா உங்க கல்யாணம் நடத்தி வச்சோம்னு நினைக்கிற? சீக்கிரம் கல்யாணம் செய்து வைக்கலைனா உங்க பொண்ணை கடத்திட்டு போய் கல்யாணம் செய்துப் பேன்னு சொன்னார்.''

''அவ்வளவு பேசினாரா??? இப்படி வில்லன் மாதிரி பேசினவருக்கு சீக்கிரமா கல்யாணம் செய்து வச்சீங்களா? பேட் அம்மா!''

''வில்லி மாதிரி இருக்க உனக்கு வேற எந்த மாதிரி ஜோடி சரியா இருக்கும். ஆஹா சூப்பர் ஜோடின்னு சந்தோஷமா கல்யாணம் செய்து வச்சோம்.''

''இந்த விஷயம் எல்லாம் தெரியாமல் நான் தான் இத்தனை வருஷம் மக்கா இருந்திருக்கேன்.''

''அது நீ ஸ்கூல் படிச்சப்போவே நமக்கு தெரிஞ்ச விஷயம் தானே ராது?''

சொல்லிவிட்டு லக்ஷ்மி சிரிக்க, அருந்ததியும் சேர்ந்து சிரித்தாள்.

அவர்களைப் பார்த்து முறைக்க முயன்ற ராதிகாவும், சில வினாடிகளில் அந்த முயற்சியை கை விட்டு விட்டு சிரித்தாள்.

ஒரு வழியாக சிரித்து முடித்து விட்டு, அருந்ததி யின் கன்னத்தை பாசத்துடன் வருடிய லக்ஷ்மி,

''நீ மருமகளா வந்தது எங்க குடும்பத்தோட அதிர்ஷ்டம்'' என்றாள்.

''என்னம்மா திடீர்னு திரும்ப அவளுக்கு ஜால்ரா போடுறீங்க? இப்போ என்ன?'' என்றாள் ராதிகா.

"ஜால்ரா இல்லை ராது! ஷிவாவுக்கு கல்யாணம் நடக்குற வரைக்கும் மனசுக்குள்ள ஒரு பயம் இருந்துட்டே இருந்தது. அவனை பத்தி தெரியும், ஆனால் அவன் கல்யாணம் செய்துக்க போற பொண்ணு எப்படி இருப்பாளோன்னு ஒரு கேள்வி மனசை அரிச்சுக்கிட்டே இருக்கும். அவன் மேல எவ்வளவு பாசமிருந்தாலும் அதை எல்லாம் கொஞ்சம் கட்டுப்படுத்தி வைக்கணும்னு மனசுக்குள்ள சொல் லிட்டே இருப்பேன். வர பொண்ணுக்கு நடுவில நான் இருக்க மாதிரி இருந்திட கூடாதேன்னு ஒரு பயம்.

கல்யாணம் என்பது வீட்டுக்கு வர மருமகளுக்கு மட்டுமில்லையே, அந்த மாமியாருக்கும் கூட பெரிய சமாச்சாரம் தானே? தேவைப்பட்டால் தனிக் குடித் தனம் அனுப்பவும் மனசை தயார் செய்து வச் சிருந்தேன். சின்னவங்க சந்தோஷம் தான் முக்கியம், என் பாசம் அது இதுன்னு சொல்லி அவங்களுக்கு நடுவுல போயிட கூடாதேன்னு ஒரு கலக்கம். வர பொண்ணும், ஷிவாவை நல்லா பார்த்துக்குறவளா இருக்கணுமேன்னு ஒரு பயம்..... ஆனால் அருந்ததி வந்து எல்லா பயத்தையும் போக்கிட்டாள். உனக்கும் அவளுக்கும் நடுவுல எனக்கு ஒரு வித்தியாசமும் தெரியலை."

தளுதளுத்த குரலில் லக்ஷ்மி பேசி முடிக்க,

"சோடா வேணுமா அம்மா? இல்லை உங்க லெக்ச் சருக்கு ஒரு பீல் வர நாலு வெங்காயத்தை கண்ணுல

வச்சு தேச்சுக்கவா?'' என தன் பாணியில் கிண்டல் செய்தாள் ராதிகா.

''ஒரு நாலு அடி முதுகுல போடுறேன் சரியா போகும்!''

''இந்தம்மாவை ஏற்கனவே கையில பிடிக்க முடியாது. அவன் ஒரு பக்கம் தாங்கோ தாங்குன்னு தாங்குறான். இந்த பக்கம் நீங்களும் இப்படி எல்லாம் செல்லம் கொஞ்சிட்டீங்களா அவ்வளவு தான்!''

''சும்மா இருங்க அண்ணி. எப்போ பாரு உங்களுக்கு கிண்டல் தான்! அத்தை எவ்வளவு பீல் செய்து சொல்றாங்க...!''

''சரிங்க செண்டிமெண்ட் க்வீன்! என்னால இதுக்கு மேல உங்க செண்டிமெண்ட் எல்லாம் தாங்க முடியாது. நீங்க இரண்டு பேருமே நடத்துங்க. வேற ரொமாண்டிக் சீன் ஏதாவது இருந்தால் என்னை கூப்பிடுங்க.''

''நீ பேசுறது எல்லாம் உன் குழந்தைக்கும் கேட்கும். நல்லதா பேசேன்!''

''இப்போ நான் என்ன தப்பா பேசிட்டேன்? என் குழந்தையும் ஒரு ரொமாண்டிக் ஹீரோவா, ஹீரோயினா வரட்டுமே!''

''அதுல உங்களுக்கு சந்தேகம் வேற இருக்கா? அண்ணா மாதிரி இருந்தாலும் உங்களை மாதிரி இருந்தாலும் கட்டாயம் ரொமாண்டிக் பாஸ் தான்.''

இவர்களின் அரட்டை தொடர்ந்து கொண்டிருக்க, அறையில் தூங்குவதாக பாவனை செய்தபடி அதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மஹேஸ்வரியின் முகத்தில் சின்னதாக யோசனை இருந்தது.

ஷிவா லேப்டாப்பில் எக்ஸல் ஷீட்டை வைத்து கணக்கு போட்டுக் கொண்டிருந்தான்.

கடிகாரம் ஒன்பது முறை அடித்து நின்றது!

அதே அறையில் மற்றொரு பக்கம் இருந்த அருந்ததியின் கண்கள் அவன் பக்கமே சென்று வந்து கொண்டிருந்தன.

கணவனுடன் மனம் விட்டுப் பேச அவளுள் ஆர்வம் பொங்கிக் கொண்டிருந்தது.

லக்ஷ்மியும் நாதனும் மருத்துவமனையில் இருந்த போது செய்ய முடியாமல் விட்டுப் போன வேலையையும் இப்போது எடுத்து செய்ய வேண்டி இருந்ததால் அவனுக்கு வேலை அதிகமாக இருந்தது.

அதை அவளிடமும் அவன் சொல்லி இருந்தான்.....

ஆனால் இரண்டு நாட்கள் ஆன பின்பும் அவன் வேலையிலேயே ஆழ்ந்திருக்க அவளுள் மீண்டும் ஏமாற்றம் எட்டிப் பார்க்கத் தொடங்கி இருந்தது...

முன்பு போல் சாதாரணமாக ஒன்றுமில்லை என்று சொல்ல அவளால் முடியவில்லை!

மனதில் இருப்பதை மறைத்து பேசுவது அவளுக்கு மிகவும் கஷ்டமாகதான் இருந்தது.

இரண்டு நாள் காத்திருப்பதே உனக்கு இப்படி இருக்கிறதா என மனம் எடுத்துக் கூற, தன்னைத் தானே தலையில் தட்டிக் கொண்டாள் அவள்.

ஆனாலும் மனதில் பொங்கிய காதலையும் அதை கணவனிடம் வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆர் வத்தையும் அவளால் கட்டுப்படுத்த இயலவில்லை!

பல முறை அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தவள், ஒரு முடிவுடன் கணவனின் அருகே சென்றாள்.

அவளைக் கவனிக்காமல் மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தவனின் அருகே நெருங்கி, மெல்ல முதுகை வருடி, இரு தோள்களையும் தன் கைகளால் அணைப்பது போல் மெல்லப் பிடித்தவள்,

''இன்னும் பிஸியா இருக்கீங்களா?'' என்றாள்.

மறுநாள் காலையில் இருக்கும் மீட்டிங்கிற்காக மனதினுள்ளும் கணக்கு போட்டுக் கொண்டு அதை குறிப்பெடுத்துக் கொண்டிருந்தவன், எதிர்பாராமல் வந்த அவளின் அணைப்பினாலும், பேச்சினாலும் மனதினுள் சேமித்து வைத்திருந்த கணக்கை மறந்து விட, எரிச்சலுடன்,

''அறிவில்லை உனக்கு? வேலை செய்துட்டு இருக்கேன்னு தெரியுதுல? அப்புறம் என்ன பிசி யான்னு ஒரு கேள்வி?'' என்று எரிந்து விழுந்தான்.

அவனிடம் இருந்து அப்படி ஒரு கோபத்தை எதிர்பார்த்திருக்காத அருந்ததி திகைத்துப் போனாள்!

தானாக கைகள் அவனிடம் இருந்து விலக, கண் கலங்க நின்றாள்.



28

''இருடா அவளைக் கூப்பிடுறேன்...''

போனின் ரீசிவரை கையால் மூடி கொண்டு,

''அருந்ததி, போன்..... ஷிவா லைன்ல இருக்கான்.....'' என கிச்சனில் இருந்த அருந்ததியை அழைத்தாள் ராதிகா.

''வேலையா இருக்கேன்க்கா..... அப்புறம் பேசுறேன்னு சொல்லுங்களேன் ப்ளீஸ்.....''

சமையலறையில் இருந்து அருந்ததியின் குரல் ஒலித்தது.

''அவ பிஸியா இருக்காளாம் அப்புறம் பேசுறேன்னு சொல்றா. நீ வேணா கொஞ்சம் நேரம் கழிச்சு போன் செய்யேன்.''

''சரி ராது.''

ரிசீவரை கீழே வைத்த ராதிகா நேராக கிச்சன் சென்றாள்.

''ஹோய் க்யூட்டி, என்ன ரொம்ப பிஸின்னு பிலிம் காட்டுற? என்ன விஷயம்???? ஊடலா?''

கடாயில் இருந்த பாகற்காயை கிண்டிக் கொண்டிருந்த அருந்ததி முகத்தை உயர்த்தி ராதிகாவைப் பார்த்தாள்.

''நீங்க கதை எழுதலாம், ரொம்ப அபாரமான கற்பனை சக்தி உங்களுக்கு'' என்றாள் சிரிப்பு பொங்க.

''இதோ பாருடா, இந்த பொண்ணு என்னை கிண்டல் செய்றா! விஷயத்தை சொல்லு, காலேல அவன் போன் செய்தப்போவும் பேசலை, இப்போவும் பேசலை?''

''வேணும்னு பேசாமல் இருக்கலைக்கா... பாருங்க அத்தைக்கு பாகற்காய் நல்லதுன்னு சித்தி சொன்னாங்க..... எண்ணெய் நிறைய விடாமல் வதக்கிட்டு இருக்கேன். விட்டுட்டு வந்தால் எல்லாம் தீஞ்சு வேஸ்டா போயிடும்.....''

''சரி காலைல என்ன விஷயம்???''

''அப்போவும் வேலையா இருந்தேன். நீங்க சொல்ற மாதிரி ஊடல் எல்லாம் இல்லை.''

''ஹூம்.....''

''என்ன அப்படி பார்க்குறீங்க?''

''எனக்கென்னவோ சந்தேகமா இருக்கு!''

''சரி உங்க சந்தோஷத்துக்காக வேணா எங்களுக்குள்ள ஊடல்னு வச்சுக்கோங்க.... அதுல என்ன இருக்கு? காசா பணமா???''

''அம்மாடியோ!!!! ஒரு வார்த்தை சொல்லாமல் கண்ணை உருட்டி உருட்டி நின்ன பொண்ணு நீ

தானா? அந்த லூசு உன்னை என்னவோ செஞ்சுட் டான்.''

அருந்ததி நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தாள்!

''அம்மா தாயே உன் எக் ஐ லுக் எனக்கு வேண் டாம்! தெரியாம லூசுன்னு சொல்லிட்டேன் தாயே! உன்னோட காதல் மன்னன் உன்னை என்னவோ செஞ்சுட்டான் போதுமா?''

''போதும் போதும்'' என்றாள் அருந்ததி இப் போதும் சிரிப்புடன்.

''சரி நீ உன் மாமியாரை ஐஸ் வைக்க பாகற்காய் செய், நான் போய் வேற ஏதாவது வேலை பார்க்கு றேன்.''

''இது என் அத்தைக்காக மட்டுமில்லை, உங்க அத்தைக்காகவும் தான். அவங்க கிட்ட நீங்க அவங் களுக்காக இதை செய்ய பிரியப்பட்டீங்க, ஆனால் இப்போ இருக்க நிலமையில கிச்சன்ல நின்னு செய்ய முடியலைன்னு பீல் செய்தீங்கன்னு பில்ட் அப் கொடுத்து வச்சிருக்கேன்..... அவங்களுக்காக, உங்க சார்பில் நான் செஞ்சேன்னு அவங்க கிட்ட சொல் லிடுவேன்.''

''நீ சகலகலா வில்லி ஆச்சே, உனக்கு சொல்லி தரணுமா என்ன, நடத்து, நடத்து!''

''எல்லாம் உங்க ஆசீர்வாதமும், ட்ரெயினிங்கும் தான் அண்ணி!''

"இப்படியே இரு...!" என்று ஆசிர்வதிப்பது போல் கைகளை உயர்த்தி வாழ்த்திய ராதிகா, அதே சிரிப் புடன் அங்கிருந்து சென்றாள்.

ராதிகா சென்று விட அருந்ததி மும்முரமாக தன் வேலையை தொடர்ந்தாள்.

ஆனால் அவளின் இதழ்களில் சின்னப் புன்னகை மின்னியது...!

திட்டுறது எல்லாம் திட்டிட்டு, காலேல இஞ்சி தின்ன..... ஹுஹும்..... கல்லு பிள்ளையார் போல கிளம்பி போயிட்டு, இப்போ போன் மேல போன் போட்டா சரியா போச்சா! போடா..... ஐயையோ போங்க..... பேச முடியாது...!

கணவனிடம் மனதார செல்லம் கொஞ்சியபடி பாகற்காயை கிண்டிக் கொண்டிருந்தாள் அவள்.

அருந்ததிக்கு உதவ வெந்தயக் கீரையை கிள்ளி எடுக்கும் வேலையை செய்து கொண்டிருந்த லக்ஷ்மியை தேடி வந்தாள் மஹேஸ்வரி. லக்ஷ்மி புன்னகைத்து வரவேற்க, அவளருகே இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்துக் கொண்டு லக்ஷ்மி செய்யும் வேலையை தானும் செய்யத் தொடங்கியவள்,

"நேத்தைக்கு நீங்க பேசினது காதில் விழுந்தது" என்றாள்.

"எதை சொல்றீங்க?"

"உங்க பையனுக்கு கல்யாணம் ஆகுறதுக்கு முன்னாடி மனசில இருந்த பயம் பத்தி சொன்னீங் களே அது....."

''ஓ!''

''இவர் இறந்தப்போ என்ன செய்றதுன்னே புரியாமல் முழிச்சிட்டு நின்னேன் நான். கௌஷிக், அபிஷேக் இரண்டு பேரும் என்னை சமாதானப்படுத்துவாங்க. நாங்க இருக்கோம்னு தைரியம் கொடுத்தாங்க. நீங்க சொன்னது போலவே அவங்க வளர வளர மனசுக்குள்ள ஒரு விதமான பயம்...!''

''அது எல்லா அம்மாக்கும் வரதுதாங்க! என்ன பொண்ணை பெத்தவங்களை பத்தி எல்லோருக்கும் புரியுது நம்ம மனசை புரிஞ்சுக்க மாட்டேங்குறாங்க.''

''அதை சொல்லுங்க! கௌஷிக் திடீர்னு ஒரு நாள் ராதிகாவை தான் கல்யாணம் செய்துப்பேன்னு என் கிட்ட வந்து சொன்னப்போ ஆடிப் போயிட்டேன். அவனுக்கு ஊரில இருந்து பொண்ணு எடுக்கணும்னு நினைச்சு வச்சிருந்தேன். சிட்டில வளர்ந்த பொண்ணு எங்கே நம்மளை மதிப்பான்னு தோணிச்சு. ஆனால் அவன் அடம் பிடிக்கவும் என்னால ஒண்ணும் செய்ய முடியலை. கல்யாணத்துக்கு அப்புறம் யார் மேல தப்போ சரியோ நான் நினைச்சது போலவே தான் இருந்தது.''

''எனக்காக நீங்க குறைச்சு எல்லாம் சொல்ல வேண்டாம். எனக்கு ராதிகாவை பத்தி தெரியும். அவ வாயை பத்தியும் தெரியும்.''

''நீங்க நல்லவங்க, என் மகள்ன்னு பார்க்காமல் எனக்காக பேசுறீங்க! ஆனால் ராதிகா மேல மட்டும் தப்புன்னு இல்லை..... மத்தபடியும் சின்னவனுக்கு

எனக்கு பிடிச்ச மாதிரியே ஊருல இருந்து தான் பொண்ணு பார்த்து கல்யாணம் செய்து வச்சேன். கௌஷியாவது இங்கே இருக்கான், அவன் ஒரே ஊருல இருந்துட்டு தனியா இருக்கான்...''

''விடுங்க பசங்க அப்படி தான்....''

''இது போல யோசிக்கிறதை தான் நான் கத்துக் காமல் விட்டுட்டேன். பசங்க நம்மளை தாங்கு தாங் குன்னு தாங்க போறாங்கன்னு கனவுல இருந்துட் டேன்.''

''இப்போவும் கூட கௌஷிக்குக்கு உங்க மேல ரொம்ப பாசம் உண்டு. நீங்க ஆசைபடுற மாதிரியே தாங்குவார். ராதிகாவும் இப்போ முன்ன மாதிரி இல்லை, மாறி போயிருக்கா. அவங்கவங்களுக்கு குழந்தைன்னு வரும் போது தானா எல்லாம் புரியும்.''

''இல்லைங்க, அவளை நான் குறை சொல்ல முடியாது. தெரியாத்தனமா அவ வேணா ஒன்னு இரண்டு வார்த்தை பேசி இருக்கலாம். ஆனால் நான் அவளை ரொம்ப நெறைய பேசிட்டேன்.''

''அதெல்லாம் நடந்து முடிஞ்சது விடுங்க. சின்ன வங்களுக்காக நாம யோசிக்க நினைக்கும் போது அவங்க இதெல்லாம் தாங்கலாம் தப்பில்லை... ஆனால் ஒன்னு சொல்லியே ஆகணும், உங்களை மாதிரி ஒருத்தர் தான் ராதுக்கும் சரியா வரும். நான் சொன் னால் காச் மூச்சுன்னு கத்துவா, நீங்க சொல்றதை அமைதியா கேட்கிறாளே, அதுவே ரொம்ப பெருசு.''

''உங்களை பார்த்தால் எனக்கு ஆச்சர்யமா இருக்குங்க! எப்படி உங்களால இப்படி பொதுப்படையா பேச முடியுது? எனக்கெல்லாம் என்ன தான் இருந்தாலும் என் பசங்க தப்பே செய்தாலும் கூட அவங்களை விட்டுக் கொடுக்க முடியுறதில்லை.''

''எங்களுக்கு ராதிகா பிறந்தப்போ, எனக்கு அவ ரொம்ப செல்லம். ஆனால் இவர் எப்போதும் சொல்வார், பெத்தவங்க பசங்களுக்கு நல்ல வழி காமிக்கணும். மத்தபடி அவங்களை அடக்கி வைக்குற மாதிரி இருக்க கூடாது. ப்ரீயா விடணும்னு சொல்வார். அவர் சொல்லி சொல்லி நான் கேட்டு கேட்டு மனசில பதிஞ்சு போச்சு....''

''சரியா தான் அவர் சொல்லி இருக்கார்.....''

''எனக்கு அவர் இருந்தார் அதனால பரவாயில்லை, உங்களுக்கு பசங்க தானே துணைக்கு இருந்தாங்க, அவங்ககிட்ட எதிர்பார்க்காமல் வேற யார் கிட்ட எதிர்பார்ப்பீங்க? என்ன இந்த காலத்து பசங்களுக்கு பொறுமை, பெரியவங்க அருமை எல்லாம் முழுசா தெரிய மாட்டேங்குது..... நாமாவது அட்ஜஸ்ட் செய்துட்டு, இல்லை கண்டு காணாமல் விட்டுற வேண்டியது தான்....''

''நமக்கு கல்யாணம் ஆன நேரத்துல புகுந்த வீட்டுக்காக அட்ஜஸ்ட் செய்ய சொன்னாங்க..... நமக்கு வயசாகும் போது காலம் மாறி போய் மருமகளுக்காக அட்ஜஸ்ட் செய்ய சொல்றாங்க....''

''சரியா சொன்னீங்க, நாம தப்பான டைம்ல பிறந்துட்டோம்.''

லக்ஷ்மி சிரிப்புடன் சொல்ல, மகேஸ்வரியும் தன் கடுகடு இமேஜை விட்டு விட்டுச் சிரித்தாள்.

''அக்கா.....''

ராதிகாவின் அறையினுள் சென்ற அருந்ததி, அவள் போனில் பேசிக் கொண்டிருப்பதை பார்த்து தயக்கத்துடன் நின்றாள்.

''க்யூட்டி வா வா.....'' என்று அவளிடம் சொன்ன ராதிகா, போனில்,

''அருந்ததி வந்திருக்கா! அவக் கிட்ட பேசுறீயா?'' எனக் கேட்டாள்.

.....

''சரி கொடுக்குறேன். டேக் கேர். டைம் கிடைக்கும் போது பேசு, நானும் கால் செய்றேன்.''

போனை அருந்ததியிடம் நீட்டிய ராதிகா,

''இந்தா கீதா பேசுறா, உன்கிட்டேயும் பேசுறா ளாம்.....'' என்றாள்.

''டாக்டரா?''

கேட்டபடி போனை கையில் வாங்கினாள் அருந்ததி.

''ஆமாம், மேடம் கன்சீவ் ஆகி இருக்காங்களாம். நீயும் விஷ் செய்..... அப்புறம் நான் கொஞ்ச நேரம் தூங்க போறேன். பேசிட்டு போனை நீயே வச்சுக்கோ, நான் தூங்கி எழுந்து வாங்கிக்குறேன்.''

"என்னது சாப்பிட்ட உடனே தூங்க போறீங்களா? இப்படியே இருந்தா குழந்தை பிறக்கும் போது நீங்க பூசணிக்காய் போல இருக்க போறீங்க, வேற ஏதாவது செய்ங்க."

"வாயாடி! வேற என்ன செய்ய? போர் அடிக்குது! டிவில எனக்கு பிடிச்ச மாதிரி எதுவும் இல்லை...."

"இதுக்கு ஏதாவது ஒரு வழி கண்டுபிடிப்போம், இன்னைக்கு ஒரு நாள் தூங்குங்க."

"பர்மிஷன் கொடுத்ததுக்கு ரொம்ப தேங்க்ஸ்ங்க அருந்ததி மேடம்! எல்லாம் உன் டைம் ராது!!!!"

"புலம்பாம தூங்குங்க! நான் டாக்டர் கிட்ட பேசிட்டு போனை உங்க ரூமில வந்து வச்சிடுறேன்."

"இல்லை பரவாயில்லை கையில வச்சுக்கோ....."

"இல்லை அண்ணி, திடீர்னு அண்ணா போன் செய்தார்ன்னு வைங்க, நீங்க எடுக்காமல் நான் எடுத்தால் அவருக்கு பி.பி அநியாயத்திற்கு அதிக மாகிடும். எதுக்கு தேவை இல்லாத விளையாட்டு."

"நீ சரியே இல்லை, பேசிட்டு வா உன்னை கவனிச் சுக்குறேன்."

"கவனிங்க, கவனிங்க, இப்போ படுத்து தூங் குங்க....."

ராதிகாவின் அறையை விட்டு வெளியே வந்த அருந்ததி, தங்கள் அறைக்கு செல்ல நடந்தபடி, போனில்,

"ஹலோ டாக்டர்!" என்றாள்.

"நான் ஒருத் தி லைன்ல இருக்கேன்னு ஒரு வழியா ஞாபகம் வந்ததே சந்தோஷம்....."

"ஞாபகம் இல்லாம என்ன டாக்டர்? கங்கிராட்ஸ்!"

"தேங்க்ஸ் அருந்ததி! என்ன என் பேஷண்ட் இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்காங்க போல ருக்கு?"

"ஆமாம், ஆமாம்! இனிமேல் என்னை உங்க பேஷண்ட்ன்னு கூப்பிடாதீங்க! என் பிரச்சனை, குழப்பம் எல்லாம் சரியா போச்சு. அதனால அருந்த தின்னு கூப்பிடுங்க!"

"அடடா! இப்படி என்னோட பேஷண்ட்ஸ் எல்லோரும் செல்ப் டிக்லரேஷன் செய்ய ஆரம்பிச்சா நான் என் கிளினிக்கை இழுத்து மூட வேண்டியது தான்!"

"ஹா ஹா ஹா! கவலைப்படாதீங்க டாக்டர் அப் படி எல்லாம் நடக்காது! நம்ம ஊர்ல தலையை பிச் சுட்டு யோசிக்குறவங்க நிறைய பேர் இருக்காங்க."

"அது சரிங்க அருந்ததி!!!! அப்புறம் என்ன செல்ப் டிக்லரேஷன் எல்லாம்? எப்படி வந்தது இந்த மாற்றம்????"

"எப்படி வந்துச்சு???? தானா வந்துச்சு டாக்டர்....."

"ஹேய் என்ன நீ போன தடவை பேசினப்போ ஷேர் செய்தது போல ரொமான்டிக்கா,

இன்ட்ரஸ்டிங்கா சொல்வேன்னு பார்த்தால் எதுவும் சொல்ல மாட்டேங்குற?''

''ஹோ ஹோ! ரொமான்டிக்கா கேட்கணும்னா, போனை கட் செய்து வச்சுட்டு உங்க போன்ல சூர்யா சார் நம்பர் இருக்கும் கூப்பிட்டு பேசுங்க.''

''சரிங்க மேடம் நீங்க சொன்னதையே செய் றேன்.....''

''உடம்பை பார்த்துக்கோங்க! ரெஸ்ட் எடுங்க...!''

''சரி...! ஆர் யூ ஷுயர் யூ ஆர் ஆல் ரைட்????''

''சந்தேகமே வேண்டாம் டாக்டர்! சில சமயம் மருந்து மாத்திரை டாக்டருங்களை விட வாழ்க்கையில நடக்கும் சம்பவங்கள், அதிர்ச்சிகள் மனசை சரி செய்ய உதவுது.''

''இல்லைன்னு சொல்லலை, லாஸ்ட் டைம் ஷிவா வோட காதல் மழை பத்தி நீ பேசினப்போதே நான் எதிர்பார்த்த மாற்றம் தான். பட் இருந்தாலும் எப்போ என்ன சந்தேகம் இல்லை குழப்பம் இருந்தாலும் எனக்கு போன் செய்..... எப்படி பேசுறதுன்னு யோசிக் காதே!''

''சரி டாக்டர்! ஆனால் அப்படி பேச வேண்டி வராதுன்னு நினைக்கிறேன். உங்க உதவியை நான் என்னைக்கும் மறக்க மாட்டேன்.....''

''மறக்காதே, நல்லா ஞாபகம் வச்சுக்கோ!!!! சீக்கிரமா குட் நியூஸ் சொல்லு அப்போ தான் நீ சொன்னதை நான் நம்புவேன்.....''

''சொல்றேன் டாக்டர்..... நீங்க உடம்பை பார்த் துக்கோங்க..... வைக்குறேன்..... பை.....''

வெட்கமும், சந்தோஷமும் கலந்து பொங்க முகத்தில் மலர்ச்சியுடன் போனை கட் செய்து வைத்த அருந்ததி, அதை அப்படியே ராதிகாவிடம் கொடுத்து விடலாம் என்ற எண்ணத்துடன் அறையின் வாயிலை நோக்கி செல்லத் திரும்பினாள்!

அங்கே நின்றிருந்த ஷிவாவின் மேல் மோதிக் கொண்டாள்!

எதிர்பாராமல் அவனை அங்கே இந்த நேரத்தில் பார்த்த திகைப்பில் அவள் நிற்க, அவளின் முகத்தில் வந்து போன உணர்ச்சிகளை மனதினுள் ரசித்த ஷிவா, குரலில் பொய் கோபத்தை காட்டி,

''நான் போன் செய்தால் எடுத்து பேச உனக்கு டைமில்லை!!! ரொம்பஆஆஆஆஆஅ பிஸி! இங்கே வேற யார் கூடவோ ஈன்னு இளிச்சு கதை பேச மட்டும் உனக்கு டைமிருக்கு????'' என்றான்.

அவனின் கோபம் பொய்யானது என்பது அவளுக்கு தெரிந்தது..... எனவே கலங்காமல்,

''அது யாரோ இல்லை, டாக்டர் கீதா..... அவங்க கன்சீவ் ஆகி இருக்காங்கன்னு அண்ணி சொன் னாங்க, அதனால நான் விஷ் செய்தேன்'' என்று அவனுக்கு பதில் சொன்னாள் அருந்ததி.

''அதெல்லாம் சொல்ல முடியுது????''

"ஆமாம் இரண்டு மணிக்கு வீட்டுல வந்து என்ன செய்றீங்க???? இன்னைக்கு ஆபீஸ் ஹாப் டேவா?"

"ஆமாம் நான் எல்.கே.ஜி குழந்தை எனக்கு ஹாப் டே லீவ் தராங்க..... அம்மணி கோபமா இருக்கீங்களே சமாதானப்படுத்தலாம்னு வந்தேன்."

"கோபமா? எனக்கென்ன கோபம்?"

இரண்டடி தள்ளி நின்று பேசிக் கொண்டிருந் தவளின் அருகே நெருங்கி அவளின் முகத்தை காதலுடன் பார்த்தான் ஷிவா!

"என் மேல கோபமில்லையா???"

"ஹூஹூம்....."

முகத்தில் சிரிப்புடன், அழகாக அவள் தலை யசைக்க, அவன் மயக்கத்துடன் பார்த்திருந்தான்.....

அவள் தலை அசைப்பதை நிறுத்திய பின்பும் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த அந்த அழகிய ஜிமிக்கி களும், காற்றில் மெல்ல அசைந்து கொண்டிருந்த அவளின் முடி கற்றைகளும் பார்க்க பார்க்க தெவிட்ட வில்லை அவனுக்கு.....

அவனின் பார்வை அவளின் உணர்வுகளுடன் விளையாடின.....

மெல்ல முகம் சிவக்க, மனதைக் கட்டுப்படுத்த முயன்றாள் அவள்!

"என்ன பார்க்குறீங்க????"

''உன் கிட்ட ஏதோ மாற்றம் தெரியுது????? என்ன மாற்றம்?????''

''ஹூம்!!!???? நான் இரண்டடி உயரமாகிட் டேன், தெரியலையா???''

கேலியாக கேட்டுவிட்டு அவள் சிரிக்க, அவன் யோசிக்காமல் சட்டென குனிந்து அவளின் அழகிய இதழ்களில் முத்தமிட்டான்!

ஒரே வினாடி தான்...!

உடனே நிமிர்ந்து அவளின் விழிகளில் அவனின் கண்களை கலக்க விட்டான்!

அவள் முகத்தில் திகைப்பு மட்டும் இருந்தது!

வலது கரத்தால் அவளின் கன்னத்தில் கோலமிட் டவன்,

''ஒரே டானிக்கை எவ்வளவு நாள் எடுத்துக்குறது, போர் அடிக்குது..... வெரைட்டியா இருந்தா தானே நல்லா இருக்கும்! இதெல்லாமும் என் சத்தியத் துக்குள்ள வராது தெரிஞ்சுக்கோ.....'' என்றான் கண் களைச் சிமிட்டி!

அருந்ததியால் ஷிவாவிடம் இருந்து கண்களைத் திருப்ப முடியவில்லை!

அவனின் தோளில் கைகளை மாலையாக்கி அவனை அப்படியே அணைத்துக் கொள்ள வேண் டும் என்று எழுந்த ஆவலை, ஹூஹூம், பேராவலை அடக்க அவள் பெரிதும் போராட வேண்டி இருந்தது!!!!

அவளின் மனநிலை மாற்றம் பற்றித் தெரியாததால், அவளின் முக மாறுதலை வெட்கத்தின் அடையாள மாக எடுத்துக் கொண்டான் ஷிவா.

''ஏதோ அது வரைக்கும் இன்னைக்கு வெட்கம் மட்டும் தான்.....! அந்த பயப்படுற லுக்கை கொடுத்து என்னை கலங்கடிக்காம விட்டீயே சந்தோஷம்..... ஆனால் என் செல்ல ரதி நீ ரொம்ப அழகுடா!!!! வா உட்கார்ந்து பேசுவோம்.... உன் கிட்ட பேச தான் அவசரமா வந்தேன்.''

அருந்ததியின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றவன், அவளை ஷோபாவில் அமர வைத்து விட்டு, உரசியபடி அவளின் அருகே அமர்ந்தான்.

அவனுக்கு போட்டியாக அவளும் அவனை உரசியபடி தான் அமர்ந்திருந்தாள்!

''சாரிம்மா, நேத்து உன்கிட்ட ரொம்ப கத்திட்டேன். ஆபிஸ்ல கொஞ்சம் டென்ஷன்.''

''ம்ம்ம்.....''

''நான் உன் கிட்ட சொன்னேன் ஞாபகம் இருக்கா அந்த கேம்பைன், அது நான் நினைச்சதை விட ரொம்ப க்ரிட்டிகலா இருக்கு..... எங்க கம்பெனி யில லாபப்படி பார்த்தால் சவுத் இந்தியால தமிழ்நாடு ரீஜன் தான் கடைசியில இருக்கு..... பெங்களூரு முதல்ல இருக்கு.''

''ஓ! பேசாமல் அப்போ திரும்ப பெங்களூர்க்கே ட்ரான்ஸ்பர் வாங்கிக்கோங்க.''

''இல்லை ரதி, அதை விட இங்கே லாபத்தை அதிகரிச்சு காட்டினால் கம்பெனில என்னோட விசிபிலிட்டி, வளர்ச்சி எல்லாம் நல்லா இருக்கும். அதுக்கு கிடைச்சிருக்க ஒரு ஜாக்பாட் மாதிரி தான் இந்த கேம்பைன். இந்த ப்ராடக்ட் இப்போ தமிழ் நாட்டுல மட்டுமே மார்க்கெட் செய்றாங்க, இதை நல்ல படியா செய்து சக்சஸ் ஆனால் கோடிக் கணக்கில் லாபம் வரும். இந்த ரீஜனும் கடைசியில இருந்து நேரா முதல் இடத்துக்கு போக கூட வாய்ப்பு இருக்கு.''

''ஓஹோ!''

''இவ்வளவு முக்கியமானது என்பதால ஜி.எம் தொடங்கி எல்லோரும் ரொம்ப ஆர்வமா இருக் காங்க..... நான் நடுவில அப்பா அம்மா ஆக்சி டெண்ட்ல கொஞ்சம் டைவர்ட் ஆனதில் வேலை பெண்டிங் ஆகிடுச்சு.... வேற யாரையாவது போட லாமான்னு கூட யோசிக்க ஆரம்பிச்சிட்டாங்க.''

''அச்சச்சோ!''

''நான் திரும்ப எல்லோரையும் இம்ப்ரஸ் செய்து எல்லாம் நல்லபடியா நேரத்துக்கு நடக்கும்ன்னு காட்ட வேண்டி இருந்தது. இன்னைக்கு காலையில ரொம்ப முக்கியமான மீட்டிங். சவுத் ரீஜன் ஜி.எம் மட்டுமில்லாமல், கம்பெனியோட இந்தியா லெவல் ஹெட் கூட வந்திருந்தார். நான் ப்ரெசென்ட் செய்து என்னோட பிளானை விவரிச்சேன், எல்லோருக்கும் பிடிச்சிருந்தது.''

"வாவ்! சூப்பருங்க!"

"அந்த சூப்பர் வேலையை நான் செய்துட்டு இருந்தப்போ தானே வந்த..... உன் கிட்ட எரிஞ்சு விழுந்தேன் சாரி டா ரதி!"

"ப்ச்! பரவாயில்லைங்க அதனால் என்ன? இனிமேல் டென்ஷன் இருக்காதுல?"

வெகு ஆர்வத்துடன் கேட்டாள் அவள்!

"இல்லாமல் என்ன? இப்போ வெறும் ப்ளான் சாக் அவுட் தானே செய்தேன். இனிமேல் எல்லாத்தையும் நடைமுறை படுத்தணும்! எல்லாத்தையும் ரெடி செய்ய ரெண்டு மூணு மாசம் ஆகும், அப்புறம் கேம்பைன் சரியா போகுதா, எதிர்பார்த்த லாபம் வருதான்னு எல்லாம் பார்க்க ஒரு ரெண்டு மூணு மாசம், எப்படியும் ஆறு மாசம் கத்தி மேல நடக்குற மாதிரி தான்!!!!"

"ஓ!"

அருந்ததி மனதில் ஏமாற்றம் தோன்றியது.

"நான் இந்த டைம்ல பைத்தியம் போல வேலை செய்வேன், கோவிச்சுக்காமல் கொஞ்சம் அட்ஜஸ்ட் செய்துப்பீயா ரதி? இது மட்டும் நல்லபடியா போச் சுன்னா எனக்கு ப்ரோமோஷன் மட்டுமில்லை கம் பெனி அளவில் ரொம்ப நல்ல பேரும் கூட கிடைக்கும். ஒரு ஆறு மாசம் நேத்து போல தான் இருப்பேன்... சரியாடா?"

"ம்ம்ம்....."

வேறு என்ன சொல்வது என்று அவளுக்குப் புரிய வில்லை!

"ஹேய் என்ன உர்ர்ருன்னு முகத்தை வச்சிருக்க, நேத்து போல எரிஞ்சு எல்லாம் விழ மாட்டேன். ஆனால் என் வேலையை பத்தி நீ தெரிஞ்சுக்கணும்னு தான் சொல்றேன்."

"புரியுதுங்க...!"

"யாருக்கு தெரியும் அதுக்குள்ளே நீ கூட மாறி போயிடலாம்..... இந்த டானிக் எல்லாம் தாண்டி பெரியே ட்ரீட்டே தர லெவலுக்கு வந்திரலாம்....."

நீ, இல்லை இல்லை, நீங்க ரொம்பவே புத்திசாலி தான்!!!!

மனதினுள் நினைத்துக் கொண்டவள் அமைதியாக இருந்தாள்.

"எனக்கு ஒரு சின்ன சந்தேகம்!"

"என்ன?"

"நேத்து என் கிட்ட வந்து பேசினீயே, அப்போ என்னை கட்டி பிடிக்குற மாதிரி..... ஹக் செய்தீயா என்ன?"

அருந்ததி தலையை குனிந்துக் கொண்டு சேலை யின் அழகை ரசித்துக் கொண்டிருந்தாள்!

"சரி சரி! தெரியாமல் கேட்டுட்டேன்! விட்ரு! நேத்து நடந்ததுக்கு என் கிட்ட கோபப்படாதே

ப்ளீஸ்.... இந்த வேலை மட்டும் முடியட்டும். அப்புறம் எனக்கு உன்கிட்ட செல்லம் கொஞ்சுற வேலை மட்டும் தான்....''

அவளின் கன்னத்தை செல்லமாக கிள்ளி சொன்னான் அவன்!

ஷிவா கிளம்பிச் சென்ற பின்பும் அவளின் மனதினுள் ஏமாற்றத்தின் ரேகை சிறிதும் குறையவில்லை!

பொல்லாத வேலை!!!!

மனதில் வீசிய புயலுடன் அறையினுள் வெகு நேரம் நடந்து கொண்டிருந்தாள் அவள்...!

அவளிடம் இருக்கும் மாற்றம் ஏன் அவனுக்கு தெரியவில்லை??? சரியான மக்....

ப்ச்...! இல்லை இல்லை அவன் புத்திசாலி தான்!

அவனிடம் நேராகச் சொல்லி இருக்க வேண்டுமோ?

ப்ச்..... இப்போது அவனுக்கு தெரிந்தாலும் அவனின் வேலைக்கு நடுவே தொல்லை தானே?

பொல்லாத வேலை!!!!

கோபமாக வந்தது அருந்ததிக்கு!

ஆனாலும் உனக்கு ரொம்ப தான் அருந்ததி! ஆசை ஆசையாய் உன்னை கல்யாணம் செய்து கொண்டு, உன் மேல அத்தனை காதலோடு இருந்த ஷிவாவிடம் பயமா இருக்கு அது இதுன்னு சொல்லி பயமுறுத்தின

போதும் அவன் எப்படி பொறுமையாக உனக்கு பிடித்த மாதிரி நடந்துக் கொண்டான்?

எத்தனை நாட்கள், மாதங்கள் உனக்காக காத்திருக் கிறான்?

உனக்கு இப்போது கோபம் பொங்குதாக்கும்!!!

மனசாட்சி இடித்துக் கூற, மனதை நிலைப் படுத்த முயன்றாள்!

ஆறு மாசம் தானே! அவன் அவளுக்காக காத் திருக்கவில்லையா? ஆறு நாட்கள் போல அது ஓடிப் போகும்.....

ஆனால் இந்த மனதை எப்படி அடக்குவது????

நகத்தை கடித்தபடி யோசித்தவளுக்கு ஒரு ஐடியா தோன்றியது!

''இப்படி இல்லை அத்தை! கொஞ்சம் ஸ்லைட்டா திருப்பி ஊசியை பிடிங்க! கரக்ட்...''

''க்யூட்டி, போதும் எப்போவுமே அவங்களுக்கு மட்டும் சொல்லி தந்தா எப்படி, எனக்கு டவுட் க்ளீயர் செய் வா... இந்த ஸ்வெட்டர் எங்கேயோ தப்பா இருக்கு.....''

''அது தப்பா இல்லை, நீ பிடிச்சிருக்குறது தான் தப்பா இருக்கு, ஒழுங்கா பிடிச்சு செய்.....''

''மெதுவா சொல்லுங்க பெரியம்மா, அக்காவோட குழந்தை அம்மாவை யாரோ திட்றாங்கன்னு நினைக்க போகுது...''

"சரி நான் மெதுவா சொல்றேன், நீ எங்களை விட்டுட்டு, உன் கிட்ட கத்துக்க வந்திருக்கவங்களுக்கும் சொல்லிக் கொடு...."

"சரி பெரியம்மா" என்று மகேஸ்வரியிடம் சொன்னவள், ராதிகாவின் அருகே சென்று ரகசிய குரலில்,

"என்ன அண்ணி, உங்க தூங்குற டைம் போயிடுச்சேன்னு கஷ்டமா இருக்கா? தூங்காமல் ஒழுங்கா செய்ங்க பார்ப்போம்...." என்றாள்.

ராதிகா பொய்யாக முறைக்க சிரித்து விட்டு,

"என்ன சந்திரிகா, கரக்ட்டா அளவை வரைஞ்சீங்களா?" என்று பேப்பரில் அளவை வரைந்துக் கொண்டிருந்தவளிடம் கேட்ட அருந்ததி, அவள் புதிதாக தொடங்கி இருந்த தையல் பயிற்சி கிளாஸ்க்கு வந்திருந்தவர்களை கவனிக்கத் தொடங்கினாள்!

அன்று ராதிகாவிற்கு வளைகாப்பு!

லக்ஷ்மியும், மகேஸ்வரியுமாக ஏழாம் மாதம் முதலே அவளின் கைகளில் வளையல்களால் நிரப்பி இருந்தனர்....

அம்மா வீட்டிலேயே இருப்பதால் ஒன்பதாம் மாதம் சீமந்தம் செய்வது என்று முடிவு செய்து விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்!

கௌஷிக் ராதிகாவிற்கு சாமரம் வீசாத குறையாக நிழலாக கூடவே இருந்து கவனித்துக் கொள்ள, மற்றவர்கள் வந்திருந்த உறவினர்களை உபசரித்துக் கொண்டிருந்தனர்.

வளைகாப்பு விழா தொடங்கி ஒவ்வொருவராக வளையல்கள் போட்டு விட்டு வாழ்த்த, மஹேஸ்வரி ஒதுங்கி நின்றிருந்தாள்.

''என்ன நீங்க தள்ளி போய் நிற்குறீங்க, வாங்க உங்க மருமகளுக்கு வளையல் போட்டு விடுங்க.....'' என்று அவளை அழைத்தாள் லக்ஷ்மி.

''சுப காரியம் நடக்குது.... நான் ஏன் இப்போ..... அப்புறமா.....''

''மேலே பேசாதீங்க வாங்க! நீங்க தான் முதல் ஆளா அவளுக்கு போட்டு விட்டு இருக்கணும். வாங்க....''

மகேஸ்வரியின் கையை பற்றி ராதிகாவின் அருகே அழைத்துச் சென்றாள் லக்ஷ்மி.

ராதிகாவிற்கு ஆலம் சுற்றி குங்குமம், சந்தனம் வைத்த மஹேஸ்வரி, தட்டில் இருந்த கண்ணாடி வளையலை எடுக்காமல், தள்ளி நின்றிருந்த இளைய மகன் அபிஷேக்கிடம் இருந்து சின்னப் பெட்டியை வாங்கி அதில் இருந்த நான்கு தங்க வளையல்களை எடுத்தாள்!

ராதிகாவின் கண்களும், மகேஸ்வரியின் கண்களும் சந்தித்துக் கொண்டன!!!!!

''இதை போட்டுக்கோ ராதிகா! கையை காட்டு, நானே மெதுவா போட்டு விடுறேன்....''

''இல்லை அத்தை இதெல்லாம் எதுக்கு!''

"முன்னாடியே உனக்கு தந்திருக்க வேண்டியது! ஊருல இருந்தது! அபி கிட்ட எடுத்து வர சொன்னேன்....."

பேசியபடி ராதிகாவின் கையை பிடித்து வளையல்களை போட்டு விட்டாள் மஹேஸ்வரி!

பின் அவளின் இரண்டு கைகளை தூக்கி பிடித்து அழகு பார்த்தவள்,

"உனக்காகவே செஞ்சது போல அழகா இருக்கு" என்றாள் சந்தோஷமாக!

மஹேஸ்வரி தள்ளி சென்று வேறு ஒரு பெண்மணி வர, அருந்ததி, ராதிகாவின் காதில்,

"இது தான் அந்த நகையா அண்ணி??? இன்னும் அந்த விஷயம் என் கிட்ட நீங்க சொல்லலை" என்றாள்.

"சொல்றேன், சொல்றேன். அப்புறமா ஞபாகப் படுத்து" என்ற ராதிகா, அவளுக்கு ஆலம் சுற்றிக் கொண்டிருந்தவளைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"அருந்ததி பால் கோவா ரொம்ப நல்லா இருந்தது. நீயே செய்ததுன்னு சொன்னால் யாரும் நம்பவே இல்லை.... நீ டேஸ்ட்டே செய்து பார்க்கலையே இந்தா சாப்பிடு....."

கிண்ணத்தில் பால்கோவாவை வைத்து ஸ்பூனுடன் கொடுத்தாள் லக்ஷ்மி.

லக்ஷ்மி கிச்சன் சென்றுவிட, காலையில் இருந்து சுற்றி திரிந்து வேலை செய்த அலுப்பு போக டைனிங் டேபிள் நாற்காலியில் அமர்ந்து அந்த பால்கோவாவை ரசித்து உண்ணத் தொடங்கினாள் அருந்ததி.

"ஹேய் என்ன நீ அவங்களுக்கு தராமல் தனியா சாப்பிடுற?"

அருந்ததி மறுபக்கம் திரும்பிய வினாடி, அவள் முன் இருந்த கிண்ணத்தை எடுத்துக் கொண்டான் ஷிவா. அவள் திகைத்துப் பார்க்க, அந்தக் கிண்ணத்தில் இருந்த ஸ்பூனை வாயில் வைத்து விட்டு,

"வெரி ஸ்வீட்" என்றான் கண்கள் மின்ன!

"பால்கோவா வேணும்னு கேட்டால் தர போறேன், அதுக்கு ஏன் இந்த பொய் எல்லாம்!"

"பொய் இல்லை! இந்த ஸ்பூன் ரொம்ப ஸ்வீட்டா இருக்கு..... இந்த கிண்ணத்துல இருக்க பால் கோவா நான் காலையிலே சாப்பிட்டதை விட இன்னும் அதிக ஸ்வீட்டா இருக்கு....."

அவனின் கண்கள் அசையாமல் அவளின் இதழ்களிலேயே இருந்தது!

அவனின் பார்வை..... அதன் தீவிரம் என்னவோ செய்த போதும், சமாளித்தபடி,

"ப்ச்... போதும் உங்க கேலி, என்கிட்ட கொடுங்க....." என்றாள் அருந்ததி.

"இரு இரு நான் பேசி முடிக்கலையே...! அதெல்லாம் விட ஒரு ஸ்வீட்டான விஷயம் இருக்கே!!!"

"என்ன உங்க கம்பெனி பொருள் எல்லாம் ஒரு மாசத்திலேயே வித்து முடிஞ்சிடுச்சா!"

அவள் அருகே வந்து அவளின் கன்னத்தை செல்லமாக கிள்ளியவன்,

"நீ ஏன் இப்படி அலுத்துக்குறேன்னு எனக்கு புரியுது ரதி! நான் சரியான மக்கா இருந்துட்டேன்....."

"ஹ்ரக்கும்."

"சூர்யாவும், கீதாவும் பேசினாங்க..... கீதா என்னவோ சொன்னாங்க....."

அதுவரை டைனிங் டேபிளில் இருந்த ஒன்றிரண்டு நீர்த்துளிகளில் கோலமிட்டுக் கொண்டிருந்த அருந்ததி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்!

"அம்மாடியோ!!!! என்ன ஒரு பார்வை, யாருக்கு வேணும் இந்த பால்கோவா எல்லாம்! உன்னை அப்படியே கடிச்சு சாப்பிட்டுறவா????"

29



அருந்ததி பதில் சொல்லாமல் கணவனை ஒரு பார்வை பார்த்தாள்.

''என்ன அப்படியே கண்ணுலேயே என்னை விழுங்கிடலாம்னு ப்ளானா??? உன் கண்ணுல இருக்க அந்த ப்ளாக் அப்படியே கிரேப்ஸ் மாதிரியே இருக்கு.....''

அருந்ததி ஏதோ சொல்ல வாயைத் திறந்த நேரம் லக்ஷ்மியின் குரல் கேட்டது.

''நீ என்னடா செய்ற அந்த பால்கோவா கிண்ணம் வச்சுட்டு? பாவம்டா அருந்ததி, வேலை மெனக் கெட்டு செஞ்சுட்டு ஒரு வாய் கூட சாப்பிடலை. உனக்கு வேணும்னு கேட்டிருந்தா வேற எடுத்து கொடுத்திருப்பேனே!''

''அம்மாடியோ, எனக்கு வேண்டாப்பா இந்த ஸ்வீட். அப்புறம் நாளைக்கு வயித்து வலி வரும். இந்தாம்மா அருன்...ததி நீயே சாப்பிடு.....''

டைனிங் டேபிளின் மீது அந்தக் கிண்ணத்தை வைத்தவன், அருந்ததியைப் பார்த்து செல்லமாக கண்ணால் சமிஞ்ஞை செய்து விட்டுச் சென்றான்.

''நீ சாப்பிடு அருந்ததி. சாப்பிட்டுட்டு போய் மத்தவங்களை போல கொஞ்சம் நேரம் ரெஸ்ட் எடு.....''

''எனக்கு ரெஸ்ட் எல்லாம் வேண்டாம் அத்தை அப்படி என்ன பெரிய வேலை இருந்தது? நீங்க கொஞ்ச நேரம் உட்காருங்க. நின்னுட்டே இருந்தீங்க காலையில இருந்து.....''

லக்ஷ்மி அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

''ஆமாம், காலு வலிக்க தான் செய்யுது..... ஆனால் இந்த பங்ஷன் முடிஞ்சதுல மனசுக்கு கொஞ்சம் திருப்தியா இருக்கு! இனி அவளுக்கு டெலிவரி நல்லபடியா முடிஞ்சா போதும்.....''

''அதெல்லாம் நல்லபடியா நடக்கும் அத்தை.''

''ரதி.....!''

ஷிவாவின் குரல் எங்கிருந்தோ சத்தமாக ஒலித்தது.

''இந்த பையன் ஏன் இப்படி கத்துறான்? என்னன்னு போய் கேட்டுட்டு வா போ.....''

அருந்ததி தயங்கினாள்!

''அது.....''

''ஏம்மா, என்ன ஆச்சு?''

''நீங்க தனியா இருக்கீங்களே அத்தை!''

மருமகளின் கன்னத்தை செல்லமாக வருடிய லக்ஷ்மி,

''எனக்கு மதியம் தூங்கி பழக்கமில்லை, நான் டிவி பார்க்க போறேன். நீ போய் அவன் கிட்ட என்னன்னு கேளு....''

''சரி அத்தை.....''

அவளுக்கு என்னவென்று அவனிடம் கேட்டு தெரிந்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லையே...!

நெஞ்சம் படபடக்க அவர்களின் அறையை நோக்கிச் சென்றாள்.....

ஷிவா அறையின் வாயிலிலேயே நின்றிருந்தான்.

''நான் கூப்பிட்டு எவ்வளவு நேரமாச்சு?''

''நான் டைம் பார்க்கலையே.....'' குறும்புடன் பதில் சொன்னாள் அவள்.

''உன்னை.....!''

அவளை தன்னுடன் இழுத்து அணைத்தவன், அப்படியே உள்ளே சென்று கதவைச் சாத்தினான்.

''இங்கே பாருங்க, அத்தை பாவம் தனியா இருக்காங்க, நான் போறேன்.....''

''அப்போ நான் தனியா இருந்தா பரவாயில்லையா?''

''ஹ்ரக்கும்.....''

அவள் போலியாக அலுத்துக் கொண்டு அவனை மயக்கும் அதே பார்வையை பார்த்தாள்!

''இப்படி பார்த்து பார்த்து என்னை கொல்லுறீயே, உனக்கே சரியா இருக்கா?''

''வேற ஏதாவது செய்துட்டா மட்டும்.....''

அவன் தன் கையில் இருந்தவளையே ஒரு சில வினாடிகள் அளவிடுவது போல் பார்த்திருந்தான்!

''ஹேய் அப்போ அன்னைக்கு நீ என்னை கட்டி பிடிச்சது நிஜமா?''

''இல்லை கற்பனை!''

அவனின் அணைப்பு இறுகிப் போனது!

அவளின் எலும்புகள் உடைந்து போகப் போகிறதோ என்று ஒரு கணம் அவளுக்குத் தோன்றியது..... ஆனாலும் பதறாமல், விலகாமல் அவனின் அணைப் பில் தன்னை, மறந்து நின்றாள் அவள்!

''ரதி! நீ என் ரதி!''

காதோரத்தில் ரகசியம் சொல்வது போல் அவன் உதிர்த்த வார்த்தைகள் அவளை ஏதேதோ செய் தது.....

''சாரிடா!''

''ப்ச்....!''

''இல்லை ரதி, ஏன் நான் நம்பாமல் உன்கிட்ட திரும்ப திரும்ப கேட்குறேன் தெரியுமா?''

''.....''

''உன் மேல எனக்கு அவ்வளவு காதல், ஆசை, பாசம், இன்னும் என்ன எல்லாமோ இருக்கு..... ஆனால் உன்னை முதல் நாள் போல ஹர்ட் செய்துட கூடாதுங்குற அக்கறை இன்னும் ரொம்ப அதிகமா இருக்கு..... அதுவும் உன்னை பத்தி புரிஞ்ச பிறகு ரொம்பவே அதிகமா இருக்கு.... ஹூஹூம் இருந்தது.....''

''சும்மா சொல்லாதீங்க!''

அவளின் சிணுங்கலை ரசித்தபடி அவளின் கன்னத் துடன் இழைந்தவன்,

"சும்மா எல்லாம் இல்லை ரதி..... நீ தான் என் வாழ்க்கை துணைன்னு தெரிஞ்ச நாள் முதலே நான் உன்கிட்ட மயங்கி போய் இருக்கேன் உனக்கே அது தெரியும்... இல்லைனா ஏன் அன்னைக்கு நைட் ஜன்னல் பக்கம் நின்னு உன்னை கூப்பிடுவேன்? கல்யாணத்துக்கு அப்புறம் முதல் நாள் உன் கிட்ட மனசு விட்டு பேசி இருக்கணும் ரொம்ப அவசரப் பட்டுட்டேன்..... அது....."

"ப்ச்.... இப்போ எதுக்கு அதெல்லாம்?"

"இல்லைடா ரதி நீ அன்னைக்கு காலையில மிரண்டு போய் வெளிறிப் போய் ஒரு பார்வை பார்த்த பாரு..... அதுவும் உன் மனசுல இருக்குற பயம் பத்தி தெரிஞ்ச பிறகு ரொம்பவே என்னை பாதிச் சிருச்சு..... ஆனால் நான் மனுஷன் தானே ரதி..... அப்பப்போ கற்பனையை கட்டி வைக்காமல் அவிழ்த்து விடுவேன்..... நீயும் நானும் தனியா இருக்கும் போது நமக்குள்ள எல்லாம் சாதாரணமா இருந்தா எப்படி இருக்கும்னு..... வந்து நீ அப்படி தானே வந்து என்னைக் கட்டிப் பிடிப்ப, முத்தம் கொடுப்ப..... கற்பனையும் நிஜமும் கலந்து போய் குழம்பி போயிட்டேன்!"

அவன் பொறுமையாக விளக்கிய விதத்திலேயே அவளுக்கு மனம் குளிர்ந்து போனது!

"ப்ச்....."

"ஹேய் இன்னும் என்ன?"

"இப்படியே பழைய கதை, ஊர் கதை பேசிட்டே தான் இருக்க போறீங்களா?"

"ரதி!!!!"

அவனின் அணைப்பு இன்னமும் அதிகமாக இறுகிப் போனது என்றால் அவனின் உதடுகள் பொறுமை இல்லாமல் அவளின் முகத்தில் வலம் வந்தன!

ரதி அவனின் காதலில் கரைந்து உருகி போய் இருந்தாள்!

திடீரென சாத்தி இருந்த கதவின் வழியே புரியாத பேச்சு குரல்கள் கேட்டன.....

"என்னங்க..... என்ன சத்தம்னு தெரிய லையே....."

அதே நேரம்,

"ஷிவா!"

என்றழைக்கும் லஷ்மியின் குரல் கேட்டது!

"அத்தை கூப்பிடுறாங்க....."

"நல்ல நேரம் கிடைச்சது அம்மாக்கு கூப்பிட! அமைதியா இரு, நாம தூங்கிட்டோம்னு நினைச்சு விட்ருவாங்க....."

"ஷிவா....!"

லக்ஷ்மியின் குரல் மீண்டும் கேட்டது.

"அத்தை சும்மா எல்லாம் கூப்பிட மாட்டாங்க. ஏதாவது இருக்கும்.... என்னன்னு கேளுங்க...."

ஷிவா மனமே இல்லாமல் மனைவியை விட்டு விலகி வந்து,

''என்னம்மா?'' என்றான்.

''ஷிவா, ராதுவை ஹாஸ்பிடல் அழைச்சிட்டு போகணும்..... கொஞ்சம் சீக்கிரம் வாயேன்..... அருந்ததி எங்கே அவளையும் வர சொல்லு.....''

''இதோ வரேன் அத்தை.....''

ஷிவா சொல்லக் காத்திருக்காமல் அவனுக்கு முன்னே அவசரமாக சென்றாள் அருந்ததி.

அடுத்து வந்த பல மணி நேரங்கள் அவர்களின் வாழ்வில் மறக்க முடியாத மணித்துளிகள்....

ராதிகாவிற்கு டாக்டர் சொல்லி இருந்த ட்யூ டேட்டிற்கான நாட்கள் இன்னும் இருந்தாலும் வலி வந்திருக்கவே உடனே மருத்துவமனையில் அனு மதிக்கச் சொன்னார்கள்...

ஆனால் வலி விட்டு விட்டு வந்து போய் கொண் டிருந்தது...

முழுமையான பிரசவ வலி வரும் வரை காத் திருக்க வேண்டியது தான் என்பது புரிந்ததால் மற்ற வர்கள் ராதிகாவின் வலிக்கு ஒன்றும் செய்ய இய லாமல் கையை பிசைந்துக் கொண்டிருந்தார்கள்....

ராதிகாவை சோதனை செய்து பார்த்து, தொப்புள் கொடி குழந்தையை சுற்றி இருக்க வாய்ப்பு இருப்ப தாக டாக்டர் சொல்ல, கலங்கிப் போனார்கள்...

மேலும் சோதனைகள்.... வலி வேதனை என்று ஒரு நாள் கலங்கடிக்க வைத்து விட்டு பிறந்தாள் ராதிகா கௌஷிக்கின் அன்பு மகள்!

ரோஜா பூ போல் இருந்த மகளை கையில் ஏந்திக் கொண்டு மனைவியை மெல்ல அணைத்துக் கொண்ட கௌஷிக்கிற்கு கண்ணில் கண்ணீரே வந்து விட்டது!

''கௌஷி!''

''என்னால ஒண்ணுமே செய்ய முடியலை ராது! ஒரு நாளா நீ படுற அவஸ்தை எல்லாம் பார்த்து.... என்ன சொல்லன்னு தெரியலை..... தேங்க்ஸ் ராது!''

மகளை மெல்ல தடவி பார்த்த ராதிகாவின் முகத் தில் மெல்லிய புன்னகை மட்டுமே பதிலாக வந்தது!

''சின்னதா இருந்துட்டு என்ன அட்டகாசம் செய் துட்டா பார்த்தீயா?''

''அம்மா, சும்மா விளையாட்டுக்கு கூட அப்படி சொல்லாதீங்க.....''

''அப்பப்பா பிறந்து கொஞ்சம் மணி நேரம் தான் ஆகுது, அதுக்குள்ளே உங்கம்மாக்கு உன் மேல என்ன பாசம் பாரு!''

லக்ஷிமியை தொடர்ந்து, நாதன், பின் மஹேஸ்வரி என எல்லோரும் செல்லம் கொஞ்சி முடித்த பிறகு குழந்தையை கையில் ஏந்திய அருந்ததிக்கு அந்த

சின்னப் பூக்குவியலை பார்த்து பார்த்து ஆசை தீரவில்லை!

கௌஷிக்கும், நாதனும் ஹாஸ்பிட்டலில் இருந்த தால் அன்று ஆபிஸ் சென்றிருந்த ஷிவாவிற்கு குழந்தை பிறந்து விட்ட மகிழ்ச்சி செய்தியை பகிர்ந்துக் கொண்டு அப்போது தான் வந்திருந்தாள் அவள்...

''அக்கா அப்படியே உங்களை மாதிரியே இருக்கா! அதே கண்ணு, அதே மூக்கு!''

அப்போது உள்ளே வந்த நர்ஸ்,

''குழந்தைக்கு லைட்டா மஞ்சள்காமாலை இருக்கு..... பயப்பட எதுவுமில்லை, ஒன்னு இரண்டு நாள் டாக்டர் சொல்றதை செய்தால் சரி ஆகிடும்..... நீங்களும் கொஞ்சம் கவனமா இருங்க. காம்ப்ளி கேட்டட் டெலிவரி என்பதால் கொஞ்சம் கேர் எடுத் துக்கணும்... ஒரு இரண்டு வாரம் ஹாஸ்பிட்டல்ல தங்குற மாதிரி இருக்கும்....'' என்றார்.

அடுத்து வந்த நாட்களில் லக்ஷ்மி, மஹேஸ்வரி, அருந்ததி என மூவரும் மாறி மாறி ராதிகாவுடன் இருந்து கவனித்துக் கொண்டார்கள்...

லக்ஷ்மி மஹேஸ்வரி சொல்லிக் கொடுத்த பத்திய சமையலை ராதிகாவிற்கு சமைத்து எடுத்து வந்து அதை ராதிகாவை சாப்பிட வைப்பதற்குள் அருந்த திக்கு போதும் போதுமென்று ஆகி விட்டது!

''அச்சோ அக்கா, இந்த சின்ன குட்டி பாப்பா பரவாயில்லை! உங்களை கவனிக்குறது தான் ரொம்ப கஷ்டம்! அண்ணா தான் உங்களுக்கு சரி! நீங்க சாப்பிடலைனா உடனே போன் போட சொன்னார்...''

''என்னை இப்படி எல்லாம் மிரட்டுற அளவுக்கு நீ முன்னேறிட்ட! நல்ல மாற்றம் தான்!''

''உங்களை போய் நான் மிரட்ட முடியுமா? அத்தையும் பெரியம்மாவும் போட்டி போட்டுட்டு உங்களுக்காக பத்திய சமையல் குறிப்பு கொடுத்து அசத்துறாங்க! நீங்க என்னடான்னா அடம் பிடிக்குறீங்க! சாப்பிடுங்க! அன்னைக்கு சிஸ்டர் கூட சொன்னாங்க பார்த்தீங்களா, உடம்பை கவனிச்சுக்கணும் அக்கா.....''

''உனக்காக தான் சாப்பிடுறேன்..... இதுக்கு மேல முடியாது க்யூட்டி! என் செல்லம்ல நீ? நாம இரண்டு பேரும் டீல் வச்சுப்போம்..... நீ மீதியை கொட்டிட்டு நான் சாப்பிட்டுட்டேன்னு சொல்லிடு, உனக்கு பிற்காலத்தில இதே அன்பு தொல்லை வரும் போது நான் உனக்கு ஹெல்ப் செய்றேன்...''

''அக்கா!''

பேசி பேசி ராதிகாவை சாப்பிட வைப்பது அருந்ததிக்கு வாடிக்கையாகி போனது!

''பதினாறாம் நாள் குழந்தைக்கு பேர் வைக்கணும். பேர் செலக்ட் செய்துட்டீங்களா?''

"பேர் செலக்ட் செய்தாச்சு அம்மா, ஆனால் பேர் வைக்குறதை ஊருக்கு போய் அன்னைக்கு ஒரு கோவில் போனோமே அங்கே போய் செய்யலாமா?"

"ஊருக்கா??? இந்த நிலமையில நீ அவ்வளவு தூரம் ட்ராவல் செய்யலாமா?"

"டாக்டர் செய்யலாம்னு சொன்னாங்க! ப்ளீஸ்ம்மா..."

"ராது, உன் ஆசைபடி தான் எல்லாம் நடக்கும்! நான் ப்ளைட்ல டிக்கட் புக் செய்றேன். கோவில்ல போயே பேரு வச்சிடுவோம்."

கௌஷிக் சொல்லவும் லக்ஷ்மி மகேஸ்வரியை பார்த்தாள்.

"அவங்க விருப்பம் போல செய்யட்டும். குழந்தைக்கு கோவில்ல பேர் வச்சாலும் விஷேஷம் தானே...." என தன் ஒப்புதலை தெரிவித்தாள் அவள்.

ப்ளைட்டில் தன்னருகே இருந்த மனைவியை பார்த்து பார்த்து ரசித்துக் கொண்டிருந்த ஷிவா, அவளின் பார்வையை கவனித்து விட்டு,

"என்ன உன்னை பார்க்க கூட கூடாதா?" என்றான்.

"இருந்த நேரத்தை எல்லாம் விட்டுட்டு இப்போ கேக்குற கேள்வியை பாரு....!"

அவளின் குறும்பான பதிலை கேட்டு கன்னத்தை கிள்ளியவன்,

''இதை நீ சொல்லி நான் கேட்க வேண்டி இருக்கு பாரு, அது தான் நேரம்!!!!'' என்றான்.

''ரொம்ப பேசினீங்க இன்னும் நிறைய மாசம் இப்படியே இருக்க வேண்டியது தான்....'' என்றாள் அவள் குறும்பும் மிரட்டலும் கலந்து!

''ஓஹோ அப்போ இன்ட்ரஸ்ட் எனக்கு மட்டும் தான் உனக்கு இல்லை? சரி ஓகே நான் பங்ஷன் முடிஞ்ச உடனே வேலைக்கே போறேன்.....''

''என்னது வேலைக்கு போறீங்களா! உங்களை பிடிச்சு கட்டி போட்டு வச்சிருவேன்.....!''

''அப்படி வா வழிக்கு! உனக்கும் ஆசை இருக்கு தானே? அப்புறம் என்ன என்னை மட்டும் வெறுப் பேத்துற?''

''உங்களை வெறுப்பேத்தாமல் வேற யாரை வெறுப் பேத்த?''

அவனுடன் நெருங்கி அமர்ந்து இழைந்தபடி அவள் சொல்ல அவனுக்கு மேலே எதுவும் சொல்ல வேண்டும் என்று தோன்றவே இல்லை!

பிரேமாவும், கண்ணனும் அவர்களை விழுந்து விழுந்து கவனித்தனர்.

''கோவில்ல கூட்டமா இருக்கும். இவர் அங்கே சொல்லி வச்சிருக்கார். கை குழந்தையோட போறோமே, கூட்டம் கம்மியா இருக்க நேரமா, நல்ல நேரமா பார்த்து சொல்றேன்னு சொல்லி இருக் காங்க.....''

"தேங்க்ஸ் பிரேமா! நீ இல்லாமல் இவளோட இந்த ஆசையை நிறைவேத்த நாங்க ரொம்பவே கஷ்டப் பட்டிருக்கணும்....."

பிரேமாவும், லக்ஷ்மியும் பேசிக் கொண்டிருக்க அவர்களின் அருகே அமர்ந்திருந்த அருந்ததி அமைதி யாக அதை கவனித்துக் கொண்டிருந்தாள்..... கவ னிப்பதாக பாவனை செய்து கொண்டிருந்தாள்.

அவளின் முழு கவனமும், ஈடுபாடும் ஹாலில் டிவி பார்க்கிறேன் பேர்வழி என்று அமர்ந்திருந்தபடி அவளை விழிகளால் விழுங்கிக் கொண்டிருந்த ஷிவாவிடமே இருந்தது.

"ராது..... ராது....."

கௌஷிக் ராதிகாவை அழைத்தபடி வந்தான்.

"ராதிகாவும் அம்மாவும் தோட்டம் பார்க்க போனாங்க கௌஷிக்."

"பாப்பாக்கு டையப்பர் மாத்தணும் அத்தை. சுச்சு போயிட்டா போலருக்கு....."

"அவ்வளவு தானே நான் வரேன்....."

லக்ஷ்மி எழுந்து செல்ல, பிரேமாவின் கவனம் அருந்ததியிடம் சென்றது.

"எப்படி இருக்க அருந்ததி? சந்தோஷமா இருக் கீயா?"

தலையை குனிந்து அமர்ந்து சேலையில் மும்முர மாக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த அருந்ததி பதில் எதுவும் சொல்லவில்லை.

பிரேமா புரியாமல் பார்வையை திருப்பினாள். ஷிவா அவளின் கண்ணில் பட்டான்!

அவனின் பார்வை இப்போதும் மனைவியிடமே இருந்தது.

மீண்டும் அருந்ததி பக்கம் பார்த்தாள் பிரேமா. இந்த முறை புரிந்துக் கொண்ட பார்வையை பார்த்தாள்.

அக்காவின் மகளை மெல்ல கைகளால் தட்டியவள்,

"அருந்ததி, அந்த கொடியில இருக்க துணி எல்லாம் காஞ்சிருக்கும். கொஞ்சம் எடுத்து இவளுங்க ரூமில போடுறீயா?" என்றாள்.

திடுக்கிட்டு பார்த்த அருந்ததி,

"சரி சித்தி...." என்று விட்டு அவள் சொன்னதை செய்யச் சென்றாள்.

அருந்ததி துணிகளை எடுத்துக் கொண்டு மாடி அறைக்கு சென்றாள்.

அடுத்த வினாடியே ஷிவாவும் எழுந்து நடந்தான்....

பிரேமாவை கடக்கும் போது அவளைப் பார்த்து புன்னகைத்தான்.

அன்னைக்கு நிச்சயதார்த்தம் முடிஞ்ச அன்னைக்கு இருந்த அதே ரூம் தான்!

பிரேமா கேலியாக சொல்ல சிரிப்புடன் கேட்டு விட்டு அன்று சென்ற அதே அறைக்கு சென்றான்.

அருந்ததி துணிகளை அடுக்கி வைத்துக் கொண் டிருந்தாள்.

அமைதியாக சென்று அவளை அணைத்துக் கொண் டான் அவன்....!

''என் ரதி...''

''ம்ம்ம்ம்.....''

''எனக்கு இந்த ரூம் ரொம்ப பிடிக்கும்... ஏன் தெரியுமா அன்னைக்கு எங்கேஜ்மெண்ட் முடிஞ்சுட்டு இங்கே வந்து தான் உன்னை பார்த்தேன்... அப்போ என்னை ஞாபகம் வச்சுக்குற மாதிரி ஒன்னு கொடுத் தேன்... ஞாபகம் இருக்கா?''

''.....''

''ஹேய் உன்னை தான் கேட்குறேன்.....''

''ஏங்க....''

''என்னடா?''

''இந்த ரூமெல்லாம் இருக்கட்டும் நீங்க என் வீ.... என் அம்மா அப்பா வீட்டுக்கு வந்ததே இல் லையே.....''

''அடடா ரொம்ப தப்பா இருக்கே....! ஆனாலும் நீ சுத்தி வளைச்சு என் அம்மா அப்பா வீடுன்னு சொல்ல வேண்டாம், நம்ம வீடுன்னே சொல்லலாம்.....''

''ம்ம்ம்ம்ம்ம்ம்.....''

''இதுவரைக்கும் தானே போகலை? இன்னைக்கு போகலாம்.''

"நிஜமாவா?"

"யெஸ்! இப்போவே போகலாமா?"

"ம்ம்ம்ம்.... சாப்பிட்டுட்டு போகலாம்....."

வெட்கம் மின்ன அவள் சொல்ல, அவனின் கண்கள் எதிர்ப்பார்ப்பில் மின்னின!

"இன்னைக்கு பெரிய ட்ரீட் இருக்குன்னு புரியுது, ஆனாலும் இந்த ரூமோட ட்ரெண்டை காப்பாத்தணுமே....." என்றபடி அவளின் கன்னத்தில் குனிந்து அழுத்தமாக முத்தமிட்டான் அவன்.....

அன்று போல் அதிர்ச்சி அடையாமல் மலர்ச்சியும் வெட்கமுமாக அவனைப் பார்த்தாள் அவள்...!

அந்தப் பார்வை அவனை இழுக்க இந்த முறை அவளின் இதழ்களில் அழுத்தமாக முத்தமிட்டான் அவன்!

"அம்மா, நானும் ரதியும் இன்னைக்கு எதிர் வீட்டுல தூங்குறோமே...." என்றான் ஷிவா.

லக்ஷ்மியும் பிரேமாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ராதிகா, கௌஷிக், மகேஸ்வரி, குழந்தையிடம் விளையாடியபடி இருக்க, ஷிவா சொன்னதை அவர்கள் கவனிக்கவில்லை!

"அங்கே எதுக்குப்பா, தனியா போய்? இங்கேயே வசதியா தங்கலாமே?" என்றாள் பிரேமா.

லக்ஷ்மியின் கண்கள் அருந்ததி பக்கம் சென்றது. அவள் தலையை குனிந்து அமர்ந்து தரையில் கோலமிட்டுக் கொண்டிருந்தாள்.

தானாக புன்னகை தோன்ற,

''விடு பிரேமா, அவங்க அங்கேயே போய் தங்கட்டும்....'' என்றாள்.

''அப்போ கிளம்புறோம்! வா ரதி போகலாம்.....''

''இப்போவேவா?''

''பிரேமா!'' என்று தோழியை மேலே பேச விடாமல் தடுத்த லக்ஷ்மி, மருமகளிடம்,

''அருந்ததி பிரிட்ஜில நித்யமல்லி கட்டி வச்சிருந்தேன் எடுத்து வச்சுட்டு போ....'' என்றாள்.

அருந்ததி சரியென்று தலை அசைத்து உடனே எழுந்து செல்ல, ஷிவா பொறுமையில்லாமல் உலாவத் தொடங்கினான்.

''இருட்டா இருக்கும் ஷிவா, டார்ச் வச்சிருக்கீயா?''

''இருக்கும்மா. சாயந்திரம் கடையில வாங்கினேன்.''

அதற்குள் அருந்ததி வர,

''சரிம்மா கிளம்புறோம்.....'' என்றான் ஷிவா.

''சரி.... பார்த்து போங்க.....''

''வரோம் அத்தை.... வரோம் சித்தி.....'' அருந்ததியும் அவசரமாக விடை பெற்று கணவனுடன் சென்றாள்.

''நீ அவளுக்கு ரொம்ப செல்லம் கொடுக்குற லக்ஷ்மி! சில சமயம் கண்டிப்பா இருக்கணும்.''

''விடு பிரேமா! எனக்கு இருக்குறது ஒரே ஒரு மருமகள், அவளுக்கு செல்லம் கொடுக்காமல் வேற யாருக்கு கொடுக்க! ஆமாம் நம்ம கூட படிச்ச சாந்தா இப்போ எங்கே இருக்கா?''

இருவரும் தங்களின் பழைய கதையை பேச ஆரம்பித்தனர்.

வீட்டின் கதவை திறந்து விளக்குகளை எரிய விட்டாள் அருந்ததி.

''பரவாயில்லையே தூசு இல்லை!''

''சித்தி கிளீன் செய்து வச்சிருக்காங்க.... அவங்க பசங்க இங்கே படிக்கக் வருவாங்க. சாவியை சித்தி வீட்டுல தான் கொடுத்து வச்சிருக்கேன்.....''

''ஓ, அது பரவாயில்லை..... இந்த ஸ்க்ரீன் எல்லாம் அழகா இருக்கே! எம்ப்ராயிடரியா?''

''ஆமாம், தனியா உட்கார்ந்து வேற என்ன செய்றது இது போல வேலை ஏதாவது இழுத்து போட்டு செய்வேன்.....''

ஷிவா விழிகளை சுழற்றி வீட்டைப் பார்த்தான்.

''நீங்க வீட்டை சுத்தி பாருங்க, நான் அம்மா அப்பா படத்துக்கு விளக்கு ஏத்தி வச்சுட்டு வரேன்.''

''வீட்டை எல்லாம் அப்புறம் சுத்தி பார்க்கலாம். உன்னோட ரூம் எது அதை சொல்லு.''

"எல்லா ரூமும் என் ரூம் தான்!"

"ஹேய்.."

"அதோ அந்த மூணாவது ரூம்! வலது பக்கம் லைட் இருக்கும்.... நான் சீக்கிரம் விளக்கேத்திட்டு வரேன்....."

அவள் சுட்டிக் காட்டிய திசையில் இருந்த அறைக்குள் சென்றவன், ஸ்விட்சை தட்டி விட்டான்.

அவன் நினைத்தது போலவே அழகாக இருந்தது அந்த அறை....!

கப்போர்டில் இருந்த பொருட்களை அவன் நோண்டிக் கொண்டிருக்கும் போது மெல்லிய கொலுசொலிக்க அவள் வந்தாள்.

"என்ன செய்றீங்க."

"சும்மா நோண்டிட்டு இருந்தேன்...."

மல்லிகை முல்லைப் பூப்பந்தல்...

மரகத மாணிக்கப் பொன்னூஞ்சல்

மஞ்சள் வாழை மாமரங்கள்...

பச்சை மாவிலைத் தோரணங்கள்...

காற்றில் மெல்லியதாக பாடல் ஒலித்தது....

"பாட்டு கேட்குது????"

"பாட்டி ரூமில இருந்து வருதுன்னு நினைக்கிறேன். அவங்களுக்கு எப்போவும் இப்படி ஏதாவது பாட்டு ஓடிக்கிட்டே இருக்கணும்...."

"ஓ....."

அவன் அவளின் கேசத்தை மெல்ல வருடினான்.... காற்றில் பறந்திருந்த கற்றைகளை சரி செய்தான்....

எதிர்பார்ப்புடன் அவள் நிற்க அவளை காத்திருக்க வைக்காமல் தன் வலிய கரத்தால் அவளை தன் பக்கம் இழுத்தான். விருப்பமுடன் அவன் பக்கம் வந்தவள், அவனின் கைகளின் அணைப்பில் மெல்ல அடங்கினாள்.

அவனின் தோள் வளைவில் முகத்தை புதைத்துக் கொண்டாள்....

"ரதி, எவ்வளவு நாளா இந்த நிமிஷத்துக்காக காத்திருக்கேன் தெரியுமா?"

"ம்ம்ம்ம்....."

"உனக்கு ஓகே தானே?"

அவள் தலையை நிமர்த்தி அவனின் கண்களை நேராக சந்தித்தாள்!

"இது என்ன ஒரு கேள்வி?"

"ஏன்?"

"நீங்க என்னோட கணவர்.... அப்புறம் இப்படி எல்லாம் கேட்டால் எப்படி?"

"நாம கணவன் மனைவியா இருந்தாலும் எல்லாமே இரண்டு பேருக்கும் பிடிச்சதா நடக்கணும்.... உனக்கு பிடிக்காதது எதையும் கணவன் என்ற ஒரே காரணத்திற்காக நான் செய்ய மாட்டேன்...."

"அப்போ முதல் நாள்....."

அவள் கேலியாக கேட்க தொடங்க, அவன் அவசர மாக குறுக்கிட்டு பேசினான்.

"அது அது வேற விஷயம்..... எப்போடா கல் யாணம் ஆகும் எப்போ நீ எனக்கு சொந்தமாகு வேன்னு இருந்தேனா, அப்போ இந்த பொறுமை, யோசிக்குற பக்குவம் எல்லாம் இல்லை....."

"ஹ்ம்ம்ம்ம்ம்ம்.... அப்படியா? என்ன?"

"வேற எப்படி?"

"இதுக்கு தான் கொஞ்சமாவது பொண்ணுங்களை சைட் அடிக்கணும்! பார்க்கணும்... அப்போ இப்படி பட்டிக்காட்டான் மாதிரி....."

"அடிப்பாவி! அப்போ என்னை சைட் அடிக்க சொல்றீயா?"

"அதுக்கு டைம் எல்லாம் முடிஞ்சு போச்சு.... இனிமேல் அடிச்சா, நான் உங்களை அடிப்பேன்.... பரவாயில்லையா?"

சொல்லிவிட்டு சலுகையுடன் அவனின் தோளில் மீண்டும் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் அவள்...

"ரொம்ப பயமா இருக்கே ரதி!"

"....."

"இன்னும் நீ என் கேள்விக்கு பதில் சொல்லலையே...."

அவள் மீண்டும் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்!

வார்த்தைகளால் தன் சம்மதத்தை சொல்லாமல் அவன் கன்னங்களில் மெல்ல முத்தமிட்டு தன் சம்மதத்தை அவனுக்கு தெளிவுப்படுத்தினாள்.

ஷிவாவிற்கு சிலிர்த்தது. மனைவியை தன்னுடன் இறுக்கி கொண்டான்....

அந்த வீட்டின் தோட்டத்தில் இருந்த ரோஜாவை தென்றல் மெல்ல தொட்டு விளையாடியது.....

தென்றலின் தொடுகையில் உளம் சிலிர்த்த ரோஜாவோ தென்றலுக்கு ஏற்ப தன் தலையை அசைத்து தன் காதலை மகிழ்ச்சியை தெரி வித்தது.....

இத்தனை நாள் தன்னை விலக்கி விடும் ரோஜா, தன்னை ஏற்றுக் கொண்ட சந்தோஷத்தில் துள்ளிய மெல்லிய தென்றல் காற்றாக உருமாறி தன் காதலியான பூவை அணைத்துக் கொண்டது.....

தென்றலின் வேகம் மாறியதில் தடுமாறிய போதும் அதே சிலிர்ப்பும் மகிழ்ச்சியுமாக காற்றை அர வணைத்துக் கொண்டது அந்த அழகிய ரோஜா.....!

30



"குட் மார்னிங் க்யூட்டி!"

பிரேமாவிற்கு உதவியாக புட்டு மாவை சலித்துக் கொண்டிருந்த அருந்ததி, ராதிகாவை நிமிர்ந்து பார்த்து புன்சிரிப்புடன்,

"குட் மார்னிங் அண்ணி!" என்றாள்.

"ஹேய் என்ன உன்கிட்ட எதுவோ புதுசா இருக்கு?"

"பாப்பா வந்த ஜோர்ல என்னை மறந்து போயிட்டீங்க அதனால தான் புதுசா தெரியுறேன்..."

"அப்படியா சொல்ற? சரி, போர் அடிக்குது வரீயா அப்படியே சும்மா நடந்துட்டு வரலாம்?"

"பாப்பா எங்கே? உங்களை தேட மாட்டாளா?"

"நைட்டெல்லாம் தூங்க விடாமல் ஒரே அழுகை! இப்போ அப்பாவும், குழந்தையுமா பயங்கர தூக்கத் துல இருக்காங்க."

"நீங்க ஏன் இவ்வளவு சீக்கிரம் எழுந்தீங்க இன்னும் கொஞ்சம் நேரம் தூங்கி இருக்கலாமே?"

"தூங்கினால் தானே எழுந்திருக்க? தூங்கவே முடியலை..."

அருந்ததி சிரித்தாள்!

"ஹேய் என்ன உனக்கு இதுல சிரிக்க இருக்கு?"

"அம்மான்னா சும்மாவா? அதெல்லாம் அப்படி தான்!"

"சொல்வம்மா சொல்வ! இதே டையலாக் நான் உனக்கும் சொல்வேன் இரு..... சரி வா கொஞ்சம்

நேரம் நடந்துட்டு வரலாம்... வெளியே காத்து ஜோரா இருக்கு.''

''இப்போ உடனே போகனுமா அண்ணி? சித்தி பாவம் தனியா வேலை செய்யுறாங்க....''

அருந்ததி சொன்னதை கேட்டபடி வந்த பிரேமா,

''என் மேல என்ன அக்கறை! இப்போ மட்டும் இதெல்லாம் சொல்லு, நேத்து ஷிவா சொன்ன உடனே பூனைக் குட்டி மாதிரி அவன் பின்னாடியே எதிர் வீட்டுக்கு போன? எவ்வளவு சொன்னேன் இங்கேயே தங்க?'' என்று மெலிதாக குறைபட்டாள்.

''எதிர் வீடா??? ஓஹோ....!''

ராதிகா அருந்ததியை ஒரு ஆராய்ச்சிப் பார்வை பார்த்தாள்.

தானாக முகம் சிவக்க தலையை குனிந்து கொண்டாள் அருந்ததி.

''ஆன்ட்டி, நானும் இந்த பொண்ணும் வாக் போயிட்டு வரோமே, நீங்க கொஞ்சம் நேரம் தனியா மேனேஜ் செய்ய முடியுமா?''

''விட்டால் இவ இல்லாம என்னால வேலையே செய்ய முடியாதுன்னு சொல்லிடுவ போலருக்கு. முதல்ல இவளை இங்கே இருந்து இழுத்துட்டு போ.....''

''சித்தி!''

"சும்மா சொன்னேன்டா! போ, போ, ராதிகாவோட போயிட்டு வா."

ராதிகா அந்த கிராமத்து தெருக்களை வேடிக்கை பார்த்துக் கொண்டு சிறிது நேரம் அமைதியாக நடந்தாள்.

"அப்புறம் அருந்ததி மேடம், சொல்லுங்க..... எனக்கு தெரியாமல் என்ன எல்லாமோ நடக்குது! ஷிவாவோட ஸ்பெஷல் கவனிப்பு தானா உங்க முகம் இப்படி பளபளக்க காரணம்?"

அருந்ததி சின்னச் சிரிப்புடன் ராதிகாவைப் பார்த் தாள்!

"என்ன லுக் விடுற?"

"ம்ம்ம் உங்களுக்கு பதில் தெரியாத மாதிரி என் கிட்ட கேட்குறீங்களே வேற என்ன செய்ய முடி யும்?"

"என்ன்னது????"

"உங்க முகம் ஏன் பளிச்சுன்னு டாலடிக்குதுன்னு நான் உங்க கிட்ட கேட்டதில்லையா???? அப்போ எல்லாம் நீங்க என்ன பதில் சொன்னீங்க?"

"ம்ம்ம்... கிட்டத்தட்ட ஒரு வருஷத்துக்கு முன் னாடி இதே ஊருல இப்படி நடந்துட்டே என்கிட்ட அமைதியின் சொரூபமாக இருந்த அருந்ததி இப்படி வாயாடியா மாறுவான்னு யாராவது நினைச்சாங் களா?"

"வேற யாரும் நினைக்க வேண்டாம், நானே நினைச்சது இல்லை அண்ணி!"

"ஹ்ம்ம்ம்...???"

"வீட்டுல நாலு சுவரை பார்த்துட்டு உட்கார்ந்துட்டு இருந்தப்போ இப்படி ஒரு குடும்பம் எனக்கு கிடைக்கும்னு நான் நினைக்கவே இல்லை."

"அடடா ஏன் இப்படி செண்டிமெண்ட் டோன்? எனக்கு அதெல்லாம் சரி வராது! நீ நார்மலா பேசு பார்ப்போம்."

"இல்லை அண்ணி, உங்க தம்பி என் மேல அன்பு வச்சிருக்கார்னா புரிஞ்சுக்கலாம்..... அத்தை மாமாக்கு கூட நான் அவங்களுக்கு பொண்ணு மாதிரின்னு சொல்லிக்கலாம். ஆனால் நீங்க? எனக்கு கூட பிறந்தவங்களும் இல்லை, நல்ல சிநேகிதியும் இல்லை. இரண்டையும் ஒன்னாக்கின மாதிரி நீங்க கிடைச்சிருக்கீங்க!"

"போதும் அருந்ததி! என்னால இதுக்கு மேல தாங்க முடியாது" என்று தன் பாணியில் பதில் சொன்ன ராதிகா, மேலே பேசினாள்.

"நானும் கூட நேத்து இது போல செண்டிமென்ட்டா யோசிச்சுட்டு இருந்தேன்....."

"என்ன?"

"ஞாபகம் இருக்கா? போன வருஷம் கோவிலுக்கு போனப்போ, நீ சொன்னியே சீக்கிரமே உங்களுக்கு

லட்டு பாப்பா பிறக்க போகுதுன்னு..... இதோ இங்கே இருக்கோம், கையில குழந்தையோட!''

''அண்ணி! விட்டால் நான் ஜோசியம் சொன் னேன்னு சொல்லுவீங்க போலருக்கே. அது பேச்சு வாக்கில சொன்னது..''

''தெரியும் ஆனால் உன்னோட நல்ல மனசுக்கு தான் நீ சொன்னது நடந்துச்சு.''

''இதை அண்ணா கிட்ட சொன்னீங்களா????''

அருந்ததியின் கேள்வியில் மின்னிய கேலியை புரிந்து கொண்டு அவளின் காதைத் திருகிய ராதிகா,

''சாமியார் மாதிரி இருந்த என் தம்பியையே பெரிய காதல் மன்னனா மாத்தின வீராதி வீராங்கனை நீ, உன்கிட்ட நான் பேச முடியுமா?''

''அம்மாடியோ! இப்படி ஒரு வார்த்தையை நீங்க சொல்லி நான் கேட்க நான் ரொம்ப கொடுத்து வச் சிருக்கணும்! இது தானா வஷிஸ்டர் வாயால பிரம்ம ரிஷின்னு பட்டம் வாங்குறது????''

''நீ பேசும்மா பேசு!''

''நான் பேசுறது இருக்கட்டும் பெரியம்மா ஒரே சந்தோஷமா இருக்காங்க! என்ன செய்தீங்க அவங் களை?''

''உலகத்துல பேசி தீர்க்க முடியாத பிரச்சனை ஏதாவது இருக்க என்ன? பழைய விஷயம் எதுவும் அவங்க கிட்ட கேட்கலை ஆனால் இப்போ சாதா

ரணமா பேசினேன், அவங்களுக்கு அது பிடிச்சிருச்சு போல....."

"சூப்பர் மாமியார் மெச்சும் மருமகள் ஆகிட்டீங்க!"

"எல்லாம் உன்னை மாதிரி கெட்ட பொண்ணை பார்த்த எபக்ட் தான்! எப்படி நல்ல பொண்ண இருந்த ராதிகா இப்படி மாறிட்டாளே!!!!"

"ஹா ஹா ஹா! அண்ணி அண்ணி! எப்போ எனக்கு அந்த தங்க நகை விஷயம் சொல்வீங்க?"

"ஏன் கேட்குற?"

"ஒரே சஸ்பென்சா வச்சிருக்கீங்களே! இப்படி இருக்குமா அப்படி இருக்குமான்னு என் தலையில ஒரு பட்டி மன்றமே நடக்குது!"

"நடக்கும்மா நடக்கும்! நான் ஒண்ணு சொல் லவா?"

"சொல்லுங்க!"

"அந்த பட்டிமன்றத்துல உனக்கு பிடிச்சது எதுவோ அது தான் நடந்ததுன்னு நினைச்சுக்கோ."

"அண்ணி இதெல்லாம் எம்மாத்து வேலை."

"இருந்துட்டு போகட்டும்! பழசை எல்லாம் கிளற மனசில்லை க்யூட்டி.... அதெல்லாம் முடிஞ்சு போச்சு.... தண்ணில அடிச்சுட்டு போயாச்சு... அதை பத்தி திரும்ப திரும்ப ஏன் யோசிக்கணும்?"

"ஹ்ம்ம்ம்.....!"

''எனக்கும் அத்தைக்கும் இடையே நடந்த சின்ன மிஸ் - அண்டர்ஸ்டேண்டிங் அது.... இப்போ தான் எல்லாம் சரியா போச்சே, அதனால அதை அப்படியே விட்ருவோம்! உனக்கு கட்டாயம் தெரிஞ்சே ஆக ணும்னா, நான் சொன்னது போல உன் கற்பனையில வந்திருக்க காட்சிகளில் ஏதாவது ஒண்ணை அது தான் நிஜம்னு நினைச்சுக்கோ.''

''ஆனாலும் நீங்க இப்படி ஒரு மாதர் குல மாணிக்கமா மாறுவீங்கன்னு நான் எதிர்பார்க்கலை.''

''ஏன் உனக்கு மட்டும் தான் பிலிம் காட்ட தெரியும், சீன் போடத் தெரியும்னு நினைச்சியா?''

''நிஜம் தான் அண்ணி! அருந்ததி உன் கர்வம் பங்கம் உற்றது! உன்னை விட அதிகமா சீன் போடவும் மக்கள் இருக்காங்க.....! அதிலும் குறிப்பா இதோ இந்த அண்ணி.....!''

''இந்த ராது எல்லாத்துலேயும் டாப் தான்!''

இருவரும் தங்களின் கலகல பேச்சுடனே வீடு திரும்பினார்கள்.

எதிரே வந்த லக்ஷ்மி,

''ராது வந்துட்டீயா, போய் குழந்தையை எழுப்பி பால் கொடு. பாப்பாக்கு பசிக்கும்... அருந்ததி ஷிவா கிட்ட சொல்லிட்டுப் போக கூடாதா? அவன் வந்து உன்னைத் தேடிட்டு உர்ருன்னு கோபமா போனான். போ, போய் அவனை சமாதானப்படுத்து...'' என் றாள்.

ராதிகாவும், அருந்ததியும் ஒரு புன்னகையை பகிர்ந்து கொண்டு எதிர் எதிர் திசையில் சென்றார்கள்.

அருந்ததி சத்தம் இல்லாமல் அவளின் வீட்டை திறந்து கொண்டு உள்ளே சென்றாள். எங்கேயோ ஷிவா விசிலடித்து பாட்டுப் பாடுவது கேட்டது.

சத்தம் வந்த திசையை கணித்துச் சென்றாள்.

எத்தனை மெதுவாக நடந்த போதும் அவளின் கொலுசொலி அவளைக் காட்டிக் கொடுத்தது.

ஆர்வத்துடன் திரும்பிய ஷிவா,

''ஹேய் ரதி டார்லிங்! என்னை அம்போன்னு விட்டுட்டு ராதுவோட என்ன உலாவல் தேவைப் படுது! உன்னைப் பார்க்காமல் நான் எப்படி அதுக் குள்ளே இளைச்சுப் போயிட்டேன் பார்த்தீயா?'' என்றான்.

ஹ்க்கும்.....!

செல்லமாக அவளின் முகவாயை பிடித்து ஆட்டி யவன்,

''உன்னை ரொம்ப மிஸ் செய்தேன் டார்லிங்.....'' என்றான்.

''செல்லம் கொஞ்சுறது இருக்கட்டும், அத்தை கிட்ட என்ன சொல்லிட்டு வந்தீங்க?''

''அம்மா கிட்டேயா? ஒண்ணும் சொல்லலையே! நீ எங்கேன்னு கேட்டேன், உன் சித்தி, ராதுவோட

போனேன்னு சொன்னாங்க..... நான் என் பெட்டியை எடுத்துட்டு இங்கேயே வரேன்னு வந்துட்டேன்.''

''அப்புறம் ஏன் அத்தை அப்படி சொன்னாங்க?''

''என்ன சொன்னாங்க?''

''நீங்க கோபமா போனீங்கன்னு சொன்னாங்க!''

ஷிவாவின் கண்கள் மின்னியது!

''அம்மான்னா அம்மா தான்! என்ன ஸ்மார்ட் அம்மா.''

''ப்ச்...!''

''டார்ல்ஸ் ரதி, உன்கிட்ட ஷிவாவோட போய் இருன்னு சொல்லி இருந்தா நீ நல்ல மருமகளா பந்தா காட்டி இருப்ப. அது தான் அம்மா ஸ்மார்ட்டா நான் கோபப்பட்டேன்னு உன் கிட்ட சொல்லி அனுப்பி வச்சிருக்காங்க! அம்மாவோட எதிர்பார்ப்பை வீணாக்க கூடாது, வா வா நாம என்ஜாய் செய்வோம்...''

பேசியபடி அவன் அணைத்துக் கொள்ள, பொய் யாக அவன் கைகளில் இருந்து தப்ப முயன்றாள் அவள்!

''நான் அத்தை கிட்டேயே போய் கேட்டுக்குறேன், என்னை விடுங்க.''

''அடிபாவி! இவ்வளவு மோசமான மருமகளா இருக்கீயே!''

''அப்படி என்ன செய்தேன்?''

''எங்க அம்மா கதை விடுறாங்கன்னு, இப்போ தானே சொன்ன...! இரு இரு உன்னை போட்டுக்

கொடுக்குறேன்..... ஹேய் அங்கே பார் அம்மா தெரியுறாங்க..... அம்மா...! அம்மா....!''

அருந்ததியை அணைத்தபடி, மௌன ராகம் கார்த்திக் பாணியில் ஜன்னலில் தெரிந்த லக்ஷ்மியை அழைத்தான் ஷிவா!

''சும்மா இருங்க...!''

லக்ஷ்மி திரும்பிப் பார்க்க அருந்ததி அவசரமாக கணவனின் கைகளை விலக்கி விட்டு தள்ளி நின்றாள்.

ஜன்னலை நன்றாக திறந்து வைத்த ஷிவா,

''அம்மா, இவ என்ன சொன்னா தெரியுமா...''

அவனைப் பேச விடாமல் குறுக்கிட்டு பேசிய லக்ஷ்மி,

''நீ என்ன சின்ன குழந்தையா என்கிட்டே கம்ப்ளெயின்ட் சொல்ல? இங்கே பார் ரொம்ப நாளுக்கு அப்புறம் நம்ம ஊரு ஸ்பெஷல் செங்கவரிக்கை மாம்பழம் எனக்கு கிடைச்சிருக்கு! நான் சாப்பிடணும்..... நீயாச்சு உன் அருந்ததி ஆச்சு என்னை தொல்லை செய்யாதே'' என்ற லக்ஷ்மி வீட்டினுள் சென்று மறைந்தாள்.

ஷிவா திரும்பி அருந்ததியைப் பார்த்தான்....!

அவள் கேலிப் புன்சிரிப்புடன் நின்றிருந்தாள்.....!

''எப்படி இருந்த எங்கம்மாவை எப்படி மாத்திட்ட? உன்னை என்ன செய்யலாம்?''

''ஒண்ணும் செய்ய வேண்டாம்! நான் போய் சித்திக்கு.....''

அவள் முடிக்க காத்திருக்காமல், பொறிந்தான் ஷிவா.

''ஹெல்ப் செய்ய போறீங்களாக்கும்? பிச்சுப்புடு வேன்! நீ, நான் இருக்கும் போது என் கூடவே தான் இருக்கணும்..... எங்கேயாவது போன அவ்வளவு தான்! உன்னை நம்பி பெட்டி படுக்கை எல்லாம் வேற எடுத்துட்டு வந்துட்டேன்....''

அருந்ததி சிரித்தபடி அமைதியாக நின்றாள்.

''என்ன இளிப்பு வேண்டி இருக்கு?''

''அண்ணி சொல்றது சரி நீங்க சரியான காதல் மன்னன்!''

''ஹி ஹி ஹி! என் செல்ல ரதி!''

அவன் அணைத்துக் கொள்ள அவள் மறுப்பேதும் சொல்லாமல் அவனோடு ஒன்றிக் கொண்டாள்.

அதன் பின் வந்த நேரங்களில் ஷிவாவும் அருந்ததியும் ஒன்றாகவே சுற்றினார்கள். அவள் பிறந்த ஊரை அவனுக்கு சுற்றிக் காட்டினாள் அவள்! அவள் படித்த பள்ளி, விளையாடிய க்ரவுண்ட், தனிமையில் பொதுவாக விரும்பும் நாற்காலி போல் இருந்த வெட்ட பட்ட மரத்தின் அடிமரம்.... என அனைத்தையும் அவனுக்கு காட்டினாள், பகிர்ந்து கொண்டாள்...!

அவள் பிறந்து வளர்ந்த ஊர் என்ற போதும் ஷிவாவுடன் இருக்கும் போது அது இன்னும் புது அழகுடன் அவளுக்குத் தோன்றியது!

நேரம் போவதே தெரியாமல் சென்றது....

இருவரும் தங்களைச் சுற்றி உலகம் என்று ஒன்று இருப்பதையே மறந்து போயிருந்தார்கள்!

குழந்தைக்கு பேர் சூட்டும் நாளும் வந்தது!

மஹேஸ்வரி குடும்பம், லக்ஷ்மி நாதன் குடும்பம், பிரேமா கண்ணன் குடும்பம் அனைவரும் கோவி லுக்குச் சென்றார்கள்.

ராதிகாவும் கௌஷிக்கும் என்ன பெயர் என்பதை கடைசி நிமிடம் வரை யாரிடமும் சொல்லாமல் ரகசியமாக வைத்திருந்தார்கள்.

கடவுளை வேண்டி விட்டு, குழந்தையின் காதில் பெயரை மூன்று முறை சொல்லச் சொல்ல, ராதிகா மகேஸ்வரியிடம் அவந்திகா என சொல்லச் சொன் னாள்.

மகேஸ்வரிக்கு முதலில் தான் சொல்லத் தயக்கமாக இருந்த போதும், சந்தோஷத்தில் முகம் பளிச்சிட்டது. ஆனாலும் லக்ஷ்மியை முதலில் சொல்லச் சொன் னாள்.

இருவரும் நான், நீ என சிறிது நேரம் செல்லம் கொஞ்சிய பின், இருவருமாக சேர்ந்து சொல்வது என்று முடிவு செய்தார்கள்...

"அவந்திகா பேரு அழகா இருக்கே! அப்படினா என்ன அண்ணி?"

"அவந்திகா ஒரு பிரின்சஸ் பேர் க்யூட்டி."

"அப்போ ரொம்ப சரி! நம்ம வீட்டு இளவரசி தான் இந்த லட்டு பாப்பா!"

என்ன புரிந்ததோ, ஷிவாவும் அருந்ததியும் வாங்கி தந்திருந்த தங்கச் சங்கிலி கழுத்தில் மின்ன, தன் அத்தையை பார்த்து அழகிய பொக்கை வாயைத் திறந்து சிரித்தாள் அவந்திகா!

பிரேமா குடும்பத்தினரிடம் இருந்து பிரியா விடை பெற்று கிளம்பி அனைவரும் விமான நிலையத்தை அடைந்தார்கள்.

சென்னை செல்லும் விமானத்தின் டெர்மினலலை அவர்கள் கண்டுபிடித்த நேரம், ஷிவா,

"அப்போ எல்லோரும் பார்த்து போயிட்டு வாங்க..." என்றான்.

"ஏன் ஷிவா நீ வரலையா?" என்றாள் லக்ஷ்மி புரியாமல்.

"இங்கே இருந்து கோவா போக பிளைட் இருக் குன்னு எனக்கு தெரியவே தெரியாது..... இருக்கான்னு பார்க்க சும்மா தேடினேன்..... இப்படி எல்லோரும் சும்மா சும்மா விளையாட்டுக்குத் தேடினால் எப்படி? பிளைட் கம்பெனி எல்லாம் பாவமாச்சே....."

"அதனால நீ கோவாவுக்கு டிக்கட் புக் செய்துட்ட அப்படி தானே, தம்பி?"

"ஹி ஹி ஹி! ஆமாம் ராது!"

"நீ எவ்வளவு நல்லவன்னு எங்க எல்லோருக்கும் தெரியுமே! ஒரு டிக்கட் புக் செய்தால் எப்படி பிளைட் கம்பெனி முன்னேற முடியும் அதனால அருந்த திக்கும் இன்னுமொரு டிக்கட் புக் செய்துட்ட சரியா?"

"எப்படி இப்படி கரக்ட்டா சொல்ற ராது? யூ ஆர் ரியலி கிரேட்!"

"பெரிய அதிசயம் ஷிவா! பாம்பின் கால் பாம் பறியும். உன்னை பத்தி உங்க அக்காவை தவிர வேறு யாருக்கு தெரியும்?" என்றான் கௌஷிக்.

"நான் பாம்பா????" ராதிகா கௌஷிக்கை பார்த்து முறைத்தாள்.

"ஹையா ஜாலி, இன்னைக்கு எனக்கும் ஸ்பெஷல் கவனிப்பு உண்டு! என்ன ராது!" செல்லமாகக் கேட்டு விட்டு, கண்ணடித்தான் கௌஷிக்!

பெட்டியை ட்ராலியில் தள்ளியபடி அருந்ததியின் கையை பிடித்துக் கொண்டு நடந்த ஷிவா,

"கௌஷிக்குக்கு அப்படி என்ன சந்தோஷம்? அப் படி என்ன கவனிப்பா ராது?" என தன் சந்தேகத்தை மனைவியிடம் கேட்டான்.

"உங்களுக்கு ரொம்ப தேவையான விஷயம்.....!"

"ஹேய், உனக்கு ஏதோ தெரியும் போலருக்கே சொல்லு!"

''எனக்கு தெரிஞ்சு அண்ணி அவரை தோப்பு கரணம் போட சொல்வாங்க.''

''தோப்புகரணமா?????? அதுக்கா அவ்வளவு சந்தோஷப் படுறார்?''

''ஹையோ, ஹையோ! எப்போதுமே ஊடலுக்கு அப்புறம் கூடல், இது கூட உங்களுக்குத் தெரி யாதா?''

''தெரியாதே ரதி டார்ல்ஸ்..... நீ தான் எல்லாம் சொல்லி கொடுக்கணும்..... நமக்குள்ளே எப்போ ஊடல் வரும்?

''ஹ்க்கும்! அதெல்லாம் வராது.''

''ஏன்????''

''நானா வந்து கட்டி பிடிச்சா கூட கனவிலே நடக்குதா கண்களும் காண்கிறதான்னு பாட்டு பாடுறவர் நீங்க! உங்க கிட்ட நான் ஊடல் செய்து அதை வேற உட்கார்ந்து உங்களுக்கு புரியுற மாதிரி விளக்குறதுக்கு நான் சும்மாவே இருக்கலாம்..''

''ஹேய் என்ன நீ என்ன ரொம்ப குறைச்சலா எடை போட்டு வச்சிருக்க!'' என்ற ஷிவா, ட்ராலியை நடு வழியில் விட்டு விட்டு, அருந்ததியிடம் திரும்பி,

''ரதி டார்ல்ஸ், இத்தனை நாள் நீ பார்த்த ஷிவா வேற.... இனிமேல் நீ பார்க்க போற ஷிவாவை பார்த்து நீ அசந்து போக போற! நியூ இரா ஸ்டார்ட்ஸ் ப்ரம் நவ்....!'' என்றவன், விழிகளை விரித்து அவனை

பார்த்துக் கொண்டிருந்தவளின் கன்னத்தில் அழுத்த மாக, மிக அழுத்தமாக முத்தமிட்டான்.

''என்ன செய்றீங்க?''

''ஐ ஆம் காதல் மன்னன் யூ சீ! எனக்கு நேரம், இடம் எல்லாம் இல்லை!''

''ஹைய்யோ ஹைய்யோ மானம் போகுது, வாங்க.....''

ப்ளைட்டில் சென்ற நேரம் முழுவதும் பேசிக் கொண்டே இருந்தார்கள்..... என்ன பேசினார்கள் என்று கேட்டால் அவர்களுக்கு நினைவிருக்குமோ என்னவோ ஆனால் பேசிக் கொண்டே இருந்தார்கள்!

கோவாவில் பிரசித்தி பெற்ற அந்த ஹோட்டலில் ரூம் கிடைத்தது!

அறைக்கு அவர்களின் பெட்டிகளை எடுத்து வந்து தந்த ரூம் பாய், ஏதேனும் தேவை என்றால் இன்டர் காமில் அழைக்க சொன்னான்.....

ஷிவாவிற்கு ஒரே ஒரு சந்தேகம் தான் இருந்தது!

யாரும் அந்த அறை பக்கம் வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்பது தான் அது!

அவன் அதை ரூம் பாயிடம் நேராக கேட்க, கதவில் தொங்கி கொண்டு இருந்த சின்ன அட்டையை சுட்டி காட்டி,

''இந்த டூ நாட் டிஸ்டர்ப் கார்ட் மாட்டி இருந்தால், யாரும் டிஸ்டர்ப் செய்ய மாட்டாங்க சார்'' என்று விளக்கம் அளித்தான் அவன்.

அருந்ததியும் ஷிவாவும் அங்கே தங்கி இருந்த இரண்டு வாரங்களும் அந்த டூ நாட் டிஸ்டர்ப் கார்ட் அந்த அறை கதவின் வாசலில் நிரந்தரமாக குடி கொண்டு இருந்தது என்பதை சொல்லவும் வேண்டுமா என்ன.....!!!!!!!!!!

இரண்டு வாரங்களுக்கு பின் அவர்கள் சென்னை திரும்பிய போது ராதிகா, கௌஷிக், அவந்திகா, மஹேஸ்வரி அனைவரும் அருகே இருந்த அவர் களின் வீட்டிற்குச் சென்றிருந்தார்கள்!

''ஏன் அத்தை அவங்களை போக விட்டீங்க?'' அழாத குறையாக கேட்டாள் அருந்ததி.

''அருந்ததி, எதுவுமே அளவுக்கு மிஞ்சினால் நல்லதில்லை. ராது அவ குடும்பத்தோட தனியா இருக்குறது தான் அவளுக்கு நல்லது. அவ வீடு என்ன மைல் கணக்கில தூரத்திலேயா இருக்கு? நாலு அடி தள்ளி போனா இருக்கு....!''

''ஆனாலும் அத்தை.....''

''போதும் போதும் உன் ராது புராணம்! இனிமேல் நீ வெறும் ஷிவா புராணம் தான் பாடணும். அவனை கவனி.....! சொன்னது ஞாபகம் இருக்குல சீக்கிரமா எனக்கு ஒரு பேரனோ பேத்தியோ வந்திருக்கணும்....''

அருந்ததி வெட்கம் மின்ன தலை அசைத்தாள்.

''அம்மா, அப்பா, ரதி.....!''

ஷிவாவின் குதூகலமான குரல் அவர்கள் அனை வரையும் அங்கே ஹாலுக்கு வர வைத்தது!

''இங்கே பார்த்தீங்களா, எனக்கு சென்னை ரீஜனோட மோஸ்ட் வேல்யூபில் ப்ளேயர்னு இந்த அவார்ட் கொடுத்தாங்க..... ஜி.எம் ரொம்ப புகழ்ந் தார்..... இன்க்ரீமன்ட் கொடுத்துட்டாங்க! சீக்கிரமே ப்ரோமோஷனும் தரேன்னு சொல்லிட்டாங்க!''

''சூப்பர்டா கண்ணா.....!''

''கங்கிராட்ஸ் ஷிவா.....''

நாதனும், லக்ஷ்மியும் மனதாரப் பாராட்ட, அருந்ததி கண்களாலேயே அவனுக்கு வாழ்த்துத் தெரிவித்தாள்.

அன்றிரவு அவள் வருவதற்காகவே காத்திருந் தவன், அவள் வந்த உடனே தன்னுடன் இழுத்து அணைத்துக் கொண்டான்.

''ரதி ரதி என் செல்ல ரதி.....!''

''ஹ்ம்ம்ம்.....''

''நான் எவ்வளவு சந்தோஷமா அவார்ட் கிடைச் சதைப் பத்தி சொல்றேன், அது என்ன கண்ணை விரிச்சுப் பேசுறது? வாயைத் திறந்து ஒரு தடவை விஷ் செய்தால் என்ன??

''ப்ச்.....!''

''ஹேய், என்ன???''

''இந்த சின்னக் கப்புக்காக தானா இப்படி ராத்திரி பகல்ன்னு வேலை செய்தீங்க? என் கிட்ட கேட் டிருந்தா பேன்சி ஸ்டோர்ல இருந்து ஈசியா வாங்கி தந்திருப்பேனே....''

அவள் அவனைச் சீண்டுகிறாள் என்பது புரிந்த போதும், பொய் கோபத்துடன்,

''நீ இவ்வளவு புத்திசாலின்னு எனக்கு தெரியாமல் போச்சே! எவ்வளவு லக்கி நான்!'' என்றான் அவன்.

''உங்களுக்கு நானே அதிகம்.....!'' என்று அவனுக்கு விடாமல் பதில் சொன்னாள் அவள்!

சொல்லிவிட்டு அவள் சிரிக்க, முதலில் அவளைப் பார்த்து முறைத்தவன், அவளின் அந்தச் சிரிப்பின் அழகில்..... அவள் சிரிக்கும் போது கண்களில் மின்னிய வண்ணங்களின் அழகில்..... அந்த அழகிய முகத்தின் வசீகரத்தில்..... அவளின் ஒவ்வொரு சிறு அசைவிலும் தெரிந்த காதலில்..... தன்னை மறந்து மயங்கிப் போனான்....!

அவனின் முக மாறுதலைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவள், வெட்கத்தில் முகம் சிவந்தாலும், கணவனிடம் நெருங்கி ஒண்டிக் கொண்டாள்!

''என்னங்க.....''

''சொல்லு ரதி.....''

''அத்தை, சீக்கிரமா பேரன் இல்லை பேத்தி வேணும்னு சொன்னாங்க.....''

அவளின் முகத்தை கைகளில் ஏந்திப் பார்த்தான் ஷிவா.....!

அந்தக் கண்களில் மின்னிய காதல் அவனை ஈர்த்தது.... அவளின் மனம் அவனுக்குப் புரிந்தது....

"அம்மா சொன்னால் நான் தட்டவே மாட்டேன் தெரியுமா?"

"ஹூஹூம்ம்மம்ம்ம்."

எப்போதும் போல அவளின் ஜிமிக்கிகள் தவறாமல் அவளுக்குத் தாளம் போட்டுக் கொண்டு அவளின் தலை அசைப்புக்கு ஏற்ப ஆடின.... அவனை மயக்கின....!

இனிமேல் முதல் வேலையே அம்மாவோட ஆசையை நிறைவேத்துற வேலை தான்....!

அருந்ததி மெல்லச் சிரித்தாள்.....!

அவளுள் இருக்கும் ஆசையைப் புரிந்து கொண்டவனாக அவளை அள்ளி அணைத்துக் கொண்டான் ஷிவா!

வீசும் காற்றுக்கு பூவை தெரியாதா என்ன???

அந்தக் காற்று அந்த அழகிய பூவை அள்ளி அரவணைத்துக் கொண்டு காதல் மழை பொழியத் துவங்கியது.....!

‘வீசும் காற்றுக்கு பூவைத் தெரியாதா?’ ஒரு மாறுபட்ட காதல் கதை.

ஷிவா, அருந்ததியின் திருமணம், அருந்ததிக்கு ஏற்பட்டிருக்கும் வித்தியாசமான மன நோய், அருந்ததியை அவளின் மனச்சிக்கல்களில் இருந்து மீட்டெடுக்கும் ஷிவாவின் மனதை மயக்கும் காதல்,

இன்னொருபுறம் ராதிகா, கௌஷிக் காதல் என்று பயணப்படும் கதை.

லஷ்மி, நாதன், கீதா, சூர்யா என்ற அருமையான பாத்திரப் படைப்புகளுடன் பயணிக்கும் ஒரு அற்புதமான காதல் கதை